www.padippakam.com

# கழுகு நிழல்



கோவை நந்தன்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரம் என்பது நாம் ஆதரிக்கும் கருத்துக்களுக்கான சுதந்திரம் மட்டுமல்ல. நம்மை அதிர்ச்சி அடையச் செய்யும் கருத்துக்களுக்கான சுதந்திரமும்கூட.

– நோம் சோம்ஸ்கி

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கழுகு நிழல்

கட்டுரைகளின் தொகுப்பு

**கோவை.நந்தன்**

நிச்சாமம் பதிப்பகம்
NICHAAMAM PATHIPAKKAM

படிப்பகம்

www.padippakam.com

**கழுகு நிழல்**
கட்டுரைத் தொகுதி
கோவைநந்தன்

முதற்பதிப்பு ஜனவரி 2013
© கோவைநந்தன்
வெளியீடு: நிச்சாமம் பதிப்பகம்
suganparis@yahoo.com
முகப்பு, நூல் வடிவமைப்பு: ஜீவமணி
நூலாக்கம்: ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை 600 005

விற்பனை உரிமை:
கருப்புப் பிரதிகள்
B55, பப்பு மஸ்தான் தர்கா
இலாயிட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி
சென்னை - 600 005., பேச: 9444272500
மின்னஞ்சல்: karuppupradhigal@gmail.com

**விலை:**
இந்தியாவில் ₹: **195.00**
இலங்கையில் **ரூ: 200.00**
ஏனைய நாடுகள் **€: 10.00**

**kazhugu Nizhal**
Kovai.Nanthan (France)
First Published - Jan. 2013
© Kovai.Nanthan
By: Nichamam Pathippagam
suganparis@yahoo.com

**Price:**
In India **₹: 195.00**
In Srilanka **Rs: 200.00**
Other Country **€: 10.00**

படிப்பகம்

www.padippakam.com

குவண்டனமோ முதல் - பூசா வரை
பயங்கரவாதிகள் ஆக்கப்படும்
அப்பாவிகளுக்கு...

படிப்பகம்

www.padippakam.com

**கழுகு நிழலின் நன்றிகள்**

பழ. அசோக்குமார், விடுதலை, பெரியார் திடல், சென்னை
கருப்பு பிரதிகள் நீலகண்டன், சென்னை
ஷோபாசக்தி, பிரான்ஸ்
த. தருமராசன், இலெமூரியா, மும்பை
ஈசா மூர்த்தி, ஆசிரியை, சுவிட்சர்லாந்து
அ. சிவக்குமார், தோழர் அமீன், தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே...

1. விரும்பிப் படிப்பதால் விதந்துரைக்கிறேன்:
மறவன்புலவு க. சச்சிதானந்தன்....... 9
2. உணர்வை உணர்த்தும் எழுத்து: எம். ஸ்டாலின்....... 13
3. பத்திரிகைச் சுதந்திரம்...!: எஸ்.எஸ். குகநாதன்....... 15
4. எனக்குத் தெரிந்தது: கோவை.நந்தன் ....... 18
5. அமைதிக்கானதா...? இந்த ஜெனிவாத் தீர்மானம்....... 21
6. ஆட்டம் காணும் நேரு குடும்பத்து அரசியல்....... 28
7. மாட்டுக் கறி மாமியும்... கல்லா கட்டும் கோபாலும்....... 33
8. கம்யூனிசத்தின் தெருக்களிலும் கிளர்ச்சிக் கூட்டம்....... 38
9. டாம்–999 தடை... தேசியம் தந்த கருத்துச் சுதந்திரம்....... 44
10. தண்டிக்கப்பட்ட ஜனாதிபதி... நீதி பிசகாத நிலைப்பாடு... ....... 51
11. றொபேர்ட் ஓ பிளேக்கின் இலங்கை விஜயமும்
ஏகாதிபத்திய வலை வீச்சுக்களும்....... 56
12. தூக்குக் கயிற்றை எதிர் நோக்கும்... அராஜகத்தின் எச்சங்கள்....... 64
13. ஏகாதிபத்தியத்துக்கு குழி தோண்டும் – இங்கிலாந்துக் கலவரங்கள்....... 70
14. தெற்கு சூடான் விடுதலை... அலசப்படாத அந்தரங்கங்கள்....... 77
15. ருவாண்டா இனப்படுகொலையின்... சர்வதேசப் பின்னணி....... 84
16. தண்டனைக்காக காத்திருக்கும் புலிகளின் முக்கிய நிதி வழங்குனர்....... 93
17. IMF தலைவர் பாலியல் விவகாரம்... சர்வதேச மர்மங்கள்....... 97
18. தமிழகத் தேர்தல் முடிவுகள்... தெரிவிக்கும் தகவல்கள்....... 104
19. தீவிரவாதத் தாக்குதல்... பலியான ஓசாமா பின்லேடன்....... 111
20. சாமான்யர்கள் சமைக்கும் சர்வாதிகாரச் சமாதிகள்....... 115
21. பினாயக் சென்னுக்கு ஆயுள் தண்டனை...
கேள்விக் குறியாகிறதா இந்திய நீதித்துறை?....... 126
22. தேடி வந்த வல்லரசுகளும்... திரைமறைவு ரகசியங்களும்....... 131
23. வல்லாதிக்க இரகசியங்களை வெளியிடும் விக்கிலிக்ஸ்....... 139
24. இன்றும் தொடரும் பஸ்க் பேராட்டமும் ஸ்பெயின் அரசும் ....... 145
25. விடுவிக்கப்பட்ட ஆங் சான் சூகி விடுவிப்பாரா பர்மிய மக்களை..?....... 154
26. அரச ஆதரவுப் பயங்கரவாதமும் பயங்கர வாதிகளும்....... 162



படிப்பகம்

www.padippakam.com

27. முற்றி வரும் அமெரிக்க ஈரான் முறுகல்... தோன்றுமா மோதல்...? ........167
28. இந்தியாவின் சாதிவாரி கணக்கெடுப்பும்... வகுப்புவாரி இடஒதுக்கீடும்....174
29. களம் காணத் தயராகும் தமிழகத்து அரசியல்........179
30. விடுதலை வேண்டி நிற்கும் செச்சினியா...!
விடுவிக்குமா...? ரஷ்யப் பேரரசு........185
31. மூழ்கடிக்கப்பட்ட கப்பல் மர்மமும்
முற்றும் வட-தென் கொரிய முறுகலும்........200
32. பழமை வாதம் + தாராள ஜனநாயகம் = பிரித்தானிய புதிய அரசு......206
33. சூதாட்டத் தளமாகும் இந்திய கிரிக்கெட் ஆடுகளம்........211
34. பிரபாகரன் தாயார் விவகாரம்
அவமானப்பட்டு நிற்கும் இந்திய நிர்வாகம்........215
35. இலங்கை பொதுத்தேர்தலும் காணமல் போகும் தமிழ்தேசியமும்..........220
36. நித்தியானந்தன் – ரஞ்சிதா விவகாரம்
அலசப்படுகிறதா சமூக நியாயங்கள்...?........224
37. பிரபல இந்திய ஓவியர் உசேனுக்கு கத்தார் குடியுரிமை
'மதசார்பற்ற' தேசத்துக்கு மற்றொரு அவமானம்........228
38. மண்டியிட்ட ஒபாமாவும்... மனம் மாறாத சீனாவும்... ........233
39. தற்கொலைக்குத் தயாராகிறதா பூமிப்பந்து...?
வழி சமைக்கிறதா மேற்குலகம்...?........238
40. ஆஸ்திரியா, மார்தட்டும் ஐரோப்பியர்களை
அவமானத்திற்கு ஆளாக்குகிறதா...? ........243
41. அமெரிக்க வசமாகுமா...? பாகிஸ்தான் அணுகுண்டுகள்...
அனுமதிப்பார்களா தீவரவாதிகள்...? ........249
42. ஒரு புத்தமதத் துறவியின் அரசியல் அசைவு........254
43. தொடரும் அல்கொய்தாவின் அச்சுறுத்தல்கள்... ........259
44. தனித் தெலுங்கானா கலவரங்கள்...
இந்திய உடைப்பின் அஸ்திவாரமா?........265
45. அம்பலத்திற்கு வரும் இந்திய இந்துத்துவ முகம்...!........271
46. பங்களாதேஷின் திடீர் புரட்சி...! காரணம் என்ன தோல்விக்கு...! ..............277
47. கறுப்பு நாயகனின் கனவு தேசங்கள் ........282
48. அடுத்த சோவியத் யூனியன் இந்தியாவா...?........288
49. தடம் புரண்ட ஊடகங்கள்... எடுத்துகாட்டும் தமிழகம்........294
50. வெள்ளை மாளிகையில் 'கறுப்பு அதிபர்' ........300
51. நந்தன் பற்றிய என்னுரை: வி.கே.டி. பாலன் ........305



படிப்பகம்

www.padippakam.com



# விரும்பிப் படிப்பதால் விதந்துரைக்கிறேன்

கண்களை இமைகளால் மூடினால் உலகம் இருண்டுவிடுமா?

தலையை மண்ணுக்குள் புதைக்கும் தீக்கோழியாக வாழ விரும்புவோர் வாழலாம். ஆனாலும் உள்ளங்கைகளுள் உருள்கிற உலகிலல்லவா வாழ்கிறோம்.

காலமும் தொலைவும் மிகக் குறுகின. எந்த நிகழ்ச்சி எங்கு நடந்தாலும் எல்லோரையும் பாதிக்கிறது. மனித வளர்ச்சியை அனைத்து நிகழ்ச்சிகளும் கூட்டாக முன்னெடுக்கின்றன.

கோவை நந்தனின் கட்டுரைகள் உள்ளங்கைக்குள் உற்று நோக்கும் அதே வேகத்தில் உலகையும் வலம் வருவன.

உலக வங்கியின் மேனாள் தலைவரின் காம வாழ்வையும் அரசியலையும் அலசுகிறார். நித்தியானந்தாவையும் இரஞ்சிதாவையும் பார்க்கிறார். இதழியல் நேர்மையளரா? தமிழகத்து நக்கீரன் கோபால் எனவும் வினவுகிறார்.

காணொலியாக இராக்கின் ஓலங்களை முன்பு பதிந்தவர் அமெரிக்க மேலாதிக்க நோக்கங்களை இங்கே பல கட்டுரைகளில் பட்டியலிடுகிறார். அதே நோக்கில் பொதுவுடைமை ஆட்சியில் கேரளம் முல்லைப் பெரியாறு அணையில் நடந்துகொண்ட முறைமையைச் சாடுகிறார்.

பண்டைய நூபியா என்ற இன்றையத் தெற்குச் சூடான் நாடு புதிதாக அமைந்த காரணங்கள், உருவாண்டாவின் இனப்படுகொலைகளின்



படிப்பகம்

www.padippakam.com
பின்னணி என ஆப்பிரிக்க நிகழ்வுகளை அலசும் அதே வேகத்தில் இராசீவ் காந்தி படுகொலையில் அராஜகப் பின்னணி இருந்ததையும் காட்டுகிறார்.

ஐரோப்பாவின் பிரித்தானியாவிலும் உருசியாவிலும் மக்கள் எழுச்சியைப் படம்பிடிக்கும் நந்தனின் எழுதுகோல் தமிழகத் தேர்தல் முடிவுகளை அக்குவேறு ஆணிவேராகத் தருகிறதே.

அல்சீரியா, இலிபியா, எகிப்து, ஜோர்தான், ஏமன், சிரியா என அரபுலக வீதிகளில் அமைதிப் புரட்சிக்கு வித்திடுவோரை ஆதரிக்கும் நந்தன், அங்கு மேலாதிக்க வலைக்குள் அகப்படாத ஆட்சி மாற்றங்களையே வரவேற்கிறார்.

வல்லரசுத் தலைவர்களின் இந்தியப் பயணங்களின் தேவையை அலசும் வேகத்தில் விக்கிலீக்சு சூத்திரதாரி சூலியன் அசேஞ்சின் பின்னணியையும் இந்திய மனித உரிமைப் போராளி பினாயக்கு சென் படும் அவலங்களையும் அலசுகிறார்.

ஐரோப்பாவின் பாஸ்க்கு இன மக்களின் விடுதலையை எழுதும் வேகத்தில் ஆசியாவின் இருண்ட அரசான மியான்மாரையும் அங்கு போராடும் ஆங் சான் சூகியையும் எழுதுகிறார்.

கொரியாக் கடலில் மூழ்கடிக்கப்பட்ட கப்பலால் வரும் அதிர்வுகளைப் பதிபவர், செச்சினியாவையும் ஊரல் மலை சார்ந்த நாடுகளின் தாய்மொழிப் பற்றையும் சுட்டுகிறார். ஈழத்தின் தீவிர தமிழ்த் தேசியம் மனிதத்துவப் பண்புகளை மழுங்கடித்துவிட்டதையும் அதே வேகத்தில் பதிகிறார்.

தற்கொலைக்குத் தயாராகிறதா பூமிப்பந்து என்ற வினாவில் சுற்றுச் சூழல் மாநாடுகளைப் பயன்படுத்தும் ஆதிக்கப் போக்காளர்களைக் காட்டுகிறார். இவ்வாறு பரந்து பார்த்தவருக்கு இந்துத்துவத்தை எதிர்த்துத் தனிமனித வாழ்வுரிமைக்காகப் போராடும் ஒருவரான ஓவியர் உசேனும் பெரியவராகவே தெரிகிறார்.

தலாய் லாமா, ஒசாமா பின் லேடன், சூலியன் அசேஞ்சு, பினாயக்கு சென், ஓவியர் உசேன், ஆங் சான் சூகி ஆகியோர் தனி மனிதர்கள். அதிகாரம் இல்லாதவர்கள். எனினும் உலகின் போக்கை மாற்றக் கூடியவர்கள் என்பதை அலசும் நந்தனின் பார்வை அரசியல் ஆழமுடையது.



படிப்பகம்

வலிமையான கருத்துகளை முன்வைப்பவர் எவரும் வாசிப்புப் பரப்பை விரிக்க வேண்டும். இணையத்துள் பழகவேண்டும். தகவல்களூடே நுழைந்து தேட வேண்டும். நுணுகித் தேர வேண்டும். நுண்மா நுழை புலமையாளராக வேண்டும்.

கற்பதைக் காமுற வேண்டும், கற்றுத் துறைபோகியராதல் வேண்டும், உரைகல் ஒன்றில் உரைக்கும் ஆற்றல் வேண்டும். கருத்துத் தொகுக்கும் ஆற்றல் வேண்டும். கருத்துப் பரவலாக ஊடகங்களைப் பயன்படுத்தவேண்டும். வாசகரைக் கவர வேண்டும்.

எந்த நிகழ்வும் எவரையும் எங்கிருந்தாலும் பாதிக்கும் இக்காலத்தில் சொல்லும் சொல்லை வெல்லும் சொல்லில்லை என்ற நிலையை நோக்கிய பயணத்தில் நந்தனைப் போன்ற கருத்துருவாக்கிகள் வாள் நுனியில் நிற்பவராவர்.

உணர்வுக்கு இடமுண்டெனினும் அறிவின் மேலாட்சியிலே கருத்துருவாக்கிகள் மிதப்பர். மாற்றுக் கருத்துகளை மனம் நிறைந்து உள்வாங்குவர், அவற்றைப் பயன்படுத்திச் தம்மைச் செதுக்குவர்.

மேற்கூறிய கருத்துருவாக்கிகளின் ஆற்றல்கள், புலமைகள், திறமைகள் நந்தனுடையவையுமாம்.

தேடலில், திரட்டலில், தொகுத்தலில், வழங்குதலில் நந்தனிடம் திறன் உண்டு. கற்றலில் ஆர்வம் உண்டு. மாற்றுக் கருத்தை மதிக்கும் மாண்புண்டு. திறமைசாலிகளுடன் இயைந்து பணியாற்றும் ஆர்வம் உண்டு.

மென்மையாக ஓரிரண்டு சொற்களால் உரை பெருக்குவார். மேன்மையுடன் தன் கருத்தை எவரிடமும் திணிக்காதிருப்பார். என் தந்தையாரிடம் இந்த இயல்புகள் இருந்தன. நந்தனிடம் அவற்றைக் காண்பேன்.

நட்புக்கு இலக்கணமானவர், மாற்றுக் கொள்கையாளரையும் நேசிக்கும் மனித நேயர்.

நிலத்தில் நடப்பவர், வானத்தில் மிகுந்து பறக்க விழையாதவர்.

முப்பது ஆண்டுகளாக அவரை அறிவேன். முதல் நாள் கொண்ட அதே அன்பு மாறாது வற்றாது பேணுபவர். என் கருத்துகள் பலவற்றில் அவருக்கு உடன்பாடில்லை. நான் பழகும்

www.padippakam.com

வட்டாரங்களை அறிந்தவர். என் நங்கூரக் கொள்கையுடன் இணைந்தவர்.

கற்பவர், கசடறக் கற்க விழைபவர். அருமையான கட்டுரைத் தொகுப்பை வழங்கியுள்ளார்.

வானத்தில் சுற்றும் செய்மதி மீதுவர்ந்து உலகைப் பார்க்கிறார். உள்ளங்கைக்குள் உற்றும் நோக்குகிறார்.

நான் அவரை விரும்பிப் படிப்பவன். எனவே வாசகர்களுக்கும் அவரை விதந்துரைக்கிறேன்.

**மறவன்புலவு க. சச்சிதானந்தன்**
**காந்தளகம்**
**சென்னை**



படிப்பகம்

www.padippakam.com



# உணர்வை
# உணர்த்தும் எழுத்து

"பூக்கின்ற எல்லாப் பூக்களுமே பூஜைக்கு வருவதில்லை" என்பது போல் எழுதப்படுகின்ற எல்லாமுமே அச்சுவாகனம் ஏறி அங்கீகாரம் பெறுவதில்லை. கோவை நந்தனின் எழுத்துக்களில் அச்சுவாகனம் ஏறியவை மட்டுமல்ல அனைத்துமே சிறப்பானவை.

சர்வதேச விவகாரங்களை மட்டுமல்லாது ஈழத்துப் பிரச்சனைகளிலும் உலகளாவிய பார்வையும், விடயங்களை மெய்யறிந்து எழுதுகின்ற ஆற்றலும் கோவை நந்தனிடம் அலாதியாகவே அமையப் பெற்றுள்ளது கண்டு பல பொழுதுகளில் ஆச்சரியமடைந்துள்ளேன்.

எழுதுவதற்கும்,உரையாடுவதற்கும், உரையாற்றுவதற்கும் சொற்களை பிரயோகிப்பதில் வேறுபாடுகள் இருப்பது வழமை. இவரின் அனைத்துப் பயணமும் அந்த வேறுபாட்டைக் கடந்து புதுமையாக இருப்பது வாசகர்களுக்குமட்டுமல்ல அனைவருக்கும் இலகுவாகவானதாகவும் கவரும் வகையிலும் இருக்கும்.

யாழ்ப்பாணம், கோப்பாயில் பிறந்து தமிழர் உரிமைப் போராட்டத்தில் தனது தனித்துவமான பங்களிப்பைச் செய்து, இப்போது நீண்டகாலமாகவே பிரான்ஸ் நாட்டில் வசித்து வருகின்ற போதும், இலங்கை, இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளின் நிகழ்வுகளையும், விளைவுகளின் எதிர்வு கூறல்களையும் நுட்பமாக ஆராய்ந்து எழுதுவதாலேயே தினமுரசு, இவரின் எழுத்துக்களை உள்வாங்கிக் கொள்வதற்கு எள்றும் எதிர்பார்புடனேயே இருக்கும். இந்தக் கட்டுரைத் தொகுப்பில் இடம் பிடித்துள்ள கட்டுரைகளில்



படிப்பகம்

www.padippakam.com

பெரும்பாலானவை தினமுரசு வாரமலரில் பிரசுரமானவை என்பதில் தினமுரசு குழுமமும் வாசகர்களும் பெருமைப்படமுடியும்.

ஈழப்போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவர் என்ற வகையிலும் ஒரு முன்னாள் சட்ட மாணவன் என்கின்ற அடிப்படையிலும் நந்நனின் எழுத்துக்களிலும் போராட்ட குணாம்சமும், விவாத குணமும் நிறைந்தே காணப்படுவது வியப்புக்குரியதல்ல.

சாதியத்தையும், முதலாளித்துவத்தையும் முற்றாகவே வெறுக்கும் கருத்துக்களை வீரியத்துடன் எழுதுவது மட்டுமல்லாமல் அதை மிகத் தீவிரமாக கடைப்பிடிப்பதிலும், தனது நிலைப்பாட்டை தனக்கேயுரிய நகைச்சுவை உணர்வோடு உணர்த்துவதிலும் மிகுந்த ஆளுமையை கொண்ட இவரின் படைப்புகளை சுவைத்தவர்களால் புரிந்து கொள்ள முடிந்திருக்கும். இக்கட்டுரைத் தொகுதியின் பல ஆக்கங்களில் அந்தப் பன்புகளை நிறையவே காணமுடிகின்றது.

நந்தனின் கட்டுரைகளில், இத்தொகுப்பில் இடம் பிடிக்காமல் பாதுகாக்கப்பட வேண்டிய பல கட்டுரைகள் இன்னும் இருக்கின்றன. அவற்றையும் தொகுப்புக்களாக ஆவணப்படுத்தவது அவசியமென்றே கருதுகின்றேன்.

**எம். ஸ்டாலின்**
**தினமுரசு**
**யாழ்ப்பாணம்**



படிப்பகம்

www.padippakam.com



# பத்திரிகைச் சுதந்திரம்...!

பத்திரிகைச் சுதந்திரத்தைவிடப் பத்திரிகைகளிடமிருந்து சுதந்திரம்தான் இன்று மக்களுக்குத் தேவையாக இருக்கிறது.

– ஓஸ்வேல்ட் ஸ்பெங்லர்.

இந்த வசனம் கோவை.நந்தனின் முகநூலில் இருந்து நான் படித்துச் சுவைத்தது.

அதனைப் படித்தபோது ஸ்பெங்லர் வாழ்ந்த ஜெர்மனியிலும் நமது இன்றைய ஊடகங்களைப் போன்றன அவர் காலத்தில் இருந்திருக்கின்றன என்று எண்ணத் தோன்றியது.

என்னை ஒரு ஊடகவியலாளன் என்று கூறிக்கொள்வதே ஒரு அவமானமாகக் கருதவேண்டும் என்கின்ற அளவிற்கு இலங்கையின் ஊடகவியல் இன்று ஒரு துர்ப்பரிணாமம் பெற்றிருக்கின்றது.

கோவை நந்தன் அடிக்கடி சொல்வது போல, முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் தமது வரலாற்றை முடித்துக் கொண்டதற்கு, தாமே தமிழ்மக்களின் ஏகபோக தலைவர்கள் என்று கூறிக்கொண்டவர்களுக்கு எவ்வளவு பங்கிருக்கின்றதோ அதே அளவு பங்கு தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் உண்டு.

மட்டக்களப்பில் கொக்கட்டிச் சோலையை புலிகள் இழந்தபோது புலிகள் பின்வாங்குகின்றார்கள் பாய்வதற்காக என்று எழுதத் தொடங்கிய தமிழ் ஊடகவியலாளர்கள், கிளிநொச்சியிலிருந்து புலிகள் பின்வாங்கிய போதும் அதனையே எழுதினார்கள். ஏன் இன்றும் கூட தலைவர் வருவார், போராட்டம் விட்ட இடத்திலிருந்து தொடரும் என்றும் கதையளந்து கொண்டிருக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

யாழப்பாணத்துப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் கனடாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசியது இப்போதும் என் நினைவில் நிற்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பெருமளவில் இளைஞர்கள் இணைந்து கொண்டது புலிகளின் போராட்டத்தைப் பார்த்து உணர்ச்சிவசப்பட்டோ, அல்லது அவர்களின் பிரச்சாரங்களால் கவரப்பட்டோ அல்ல, எமது பத்திரிகையின் எழுத்துக்களைப் பார்த்துத்தான் என்று அவர் பெருமை கொண்டாடி சில மாதங்களிலேயே அந்த இயக்கமே முற்றாக மடிந்து போயிற்று. புலிகளின் போராடத்தில் பலியான முப்பதினாயிரத்திற்கும் அதிகமான இளைஞர்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டதற்கு அந்தப் பத்திரிகையும் அதன் ஆசிரியரும் கூட ஒரு காரணம் என்று அவர் இப்போது ஒப்புக்கொள்வாரா என்பது தெரியவில்லை. இழப்புகள் இன்றி போர் இல்லை தமிழ்மக்களில் லட்சக்கணக்கானவர்கள் யுத்தத்தில் பலியானால் தமிழீழம் தானாக வந்துவிடும் இது மற்றுமொரு ஊடகவியலாளர் அன்று தெரிவித்த கருத்து. ஆக இவைதான் நமது பத்திரிகை ஆசிரியர்களின் மனநிலையாக இருக்கிறது.

தமிழ் ஊடகவியலாளர், அல்லது அரசியல் ஆய்வாளர்கள் என்று இன்றும் நினைவு கூரப்படுபவர்கள் புலிகளின் வீரதீர செயல்களை வெளிப்படுத்தியவர்கள்தான். பின்வாங்குவது ராணுவ தந்திரோபாயம், புலிகள் பின்வாங்குவது பின்னர் பாய்வதற்காக, புலிகள் வட்டமடிக்கிறார்கள், இப்படியெல்லாம் எழுதினால்தான் அரசியல் ஆய்வாளர் என்ற அந்தஸ்து நமது ஊடகவியலாளர்களுக்கு கிடைத்தது. ஆனால் அப்படியில்லாமல், உண்மையான கள நிலவரங்களை வெளிப்படுத்திய ஒருசில ஊடகவியலாளர்களில் கோவை.நந்தனும் ஒருவர். அப்போது அவர் போன்றவர்களுக்கு கிடைத்தது துரோகி, ஒட்டுக்குழு என்கின்ற பட்டங்கள்தான். நீலன் திருச்செல்வம் அவர்களின் படுகொலையை நியாயப்படுத்தி பாரிஸ் ஈழநாடுவில் நான் அன்று எழுதியபோது, அதனை கண்டித்த ஒருசிலரில் முக்கியமானவர் கோவை.நந்தன்.

புலிகள் கிளிநொச்சியைத் தளமாகக் கொண்டு அரசாங்கம் நடாத்திக் கொண்டிருந்தபோது, பத்திரிகைச் சுதந்திரம் பற்றி வாய் திறக்காதவர்கள் இப்போது பத்திரிகைச் சுதந்திரத்திற்காக கொடி பிடிக்கிறார்கள். அண்மையில் யாழ்ப்பாணத்தில் இரண்டு பத்திரிகையாளர்கள் கடத்தப்பட்டதைக் கண்டித்து நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தின் முன்னணியில் சில பாராளுமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்களின் பாதுகாப்பை வலியுறுத்தி கோஷம் போட்டுக்



படிப்பகம்

கொண்டிருந்ததை பார்த்தபோது அன்றைய நாட்கள்தான் எனது ஞாபகத்திற்கு வந்தது.

பத்திரிகைச் சுதந்திரத்தை விடப் பத்திரிகைகளிடமிருந்து சுதந்திரம்தான் இன்று மக்களுக்குத் தேவையாக இருக்கிறது என்ற ஒஸ்வோல்ட் ஸ்பெங்லர் அவர்களின் வார்த்தைகளை கோவை.நந்தன் முகநூலில் தக்க நேரத்தில் பதிந்தது போலவே அவரது ஆக்கங்களும் அவ்வப் போதைய சில சம்பவங்களின் யதார்த்த நிலையை உடனுக்குடன் பதிந்து நின்றன.

இன்று நமது மக்களுக்கும் தேவையானது, அதுவும் அவசரமாகத் தேவைப்படுவது பத்திரிகைகளிடமிருந்து சுதந்திரம்தான். சுதந்திரம் என்பது தானாகக் கிடைத்துவிடக்கூடிய ஒன்றல்ல. அதற்காக மக்கள் போராடவேண்டும். ஆம் முதலில் பத்திரிகைகளிடமிருந்து தமிழ் மக்கள் சுதந்திரத்திற்காக போராடவேண்டும். கோவை.நந்தன் போன்ற ஊடகப் போராளிகள் அதற்கான முன்னெடுப்புக்களை எடுக்க வேண்டும்.

சர்வதேச விவகாரங்கள் மட்டுமல்லாது இது போன்ற இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியிலுள்ள பல அசாதாரண நிலைமைகளை முன்னிறுத்தியும் கோவை.நந்தனின் ஊடக முன்னெடுப்புகள் தொடர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**எஸ்.எஸ். குகநாதன்**
**ASK Media Network (DAN Tv, Alai Fm)**
**Colombo**

www.padippakam.com



# எனக்குத் தெரிந்தது

மிக நீண்ட வருடங்களுக்கு பின்னரான, கடந்த 2007ம் ஆண்டிலிருந்து மீளவும் அரும்புவிட்ட எனது எழுத்துக்களின் தெரிவு செய்யப்பட்ட சில, ஒரு தொகுப்பாக வெளிவருவதில் எனது ஆத்மா மீண்டும் ஒருமுறை திருப்தியுறுகிறது.

எமது சூழல் பரப்பின் பலவற்றிலும் அப்பப்போ இடம்பெற்ற சில நிகழ்வுகள், அதற்காகவெனவே வெளியான செய்திகள், இவற்றின் அடிப்படையிலான அமைதிச் சமூகம் சார்ந்த எனது கண்ணோட்டம், இவற்றின் பதிவுகளே இவை.

பூமிப்பந்தின் எந்த மூலையில் எந்த மாற்றம் ஏற்பட்டாலும் அனைத்து உலகத்திலும் அது உன்னிப்பாக கவனிக்கப்பட்டு அதுபற்றிய வாத, பிரதிவாதங்கள் எழுப்பப்படும் இன்றைய சமூக மனிதனுக்கு தான் சார்ந்த மண், மதம், மொழி, இனம், கலாசாரம் அனைத்தையும் தாண்டி உலகளாவிய பார்வைச் சிறகுகளை விரிக்க வேண்டிய கட்டாயமும், அவசியமும் ஏற்படுகிறது.

ஒரு தேசத்தின் நிகழ்வுகளும், போக்குகளும், மாற்றங்களும், ஏற்றங்களும் அடுத்த மண்ணின் மக்களுக்கும் பலவிதத்தில் பலவற்றை உணர்த்துகின்றன, எதிரொலிக்கின்றன சில வேளைகளில் பாதிப்புகளையும், அழிவுகளையும்கூட ஏற்படுத்துகின்றன. எல்லைக் கோடுகள் என்பவை ஒரு புவிசார்ந்த விசயம் மட்டுமே என்பது படிப்படியாக பிரகாசமாகிறது.

இந்த அடிப்படையில் பல்வேறு நாடுகளில் பல தளங்களில் ஏற்பட்ட அதிர்வுகளையும், ஆச்சரியங்களையும், கொடுமைகளையும்,



படிப்பகம்

மோசடிகளையும், முகத்திரைகளையும் என் பார்வையின் விமர்சனமாய் பதிவு செய்துள்ளேன்.

அமைதியான, அன்பான, சமாதானமான, சகோதரத்துவமான ஒரு சமூகத்தின் தேவை இன்று வலுப்பெறுகிறதென்றால் இவையாவற்றினதும் இருப்பு கேள்விக்குறியாகிறது என்றே கொள்ள வேண்டும். இந்தக் கேள்விக்குறி முற்றுப்புள்ளியாக்கப்பட வேண்டும் என்கின்ற விரும்பிகளால் ஆழமாக இது பார்க்கப்படாவிட்டால் பூமிப்பந்தின் சுழல் வலு படிப்படியாக நிலை வலு அற்றதாகக்கூட மாறிவிடலாம்.

எறிகணை இணையத்தளம், தினமுரசு வாரமலர் ஆகியவற்றிற்கான எனது இந்த ஆக்கங்கள் தேனீ, எங்கள் தேசம், சலசலப்பு ஆகிய இணைய தளங்களிலும் மும்பாயிலிருந்து வெளியாகும் தமிழ் இலெமூரியா சஞ்சிகை ஆகியவற்றிலும் அப்பப்போ பிரசுரமாகியிருந்தன.

1970இன் ஆரம்பங்களில், நான் வாழ்ந்த இலங்கையின் கோப்பாய் (காலனித்துவ ஆட்சியின் முன்னரான கோவை) கிராமத்து மண்ணிலும், பின்னர் இலங்கையிலும் தமிழகத்திலும் நான் பழகிய, என்னுடன் பழகிய நண்பர்கள், தோழர்களினது சிந்தனா வெளிப்பாடு என்னையும் இடதுசாரிய, சமூக சீர்திருத்த சிந்தனைகளுக்கு சிறிது இழுத்துச் சென்றது. இதன் தொடர் பரிணாம வளர்ச்சியின் வெளிப்பாடுகளே எனது பின்னைய நாட்களின் செயல்பாடுகளும் இவை போன்ற ஆக்கங்களும். இந்த வகையில் நான் பெருமையுடன் நினைவு கூருபவர்களில் தோழர்கள் பத்மநாபா, குணசேகரன்(குன்சி), த. முத்துக்குமாரசாமி போன்றவர்கள் முதன்மையானவர்கள்.

யதார்த்தப் பார்வையுடன் சிந்திப்பவனின் செயல்பாடுகளும், கருத்துக்களுமே சமூகத்திற்கு அவசியமானது, அதுவே அனைத்து மட்டத்தையும் சென்றடையும் என்கின்ற திடமான நம்பிக்கையுடன், இலங்கைத் தமிழ் மக்களின் இன்றைய நிலைமைக்கேற்ப செயல்படுகின்ற தோழர். டக்ளஸ் தேவானந்தா, அவருடைய சக தோழர்கள், அனைவரினதும் பணிகள் எப்படி மக்கள் பணியாகிறதோ அப்படியே எனது யதார்த்த எழுத்துக்களும் சமூகத்தின் அனைத்து மட்டத்தையும் சென்றடையும் என நம்புகின்றேன்.

முன்னிருந்து பின்னரான திகதி வாரியாக தொகுக்கப்பட்டுள்ள இந்நூலின், சம்பவங்களில் சில இன்றைய திகதிக்கு மாற்றங்களை பெற்றிருந்தாலும் அவை நிகழ்ந்த காலப்பகுதியிலான எனது பொதுப்



படிப்பகம்

www.padippakam.com

பார்வையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தொகுப்பின் உங்கள் வாசிப்பு அந்தந்த காலச் சூழலின் அடிப்படையில் இருக்கும் என நம்புகின்றேன்.

உலக சமாதானத்தையும், நல்லிணக்க சமூகத்தையும் எதிர்நோக்கும் சமூக ஆர்வலர்களில் நானும் ஒருவன் என்கின்ற வகையில் இந்தத் தொகுப்பை உங்கள் மத்தியில் பகிர்ந்து கொள்வதில் மிக மகிழ்ச்சியடைகிறேன்.

**கோவை.நந்தன்**



படிப்பகம்

www.padippakam.com

# அமைதிக்கானதா...?
# இந்த ஜெனிவாத் தீர்மானம்...

வல்லாதிக்கம் நினைத்தால் உலகத்தில் எதையும் செய்து விடலாம் என்பது மீண்டும் மீண்டும் தொடர்கதையாகி வரும் நிலையில் இம்மாதம் 22ம் திகதி (22.03.2012) ஜெனிவா மனித உரிமைக் கவுன்சிலில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான அமெரிக்காவின் தீர்மானத்தை அமைதிக்கானதுதானா இது...?, என்கின்ற ஐயப்பாட்டுடனேயே நோக்க வைக்கிறது. அமெரிக்காவின் அதிகார வெறிக்கு தற்போது இலங்கையும் நேரடியாகவே இலக்காகியுள்ளது என்றே இதனைச் சொல்ல வேண்டும்.

ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்துக்கு (அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு) எதிராக 15 நாடுகள் வாக்களிக்க, 8 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத நிலையில், 24 நாடுகளின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அமெரிக்காவின் அழுத்தங்கள் எதனையும் கருத்தில் கொள்ளாமல் ரஷ்யா, சீனா, கியூபா, பங்களாதேஷ், மாலத்தீவு, கொங்கோ, ஈக்குவடோர், இந்தோனேசியா, குவைத், மொரிட்டானியா, பிலிப்பைன்ஸ், கட்டார், சவூதி அரேபியா, தாய்லாந்து, உகண்டா ஆகிய 15 நாடுகளும் இத் தீர்மானத்துக்கு (ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிற்கு) எதிராக இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தன. இந்த நாடுகள் இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானத்தை முழுமையாக நிராகரிப்பதாக தெரிவித்தன.

இதேநேரம் அங்கோலா, பொட்சுவானா, புர்கினாபாகோ, ஜோர்தான், கிர்கிஸ்தான், மலேசியா, செனகல், டிஜிபோட்டி ஆகிய எட்டு நாடுகளும் இத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் கலந்து



படிப்பகம்

கொள்ளவில்லை. தீர்மானத்துக்கு ஆதரவாக அமெரிக்கா, இந்தியா, இத்தாலி, நோர்வே, சுவிட்சர்லாந்து, செக் குடியரசு, ஒஸ்ரியா, பெல்ஜியம், பெனின், கெமரூன், சிலி, கொஸ்டாரிக்கா, கௌத்த மாலா, ஹங்கேரி, லிபியா, மொரீஸியஸ், மெக்ஸிகோ, நைஜீரியா, பேரு, போலந்து, மோல்டோவா, ருமேனியா, ஸ்பெயின், உருகுவே ஆகிய 24 நாடுகள் வாக்களித்தன.

*"முப்பது ஆண்டு கால பயங்கரவாதத்தை முழுமையாக ஒழித்துக்கட்டி இலங்கை தேசம் தற்போது தான் மீண்டெழுகிறது. இந்நிலையில் அந்நாட்டிற்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிக்காமல் சர்வதேச நாடுகளை இலங்கைக்கு எதிராக திசை திருப்பும் அமெரிக்காவின் போக்கு மிகவும் வன்மையாக கண்டித்தக்கது. அமெரிக்கா தலைமையில் கொடுக்கப்படும் அழுத்தங்கள் அந்நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக அமையும். அதனால் சர்வதேச நாடுகள் இலங்கையின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பது எந்த விதத்தில் நியாயம்...?"*

இவ்வாறு சீனப் பிரதிநிதி விவாதத்தின் போது கேள்வி எழுப்பி இருந்தார்.

*"முப்பது வருடகால பயங்கரவாதத்திற்கு இலங்கை இப்போது தான் முடிவு கட்டியுள்ளது. அந்த முப்பது வருடங்களும் இலங்கைக்கு இருண்ட யுகமாகவே இருந்தது. பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட பின்னர் தான் இலங்கை வளர்ச்சிப் பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ளது. இவ்வாறான சூழலில் இலங்கைக்கு எதிராக இப்படியான தீர்மானத்தை அனுமதிக்க முடியாது. தேசிய மட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் சர்வதேசத்தின் தலையீடானது இலங்கைக்கு மாத்திரமல்லாமல் ஒட்டு மொத்த வளர்முக நாடுகளுக்கும் பாதிப்புகளையே கொண்டுவரும்"*

என்று தமது அழுத்தமான கருத்துகளை பதிவு செய்தது கியூபா.

இலங்கைக்கு ஆதரவு வழங்கிய 15 நாடுகளும் இலங்கையின் இறையாண்மையையும் சுதந்திரத்தையும் நேரடியாகவே அங்கீகரித்திருக்கின்றன என்றே கொள்ள வேண்டும். அமெரிக்காவின் நேரடி அச்சுறுத்தலின் பின்னணியால் 8 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத போதும், இந்த நாடுகள் அனைத்தும்

www.padippakam.com

இலங்கைக்குச் சார்பான கருத்துக்களை கூறிவிட்டுத்தான் வாக்கெடுப்பிலிருந்து ஒதுங்கின.

குறிப்பாக ஜோர்தான், மலேசியா, செனகல், அங்கோலா, தர்கிஸ்தான் ஆகிய வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கையின் யுத்தத்திற்கு பின்னரான வளர்ச்சிப் பணிகளை வெளிப்படையாகவே பாராட்டினர். அமெரிக்காவின் அச்சுறுத்தல் இல்லாமல் இவைகளும் வாக்களித்திருந்தால் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் சமபலம் ஏற்படுவதற்கான வாய்ப்பு உருவாகி இருந்திருக்கும்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை, குறிப்பாக புலிகளுடனான இறுதி மோதலின் போது அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாகக் கொல்லப்படவில்லை, மோதல்கள் முடிவடைந்த (பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட) பின்னரான கடந்த 3 வருடத்தை அண்மிக்கும் காலப்பகுதியில் தமிழ் மக்களுக்கான அனைத்து உரிமைகளும் வழங்கப்பட்டுவிட்டன, அவர்கள் இலங்கையின் பெரும்பான்மை சிங்கள சகோதரர்களுக்கு சமமாக வாழ்கிறார்கள் என்று யாராவது வாதிட்டால் அது யதார்த்தத்தை மறுப்பதாவும் மறைப்பதாகவுமே அமையும்.

இறையாண்மையுள்ள ஒரு சின்னஞ்சிறிய தீவான இலங்கையின் விவகாரங்களுள், அமெரிக்கா தற்போது மிக ஆழமாகவே மூக்கை நுழைக்க வேண்டிய அவசியம் என்ன...?, இலங்கையின் மனித உரிமைமீறல்களை தட்டிக்கேட்க தமது கைகளில் மிக மிக ஆழமாகவே படிந்திருக்கும் இது போன்ற பல தொடர் வரலாற்றுக் கறைகளுடன் இன்று புறப்பட்டிருக்கும் அமெரிக்கர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் என்ன தகுதி இருக்கிறது...? இந்த ஜெனீவா தீர்மானத்தின் உள்நோக்கம் என்ன...? என்பதே இத்தீர்மானம் குறித்த யதார்த்த வாதிகளின் கேள்வி...

குறிப்பாக இலங்கையுடன் பல நூற்றாண்டுகளாக வரலாற்று, கலை, கலாச்சார, ஆன்மீகத் தொடர்புகளை கொண்டுள்ள இந்தியா, பல ஆண்டுகளாக இலங்கையுடன் இடதுசாரிய நல்லுறவுகளைப் பேணி இன்றைய இலங்கையின் நலத்திட்ட நிர்மாணப் பணிகளுக்கு பக்கபலமாக இருக்கும் சீனா, இவற்றையெல்லாம் தாண்டி பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இருந்து கொண்டு இந்த ஏகாதிபத்தியங்கள் இலங்கையில் கரிசனை கொள்கின்றன



படிப்பகம்

www.padippakam.com

என்றால் அதன் உள்நோக்கம் அமைதிக்கானதா...? அல்லது ஆக்கிரமிப்புக்கானதா...? என்கின்ற கேள்வி நியாயமானதே.

இரண்டாம் உலக யுத்தம் முடிவு பெறும் நேரம், 1945 ஆகஸ்ட் மாதம் ஜப்பான் நாட்டின் ஹிரோசிமா, நாகசாகி நகரங்கள் மீது அணுகுண்டுகளை வீசிய, யுத்தத்தின் ஊற்றுக்கண் இன்னமும் வற்றிவிடவில்லை. ஹிட்லர் இறந்துவிடவில்லை, இடம் பெயர்ந்திருக்கிறான், என்று உலக அரங்கிலே அன்று கொக்கரித்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், அதன் அடிவருடிகளினதும் அட்டூழியங்கள் இன்று வரை மனித குலத்தை ஆக்கிரமித்துக் கொண்டே இருக்கின்றன.

1945 ஆம் ஆண்டு முதல் இன்று வரை தம்முடைய சுய பிராந்திய நலத்திற்காக கிட்டத்தட்ட 200ற்கும் மேற்பட்ட வெளிநாட்டு விவகாரங்களில் தலையிட்டு 20ற்கும் மேற்பட்ட நாட்டு விவகாரங்களில் இராணுவ ஆக்கிரமிப்பை மேற்கொண்டுள்ளன இந்த அமெரிக்காவும் அதற்கு துணைபோகும் நாடுகளும்.

கிரீஸ் (1947-49), இத்தாலி (1948), கொரியா (1950-53), ஈரான் (1953), குவாண்டமாலா (1954), கொங்கோ (1960), கியூபா (1961), வியட்நாம் (1961 முதல் பல ஆண்டுகள்), லாவோஸ் (1961-1965), டொமினிக்கன் றிப்பப்ளிக் (1965), கம்போடியா (1969-1971), சிலி (1973), கிரனெடா (1983), லெபனான் (இரண்டு முறை: 1958 மற்றும் 1983), லிபியா (1986), பனாமா (1989), ஈரான் (3 தடவை: 1991, 1993, 1998-1999), சோமாலியா (1991-92), ஆப்கானிஸ்தான், ஈராக் மற்றும் சூடான் (1998), செர்பியா (1999). இப்படியாக ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

1890ம் ஆண்டு முதன்முதலில் 300 லாகோடாஸ் மக்களை கொன்று குவித்தது முதல், தன்னுடைய கரங்களை எப்பொழுதுமே அமெரிக்கா இரத்தம் தோய்ந்ததாகவே வைத்திருக்கின்றது. பின்னர் இரண்டாம் உலகப் போரிலிருந்து, இது வரை 23 நாடுகளின் மீது ஏவுகணை மற்றும் குண்டுத் தாக்குதல்களை நடத்தியதன் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலிகொண்ட மேலும் பல்லாயிரக்கணக்கான அப்பாவிகளின் படுகொலைக்கு களம் அமைத்துக் கொடுத்த அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும் தான் இன்று இலங்கைக்கு எதிராக அந்த நாட்டினுள்ளேயே நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்கு விசாரணை வேண்டும் என தீர்மனம் நிறைவேற்றியுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

இலங்கை மீது தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட ஏற்கனவே பலதடவை அமெரிக்கா முற்பட்டதும், அது நிறைவேறாமல் போனதும், இராஜதந்திர இரகசியங்கள். இந்த நிலையிலே மீண்டும் மூக்கை நுழைப்பதற்கான முயற்சியின் வெளிப்பாடே இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானம். உலகம் முழுவதினதும் சட்டாம் பிள்ளையாக, அணு ஆயுதங்களுடனும், போர்க்கப்பல்களுடனும் வலம் வந்து கொண்டிருக்கும் அமெரிக்காவும், ஐரோப்பாவும் இலங்கை மீது குற்றம் சுமத்த முயல்வதுதான் இன்றைய சர்வதேசக் கூத்து.

துவம்சம் செய்யப்பட்ட ஈராக், அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஆப்கானிஸ்தானும் பாகிஸ்தானமும் கூடவே எகிப்து, லிபியா, சிரியா இப்படி அமெரிக்க, ஐரோப்பிய ஆக்கிரமிப்பின் இன்றைய காட்சிகளும் தொடர் பதிவாகிக் கொண்டிருக்கும் நிலையிலேயே, இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் தனது ஈடுபாட்டை அதிகரிப்பதற்காக அமெரிக்க அரசாங்கம் மேற்கொண்டுவரும் தற்போதைய முயற்சிகள் தமிழர்களுக்கு பயனுள்ளதாக அமையப்போகிறதா...?, அல்லது படிப்படியாகவேனும் அமைதியாகிவரும் அந்த மக்களின் வாழ்வு மீண்டும் அவலத்துக்கு ஆளாக்கப்படப் போகிறதா...? விழிபிதுங்கலுடனான கேள்வி இது.

1956ல் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டு 56 வருடங்கள் கடந்து விட்டாலும், இலங்கையில் தமிழ் இருந்து கொண்டுதான் இருக்கிறது. சிங்களம் மட்டும் சட்டத்துடன் ஆரம்பித்த தமிழர்களின் உரிமைக்கான சாத்வீகப்போர், கிட்டத்தட்ட ஒரு தலைமுறையையே காவு கொடுத்துவிட்டு, அதேயளவு அடுத்த தலைமுறையின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கிக் கொண்டு முடிவடையாமல் முடிந்து நிற்கிறது. அறப்போராக ஆரம்பித்து ஆயுத மயமாக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களது உரிமைப் போராட்டம் இறுதியில் புலிகள் வசமாக்கப்பட்டு அழிக்கப்பட்ட பயங்கரவாதமாக நிறைவு பெற்றுள்ளது.

இந்த நிலையில் 20 வருடத்திற்க்கும் மேலான யுத்த களத்தைக் கண்ட, குண்டுச்சத்தங்களுடன் பங்கர் விடியல்களைக் கண்ட அந்த மக்களது வாழ்வாதாரமும், இருண்டு கிடக்கும் அவர்களது வாரிசுகளின் எதிர்கால வளமும் முக்கியமானதா...? அல்லது போர்க் குற்றம் எனவும் பயங்கரவாத ஒழிப்பு எனவும் சொல்லப்படும்



படிப்பகம்

www.padippakam.com

மனித உரிமைமீறல்கள் பற்றிய விசாரணை முக்கியமா...? என நமக்கு நாமே வினா எழுப்பி விடை கண்டு கொள்ள வேண்டும். வன்னியின் இறுதி மோதல்களை இலங்கை அரசு தனியே நடாத்தவில்லை, வெளிநாடுகள் சிலவற்றின் துணையுடனேயே அது நடாத்தி முடிக்கப்பட்டது என செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், இன்று இலங்கை அரசு மீது மட்டும் மனித உரிமை மீறல் விசாரணை நடாத்தப்பட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டதிலிருந்தே தீர்மானத்தின் உள்நோக்கம் புலனாகிறது.

பயங்கரவாதத்தை முறியடித்த இன்றைய இலங்கை அரசும் அதன் அதே அதிபரும் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமாம், அதற்கு சர்வதேச கண்காணிப்பும் கால அவகாசமும் அழிக்கப்படுகிறதாம். இதுதான் இலங்கை தொடர்பான அந்நியர்களின் தீர்மானம். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது என்கின்ற நிலைப்பாடு இருந்திருக்குமானால் ஆணைக்குழுவும் அதன் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட விசாரணை களும் ஏன் நடாத்தப்பட்டன என்கின்ற கேள்விக்கு, காலத்தை இழுத்தடிக்கும் காரியமே இது என தமிழ்த்தேசியம் இலகுவாகப் பதில் சொல்லிவிட்டுச் செல்லும்.

ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான இந்தத் தீர்மானம் முன்னெடுக்கப்பட ஆரம்பித்த வேளையிலிருந்தே, இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான அமெரிக்காவின் சதிதான் இது என இலங்கை அரசதரப்பில் சொல்லப்பட்டு வந்தது. இந்தியாவின் முக்கிய திருத்தம் இரண்டுடன் தீர்மானம் நிறைவேறிய பின்னர், இதே ஆட்சிமாற்றக் கருத்துண்மையை இத்தீர்மானத்திற்கு ஆதரவாகச் செயல்பட்ட புலம் பெயர் தமிழர் தரப்புக்கள் சிலவும் ஏற்றுக் கொண்டு கருத்து வெளியிட்டுள்ளன.

ஆக அமெரிக்க, ஐரோப்பியர்களின் இத்தீர்மானம் இலங்கைத் தீவில் வசிக்கும் எந்த இனமக்களுக்கும் எதுவித நன்மையையும் அளிக்கப் போவதில்லை என்பது படிப்படியாக வெளியாகிறது. மேற்கத்திய நாடுகள் உண்மையாகவே இலங்கை மக்கள் தங்கள் வாழ்வாதரத்தை கட்டியமைத்து அமைதியாக வாழ வேண்டுமென்று விரும்பினால், அநாவசிய தலையீடுகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும். வல்லரசுகளின் இந்த அரசியல் சதுரங்கம் தொடருமானால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் கேந்திர



படிப்பகம்

www.padippakam.com

முக்கியம் வாய்ந்த இடத்தில் இருக்கும் இலங்கையில் தொடர்ந்தும், ஒருமைப்பாட்டுக் குந்தகமும், பாரிய அழிவுகளும், ஏற்படவே வழிவகுக்கும்.

"போர்க் குற்றசாட்டுகளுக்குப் பதிலளிக்கப்படாமல் போனால் - இலங்கையில் மீண்டும் ஒரு ஆயுத மோதல் வெடிக்கலாம்" என பகிரங்கமகவே மிரட்டும் தொனியில், அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்குப் பொறுப்பான உதவி இராஜாங்கச் செயலாளர் ரொபேட் ஓ பிளேக் அண்மையில் தெரிவித்திருந்தது கவலையுடன் கவனிக்கப்பட வேண்டியது.

**23.03.2012**



படிப்பகம்

www.padippakam.com

# ஆட்டம் காணும் நேரு குடும்பத்து அரசியல்...

கடந்த வாரம் இடம் பெற்ற, இந்தியாவின் குட்டி பொதுத் தேர்தல் என வருணிக்கப்பட்டு நாடு முழுவதும் பெரும் எதிர் பார்ப்பை ஏற்படுத்திய, ஐந்து மாநில சட்டசபைத் தேர்தல்களில், நான்கு மாநிலங்களில் மண்ணைக் கவ்வியுள்ளது மத்தியில் ஆளும் காங்கிரஸ் கட்சி. உத்தரப்பிரதேசம், பஞ்சாப், உத்தரகண்ட், மணிப்பூர் மற்றும் கோவா ஆகிய 5 மாநில தேர்தல் முடிவுகள், இன்றும் நேரு குடும்பத்தின் பிடியில் இருக்கும் காங்கிரஸ் கட்சிக்கும், இந்தியாவின் இளவரசர் என வர்ணிக்கப்பட்ட ராகுல் காந்திக்குமான பெரும் சவாலாகவே கருதப்படுகிறது. இந்தத் தேர்தல் முடிவுகள் இன்றைய மத்திய அரசிலும் மாற்றங்களுக்கு வழிவகுக்குமா...? என்ற கேள்விகளும் கிளம்பியுள்ளன.

குறிப்பாக 403 சட்டசபைத் தொகுதிகளை உள்ளடக்கி, இந்தியாவின் மிகப் பெரும் மாநிலமாகத் திகழ்வதும், வருங்காலத்தில் மத்தியில் ஆட்சி அமைக்கப் போவது யார் என்பதை முடிவு செய்வதில் பெரும்பங்கு வகிக்கப் போகும் மாநிலமுமான உத்தரப் பிரதேசத்தில் தேர்தல் நடந்தது, இந்தியா முழுவதும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. அங்கே அரசியல் செல்வாக்கை இழந்து விட்டதாகக் கூறப்பட்ட முலாயம் சிங் யாதவ் மீண்டும் அரியணை ஏற, பெரும் ஊழல், ஆடம்பரங்களால் மக்கள் செல்வாக்கை இழந்த மாயாவதி ஆட்சியைப் பறிகொடுத்துள்ளார்.

தேர்தல் நடந்த ஐந்து மாநிலங்களில், மணிப்பூரைத் தவிர, மற்ற நான்கு மாநிலங்களிலும், காங்கிரஸ் கட்சிக்கு பலத்த அடி. குறிப்பாக உ.பி-யில், இழந்த செல்வாக்கை மீண்டும் பெறும் நோக்கத்துடன் கடும் பிரசாரம் செய்த காங்கிரஸ் கட்சிக்கு, நான்காவது இடமே கிடைத்துள்ளது. பஞ்சாப் மாநிலத்தில், அமரீந்தர் சிங் முதல்வர்



படிப்பகம்

www.padippakam.com

என்று அறிவித்து, அவர் தலைமையில் தேர்தலை சந்தித்த காங்கிரஸ், ஆட்சி அமைக்கும் என கருத்துக் கணிப்புகளில் கூறப்பட்டிருந்தாலும் அங்கும், காங்கிரஸ் கட்சி செல்லாக் காசாகிவிட்டது. சிரோன்மணி அகாலி தளம் - பா.ஜ., கூட்டணி, மீண்டும் அங்கே ஆட்சியை பிடித்துள்ளது. கோவாவில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சி கடந்த ஐந்தாண்டுகளில், பல வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டிருந் தாலும் கனிம ஊழல் புகார் ஏற்படுத்திய, ஆளும் கட்சிக்கு எதிரான மக்களின் அலையால், அங்கே பா.ஜ.க. அபார வெற்றி பெற்று, ஆட்சியைப் பிடித்துள்ளது. உத்தரகண்ட் மாநிலத்தில் யாருக்கும் அறுதிப்பெரும்பான்மை இல்லாததால் காங்கிரசுக்கும் பாஜக வுக்கும் இடையே ஆட்சி அமைப்பதில் இழுபறி நிலவுகிறது.

மணிப்பூரில் மட்டுமே, காங்கிரஸ் கட்சிக்கு குறிப்பிடத்தக்க அளவில் வெற்றி கிடைத்துள்ளது. எதிர்க் கட்சிகளின் செயற்பாடு, இங்கு பெரிய அளவில் இல்லாததே, காங்கிரஸ் வெற்றிக்கு காரணம் என காங்கிரஸ் எதிர்பாளர்கள் தெரிவித்துள்ளனர். தேர்தல் நடந்த 5 மாநிலங்களிலும், முன்பை விட அதிக சதவீத வாக்குப்பதிவு, இடம் பெற்றதே இந்த மாற்றத்திற்கு காரணம் எனவும், புதிய இளம் வாக்காளர்கள், அரசியல் மாயைகளுக்கு மயங்கவில்லை என்பதும் தெளிவாகிறது.

உ.பி., மாநிலத்தை பொறுத்தவரை, “அர்சியலில் செல்வாக்கு இழந்த நபர்” என, எதிர்க் கட்சிகளால் கடும் விமர்சனத்துக்கு ஆளான முலாயம் சிங் யாதவ்வின் சமாஜ்வாடி கட்சி, மீண்டும் ஆட்சியை அலங்கரிப்பதற்கு, முலாயமின் மகன் அகிலேஷ்யாதவின் உழைப்பே காரணம் எனச் சொல்லப்படுகிறது. இந்த வெற்றியின் மூலம், தேசிய அரசியலில், முலாயம் சிங் யாதவ் அதிக முக்கியத்துவம் பெறுவார் என எதிர்பார்க்கப் படுகிறது. இந்தியாவின் தேசிய (மத்திய) அரசியலில் தே.ஜ. கூட்டணி மற்றும் ஐ.மு. கூட்டணி ஆகியவற்றுக்கு மாற்றாக மூன்றாவது அணி ஒன்று உருவாவதற்கான வாய்ப்புகளை உ.பி. தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தியுள்ளதாகக் கருதலாம்.

தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மட்டுமல்ல, உயர் வகுப்பினரின் ஆதரவுடனும், கடந்த தேர்தலில் ஆட்சியை பிடித்த பகுஜன் சமாஜ் கட்சி தலைவரும், தலித்துகளின் தலைவி என வர்ணிக்கப்பட்டவருமான மாயாவதிக்கு, இந்த தேர்தலில், எதிர்க்கட்சி வரிசை தான் கிடைத்துள்ளது. மத்திய அரசின் நிதி உதவியின் கீழ், உ.பி-யில் செயல்படுத்தப்பட்ட தேசிய கிராமப்புற



படிப்பகம்

www.padippakam.com

சுகாதாரத் திட்டத்தில், பத்தாயிரம் கோடி அளவுக்கு ஊழல் நடந்தது- அவரது ஆடம்பர அரசியல்-அதிக அளவில் தனது சிலைகளைத் தானே ஏற்படுத்தி, மக்கள் பணத்தை வீணடித்தது ஆகியவையே, மீண்டும் அவர் பதவியில் அமர தடையாகியதாகச் சொல்லப் படுகிறது.

மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சியின் தோல்விக்குப் இன்னமும் பல காரணங்களைக் கூற முடியும். முதலாவதாக, அவர் உருவாக்கிய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவராகச் செயலாற்ற அவரால் முடியவில்லை. கடந்த 2007 சட்டப் பேரவைத் தேர்தலில் அவர் தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றதற்குக் காரணம், எல்லா தரப்பினரையும் அரவணைத்துச் செல்லும் "சர்வ சமாஜ்" கட்சியாகத் தனது பகுஜன் சமாஜ் கட்சி இருக்கும் என்று அவர் விடுத்த அறை கூவல்தான். மாயாவதி ஒரு மாய உலகத்தில் வாழ்ந்தபடி ஆட்சி நடத்தினார் என்பது அவர்மீது பொதுவாகக் கூறப்படும் குற்றச் சாட்டு. பத்து அடி உயர மதில்களுக்குள் இருந்துகொண்டு, தனது அமைச்சர்களைக்கூடச் சந்திக்காத முதல்வராக மாயாவதி ஆட்சி நடத்தியதாக அவரது கட்சிக்காரர்களே இப்போது குற்றம் கூறுகிறார்கள். ஒரு சில அதிகாரிகளையும், காவல்துறையினரையும் மட்டுமே தனது ஆலோசகர்களாகக் கொண்டு ஆட்சி நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடிமேல் அடி வாங்கிவரும் காங்கிரஸ் கட்சியின் பலம் தளர்ந்து வருவதால், மன்மோகன்சிங் தலைமையிலான மத்திய அரசுக்கு, தொடரும் சிக்கல் மேலும் அதிகரிக்கும் எனத் தெரிகிறது. உ.பி. சட்டசபைத் தேர்தலில் காங்கிரசின் வெற்றி என்பது இவ்வளவு மோசமாக இருக்கும் என்று யாரும் கணிக்கவில்லை. ராகுல் காந்தியின் இடைவிடாத சூறாவளிச் சுற்றுப்பயணம், கடும் பிரசாரம் என கடுமையான உழைப்பின் காரணமாக, கணிசமான வெற்றியை காங்கிரஸ் பெறும் என எதிர்பார்ப்பு இருந்தது. தவிர காங்கிரசின் ஆதரவுடன் முலாயம் ஆட்சியமைப்பார் என்றும் கூறப்பட்டது. ராகுலை அடுத்த பிரதமராக முன்னிறுத்த வேண்டுமென கட்சிக்குள் ஏற்கனவே குரல்கள் கிளம்பிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், இந்த தோல்வி மேலும் காங்கிரஸ் கட்சிக்குள் மட்டுமல்ல, மத்திய அரசிலும் குழப்பத்தை உருவாக்கலாம். காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் முதல் ஆட்சியைவிட, தற்போதைய இரண்டாவது ஆட்சியில் காங்கிரஸ் கூடுதல் ஆசனங்களைப் பெற்று ஆட்சிக்கு வந்தது. ஆனால், தொடர் ஊழல் குற்றச்சாட்டுகள் காரணமாக மதிப்பிழந்து, கூட்டணி கட்சிகளின்



படிப்பகம்

ஒத்துழைப்புக்கூட கிடைக்காமல், தற்போது தடுமாற்றத்தில உள்ள காங்கிரஸ் கட்சிக்கு இந்தத் தேர்தல் முடிவுகள் மேலும் பின்னடைவையே ஏற்படுத்தியுள்ளது. அண்மைய காலங்களில் பெரும் ஊழல் நெருக்கடிகளால் காங்கிரசும், மதவாதம், உட்கட்சி மோதல், ஆங்காங்கே ஊழல் ஆகியவற்றால் பாஜகவும் மக்கள் ஆதரவை இழந்து வர மாநிலக் கட்சிகளின் செல்வாக்கு அதிகமாகிக் கொண்டே வருவதால், தேசிய அரசியலின் போக்கும் இனி வரும் ஆண்டுகளில் முற்றிலும் மாறவே வாய்ப்புள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

முலாயம்சிங் யாதவைப் பொறுத்தவரை, மக்கள் அவரை விரும்பி ஏற்றுக்கொண்டு, மீண்டும் பதவியில் அமர்த்தி இருப்ப தாகக் கூறிவிட முடியாது. முலாயம் வந்தால் குண்டர்கள் ராஜ்ஜியம் வந்துவிடும் என்கிற பயம் உத்தரப் பிரதேசத்தில் பரவலாக இருந்தாலும், அவரது சமாஜவாதி கட்சி தனிப் பெரும்பான்மை யுடன் ஆட்சி அமைத்திருப்பதற்கு மாயாவதியின் ஐந்தாண்டு கால ஆட்சிக்குத்தான் அவர் நன்றி செலுத்த வேண்டும். விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், விவசாயிகளின் பிரச்னை கள், மின்வெட்டு, பரவலான லஞ்ச ஊழல், இவையெல்லாம் முலாயம்சிங் யாதவைத் தேர்ந்தெடுக்க வைத்திருக்கின்றன என்பது தான் உண்மை. அது மட்டுமல்லாமல், முலாயம்சிங் யாதவின் மகன் அகிலேஷ் யாதவ் வித்தியாசமான நம்பிக்கை நட்சத்திரமாகத் தெரிந்ததும் இன்னொரு காரணம். ராகுல் காந்தியைப் போல அந்நியத்தனம் இல்லாமல், மக்களில் ஒருவராகத் தெரிந்த அந்த இளைஞர், சமாஜவாதி கட்சியின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட உதவினார் என்றும் கூற வேண்டும்.

உத்தரப் பிரதேசத் தேர்தல் முடிவுகள் கூர்ந்து கவனிக்கப்பட்டதற் குக் காரணம், முலாயமா...? மாயாவதியா...? என்பதாக இல்லாமல், ராகுல் காந்தியால் காங்கிரஸுக்கு மீண்டும் எழுச்சி ஏற்படுமா...? இல்லையா...? என்பதாக இருந்ததுதான். ஒருவேளை ராகுல் காந்தி யின் பிரசாரத்தால் உத்தரப் பிரதேசத்தில் காங்கிரஸ் கணிசமான இடங்களில் வெற்றி பெற்றிருந்தால், அது அகில இந்திய அளவில் காங்கிரஸுக்குப் புத்துணர்ச்சி அளித்து, மக்களவைத் தேர்தலுக்கு வழிகோலி, ராகுலை இந்தியாவின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திர மாக்கியிருக்கலாம்.

நடந்து முடிந்த ஐந்து மாநில சட்டப் பேரவைத் தேர்தல்களிலும் நேரு குடும்பத்தின் இன்றைய இளவரசர் ராகுல் காந்தி மட்டு

www.padippakam.com

மல்லாமல், சோனியா காந்தி, பிரியங்கா காந்தி, அவரது கணவர் ரொபேர்ட் வதேரா, பிரியங்காவின் குழந்தைகள் என்று நேரு குடும்பமே மேடையேறிப் பொதுக்கூட்ட மேடையைப் பொருள் காட்சி மேடையாக்கியும் கூட வெற்றி கிட்டாமல் போனதுதான் அரசியல் கொடுமை...!

**10.03.2012**

ரயிலில் முதல் வகுப்பில் அமர்ந்த காந்தியை வெளியே தள்ளிவிட்டபோது அவருக்கு வெறுமனே கோபம் மட்டும் வந்திருந்தால் அவர் சாவர்கர் ஆகியிருப்பார். அந்தக் கோபத்தோடு அவருக்கு நம் தேசத்தில் நாமும் மற்றவர்களை அப்படி நடத்துகிறோமே எனத் தோன்றியதால்தான் அவர் காந்தியானார்.

– யு.ஆர். அனந்தமூர்த்தி



படிப்பகம்

www.padippakam.com

# மாட்டுக் கறி மாமியும்... கல்லா கட்டும் கோபாலும்...

கூடங்குளம் அணு உலை - முல்லை பெரியாறு - தானே புயல் இவற்றை எல்லாம் ஓரம்கட்டிவிட்டு, “மாட்டுக் கறி மாமி” என்கின்ற அட்டைப்படக் கட்டுரையும் அதற்காக அடித்து நொருக்கப்பட்ட நக்கீரன் பத்திரிகை அலுவலகமும் அதன் தொடர் நிகழ்வுகளும்தான் இன்றைய தமிழகத்தின் எரியும் பிரச்சினையாகியுள்ளது.

பிரச்சினையின் நாயகர்கள் தமிழக முதல்வர் ஜெயலலிதா - நக்கீரன் ஆசிரியர் கோபால் - இருவரும் ஒருவருக்கொருவர் சளைத் தவர்களல்லர். அடாவடி அரசியலில் ஜெ. புயல் என்றால், புலனாய்வு...(?) இதழியலில் கோபால் புலி. ஆணவ அரசியலின் அடித்தளம் அம்மா என்றால், புலனாய்வு இதழியல் எனச் சொல்லிக் கொண்டு மிரட்டல்கள் தக-தக தகவல்களினூடு கல்லாக் கட்டும் வித்தைக்கு பிதாமகன் நக்கீரன் கோபால். இந்தப் புயலாலும், புலியாலும் பாதிக்கப்பட்டவர்களினதும், பலியானவர்களதும் பட்டியல் மிக நீளமானது. அதிமுக ஆட்சிக்கு வரும் போதெல்லாம், நக்கீரனுக்கு வைக்கப்படும் ஆப்பையும், சந்தனக் கட்டை வீரப்பனையும், அண்மைய காலங்களில் விடுதலைப் புலிகளையும் - இலங்கைத் தமிழர்களையும் மூலதனமாக வைத்தே தமிழகத்தின் உணர்ச்சி வாசகர்களை தன் வசமாக்கிய பத்திரிகை நக்கீரன்.

இந்தியாவின் பெரும்பாலான பாரம்பரிய ஊடகங்கள் பார்ப்பனியப் பின்னணி, தலைமையின், கீழ் செயல்பட்டு வரும் சூழலில், பெரிய பின்புலம் எதுவும் இல்லாமல் நக்கீரன் இதழ் உருவாகியது என்கின்ற வகையில் மற்ற பத்திரிக்கைகளை விட, நக்கீரனுக்கு ஒரு தனி இடம் உண்டு. நக்கீரன் இதழ் தொடங்கப் பட்ட போது, இது இன்னும் ஆறு மாதமோ, அல்லது ஒரு வருடமோ என்று ஆருடம் கூறியவர்கள் பலர். ஆனாலும் நக்கீரன்



படிப்பகம்

நிலைத்து நின்றது என்றால் அதற்கு பெரிதும் உறுதுணையாக இருந்தது, நக்கீரன் மீது தொடுக்கப்பட்ட ஒடுக்குமுறை என்றும் சொல்லலாம்.

1991 ஆட்சிக் காலத்தில், அப்போதைய ஜெயலலிதா அரசுக்கு எதிராக நக்கீரன் இதழ் வெளிக் கொண்டு வந்த பல்வேறு ஊழல் குறித்த செய்திகளும், அதிமுக அரசின் அடக்குமுறைகள் குறித்த செய்திகளும், பொதுமக்கள் மத்தியில் நக்கீரனுக்கென்று ஒரு தனி இடத்தைப் பிடித்துக் கொடுத்தது. 2001ல் மீண்டும் அதிமுக ஆட்சிக்கு வந்ததும் நக்கீரன் எதிர் கொண்ட சிக்கல்கள் ஏராளம். 2003ல் நக்கீரன் கோபாலை ஜெயலலிதா அரசு, பொடா சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையிலடைத்தது. ஜெயலலிதாவின் பழிவாங்கும் போக்கால், நக்கீரனை இல்லாதெழிக்க அதன் மீது தொடுத்த நடவடிக்கைகள், அப்பத்திரிக்கையை வளர்க்கவே செய்தன. அன்றைய ஜெயலலிதா அரசு கோபால் மீதும், நக்கீரன் மீதும் தொடுத்த அடக்கு முறைக்கு எதிராக ஒட்டுமொத்த பத்திரிக்கை உலகமும் ஒன்றுபட்டு குரல் கொடுத்தது அனைவரும் அறிந்த ஒன்றே...! திமுக எதிர்க்கட்சியாகும் போதெல்லாம் நக்கீரன் எதிரிப் பத்திரிகை இருக்கைக்குப் போவதும், ஆட்சி மாறி திமுக நாற்காலியில் உட்கார்ந்ததும், அதிகாரத்தில் உள்ளவர்களின் தோழனாக மாறுவதும் பல ஆண்டுகளாக மக்கள் பார்த்து வரும் சமாச்சாரம்.

தற்போதைய, சிக்கலுக்குள்ளான ஜெயலலிதா பற்றிய நக்கீரனின் அந்தக் கட்டுரை சரியா என்பதுதான் கேள்வி. "தனிப்பட்ட ஒருவரின் சுதந்திரம், வாழ்க்கை பாதிக்கப்படும் அளவுக்கு செய்திகள் அமையக்கூடாது. இனம், மதம், தேசிய அடையாளம் அல்லது பால் ரீதியான குறிப்புகளை கட்டுரையில் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவசியம் ஏற்படும் பட்சத்தில் மட்டுமே இவை இடம் பெற வேண்டும்". இந்திய அரசியல் சட்டம் 1951, மற்றும் பத்திரிகை கவுன்சில் நெறிமுறைகள் 1978 வலியுறுத்துவது இதைத்தான். இந்த அடிப்படையில், நக்கீரன் வெளியிட்ட தனிப்பட்ட தகவல்கள் அந்தக் கட்டுரைக்கு அவசியம் என்பதால் வெளியிடப்பட்டுள்ளதாகக் கொண்டாலும் ஜெயலலிதா விடயத்தில் நக்கீரன் ஏற்கெனவே உச்சநீதிமன்றத்திடமிருந்து பெற்ற சில நிபந்தனைகளை மீறியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. இந்த கட்டுரையின் அட்டைப்படத் தலைப்பில் இருக்கும் மாட்டுக்கறி விவகாரமும் சிக்கலுக்கு முக்கிய காரணமாகியுள்ளது.

www.padippakam.com

ஜெயலலிதா, தான் மாட்டுக்கறி சாப்பிடுவதாகச் சொன்னதாக கட்டுரையில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. எம்ஜிஆர் சொன்னதாகவே உரையாடல் இடம்பெற்றுள்ளது. ஜெயலலிதா விடயத்தில் நக்கீரன் ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்திடமிருந்து பெற்ற நிபந்தனைகளில், ஜெயலலிதாவின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்த செய்தியாக இருந்தால், அதனை ஜெயலலிதாவின் பார்வைக்கு அனுப்பி, 36 மணி நேரத்துக்குள் அவர் பதில் சொல்லாவிட்டால் அப்படியே வெளியிட்டுக் கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது. தன்னிடம் நக்கீரன் இப்படி கருத்து கேட்கவில்லை என்று ஜெயலலிதா மனு தாக்கல் செய்ய, இது உண்மை என்பதால் நக்கீரன் செய்தது நீதிமன்ற உத்தரவுக்கு புறம்பானதாகிவிட்டது. இதனால் நக்கீரன் இதழின் அட்டைப்படத்தில் மன்னிப்புக் கோரி செய்தி வெளியிடுமாறு சென்னை உயர்நீதிமன்றம் கோபாலுக்கு உத்தரவிட்டுள்ளது. நக்கீரன் வெளியிட்ட செய்திக்கு ஆதாரம் தேவை என்பதும் குறைந்தபட்சம் இன்னார் சொன்னார் என்றாவது குறிப்பிட்டிருக்க வேண்டும் என்பதும் பத்திரிகையுலக நடைமுறை. "நாங்கள் புலனாய்வுப் பத்திரிகை, அப்படியெல்லாம் குறிப்பிட முடியாது" என்று சொல்வது எங்கும் ஏற்றுக் கொள்ள முடியாதது.

உண்மையில் இந்தக் கட்டுரை ஜெயலலிதாவுக்கு எதிரானதே அல்ல என்பதுதான் உண்மை. பார்ப்பன கும்பலின் பிடியில் படிப்படியாகச் சிக்கிக்கொண்டிருக்கும் ஜெயலலிதா, மயிலாப்பூர் மாமிகள் சொல்வதைக் கேட்டுத்தான் ஆட்சி நடத்துவதாக வரும் குற்றச்சாட்டுக்கு, தனது நெருங்கிய சகாக்களின் சந்திப்பில் அவர்களுக்கு பதிலளிக்கும் விதத்தில் அந்தக் கட்டுரை அமைந்திருந்தது. "மாட்டுக்கறி சாப்பிடும் மாமி என எம்ஜிஆரால் கூறப்பட்ட நான் பார்ப்பனர் பேச்சைக் கேட்டு நடப்பவளா...?" என ஜெயலலிதா கேள்வி எழுப்புவதாகக் கட்டுரை அமைகிறது. ஜெயலலிதாவின் வீட்டுக்குள் நடந்த இந்த உரையாடல் நக்கீரனுக்கு எப்படித் தெரிந்தது என்பது எங்கும் தெரிவிக்கப்படவில்லை.

மாட்டுக்கறியை ஐயரும் விரும்பி உண்ணும்போது நமக்கென்ன வந்தது என்று மற்றவர்கள் ஒதுங்கிப் போகிறார்கள். ஆனால் ரகசியமாய் தின்றுவிட்டு வெளியில் நாங்க ஆச்சாரமாக்கும் என்று பம்மாத்து பண்ணுபவர்களை படம்பிடித்து காட்டுவதில் தவறே இல்லை. இதே ஜெயலலிதா தனக்குப் பிடித்த உணவு சிக்கன் என தெள்ளத் தெளிவாக 1996-ம் ஆண்டு இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். இந்த தகவலை ஆனந்த விகடன் உள்ளிட்ட பல பத்திரிகைகள் பல காலகட்டங்களில்



படிப்பகம்

www.padippakam.com

வெளியிட்டு பெருமைப்பட்டன. சிக்கன் சாப்பிட்டால் பெருமை கொள்ளும் பார்ப்பன சமூகம், மாட்டுக்கறி சாப்பிட்டால் மட்டும் மட்டமாக நினைத்துக் கொள்ளுகிறது...?

இந்தக் கட்டுரைக்காக அதிமுகவினர் நக்கீரன் அலுவலகத்தைத் தாக்கியதும், அந்தப் பகுதியையையே பெரிய கலவரப் பிரதேசமாக இரண்டு தினங்கள் மாற்றியதும், அதுவும் சட்டமன்ற உறுப்பினர்கள் மூவர் தலைமையில் இதெல்லாம் நடந்தும் ஜெயலலிதா அமைதியாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்ததும், ஜெயலலிதா இன்னும் மாறவே இல்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

அதேவளை நக்கீரன், ஊடக தர்மங்களை மட்டுமல்ல உண்மை களைக் கூட மதிக்காமல் பணம் பார்ப்பதையே குறியாகக்கொண்டு செய்திகளையும் ஆக்கங்களையும் வெளியிடுவது தொடர் கதையாகி விட்டது. குறிப்பாக இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பிலான செய்திகளை வெளியிடுவதில் தனது கல்லாக்கட்டும் கேவலத்தை பட்டையிட்டு வெளிப்படுத்துகிறது நக்கீரன். வன்னியின் இறுதி யுத்தத்தில் புலிகளதும் அங்கு சிக்கவைக்கப்பட்ட மக்களதும் அழிவிற்கு பொறுப்பானவர்களில் முக்கியஸ்தர்களான உணர் வாளர்கள் எனப்படும் புலிகளின் தமிழகத்துப் பினாமிகளின் அரசியல் ஊதுகுழல்களில் முக்கியமானதாகி தனது கல்லாவை கனமாகவே நிறைத்துக் கொண்டது நக்கீரன். வன்னியின் இறுதிப்பேரின் போது தமிழகத்தில் நிகழ்த்தப்பட்ட தமிழ் இளைஞர்களின் உணர்வுகளைத் தூண்டும் உரைகளையும், செயல்பாடுகளையும் முக்கியமானதாக்கி முத்துக்குமார் உட்பட்ட 9 இளைஞர்களை தற்கொலைக்கு இட்டுச் சென்ற அவலத்திற்கு நக்கீரனின் ஊடக தர்மமும் பொறுப்பானதே.

அனைத்திற்கும் மேலாக (கேவலமாக) புலிகளின் தலைமை அழிக்கப்பட்டு அதன் தலைவர் வே. பிராபகரன் கொல்லப்பட்ட காட்சியை அவரே பார்த்துக் கொண்டிருப்பது போன்ற அட்டைப் படச் செய்தியை வெளியிட்டு சம்பாத்தியத்தில் சாதனை படைத்தது நக்கீரன். புலிகளின் அரசியல் ஆலோசகராக இருந்த மறைந்த அன்ரன் பாலசிங்கத்துடன் பிராபகரன் பேசிக்கொண்டிருந்த புகைப்படத்தின் கிரபிக்ஸ் தான் நக்கீரனின் அந்தக் கல்லாக் கட்டலுக்கு கைகொடுத்தது.

வியாபாரத்திற்காக நக்கீரன் எது வேண்டுமானாலும் செய்யும் என்பதற்கு சுவாமிகள் நித்யானந்தா விவகாரம் அண்மைய ஒரு சா(கா)ட்சி. ஒருவரின் படுக்கையறையில் இரகசிய கமரா'வைப்



படிப்பகம்

பொருத்தி - அங்கு நடந்ததை காட்சிப்படுத்தி - கேட்டால் புலனாய்வு ஜேர்னலிசமாம். காஞ்சிபுரம் அர்ச்சகர் தேவநாதனின் காமலீலைகள், நித்தியானந்தரின் படுக்கைக் காட்சிகள் யாவும் நக்கீரன் இணைய தளத்தில் கட்டணம் வசூலித்து காட்டப்பட்டது. இங்கு நிர்வாணப் படமாகியது அந்தக்காட்சிகளா...? நக்கீரனின் இதழியல் அறமா...? பத்திரிக்கை சுதந்திரம் பறிபோகிறது என்று கூப்பாடு போடும் நக்கீரன், மதுரையில் தினகரன் ஊழியர்கள் மூன்று பேர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக நடந்த வழக்கில் எப்படி நடந்து கொண்டது என்பதை நாடறியும்.

ஊடகங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு நக்கீரனின் ஊடக அணுகு முறையும் அதன் விழைவுகளும் ஒரு படிப்பினையாக அமையவேண்டும். ஆனாலும் ஒரு ஜனநாயக நாட்டில் ஊடகத்தின் சுதந்திரத்தைப் பாதுகாப்பது மிகமிக முக்கியம். நக்கீரனுக்கு எதிராக சட்டமன்ற உறுப்பினர்களும், அதிமுக தொண்டர்களும் நடத்திய வன்முறைகள் அத்தனைக்கும், அதிமுகவின் பொதுச்செயலாளர் என்ற முறையிலும், உள்துறை அமைச்சர் என்ற முறையிலும், ஜெயலலிதாவே பொறுப்பு.

அதிமுகவின் வெறியாட்டமும் ஜெயலலிதாவின் அடாவடித் தனமும் எப்படி அசிங்கமாய் இருக்கிறதோ அது போன்றதே நக்கீரனின் கல்லாக்கட்டும் ஜேர்ணலிசமும்.

**14.01.2012**

www.padippakam.com

# கம்யூனிசத்தின் தெருக்களிலும் கிளர்ச்சிக் கூட்டம்...

நீண்ட-நெடிய-நிமிர்ந்து நின்ற செங்கொடி சித்தாந்தம் சிறகடித்து பறந்து, சோதனைக்குள்ளாகிய கடந்த 20 ஆண்டு கால சோவியத் மண்ணின் வரலாற்றில் இவ்வளவு பெரிய மக்கள் திரளை கண்டதில்லை மொஸ்கோ உள்ளிட்ட ரஷ்ய நகரங்கள். ரட்சகன் என்று நம்பிய அந்நாட்டின் தலைமைத்துவம், பாவிகளாய் மாறிப்போன பரிதாபத்தின் விளைவுதான இது...? அல்லது படிப்படியாக உலகையே இறுக்கிக் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய வலைப் பின்னலின் மற்றொரு பரிணாமமா...?.

கார்ல் மார்க்ஸ் தந்த தத்துவத்தின் நீட்சியாக வந்த ஆட்சியாளர்களால் ஆளப்பட்ட அந்த சோவியத் யூனியன் உலக வரைபடத்தில் பாதி இடத்தையே பிடித்திருந்தது. அந்த வெளிப்பாட்டின் முக்கிய பகுதியாகிய ரஷ்யாவில்தான் சமீபத்தில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் முறைகேடுகள் செய்து அந்நாட்டு பிரதமர் விளாடிமர் புற்றினுடைய கட்சி வெற்றி பெற்றதாக எதிர்க்கட்சிகளால் குற்றம் சுமத்தப்படுகின்றன. இதன் வெளிப்பாடே பிரதமர் புற்றினுக்கு எதிராக பல்லாயிரக் கணக்கான மக்கள் தெருவில் இறங்கி பேரணி மற்றும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது.

கடந்த வாரம் நடைபெற்று முடிந்த தேர்தலில் போட்டியிட்ட பிரதமர் புற்றினின் ஐக்கிய ரஷ்யக் கட்சி உள்ளிட்ட 7 கட்சிகளில் புற்றினின் கட்சி 49.5 சதவிகித வாக்குகளைப் பெற்று 238 இடங்களைக் கைப்பற்றியது. ரஷ்ய நாடாளுமன்றத்திற்குள்ள மொத்தம் 450 இடங்களில் பாதிக்கும் மேற்பட்ட இடங்ள் இது. நான்கு வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற தேர்தலில் புற்றினுடைய கட்சி 64 சதவிகித வாக்குகள் பெற்று 315 இடங்களைக்



படிப்பகம்

www.padippakam.com

கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. அடுத்த ஆண்டு(2012 மார்ச் மாதம்) அங்கு நடைபெற உள்ள அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்கு திட்டமிட்டிருக்கும் புற்றினுக்கு இது ஒரு சரிவாகும் என தேர்தல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ள நிலையிலேயே தேர்தலில் குளறுபடிகள் நடந்ததாகக் குற்றம் சுமத்தப்படுகிறது. விலாடிமர் புற்றின் 2000-2008 ஆம் ஆண்டுவரை இரண்டு தடவை அந்நாட்டின் அதிபர் ஆக இருந்து சட்டப்படி மீண்டும் 3 ஆவது முறையாக தொடர்ந்து அதிபராக இருக்க முடியாமையால் பிரதமர் அவதாரம் எடுத்தவர். அவருக்கு மிகவும் நெருக்கமான மெத்தவதேவ் அதிபராக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் தான் தற்போது இடம் பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் புற்றினின் கட்சி (வெற்றி பெற்றிருந்தாலும்) மிகப் பெரிய சரிவை சந்தித்துள்ளது. இந்த வெற்றியும் முறைகேடாக பெற்ற வெற்றியே என எதிர்க்கட்சி களும் 1991 ஆம் ஆண்டு சோவியத் யூனியன் பிளவுபட்டதை அடுத்து நடைபெற்ற தேர்தல்களில் மிகவும் மோசமான தேர்தல் இது என தேர்தல் நோக்கர்களும் கூறுகின்றனர். தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக தேர்தலை பார்வையிட்ட சர்வதேச கண்காணிப்பு மையமும் தெரிவித்துள்ளது. இந்தத் தேர்தலில் நடைபெற்ற முறைகேடுகளை அம்பலப்படுத்திய அந்த நாட்டின் இரண்டு ஊடக இணையதளங்கள் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன.

முறைகேடு மூலம் புற்றின் தனது கட்சியை வெற்றி பெற வைத்து விட்டார் எனக்கூறி வீதிகளில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் பிரதமர் புற்றினுக்கு எதிராகவே அதிக கோஷங்களை எழுப்பி வருவதாக அறிய முடிகிறது. 'புரட்சி ஓங்குக', 'புற்றின் இல்லாத ரஷ்யா வேண்டும்; என மக்கள முழக்கமிடுகின்றனர். புற்றினை எதிர்த்து எதிர்க்கட்சியினரும் பொதுமக்களும் நடத்தும் இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு, அமெரிக்கா தான் காரணம் என்று குற்றம் சாட்டி உள்ள புற்றின் அமெரிக்காவுக்கு நிகராக அணுசக்தி கொண்ட பலத்துடன் ரஷ்யா இருக்கிறது, அதை பலவீனப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது எனவும் ரஷ்ய அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் வெள்ளை மாளிகையின் சதியே இது எனவும் தெரிவித்துள்ளார். ரஷ்ய தேர்தலில் முறைகேடு நடந்துள்ளதாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கூறியுள்ளார். இதன் மூலம் ரஷ்ய எதிர்க்கட்சிகளை வன்முறையில் ஈடுபட அவர் தூண்டி விட்டுள்ளார். அத்துடன் வன்முறையை



படிப்பகம்

தூண்டிவிட கோடிக்கணக்கான டாலர்களையும் அமெரிக்கா செலவிட்டு வருகிறது...' என்றும் ஆவேசப்பட்டுள்ளார் புற்றின்.

சோவியத் யூனியனின் முழுமையான மகத்துவத்தைப் புரிந்துகொள்ள அமெரிக்காவுடன் அதன் வளர்ச்சியை 1989 வரை ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியமானது. சிஐஏ முதல் அமெரிக்காவின் முதல்தர பொருளாதார வல்லுநர்களும் அக்கால வரலாற்று ஆசிரியர்களும் அமெரிக்கர்களைவிட சோவியத் யூனியன் மக்கள் 40 சதவிகிதம் வாழ்க்கைத் தரத்தில் மேம்பட்டு இருந்ததை ஒப்புக் கொள்வார்கள். இரண்டாம் உலகப்போரின் பாரிய சுமையுடன் அதற்கு பிறகு நாட்டின் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 33 சதவிகிதத்தை ராணுவத்திற்கு செலவழித்த அதேவேளையில், மொத்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் கவனித்துக்கொண்டு 45 ஆண்டுகளில் அமெரிக்காவைவிட தனிநபர் வருமானத்தில் 40 சதவிகிதம் உயர்ந்து பொறாமைப்படத்தக்க (பெருமைப்படத்தக்க) நிலையில் ரஷ்யா இருந்தது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ராணுவ குறிப்பாக வான்வெளி யுத்த தொழில்நுட்பத்தில் வல்லரசாக அக்காலகட்டத்தில் விளங்கியது சோவியத்து ஒன்றியம். தொழில் நுட்ப ரீதியில் மிகுந்த வளர்ச்சி நிலையில் இருந்தாலும், அதைக் கொண்டு வாழ்க்கையை மிகுந்த ஆடம்பரமாக்கும் நுகர்வு முறையை உருவாக்காமல் இருந்ததும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை சோவியத் யூனியன் தெருக்களில் உணவூட்டம் குறைந்த ஒரு குழந்தையைக்கூட பார்க்க முடியாதிருந்ததும் கல்வி அல்லது மருத்துவ வசதி இல்லாதவர்களும் இல்லாமல் இருந்ததும் அந்த உலகத்தின் சிறப்பாக இருந்தது.

பேராசைமிக்க முதலாளித்துவ வெறியிலிருந்து மனிதாபிமானத்துடன் உலகைக் காத்த அந்த சோவியத் யூனியனால்தான் உலகம் 45 ஆண்டுகள் அமைதியாக இருந்தது. ஆனால் முதலாளித்துவக் கூட்டுச் சதியின் மேன்மை எனப்பட்ட சோவியத் கூட்டமைப்பு சிதைவுக்குப் பின் கடந்த 20 ஆண்டுகளைப் பார்க்கும்போது எங்கும் ஆட்கொண்டுள்ள முன்னெப்போதும் கண்டிராத முதலாளித்தவ பேராசை வெறி அந்த ரஷ்ய மண்ணையும் ஆட்கொண்டுள்ளது என்றே சொல்ல வேண்டும். அதன் விளைவு தான் அங்கு பசியும்...! பட்டினியும்...! வறுமையும்...! கொடுமையும்...! என்பதை வரலாறு மறந்து விடாது. இரண்டாம் உலகப்போருக்குப் பின் உலகம் இருந்த மிக மிக அமைதியான ஒரு காலகட்டத்துக்கும் தற்போதைக்கும் இடையிலான வித்தியாசத்தின் விளைவு 20 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட ஒரு நிகழ்வின் பிரதிபலிப்பே ஆகும்.

1991 ஆம் ஆண்டு டிசம்பர் 25ந் தேதி இரவு 7.20க்கு இந்த உலகத்தின் வரலாறு அப்படியே திருப்பி எழுதப்பட்டது. அப்போது சோவியத்து யூனியன் அதிபராக இருந்த மிகைல் கோர்பச்சேவ், - சிஐஏயின் கருத்தியல் ஒற்றர் என்கின்ற சந்தேகத்திற்கு உள்ளான நிலையில் தான் சோவியத் யூனியன் அதிபர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். சில நிமிடங்களுக்குப் பிறகு சோவியத் யூனியனின் கொடி கிறம்ளின் மாளிகையில் இருந்து இறக்கப்பட்டு, ரஷ்யாவின் மூன்று வண்ணக்கொடி அங்கே ஏற்றப்பட்டது. அது ஒரு கூட்டமைப்பின் மரணம் மட்டுமல்ல, அரசியல் கருத்தியலின் மரணமும்கூட. அமெரிக்கா மற்றும் அதன் கூட்டு நாடுகளின் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக 74ஆண்டுகளாக தடுப்புச் சுவர் போல நின்ற பிரம்மாண்டமான சோவியத் யூனியன் துண்டுத் துண்டாக சிதறிப்போனது.

அரசியல் - பொருளாதார நிர்வாகத்தில் கடைபிடிக்கப்பட்ட இறுக்கங்களைத் தளர்த்திய கோர்ப்பச்சேவ் பெரஸ்த்ராய்கா (மறுகட்டமைப்பு) என்ற பெயரில் சீர்திருத்த நடவடிக்கைகளை கொண்டுவந்தார். கிளாஸ்நாஸ்டை (வெளிப்படைத் தன்மை) 1985ல் அறிமுகப்படுத்தினார். இந்த வேளையில் 85-86 ஆம் ஆண்டுகளில் எண்ணெய் விலைகளும் கடுமையாக வீழ்ச்சியுற நாட்டின் வருவாயும் அந்நியச் செலாவணியும் பாதிக்கப்பட்டு சோவியத்து ஒன்றியமும் தானியங்களை இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டு, வருவாய் குறைந்து நாடு திவாலாகும் நிலையில் மக்களின் எதிர்பும் கிளம்பிய நிலையிலேயே கோர்பச்சேவ் ஆட்சிக்கு முடிவு வந்தது. அன்றைய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்திய ஜனநாயகப் போராளி என வர்ணிக்கப்பட்ட பொறிஸ் யெல்ட்ஸினின் தாக்கத் தினால் அமெரிக்கா தலைமை தாங்கிய மேற்குநாடுகள் அனுபவித்த வளத்திற்காகவும் ஆடம்பரத்திற்காகவும் மக்கள் ஏங்கிய நிலையில் சோவியத் யுகம் துரதிருஸ்டமான முடிவுக்கு வந்தது.

பின்னர் அதிபரான பொறிஸ் யெல்ஸ்டின் எந்த தத்துவப் பின்னணியும் இல்லாத சந்தோசம் விரும்பும் ஒரு மதுப்பிரியர் மட்டுமே என பின்பு முத்திரை குத்தப்பட்டார். பொறிஸ் யெல்ட்ஸின் ஆட்சியில் ரஷ்யாவில் சுதந்தரமான அரசியல் கட்சிகள் உருவாயின. ஊடகங்கள் சுதந்திரம் பெற்றன. ஆனால் இந்த மாற்றம் நீண்ட வருடங்கள் நீடிக்கவில்லை. அவரின் இயலாமைக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த விலாடிமிர் புற்றின், முந்தைய ஆட்சியாளர் களைப்போல ஒரு சர்வாதிகாரியாக உருவானார். ஆனால் அவர்களைப் போல எந்த அரசியல் தத்துவப்

பின்புலமோ அர்ப்பணிப்போ புரிதலோ இல்லாதவர். கடந்த 100 ஆண்டுகளில் அங்கே உருவான மிக மோசமான தலைவர் என்றுகூடச் சொல்லலாம். கேஜிபி உளவுத்துறை அதிகாரியான இவர் சுதந்தர ஊடகங்கள் முதல் ஜனநாயகத் தேர்தல்கள் வரை அனைத்தையும் ஒடுக்கினார். முன்னாள் சோவியத் நாடுகள் அனைத்தும் புற்றின் மற்றும் அவரது ஆட்களால் நியமிக்கப்பட்ட உயர் வர்க்கத்தினரா லேயே ஆளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மிகவும் பலவீனமான நிலையில் உள்ள தற்போதைய புற்றினின் ரஷ்யா அரசியல் ரீதியாக வல்லரசாக மாறும் ஆசையை தொடர்ந்து வெளிப்படுத்தினாலும் அங்கே புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே மக்கள் சமூகம் உள்ளது. உலகிலேயே அதிகமாக எச்ஐவியால் பாதிக்கப்பட்டவர்களும், போதை அடிமைகளும் உள்ள நாடாக ரஷ்யா மாறியுள்ளது. அங்குள்ள கட்சிகள், குறிப்பாக புற்றினின் கட்சி, ரஷ்யாவை உலக அளவில் ஆதிக்கம் செலுத்தும் நாடாக மாற்றுவதற்கு அதிகம் முயற்சிக்கின்றன. ஆனால் சமூக மேம்பாட்டை புறக்கணித்துவிட்டன. ஏற்கனவே தனது நிலப்பரப்பை இழந்துவிட்ட ரஷ்யா தற்போது தனது பொருளாதாரம், ராணுவம், அந்தஸ்து மற்றும் கல்வி அனைத்தையும் இழந்து விட்டது. சர்வதேச மாணவர் மதிப்பீட்டு திட்ட ஆய்வின் அடிப்படையில் ஓஇசிடி தரப்பட்டியலில் ரஷ்ய கல்வித்துறை 43வது இடத்தில் உள்ளது. கல்விக்கான அரசு நிதி சூறையாடப்படுவதாகவும் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறையான சம்பளமே தரப்படுவதாகவும் இதனால் கல்வித்துறையில் போதுமான அறிவு வளம் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. ரஷ்ய சமூகத்தில் மதுக் கலாசாரம் நெருக்கடி நிலையையும் தாண்டிவிட்டதாக உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது. அமெரிக்காவுக்கு எதிராக கம்பீரமாக நின்ற ஒரு நாடு, வளரும் நாடு ஒன்றின் நிலையை அடைந்திருப்பது சீர்குலைவுதான்.

சோவியத்தை ஆண்ட லெனின் முதல் ஸ்டாலின், பிரெஜன்னேவ் வரை எல்லோரும் சர்வாதிகாரிகள்தான். ஆனால் அந்த தலைவர்கள் எல்லோருக்கும் மிகப்பெரிய உலகப்பார்வையும் லட்சியங்களும் இருந்தன. அவர்களது தெளிவான திட்டத்தின் அடிப்படையில் சோவியத் பொருளாதார ரீதியில் முன்னேறி போனது. அந்தத் தலைவர்கள் சமூக மேம்பாட்டுக்கான மார்க்ஸிய மாதிரியைப் பின்பற்றி சமபகிர்வைப் பின்பற்றுபவர்களாக இருந்தனர். ஓர் உலக ஒழுங்கை உருவாக்கிய அவர்களிடம் அமைதிக்கான திட்டமும் இருந்தது. பொருளாதார வளர்ச்சி சரியாக பகிரப்பட்டால் பணக்காரருக்கும் ஏழைக்குமான இடைவெளி மிகவும் குறைவாக

www.padippakam.com

இருக்கும் என்பதைக் காட்டியவர்கள அவர்கள். நல்ல கல்வியும், ஆரோக்கியமும் ஒவ்வொரு மனிதனுக்கும் தரப்படும்போது ஒலிம்பிக் மெடல்களாக குவியும் என்பதை காட்டியவர்களும் அவர்கள்தான். அப்படிப்பட்ட தேசத்தின் நிலை இன்று நேர் எதிராக உள்ளது.

இந்த நேரெதிர் நிலைமையில் அதற்கு காரணமான சக்திகள் மீண்டும் பதவிக்கு வரக்கூடாது என்ற நோக்கமே தற்போதைய ரஷ்ய மக்கள் கிளர்ச்சிக்கு காரணம். இந்த மக்கள் எழுச்சியின் பின்னால் இதனை வழி நடத்தும் சக்திகள் எதுவாக இருந்தாலும் மக்களின் சிந்தனை ஓட்டம் நிட்சயமாக பாட்டாளி மக்கள் மீட்சிக்கானதாகவே இருக்கும். நூற்றாண்டையும் தாண்டி ஒரு இடதுசாரிய கட்டமைப்பில் வாழ்ந்தவர்கள் அந்த மக்கள். விளாடிமர் புற்றினுக்கு எதிரானது எனப்படும் இந்த உழைக்கும் மக்களின் திரட்சி ரஷ்யாவில் விதைக்கப்பட்டுள்ள முதலாளித்துவ சிந்தனைகளையும், மக்கள் விரோதப் போக்கையும் வீழ்த்தாமல் விடாது என்பதே உண்மை.

19ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த ரஷ்யப் புரட்சி எப்படி மனித குல வரலாற்றின் விடுதலைக்கான பொன்னெழுத்தானதோ அதேபோல மீண்டும் அதே மண்ணில் கிளர்ந்தெழுந்திருக்கும் இன்றைய மக்கள் கூட்டம், புரட்சியால் போலி கம்யூனிசத்தைப் புதைத்து, உண்மையான பொதுவுடைமையை பூக்க வைக்கும் என்பதே இடது சாரிய சிந்தனா உலகத்தின் எதிர்பார்ப்பு.

**11.12.2011**



படிப்பகம்

www.padippakam.com

# டாம்-999 தடை...
# தேசியம் தந்த கருத்துச் சுதந்திரம்...

தமிழ்நாட்டின் தற்போதைய எரியும் பிரச்சினைகளான அணு உலை மற்றும் அணைக் கட்டு விவகாரம் ஆகியவற்றில் அணைக் கட்டு விவகராம் அணை உடைந்த வெள்ளமாய் தமிழகத்து அரசியல் வீதிகளையும் தாண்டிப் பெருக்கெடுத்து ஓடுகிறது. கேரளாவில் தனிப்பட்ட தயாரிப்பாளர் ஒருவரால் தயாரிக்கப்பட்ட 'டாம்-999' என்கின்ற ஆங்கில திரைப்படமும் அதற்கான தமிழக அரசின் தடையும் இந்தியாவின் ஒட்டுமொத்த கருத்துச் சுதந்திரத்தையே கேலிக்குள்ளாக்கியுள்ளன.

ஊழல்வாதியான மேயர் ஒருவர், அரசியல், சுய ஆதாயத்துக்காக கட்டும் வலுவற்ற அணை ஒன்று உடைவதால் ஏற்படும் பாதிப்புகளை மையமாக கொண்டு தயாரிக்கப்பட்ட 'டாம்- 999' என்கின்ற இந்தப் படத்தை இயக்கி இருப்பவர் கேரள மாநிலத்தைச் சேர்ந்த சோஹன் ராய் என்பவர். கடற்படை மாலுமியாக இருந்து பின் திரைப்பட இயக்குநராக மாறிய இவர், கடந்த 1975ம் ஆண்டு சீனாவில் உள்ள பான்கியோ என்கின்ற டாம் உடைந்ததால் இரண்டரை லட்சம் பேர் உயிரிழந்ததை மையமாக வைத்து இப்படத்தை இயக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதே போன்ற ஒரு அபாயம் தமிழக கேரள எல்லையில் உள்ள சர்ச்சைக்குரிய முல்லைப் பெரியாறு அணையிலும் இருப்பதாகவும் பெரியாறு அணை உடையும் பட்சத்தில், இதில் சிக்கி இறக்கப் போவது கேரள மக்கள் மட்டுமல்ல தமிழக மக்களும் தான் என்கிற அபாயத்தை இயக்குனர் சோஹன் இத்திரைப்படத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் படத்துக்கு கிட்டத்தட்ட ஒட்டுமொத்தத் தமிழக அரசியல் கட்சிகளுமே எதிர்ப்பு தெரிவித்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் இத் திரைப்படத்தை



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்நாட்டில் திரையிடுவதற்கு, தமிழக அரசு தடை விதித்துள்ளது. 'டாம்-999' திரைப்படம், மக்களிடையே பீதியை ஏற்படுத்தி, தமிழக மற்றும் கேரள மக்களிடையே இணக்கப்பாட்டைக் குலைத்து, சட்டம், ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தும் என்பதால், அதை தமிழகத்தில் திரையிட தடை விதிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தனது அறிவிப்பில் நியாயப்படுத்துகிறது.

தமிழகத்துக்கும் கேரளத்துக்கும் இடையில் நிலவும் முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட அந்தப் படத்தில், அணை உடைந்து ஏராளமான மக்கள் அடித்துச் செல்லப்படுவதைப் போன்ற காட்சிகள் இடம் பெற்றிருப்பதாகவும், பழைய அணையை உடைத்து, புதிய அணை கட்ட முயலும் கேரள அரசின் திட்டமிட்ட நடவடிக்கைதான் இது என்றும் தமிழகத்தில் அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. அந்தத் திரைப்படம், தமிழகத்துக்கு எதிரான காட்சிகளைக் கொண்டிருப்பதால், அதை திரையிடக்கூடாது என பல அமைப்புகள் கோரிக்கை வைத்திருப்பதால், தமிழ்நாடு முழுவதும் அந்தத் திரைப்படத்தை திரையிடுவதில்லை என முடிவு செய்திருப்பதாக, தமிழ்நாடு திரையரங்க உரிமையாளர்கள் சங்கமும் அறிவித்து விட்டது. முல்லைப் பெரியாறு அணை பலவீனமாக உள்ளதென கேரள அரசும், அம்மாநில அரசியல்வாதிகளும் தொடர்ந்து தெரிவித்து வருவதால் இரு மாநில மக்களுக்கும் இடையே ஒரு பகை உணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக தமிழகத்து அரசியல் வாதிகள் தெரிவித்து வரும் நிலையில், இப்போது 'டாம்-999' என்ற பெயரில் இதனை ஒரு திரைப்படமாகவும் எடுத்து வெளியிட்டிருப்பதை கேரளத்து அரசியலின் ஒரு சூழ்ச்சியாகவே பார்க்கிறார்கள் தமிழக அரசியல்வாதிகள். ஆனால் டாம்- 999 ஐ தடை செய்திருப்பது சரிதானா...? இது , இரு மாநிலங்களுக்கிடையே மோதலுக்கு வழி வகுக்கும் என்பது உண்மைதானா...? கேரளத்து சூழ்ச்சியா...? தமிழக அரசியல் கட்சிகளின் சுய நலமா...? இல்லை கருத்துச் சுதந்திரத்துக்கு கட்டப்பட்ட சமாதியா...? என்று பல பரிமாணங்களில் டாம்-999 விவாதப் பொருளாகி இருக்கிறது.

கேரளத்திலிருந்து வரும் தண்ணீரை தேக்கிவைத்திருந்து தமிழகத்திற்கும் வழங்கும் முல்லைப் பெரியாறு அணை உறுதியாக உள்ளது என்பதை உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட இந்திய மத்திய நீர்வள அமைச்சகத்தின் நிபுணர் குழு ஆராய்ந்து அறிக்கை அளித்தது. அதன் அடிப்படையில் முல்லைப் பெரியாறு அணையில் நீர் தேக்கும் அளவை 136 அடியில்



படிப்பகம்

இருந்து 142 அடியாக முதல் கட்டமாக உயர்த்தலாம் என்றும், அதன் பிறகு கொஞ்சம், கொஞ்சமாக உயர்த்தி முழு நீர்தேக்க அளவான 152 அடிக்கு உயர்த்திக் கொள்ளலாம் என்றும் 2005ஆம் ஆண்டிலேயே இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை நிறைவேற்ற மறுத்து வரும் கேரள அரசு, தனது நீர்ப்பாசன சட்டத்தில் திருத்தம் செய்து, நீதிமன்றத் தீர்ப்பையே அவமதித்தது. இந்த நடவடிக்கையை எதிர்த்து தமிழக அரசு தாக்கல் செய்த மேல் முறையீட்டை விசாரித்த உச்ச நீதிமன்ற அமர்வு, அணையின் பலத்தை முழுமையாக சோதித்து அறிக்கை அளிக்குமாறு மீண்டும் உத்தரவிட்டதையடுத்து நீதிபதி ஆனந்த் தலைமையில் மூன்று நீதிபதிகள் கொண்ட நிபுணர் குழு முல்லைப் பெரியாறு அணையை சமீபத்தில் சோதனையிட்டது. அப்போது அணை பலவீனமாக உள்ளது என்பதற்கு பொறியியல் ரீதியாகவோ அன்றி தொழில்நுட்ப ரீதியாகவோ ஒரு ஆதாரத்தையும் கேரள அரசால் அளிக்க முடியவில்லை. இந்த நிலையில் உச்ச நீதிமன்றத்தில் அண்மையில் நடந்த விசாரணையில், அணையல்ல பிரச்சனை, அதில் தேக்கப்படும் நீர்தான் பிரச்சனை என்று கூறி வழக்கின் அடிப்படையையே மாற்றி தனது உண்மை நிலையை வெளிப்படுத்தியுள்ளது கேரள அரசு.

முல்லைப் பெரியாறு அணை பலவீனமாக உள்ளது என்பதை நீதிமன்றத்தில் நிருபிக்க முடியாது என்பதை நன்றாக உணர்ந்துவிட்ட கேரள அரசு, திரைப்படங்கள் மூலம் பிரச்சாரம் செய்து பெரியாறு அணையை உடைக்கும் தனது சதித்திட்டத்தை நிறைவேற்ற முயற்சிக்கிறது - என்று தமிழக அரசியல் கட்சிகள் அனைத்தும் கொந்தளிக்கும் நிலையில் இத்திரைப்படத்தின் இயக்குநர் சோகன் ராய், இது தொடர்பில் தெரிவிக்கையில் திரைப்படத் தயாரிப்பு வரலாற்றில் இப்படி ஒரு சம்பவம் நடந்திருப்பது துரதிர்ஸ்டவசமானது எனவும் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என எல்லோருமே திரைப்படத்துறையிலிருந்து வந்த மாநிலத்தில், திரைப்படத் தயாரிப்பில் உள்ள வலியை உணர்ந்திருக்கும் மாநிலத்தில், திரைப்படத்தைப் பார்க்காமலேயே இப்படி ஒரு கடுமையான முடிவை எடுத்திருப்பது வருந்தத்தக்கது என்கின்றார். கலாசாரத்துக்கு எதிராகவோ அல்லது ஒரு சமூகத்தின் உணர்வுகளை கொச்சைப்படுத்துவதாகவோ இருந்தால், படத்தைத் தடை செய்வதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், அரசியல் காரணங்களுக்காக இப்படிப்பட்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இப்படியான முன்னுதாரணங்கள் தொடர்ந்தால் மாறுபட்ட

பிரச்சினைகளை மையமாகக் கொண்ட படத்தயாரிப்புகளுக்கு யாரும் முன்வரமாட்டார்கள் எனவும் தெரிவித்தார். அந்தப் படம் தமிழகத்துக்கு எதிரானது என தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் கருதுகின்றன, மற்ற மாநிலங்களில் இப்படம் திரையிடப்படுகின்றன, எனவே விரைவில் அந்தப் படத்துக்கும் முல்லைப் பெரியாறு பிரச்சினைக்கும் தொடர்பில்லை என்பதைத் தமிழகத்து மக்கள் தெரிந்துகொள்வார்கள் என்று நம்பிக்கையுடன் கூறுகினார் இயக்குனர் சோகன் ராய்.

திரைப்படக் கலைகள் மற்றும் அறிவியல் கல்விக்கழகத்தின் நூலகத்தில் 'டாம் 999' படத்தின் திரைக்கதை சேர்க்கப் பட்டுள்ளதாகவும் இந்த நூலகத்தில் வைக்கப்பட்டுள்ள முதலாவது இந்தியத் திரைப் படம் இது என்றும் திரையிடுவதற்கு முன்பே நூலகத்தில் சேர்க்கப்பட்ட படம் இது என்றும் கூறப்படுகிறது. இந்தத் திரைப்படத்தின் பாத்திரங்கள் நவரசங்களை வெளிப் படுத்துவதாக இருக்கின்றன, இந்தியப் பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவ முறைக்கு முக்கியத்துவம் அளிக்கிறது, 2டி யிலிருந்து 3டி ஆக மாற்றிக் கொள்ளும் நவீன தொழில் நுட்பம் இதில் கையாளப்பட்டிருக்கிறது எனவும் இப்படம் தொடர்பாகத் தெரிவிக்கப்படுகிறது. ஐக்கிய அரபு எமிரேட்ஸிடில் உள்ள பிஸ்டிவி (BIZ tv-UAE) நெட்வேர்க் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் படம் டைட்டானிக் போல கடந்த கால சம்பவத்தை நினைவு படுத்துவதோடு நின்றிருந்தால் பரவாயில்லை. எச்சரிக்கை செய்கிறேன் பேர் வழி என்று கற்பனையைக் கட்டவிழ்த்து விட்டதுதான் சிக்கல் என்கிறார்கள் ஆய்வாளர்கள். கலைக்குக் கற்பனை அவசியம் தான். ஆனால் அது அறிவூட்டுவதாக இருக்க வேண்டும்; ஆத்திரமூட்டுவதாக இருக்கக் கூடாது. மக்களை தெளிவுப்படுத்துவதாக இருக்கவேண்டும்: குழப்பி அச்சத்தையும், பீதியையும் கிளறிவிடுவதாக இருக்கக் கூடாது. இந்த இரண்டாவது காரியத்தைத் தான் 'டாம் 999' செய்திருக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. 'டாம்-999' தலைப்பே விசமத்தனமானது. முல்லைப்பெரியாறு அணையில் 999 ஆண்டுகளுக்குத் தமிழ்நாட்டுக்குச் சட்டப்படியான உரிமை இருப்பதைக் காட்டுவதற்காகத்தான், இந்தத் தலைப்பை வைத்து உள்ளனர். ஆங்கிலேயர் ஆட்சியில், 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அணை, உடைந்து நொறுங்குவது போலவும், பிரளயமாய் வெள்ளம் பாய்வது போலவும், லட்சக்கணக்கான மக்கள், குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் உட்பட, பரிதாபமாகப்

பலியாகி மடிவது போலவும் படத்தின் காட்சியை அமைத்து உள்ளனர்' என்று கொந்தளிக்கிறார் உணர்வாளர் வைகோ.

இப்படியான கொதிநிலையில் தமிழகத்தில் தடைசெய்யப்பட்ட இந்த ஆங்கிலப் படத்தில் அப்படி என்னதான் இருக்கிறது...? ஒரு அணை உடையும்போது நடக்கும் காட்சிகளின் கதை தான் படம். ஏற்கெனவே நாவலாகவும் வெளிவந்துள்ள இப்படத்தை இயக்கிய இயக்குநர் 'சோபன் ராய்' கேரளத்தை சேர்ந்தவர். இதில் தமிழக நடிகர்களும் நடித்திருக்கிறார்கள் என்பதும் இது ஒரு ஆவணப்படம் அல்ல என்பதும் கவனிக்கப்பட வேண்டியது. ஒருவேளை படத்தை தயாரித்து இயக்கியவர்கள் முழுக்க முழுக்க மேல்நாட்டவர்களாக இருந்திருந்தால் படத்தை ஆஹா-ஓஹோ என்று பாராட்டித் திரைவிமர்சனம் கூட தமிழகத்தில் எழுதப்பட்டிருக்கலாம். இயக்கியவர் ஒரு மலையாளி என்பதுதான் சிக்கலுக்கு ஒரு முக்கிய காரணமாக இருப்பதாகவே கருத வேண்டியுள்ளது. இணையத்தில் படத்திற்கான முன்னோட்டக் காட்சிகள் வெளிவந்த போதே இதற்கான வரவேற்பும் அதிகரித்திருந்தது.

தமிழக அரசு தடை விதித்தாலும் படம் நவம்பர் 25 இல் ஏனைய இந்திய மாநிலங்களில் வெளிவந்து விட்டது, கூடிய சீக்கிரமே இணையத்திலும் வந்துவிடும். இப்படத்தில் என்ன தான் இருக்கிறது என்பதை அறிவதற்காகவே படத்தை எதிர்த்தவர்கள் உட்பட அனைத்து தமிழர்களும் பார்க்கப்போகிறார்கள் என்பது தான் உண்மை. இப்படத்திற்கு எதிர்ப்பு இல்லாமல் இருந்திருந்தால் எத்தனை தமிழர்களுக்கு இப்படத்தின் பெயராவது தெரிந்திருக்கும் என்பது ஆச்சரியமே. ஆனால் இப்போது நிலைமையே வேறு.

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கேரள அரசு சுய நல நோக்கத்தோடு இதுவரை இருந்திருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இப்போது வரை அது தங்களது தனிப்பட்ட விருப்பத்தை, மற்றும் உள் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே பல வழிகளில் முயல்கிறது என்பதும் கண்கூடு.அது ஒருக்காலும் நீதிமன்றத்தின் தீரப்புகளை மதித்ததும் இல்லை அருகில் உள்ள தமிழகத்தின் நலன் கருதி சிந்தித்ததும் இல்லை. அதேவேளை தமிழக அரசு எப்படி கூடங்குளம் அணு மின் நிலைய பிரச்சனையில் மக்களின் பாதுகாப்பிற்காக கவலை கொள்கிறதோ அதேபோல் இவ்வணையில் ஏதும் பிரச்சனை வந்து உடைப்பு ஏற்பட்டால் இதைச்சுற்றி இருக்கும் 5மாவட்டங்களை சேர்ந்த 30 லட்சம் மக்களின் நிலைமையில் கேரள அரசும் கவலை கொள்கிறது என்பதனையும் ஏற்கவேண்டும்.

www.padippakam.com

கூடங்குள விடயத்தில் மத்திய அரசு சொல்வதை போல விபத்து ஏற்பட்டால் அதைத்தடுக்கும் கருவிகள் உள்ளன என்பதை போல அணைக்கு விபத்து ஏற்பட்டால் அதைத்தடுக்க முன்னேற்பாடுகள் எதுவும் கிடையாது.

இந்தத் திரைப் படம் கேரள அரச நலன்சார் உள் நோக்கத்தோடு எடுக்கப் பட்டிருந்தாலோ அல்லது கேரள அரசு ஆசியோடு எடுக்கப் பட்டிருந்தாலோ கூட, ஒரு கருத்து வெளிப்பாட்டை தடை செய்வது என்பது நியாயமற்றது என்பதே நியதி. இது ஒரு திரைப் படம் மட்டுமே என்பது மட்டுமல்ல கருத்துச் சுதந்திரம் பற்றி வாய்கிழியக் கத்துபவர்கள் நாங்கள்.கருத்துச் சுதந்திரம் மதிக்கப் படவேண்டும் என்று குரல் எழுப்பும் யாரும் இந்தப் படத்தை தடை செய்வதற்கான நியாயமான காரணத்தை முன்வைக்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது. இது வெறும் பயத்தை, பீதியைக் கிளப்புகிற முயற்சி என்று சொன்னாலும் கூட - அதற்காக ஒரு படத்தைத் தடை செய்ய முடியுமா...? முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சனை தொடர்பில் ஏதாவது செய்ய வேண்டும், எனவே தடை கோருகிறார்கள் தமிழ் உணர்வாளர்கள். தமிழக முதல்வரும் தன்பங்கிற்கு தடை அறிவிக்கிறார் அவ்வளவுதான்.

இந்தியாவின் வரலாற்றையே மாற்றி எழுதியிருக்கிற பல பாடப் புத்தகங்கள் இன்னமும் தடை செய்யப் படாமல் இருக்கின்றன. அடிமைத்தன எண்ணங்களை விதைக்கிற படங்கள், முயற்சிகள், நபர்கள், கொஞ்சம் கொஞ்சமாய் மக்களின் எண்ணத்திற்குள் தங்கள் ஜாதிய வெறியை நிலை நிறுத்தும் மற்றும் நியாயப் படுத்தும் படங்கள், புத்தகங்கள் - நாளிதழ்கள் - வலைத்தளங்கள் என தடை செய்யப்பட வேண்டியன எவ்வளவோ உள்ளன. அவற்றை எல்லாம் கண்டும் காணாமல் அல்லது மறைமுகமாக ஆதரவும் தெரிவித்துக் கொண்டிருக்கிற தமிழக உணர்வாழர்கள்தான் இப்படத்தின் தடைக்கு காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பதுதான் வேடிக்கை.

கருத்துச் சுதந்திரம் உள்ள நாடு என்பதற்காக எதை வேண்டுமானாலும், யாரைப் பற்றி வேண்டுமானாலும் எதையும் சொல்லிவிடக் கூடாது என்பதற்காகத்தான் திரைப்படத் தணிக்கைக் குழு இருக்கிறது. இந்தியக் கலாசாரத்துக்கு எதிராகவோ, தேச ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிக்கும் விதத்திலோ, ஆபாசமாக, கொச்சை வார்த்தைகளுடன், அரசியல் பேதங்களுடன், கருத்து மோதலை ஏற்படுத்தக்கூடிய வகையிலோ, கதாபாத்திரம் அல்லது வசனங்கள் இருந்தால், அவற்றைத் தணிக்கை செய்யத்தான் இந்தக்



படிப்பகம்

www.padippakam.com

குழு அமைக்கப்படுகிறது. யாரும் எதையும் சொல்ல முடியும் என்றால், அதற்கு இந்தத் தணிக்கைத் துறை தேவையே இல்லை. எம்.கே. தியாகராஜ பாகவதர் நடித்த 'சிவகவி' திரைப்படத்தில் ஒரு பாடல் வரி, 'முகம் அது சந்திர பிம்பமோ, மலர்ந்த சரோஜமோ' என்றிருந்தது. இந்தப் பாடலைப் பாடும்போது, முகமது சந்திர பிம்பமோ என்று ஒலித்தது. இந்த வரி இஸ்லாமியர்களைச் சங்கடப்படுத்துமோ என்று தணிக்கைத் துறை கருதியபோது, அந்தப் பாடல் வரியை 'வதனமே சந்திர பிம்பமோ' என்று மாற்றினார்கள். இதுபோல தணிக்கைக்குழுவின் பல உதாரணங்களைக் காட்ட முடியும். 'குற்றப்பத்திரிகை', 'காற்றுக்கென்ன வேலி' அண்மையில் தயாரிக்கப்பட்ட 'செங்கடல்' போன்ற படங்கள் தணிக்கைக் குழுவில் பட்ட பாட்டை தமிழ்சினிமா உலகம் அறியும்.

ஓர் அணை உடைவதுபோல காட்டுவதால் அருகில் இருக்கும் இரண்டு மாநில உறவுகள் பாதிக்கப்படுமே என்ற உறுத்தல் இல்லாமல்தான் படத்தை வெளியிட அனுமதி அளித்தார்களா தணிக்கைக் குழுவினர்...? அணைகளுக்கு அருகில் வாழும் மக்கள் மனதில் இப்படம் பீதியை ஏற்படுத்தும் என்றுகூடவா தோன்றவில்லை...? அப்படி என்றால் இரு மாநிலங்களுக் கிடையேயான மோதலை மத்திய அரசின் தணிக்கை துறையே செய்திருக்கிறது என்பதுதானா உண்மை...!

படைப்புகளுக்கு கடிவாளம் போட்டு கருத்து சுதந்திரத்துக்கு கல்லறை கட்டுவதால் மட்டும் தமது மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டுவிடமுடியும் என ஒரு அரசாட்சியோ அல்லது ஒரு அமைப்போ எண்ணிச் செயல்படுமேயானால் அந்த ஆட்சிக்கோ, அமைப்புக்கோ அந்த மக்களே கல்லறை கட்டுவார்கள். இதுதான் வரலாறு.

**28.11.2011**



படிப்பகம்

www.padippakam.com

# தண்டிக்கப்பட்ட ஜனாதிபதி...
# நீதி பிசகாத நிலைப்பாடு...

*மானிடத்தின் விடுதலைச் சரித்திரத்தில் மிக முக்கியத்துவம் பெற்ற பிரெஞ்சுப் புரட்சி கண்ட பிரான்ஸ் தேசம், தற்போது முன்னாள் முதல் மகன் ஒருவருக்கு சிறைத் தண்டனை வழங்கியதன் மூலம் இன்றைய உலகின் முன் நீதியை நிலை நிறுத்தி இருக்கிறது.*

*1995ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரை 12ஆண்டு காலம் பிரான்ஸ் நாட்டின் அதிபராக இருந்த 79வயதான ஜக் சிராக், அதிகார துஸ்பிரயோகம், அரசு நிதி கையாடல் போன்ற குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகித் தண்டனை பெற்றுள்ளார். இவரை குற்றவாளியாகக் கண்ட நீதிமன்றம் 2ஆண்டுகால ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் 150, 000யூரோ தண்டப்பணம் செலுத்த வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கியுள்ளது. (ஒத்திவைக்கப்பட்ட சிறை என்பது தொடரும் வாழ்காலத்தில் வேறுகுற்றச் செயல்களில் ஈடுபட்டால் இந்தத் தண்டனையையும் சேர்த்து அனுபவிக்க லேண்டும் என்பது) முன்னர் 1974ஆம் ஆண்டு முதல் 1976 வரையும் - 1986ஆம் ஆண்டு முதல் 1988 வரையும் இருமுறை பிரான்சின் பிரதமராகவும் 1977ஆம் ஆண்டு முதல் 1985 வரை பரிஸ் நகரத்தின் மேயராகவும் பொறுப்பு வகித்தவர் ஜக் சிராக். ஒன்றுபட்ட ஐரோப்பாவிற்காக இதயசுத்தியுடன் உழைத்தவர்களில் ஒருவரும் தீவிர இடதுசாரிய செயல்பாடுகளுடன் 14 ஆண்டுகள் பிரான்சின் ஜனாதிபதியாக இருந்து சாதனை படைத்தவருமான பிரான்சுவா மித்ரண்ட்டுக்கு அடுத்து, பிரான்சின் அதிக காலம் (இரண்டு ஜனாதிபதி பதவிக் காலம்) அதிபராக இருந்து சாதனை புரிந்தவர் சிராக். முதல்முறை ஏழு ஆண்டுகளும் இரண்டாம் தவணையில் ஐந்து ஆண்டுகளும் முழு பணிக்காலமும் அதிபராக இருந்தவர்.*



படிப்பகம்

www.padippakam.com

வலது சாரிய சிந்தனையாளரான சிராக் தனது பதவிக்காலத்தில் வரிவிகிதங்களைக் குறைத்தார், விலைக் கட்டுப்பாடுகளை தளர்த்தினார், குற்றம், தீவிரவாதம் புரிந்தவர்களுக்கான தண்டனையைக் கடுமையாக்கினார் மற்றும் வணிக தனியார்மயமாக்கலை ஆதரித்தார். சமூகத்திற்கு பொறுப்புள்ள பொருளியல் கொள்கைகள் தேவை என்பதை 1995ஆம் ஆண்டு தேர்தலில் பிரச்சாரமாக கொண்டு வெற்றிபெற்றார். பாரிஸ் நகரத்தின் மேயராக அவர் இருந்த போது அரச அதிகாரத்தை கட்சி நலனுக்காகப் பயன்படுத்தினார் என்று குற்றம்சாட்டப்பட்டு பாரிஸ் நகர நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்றது. அதிகார துஸ்பிரயோகம், அரசு நிதி கையாடல் போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு இந்தக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் பத்தாண்டு காலச் சிறைத்தண்டனையும், 1,50,000 யூரோ அபராதமும் விதிக்கப்படலாம் என செய்திகள் உலா வந்தன.

சிராக் தன் கட்சிக்காரர்கள் உட்பட்ட தனக்கு வேண்டிய 28 பேருக்கு அரச விதிகளை மீறி தன் அரசியல் செல்வாக்கின் காரணமாக அரச வேலை பெற்றுக் கொடுத்தார் எனவும் வழக்கு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. இந்த வழக்கின் இறுதி விசாரண பல வாரங்களாக நடைபெற்று டிசம்பர் 15 ஆம் தேதி 2011 தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. சிராக்கின் வழக்கறிஞர்களில் ஒருவரான ஜோர்ஜ் கீஜ்மன் இறுதி விசாரணையின் போது, சிராக்கிற்கு தற்போது 79 வயது ஆகிறது, அவர் நினைவு மறதி நோயினால் அவதிப்பட்டு வருகிறார், பாரிசில் உள்ள இபில் டவர் (Effel Tower) அருகே இருக்கும் அடுக்குமாடி குடியிருப்பில் அமைதியான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார், எனவே அவரை இந்த வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இறுதித் தீர்பை அறிவித்த நீதிபதி, இந்த வழக்கில் சிராக் குற்றவாளி என்பது உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது என்றாலும் அவரது முதிர்ந்த வயதை கருத்தில் கொண்டு அவருக்கு சிறையில் இருக்க வேண்டிய தண்டனையை விதிக்கவில்லை என்று அறிவித்தார்.

பிரெஞ்சு புரட்சிக்கு பின் நவீன பிரான்சு வரலாற்றில் அதிபர் ஒருவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறை. இந்த வகையில் இது குறித்த விமர்சனங்களும், கருத்தாய்வுகளும் உலகம் முழுவதும் நடைபெற்று வருகின்றன.

உலகில் நடைபெற்ற மிகப் பெரிய புரட்சிகளில் பிரெஞ்சு புரட்சிக்கு மிக முக்கியத்துவம் உண்டு. இப்புரட்சி பிரான்சில் மட்டுமல்ல பிற ஐரோப்பியப் பகுதிகளிலும் பண்பாடு மற்றும்



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் களங்களில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. பிரான்சில் பல நூற்றாண்டுகளாக நீடித்திருந்த முழு மன்னராட்சி முறை வீழ்த்தப்பட்டு, நிலபிரப்புத்துவ, கிறிஸ்தவ திருச்சபை அதிகார முறைமைகளின் ஆதிக்கம் சரிந்து, பிரெஞ்சு சமூகத்தில் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. பல நூற்றாண்டுகளாக வழக்கிலிருந்த அதிகாரக் கட்டமைப்புகளும் கருத்துகளும் தகர்க்கப்பட்டு அறிவொளிக்கால கருத்துகளான குடியுரிமை, ஜனநாயகம், மக்களாட்சி தத்துவம் போன்றவை பரவக் காரணமான இப்புரட்சியின் போது பிரான்சின் இடதுசாரி அரசியல் அமைப்புகள் மட்டுமல்ல சாதாரண மக்களும் வீதியில் இறங்கிப் போராடி யிருந்தது வரலாறு.

1789 இல் பிரெஞ்சு பாராளுமன்றம் கூட்டப்பட்டதுடன் துவங்கிய பிரெஞ்சு புரட்சி அடுத்த சில ஆண்டுகளில் மன்னராட்சியின் வலது சாரி ஆதரவாளர்கள், மிதவாதிகள், இடது சாரி தீவிரவாதிகள், பிற ஐரோப்பிய நாடுகள் ஆகியோருக்கிடையே பிரான்சின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற பெரும் பலப்பரீட்சை நடந்தது. பெரும் வன்முறைச் செயல்கள், படுகொலைகள், கும்பலாட்சி, அயல்நாட்டுப் படையெடுப்புகள், ஆட்சி மாற்றங்கள் என பிரான்சில் பெரும் குழப்பம் நிலவி செப்டம்பர் 1792 இல் பிரான்சு குடியரசாக அறிவிக்கப்பட்டது. அப்போதைய (இறுதி) அரசர் 16ஆம் லூயிஸ், அவரது மனைவி மரீ அண்டோனெட் ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு கில்லோட்டின் தலைவெட்டு எந்திரம் மூலம் கொல்லப்பட்டனர். ஆட்சிமுறை, புதிய அரசியல் கொள்கைகள், தாராண்மிய மக்களாட்சி முறை, ஆகியவை பிரெஞ்சு புரட்சியால் உருவாகி வளர்ச்சி பெற்ற விடயங்களுள் அடங்கும். 19ம் நூற்றாண்டின் மாபெரும் ஜனநாயக புரட்சி கண்ட பிரான்சு தேசத்தில் நாட்டின் மிக உச்ச பதவியில் இருந்த ஒருவருக்கு சிறைத் தண்டனை விதித்து சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை அந்நாட்டு நீதிமன்றம் நிரூபித்துள்ளது.

சிராக் சிறையில் காலம் கழிக்க வேண்டியதில்லை என்று நீதிமன்றம் அறிவித்தாலும், அவரை குற்றவாளி என்று பிரகடனப் படுத்தியதே தூய்மையான நீதிக்கு கிடைத்த வெற்றி என்று எதிர்க் கட்சிகள் கருத்துரைத்துள்ளன. அதேவேளை, குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டு 20 ஆண்டுகளுக்கு பின்னர் தீர்ப்பு வழங்கி இருப்பது, நீதிச் சக்கரம் அங்கும் மிகவும் மெதுவாகவே சுழல்கிறது என்பதை காட்டுவதாக வேறு சிலர் கருத்து தெரிவித்துள்ளனர்.



படிப்பகம்

"சிராக் பிரான்சு மக்களின் அளப்பரிய அன்பையும், ஆதரவையும் பெற்றிருந்தார், இந்த தீர்ப்பால் அவர் பொது மக்களின் நன்மதிப்பை இழந்து விடமாட்டார், பிரான்சின் நீதித்துறை கடுமையாக உள்ளது, இது பிரான்சின் நீதி நிர்வாக முறைக்கு தேவையானதுதான், ஆனால் குடும்ப உறுப்பினர்கள் என்ற முறையில் எங்களுக்கு மிகுந்த வேதனை அளிக்கிறது"- என்கிறார் அவருடைய வளர்ப்பு மகள் கண்ணீருடன்.

"இந்த தீர்ப்பு தொடர்பாக மேல்முறையீடு செய்ய சிராக் விரும்பவில்லை, ஆனால் இந்த தீர்ப்பு ஏற்புடையதல்ல"என்று சிராக்கின் வழக்கறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

தற்போதைய பிரான்ஸ் அதிபர் சர்கோசி தலைமையிலான அமைச்சரவையில் வெளியுறவுத் துறை அமைச்சராக இருக்கும் அலைன் ஜூப்பே இதே வழக்கில் குற்றவாளியாக்க காணப்பட்டு 2004 ஆம் ஆண்டு அவருக்கு 14 மாத கால ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும், 1ஆண்டு காலம் அரசியல் உள்ளிட்ட பொது வாழ்க்கையில் ஈடுபடக் கூடாது என்றும் தண்டனை விதிக்கப் பட்டது. சிராக் அதிபராக இருந்த போது பிரதமராக இருந்த அலைன் ஜூப்பே இந்தத்தண்டனையின் பின்னர் கனடா-அமரிக்கா போன்ற நாடுகளில் ஒரு வருடத்தை கழித்த பின்னர் மீண்டும் பிரான்சு திரும்பி பொது வாழ்க்கைக்கு வந்து அமைச்சராகியுள்ளார். பிரான்சில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் சிலசமயம் இன்றைய அதிபர் சர்க்கோசி மீண்டும் தெரிவானால் அலைன் ஜூப்பே பிரதமராக வரக் கூடிய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஊழலுக்காக முன்னாள் அதிபரையே குற்றவாளி என்று அறிவித்து, சிறைத் தண்டனையும் விதித்துள்ள பிரெஞ்சு புரட்சி கண்ட பிரான்சு தேசம், ஊழல் குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்ட ஒருவரை பிரதமராக்கி பிழை செய்து விடுமோ என்பதும் கேள்வியாகியுள்ளது.

சிராக் தனது அதிபர் காலத்தில் பல்வேறு சாதனைகளைச் செய்தவர். பிரான்சின் நாணயம் பெறுமதிமிக்க யூரோவுக்கு மாறியதும் இவர் காலத்திலேயே. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஈராக் நாட்டுக்குள் அத்துமீறி படையெடுத்ததை பகிரங்கமாக கண்டித்ததன் மூலம் தயக்கமின்றி அமெரிக்காவின் எதிர்ப்பை எதிர்கொண்டவர். சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்தியதுடன் பொருளாதார சீர்குலைவுகளிருந்து நாட்டை காப்பாற்றியவர். இவ்வளவு இருந்தும் அவருடைய 40 ஆண்டு கால அரசியல் பணியையும், சேவைகளையும் ஒரு ஊழல் வழக்கின் தீர்ப்பு கறைபடிய வைத்துவிட்டது.

சிராக்கின் ஊழல் வழக்குத் தீர்ப்பின் பரபரப்பு முடிவதற்குள், பாகிஸ்தான் நாட்டிற்கு நீர்மூழ்கிக் கப்பல் விற்பனை செய்தது தொடர்பான அடுத்ததொரு ஊழல் வழக்கில் பிரான்சின் முன்னாள் அமைச்சர் டோனி டியூ டி வேப்ரஸ் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். பிரான்ஸ் நாட்டின் கலாசாரத் துறை அமைச்சராக கடந்த 2004 - 2007ம் ஆண்டு காலப் பகுதியில் பதவி வகித்த இவர் கடந்த 1994ம் ஆண்டு இராணுவ அமைச்சரின் ஆலோசகராக பணியாற்றியபோதே இந்த ஊழலில் ஈடுபட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்போது பாகிஸ்தானுக்கு நீர் மூழ்கிக் கப்பல் விற்றதில் ஊழல் நடந்ததாகவும் இந்த விவகாரத்தில் லஞ்சப் பணம் உரிய அதிகாரிகளுக்கு சென்று சேராத காரணத்தால், கடந்த 2002ல், பிரான்ஸ் நாட்டின் கடற்படை பொறியாளர்கள் 11 பேர், கராச்சியில் நடந்த குண்டு வெடிப்பின் மூலம் கொல்லப்பட்டதாகவும் தகவல் வெளியாகியிருந்தன. இந்த ஊழல் நடைபெற்றதாகச் சொல்லப்படும் காலப்பகுதியில் தற்போதைய ஜனாதிபதி நிக்கோலா சர்கோசி நாட்டின் உள்துறை அமைச்சராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. சர்கோசிக்கு எதிராகவும் பல முறைகேடுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் இருப்பதாகவும் அவர் எப்போது ஜனாதிபதி பதவி அற்றவராகிறாரோ அப்போது இது தொடர்பில் வழக்குகளும் நடவடிக்கைகளும் எடுக்கபடலாம் எனவும் ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

ஊழலும் லஞ்சமும் மோசடிகளும் இந்தியா, இலங்கை, ஆபிரிக்க நாடுகள் போன்ற கீழைத்தேசங்களில்தான் நடைபெறுகிறது- மேலைத்தேசத்து அரசியல் தூய்மையானது, வெள்ளைக்காரர்கள் எல்லாம் மாசுமருக்கற்றவர்கள் என்கின்ற கருத்தற்ற எண்ணத்துடன் செயல்படும் நம்மவர்கள் குறிப்பாக நம்மிடையேயான பிணக்குகளுக்கு மேலைத் தேசத்தவர்கள் தீர்வு பெற்றுதருவார்கள் என்ற எண்ணப்பாடுடையவர்கள் நேர்மையும், நீதியும் பரவலாக இருப்பது எப்படியோ மோசடிகளும், ஊழலும் கூடப் பரவலானது என்பதைப் புரிந்து கொண்டால் சரி.

பிரான்ஸ் முன்னாள் அதிபர் சிராக்குக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனை ஒட்டு மொத்த அதிகார வர்க்கத்துக்கும் விடுக்கப் பட்டுள்ள எச்சரிக்கை மணியாகும். அனைத்து அரசியலாளர்களும் இதனை புரிந்து கொள்ளாமல் செயல்படுவார்களானால் என்றோ ஒருநாள் நீதியும் தர்மமும் வெல்லும். இதுதான் நியதியும் வரலாறும்.

**20.09.2011**

www.padippakam.com

# றொபேர்ட் ஓ பிளேக்கின் இலங்கை விஜயமும் ஏகாதிபத்திய வலை வீச்சுக்களும்...

சர்வேதச சமூகத்தையே அடக்கி ஆள ஏகாதிபத்திய வெறி கொண்டு அலையும் அமெரிக்காவின் அகோரப் பார்வை மீண்டும் இலங்கையின் மீது விழுந்திருக்கிறது என்பதனையே அமெரிக்க இராஜாங்க அமைச்சின் உதவி செயலர் றொபேர்ட் ஓ பிளேக்கின் அண்மைய இலங்கை விஜயம் குறிப்பாக யாழ் விஜயம் எடுத்துக்காட்டுகிறது. இம்முறை பலபடிகள் மேலே போய் இலங்கையின் மீது ஆளுமை செலுத்துவதற்கான அனைத்து ஆரம்ப நகர்வுகளும் அவரது விஜயத்தின் போது மேற் கொள்ளப் பட்டுள்ளதனை அவதானிக்க முடிகிறது. சிங்கள பேரினவாதத்திற்கு எதிரானது எனச்சொல்லப்பட்ட புலிப் பயங்கரவாதத்தினுள் சிக்கி, சின்னபின்னமாகி கிடந்த இலங்கைத் தீவினுள் அந்த பயங்கரவாத சக்திகள் எல்லாம் தற்போது அழிக்கப்பட்டு நம்பிக்கை வெளிச்சத்துடன் அமைதிவாழ்வு படிப்படியாக துளிர்த்துக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில், அமெரிக்க வலை மீண்டும் அங்கு வீசப்படுவது ஏகாதிபத்திய குணாம்சங்களை அறிந்தவர் களுக்கு ஒன்றும் புதிதானதல்ல.

ஒரு நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்த எண்ணும் ஏகாதிபத்தியம் அந்த நாட்டு அரசாங்கம் தமக்கு விசுவாசமாக இல்லாத பட்சத்தில் அந்த அரசிற்கு எதிராக, உண்மைகளுக்கு மாறாக, தகவல்களை திரித்து அபாண்ட பொய்களையும், குற்றங்களையும் சுமத்துவதனையே தனது முதல் பணியாக மேற்கொள்கிறது. குறிப்பாக அந்த நாட்டின் உள்விவகரங்களில் மூக்கை நுழைத்து தனது சர்வதேச பொலீஸ்காரத்தனத்தை அங்கே நிலைநிறுத்த முயலும். இப்படியான ஆரம்பங்களின் மூலம்தான், இறுதியில் அந்த நாட்டின் மீதான பகிரங்க படை நகர்வை மேற்கொள்வதற்கான வழிவகைகளை



படிப்பகம்

www.padippakam.com

ஏகாதிபத்திய சக்திகள் ஏற்படுத்திக் கொள்ளும். இப்படி அமெரிக்காவின் சதிவலைக்குள் சிக்கிய உலகத்தின் பல நாடுகள் உயிருள்ள சாட்சிகளாக இன்றும் உள்ளன. இதனைப்போலவே இலங்கை மீதும் பல ஆண்டு காலமாகவே நடந்து வந்த ஆக்கிரமிப்பு வலைப்பின்னல் றொபேர்ட் ஓ பிளேக் அண்மையில் மேற்கொண்ட யாழ் விஜயத்தினூடாக வெட்ட வெளிச்சமாகி உள்ளது.

இலங்கைக்கு 3 நாள் பயணம் மேற்கொண்டிருந்த அவர், வெளியக இராஜ தந்திரிகளுக்கான உள்நாட்டு நடைமுறைகள் எதனையும் பின்பற்றாமல் செயல்பட்டதுடன், எந்த அறிவித்தலுமின்றி யாழ்பாணமும் சென்று வந்து செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்த பொய்களின் பட்டியல் அமெரிக்காவின் உள்நோக்கத்தை தெளிவாக்கியுள்ளது.

**அவர் கொழும்பில் நடாத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்த உண்மைக்கு மாறான கருத்துக்கள்.**

1. வடக்கில் வலுவான துணை இராணுவ அமைப்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈபிடிபி) செயல்படுகிறது.

2. நான் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது, ஈபிடிபியின் வலிமையை எதிர்கொண்டேன்.

3. பல்கலைக்கழக மாணவர்களை நான் சந்திப்பதை அவர்கள் தடுத்தனர்.

4. மனித உரிமைகள் குறித்து நான் கரிசனை கொண்டுள்ளேன்.

5. நாம் நண்பர்களை அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

**பத்திரிகையாளர் சந்திப்பில் அவரே தெரிவித்த அவரது தேவையற்ற தலையீடுகள்.**

1. துணை இராணுவக் குழுக்களை நிராயுதபாணியாக்குவதன் அவசியம், இதில் ஏற்பட்ட முன்னேற்றம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நான் கலந்துரையாடினேன்.

2. வடக்கில் காவல்துறை பணியில் தமிழர்களை ஈடுபடுத்துவது அவசியம். அதனால் இராணுவம் இப்பணிகளை செய்ய வேண்டியிருக்காது என அறிவுறுத்தினேன்.

3. பொதுமக்கள் பாதுகாப்பு ஒழுங்கு விதிகள் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் என்பன இன்னும் அமுலில் உள்ளதால்



படிப்பகம்

www.padippakam.com

*அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டமை நடைமுறையில் குறைந்தளவு விளைவையே ஏற்படுத்தும்.*

**பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் ஒப்புக்கொண்ட ஒரே ஒரு சர்வதேச உண்மை.**

1. *சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறியவர்களுக்காக நம்பகமான பொறுப்புடைமை செயல்பாடுகள் அவசியம் என நான் எண்ணுகிறேன்.*

இலங்கை அரசு ஒரு போர்க்குற்றவாளி, மனித உரிமைகள் அங்கு மீறப்பட்டுள்ளன, என்பதை எப்படியாவது நிலை நிறுத்தி இலங்கைக்குள் கால் பதிக்கும் வேலையில் ஒபாமா நிர்வாகம் இறங்கி உள்ளதன் வெளிப்பாடாகவே றொபர்ட் ஓ பிளேக்கின் இந்த விஜயத்தையும் அதன் தொடர்ச்சியான அவரது கருத்துக்களையும் பார்க்க வேண்டியுள்ளது. போர்க்குற்றம் பற்றியும், மனித உரிமைகள் பற்றியும் பேசுவதற்கு அமெரிக்காவிற்கு என்ன தகுதி இருக்கிறது...?, என்கின்ற கேள்வி எழுப்பப்படுவதை மனிதாபிமானமுள்ள யாரும் நிராகரிக்க மாட்டார்கள். உலகத்தின் பல்வேறு நாடுகளின் மீது கணக்கிலடங்காத பாவ மூட்டைகளை கொட்டிய அமெரிக்கா, மனிதகுல எதிரி என எண்ணப்படும் அமெரிக்கச் சாத்தான், மனித உரிமைகள் பற்றி பாடம் நடத்துவது வேடிக்கை மட்டுமல்ல கேவலமும் கூடவே.

மூன்றாம் உலக நாடுகளின் வளங்களை சுரண்டவும், கொள்ளையடிக்கவும் ஏதுவாக தனக்கு வேண்டப்பட்ட ஒரு கைப்பாவை அரசாங்கத்தை, அங்கு உருவாக்க உலகின் பல்வேறு நாடுகளில் அமெரிக்கா செய்திருக்கும் அக்கிரமங்களை பட்டியலிட்டால் அது நீண்டு கொண்டே போகும். தமது அதிகார எல்லையை அந்நிய தேசங்களிலும் விரிவு செய்ய அமெரிக்கா செய்த சூழ்ச்சிகளையும் அத்துமீறல்களையும் ஆதாரங்களுடன் வெளிச்சப்படுத்தி வருகிறது விக்கி லீக்ஸ் இணைய தளம். அமெரிக்காவின் அடாவடிச் செயல்பாடுகளின் வெளிப்பாடு களாகவே அந்நாட்டு முன்னாள் அதிபர் புஷ்சுக்கு கிடைத்த செருப்படி, அமெரிக்க அதிபர்கள் எந்த நாட்டிற்குச் சென்றாலும் அந்த நாட்டில் உள்ள மக்கள் எங்கள் நாட்டினுள் நுழையாதே என அவர்களின் வருகைக்கு எதிராக குரல் எழுப்பி போராட்டங்களை நடத்துவது என்பன நடக்கின்றன. இது போன்ற அவமானங் களையும், போராட்டங்களையும் இதுவரை எந்த நாட்டுத் தலைவர்களும் சந்தித்ததாக தகவல்கள் இல்லை. ஈராக்கின் எண்ணெய் வயல்களை குறிவைத்து, உலக நாடுகளின் பலகோடி



படிப்பகம்

மக்களின் கண்டன ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் மீறி அணு ஆயுதம் என்ற பொய்க் குற்றச்சாட்டைக்கூறி, அந்நாட்டின் மீது படையெடுத்து, அந்நாட்டு அதிபர் சதாம் உசேனை தூக்கிலிட்டு, பல லட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்த அமெரிக்க லட்சணம்தான் இன்று இலங்கையின் யுத்தக் குற்றம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் பேசுகிறது.

இரு நாடுகளுக்கிடையே அல்லது இரண்டு இனங்களிடையே போர் நடந்து கொண்டிருந்தால்தான் தனது ஆயுதங்களை உலக நாடுகள் வாங்குவது சாத்தியப்படும் என்பதற்காக அந்நாடுகளுக்குள் அல்லது இனக் குழுக்களினுள் தனது சாதுர்யத்தை புகுத்தி, மோதலை ஏற்படுத்தி, ஆயுதங்களை விற்று தனது செல்வச் செழிப்பை பெருக்கிக் கொண்டிருக்கும் அமெரிக்காவுக்கு, இலங்கை பற்றி மதிப்புரை வழங்க என்ன தகுதி இருக்கிறது என்பதே கேள்வி...? கொரியப் போர்களில் வீசப்பட்ட நாபாம் குண்டுகளும், வியட்நாமில் வீசப்பட்ட கொத்துக் குண்டுகளும், கருக்கியெறிந்த கனவுகளுடனான மக்களின் வாழ்க்கை எண்ணிலடங்காதவை. தென்னமெரிக்க நாடுகளின் அனாதைகள் மட்டுமா அமெரிக்காவின் பயங்கரவாதப் பள்ளிகளுக்குச் சோதனைச் சாலை எலிகள்...? கொரியாவின் தேசிய விடுதலைக்காக ஜப்பானை எதிர்த்துப் போராடிய கொம்யூனிஸப் போராளிகள் மேல் நாபாம் குண்டுகளையும் பல்வேறு உயிரி ஆயுதங்களையும் வீசி அமெரிக்கா நடத்திய சோதனையின் விளைவு மட்டுமே ஒரு லட்சம் உயிர்களை பலி வாங்கியது. வியட்நாம், யுகோஸ்லோவியா, ஈராக், ஆப்கான், லிபியா என்று அமெரிக்காவை தலைமையகமாகக் கொண்ட ஏகாதிபத்தியத்தின் பாவ மூட்டைகளை ஒன்றாகக் குவித்தால் அது இந்த பூமிப்பந்தை விட அளவில் பெரிதாய் இருக்கும். ஈராக்கின் மேல் இராணுவத் தாக்குதல் நடத்திக் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை லட்சங்களில் இருக்கும் என்றால் அதற்கும் முன்பிருந்தே பொருளாதாரத் தாக்குதல் நடத்திக் கொல்லப் பட்டவர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காதது. அத்தியாவசிய மருந்துகளைத் தடுத்ததன் மூலம் மட்டுமே ஐந்து லட்சம் அப்பாவிக் குழந்தைகளை ஈராக்கியர்கள் பறிகொடுத்திருக்கிறார்கள். பாலைவன தேசமான ஈராக்கில், கடல் நீரைச் சுத்திகரிக்கும் தொழிற்சாலை களுக்கான உபகரணங்களை இறக்குமதி செய்யவிடாமல் தடுத்ததன் மூலம் கொலரா போன்ற நோய்களுக்குப் பலியானவர்கள் எண்ணிக்கை தனிக்கணக்கு.

சிதறி ஓடுபவர்களை துரத்தித் துரத்திக் கொல்ல கொத்து குண்டுகள் என்றால், நிலத்தினடியில் பதுங்கிக் கொண்டிருப்பவர் களைக்

கொல்ல, நிலத்தையே இருபதடிகள் வரை ஊடுருவித் தாக்கும் டொமஹாக் ஏவுகணைகள் , கருவிலிருக்கும் குழந்தைகளைத் தாக்கியழிக்க அணுக் கழிவு ஏவுகணைகள் என்று ரக ரகமாக ஈராக்கிலும், ஆப்கானிலும் குண்டுகளை பொழிந்துள்ளது அமெரிக்கா. ஈராக்கியர்களின் தோல்வியின் ரணம் என்பது சிலவருடங்களில் ஆறிப் போவதல்ல - அணு ஆயுத பாதிப்பு என்கிற வகையில் தலைமுறை தலைமுறைகளாகத் தொடர்ந்து வரப்போகும் சாபம் அது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் உலக மக்களின் மேல் ஏவி விட்டுள்ளது பயங்கரவாதம் தான் என்பதற்கு ஏராளமான சான்றுகளும் அதனால் உலக மக்கள் அனுபவித்து வரும் பாடுகளும் யதார்த்தத்தில் நம் கண் முன்னேயே இருக்க, இலங்கை அரசு தனது நாட்டினுள் மனித உரிமைகளை மதிப்பதில்லை என்கிறார் பிளேக். இலங்கையினுள் ஏற்பட்ட இனமுரண்பாடுகள் மோதல்கள் ஆக்கப்படுவதற்காக என்றே அங்கே விதைக்கப்பட்ட ஆயுதங்கள் எங்கிருந்து வந்தன என்ற கணக்கை கூறுவாரா...? , மனித உரிமைகள் மீது கரிசனை கொண்டுள்ள பிளேக். முஸ்லீம்களின் எதிரி நான்தான் என்று கூறிக்கொள்ளும் இஸ்ரேலுக்கு இன்றும் ஆயுத உதவி செய்யும், ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்து அந்நாட்டு மக்களை லட்சக்கணக்கில் கொன்று குவித்துவரும் அமெரிக்க ராஜாங்கத்தின் பிரதிநிதி, அடுத்தவர்களுக்கு பாடம் நடத்தப்புறப்பட்டுள்ளார்.

இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு பின்னரான வரலாற்றிலே, உலக ஒழுங்கின் சீர்கேட்டுக்கு அமெரிக்காவின் ஏகாதிபத்திய செயற்பாடுகள் எவ்வாறு காரணியாக இருந்தன என்பதனை லத்தீன் அமெரிக்க நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள், ஆபிரிக்க நாடுகளின் அரசியல் வரலாற்றை ஆராயும் போது புரிந்து கொள்ள முடியும். ஆசியக் கண்டத்திலும் ஆப்கானிஸ்தானில் தொடங்கி, ஈராக்கில் இறங்கி, இன்று ஈரான் மீது தமது அதிகார கட்டளைகளை விதித்து வருவது, கியூபா, வியட்நாம் போன்ற நாடுகளில் முட்டி மோதிக் கொண்டது என தற்பொதைய அமெரிக்காவின் ஏகாதிபத்திய நடவடிக்கைகளினை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். இந்தியாவும் அமெரிக்க வலையில் சிக்கத் தவறவில்லை. இந்தியா விடுதலை பெற்ற உடனேயே அதைப் பணிய வைக்கத் திட்டமிட்ட அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு இராணுவ உதவியை வாரி வாரி வழங்கி மூன்று முறை இந்திய-பாகிஸ்தான் போர் மூண்டதற்கு காரணமானது. இன்னமும் இந்தியா பாகிஸ்தான் இடையே பகைமை தொடர்வதற்கு அமெரிக்காவே பொறுப்பாகும்

என்பது கண்கூடு. மற்றொரு அண்டை நாடான பர்மாவில் உள்ள இராணுவ ஆட்சிக்கு முட்டுக் கொடுத்து நிறுத்தும் பணியையும் அமெரிக்காதான் செய்து வருகிறது. நேபாளத்தில் கொடுங்கோல் மன்னராட்சிக்கு, எல்லாவகையான உதவியும் செய்து, அந்த நாட்டு மக்களைக் கொன்று குவிக்க உதவியதும் அமெரிக்காதான்.இதன் தொடர்ச்சியான இலங்கை மீதான குறி வைப்பாகவே பிளேக்கின் தற்போதைய நடவடிக்கைகளை நோக்கவேண்டும்.

இன்று நேற்றல்ல, நீண்ட காலமாகவே இலங்கை விவகாரத்தில் அமெரிக்க மூக்கு நுகர்ந்து கொண்டே இருந்தது. ஆசியப் பிராந்தியத்தில் தனது தளத்தைப் பலப்படுத்த, ஆரம்பத்தில் திருகோணமலைத் துறைமுகத்தில் அமெரிக்கக் கடற்தளம் அமைக்க பெரும் முயற்சி செய்யப்பட்டு அது கைகூட வில்லை. பின்னர் மன்னாரில் சக்திவாய்ந்த அமெரிக்க வானொலிக் கோபுரத்தையும் வானொலி நிலையத்தையும் அமைக்க முற்பட்டதும் அதன் மூலம் இந்தியாவில் உளவறியும் திட்டமும் அமெரிக்காவிடம் இருந்ததாக சொல்லப்பட்டதும், அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் கடும் எதிர்ப்பின் விளைவாக அமெரிக்காவின் அந்தத் திட்டம் கைகூடாமல் போனதும் தெரிந்ததே. இவற்றின் தொடர்ச்சியே இலங்கையின் தேசியவாத சக்திகளின் (இனவாதிகள்) கரங்கள் பலப்படுத்தப்பட்டு, அங்கே பல வருடங்களாகத் தொடர்ந்த ஆயுதப் போராட்டமும் அதன் விளைவான அழிவுகளுமாகும்.

இப்போது இலங்கையில் வெளிப்படையாகவே ஆதிக்கம் செலுத்த முயலும் அமெரிக்கத் தேவைக்குப் பல காரணங்களை கூறலாம். போர் சூழலற்ற, போர் மேகங்களற்ற நாடாக கடந்த 3வருடத்திற்கு மேலாக இருக்கும் இலங்கையினுள் சீன முதலீடுகளும், சீன வர்த்தகமும் அதிகரித்தல் குறிப்பாக அம்பாந்தோட்டை துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ள சீனத் துறைமுகம் என்பனவும், அதேவேளை சீனாவின் இலங்கை மீதான ஆளுமைக்கு சவாலாக, பாரம்பரியமாகவே இலங்கையுடன் பல வரலாற்று, வர்த்தக தொடர்புகளைக் கொண்டுள்ள இந்தியா நகர்த்தும் காய் நகர்வுகள் என்பன அமெரிக்கவின் ஆசியப் பிராந்திய நலனுக்கு சவாலாக அமையக்கூடும் என அமெரிக்கா எண்ணலாம். இந்த நிலையில் ரொபேர்ட் ஓ பிளேக்கின் இலங்கை பயணம், போர் குற்றச்சாட்டுக்கள் என்கின்ற துருப்புச் சீட்டைக் கொண்டு இலங்கை அரசை அடிப்பணிய வைக்கலாம், அல்லது அதிகாரப் பகிர்வுக் கோசத்தடன் தொடர்ந்தும் ஆடம்பர-சுயநல அரசியல் நடாத்திவரும் தேசியவாதிகளை (தமிழ் தேசியக் கூட்டமைப்பு) மீண்டும்

பலப்படுத்தி நாட்டில் மற்றொரு அசாதரண சூழலை உருவாக்கவுமே என எண்ணப்படுகிறது. "ஜெனீவாவின் தீர்மானங்களுக்கோ, ஐ.நா. உட்பட்ட அமெரிக்காவின் படைப் பலங்களுக்கோ இலங்கை ஒருபோதும் அஞ்சாது. மீள் தலையீடுகளுக்கு எவராவது முயற்சித்தால் அதனை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம்" என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தமை இங்கே கவனிக்கத்தக்கது.

ரோபர்ட் ஓ பிளேக்கின் இலங்கை வருகை தமிழ் சிங்கள மக்களிடையேயும், பல்வேறு தரப்பினரிடையேயும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. குறிப்பாக ஈபிடிபி அமைப்பு தொடர்பாக அவர் அமெரிக்க தலைமைக்கு அனுப்பிய ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான அதிருப்தியையும், எதிர்ப்பையும் அக்கட்சியினர் வெளிப்படுத்தியிருந்தனர்; ஆயுதப் போராட்டத் தாலோ, எதிர்ப்பு அரசியலாலோ எதனையும் பெற்று விட முடியாது என்கின்ற யதார்த்தத்தை, அநுபவத்தினூடாக புரிந்து கொண்டு ஜனநாயக நடைமுறைகளுக்கு திரும்பிய இயக்கம் ஈபிடிபியும் அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும். அவர்களை, இன்றும் ஆயுதக் கும்பலாக இருக்கிறார்கள் என அமெரிக்காவின் பிளேக் சித்தரித்துள்ளது நகைப்புக்குரிய ஒன்று. ஆளும் அரசுத் தரப்புடன் ஈபிடிபி நெருக்கம் வைத்துள்ள ஒரே காரணத்திற்காகவே இந்தப் பொய்க் குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. பிளேக்கின் யாழ் விஜயத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து அங்கே ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றதும் கவனிக்கப்பட வேண்டியது.

அமெரிக்க மேலாதிக்கத்துக்கோ பொருளாதார நலனை விடவும் தனது அரசியல் வல்லாண்மையை நிலை நிறுத்துவதில் இலங்கையை வசப்படுத்த வேண்டிய அவசியம் அதிகம் கவனங்கொள்ளத் தேவையானது. ஒருபுறம் இந்தியாவுடன் கூடிக்குலாவியபடியே இலங்கையில் இந்தியா வென்றெடுத்துள்ள பூரண உரிமையை மறுத்து, தனது ஊடுருவலுக்கான இடைவெளியைத் தேட வேண்டியுள்ளது.

பொருளாதாரப் போட்டியில் ஏற்கனவே பலவீனப்படத் தொடங்கி விட்டது அமெரிக்கா.முன்னதாக யப்பானும், இப்போது சீனா-இந்தியா போன்ற நாடுகளும் வளர்ச்சி வேகத்தில் அமெரிக்காவிற்கு அச்சுறுத்தலாக வளர்ந்து வந்தாலும் அமெரிக்காவின் முதல்நிலை இன்னமும் ஆட்டங்காணவில்லை. , உலக மேலாதிக்கத்துக்கு அடிப்படையான இராணுவ வல்லாண்மையும், அதற்கு

www.padippakam.com

உறுதுணையாகும் விஞ்ஞான-தொழில் நுட்பமும் இன்னமும் அமெரிக்காவை உறுதியுடன் திகழும் ஆதிக்க சக்தியாக நிலைநிறுத்தி வைத்திருக்கின்றது. அந்தவகையில் இலங்கைமீதான, அதன் நாட்டம் சந்தை நலனை விடவும், இராணுவக் கேந்திர முக்கியத்துவம் சார்ந்த தேவையாகியுள்ளது. இராணுவ மேலாண்மை, அரசியல் அதிகாரத்தை நிலை நிறுத்துமாதலால் நீண்டகால நோக்கில் வீழ்ச்சியடையும் பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும் உதவும் என்பது அமெரிக்கக் கணக்கு.

**12.09.2011**



படிப்பகம்

www.padippakam.com

# தூக்குக் கயிற்றை எதிர் நோக்கும்... அராஜகத்தின் எச்சங்கள்...

உலகத்திலேயே மிகப் பெரிய கொடுமையாக மரணத்தையும் தாண்டி அதன் நிகழ்வு நாளை முன் கூட்டியே அறிந்து வைத்திருப்பதைத்தான் சொல்லலாம். இன்றைய நாளில் நம்மவர் மத்தியில் தமது மரணத்தின் தேதி நிர்ணயிக்கப்பட்ட மனிதர்களாக ராஜீவ் காந்தி கொலையுடன் தொடர்புபட்ட பேரறிவாளன், சாந்தன் மற்றும் முருகன் ஆகியோரே உள்ளனர். முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த 1991-ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் தேதி தேர்தல் பிரசாரத்திற்காக தமிழகம் சென்றிருந்த வேளை ஸ்ரீபெரும்புதூர் பொதுக்கூட்ட மேடை அருகே வைத்து புலிகளின் பெண் மனித வெடிகுண்டுதாரியால் படுகொலை செய்யப்பட்டார்.

உலகையே உலுக்கிய இந்த படுகொலை தொடர்பாக முருகன், நளினி, சாந்தன் மற்றும் பேரறிவாளன் உள்பட 26 பேர் கைது செய்யப்பட்டதும் இந்த வழக்கை விசாரணை செய்த சென்னை, பூந்தமல்லி தடா நீதிமன்றம் 26 பேருக்கும் தூக்கு தண்டனை விதித்ததும் அதை எதிர்த்து டெல்லி உச்ச நீதிமன்றத்தில் செய்யப்பட்ட மேல்முறையீட்டில், முருகன், நளினி, சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகிய 4 பேருக்கு தூக்கு தண்டனை உறுதி செய்யப்பட்டு, 3 பேருக்கு தூக்குதண்டனை ஆயுள்தண்டனையாக குறைக்கப்பட்டு மற்ற 19 பேரும் விடுதலை செய்யப்பட்டதும் நாடறிந்த வரலாறு. தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்டவர்களில் முருகனும், சாந்தனும் இலங்கை தமிழர்கள். நளினியும் மற்றும் பேரறிவாளனும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். புலிகள் அமைப்பைச் சேர்ந்த முருகன் சென்னையில் தங்கி இருந்த போது நளினியை திருமணம் செய்து கொண்டார். கொல்லப்பட்ட ராஜீவ் காந்தியின் மனைவியார் சோனியா காந்தியின் சிபார்சின் அடிப்படையிலும் ஒரு தாயார்



படிப்பகம்

www.padippakam.com

என்பதனாலும் சென்னை உயர் நீதிமன்றம் நளினிக்கு மட்டும் தூக்கு தண்டனையை, ஆயுள் தண்டனையாக குறைத்திருந்தது.

இந்த நிலையில் கடந்த 21வருடமாக ஜனாதிபதி அலுவலகத்தில் கிடப்பில் போடப்பட்டிருந்த தூக்கு தண்டனை கைதிகள் 3 பேரின் கருணை மனுக்களும் தற்போது தூசிதட்டி எடுக்கப்பட்டு மூவருக்கும் தூக்குத் தண்டனைக்கு (மரணத்திற்கு) நாள் குறிக்கப்பட்டு பின்னர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 20 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்தை சிறையில் கழித்த இந்த மூவரையும் தூக்கிலிடக் கூடாது என்று மனித உரிமை அமைப்புக்கள் கோரிக்கை விடுக்க, தமிழர்கள் தூக்கிலிடப்படுவதை பார்த்துக் கொண்டிருக்கப் போகிறதா..? தமிழகம் என தமிழகத்தின் புலி ஆதரவு அரசியல் தலைவர்கள் இனவாதக்கோசம் எழுப்பி வருகின்றனர். இலங்கைத்தமிழ் மக்கள் மத்தியிலோ குறிப்பாக முன்னாள் புலிகளின் பினாமி அரசியல்வாதிகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பினரோ இது பற்றி பெரிதாக அலட்டிக் கொண்டதாத் தெரியவில்லை. குறிப்பாக அண்மையில் இடம் பெற்ற இந்திய பாராளமன்றக் குழுவின் மனித உரிமைகள் மாநாட்டில் கலந்து கொள்ள புதுடில்லி சென்ற தமிழ்தேசியக் கூட்மைப்பின் பா.உ.க்களோ அன்றி ஏனைய இலங்கைத்தமிழ் கட்சிகளின் தலைவர்களோ இந்த மூவரின் தூக்கு பற்றி கருத்துக்கூட தெரிவிக்கமல் தமது இந்திய விசவாசத்தை வெளிப்படுதியிருந்தனர்..

100-க்கும் மேற்பட்ட நாடுகளில் மரண தண்டனை என்பதே ஒழிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தியாவில் இதுபோன்ற பழிக்கு பழி சட்டம் அவசியம் தானா...? என்ற வாதங்களும் மீண்டும், வலுக்கத் தொடங்கி உள்ளன. அதே வேளை 20 வருடங்கள் கழித்து இவர்களுக்கான மரண தண்டனையை நிறைவேற்றும் அவசியம் தற்போது ஏன் ஏற்பட்டது, இதுவரை காலமும் இது ஏன் கிடப்பில் போடப்பட்டிருந்தது என்கின்ற கேள்விகளும் எழுகின்றன. மரண தண்டனை குறித்ததான தீர்ப்புகள் செய்திகளில் வரும் போது மட்டும் மரண தண்டனை தேவையா...? என்பது குறித்த விவாதம் பல நாடுகளிலும் உருவாகி பின்னர் மறைந்து விடுகிறது. தண்டனைகள் என்பது குற்றவாளிகள் தமது குற்றங்கள் குறித்து மனம் வருந்துவதற்கான வாய்ப்பாகவும், அவன் திருந்தி வாழ்வதற்கான வழியினை உருவாக்குவனவாகவும் இருக்க வேண்டுமே தவிர, மரணத்தின் பெயரால் குற்றவாளிகளை பழிவாங்குவதை, பக்குவப்பட்ட அரசாங்கம் எதுவும் நியாயப்படுத்த முடியாது. மனிதனின் அடிப்படை உரிமையான ‘வாழ்தலை’



படிப்பகம்

www.padippakam.com

நிராகரிக்கும் அல்லது பறிக்கும் அரசு பக்குவப்பட்ட அரசாக இருக்க முடியாது என்பதே வாதம்.

ஒரு குற்றத்தை செய்வதற்கு முன்னதாக அதற்கான அதிகபட்ச தண்டனை தனக்கு கிடைக்கும் என்று பயந்து ஒருவன் குற்றத்தைச் செய்ய தயங்கச் செய்வதாக, தண்டனைகள் இருக்க வேண்டும் என்பதும், தண்டனைகளுக்கான மற்றொரு முக்கியத்துவம். தண்டனைகளால் இந்தச் சமூகத்தில் குற்றங்கள் குறையும் என்ற ஒரு நம்பிக்கையை சட்டம் கொண்டுள்ளது. ஆனால் ஒரு மனிதனை சட்டம் நீதியின் பெயரால் கொல்வது என்பதை எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடிவதில்லை. மரண தண்டனைக்கு எதிரானவர்கள் மட்டுமல்ல அனைத்து மானிடரும் முதலில் இந்தச் சட்டத்தை அரசியல் அமைப்பிலிருந்து நீக்க முயற்சிக்க வேண்டும். கண்டதும் சுடும் உத்தரவுகள், தூக்குமேடைகள், என்கவுண்டர்கள் இவைகளால் குற்றத்தின் போக்கை எந்நாளும் அடக்கிவிட முடியாது.

தற்போது மரண தண்டனைக்கு நாள் குறிக்கப்பட்டுள்ள மூவரும் எவ்விதத்திலும் குற்றமற்றவர்கள் என்கின்றனர் சிலர். வேறு சிலர் "இது ஒரு துயர நிகழ்வு" என இந்த கொலையைச் செய்த புலிகளின் தலைவரே தெரிவித்த ரஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரணை செய்த புலனாய்வுத்துறை, மற்றும் தண்டனை வழங்கிய இந்திய நீதித்துறை, ஆகியவை மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். கிட்டத்தட்ட கால் நூற்றாண்டுக்காலம் இவர்கள் சிறைக்குள் இருந்தமையே மிகப்பெரிய தண்டனை, அதன்பின்னர் தூக்கு என்பது ஒரே குற்றத்துக்கு இரு தண்டனை ஆகும் எனவும் சட்ட வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. நான்குமுறை தூக்குத்தண்டனை ஒத்திவைக்கப்பட்ட ஒரு குற்றவாளிக்கு அத்தண்டனை ரத்துச் செய்யப்பட்ட தீர்ப்பின்போது அந்த நீதியரசர்கள் சொன்ன காரணம்- "நான்கு முறையும் அவர் அடைந்த மன வலியையே ஒரு தண்டனையாக எடுத்துக்கொண்டு அவருக்கு தூக்குத்தண்டனை ரத்து செய்யப்படுகிறது" என. அதே நிலை இம்மூவருக்கும் பொருந்த வாய்ப்பு உள்ளதாகவும் சொல்லப்படுகிறது. எது எப்படியாயினும் முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகிய மூவருக்குமான தூக்குத் திகதி நீதியால் நிர்ணயிக்கப்பட்டு அதற்கெதிரான சட்ட வாதங்களின் அடிப்படையில் தற்போதைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இது நிறைவேறலாம் அல்லது இறுதி நேர அரசியல் அதிரடி அறிவிப்புக்கள் அல்லது தற்போதைய சட்ட முன்னெடுப்புக்கள் போன்றவற்றால் தூக்குக் கயிற்றிலிருந்து இவர்கள் காப்பாற்றப்படலாம். ஆனால் இந்த விவகாரத்தில்



படிப்பகம்

உறங்கிக் கொண்டிருக்கும் உண்மைகள் தட்டி எழுப்பப்பட வேண்டியவையே.

ராஜீவ் காந்தி கொலையை நிகழ்தியவர்கள் புலிகளே என சட்டம் மட்டும் நிரூபிக்கவில்லை. அவர்கள் தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்ட்டு அதன் முக்கிய சூத்திரதாரிகள் எனச்சொல்லப்பட்ட பிரபாகரன், பொட்டு அம்மான், சிவராசன், மனித வெடிகுண்டாகப் பயன்படுத்தப்பட்ட சுதா, உட்பட்ட அவர்கள் அனைவரும் முற்றிலுமாக அழிக்கப்பட்ட நிலையில் இந்தியாவின் காங்கிரசு அரசு திடீரென இந்தத் தண்டனையை நிறைவேற்ற முனைவதன் காரணம் என்ன...? குறிப்பாக 2008ம் ஆண்டு புலிகளுடனான இறுதிப் போரின் போது ராஜபக்ச அரச இராணுவம், மேற்கொண்ட போர்க் குற்றங்கள் விசாரிக்கப்படவேண்டுமென்ற குரல் சர்வதேச அளவில் எழும்பியுள்ள நிலையிலேயே, நிலுவையில் இருந்த இந்தத் தூக்கு விவகாரம் தூசிதட்டப்பட்டுள்ளது கவனிக்கப் படவேண்டியது. சில சமயம் இலங்கை அரசுமீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை முன்னெடுக்கப் பட்டால், வன்னிப் போர் முன்னெடுப்பின் சர்வதேச பின்னணிகள் அம்பலமாகலாம் என்கின்ற நினைப்பிலும், புலிகளின் அராஜகங்களில் முக்கியமானது முன்னிறுத்தப்பட்டிருக்கலாம். எதிர்க் கட்சியான இந்துத்துவ பா.ஜ.க.வின் வாயை அடைக்க வேண்டுமென்பதற்காக, பாகிஸ்தான் தீவிரவாதி அப்சல் குருவை தூக்கில் போடவேண்டுமென்று நினைக்கும் காங்கிரசு அரசு அதற்கு முன்னதாக முன்வரிசையில் உள்ளவர்களையும் தூக்கிலேற்ற வேண்டும் என்பதற்காகவும், இவர்கள் மூவரையும் தூக்கிலேற்ற முடிவெடுத்திருக்கலாம் எனவும் மற்றொரு காரணம் கூறப்படுகிறது. அப்சல் குரு ஒரு அப்பாவி என அருந்ததி ராய் தொடங்கி பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் ஆதாரத்துடன் நிரூபித்திருந்தும், தூக்கு கயிறு அவனுக்கு தயாரகவே உள்ளது. அடுத்து வரிசையாக ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கித் திணறும் காங்கிரசு அரசு தேசத்தின் நிகழ்ச்சி நிரலை அல்லது எழுச்சியை மாற்றுவதற்காகவும் இதை முன்னெடுதிருக்கலாம் என்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. அண்ணா ஹசாரேவை வைத்து ஊடகங்கள் எழுப்பும் ஜனநாயகக் கூச்சல் காங்கிரஸ் அரசை திக்குமுக்காட வைக்கிறது. ஆக முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரும் குற்றவாளிகளே என்பதற்கு அப்பால் ஆழமான அரசியல் நோக்கங்களே இவர்களின் தூக்கு நிறைவேற்றத் திகதி அறிவிப்புக்கு காரணமாயுள்ளது என்பது முற்றிலும் உண்மையே.

1990ம் ஆண்டு சென்னை சூளைமேட்டில் வைத்து புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட ஈபிஆர்எல்எப் செயலாளர் நாயகம் தோழர். பத்மநாபா உட்பட்ட 16 முக்கியஸ்தர்களின் கொலையை திட்டமிட்டு நடாத்திய புலிகளின் குழுவினரே ராஜீவ் காந்தியின் கொலைக்கும் திட்டம் தீட்டி நிகழ்தியவர்கள் என்பது ராஜீவ் காந்தியின் கொலை விசாரணையின் போது தெரிய வந்ததாக, அப்போது இந்த விசாரணையை நடாத்திய அன்றைய சிபிஐ தலைவர் கார்த்திகேசன் தெரிவித்திருந்தார். அதேவேளை பத்மநாபா உட்பட்ட 16 பேரின் கொலையை செய்தவர்கள் அங்கிருந்து தப்பிச்சென்று, தங்கியிருந்த வீட்டை சென்னை பொலீசார் சுற்றிவளைத்து அவர்களை கைது செய்ய முனைந்தபோது மேலிடத்தின் உத்தரவின் பேரில் கைது கைவிடப்பட்டதும் அன்று அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தால் ராஜீவ் காந்தியின் கொலை நிகழ்ந்திருக்காமல் இருந்திருக்கலாம் என அன்று தகவல்கள் வெளியாகி இருந்ததும் கவனிக்கப்பட வேண்டியது.

இன்று இந்த மூவரின் தூக்குத்தண்டனை நிறைவேற்றத்திற்கு எதிராக ஓங்கி குரல் கொடுப்பவர்கள் குறிப்பாக தமிழகத்தின் உணர்வாளர்கள் என்று சொல்லப்டுகின்ற புலிகளின் ஆதரவாளர்கள் புலிகள் செய்த ஆயிரக்கணக்கான அராஜகக் கொலைகளை கண்டித்து அவற்றை தடுத்து நிறுத்த முயன்றதாக வரலாறு இல்லை. குறிப்பாக இவர்களுக்கு தெரிந்த அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், நீலன். திருச்செல்வம், லக்ஸ்மன் கதிர்காமர், கேதீஸ்வரன், அப்துல் மஜீத், மகேஸ்வரி வேலாயுதம்... (இன்னும் பலர்... பலர்...), போன்ற ஜனநாயகவாதிகளின் கொலைகளின் போது கூட இவர்கள், இப்படி எதிர்த்துக் குரல் எழுப்பவில்லை. அனைத்திற்கும் மேலாக வன்னி இறுதி யுத்தத்தின் போது புலிகளால் மனிதக் கேடயங்களாக்கப்பட்டு போர் முனையில் தடுத்து நிறுத்தப்பட்ட மக்களைக்காப்பாற்றக் கூட இந்தச் சீமான், வைகோ, நெடுமாறன் போன்றவர்கள் முன்வரவில்லை. அந்த வேளையிலும் புலிகளுக்கு மேலும் உசுப்பேத்தி அவர்களதும், மக்ககளதும் அழிவிற்கு காரணமானவர்கள், அந்த அழிவுகளை வைத்து இன்றும் அரசியல் நடாத்துபவர்கள், இந்த மூவரின் தூக்குக்கு எதிராக ஓங்கிக் குரல் கொடுப்பதை யாரும் கணக்கிலெடுக்கப் போவதில்லை.ஆனால் ராஜீகாந்தி கொலையில், பயன்படுத்தப்பட்ட அம்புகளாகி தமது வாழ்வையும் அழித்து இன்று மரணத்தின் விளிம்பில் நிற்கும் முருகன், சாந்தன், பேரறிவாளன் மற்றும் நளினி போன்றவர்களைப் போல, தன்னையே எரித்துக்கொண்ட 'அப்பாவி முத்துக்குமாரைப்

போல ஏன் இந்த சம்பவத்தின் போது தற்கொலை செய்து கொண்ட இளம்பெண் செங்கொடி போல மேலும் இளம் இரத்தங்கள், இவர்களின் உணர்ச்சி வலையில் சிக்கிவிடுமோ என்பது தான் யதார்த்தவாதிகளின் கவலை. ராஜீவ் காந்தி உட்பட புலிகளால் திட்டமிட்டு கொல்லப்பட்ட அனைவரும் அவர்களது தலைமையால் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டே பின்னர் கொல்லப்பட்டவர்கள் என அவர்களது இயக்க வரலாறு சொல்கிறது. ஆக தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டவர்கள் எல்லாம் கொல்லப்பட வேண்டியவர்களே என்கின்ற அந்தப் புலிச் சிந்தாத்தை அவர்களது ஆதரவாளர்கள் என்று சொல்பவர்கள் இன்று மறந்து விட்டாலும், இவர்களது இந்த மறப்பு நிரந்தர மறப்பாக இருந்தால் மகிழ்ச்சியே.

முருகன், சாந்தன், பேரறிவாளன் மூவரும் குற்றம் செய்துள்ளார்களா…? இல்லையா…? என்பதை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, அவர்களது 21 ஆண்டு கால சிறைவாசம் கணக்கில் கொள்ளப்பட வேண்டும். அத்துடன் எந்தக் குற்றத்துக்கும் மரண தண்டனை கூடாது என்பது நாகரிக சமுதாயத்தின் லட்சியமாக்கப் பட்டு, அதன் அடிப்படையில் இவர்களது தண்டனை நீக்கப் பட்டால், இந்தியா கற்கால காட்டுமிராண்டித்தனச் சிந்தனையின் பிடியில் சிக்கி கிடக்கும் நாடு அல்ல என்பது உலகிற்கு உணர்த்தப்படும்.

**28.08.2011**

www.padippakam.com

# ஏகாதிபத்தியத்துக்கு குழி தோண்டும் - இங்கிலாந்துக் கலவரங்கள்.

30ஆண்டுகளுக்கு பிறகு இங்கிலாந்து தேசம் கண்ட பாரிய வன்முறைக் கலவர பெருமழை சிறுக ஓய்ந்து தற்போதும் தூவாணம் அடித்துக் கொண்டிருக்கிறது. முக்கிய நகரங்களின் வீதிகள் எல்லாம் வன்முறையின் பிடியில் சிக்கித் தவித்தது கடந்த வாரத்தில்...! தீ வைப்பு, கடைகள் சூறையாடல், கொள்ளை, அடிதடி, துப்பாக்கிச் சூடு, கைது என கலவர பூமியால் ஸ்தம்பித்து காட்சியளித்தது அத்தேசம். ஐந்து உயிர்களை காவு வாங்கிய இந்த திடீர் வன்முறையை ஒட்டு மொத்த உலகமும் உன்னிப்பாக கவனிக்கத் தொடங்கியது.பிரதமர் டேவிட் கமறூன் தனது வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை இடையிலே முறித்துக் கொண்டு அவசரம் அவசரமாய் நாடு திரும்பினார். இது வெறும் கலவரமா...? வன்முறையா...? இல்லை மக்கள் எழுச்சியா...? இனப் பகையா...? அல்லது வறுமைக்கும், வளமைக்கும் இடையே நடந்த யுத்தத்தின் தொடக்கமா...? எனப் பலகோணத்திலான கேள்விகளை உருவாக்கி இருக்கிறது இந்தக் கலவரம்.

லண்டன் நகருக்கு வெளியே உள்ள டோட்டன்ஹம் என்கின்ற பகுதியில், காவல் துறையால் ஒரு இளைஞன் சந்தேகித்திற்கிடமான வகையில் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் ஆரம்பித்ததுதான் இந்தக் கலவரங்கள். வழக்கம் போலவே, காவல்துறையினரை தாக்குவதற்கு முயன்ற நபரை, தற்பாதுகாப்புக்காக சுட்டதாக தெரிவித்த இங்கிலாந்து காவல்துறையின் கூற்றை அங்கே யாரும் நம்பத் தயாராக இருக்கவில்லை. காவல்துறையின் அநீதிக்கு எதிர்வினையாக, அடித்தட்டு மக்களின் கோபமும், வெறியும் வெடித்துக் கிளம்பியது. கும்பல் கும்பலாக கிளம்பிய இளைஞர்கள், வர்த்தக நிறுவனங்களை அடித்து நொறுக்கினார்கள், கடைகளை



படிப்பகம்

சூறையாடினார்கள். டோட்டன்ஹம் நகரில் மட்டும் நின்று விடாத கலவரத்தீ பேர்மிங்ஹாம் போன்ற பல நகரங்களுக்கும் பரவியது. இந்த கலவரத்தில் வெள்ளையினத்தவர், கறுப்பினத்தவர் என்ற பாகுபாடின்றி அங்கு வாழும் இளம் சமுதாயம் ஈடுபட்டது. இன-மத வேற்றுமைகளைக் கடந்து ஏழ்மை ஒன்று மட்டுமே அவர்களை ஒன்று சேர்த்திருந்தது.

இங்கிலாந்து அரசும், வலதுசாரி ஊடகங்களும் கலவரத்தில் ஈடுபடுவோரை "சமூகவிரோதிகள்"என முத்திரை குத்தி கைது செய்துள்ளது. "கொள்ளையடிப்பது, திருடுவது போன்றனவே இந்த சமூக விரோதிகளின் செயல், இவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டித்து விட்டால் பிரச்சினை தீர்ந்து விடும்" என்று அரசு கூறி வருகின்றது. ஆனால் உண்மையை அறிய அந்நாட்டு அரசு இன்னமும் முன்வரவில்லை என்பதுதான் வேதனை. கலவரத்தில் ஈடுபட்டோர், முதலில் பெரும் வணிக நிறுவனங்களின் அங்காடிகள், ஆடம்பர பொருட்களை விற்கும் கடைகள், போன்றவற்றை உடைத்து சூறையாடினார்கள்.முதலில் கறுப்பின மக்கள் அதிகமாக வாழும் நகரங்களிலேயே உருவான இக்கலவரம் பின்புதான் பல்வேறு சமூக மக்கள் வாழும் வேறு நகரங்களுக்கும் பரவத் தொடங்கியது. இந்த கடையுடைப்பு, சூறையாடுதல் போன்றவற்றில் ஏழு வயதுக்கும் 25 வயதுக்கு இடைப்பட்டவர்களே அதிகம் ஈடுபட்டதாச் சொல்லப்டுகிறது. இங்கிலாந்தில் மேட்டுக் குடிமக்களுக்கும், வறியவர்களுக்கும் இடையில் உள்ள இடைவெளி அண்மை காலங்களாக மிக மிக அதிகரித்து வந்து கொண்டிருப்பதாகவும் இதன் எதிரொலிதான் இக் கலவரம் என்கிறார்கள் அங்குள்ள சில ஊடகவியலாளர்கள். வலுவிழந்தவர்களாக தங்களை பற்றிய நினைப்பில் இருந்தவர்கள் குழுக்களாகச் சேர்ந்து இயங்கும் பொழுது வலுவானவர்களாக தங்களை உணரும் நிலை ஏற்பட்டிருக்கலாம், அதனால் அவர்களுக்கு எட்டாக்கனியாக இருந்த பொருட்களை அபகரிக்க துணிந்து இருக்கலாம் என்பன போன்ற பல காரணங்களை சமூக உளவியல் அறிஞர்கள் சொல்கிறார்கள். இங்கிலாந்தில் வாழும் வறிய மக்களுக்கு வழங்கப்படும் சமூக உதவிகள், சலுகைகளில் கட்டுப்பாடுகள் மற்றும் குறைப்புகளை கொண்டு வந்தது அண்மையில் புதிதாக பதவிக்கு அமர்ந்த வலதுசாரிய அரசாங்கம். அந்த கறுப்பு இன இளைஞனை சுட்டு கொன்ற காரணத்தை விட மாணவர்களின் கல்வி கட்டணம் மற்றும் அடித்தட்டு மக்களின் சமுக நல சலுகைகளில் கை வைத்தமை போன்றவையே இங்கிலாந்து வரலாற்றில் காணாத

இந்த கலவரத்தை காணவேண்டிய நிலமைக்கு வந்தது என ஒரு சாரார் வாதாடுகின்றனர். இங்கிலாந்தின் பூர்வீக வெள்ளையின குடிமக்கள் பலர் உழைத்து வாழ விரும்பாத சோம்பேறிகள் எனவும் அரசு வழங்கும் உபகாரச் சம்பளத்தில், இலவச சலுகைகளை பெற்றுக் கொண்டு சொகுசாக வாழ்கின்றவர்களே அதிகம் என்றும் பலவருடங்களுக்கு முன்னைய கருத்துகணிப்பு ஒன்று தெரிவித்தது. அவர்களுக்கான சலுகைகளை அரசு குறைக்கத் தொடங்கியதும் அதனால் அவர்களின் நிலை மோசமாகி அதற்கான வாய்ப்பாக இந்தக் கலவரத்தை வெள்ளையின சோம்பேறிகள் பயன்படுத்திக் கொண்டனர் - என்ற குற்றச்சாட்டும் வலுவாகவே உள்ளது.

இங்கிலாந்து என்ற ஆடம்பர நாட்டின் மதிப்பீடு உலகம் முழுவதும் முதலிடத்தில்தான் இருந்தது - இந்தக் கலவரம் வரும் வரை... பணக்கார மேற்குலகைச் சேர்ந்த இங்கிலாந்து தேசத்தை - எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் சொர்க்கபூமி என்றுதான் இந்த உலகம் நினைத்துக் கொண்டிருந்தது. ஆனால் அத்தகைய சொர்க்கபுரியில் வறுமையை முன்னிறுத்திக் கலவரமென்றால் நம்பும்படியாக இல்லை என்றாலும் அதுதான் உண்மை...!கறுப்பின மக்கள் மீது பாகுபாடு காட்டபடுகிறது என்று கூறப்படும் நிலையில் அதிகக் குற்றச் செயல்களில் அவர்கள் தான் ஈடுபடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு அரச தரப்பில் வைக்கப்படு வந்தது பல காலமாக. அவர்கள் இப்படி ஈடுபடுவதற்கு காரணம் அவர்களுடைய கல்வியறிவுக் குறைபாடு, இனவெறுப்பு போன்றவையே என கூறுவோரும் உள்ளனர். ஆனால், அதில் உண்மை இல்லை என்பதற்கு உதாரணம் - அமெரிக்காவில் வெள்ளை இனத்தவர் தான் கறுப்பு இன மக்களை விட குற்ற செயல்களில் கூடுதலாக ஈடுபடுகின்றனர் என்று கூறும் ஒரு புள்ளி விபரம்.

துனீசியா, எகிப்து போன்ற நாடுகளில் சமூகத் தொடர்பு இணையங்களான பேஸ்புக், ட்விட்டர் போன்றன மூலம் போரட்டத்துக்கு அழைத்தது போல் இப்பொழுது இங்கிலாந்தில் நடந்த சம்பவத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த செய்திகள் அரசாலும் வலதுசாரிய ஊடகங்களாலும் வெளிக் கொணரப்பட வில்லை. மூன்றாம் உலக நாடுகளில் இது போன்ற சம்பவத்துக்கு ஊக்கமும் பாராட்டும் கொடுத்த இங்கிலாந்து தனக்கே அந்த நிலை ஏற்படும் பொழுது செய்வதறியாமல் மிரளுகிறது. அண்மைக் காலமாக மேற்கத்திய நாடுகளின் கட்டுமான அமைப்புகளின் பொய் முகங்கள், மெல்ல, மெல்ல வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருப்பதை பார்க்கமுடிகிறது. அமெரிக்காவின் கடன் வாங்கும் திறனுக்கான தர

www.padippakam.com

வரிசை குறைக்கப்பட்டமை, இங்கிலாந்து எந்த புதிய உற்பத்தியும் இன்றி வெறும் இடைத் தரகராகவே இவ்வளவு காலமும் இருந்து வந்தது போன்றவை இதற்கு சில உதாரணங்கள். இதனால் அவர்களுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்படும் பொழுதெல்லாம் தமது இருப்பை காப்பாற்றுவதற்கு அடித்தட்டு மக்களின் இடுப்பில் கை வைக்கின்றன, இதன் எதிர் விளைவே இந்தக் கலவரத்துக்கான முகாந்திரம் என்ற சில பொருளாதார நிபுணர்களின் கூற்று கவனிக்கப்பட வேண்டியது.

அண்மைய கலவரங்களின் போது, மிகப் பெரிய வர்த்தக நிறுவனங்களுக்கு மட்டும் இங்கிலாந்து காவல் துறை பாதுகாப்பு அளித்துள்ளது. இதனால் அங்கு நெருங்க முடியாத கலவரக்காரர்கள், தமது பிரதேசங்களில் உள்ள சிறு வணிகர்களின் வியாபார நிலையங்களை தாக்கி உள்ளனர். அநேகமாக, இங்கிலாந்தின் சிறுவணிகர்கள் பன்னாடுகளிலிருந்தும் இங்கிலாந்தில் குடியேறியவர்கள். பலசரக்குக் கடைகள், உணவுச் சாலைகள் மட்டுமல்லாது, நடைபாதையோர மிகச் சிறிய பெட்டிக்கடைகள் கூட அவர்கள் வைத்திருக்கின்றனர். குறிப்பாக இந்தியர்கள், இலங்கையர்கள் இப்படியான சிறு வணிகத் துறையில் கொடி கட்டிப் பறக்கின்றனர். பேர்மிங்ஹாம் பகுதியில் சீக்கியர்கள் தமது வியாபார நிறுவனங்களையும், குருத்வாராக்களையும் தாமே பாது காக்கின்றனர். “பிரிட்டன் எமது தாயகம். நாங்கள் எங்கள் பகுதிகளை பாதுகாக்கிறோம் “... என்று கூறும் சீக்கியர்களின் நாட்டுப் பற்றை அங்கேயுள்ள ஊடகங்கள் புகழ்ந்து தள்ளுகின்றன. துருக்கியரும் தமது வியாபார நிறுவனங்களை தாமே பாதுகாக்கின்றனர். “நாங்கள் துருக்கியர்கள். எங்களை கலவரக்காரர்கள் நெருங்க முடியாது”... என தேசியவாதப் பெருமிதத்துடன் அவர்களில் சிலர் தெரிவித்தனர். போலந்து போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளை சேர்ந்தோரும், கொள்ளையடிக்க வருவோரை தாமே அடித்து விரட்டினார்கள். “எங்களுக்கு அடைக்கலமளித்து முன்னேற வைத்த இங்கிலாந்துக்கு விசுவாசமாக இருப்போம்“ என்கின்றனர அவர்கள். தமிழ் சமூகத்தை சேர்ந்த எமது வணிகர்கள் மட்டும் செய்வதறியாது கையைப் பிசைந்து கொண்டு நிற்க, நகைக்கடை உட்பட பல தமிழ்க் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. “மத்திய லண்டனையும், பெரிய வணிக நிறுவனங்களையும் பாதுகாக்கும் இங்கிலாந்து காவல்துறை, நமது பக்கம் எட்டியும் பார்ப்பதில்லை”... என்று குறைப்படுகின்றனர் அங்குள்ள தமிழ் வணிகர்கள். சீக்கியரைப் போல, துருக்கியரைப் போல, அடியாட்களை வைத்து வர்த்தகத்தை



படிப்பகம்

www.padippakam.com

பாதுகாக்க முடியாத இக்கட்டான நிலையில் சிக்கித் தவிக்கிறது அங்குள்ள நம் தமிழ் சமூகம்.

லண்டன் நகரத்தில் மட்டுமல்லாது, இங்கிலாந்தின் பிற நகரங்களிலும் வேலையற்ற ஏழை மக்கள் பெருகி வருகின்றனர். வெள்ளையினத்தை சேர்ந்த ஏழைகளே பெரும்பான்மையாக இருப்பதாக தோன்றினாலும், வெளிநாட்டுக் குடியேறிகள் மத்தியிலும் ஏழைகள் பெருகி வருகின்றனர். வெள்ளையின ஏழைகள், வேலை கிடைக்காத பட்சத்தில், சமூகநல இலவச சலுகைகளில் வாழ்வதை தமது உரிமையாக கருதுகின்றனர். மாறாக, வெளிநாட்டுக் குடியேறிகள் சூழ்நிலை காரணமாக கிடைக்கும் எந்த வேலையையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர். அண்மைய உலகளாவிய பொருளாதார நெருக்கடி, பிரிட்டனையும் வெகுவாக பாதித்துள்ளது. அரசும், பெரும் முதலாளிகளும் பொருளாதார வளர்ச்சிக்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், நாட்டின் நிலைமை மோசமாகவே இன்னமும் உள்ளது. உழைக்கும் மக்கள் மீது தாக்குதல் தொடுக்கும் அரசின் செயல்பாடானது, பொருளாதார பிரச்சினைகள் தீர்க்கப் படாமையையே சுட்டிக் காட்டுகின்றது. சில மாதங்களுக்கு முன்னர், நடைமுறைப்படுத்தப்பட்ட உயர்கல்விக்கான கட்டணம் அதிகரிக்கப்பட்டமையானது, இனி மேட்டுக்குடிப் பிள்ளைகள் மட்டுமே உயர்கல்வி கற்கலாம் என்ற நிலையை தோற்றிவித்துள்ளது. கல்விக்கட்டணம் அதிகரிக்கப்பட்ட போது உழைக்கும் வர்க்கத்தை சேர்ந்த மாணவர்கள், அரசின் கொள்கையை எதிர்த்து கலகம் செய்தனர். ஆனால் அதிகார மையத்திற்கு எதிரான மாணவர்களின் அந்தக் கலகக் குரல்கள், வெளி உலகத்தை எட்டவில்லை.

இங்கிலாந்து போன்ற சில மேற்கத்திய நாடுகளில், வேலை வாய்ப்பை உருவாக்குவது கூடுதலாக தனியார் நிறுவனங்களாகவே இருப்பதனால் முதலாளிகள் தமக்குத் தேவையான அளவு தொழிலாளர்களை மட்டும் வேலைக்கு அமர்த்திக் கொள்ள எஞ்சியவர்களை வேலையற்றோர் படையில் சேர்த்து விடுகின்றனர். அரசாங்கமோ பட்ஜெட்டில் செலவினக் குறைப்பு என்ற பெயரில், சலுகைகளை குறைத்து வருகின்றது. வேலையில்லாமல் உதவித்தொகை பெறுவோர், கிடைக்கும் வேலையை செய்யுமாறு கட்டாயப்படுத்தப் படுகின்றார்கள். ஒருவர் முன்பு பொறியியலாளராக வேலை செய்திருந்தாலும், இப்போது தெருக் கூட்டும் வேலைதான் உள்ளது என்றால் அதனைச் செய்ய வேண்டிய நிலை. "விபச்சாரத்தை தவிர எல்லாவிதமான தொழிலை செய்யுமாறும் வேலையற்றோர்



படிப்பகம்

www.padippakam.com

நிர்ப்பந்திக்கப் படலாம்'' ... என்று பிரித்தானிய சட்டம் கூறுகின்றது. அதனை ஏற்றுக் கொள்ளா விட்டால், உதவித் தொகை நிறுத்தப்படும். இது தவிர மேலும் பல காரணங்களை காட்டியும், உதவித் தொகை நிறுத்தப் படுகின்றது. அரசு பணம் கொடுக்கா விட்டால், மக்கள் எவ்வாறு வாழுவது...? என்பது அரசின் கவலையாக இல்லை. இதனால் அரசு மறைமுகமாக தெரிவிப்பது 'வேலயில்லா விட்டால், பிச்சை எடுத்தோ அல்லது திருடியோ வாழப் பழகிக் கொள்ளுங்கள்.' இங்கிலாந்தில் கலவரத்தில் ஈடுபட்டோரும் அதைத் தான் செய்தனர். அவர்களுக்கு இழப்பதற்கு எதுவுமேயில்லை. தங்கள் வறுமை வாழ்கையில், இன்னொரு கூட்டம் வசதியாக வாழ்வதை கண்கூடாகக் காண்கின்றனர். இல்லாதவன் இருக்கிறவனிடம் இருந்து பறித்தெடுக்கிறான் இதுதான் யதார்த்தம். இங்கே வேதனை என்னவென்றால், தமது எதிரி யாரென்று தெளிவற்ற கலகக்காரர்கள், தம்மைப் போன்ற உழைக்கும் மக்களின் சொத்துகளையும் கொள்ளையடிப்பதும், சிறு வணிகர்கள் தாக்கப்படுவதும், சில இடங்களில் சாதாரண உழைக்கும் மக்களின் வீடுகளில் கூட திருடி இருக்கிறார்கள். அவர்களின் வாகனங்கள் கொளுத்தப்பட்டுள்ளன. பொதுப் போக்குவரத்து பேரூந்துகள் கூட எரிக்கப்பட்ட பல விரும்பத்தகாத சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன..

அங்குள்ள இடதுசாரிகள் இங்கிலாந்தின் கலவரங்களை ஆதரித்தாலும், அவர்களது நிலைப்பாடு சிலநேரம் அவர்களுக்கே சங்கடத்தை ஏற்படுத்தி விடுகின்றது. கலவரத்தால் பாதிக்கப்பட்ட சாதாரண உழைக்கும் மக்களிடம், இந்த செய்தியை எவ்வாறு கொண்டு செல்ல முடியும்...? தனது வீட்டின், கடையின் உடமைகளை பறிகொடுத்த சாமானியர்கள் கூட, அரசாங்கம் கலவரத்தை அடக்க வேண்டுமென்றே எதிர்பார்ப்பார்கள். இங்கிலாந்தில் வெடித்துள்ள கலவரத்தை முற்று முழுவதுமாக பாட்டாளி மக்களின் எழுச்சியாக கருத முடியாது. சில சமூகவிரோத சக்திகளும் கலவரத்தின் பின்னணியில் இருப்பதை மறுக்க முடியாது. இங்கிலாந்தில் மட்டுமல்ல பல நாடுகளில் புரட்சிக்கு தயாராக இருக்கும் மக்களை சரியாக இனங் கண்டு வளர்த்தெடுப்பதில் இடதுசாரிகள் காட்டும் ஆர்வம் குறைவாகவே உள்ளது. இந்த வெற்றிடத்தை வலதுசாரிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றனர். வெளிநாட்டுச் சிறு வணிகர்களின் வியாபாரங்களை காவல்துறை பாதுகாக்க தவறியது அவை வெளிநாட்டு குடியேறிகளினது தானே என்கின்ற உள்நோக்கம் கொண்டதாகவும் இருக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

இந்த நிலையில் பிரித்தானிய அதிகார வர்க்கத்திற்கு எதிரான வெள்ளையின ஏழைகளின் கோபம், வெளிநாட்டவர் மீதும் திரும்பலாம். ஏற்கனவே வெள்ளையின மக்களினதும் வலதுசாரிய அரசினதும் ஆதரவைப் பெற்றுள்ள தீவிர வலதுசாரிகளின் கரத்தை இது பலப்படுத்தலாம். இனப் பாகுபாடு என்ற புள்ளியில் தொடங்கிய மக்கள் கொந்தளிப்புக்குள் இங்கிலாந்தின் வறுமை, அரசின் அலட்சியப் போக்கு, முதலாளித்துவச் சிந்தனை, சரியான திட்டமிடல் இன்மை, வெளிநாட்டுக் குடியேறிகளை ஒதுக்கும் மனப் போக்கு, அடித்தட்டு மக்களின் நீண்ட கால கோபம் என பலவும் அடங்கி இருக்கின்றன. இதற்கான சரியான தீர்வு உடனடியாகக் காணப்படா விட்டால், இங்கிலாந்து என்கின்ற ஏகாதிபத்திய வல்லரசு சிதறிப் போகும் நிலைக்கு தள்ளப்படும்...!

**15.08.2011**



படிப்பகம்

www.padippakam.com

# தெற்கு சூடான் விடுதலை... அலசப்படாத அந்தரங்கங்கள்...

இந்த ஆண்டு 2011 ஜுலை 8 ஆம் தேதி நள்ளிரவில், உலகின் 193வது நாடொன்று பூமிப்பந்தில் உதித்தது. தெற்கு சூடான், தன்னை தனிநாடாக சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்டதன் மூலம் இந்த உதயம் நிகழ்ந்தது. தலைநகர் ஜுபாவில், சுதந்திரக் கொடி பறக்க சல்வாஹிர் மியார்டிட், நாட்டின் முதலாவது குடியரசுத் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். இனப்படுகொலைக்கு ஆளாகி, துன்பம் எனும் நரக இருளில் தத்தளித்த கருப்பர் இன மக்களின் அடிமை நுகத்தடியை முறித்து, தங்கள் மண்ணை, சுதந்திர பூமியாக உலகு ஏற்றுக் கொண்டதை, ஆடிப்பாடிக் கோலாகலமாக கொண்டாடினார்கள் அந்த இனத்து சிறுவர், சிறுமிகள் உடப்பட அனைவரும். அந்தத் தேசத்தின் சுதந்திரக்கொடியும் அவர்கள் கைகளிலிருந்து குதித்துக் கும்மாளமிட்டது.

சூடான் என்றழைக்கப்படும் சூடான் குடியரசு ஆபிரிக்க கண்டத்தில் உள்ள, பரப்பளவின் அடிப்படையில் ஆபிரிக்காவி லேயே மிகப்பெரிய வடக்கு ஆபிரிக்க நாடாகும். உலகின் மிகப் பழமையான நைல் நதி பாய்ந்தோடும் சூடான் குடியரசு நாடு, முன்னொரு காலத்தில் எகிப்தியப் பேரரசின் ஆதிக்கத்திலும், பின்னர் பிரித்தானியக் காலனி நாடாகவும் இருந்து, 1956 முதல் சுதந்திர நாடாகியது. வடக்கு சூடான் பகுதியில், அராபியர்களின் வழித்தோன்றல்களும், நுக்பியர்களும் தெற்கு சூடான் பகுதியில் கருப்பர் இன மக்களும், இயற்கை வழிபாட்டுப் பழங்குடியினரும் வசிக்கின்றனர். வடக்கே இஸ்லாம் மார்க்கமும், தெற்கே கிறித்துவ மார்க்கமும் ஆளுமை கொண்ட நாடு சூடான். வடக்குக்கும், தெற்குக்கும் இடையே மூண்ட மோதல்களால், 1956 முதல் 1972



படிப்பகம்

வரை முதல் உள்நாட்டுப் போரும் மீண்டும் 83 இல் இரண்டாம் உள்நாட்டுப் போரும் மூண்டன.

1990இல், திடீர்ப் புரட்சியை நடத்தி குடியரசுத் தலைவராக முடிசூட்டிக் கொண்ட இராணுவத் தளபதி உமல் அல் பசீர் இன்று வரையிலும், அங்கே சர்வாதிகார ஆட்சி நடாத்தி வருகிறார். எண்ணெய் வளம் மிக்க தெற்கு சூடானில், தொடர் இராணுவத் தாக்குதல்களும், இனப் படு கொலைகளும் தாராளமாகவே சூடான் அரசால் நடத்தப்பட்டு இலட்சக்கணக்கான மக்கள் படுகொலைக்கு உள்ளாயினர். சூடான் அரசுக்கு, 87விழுக்காடு ஆயுதங்களை, செஞ்சீனா வாரி வழங்க ரஷ்யாவும் தன் பங்குக்கு, 8விழுக்காடு ஆயுதங்களைத் தந்தது. இதெல்லாம் எதற்காக...? சூடானின் எண்ணெய் வளத்தை தம்வசம் ஆக்க என்பது இதற்கான இலகுவான விடை. இதனை எதிர்த்து ஒலித்த தெற்கு சூடான் மக்களின் குரல் மெள்ள, மெள்ள போராட்ட வடிவமாகி பின்னர் விடுதலைக் குரலானது. தெற்கு சூடான் பிராந்தியத்தில் சூடான் இராணுவத்தில் பணி ஆற்றி, அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற ஜான் கராங் என்பவர், தென்சூடான் மக்கள் விடுதலைப் படையை ஆரம்பித்து அதன் தலைவர் ஆனார். 20 வருடங்களுக்கும் அதிக காலம் தொடர்ந்த சிவில் யுத்தம் தெற்கு சூடானின் 15 லட்சம் மக்களை பலி வாங்கியது. வட-தென் சூடான்களுக்கு இடையே ஏற்பட்ட உச்சப் போரை அடுத்து அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் விதித்த பொருளாதாரத் தடை உள்ளிட்ட அழுத்தங்கள் பெரும் பாதிப்பை இரண்டு பகுதி மக்களுக்கும் ஏற்படுத்தின. இதன் வெளிப்பாடு சூடான் அரசையும், தெற்கு சூடான் மக்கள் விடுதலை இயக்கத்தையும் நய்வாசா என்கின்ற அமைதி உடன்படிக்கையை செய்ய வைத்தன. தெற்கு சூடான், தனி நாடாகப் பிரிந்து செல்வதா...? அல்லது சூடான் குடியரசிலேயே நீடிப்பதா...? என்பதை, 2011 ஆம் ஆண்டு, ஜனவரியில், பொது வாக்கெடுப் பொன்றின் மூலம் தீர்மானிப்பது என்று, இந்த நய்வாசா ஒப்பந்தத்தில் முடிவு செய்யப்பட்டது. இந்த சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு, ஒத்துழைப்புத் தருமாறு, அமெரிக்கத் தலைவர் பாரக் ஒபாமா, சாட், லிபியா, கென்யா, உகாண்டா, தென் ஆபிரிக்கா, எதியோப்பியா, நைஜீரியா, ருவாண்டா ஆகிய நாடுகளின் அரசுகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்;. திட்டமிட்ட வாறு வாக்குப்பதிவை நடத்தாவிடில், சூடான் நாட்டின் மீதான பொருளாதார முற்றுகையை அமெரிக்கா தீவிரப்படுத்தும் என்றும் வாக்குப்பதிவு திட்டமிட்டபடி சரியாக நடத்ததப்பட்டு, அதன் முடிவு

அமுல்படுத்தப்பட்டால் மட்டுமே பயங்கரவாத நாடு என முத்திரை குத்தப்பட்டு சூடான் மீது விதிக்கப்பட்ட தடைகள் நீக்கப்படும் எனவும் அறிவித்தது ஏகாதிபத்தியம். சூடான் இராணுவமும் அரசு ஏவிய ஆயுதக் குழுவினரும் நடத்திய படுகொலைகளால், வீடு, வாசல் இழந்து, வடக்கு சூடானில் தலைநகர் கர்டோமைச் சுற்றிலும் உள்ள முகாம்களில் மட்டும், ஏறத்தாழ இருபது இலட்சம் தென் சூடான் வாசிகள் அகதிகளாகத் தஞ்சம் புகுந்து இருந்தனர்.துன்பத்தில் துடிதுடித்த அந்த மக்களும், இந்த வாக்குப்பதிவில் பங்கு ஏற்க உரிமை கோரியபோது, முதலில் மறுத்த சூடான் அரசு, பின்னர் வேறு வழி இன்றி அதற்கும் ஒப்புக் கொண்டது. உகாண்டாவிலும், கென்யாவிலும் அகதிகளாக இருந்தவர்களும், தங்கள் தாயகத்துக்குத் திரும்பி வந்து வாக்கு அளித்தனர்.

2011 ஜனவரி 9 ஆம் தேதி முதல், 15 ஆம் தேதி வரையிலும், ஆறு நாள்கள் பொது வாக்குப்பதிவு நடைபெற்றது. தெற்கு சூடானின் மக்கள் தொகையில், அறுபது விழுக்காட்டினர் அந்த வாக்குப்பதிவில் பங்கு ஏற்க வேண்டும்; அதில் 50 விழுக்காட்டுக்கும் அதிகமானோர் தருகின்ற தீர்ப்பு எதுவாயினும் அதனை ஏற்பது என சூடான் அரசும், விடுதலை இயக்கமும் ஒப்புக் கொண்டு இருந்தன. ஆனால், வாக்குப்பதிவில் பங்கு ஏற்ற 97 விழுக்காட்டினருள், 99 விழுக்காட்டினர், தெற்கு சூடான் தனி நாடாக அமைவதற்கு ஆதரவு அளித்தனர். 80 விழுக்காடு எண்ணெய்க் கிணறுகள் உள்ள தெற்கு சூடானின் எண்ணெய் வளத்தை வடக்கு சூடானின் துறைமுகங்கள் வழியாகத்தான் அயல்நாடுகளுக்கு அனுப்ப முடியும். எனவே, தங்கள் துணை இல்லாமல், தனி நாடாக, தெற்கு சூடான் இயங்க முடியாது என்று, சூடான் அரசும், அதற்குத் துணையாக, அவர்களுக்கு ஆதரவான சில ஆபிரிக்க நாடுகளின் அதிபர்களும் கூறி வந்தது, உரிமைச் சம்மட்டியின் அடியால் நொறுங்கிப் போனது. இன்று தெற்கு சூடானின் சுதந்திர தேசக் கொடி பட்டொளி வீச, விடுதலை சங்கநாதம், திசையெங்கும் கேட்டாலும், அந்த நாட்டுக்குள் எந்த நேரமும் குமுறி வெடிக்கும் என்ற நிலையில உள்ள வேறு பிரச்சனைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

சூடானின் டர்ஃபுர் பிரதேசத்தில் வாழும் பழங்குடி மக்கள், சூடான் ஒன்றாக இருந்த போது ஆதிக்க இனத்தினரால் இலட்சக்கணக்கில் கொல்லப்பட்டிருந்தனர்.மனித இனத்தின் பேரழிவுகளுள் இதுவும் ஒன்று என, உலகத் தலைவர்களுள் பலர் அதைக் குறிப்பிட்டிருந்தனர்.அங்கும் ஒரு வாக்குப்பதிவை, 2012 ஆம் ஆண்டில் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வடக்கு,

www.padippakam.com

தெற்கு, மேற்கு டர்ஃபுர் பகுதிகளை உள்ளடக்கி, சுயாட்சி அதிகாரம் கொண்ட, ஒருங்கிணைந்த டர்ஃபுர் மாநிலம் அமைப்பதா...? அல்லது, தற்போது உள்ளவாறு, மூன்று மாநிலங்கள் என்ற நிலையே நீடிப்பதா...? என்பதை, அந்த வாக்குப்பதிவு முடிவு செய்யும். மேலும், வடக்கு சூடானுக்கும், தெற்கு சூடானுக்கும் நடுவே அமைந்து உள்ள அபெய் மாநிலம், யாருக்குச் சொந்தம் என்பதுவும் தீர்க்கப்படாத பிரச்சினையாக உள்ளது.

சூடானில் நடைபெற்ற ஒட்டுமொத்த இனப்படுகொலைக் குற்றங்களுக்காக இராணுவ ஆட்சியின் அதிபர் அல் பசீர், சர்வதேசக்குற்றவியல் நீதிமன்றக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டும் என்று, 2004 ஆம் ஆண்டு, ஐ.நா.வின் பாதுகாப்பு மன்றம், அதன்1564 ஆவது தீர்மானத்தின்படி முடிவு செய்தது. இதன் அடிப்படையில் 2008 ஆம் ஜூலை 14 ஆம் நாள் சர்வதேச நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம், அல் பசீரைக் கைது செய்யப் பிடி ஆணை பிறப்பிக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டு, ஜூலை மாதம், ஹேக் நகரில் உள்ள சர்வதேச நீதிமன்றம், அல் பசீரை, இனக்கொலை நடத்திய குற்றவாளி என அறிவித்தது. இதுதான் மேலெழுந்தவாரியாக பார்க்கப்படும் தென்சூடன் விடுதலை என்று சொல்லப்படும் வரலாறு. ஆனால் இங்கேயும் சர்வதேச அரசியல் வியூகத்தின் பின்னே, வல்லரசுகளின் வளத்திற்கான போட்டி மறைந்து கொள்கின்றது என்பது ஆழமான உண்மை.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, வடக்கே எகிப்திய நாகரீகம் உச்சத்தில் இருந்த அதே காலகட்டத்தில் இன்று சூடான் இருக்குமிடத்தில் 'நுபியா' என்ற ஆபிரிக்கப் பேரரசு இருந்தது. நுபியாவில் சிறப்புற்றிருந்த பண்டைய கறுப்பின நாகரீகம் அழிந்ததற்கு வடக்கேயிருந்து வந்த எகிப்தியப் படையெடுப்பும், பிற்காலத்தில் வந்த இஸ்லாமிய - அரேபியரின் படையெடுப்பும் முக்கிய காரணங்கள். 1500 ஆண்டுகளுக்கு முன்பு இஸ்லாமென்ற புதிய மதத்தைப் பரப்ப வந்த அரேபியர் சூடானின் வடபகுதியில் தங்கிவிட்டதுடன் உள்ளூர் நுபியப் பெண்களையும் மணம் முடித்தனர். இதனால்தான் இவர்களின் சந்ததியான சூடானிய அரேபியர்கள், பிற அரேபியரிடமிருந்து வித்தியாசமாக, கருநிற மேனியுடையவராகக் காணப்படுகின்றனர். பிற மத்திய கிழக்கு நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த வடக்குச் சூடானில் இஸ்லாமிய நாகரீகம் வளர தெற்குச் சூடானில் வாழ்ந்த



படிப்பகம்

ஆபிரிக்கப் பழங்குடியினர் தமது பண்டைய மதநம்பிக்கைகளை, மரபுப்பழக்கங்களை (இன்றுவரை) பின்பற்றி வருகின்றனர்.

19ம்நூற்றாண்டில் ஆங்கிலேயர்கள் சூடான் முழுவதையும் தமது காலனித்துவ ஆட்சியின் கீழ் கொண்டுவந்த போதுதான் இந்த வடக்கு-தெற்கு முரண்பாடு வலுவானதாகச் சொல்லப்படுகிறது. புதிய வகை ஆட்சிமுறை, நிர்வாக முறை என்பவற்றை அறிமுகப்படுத்திய ஆங்கிலேயர்கள் அதற்காக அரேபியச் சூடானியரை மட்டும்தான் பயிற்றுவித்தனர். இதன் வெளிப்பாடுதான் சுதந்திரத்தின் பின்பும் இவர்களின் கையில் ஆட்சியதிகாரம் கைமாறக் காரணமானது. ஆக ஆங்கிலேயரின் பிரித்தாளும் சூட்சி சூடானிலும் நடைமுறைப் படுத்தப்பட்டு அதுவே அங்கு வெடித்த பாரிய சிக்கல்களுக்கு காரணமானது. இஸ்லாமிய-அரேபியர்கள் ஆங்கிலேயரினால் செல்லப்பிள்ளைகள் போலவும், பழங்குடியின மக்கள் மாற்றான்தாய் பிள்ளைகள் போலவும் நடத்தப்பட்டனர். பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், நிர்வாக அலகுகள் எல்லாம் வடக்கே மட்டும் கட்டப்பட்டன. தெற்கின் தலைவிதி 'கடவுளின் பொறுப்பில்' விடப்பட்டது. கிறிஸ்தவ மதச்சபைகளிடம் பழங்குடியின மக்களை 'நாகரீகப் படுத்துதல்' என்ற பெயரிடப்பட்ட மதமாற்றப்பணி ஒப்படைக்கப் பட்டது. தெற்குச் சூடானிய மக்கள் வடக்கே வந்து வேலை செய்யவோ, குடியேறவோ அனுமதி மறுக்கப்பட்டது.

சுதந்திரத்தின் பின்பு, ஆங்கிலேயரிடமிருந்து ஆட்சிப் பொறுப்பைப் பெற்றுக்கொண்ட இஸ்லாமிய-அரேபிய அரசாங்கம் தனது பேரினவாத முகத்தை பிரித்தானியாவிற்கு எதிராகவும் கூட வெளிக்காட்ட ஆரம்பித்தது. தெற்கில் செயற்பட்ட கிறிஸ்தவ மதப் பிரச்சாரச் சபைகள் நாட்டைவிட்டு வெளியேறப் பணிக்கப்படன. தெற்குப்பகுதியில் பல்வேறு மொழிகள் பேசும் பழங்குடியின மக்கள் அரபு மொழியைப் பயில வேண்டுமெனக் கட்டாயப் படுத்தியது வடக்கின் அரசு. பழங்குடியினரின் தொடர் அதிருப்தி இவற்றின் மூலம், மேலும் பூதாகரமாகி வன்முறையாக வெடிக்க இராணுவத்தில் இருந்த தென்பகுதி வீரர்கள் அரசுக்கெதிரான கிளர்ச்சியை நடாத்தினர். குறுகிய காலமே நீடித்த இந்தக் கிளர்ச்சி ஆயிரக்கணக்கான மக்களைப் பலிகொண்டு இறுதியில் சமாதான ஒப்பந்தம் ஒன்றுடன் முடிவுற்றது. தெற்குப் பகுதிக்குப் (பெயரளவில்) பிரதேசச் சுயாட்சி வழங்கப்படுவதாக அறிவிக்கப் பட்டது..

இந்த நிலையில் திடீர்ச் சதிப் புரட்சி ஒன்றின் மூலம், 1969ல், கேர்ணல் நிமேரி என்பவர் வடக்கே ஆட்சிக்கு வந்தார். ஆரம்பகாலங்களில் இடதுசாரிக் கட்சிகளால் ஆதரிக்கப்பட்ட இவர் வலதுசாரி இஸ்லாமிய மதவாதக் கட்சிகளுடன் நெருங்கிய உறவு கொள்ளவே கம்யூனிஸ்ட் கட்சி சதிப் புரட்சிமூலம் ஆட்சியைக் கைப்பற்ற எத்தனித்தது. ஆனால் அயல்நாடுகளின் இராணுவ உதவியுடன் நிமேரி இந்தச் சதியை முறியடித்ததுடன் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களை கைது செய்து சிறையிலடைத்தார். சவூதி அரேபியாவுடனும் நெருங்கிய நட்புக்கொண்டிருந்த நிமேரியின் அரசு, மத அடிப்படைவாத சவூதியின் விண்ணப்பத்திற்கிணங்க, நாடுமுழுவதும் இஸ்லாமிய 'ஷரியா' சட்டத்தை அமுல்படுத்தியது. இது இஸ்லாமியரல்லாத தென்சூடானியர் மத்தியில் மேலும் எதிர்ப்பலைகளைத் தூண்டிவிடவே 'பொர்' என்ற நகரிலிருந்த இராணுவ முகாம் அரசுக்கெதிராகக் கலகம் செய்தது. இக்கலகத்தை அடக்கவென அரசால் அனுப்பப்பட்ட அதே 'பொர்'ஐப் பிறப்பிடமாகக் கொண்ட ஜோன் கரெங் என்ற இராணுவத் தளபதியும் கலக்காரர்களுடன் சேர்ந்து கொள்ளவே பிரச்சினை சூடுபிடித்தது. அந்தத் தளபதி ஜோன் கரெங் தலைமையில்தான் 'சூடான் மக்கள் விடுதலை இயக்கம்' (SPLM) உருவானது. இதன் இராணுவப் பிரிவான 'சூடான் மக்கள் விடுதலை இராணுவம்' (SPLA), அரசுக்கெதிரான ஆயுதப்போராட்டத்தைத் தீவிரப்படுத்தியது. போராட்டம் தொடங்கிச் சில வருடங்களிலேயே அரச படைகள், நகரங்களில் இருந்த முக்கிய இராணுவ முகாம்களுக்குள் முடங்கிக் கொள்ள அவர்களைச் சுற்றிவளைத்து நின்ற போராளிகள் நாட்டுப்புறங்களைக் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

SPLM ஆரம்ப காலங்களில் சோசலிசம் கதைத்தாலும், பின்னர் இப்போக்கைக் கைவிட்டு விட்டு அமெரிக்கக் கிறிஸ்தவ சபைகளுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டனர். இதனை மகிழ்வடன் ஏற்றுக் கொண்ட அமெரிக்க அரசு கென்யா வழியாக ஆயுதத் தளபாடங்களை இவர்களுக்கு அனுப்பியது. தெளிவற்ற அரசியற் கொள்கைகள், சித்தாந்தங்களை கொண்டிருந்த SPLM தென்சூடானிற்கு பிரிவினையா அல்லது சுயாட்சியா எனபதில் கூட குழம்பியிருந்தது. மேலும் ஜேன் கரெங்கின் 'டிங்கா' இனத்தவரே இயக்கத்தில் அதிகம் இருப்பதாகக் குற்றம் சாட்டி பிற இனங்களைச் சேர்ந்த ஆயுதக் குழுக்கள் ஆங்காங்கே உள் மோதல்களில் ஈடுபட்டன. ஜோன் கரெங்கின் தலைமையுடன் முரண்பட்ட நசீர் என்கின்ற குழு (குறிப்பிட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்) பிரிந்து சென்றது, SPLM இல் இடம்பெற்ற பெரிய பிளவாக அமைந்தது.

www.padippakam.com

இவர்களுக்கிடையிலான மோதலைப் பயன்படுத்திக்கொண்ட அரசபடைகள் பெருமளவு முனைப்புடன், பிரான்சிலிருந்து பெற்றுக் கொண்டதாகச் சொல்லப்படும் நவீன ஆயுதங்களுடன் படையெடுக்க SPLA கட்டுப்பாட்டில் இருந்த பல இடங்கள் மீண்டும் அரச படைகளால் கைப்பற்றப்பட்டன.

இந்த வேளையில்தான் தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் நடந்த மற்றொரு சதிப்புரட்சியின் மூலம் ஜெனரல் உமல் அல் பசீர் ஆட்சியைப்பிடித்து இராணுவ அரசை அமைத்ததுடன், சூடானை இஸ்லாமிய மத அடிப்படைவாதப் பாதையில் இட்டுச்சென்றார். முஸ்லீம் சகோதரத்துவக் கட்சி என்ற அமைப்பும், அதன் தலைவரான பரீஸில் (PARIS) சட்டக்கல்வி பயின்ற ஹசன் துரபியும் தான் சர்வாதிகாரி பஷீருக்கு ஆதரவாக் கொள்கை வகுத்துக் கொடுத்தவர்கள். ஓசமா பின் லாடனுக்கும் அவரது போராளிகளுக்கும் கூட சூடானில் அடைக்கலம் வழங்கப்பட்டது. இப்படியான சூடானின் போக்கில் வெறுப்படைந்ததாலேயே, அமெரிக்க அரசு, ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன் அந்நாட்டுக்கெதிரான பொருளாதாரத்தடைகளை விதித்ததும் அதன் பின்னரான சம்பவங்களும் ஆகும். 1998ம் ஆண்டு சூடானில் மலேரியாத் தடுப்பு மருந்து தயாரிக்கும் தொழிற்சாலையொன்றில் இரசாயன ஆயுதங்கள் தயாரிப்பதாகக் குற்றம் சாட்டி, அமெரிக்க அரசு ஏவுகணை வீசி அத்தொழிற்சாலையை அழித்தது, இதன் விளைவாக பத்தாயிரம் நோயாளிகள் மருந்து கிடைக்காமல் மலேரியாவால் இறந்து போனது என்பன பெரும் வேதனையான சம்பவங்கள். இந்தச் செய்தியை எந்தவொரு சர்வதேசச் செய்தி நிறுவனமும் கவனத்தில் எடுக்கவில்லை என்பது இதனைவிட வேதனையானது. இப்படியான சர்வதேச பின்னணிகளும் குறிப்பாக அமெரிக்கா, ரஷ்யா பிரான்ஸ் போன்ற ஆதிக்க நாடுகளின் வளத்திற்கான போட்டியே சூடான் மக்கள் அழிவுகளுக்கும் காரணம் என்பது வழைமபோல் அதிகம் அலசப்படாமலே உள்ளதும் இன்றைய சர்வதேச நியதி...

இன்று சுதந்திரம் கிடைத்து விட்டாலும், நீண்ட கால போரினாலும் வேறு பல காரணங்களாலும் ஏற்பட்டிருக்கும் வறுமை நிலை போக்கப்பட வேண்டும். அந்தநாட்டினுள் ஆதிக்கம் செலுத்த விழையும் மேற்கத்திய சக்திகளின் சதிவலையில் இருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும். இப்படி தெற்கு சூடான் மிகுந்த சவால்களை சந்திக்க வேண்டியிருக்கும்.

**06.08.2011**



படிப்பகம்

www.padippakam.com

# ருவாண்டா இனப்படுகொலையின்... சர்வதேசப் பின்னணி...

இருண்ட கண்டம் என புவியியலால் சொல்லப்படும் ஆபிரிக்க நிலப்பரப்பில் இடம்பிடித்துள்ள ருவாண்டா தேசத்தில் 1994இல் நிகழ்ந்த, இனப் படுகொலைகளை மனித குலத்தின் மற்றொரு கறுப்பு அத்தியாயம் என்று காறித் துப்புகிறது சரித்திரம். இனம் - மொழி - மதம் - நிலம் - ஆதிக்கம் - அதிகாரம் என பாகுபாடுகளை முன்வைத்து ஒரு இனம் மற்றொரு இனத்தை அழித்து ஒழிக்கும் கொடுமை, பகுத்தறிவு கொண்டதாக கூறிக் கொள்ளும் மனித இனத்தின் மிருகத்தன வெளிப்பாடே. நூறே நாட்களில் 8 லட்சம் உயிர்களை சவக்குழிக்கு அனுப்பியது, ருவாண்டா நாட்டில் நிகழ்ந்த இனவெறியாட்டம். 17 ஆண்டுகளின் பின்னர், இதற்கு காரணமான அப்போதைய இராணுவத் தளபதி அகஸ்டின் பிசிமுங் உள்ளிட்ட மனித மிருகங்களுக்கு, ஐ.நாவின் அனைத்துலக குற்றவியல் தீர்ப்பாயத்தில் 30 ஆண்டுகால சிறைத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது. உலகம் முழுவதும் அமோக வரவேற்பை பெற்றுள்ள இந்த வரலாற்று முக்கியத்துவ தீர்ப்பை வழங்கிய 3 பேர் அடங்கிய நீதிபதிகள் குழுவுக்கு தலைமை வகித்தவர் இலங்கையின் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி அசோக டிசில்வா. இந்த வேளையில் உலக அளவில் பரவிக் கிடக்கும் இனப்படுகொலை என்ற நச்சு சிந்தனையையும், ருவாண்டா கொடுமைகளையும் அதன் பின்னணியையும் பின்னோக்கிப் பார்ப்பது அவசியமானதே.

ஒரு இனத்தை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ, இனம் சார்ந்த ஒதுக்கல், மதவேற்றுமை அல்லது தேசிய வேற்றுமை போன்ற காரணங்களால் கொல்ல நினைப்பது அல்லது அழிப்பது என்பதே இனப் படுகொலை (Genocide) என வரையறுக்கப் பட்டுள்ளது. 1948 இல் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் சபை



படிப்பகம்

www.padippakam.com

இனப்படுகொலையை உலக அளவில் தடைசெய்யபட்ட, தண்டணைக்குரிய குற்றச் செயலாக சட்ட விதிகளை அமைத்து அறிவித்தது. இதன்கீழ் ஒரு இனத்தை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ, மேற்கூறிய காரணங்களால், உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ தொல்லைப்படுத்துவது, கொல்ல நினைப்பது அல்லது அழிப்பது, இனவேறுபாட்டைக் காரணங்காட்டி குழந்தை பிறப்பை தடுப்பது, குழந்தைகளை இடம் பெயரச் செய்வது, வேறு எவ்வகையிலாயினும் இனவேறுபாடு காட்டுவது போன்றவை குற்றச் செயல்களாக, குற்றங்களாக சர்வதேச தடைச்சட்டம் நிர்ணயித்துள்ளது. போலந்து நாட்டின் யூதச் சட்ட வல்லுநர் ரபேல் லெம்கின் (Raphael Lepkin) என்பவர்தான் இனப்படுகொலை என்னும் கருத்துருவுக்கு முதன் முதலில் சொல்வடிவம் கொடுத்தவராவார். தனது கருத்தாக்கத்துக்கு சட்ட வடிவத்தை அமுல்படுத்த பல வழிகளிலும் போராடிய, லெம்கினின் வெற்றிகரமான பிரச்சாரங்கள் 1948 ஆம் ஆண்டில் இனப்படுகொலை அனைத்துலகச் சட்டங்களின் கீழ் குற்றமாக்கப்படுவதற்கு வழிவகுத்தன. தொடர்ச்சியாக இனப்படுகொலை உலக அளவில் மிகப்பெரிய குற்றமாகவும், அதில் ஈடுபவர்களை தண்டிக்க அனைத்துலக குற்றவியல் நீதிமன்றமும் அமைக்கப்பட்டது. உலகின் மிகப்பெரிய இனப் படுகொலைகளாக 1905-இல் நமீபியா, 1915-இல் ஆர்மேனியா, 1932-இல் உக்ரைன், 1975-இல் கௌத்தமாலா, 1994-இல் ருவாண்டா, 1995 இல் - போஸ்னியா என நீண்ட பட்டியலை வரலாறு அவமானத்துடன் பதிவு செய்துள்ளது. அந்தக் கறுப்பு பட்டியலில் உள்ள ருவாண்ட இனப் படுகொலை தொடர்பாகத்தான் கடந்த ஜுன் 6 ஆம் நாள் அந்நாட்டு முன்னாள் ராணுவத் தளபதிக்கு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து ஐநாவின் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ருவாண்டா இனப்படுகொலைக்கு என்ன காரணம்...? இதற்கு காரணமானவர்கள் யார்...? இதன் பின்னணியில் செயல்பட்டவர்கள் யார்...? இது தொடர்பாக சர்வதேச சமூகம் கண்களை மூடிக் கொண்டது ஏன்...? காலம் கடந்து தீர்ப்பளிக்க என்ன காரணம்...? ருவாண்டா பிரச்சினைக்கு கிடைத்துள்ள தீர்ப்பின் எதிரொலி என்னவாக இருக்கும்...? இப்படி ஏராளமான கேள்விகள்...

ஆபிரிக்க கண்டத்தின் நடுப்பகுதியில் அமைந்துள்ள ருவாண்டா குடியரசின் எல்லைகளில் தான்சான்யா, உகாண்டா, புருண்டி மற்றும் கொங்கோ ஆகிய நாடுகள் உள்ளன. ஐரோப்பாவின் மிகச் சிறிய நாடுகளில் ஒன்றான பெல்ஜியத்தைப் போல 3இல் ஒரு மடங்கு



படிப்பகம்

அளவு மட்டுமே பரப்பளவை கொண்ட ருவாண்டா 1919 முதல் 1962 வரை, பெல்ஜியத்தின் காலனி ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தது. பெரும்பான்மை இனமாக ஹூட்டு இனத்தவர்களும், அதற்கடுத்த சிறுபான்மை இன மக்களாக துட்சி என்ற இனமக்களும் இங்கு வசித்து வந்தனர். விவசாயிகளான ஹூட்டு இனத்தவர்கள் அந்த நாட்டின் மண்ணின் மைந்தர்கள் எனவும் துட்சி இனத்தைச் சேர்ந்தவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக ருவாண்டாவில் குடியேறியவர்கள் எனவும் சொல்லப்படுகிறது. இரு தரப்பிலும் இருந்த மாறுபட்ட மொழி, கலை, கலாசாரம் என பல விடயங்கள் அவர்களிடையே சகஜமாகப் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இரு இனத்தவர்களும் கலப்பு மணம் கூட முடித்து பரஸ்பர ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர். கால ஓட்டம் அல்லது மாற்றம் துட்சிகளை, நிலங்களின் உரிமையாளர்களாகவும் ஹூட்டு இனத்தவர்களை அந்த நிலங்களின் விவசாயக் கூலிகளாளகவும் மாற்றியது. சிறுபான்மை இனச் சமூகத்தினர் பண்ணை உரிமையாளர்களாகவும், பெரும் எண்ணிக்கை கொண்ட ஹூட்டு இனத்தவர்கள் அவர்களின் சேவகர்களாகவும் மாறிப்போனார்கள். இந்த இடைவெளியே முதன்முதலில் இருதரப்பையும் பிரிக்க ஆரம்பித்ததாகச் சொல்லப்படுகிறது.

ஹூட்டு நாகரீகம் தொடங்கி முன்னூறு வருடங்களுக்குப் பின்னரே, வடக்கே இருந்து மாடுகளை மேய்த்துக் கொண்டு வந்தனர், துட்சிகள் என்ற வந்தேறுகுடிகள். துட்சிகள் இனச் சமுதாயத்தில் மாடுகள் வைத்திருப்பது என்பது செல்வச் செழிப்பின் அடையாளம் எனவும் ஒருவர் எத்தனை மாடுகள் வைத்திருக்கிறார் என்பதை வைத்துதான், அவர் பணக்காரரா இல்லையா என்பது தீர்மானிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கலாச்சாரம் இன்றும் கூட (துட்சி இனக் குடும்பத்தை சேர்ந்த) கென்யாவின் மாசாய் இன மக்கள் மத்தியில் நிலவுகின்றது. தமது மாடுகளுக்கு மேய்ச்சல் நிலம் தேடி ருவண்டா மண்ணிற்கு வந்த துட்சிகளுக்கும் அங்கே விவசாயம் செய்து வந்த ஹூட்டுகளுக்கும் இடையே நிலத்திற்கான போட்டி ஏற்பட்டு அது பொருளாதார முரண்பாடுகளை (இன முரண்பாடுகள் அல்ல) தோற்றுவித்தது. வேறுபாடான பொருளாதார நலன்கள் இருந்த போதிலும், காலப்போக்கில் துட்சிகள், தம்மை விட நாகரீகத்தில் மேலோங்கியிருந்த ஹூட்டுகளின் மொழியையும், மதத்தையும் மட்டுமல்ல கலாச்சாரத்தையும் தமதாக்கிக் கொள்ள அதுவே துட்சி இன மேலாதிக்கத்திற்கு ஆதாரமாக அமைந்தது.

அதிகாரவெறி கொண்டவர்கள் எனப்படும் துட்சிகள் மெள்ள, மெள்ள ருவாண்டாவின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினர்.

www.padippakam.com

ஹுட்டுகள் விவசாயத்தையும் தமது பொருளாதார நலனையுமே பெரியதாக மதித்ததால், அவர்களைத் தமது ஆட்சிக்கு கீழ்ப்படிய வைப்பது, புதிய ஆட்சியாளருக்கு இலகுவாக அமைந்தது. இதன் பிரதிபலிப்பு ஹுட்டுகளை உழைக்கும் வர்க்கமாகவும், துட்சிகளை ஆளும் வர்க்கமாகவும் மாற்றியது. தேச நிர்வாகத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன, அதிகார வர்க்கம் முழுவதும் துட்சிகளைக் கொண்டிருந்தது. தேசப் பாதுகாப்பும் அவர்கள் வசமே இருந்தது. விவசாயம் சார்ந்த உற்பத்தி உறவுகளில் பண்ணையடிமை முறை புகுத்தப்பட்டது. துட்சி பண்ணையார்களின் மாடுகளுக்கு மேய்ச்சல் நிலம் தேவைப்பட்டபோது, ஹுட்டு விவசாயிகளிடம் நிலங்களைப் பெற்றுக்கொண்டு, பண்டமாற்றாக சில மாடுகளைக் கொடுத்தனர். அப்படி கொடுக்கப்படும் மாடுகளுக்கு பிறக்கும் கன்றுக் குட்டிகளை துட்சி உரிமையாளருக்கே கொடுத்து விட வேண்டுமாம்.

இந்த வேளையில் தான் 1919ம் ஆண்டு ருவாண்டாவின் விவசாய, பண்ணை வழங்களை சுரண்ட, ஐரோப்பிய ஆதிக்க நாடுகளில் ஒன்றான பெல்ஜியம், ருவாண்டாவுக்குள் நுழையத் தொடங்கி ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது. அங்கு மேட்டுக்குடிகளாய் இருந்த பண்ணை உரிமையாளர்கள் இவர்களின் வலைக்குள் கொண்டு வரப்பட்டனர். அவர்களுக்கு (துட்சி இனத்தவர்கள்) ஆங்கில உயர் தரக் கல்வி, வெளிநாட்டுத் தொடர்புகள் போன்றவை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு அவர்கள் மட்டும்தான் ருவாண்டா நாட்டின் ஆளுநர், மாவட்ட ஆட்சியர்கள், போன்ற அரச உயர் பதவிகளில் அமர முடியும் என்கின்ற நிலை ஏற்படுத்தப்பட்டது. முழுமையாக பெல்ஜியத்தின் காலனி ஆதிக்கத்துக்குள் ருவாண்டா கொண்டு வரப்பட்ட போது துட்சி இனத்தவர்கள் அரசப் பிரதிநிதிகளாகவும், ஹுட்டு இனமக்கள் சாதாரண குடிமக்களாகவும் நடத்தப்பட்டனர். ஆதிக்க சக்திகளின் இந்தப் பாகுபாடுதான் இரு இனத்தவர்களையும் வெகு தொலைவுக்கு பிரித்தது.

தனது முப்பது வருட காலனிய ஆட்சிக் காலத்தில் ஐரோப்பிய மயப்பட்ட கல்வியையும், நிர்வாகத்தையும் அறிமுகப்படுத்திய போதுதான் இனவாதக் கருத்துக்கள் துட்சி, ஹுட்டு இன மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டதாக் கருதப்படுகிறது. இன ரீதியான பாகுபாடும் ஆதிக்க சக்திகளின் அதிகாரப்போக்கும் ஹுட்டு இனத்தவர்களிடையே கொந்தளிப்பை உருவாக்கியது. இரண்டாம் தரக் குடிமக்களாய் நடத்தப்பட்ட ஹுட்டு மக்கள் குழுக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தின. அவர்களின் எதிர்ப்பும், உரிமைப் போர்களும் ஐரோப்பிய நாடுகளின் துணையுடன் ஒடுக்கப்பட,



படிப்பகம்

www.padippakam.com

இதனை எதிர்ப்பதற்கு ஹூட்டு இன மக்களின் கைகளில் ஆயுதங்கள் முளைக்கத் தொடங்கின. 1956 இல் அங்கே நிகழ்ந்த புரட்சிப் போராட்டத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். இதன் தொடர்ச்சியாய் உருவாகிய பல்வேறு போராட்டங்களின் பின்னர் 1959 இல் தம்மிடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரத்தையும், தம்முடைய விளை நிலங்களையும் துட்சி இனத்தவர்களிடமிருந்து ஹூட்டுகள் கைப்பற்றத் தொடங்கினர். இதனால் துட்சி இனத்தின் பெரும்பாலானவர்கள் அண்டை நாடுகளுக்கு ஓடி அங்கிருந்து கொண்டு ஹூட்டு இன மக்களை அடக்கி ஒடுக்குவதற்காக பல்வேறு அமைப்புகளைக் கட்டமைத்தனர். இதில் முக்கியமானது ஆர்பிஎப் (RPF) எனும் ருவாண்டா தேசபக்திமான்கள் படை என்ற அமைப்பாகும். அந்த அமைப்பில் இருந்தவர்களுக்கு ஆயுதப்பயிற்சியும் அளிக்கப்பட்டது.

1962இல் பெல்ஜியத்தின் காலனித்துவத்திலிருந்து விடுதலை பெற்ற ருவாண்டா, ஹூட்டு இன மக்களின் குடியரசு நாடாக மாறியது. அந்த வேளையில், நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 14 வீதமான துட்சிகள், பல்கலைக்கழகங்களில் மூன்றில் இரண்டு பங்கு மாணவர்களாக இருந்தனர். சுதந்திரத்திற்குப் பின்னர் நடந்த பொதுத் தேர்தலில், பெரும்பான்மை ஹூட்டு மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்ற அரசாங்கம் கல்வித் தரப்படுத்தலைக் கொண்டு வந்து, இனப் பிரச்சினைக்கு மேலும் தூபமிட்டது. மெல்ல மெல்ல நாட்டின் முழு அதிகாரமும் துட்சிகளின் கைகளில் இருந்து பறிக்கப்பட்டது.

பேரினவாத அரசாங்கம், ஹூட்டுகளுக்கு அதிக சலுகைகள் வழங்கி, துட்சிகளை ஓரம்கட்ட துட்சியினத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகள், இனப்பிரச்சினையைத் தீர்க்குமாறு அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதும், ஹூட்டு இனவாத சக்திகளின் எதிர்ப்பின் காரணமாக ஒப்பந்தங்கள் முறிவதும் நடந்தேறின. ஒவ்வொரு தடவையும் துட்சிகள் அகிம்சை வழியில் எதிர்ப்புக் காட்டிய போதெல்லாம், இனக்கலவரங்கள் தூண்டி விடப்பட்டன. பெருமளவு துட்சி மக்கள் அகதிகளாக அயல் நாடுகளில் புகலிடம் கோரினர். ஆயுத போராட்டத்தின் மூலமே தமது உரிமைகளைப் பெற முடியும் என எண்ணிய துட்சி இளைஞர்கள், RPF தலைமையில் கொரில்லாத் தாக்குதல்களை நடத்தினர். ருவாண்டா வின் தேசிய இராணுவம் பெரும்பான்மை ஹூட்டு இனத்தவரின் ஆதிக்கத்தில் இருந்ததால், இந்தத் தாக்குதல்களை எதிர்க்க இராணுவம் நேரடியாக



படிப்பகம்

www.padippakam.com

களம் இறக்கப்பட்டு துட்சி இன மக்கள் நேரடியாகவே ஹூட்டு அரச படைகளால் வேட்டையாடிக் கொல்லப்பட்டனர்.

1994இல் பதவியில் இருந்த ருவாண்டா அதிபர் ஹபியாரிமனா வெளிநாட்டு வற்புறுத்தல்கள் காரணமாக, அமைதிப் பேச்சு வார்த்தைக்கும், அதிகாரப் பரவலாக்கத்திற்கும் சம்மதம் தெரிவித்தார். ஒரு ஹூட்டு இன மிதவாதியாக சித்தரிக்கப்பட்டுருந்த அதிபர் ஹபியாரிமனா, 1994ஆம் ஆண்டு ஏப்ரல் 6ஆம் தேதி, தான்சானியாவில் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு நாடு திரும்பிக் கொண்டிருந்தபோது அவர் பயணம் செய்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. இந்த ஏவுகணைத்தாக்குதலை நடாத்தியது யார் என்ற மர்மம் இன்று வரை விலகவில்லை என்பது குறிப்பிடத் தக்கபது. அதிபர் ஹபியாரிமனாவின் மரணத்திற்குப் பின்னர் ருவாண்டா நாட்டில் இனவெறி உருத்திர தாண்டவம் ஆடியது. 'துட்சி கிளர்ச்சியாளர்கள் எமது அதிபரை படுகொலை செய்து விட்டார்கள்' என்ற அடிப்படையில் செய்தி ஹூட்டு இன மக்கள் மத்தியில் காட்டுத்தீ போலப் பரவியது. அதுவே முழு துட்சி இனத்தவருக்கும் எதிரான கொலை வெறியாக உருவெடுத்தது. நாடு முழுவதும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டன. ஹூட்டு இனவெறியர்கள் நடத்திய சோதனையின் போது மறிக்கப்பட்ட வாகனங்களில் இருந்து துட்சி இனத்தைச் சேர்ந்தவர்களைத் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டனர். அடையாள அட்டையில், இனம்: துட்சி என்று குறிப்பிட்டிருப்பதே அவர்களைக் காட்டிக் கொடுக்க போதுமானதாக இருந்தது. (அடையாள அட்டையில் இனத்தைக் குறிப்பிடும் வழக்கம் பெல்ஜிய கொலனி ஆட்சியாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது) பெண்கள், குழந்தைகள் என்று வேறுபடுத்தாது துட்சி என்ற காரணத்திற்காகவே கொலை செய்யப்பட்டனர். சாதாரண ஹூட்டு இன மக்களும் கொலை வெறியாட்டத்தில் பங்குபெறுமாறு ஊக்குவிக்கப்பட்டு, அவர் களுக்கு சன்மானங்கள் வழங்கப்பட்டன. ஒரு கொலையைச் செய்தவனுக்கு, இன்னும், இன்னும் கொலை செய்ய வேண்டும் என்ற வெறி ஏற்பட்டது. இன நல்லிணக்கத்தை விரும்பிய, மிதவாத ஹூட்டுகளும் கொல்லப்பட்டனர்.

இன்று விசாரணை நடாத்தித் தண்டனை வழங்கிய ஐநா அமைப்பு சுமார் 10 இலட்சம் பேர் வரையான துட்சி இன மக்கள் படுகொலை செய்யப்படுவதை அன்று கைகட்டி நின்று வேடிக்கை பார்த்தது. ஹூட்டு இனவெறி இராணுவத்துக்கு பிரான்சும், துட்சி கிளர்ச்சிப் படைக்கு அமெரிக்காவும் ஆதரவாக நின்றன. பெரும் போராட்டம், பெரும் அழிவுகளுக்கு பின்னர் துட்சி இனக்



படிப்பகம்

கிளர்ச்சிப் படை ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற, பெரும்பான்மை ஹூட்டு இன மக்களில் கூடுதலானவர்கள் அருகாமை நாடான கொங்கோவிற்கு அகதிகளாகச் சென்றனர்; அங்கு இன்றும் இருக்கும் முகாம்களில் அவர்களில் பலர் அவதியுடன் வாழ்கிறார்கள். அமெரிக்காவின் ஆசியுடனான ருவாண்டாவின் துட்சி இன அரசு இன்று ஆபிரிக்காவின் இஸ்ரேலாக மாறி, கொங்கோ முதலான அண்டைநாடுகளை மிரட்டும் அமெரிக்காவின் கூலிப் படையாகவும் வளர்ந்து வருகிறது.

அன்றைய கிளர்ச்சியின் போது மூன்றே மாதங்களுக்குள் எட்டு லட்சம் முதல், ஒரு மில்லியன் வரையான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். "இரண்டாம் உலகப்போரில் நடந்த யூத இன அழிப்பிற்குப் பின்னர், இன்று உலகம் ஆபிரிக்காவின் மாபெரும் இனப்படுகொலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறது" என்று நெஞ்சை நெகிழ வைக்கும் உருக்கமான காட்சிகளை நேரடியாக சர்வதேச தொலைக்காட்சிகள் ஒளிபரப்பியும், உலகின் மழுங்கிப்போன மனச்சாட்சிகள் அன்று மௌனமே காத்தன.

ஆபிரிக்க நாடுகளில் பலதை ஆக்கிரமித்து தனது கொலணியாக்கியிருந்த பிரான்சின், ஆபிரிக்க ஆதிக்கத்தைத் துடைத்தெறியும் ஒருமறைமுகப் போராகவே அன்றைய ருவண்டாவின் துட்சி கிளர்சிப் படைக்கு அமெரிக்கா வழங்கிய ஆதரவு கருதப்படுகிறது. இன்றும் தொடரும் இந்த ஐரோபிய, அமெரிக்க பனிப்போர்தான் அன்றைய ருவண்டா அழிவுக்குக் காரணம் என்பதை எந்த விசாரணையும் வெளிக்கொணராது என்பதுதான் கவலை கலந்த யதார்த்தம்.

ருவாண்டா இனப் படுகொலைக்கு காரணம் உண்மையிலேயே இனப் பிரச்சினை தானா? ருவாண்டா மக்கள், காலங்காலமாக ஹூட்டு, துட்சி என்ற இன அடிப்படையில் பிரிந்து வாழ்ந்து வந்தனரா? இது ஆயிரம் வருடகால இனப்பகையா? ஊடகங்கள் வழி சொல்லப்படுவதை நம்பினால், மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கு ஆம் என்றுதான் பதில் வரும். இந்தக் கருத்தியல் எவ்வளவு தூரம் சரி என்று, எந்த சமூக விஞ்ஞானியும் ஆராயவில்லை. இனம் (Ethnicity. Race) என்ற சொல்லே ஒரு ஐரோப்பியக் கண்டுபிடிப்பாகும் என்பதும் முன்னிலைப் படுத்தப் படுவதில்லை.

இந்நிலையில்தான் ருவாண்டாவில் நடந்த இனப்படுகொலை தொடர்பாக விசாரணை நடாத்திய இலங்கை உச்சநீதிமன்றத்தின்

முன்னாள் தலைமை நீதிபதி அசோக டிசில்வாவை தலைவராகக் கொண்ட ஐ.நா. சர்வதேச போர்க்குற்ற நடுவர் மன்றக்குழு, ருவண்டாவின் முன்னாள் ஹூட்டு ராணுவத் தளபதி அகஸ்டின் பிஸிமுங்குவுக்கு 30 வருட சிறைத் தண்டனை விதித்துள்ளது. மேலும் பிரான்காய்ஸ் சேவியர் சுவானமயி மற்றும் இன்னொசன்ட் சகாஹூடு ஆகியோருக்கு தலா 20 ஆண்டு கால சிறைத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது. கலவரத்தின்போது காவல்துறை தலைவராக இருந்த அகஸ்டின் டின்டிலியிமனா என்பவரும் குற்றவாளி என்று நடுவர் மன்றம் அறிவித்து, அவர் ஏற்கனவே சிறையில் நீண்ட காலம் இருந்ததால் அவரை விடுவிக்க உத்தரவிடப் பட்டுள்ளது. 100 நாட்களுக்கு மேல் நடந்த இந்த வழக்கை விசாரித்த நீதிபதி அசோக டிசில்வா மற்றும் தக்ரிட் ஹிக்மதசியோன் கி பார்க் ஆகியோர் அடங்கிய நடுவர் மன்றம் கிட்டத்தட்ட 250 சாட்சியங்களை விசாரித்திருந்தது. 2002ம் ஆண்டு அங்கோலாவில் கைது செய்யப்பட்ட பிஸிமுங்கு இனப்படு கொலையை நேரில் நின்று நடத்தியவர் எனவும், ஒரு கல்வி நிறுவனத்தில் ஆயிரக்கணக்கான துட்சி இனத்தவரை நிற்க வைத்து அத்தனை பேரையும் கொன்று குவித்தவர் எனவும் சொல்லப்பட்டது. மேலும் ருவாண்டா பிரதமர் அகாதே விலிங்கியிமானாவையும் கொல்ல பிஸிமுங்கு உத்தர விட்டார். அப்போது பிரதமரைப் பாதுகாக்க ஐ.நா. அனுப்பியிருந்த படையில் இடம் பெற்றிருந்த ஏழு பெல்ஜியம் வீரர்கள் படுகொலை செய்யப்பட்டதும் இதையடுத்து ருவாண்டாவிலிருந்து ஐ.நா. அமைதி காக்கும் படை வெளியேறியது என்பதும் குறிப்பிடத்தக்கது. தீர்ப்பு வழங்கி உள்ள நீதிபதிகள் குழுவின் தலைவர் அசோக டிசில்வா இலங்கையில் பல்வேறு சர்ச்சைகளுக்கு உள்ளானவர் என்பதும் இலங்கையில் இடம்பெற்றதும் இனப் படுகொலையே எனவும் அதுவும் சர்வதேச தீர்ப்பாயத்தில் விசாரிக்கப்பட வேண்டும் என்று எழுப்பப்படும் கோரிக்கைகளும் கவனிக்கத்தக்கது. அம்புகள் மட்டுமல்ல எய்தவர்களும் தண்டனைக் குரியவர்களே என்பது எங்கும் எடுத்துக் கொள்ளப் படுவதில்லை என்பது வேதனை. எய்தவர்களிடமே அம்புகளுக்கு தண்டனை வழங்கக் கோருவது வேடிக்கை.

இனக் கொலைகளை செய்தவர்களுக்கு தண்டனை வழங்கப் படுவதால் இழப்புக்கு உள்ளான பல லட்சம் உயிர்கள் மீண்டும் வரப்போவதில்லை. உடல் உறுப்புகளையும், உடைமைகளையும், உறவுகளையும் இழந்து தவிப்போருக்கு இத் தண்டனை நிவாரணம் அளித்துவிடப் போவதில்லை. இனி வரும் காலங்களில் உலகத்தின்

www.padippakam.com

பிற பாகங்களில் இதுபோன்ற மிகமோசமான கொடுமைகள் நடைபெறாமல் இருப்பதற்கும் இப்படியான அழிவுகளை மேற்குலக நாடுகள் அரங்கேற்றாமல் இருப்பதற்கும் இது ஓர் எச்சரிக்கை மணி என நம்பவோமாக.

நதிக்கரையில் பிறந்ததாக கூறப்படும் மனித நாகரிகத்தில், இனியாவது இனப்படுகொலை போன்ற காட்டுமிராண்டித்தனமான அழுக்குகள் நீட்சியடையாமல் இருக்கட்டும்.

**29.07.2011**



படிப்பகம்

# தண்டனைக்காக காத்திருக்கும் புலிகளின் முக்கிய நிதி வழங்குனர்...

இலங்கையில் பிறந்து, அமெரிக்காவில் பெரும் செல்வந்தராய் வலம் வந்த 53 வயதான தொழிலதிபர் ராஜரத்னத்திற்கு 20 ஆண்டு கால வரை எனப்படும் சிறைவாசம் தயாராக இருக்கிறது. இந்த தண்டனை வழங்கப்டுவதற்கான திகதி ஜூலை 29 என நிர்ணயித்துள்ளது நியூயோர்க் நீதிமன்றம். 1957இல் இலங்கையின் வடமராட்சியில் பிறந்த ராஜரத்தினம் ஆரம்பக் கல்வியை கொழும்பிலும், கல்லூரிப் படிப்பை பிரிட்டனிலும், மேல்படிப்பை அமெரிக்காவிலும் படித்து முடித்தவர்.

அவரின் தந்தையார் ஜெ.எம்.ராஜரத்னத்தினம் இலங்கையில் வர்த்தக, அரசியல் பின்னணி கொண்டவர். இலங்கை நாடாளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகராக இருந்த கே.பி. ரத்னாயக்கா, இவரது கல்லூரிக் கால நண்பர் ஆகும். இதன் பின்னணியில் 1970ம் ஆண்டு பிரபல சிங்கர் (SINGER) நிறுவனத்தின் ஏற்றுமதிப் பொறுப்பாளராகிய இவரது தந்தை பின்னர் இந்த நிறுவன அமெரிக்கப் பிரிவின் தலைமையாளராகி, அங்கேயே பலகாலம் தங்கி தனது வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரித்துக் கொண்டார். இந்தப்பின்னணியிலே அமெரிக்காவில் தனது பட்டப்படிப்பை முடித்த ராஜ்ராஜரட்ணம் தனது தந்தையின் செல்வாக்கிலேயே அமெரிக்க நிதிநிறுவனம் ஒன்றின் முக்கியப் பொறுப்பில் 11 ஆண்டுகளுக்கும் மேல் பணியாற்றி, பின்னர் அதிலிருந்து வெளியேறி 1997 இல் கலியோன் என்ற பங்குச் சந்தை முதலீட்டு நிறுவனத்தை சொந்தமாகவே ஆரம்பித்தார். இந்நிறுவனத்தின் தற்போதைய சொத்து மதிப்பு 5 பில்லியன் அமெரிக்க டாலர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க பங்குச் சந்தையில் முன்கூட்டியே தகவல்களை பெற்று, அதன் அடிப்படையில் பெரிய அளவில், வீழ்ச்சியுறும் நிறுவனங்களின் பங்குகளை வாங்கி பின்னர், கூடிய விலையில் விற்பதில் ராஜரத்தினம் மிகப்பெரிய கில்லாடி. பன்னாட்டு நிறுவனங்களின் உயர்மட்டத்திலுள்ளவர்களை நண்பர்களாக்கி, அவர்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களின் மூலம் அந்த நிறுவனங்களின் தகவல்களை பெற்று வந்தார் எனத் தெரிவிக்கப் படுகிறது. மேலும் பிரபல கம்பெனிகளின் பங்குகளை, சில தில்லு முல்லு வேலைகள் மூலமும் அதிக விலைக்கு விற்றும், குறைந்த விலைக்கு வாங்கியும் கோடிக்கணக்கில் லாபம் சம்பாதித்தார். பல வருடகால இந்தப் பங்குச்சந்தை சிறுக சிறுக வெளிச்சத்துக்கு வர அமெரிக்க பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றப் பிணையில் வெளிவந்தார்.

இவருக்கும், கோல்டுமேன் சாக்ஸ் என்ற நிறுவனத்தின் ரஜத் குப்தா என்கின்ற அமெரிக்க இந்தியருக்கும் இடையே நடந்த தொலைபேசி உரையாடலின் ஒலிப்பதிவு, இவர் மீதான மோசடி வழக்கிற்கு முக்கிய சாட்சியமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. மேலும் மொத்தம் 100 சாட்சிகள் இந்த வழக்கில் விசாரிக்கப் பட்டனர்.இவர்கள், தமது நிறுவனங்கள் பற்றிய தகவல்களை ராஜரத்னத்திற்கு தெரிவித்து அதற்காக அவரிடமிருந்து அதிகளவில் லஞ்சம் (அன்பளிப்பு) பெற்றுக்கொண்டதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டனர். இறுதியில் நியூயோர்க் நீதிமன்ற நீதிபதி ரிச்சர்ட் ஹோல்வெல் தலைமையிலான நீதிவான்கள் குழு ராஜரத்தினம் மீதான குற்றச்சாட்டு நிரூபணமாகியுள்ளதாகக் கூறி தண்டனை பற்றி ஜூலை 29ம் தேதி அறிவிக்கப்படும் என்று அறிவித்துள்ளனர். ராஜரத்தினம் ஜூலை 29ம் தேதி வரை, பிணையில் செல்ல 10 கோடி அமெரிக்க டாலர் செலுத்த வேண்டும் என உத்தரவிட்ட நீதிபதிகள் அவரது நடவடிக்கைய்ய கண்காணிப்பதற்காக, உடலில் மின்னணு கண்காணிப்பு கருவியை பொருத்தவும் உத்தர விட்டனர்.

2009-ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட ராஜரத்தினத்தின் நடவடிக்கைகளை 2008-ஆம் ஆண்டு முதல் கண்காணித்து வந்ததாகவும் பல மாதங்களாக, அவரது தொலைபேசி உரையாடலை ஒட்டுக்கேட்டதாகவும் வழக்கை தாக்கல் செய்த காவல் துறையினர் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர். 14 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்த இவர் மீதான நீதிமன்ற விசாரணையை நியூயார்க் நிதிமன்றத்தின் 12 நீதிபதிகளை கொண்ட குழு கடந்த வருடம் மார்ச் மாதம் ஆரம்பித்து, இறுதியில் இவர்மீதான அமைத்து

www.padippakam.com

குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டதாக கூறி, ராஜரத்தினத்தை குற்றவாளி என்று ஏகமனதாக அறிவித்தனர்.

அமெரிக்காவில் இடம் பெற்ற மிகப் பெரிய நிதி மோசடி வழக்கு என்று கூறப்படும் இவ்வழக்கில் நிதி மோசடி மற்றும் சதிச் செயல் செய்ததாகவும் சட்டவிரோதமான வகையில், நிறுவனங்களில் ரகசியத் தகவல்களை பெற்று அறுபது மில்லியன் டொலர்களுக்கும் மேலாக ராஜரத்தினம் இலாபம் ஈட்டினார் என அரசு தரப்பு வழக்கறிஞர்கள் குற்றஞ்சாட்டினர். அமெரிக்காவில் சட்ட விரோதமான வகையில் உட்தகவல்களைப் பெற்று அதன் மூலம் இலாபம் ஈட்டும் பெரிய கும்பல்களை கண்டறிவது தொடர்பாக அமெரிக்க அரசு நியமித்த விசேட குழு நடத்திய விசாரணைகளில் ஒரு பகுதியாகவே இந்த வழக்கு இருந்தது. அமெரிக்க அரசின் இந்த அதிரடிக் கண்காணிப்பு விசாரணையில் இதுவரை இருபத்தியோரு பேர் சிக்கி தமது குற்றங்களை ஒப்புக் கொண்டுள்ளனர்.கடந்த 2003 முதல் 2009 வரையிலான காலப்பகுதியில் ராஜரத்தினம் பெற்ற உட்தகவல் நிறுவனங்களில் கூகிள், இண்டெல், ஹில்டன் ஹோட்டல்ஸ் போன்ற மிகப் பெரிய நிறுவனங்களும் அடங்குகின்றன.

ராஜரத்தினம் அமெரிக்க பங்குச் சந்தையில் மோசடி செய்த பணத்தை இலங்கை பங்குச் சந்தையிலும் பெருமளவில் முதலீடு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. ராஜரத்தினம் வெறும் பங்குச் சந்தை சார்ந்த வர்த்தகர் மட்டுமல்ல. அவருடைய திரைமறைவு வேலைகள் இலங்கை அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்தது. இவர் அமெரிக்காவில் செயல்படும் தமிழ் மறுமலர்ச்சிக் கழகம் என்ற அமைப்புக்கு 35 லட்சம் அமெரிக்க டாலரை நிதி உதவியாக கொடுத்திருந்தார். இந்த அமைப்புக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பிருப்பதைக் கண்டறிந்த அமெரிக்க அரசு இந்த அமைப்பின் சொத்துகளை கையகப் படுத்தியது. அமெரிக்காவிலிருந்து விடுதலைப்புலிகளுக்கு மிகப்பெரிய அளவில் நிதி அளித்தவர் ராஜரத்தினம் என்பதையும் அமெரிக்க புலநாய்வுத்துறை ஆதாரத்துடன் கண்டுபிடித்தது.

கடந்த அமெரிக்க அதிபர் தேர்தலின் போதும் பராக் ஒபாமாவின் ஜனநாயகக் கட்சிக்கும் இவர் நிதி வழங்கினார் எனச் சில ஊடகங்கள் தெரிவிக்கின்ற போதும் இது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட வில்லை. 2008 ஆம் ஆண்டில் அமெரிக்க அதிபர் தேர்தலின் போது ஜனநாயக கட்சியின் செனட்டர்கள் பிரச்சாரக் குழுவுக்கு: 26, 700 அமெரிக்க டொலர். ஜனநாயக கட்சியின் தேசிய பிரச்சாரக்



படிப்பகம்

www.padippakam.com

குழுவுக்கு: 26, 200 அமெரிக்க டொலர். ஹிலாரி கிளிண்டனுக்கு 11, 200 அமெரிக்க டொலர். நியூஜெர்சி மாகாண ஜனநாயக் கட்சி பிரச்சாரக் குழுவுக்கு: 10, 000 அமெரிக்க டொலர் பராக் ஒபாமாவின் பிரச்சாரத்திற்கு: 4, 600 அமெரிக்க டொலர் நியூயார்க் ஜனநாயக் கட்சி செனட்டர் சார்லஸ் யூமருக்கு 2000 அமெரிக்க டொலர் என இவர் அரசியல் கட்சிகளுக்கு அள்ளி வழங்கியதாகத் தெரிவிக்கப் படுகிறது.

3 பிள்ளைகளின் தந்தையான ராஜ் ராஜரத்னத்திற்கு ஜூலை 29 ஆம் திகதி வழங்கப்படும் தண்டனை கடுமையானதாகவே இருக்கும் என அமெரிக்க சட்டவல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

**29.06.2011**



படிப்பகம்

www.padippakam.com

# IMF தலைவர் பாலியல் விவகாரம்... சர்வதேச மர்மங்கள்...

அமெரிக்காவும் அதன் தோழமை ஊடகங்களும் முடிவுசெய்தால் எவரையும் சிறுமைப்படுத்தி சீரழிக்க முடியும் என்பது மீண்டும் ஒருமுறை நிரூபணமாக்கப் பட்டுள்ளதாகவே எண்ணவைக்கிறது, ஊடகங்களால் டிஎஸ்கே என அழைக்கப்படும் சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எப்) முன்னாள் தலைவர் டொமினிக் காஸ்டோன் ஆண்ட்ரு ஸ்ட்ரொஸ்கன் அவர்களின் கைதும் அவருக்கு எதிரான நடவடிக்கைகளும்.

1949-இல் பிரான்சில் பிறந்த டிஎஸ்கே சிறந்த பொருளியல் துறை வல்லுனர் - திறமையான வழக்கறிஞர் - தலைநகர் பாரிசிற்கு அண்மையிலிலுள்ள சார்சல் நகர முன்னாள் மேயர் - பிரான்ஸ் சோசலிசக் கட்சியைச் சேர்ந்த சிறந்த அரசியல்வாதி இப்படி பல முக்கிய பரிமாணங்களைக் கொண்டவர். முக்கியமாக 1997 முதல் 1999 வரை பிரான்சு பிரதமராக இருந்த லயோனல் யோசபின்னின் இடதுசாரி ஆட்சியில், நிதி மற்றும் பொருளாதாரத் துறை அமைச்சராகவும் பொறுப்பு வகித்தவர். இந்த வேளையிலேயே வாரத்திற்கு 35மணி நேர வேலை உட்பட பல தொழிலாளர் நலத்திட்டங்கள் அமுல் படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பிரெஞ்சு அரசியலில் இடது எனப்படும் நடுநிலைச் செயல்பாடாளர் களான சோசலிசக் கட்சயிலிருந்த (PSF) வலதுசாரிய சிந்தனையாளர்களில் முக்கியமானவரான டிஎஸ்கே 2007ஆம் ஆண்டு நடைபெற்ற பிரான்சு குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் சோசலிசக் கட்சியின் உட்கட்சித் தேர்தலில் செகோலீன் றோயலிடம் தோல்வியடைந்தார். பின்னர் சர்வதேச நாணய நிதியம் பல்வேறு பிரச்சினைகளில் தள்ளாடியபோது, அன்றைய பிரான்ஸ் அதிபர் தேர்தலில் சோசலிசக்கட்சியின் வேட்பாளர் செகோலீன் றோயலை



படிப்பகம்

தோற்கடித்த பிரான்சின் இன்றைய வலதுசாரி அதிபர் நிக்கோல சர்கோசியின் சிபாரிசின் பேரில் இந்த அமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டார். 2007ம் ஆண்டு முதல் அவர் கைது செய்யப்படும் வரை அந்த அமைப்பின் தலைவராக இருந்த டிஎஸ்கே, பிரான்சில் 2012 இல் நடைபெற உள்ள பிரான்சு அதிபர் தேர்தலில் சோசலிசக் கட்சியின் வேட்பாளராக போட்டியிடவும் தயார் நிலையில் இருந்தார்.

பிரான்சில் நடைபெற்ற கருத்துக் கணிப்புக்கள், இன்றைய வலது சாரி அதிபர் நிக்கோலோ சார்க்கோசி மற்றும் தீவிர வலதுசாரிய கொள்கைகளைக் கொண்ட தேசிய முன்னணியின் மார்ட்டின் லீ பென் ஆகியோரைவிட டிஎஸ்கே முன்னணியில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தன. இந்தச் சூழலில்தான் நியூயார்க் நகரில் ஒரு நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருந்தபோது 32 வயது பெண் ஊழியர் ஒருவரை பாலியல் வன்முறைக்குள்ளாக்க முயற்சித்ததாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருடைய திடீர் கைது, சிறை வைப்பு, தொடர் அவமானப்படுத்தல், என்பன வற்றை அமெரிக்க நடைமுறைப்பின்னணியில் நோக்கினால் அது பல்வேறு மர்மங்களை உள்ளடக்கியதாகவே கணக்கிடப் படுகிறது. பாலியல் பலாத்காரம், வல்லுறவு என்பன மிகவும் மோசமான மன்னிக்கப்படக் கூடாத குற்றம் என்பதிலோ இதில் ஈடுபடுபவர் எவராயினும் அதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டும், அதற்கான தண்டனையை அநுபவிக்வேண்டும் என்பதிலோ மாற்றுக் கருத்துக்கே இடமில்லை. ஆனால் இந்த பாலியல் தவறு என்பது அமெரிக்காவில் மட்டுமில்லாமல் பல இடங்களிலும், குறிவைக்கப் படும் சில தனிபர்களை வீழ்த்துவதற்கான ஆயுதமாகவும் பயன்படுத்தப்படுகிறது என்பதுதான் வெட்ககரமான உண்மை. இதே போன்ற ஒரு விவகாரத்தில், அமெரிக்காவின் உள்ளக உண்மைகள் பலவற்றை வெளிக்கொணர்ந்த விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாங்கே சிக்க வைக்கப்பட்டிருப்பதை உலகம் அறியும். அதே சதிவலைதான் டிஎஸ்கேயுக்கும் பின்னப்பட்டுள்ளதா...? என்று எண்ணுவதற்கும் நிறையவே வாய்ப்புக்கள் உள்ளன. டிஎஸ்கே விவகாரத்தில் அமெரிக்காவின் திரைமறைவுப் பணிகள் அதிக மாகவே உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த அசிங்க நடவடிக்கை மூலம் சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் பொறுப்பிலிருந்து ஸ்ட்ராஸ் கானை அகற்றுவது, ஒருவேளை வருங்கால பிரான்ஸ் அதிபராக சோசலிசக் கட்சியின் பின்னணியுடன்

வரக்கூடிய ஒரு பொருளாதார வல்லுநரின் அரசியல் வாழ்வை தகர்ப்பது என்பன நிறைவேற்றப்படும் என எண்ணப்படலாம்.

தற்போது வெறுமனே இருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குனர் பதவிக்கு யாரை நியமிப்பது என்கின்ற விவகாரம் உலகின் முக்கிய சக்திகள் மத்தியில் ஒரு போட்டிக்கும், மோதலுக்கு களம் அமைத்துள்ளது. 1944ம் ஆண்டு ஐ.எம்.எப் உருவாக்கப்பட்டது முதல் ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்த ஒருவர்தான் அதன் தலைவராக இருந்து வருகிறார், இதன் சகோதர நிறுவனமான உலக வங்கிக்கு அது துவங்கப்பட்ட நாள் முதல் அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவரே தலைவராக இருந்து நிர்வகித்து வருகிறார், இது தான் நியதியாகவும் இருந்து வருகிறது. இந்த பாரம்பரியங்களை மாற்றக்கூடாது என்று ஐரோப்பிய பணக்கார நாடுகள் கூக்குரல் எழுப்பியுள்ளன. தங்களது நிதியமைச்சர் கிறிஸ்டின் லகார்டேயை ஐஎம்எப் தலைவராக்க வேண்டுமென பிரான்ஸ் கூறுகிறது. பிரான்சின் கருத்தை ஜெர்மனியின் அதிபர் ஏஞ்சலா மெர்க்கெல்லும் ஆதரித்துள்ளார். அமெரிக்க கருவூலத்துறை மூத்த அதிகாரி டேவிட் லிப்டனை ஐஎம்எப் துணை நிர்வாக இயக்குநராக்கிவிட்டு ஏற்கனவே ஐஎம்எப் இன் துணை இயக்குநராக இருந்து தற்போது டொமினிக் ஸ்ட்ரொஸ்கனின் இயக்குனர் பதவியையும் தற்காலிகமாக வகிக்கும் அமெரிக்காவைச் சேர்ந்த ஜான் லிப்ஸ்கியை நிரந்திர தலைவராக்கி விடலாம் என அமெரிக்கா கணக்குப் போடுகிறது. ஆக நிர்வாக இயக்குநர், துணை நிர்வாக இயக்குநர் என இரண்டு முக்கியப் பதவிகளையும் நாங்களே பகிர்ந்து கொள்கிறோம் என்று கூறும் அமெரிக்கா, அதற்கான தீவிர முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளது. ஆனால், இந்த ஐரொப்பிய அமெரிக்க எண்ணங்களுக்கு உலகின் கிழ்த்திசையிலிருந்தும், தென்திசையிலிருந்தும் எதிர்ப்புக்குரல்கள் எழுந்துள்ளன. உலகப் பொருளாதாரத்தை தீர்மானிப்பதில் இனியும் அமெரிக்காவும் ஐரோப்பாவும் மட்டுமே முற்றிலும் கோலோச்சுகிற ஐஎம்எப்-க்கு இடமில்லை என்று குரல் எழுந்துள்ளது. சீனா, இந்தியா, பிரேசில், தென்னாப்பிரிக்கா ஆகிய வளர்முக நாடுகள், பன்னாட்டு நிதிநிறுவனத்தின் நிர்வாகக் கட்டமைப்பில் மிகப் பெரும் மாற்றங்களை இப்போதேனும் செய்தாக வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன. உலக பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களுக்கு ஏற்ப, சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பும் மாற்றப்பட வேண்டுமென பெரும்பாலான நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

ஐஎம்எப் இயக்குநர் பதவியைக் கைப்பற்ற ஐரோப்பாவும், அமெரிக்காவும் தீவிரமாக இருப்பதற்கு வெறும் பாரம்பரியங்கள் மட்டும் காரணமல்லை. மாறாக, மிகக் கடுமையான, ஆழமான நெருக்கடிக்குள் சிக்கியுள்ள தங்களது பொருளாதாரத்தை காக்க முன்னெப்போதையும் விட இன்னும் தீவிரமாக வளர்முக நாடுகளை சுரண்டுவதற்குரிய தமது கொள்கைகளை ஐஎம்எப், உலக வங்கி என்பனவற்றின் மூலமாகவே செயல்படுத்த வேண்டிய நிர்ப்பந் தத்தில் அவை உள்ளன. 2025ம் ஆண்டு வரை உலகப் பொருளாதார வளர்ச்சி நிலவரம் எப்படியிருக்கும் என்பது தொடர்பாக அண்மையில் உலக வங்கி ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தது.

"அடுத்த 15 ஆண்டு காலத்தில் உலகப் பொருளாதாரக் கட்ட மைப்பில் மிகப்பெரும் மாற்றங்கள் ஏற்பட உள்ளன. குறிப்பாக, அமெரிக்காவை மையமாகக் கொண்ட உலகப் பொருளாதாரம், பன்முகத் தன்மை கொண்ட - பல துருவ பொருளாதாரமாக வேகமாக மாறிவருகிறது. பொருளாதார வளர்ச்சி என்பதில் 2010ம் ஆண்டுவரை உலகம் எட்டிய வளர்ச்சி விகிதத்தைவிட, அடுத்த 15 ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் கணிசமாகக் குறையும் அபாயம் இருக்கிறது. அத்தகைய சூழலில், 2011-2025 கால கட்டத்தில் வளர்ச்சி யடைந்த நாடுகளின் வளர்ச்சிவிகிதம் ஆண்டுக்கு 2.3 சதவீதம் மட்டுமே அதிகரிக்கும். ஆனால், வளர்முக நாடுகளின் வளர்ச்சி விகிதம் 4.7 சதவீதம் அளவிற்கு அதிகரிக்கும். இன்னும் குறிப்பாக, பிரேசில், சீனா, இந்தியா, இந்தோனேசியா, தென்கொரியா மற்றும் ரஷ்யா ஆகிய 6 நாடுகளின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகமாக இருக்கும். உலகின் மொத்த வளர்ச்சியில் பாதி இந்த நாடுகளுடையதாக இருக்கும்".

இவ்வாறு அந்த அறிக்கை தெரிவிக்கிறது. இந்த பின்னணியில் உலகளாவிய நிதி அமைப்பு முறையே மாற்றத்திற்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் உலக வர்த்தகத்தின் அடிப்படை குறியீடாக இனியும் அமெரிக்க டொலர் மட்டுமே நீடிக்க முடியாமல் யூரோவும், சீனாவின் யுவான் நாணயமும் தற்போது முன்வந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் அடிப்படையிலேயே ஐஎம்எப் தலைவரின் கைதும் வலுவடைந்துள்ள அதன் தலைமைப் பதவிக்கான போட்டியும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

டொமினிக் ஸ்ட்ரொஸ்கன் மேல் சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படலாம் - அல்லது நிரூபிக்கப்படாமலே போகலாம். ஆனாலும், அவர் குற்றவாளியெனக் கருதப்பா

www.padippakam.com

வேண்டியவரேதான். முன்னரும் சில பெண்களை வல்லுறவிற்குக் கட்டாயப்படுத்தினார் என்று வந்துள்ள செய்திகளின் அடிப்படையிலிருந்து மட்டும் எழுவதல்ல இது - அதுவும் ஒரு காரணம் தானென்றாலும் அனைத்தையும் கடந்து உலகெங்கும் பல்வேறு நாடுகளில் பல லட்சம் பெண்கள் வல்லுறவிற்குள்ளாக்கப் பட்டதற்கும் இதே ஸ்ட்ரெஸ்கனும் காரணமாக இருந்தார் என்கிற யதார்த்த உண்மையின் அடிப்படையிலானது இது. உலகளவில் பல்வேறு நாடுகளின் பொருளாதாரத்தைக் குலைத்து அந்நாடுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளைக் கவிழ்த்து, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு இசைவான அராஜகக் கும்பல்கள் மூலம் அப்பாவி மக்களை நேரிடையாக கொன்று குவித்தமைக்கு டிஎஸ்கே தலைமையில் இயங்கும் பன்னாட்டு நிதி நிறுவனமும் காரணமாக இருந்துள்ளது. எந்தவகையிலும் குடியாட்சி முறையில் தேர்ந் தெடுக்கப்படாத - சாமானிய மக்களுக்கு பதில் சொல்லத் தேவையில்லாத இந்த அமைப்பே உலகின் பல்வேறு நாடுகளில் அரங்கேறிய சதிப்புரட்சிகளுக்கும் காரணகர்த்தாவாக செயல் பட்டுள்ளது. நேரடியான சதிப் புரட்சிகளைக் கடந்து, தமக்கு இணக்கமான அரசுகளைக் கூட மேலும் மேலும் அடிமையாக்க கடன் வலையில் சிக்க வைத்த பெருமை அமெரிக்காவின் கைத்தடியான ஐ.எம்.எஃப் ஐயே சாரும்.

நைஜீரியா, சியாரலியோன், கென்யா, ஜிம்பாவே, சோமாலியா, ருவாண்டா உள்ளிட்ட பல்வேறு ஆபிரிக்க நாடுகளை மீள முடியாத கடன் வலையில் சிக்க வைத்து மொத்த நாட்டையே ஓட்டாண்டியாக்கிச் சுரண்டுவதற்கான ஒரு பொருளாதாரப் பேரழிவு ஆயுதமாக அமெரிக்கா பயன்படுத்தியது ஐ.எம்.எஃபைத் தான். எண்ணை உள்ளிட்ட இயற்கை வளங்களைக் கைப்பற்ற பல்வேறு ஆப்ரிக்க இனக் குழுக்களைச் சேர்ந்த உள்ளூர் யுத்த பிரபுக்களுக்கு ஆயுத உதவி, நிதியுதவி உள்ளிட்ட பல்வேறு உதவிகளைச் செய்து, அதனால் விளையும் உள்நாட்டுக் குழப்பத்தில் யாருடைய கை மேலோங்கியுள்ளதோ அந்த குழுவை ஒரு (கைப்பாவை) அரசாக அங்கீகரித்து அவர்களுக்கு வெளிப்படையாகவே நிதியுதவி செய்ய அமெரிக்கா பயன்படுத்திக் கொள்ளும் ஒரு கருவிகளில் முக்கிய மானது ஐ.எம்.எஃப். அந்த வகையில், இந்த நாடுகளிலுள்ள கணக்கற்ற பெண்கள் வன்முறை கும்பலால் கொல்லப்பட்டும் வல்லுறவிற்கு ஆளாக்கப்பட்டுமுள்ளமையின் அடிப்டையிலேயே ஸ்ட்ரொஸ்கன் குற்றவாளி... தற்போது உலகையே ஒரு மாபெரும் கருமேகம் போலப் பீடித்து ஆட்டிப் படைத்து வரும் சர்வதேசப்



படிப்பகம்

www.padippakam.com

பெருமந்தத்திற்கும் ஐ.எம்.எஃப் அமைப்பும் ஒரு காரணமாக இருந்துள்ளது என்பதனை அவர்களே நடத்திய சுயேச்சையான ஆய்வின் முடிவில் ஒப்புக் கொண்டும் உள்ளனர். ஆக, உலகம் முழுவதும் லட்சக்கணக்கான பெண்கள் வாழ்விழப்பிற்கும், வல்லுறவிற்குள்ளாக்கப் பட்டதற்கும் காரணமான முக்கியம் வாய்ந்த அமைப்பின் தலைவரை அவரது சொந்த வாழ்க்கையின் தவறுகளுடைய ஒளியில் வைத்து மட்டும் குற்றவாளியென்றோ, குற்றவாளியில்லையென்றோ பார்க்க முடியாது. பார்க்கவும் கூடாது.

குற்றம் சாட்டப்பட்டவர், குற்றம் சாட்டுபவர் ஆகியோரைத் தவிர வேறொருவர் அமெரிக்காவின் மன்ஹாட்டன் நகரில் உள்ள சொபிடெல் (Sofitel) விடுதியில் என்ன நடந்தது என்பதை சரியாக அறிந்திருக்க. பொதுமக்களுக்குக் கிடைக்கும் தகவல் அனைத்தும் நியூயோர்க் நகர காவல்துறை, பாதிக்கப்பட்டுள்ளவரின் வழக்கறிஞர் கூறும் கருத்துக்கள் மட்டுமே, அதுவும் ஊடகங்கள் வாயிலாகவே.

இவை அனைத்தும் ஆதாரம் உடையவையா...? ஆதாரம் அற்றவையா...? யாரும் கூறமுடியாதது. இதுவரையிலும் எவரும் ஸ்ட்ரஸ்கன் இது பற்றி என்ன கூறுகிறார் என்பதைக் கேட்கவோ அன்றி அவர் எதுவும் இது தொடர்பில் கூறவோ இல்லை. மாறாக அவர், திட்டமிட்டு அவமானப் படுத்தப்படல், மனிதத் தன்மை யற்றவராக சித்தரிக்கப்படுதல் போன்றவற்றைத்தான் பெரும்பாலான ஊடகங்கள் செய்து கொண்டிருக்கின்றன. இந்த விவகாரத்தில் குற்றம் சட்டத்தின் முன் நிரூபிக்கப்படாத நிலையிலேயே, பொதுமக்கள் மனதில் அவரை குற்றவாளியாக்க செய்யப்படும் ஒரு மறைமுகச் சதிதான் இது எனவும் எண்ணப்படுகிறது. மே 14இல் நியூயோர்க்கில் கைது செய்துபட்ட ஸ்ட்ராஸ்கனுக்கு முதலில் பிணை மறுக்கப்பட்டமை, உடனடியாகவே மே 18இல் சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்ய அழுத்தம் அளிக்கப்பட்டமை, பின்னர் மிக மிக அழுத்தங்களுடன் கூடிய சிறைப் பிணை ஆகிய தொடர் நிகழ்வுகள் இதனையே எண்ணவைக்கிறது.

அதிகரித்து வரும் ஐரோப்பிய இணைவும் அதன் ஸ்திரத் தன்மையும்- வளர்ந்து வரும் யூரோவின் பெறுமதி - அனைத்திற்கும் ஆளுமை செலுத்தும் நாடுகளின் பட்டியலில் உள்ள பிரான்ஸ் - 2012ம் ஆண்டு நடைபெறும் அந்தநாட்டுத் தேர்தலில் ஸ்ட்ஸ்ரஸ்கன் அதிபர் ஆவதற்காய் இருந்த வாய்ப்புக்கள் என்பனவும் இந்தக்கைதின் பின்னணியாகக் கருதப்பட வேண்டியனவே...



படிப்பகம்

www.padippakam.com

தலைசிறந்த நிர்வாகியும், பொருளாதார வல்லுநரும், இடதுசாரிய சிந்தனையாளருமான லயனல் யோசபின் பிரான்சின் அதிபராக வருவதை 2002ம் ஆண்டு தடுத்த அதே வலதுசாரிய சக்திகளின் சாதுரியம் மற்றொரு நிர்வாக சக்தியை இன்று பலிவாங்கியுள்ளது.

**03.06.2011**

சிங்கத்துக்கென வரலாற்றாசிரியர்கள் இல்லாதவரை வேட்டை பற்றிய வரலாறு என்பது வேட்டையாடியவர்களுக்குச் சாதகமாகவே இருக்கும்.

– ஆபிரிக்கப் பழமொழி



படிப்பகம்

www.padippakam.com

# தமிழகத் தேர்தல் முடிவுகள்... தெரிவிக்கும் தகவல்கள்...

ஒட்டு மொத்த உலகத் தமிழினமே ஆவலுடன் எதிர்பார்த்த தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் முடிவுகள் யாருமே எதிர்பார்க்காத பாரிய வெற்றியை அதிமுக கூட்டணிக்கு ஏற்படுத்தி பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி இருக்கிறது. அதிமுகக்கு கிடைத்த இந்த மாபெரும் வெற்றி ஜெயலலிதா மாறிவிட்டார், நல்லாட்சி தருவார் என மக்களை எண்ண வைத்துள்ளதா...? இல்லை திமுக அரசு மீதும் அதன் தலைவர் கருணாநிதி மீதும் கொண்ட வெறுப்பின் வெளிப்பாடா...? இன்றைய நாளில் பல மட்டங்களிலும் விவாதம் இதுதான்..

1 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி, இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டி, 108 அவசர சிகிச்சை அம்புலன்ஸ், கலைஞர் மருத்துவக் காப்பீட்டுத்திட்டம், விவசாயக் கடன் தள்ளுபடி, முதல் தலைமுறை மாணவர்களுக்கு இலவச தொழிற்கல்வி, ஏழைகளுக்கு இலவச கொங்கிரீட் வீடு இப்படி... இன்னும், இன்னும் பட்டியலிடக் கூடிய சலுகைகளை அள்ளி வழங்கிய திமுக ஆட்சிக்கு மக்கள் தடை போட்டது ஏன்...?, இவ்வளவு மக்கள் நலத்திட்டங்களையும் பின்னுக்குத் தள்ளியவை எவை...?, வெளியில் சொல்லாமலே “மௌனப் புரட்சி” ஒன்றை வாக்குச் சீட்டுகள் மூலம் நடத்தி முடித்துள்ளார்கள் தமிழகத்து வாக்காள மக்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

தமிழக சட்டமன்றத் தேர்தலைப் பொறுத்தவரை கடந்த பல காலமாக கூட்டணி பலம்தான் வெற்றிக்கான அடிப்படையாக இருந்து வந்த நிலையில் இம்முறை அப்பலம் பின்னுக்கு தள்ளப்பட்டு மக்கள் பலம் முன்னுக்கு வந்துவிட்டதான எண்ணத்தையே ஏற்படுத்தகின்றன முடிவுகள்... இந்தத் தேர்தலுக் கான கூட்டணிப் பேச்சுவார்த்தைகள்



படிப்பகம்

www.padippakam.com

தொடக்கத்திலிருந்தே திமுகவுக்கு மட்டுமல்ல அதிமுகவுக்கும் சிக்கலாகவே இருந்தது. அதிக இடங்கள் கோரி மல்லுக்கு நின்ற காங்கிரஸின் விடாப்பிடியான பிடிவாதமும், மறைமுக மிரட்டலும் தொடர்ந்து மத்திய அமைச்சரவையில் இருந்து திமுக அமைச்சர்களின் ராஜினாமா நாடகமும் அரங்கேறி கிளைமாக்சில் காங்கிரஸ் கட்சி 63 தொகுதிகளை கைப்பற்றியது. அதேவேளை அதிமுக அணிச் சேர்க்கையிலும் ஆரம்பம் முதலே ஏராளச் சிக்கல்கள், கூத்துக்கள். அந்த அணியில் தேதிமுக இடம்பெறுமா...? இல்லையா...? ஜெயலலிதாவை, சந்திக்க விஜயகாந்த் வருவாரா...? மாட்டாரா...? என்ற ஆரூடம் ஊடகங்களில் பலமாக அடிபட, ஏற்கனவே உள்ள கூட்டணித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தாமல் தானாகவே அதிமுக வேட்பாளர் பட்டியலை ஜெயலலிதா வெளியிட இதனால் ஆத்திரமடைந்த கூட்டணித் தலைவர்கள் அவசர, அவசரமாய்க் கலந்தாய்வு நடத்தி 3வது அணியை உருவாக்கலாமா...? என்று இரவு பகலாக திட்டமிட்டு கடைசியில் அனைவரும் போயஸ் தோட்டத்தில் தஞ்சமடைந்த காட்சியுடன் அது நிறைவு பெற்றது அந்தக் கூட்டணியில் மிக, மிக பின்னுக்குத்தள்ளப்பட்ட, சமரசத்துக்கு தன்னை தயார்படுத்திக் கொள்ளாத வைகோ மட்டும் அதிமுக அணியிலிருந்து மட்டுமல்ல, தேர்தல் களத்திலும் மதிமுக பங்கேற்காது என்று அறிவித்து இழந்து போயிருந்த தனது கௌரவத்தை ஒரு சிறிது பெற்றுக் கொண்டார்.

இரு கூட்டணிகளும் சக தோழமைக் கட்சிகளுடன் கடைசிவரை ஒருவித நெருடல் நிலையிலேயே தேர்தலைச் சந்தித்தன. ஜெயலலிதாவும், விஜயகாந்தும் ஒரு தடவைகூட ஒரே மேடையில் ஒன்றாக பிரச்சாரம் செய்யாமை, 2ஜீ அலைக்கற்றை விவகாரத்தில் மத்திய அரச பொறுப்பிலிருக்கும் காங்கிரஸ், திமுக தலைவர் கருணாநிதி குடும்பத்தார் மீது தேர்தல் நேரத்திலும் செலுத்திய நெருக்கடி இப்படி பல நெருடல்களுடனேயே தேர்தல் களம் கண்டன இரண்டு கூட்டணிக் கட்சிகளும். பிரச்சாரக் காலத்திலும் சரி அதற்கு முன்னரும் சரி திமுக ஆட்சிக்கு எதிராக மிகப் பெரிய எதிர்ப்பு அலை வீசியதாகத் தெரியவில்லை. ஸ்பெக்ட்ரம் ஊழல் நாடாளுமன்றத்தில் பெரும் புயலைக் கிளப்பினாலும் அது தமிழ்நாட்டு கிராமத்து வாக்காளர்களை எட்டப் போவதில்லை என்றுதான் பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் திமுகவின் இந்த மிகப் பெரிய தோல்வியை பார்க்கும் போது அதனையும் ஒரு முக்கிய காரணமாகவே கொள்ள வேண்டும்.



படிப்பகம்

இந்திய சுதந்திரத்திற்கு பின், நடந்த ஊழல்களில் அரசுக்கு மிகப்பெரிய இழப்பு ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தது எனச் சொல்லப்படும் ஸ்பெக்ட்ரம் ஊழல் மூலம் நாட்டிற்கு, ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக மத்திய தணிக்கை துறை, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. மத்திய அமைச்சரவையில் அங்கம் வகித்த தி.மு.க.வுக்கு, இந்த ஊழல் மிகப்பெரிய நெருக்கடியை கொடுத்த போது மத்திய அரசுக்கு ஆதரவு என்ற அஸ்திரத்தின் மூலம் இப்பிரச்னையை அரசியல் ரீதியாக சமாளித்த தி.மு.க. மக்கள் மன்றம் இதற்கான தீர்ப்பை இப்படி வழங்கும் என எதிர்பார்த்திருக்காது.

கலைஞர் கருணாநிதி குடும்பத்தினருக்கு, 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில் இருந்த தொடர்பை மிகப் பெரிய அளவில் அம்பலப்படுத்தி, அதை பாமர மக்கள் மனதிலும் பதிய வைத்ததில் ஜெயலலிதா பெரும் வெற்றி பெற்றுள்ளார் என்பதையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. அதேவேளை நகர்ப்புற வாக்காளர்கள், படித்தவர்கள், முற்பட்ட வகுப்பினர் மத்தியில் 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலால் திமுக மீது மிகப்பெரிய அதிருப்தியும், ஆவேசமும், கோபமும் ஏற்கனவே இருந்தது. இதன் வெளிப்பாடே இந்த தேர்தலில் வாக்குப்பதிவு சதவீதம் அதிகரிக்க காரணமாயிருந்திருக்கலாம். புதிதாக வாக்களித்த, இளம் வாக்காளர்கள் பலர் மத்தியில் ஸ்பெக்ட்ரம் விவகாரம் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்றே உணர முடிகிறது. அதோடு, வசதி வாய்ப்புகள், ஆடம்பர அம்சங்கள் அனைத்தும் பெற்று வாழும் மேல்தட்டு வர்க்கத்தினரும், இந்த தேர்தலில் வரிசையில் நின்று வாக்களித்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. வாக்குப்பதிவுக்கு முன்பாக, டில்லியில் ஊழலுக்கு எதிராக அன்னா ஹசாரே மேற்கொண்ட உண்ணாவிரதமும், தமிழகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியதாகக் கொள்ளலாம். இந்த உண்ணாவிரத போராட்டம், ஊழலுக்கு எதிராக போராட வேண்டும் என்ற எண்ணத்தை பரவலாக ஏற்படுத்தியதன் எதிரொலியே திமுக மீது வெறுப்பை அதிகரித்து யாரும் எதிர்பாராத அளவுக்கு வாக்காளர்கள் ஆர்வமாக வந்து வாக்களித்து திமுக வை தோற்கடித்ததாகச் சொல்லப்படுகிறது.

கடந்த பல பொதுத் தேர்தல்களில் 60 முதல் 65 சதவீதம் வரையே வாக்குப்பதிவு நடந்துள்ளது. இதற்கு குறைவாகவும் இருந்திருக்கிறது. வாக்குப் பதிவு சதவீதம் அதிகமாக இருந்தால் அதற்கு ஆளும் அரசு மீது ஏற்பட்ட வெறுப்பே காரணம் எனவும் அது எதிர்க் கட்சிகளுக்குச் சாதகம் என்றும் பலராலும் சொல்லப்படும்

www.padippakam.com

கருத்து நிரூபணம் ஆகியுள்ளது. அதேவேளை இந்தத் தேர்தலில் இளைஞர்கள் அதிக எண்ணிக்கையில் ஆர்வத்துடன் வந்து வாக்களித்திருந்தது தமிழகத்துக்கு ஒரு நல்ல சமிஞ்ஞையே. ஊழல் எதிர்ப்பு என்ற கோசமே இதற்கு காரணம் எனவும் 1977, 1996 ஆகிய இரண்டு சட்டப்பேரவைத் தேர்தல்களில் காணப்பட்ட எழுச்சி இந்தத் தேர்தலிலும் காணப்பட்டதாகவும் பார்வையானர்கள் தெரிவித்திருந்தனர்.

வீட்டுக்கு ஒரு இலவச வண்ணத் தொலைக்காட்சி என்ற திமுகவின் கடந்த தேர்தல் அறிவிப்புத்தான் அதன் வெற்றிக்கு அடித்தளம் இட்டது என்பதனை நன்கு உணர்ந்து கொண்ட கருணாநிதி இம்முறையும் தேர்தல் வாக்குறுதிகளாக இலசவங்களை அள்ளி வழங்கினார். திமுகவின் தேர்தல் அறிக்கை (இலவசங்கள் அறிவிப்பு) வெளியாகும் வரை காத்திருந்த ஜெயலலிதா இன்னும் பலபடி முன்னே பாய்ந்து பல விசித்திரமான இலவசங்களை அறிவித்தார். ‘இலவசங்கள்’ என்றால் தமிழக மக்கள் எதையும் மறந்து வாக்களிப்பார்கள் என்ற ஒரு தரக்குறைவான மதிப்பீட்டை தமிழக மக்கள் மீது இரு கட்சிகளுமே ஏற்படுத்தின. குடும்பங்களையும், குடும்பத் தலைவிகளையும் குறிவைத்து வழங்கப்பட்ட இலவசங்கள் இம்முறை மாணவ சமூதாயத்தையும் இலக்குவைத்து ‘இலவச மடிக் கணணி’ என அவர்களையும் இலவச மாயைக்குள் இழுத்துச் செல்ல முயன்றன. ஆனால் குறிவைக்கப்பட்ட இளைஞர் சமூகம் மாற்றததையே விரும்புகிறது என்பதனையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

இது தவிர திமுகவின் குடும்ப அரசியல், அனைத்துத் துறைகளிலும் ஏகாதிபத்தியத்தை நாட்டத் துடிக்கும் தனிப்போக்கு, மின்சாரப் பிரச்சனை, இலங்கைத்தமிழர் பிரச்சனை, போன்ற பிரச்சனைக்களை முன்வைத்தும் அதிமுக அணி தனது பிரச்சாரத்தை நடத்தியது. குடும்ப அரசியலின் மக்கள் பாதிப்புக்களையும் அதிகலாபம் பெறக்கூடிய அனைத்து துறைகளிலும் தமது அரசியல் செல்வாக்கை மூலதனமாக்கி, திமுகவின் முன்னணி அரசியல் வாதிகள் ஆழமாக காலூன்றி உள்ளதும் பிரச்சாரத்தில் முன்வைக்கப் பட்டது. குடும்ப அரசியல் மற்றும் முக்கிய துறைகளில் தனிப் போக்கு போன்றவற்றின் பாதிப்புக்கள் நேரடியாக சாதாரண பாமர மக்களை பாதிக்காவிட்டாலும் மின்சார வெட்டு, விலைவாசி உயர்வு, இலவசங்களில் நடந்த பாரபட்சம் போன்ற இன்ன பல பிரச்சனைகள் தமிழக பாமர மக்களின் மனதுகளில் தாக்கங்களை ஏற்படுத்தி இருக்கிறது என்பதும் தெளிவாகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இந்திய வரலாற்றில் அதிக அளவு பண பட்டுவாடாவை மையமாக கொண்டு தேர்தலை சந்திக்கும் தமிழக அரசியல் கட்சிகள் இந்த தேர்தலிலும், தேர்தல் ஆணையத்தின் பலத்த கெடு பிடிகளுக்கும் தண்ணி காட்டிவிட்டு இந்த கைங்கரியத்தில் ஈடுபட்டன. தேர்தல் ஆணையத்தின் பறக்கும் படை பறந்து, பறந்து வந்தாலும், அவர்களை, திசை திருப்பிவிட்டு, மற்றொரு புறத்தில் கட்சியினர் தாராளமாக பணப் பட்டுவாடா செய்ததாகச் சொல்லப் படுகிறது. தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் பறக்கும்படை நடத்திய பாரபட்சமற்ற சோதனையில் சிக்கிய பணத்தில் 45 கோடி ரூபாய்க்கும் மேல் உரிமை கோரப்பட வில்லை என்பது கவனிக்கத்தக்கது. மக்களை மிகவும் கவலைக்கும், கோபத்திற்கும் உள்ளாக்கிய விலைவாசி உயர்வுப் பிரச்சினையை தடுக்க ஆக்கபூர்வமாக எதனையும் செய்யாமல், விலை வாசி உயர்வு அந்த மாநிலத்தில் இல்லையா, இந்த மாநிலத்தில் இல்லையா என்றும் சர்வதேச கச்சா எண்ணை விலை உயர்வுப் பட்டியலைக் காட்டியும், விலைவாசி உயர்வு நியாயமானதுதான் என்பது போல முதல்வரும் அமைச்சர்களும் பேசியதும் மக்களை கோபத்திற்குள்ளாக்கி இருக்கும்.

முதல்வர் கருணாநிதியின் குடும்பத்தினர் இதுவரை இல்லாத அளவு, இந்த ஆட்சியிலும், அதிகாரத்திலும் ஆதிக்கம் செலுத்தியதை யாரும் மறுக்க முடியாது. முதல்வர் கருணாநிதியின் துணைவியார் ராஜாத்தி அம்மாள், மகன் மு.க. அழகரி, மருமகன் மாறனின் மகன்கள், சன் குழுமம் என குடும்ப அங்கத்தினரின் ஆதிக்கம் வரலாறு காணாத அளவுக்கு மத்திய மாநில அரசுகளில் கொடி கட்டிப் பறந்தது. அதேபோல திரைப்படத் துறையிலும், ஊடகத்துறையிலும் கருணாநிதி குடும்பத்தினரின் ஆதிக்கம் இதுவரை இல்லாத அளவு மிக மிக அதிகமாகவே இருந்தது. கலாநிதி மாறன், தயாநிதி மாறன் ஆகியோரின் சன் தொலைக்காட்சி, சண் பிக்சர்ஸ் என்பன கிட்டத்தட்ட தமிழ் சினிமாவை விழுங்கி விட்டது என்றே கூறலாம். பெரிய நடிகர்களைக் கூட வற்புறுத்தியும், மிரட்டியும் இவர்கள் தங்களது படங்களில் நடிக்க வைத்தார்கள் என்ற குற்றச்சாட்டுக் கூட உள்ளது. சினிமாத்துறையில் கருணாநிதி குடும்பத்தின் பட்டியல் நீண்டு கொண்டே போனது. அழகிரியின் மகன் தயாநிதி அழகிரி, ஸ்டாலினின் மகன் உதயநிதி ஸ்டாலின், தமிழரசுவின் தயாரிப்பு நிறுவனம், நடிகராக்கப்பட்ட ஸ்டாலின் மகன் அருள்நிதி, படத் தயாரிப்பில் இறங்கியுள்ள கருணாநிதியின் இன்னொரு பேரன் குணாநிதி என எங்கு பார்த்தாலும் கருணாநிதி குடும்பத்தாரின்



படிப்பகம்

முகங்களாகவே தெரிந்தன. இவர்களைத் தாண்டி யாரும் படம் எடுக்க முடியாது, நடிக்க முடியாது, திரையிடவோ வெளியிடவோ முடியாது என்ற நிலையும் ஏற்பட்டது. இப்படி கருணாநிதி குடும்பத்தாரின் ஆதிக்கத்தால் திரைத்துறையினரும் புழுக்கத்துடன்தான் இருந்தனர். இவற்றை எதிர்க்கட்சிகள் மக்களிடம் எடுத்துக் கூறி செய்த பிரசாரம் நல்ல பலனைக் கொடுத்துள்ளது என்பது முடிவுகளில் தெரிகிறது. இவைதவிர மணல் கொள்ளை, திமுகவினரின் கட்டப் பஞ்சாயத்து, ரவுடியிசம், போலீஸார் துணையோடு திமுகவினர் நடத்தியதாகச் சொல்லப்படும் சமூக விரோத செயல்கள், என்பனவும் பிரசாரத்தின்போது எடுத்து வைக்கப்பட அது மக்களிடையே போய்ச் சேர்ந்துள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையும் திமுகவின் தோல்விக்கு ஒரு முக்கியக் காரணமாக சில விமர்சகளால் குறிப்பிடப்படுகிறது. ஆனால் உண்மையில் இலங்கைத்தமிழர் பிரச்சினையின் எதிரொலி கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலேயே எதிரொலித்திருக்க வேண்டும். வெளிநாட்டுக் கொள்கைகளை வடிவமைத்து, செயல் படுத்தும் அத்தனை அதிகாரத்தையும் கொண்டுள்ள மத்திய அரசு அமைப்பதற்கான அந்த தேர்தல் காலகட்டத்தில்தான் இலங்கைத் தமிழரின் போர் கொழுந்து விட்டு எரிந்தது. தமிழ் உணர்வாழர்கள் எனப்படும் தேசியவாதிகள் எதிர்பார்ப்புக்கு மாறாக இலங்கைப் பிரச்சனையின் யதார்த்தத்தை அப்போதே புரிந்து கொண்டுவிட்ட தமிழக வாக்களார்கள் இப்போது எப்படி அதனை முன்னிலைப் படுத்தி திமுக ஆட்சியை அகற்றி இருக்க முடியும்...? மேலும் இந்தத்தேர்தலில் இலங்கைத்தமிழர்கள் ஆதரவாளன் எனத் தெரிவித்துக் கொணடிருக்கும் விடுதலைப் புலிகளின் தமிழகத்து ஏஜண்டுகளில் முக்கியமானவரான வைகோவின் பங்களிப்பு இல்லாமலே அதிமுக அணி அமோக வெற்றி பெற்றுள்ளதும், திமுக அணியில் போட்டியிட்ட இந்த உணர்வாளர்கள் வரிசையில் உள்ள பாமக, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி என்பன படுதோல்வியை தழுவிக் கொண்டதும் இலங்கைப்பிரச்சினை தொடர்பில் தமிழக வாக்காளனின் அரசியல் விழிப்புணர்வையே காட்டுகிறது.

இந்தத் தேர்தலில் திமுக கூட்டணி வெற்றி பெற்றால் கூட்டணி அமைச்சரவையில் தமக்கும் கட்டாயம் இடம் கிடைக்கும் என்ற காங்கிரசின் கனவு நொறுங்கிப் போயுள்ள நிலையில் காங்கிரஸ் திமுக உறவு கேள்விக்குறியாகவும் கூடும். 63 இடங்களில் போட்டியிட்டு வெறும் 5 இடங்களில் மட்டும் வெற்றி பெற முடிந்ததற்கான முக்கியக் காரணம் திமுகதான் என்று காங்கிரஸ்

கருதும் நிலையே காணப்படுகிறது.திமுக செய்த ஊழலுக்கு, தமக்கும் சேர்த்தே தண்டனை கிடைத்து விட்டதாக காங்கிரசார் கருதலாம். அத்தடன் திமுகவின் தயவு காங்கிரசுக்கு இனி தேவை இல்லாத நிலையில் ஸ்பெக்ட்ரம் ஊழலுக்கு எதிராக காங்கிரசின் போக்கு கடுமையாகவே இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை கடந்த கால தொடர் நிகழ்வாக 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்கள் ஜெயலலிதா தலைமையிலான அதிமுக ஆட்சியை காணாதவர்கள் அல்ல. ஆடம்பர அரசியலும், பார்ப்பனிய வழி நடத்தலும் ஊழல் அமைச்சர்களையும் கொண்டு தர்பார் நடாத்தியவர்தான் ஜெயலலிதா. இந்தத் தேர்தல் முடிவுகள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துமா...? அல்லது வழமைபோல ஆட்சியாளர்கள் மாற்றம் மட்டும்தானா...? கேள்வியாகவே இருக்கும் இதன் விடை வழமை போல போகப் போகத்தான் தெரியும் என்பதுதான் இப்போதைக்கு.

பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைக்கும் ஜெயலலிதா அவரிடம் இன்றும் இருப்பதாகச் சொல்லப்படும் அகங்காரம், ஆணவம் குறிப்பாக பார்ப்பனியச் சிந்தனைகளையும் விட்டொழித்து மக்கள் நலனில் ஆத்மார்த்தமாக அக்கறை செலுத்தியாக வேண்டும். அடுத்த தேர்தலுக்கு 5 ஆண்டுகளே உள்ளன என்பதையும் விழித்து வரும் தமிழகத்து வாக்காளன் மாற்றத்தையும் புதுமையையும் விரும்புகிறான் என்பதையும் அவர் மறந்து விடாமல் செயல்படுவாரானால் அவரும் மற்றொரு Iorn Lady ஆகி விடுவார்.

**14.05.2011**

www.padippakam.com

# தீவிரவாதத் தாக்குதல்...
# பலியான ஓசாமா பின்லேடன்...

கொண்டாட்டத்தில் மூழ்கிக் கிடக்கிறன அமெரிக்காவும் அதன் தோழமை நாடுகளும்...! 10 ஆண்டுகளுக்குப் பிறகு நீதி கிடைத்துவிட்டதாக பரவசப்படுகிறார் பராக் ஒபாமா. தீவிரவாதத்தால் திணறும் பல்வேறு உலக நாடுகளுக்கும் இது கும்மாளம். அமெரிக்காவுக்கும் மேற்கத்திய ஏன் இந்தியாவுக்கும் பெரும் மிரட்டலாக திகழ்ந்த ஓசாமா பின்லேடனை சுட்டுக்கொன்றுவிட்டதான அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் அறிவிப்பு பல்வேறு மர்மங்களை உள்ளடக்கியதாக உள்ளது. ஓசாமா பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டது உண்மைதானா...? என்பது உட்பட்ட பல சந்தேகங்களையும் பல கோணங்களிலான வாதப்பிரதிவாதங்களையும் இந்த அறிவிப்பு கிளப்பியுள்ளது. சுட்டுக் கொல்லப்பட்டதாக சொல்லப்படும் ஓசாமாவின் சடலத்தைப் பற்றிய காணொளியோ, தெளிவான புகைப்படங்களோ இதுவரை அமெரிக்காவால் வெளியிடப்படாத நிலையில் ஓசாமாவின் சடலம் எங்கே என்று கேட்டால் இஸ்லாமிய முறைப்படியான சடங்குகளுடன் கடலுக்குள் புதைத்து விட்டதாக கதை விடுகிறது மூத்த ஏகாதிபத்தியம். உலகத்தின் மர்ம மரணப்பட்டியலின் எண்ணிக்கையில் இன்றைய நாளில் ஓசாமா பின்லேடனின் பெயரும் அடக்கப்படுகிறது.

உலகத்தின் மிகப்பெரிய தீவிரவாதி என வர்ணிக்கப்பட்ட பின்லேடனை வீழ்த்தி விட்டதாக வெற்றிக் களிப்பில் மிதக்கும் வெள்ளை மாளிகை ஓசாமாவின் கைகளில் ஆயுதத்தையும், அவர் மூளையில் தீவிரவாதத்தையும் திணித்ததே தாங்கள்தான் என்பதை மறந்து விட்டாலும் வரலாறு மறுக்காது - மாறாது. ஓசாமா பின் லேடன் போன்ற ஆயிரக் கணக்கான தீவிரவாதச் சிந்தனை



படிப்பகம்

www.padippakam.com

கொண்ட இளைஞர்களையும், அமைப்புகளையும் உருவாக்கி வரும் அமெரிக்காவை தீவிரவாதத்தின் கருவறை என்றுதான் வர்ணிக்க வேண்டும். அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட(படும்) தீவிரவாதப் பேய்க்கு இன்றும் ஏராளமான நாடுகளும் அங்குள்ள அப்பாவி மக்களும் பலியாகி வருவதை யாரும் மறுக்கமாட்டார்கள்... ஒசாமா பின் லேடன் என்ற ஒற்றை மனிதனுக்கு சவக்குழி தோண்டியதால் மட்டும் உலகத்தின் ஒட்டுமொத்த பயங்கரவாதத்தையும் புதைகுழிக்கு அனுப்பிவிட்டதாக அமெரிக்கா தப்புக் கணக்குப் போடத் தொடங்கினால் அதை விட முட்டாள்தனமான எண்ணம் வேறு எதுவுமாக இருக்கமுடியாது..

உலகத்தின் மிகப் பெரிய வல்லரசு என்ற நாட்டாண்மை முகத்திரையுடன் உலகத்தின் அனைத்தையும் அரங்கேற்றி வரும் அமெரிக்காவின் தீவிரவாத முகம் உடனடியாக வெளி உலகத்துக்கு தெரிவதில்லை. தான் வளர்த்த தீவிரவாத மிருகம் 2001 இல் தன்னையே கடிக்கத் தொடங்கியவுடன்தான் அமெரிக்காவுக்கு கிலி தட்டியது. தன் கண்ணுக்குள்ளேயே அல் கொய்தா விரல் விட்டு ஆட்டத் தொடங்கியவுடன்தான் உலகப் பயங்கரவாதம் பற்றி அமெரிக்கா உபதேசிக்கத் தொடங்கியது. இதற்கு ஒத்துப்பாட மற்றும் சில ஏகாதிபத்தியங்கள் முன்வர, ஆரம்பமானது ஒசாமாவின் தேடுதல் வேட்டை என்ற தலைப்பிலான ஆப்கான் நாட்டு மீதான ஆக்கிரமிப்பு.

ஆப்கான் மண்ணிலிருந்து ரஷ்யாவை விரட்ட வேண்டும் என்பதற்காக மதவெறியை தூண்டி விட்டு இஸ்லாமிய இளைஞர்களுக்கு தீவிரவாதத்தை திணித்த அமெரிக்கா அது தனக்கே எதிரியாக மாறும் என அன்று எண்ணியிருக்க மாட்டாது அமெரிக்காவின் மறைமுக சதித் திட்டத்தை உணராத அப்பாவி இஸ்லாமிய இளைஞர்கள் மதம் என்ற போர்வையில் அமெரிக்க வலையில் வீழ்ந்தனர். அப்படி அமெரிக்காவால் வடிவமைக்கப்பட்டவர்களில் ஒருவரான ஒசாமா பின் லேடன் தலைமையில் திரண்ட முக்கிய இளைஞர்கள் அணிக்கு அமெரிக்காவின் ஏற்பாட்டில் ஆயுதமும், நிதி உதவியும் தாராளமாகவே அள்ளி வழங்கப்பட்டன. அன்றைய அமெரிக்காவின் ஒரே நோக்கம் ஆப்கான் மண்ணிலிருந்து ரஷ்யா வெளியேற்றப்பட வேண்டும் என்பது தான். பின்லேடன் தலைமையிலான இந்தப் போராட்டக் குழுவினரை, ஆப்கானிஸ்தானின் சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்று அப்போதைய அமெரிக்க அதிபர் றொனால்ட் ரீகன் மனமாரப் பாராட்டினார். அவருடைய அந்த பாராட்டுப் பத்திரம் வரலாற்றின் பக்கங்களில் இன்றளவும் அழிக்க முடியாத அளவுக்கு



படிப்பகம்

www.padippakam.com

அழுத்தமாகவே பதியப் பட்டுள்ளது. கால ஓட்டத்தில் சோவியத் கூட்டமைப்பு வீழ்ச்சி அடைந்து, அமெரிக்கா- ரஷ்யா இடையிலான பனிப் போரும் முடிவுக்கு வந்ததன் பின்னர்தான் ஆப்கான் தொடர்பான அமெரிக்காவின் போக்கு மாறத் தொடங்கியது. தொடர்ச்சியாக ஆப்கான் தேசத்தை ஒரு போர்க் களமாக்கிய அமெரிக்கா அதற்கான எவ்வித பரிகாரமோ, நிவாரணமோ அளிக்காமல் இந்த விவகாரத்திலிருந்து விலகத் தொடங்கியது. இதுதான் அமெரிக்காவால் உருவாக்கப்பாட்ட ஒசாமா தலைமையிலான ஆயுதக் குழு, அமெரிக்காவுக்கு எதிராகவே ஆயுதம் தூக்க தயாரானதன் ஆரம்பம் எனலாம். பின்னர் , ஒருபுறம், ஈராக் மீது அமெரிக்கா நடத்திய அத்துமீறலும், ஆக்கிரமிப்பும் ஒசாமாவின் ஆயுதக் குழுவுக்கு அமெரிக்காவை தன்னுடைய முதல் எதிரியாக கருத வைத்தது. மறுபுறம் பாலஸ்தீனப் பிரதேசங்களைக் கைப்பற்றி, அந்த நாட்டிலேயே இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்கி, பாலஸ்தீன மக்களை இஸ்ரேல் அடிமையாக்கியதை எதிர்த்து நடந்து வரும் போராட்டங்களாக , இஸ்லாமிய அடிப்படை வாதம் அல்லது தீவிரவாதத்தின் கரு இருந்தது. இஸ்ரேல் என்ன செய்தாலும் அதைக் கண்டு கொள்ளாமல், இஸ்ரேலை தொடர்ந்து தட்டிக் கொடுத்த அமெரிக்காவுக்கு எதிராக தீவிரமாக களம் இறங்கினார் ஒசாமா பின்லேடன். இவற்றைத்தான் அவர் அமெரிக்காவின் பரம எதிரியாக மாறியதற்கான நியாயமான காரணங்களாக கொள்ளலாம். பாலஸ்தீன மக்களை அடிமையாக்கிய அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் மீது போர் தொடுக்க அல்கய்தா என்கின்ற தீவிரவாத அமைப்பு உருவாக்கப்பட்டது பின்லேடன் தலைலைமயில் .

நியூயார்க் இரட்டை கோபுரங்களை அமெரிக்காவின் விமானங்களைக் கொண்டே 2001 செப்டம்பர் 11 இல் தாக்கி அழித்த பின்லேடனை பாகிஸ்தானின் அப்போத்தாபாத் வரை விரட்டி வந்து 10வருடங்களின் பின்னர் வீழ்த்தியுள்ளது அமெரிக்கா. ஒசாமா பின்லேடனின் தீவிரவாதத்திற்கு பலியானவர்களின் எண்ணிக்கை ஆயிரக் கணக்கில் என்றால், தீவிரவாத ஒழிப்பு என்ற பெயரிலும், மக்களாட்சியை மலரச் செய்வதற்கான போர் என்ற பெயரில் அமெரிக்கா நடாத்திய-நடாத்தும் பயங்கரவாத நடவடிக்கைகளால் பலியானவர்களின் எண்ணிக்கை பல லட்சங்களைத் தாண்டும். இதில் யார் மோசமான தீவிரவாதி...?

ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டிருப்பதால் (உண்மையானால்) அது அல் கொய்தா இயக்கத்திற்கு ஒரு பின்னடைவே தவிர அது இஸ்லாமிய தீவிரவாதத்திற்கான முடிவுரை அல்ல. மதத்தை-



படிப்பகம்

மதவாதத்தை முன் வைத்து செயல்படும் எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் அவ்வளவு எளிதில் நீர்த்துப் போவதில்லை என்கின்ற வரலாறு அல் கொய்தா அமைப்புக்கும் பொருந்தும். மேலும் உலக அளவில் குறிப்பாக இஸ்லாமிய நாடுகளில் அமெரிக்காவால் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே உள்ளது. இது அமெரிக்காவுக்கு எதிரான மனிதர்களின் மனப் போக்கையும் அவர்களின் பழிவாங்கும் எண்ணத்தையும் அதிகரித்துக் கொண்டே உள்ளது.

ஆப்கான் மண்ணில் அமெரிக்காவால் ஊட்டி வளர்க்கப்பட்ட மதத் தீவிரவாதம் இன்று உலகத்தையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி இருக்கும் நிலையில் அதே பாணி செயல்பாடுகளை இன்னும் லிபியா போன்ற நாடுகளில் அமெரிக்கா தொடருவதுதான் கொடுமையிலும் கொடுமை. ஒசாமா பின் லேடன் எனும் ஒரு தீவிரவாதி, அமெரிக்கா எனும் ஒரு மிகப்பெரிய பயங்கரவாதியால் 10 ஆண்டுகளுக்குப் பிறகு பழிவாங்கப் பட்டுள்ளார். அவ்வளவுதான். பயங்கரவாதத்தின் அகோரமுகம் அல் கொய்தா வடிவில் மட்டுமல்ல அமெரிக்கா உடபட்ட பல வடிவங்களில் உலகளாவிய ரீதியில் உலவிக் கொண்டிருக்கிறது, இதுதான் இன்றைய உண்மை.

**04.05.2011**

www.padippakam.com

# சாமான்யர்கள் சமைக்கும் சர்வாதிகாரச் சமாதிகள்...

சில வரலாற்று நிகழ்வுகள் எப்படி நடக்கும்...? எப்போது நடக்கும்...? எங்கே நடக்கும்...? என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் அதன் தாக்கம் பூமி முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தும். அதுதான் புரட்சியின் சிறப்பு.

உலக சமூகத்திற்கு முதன் முதலில் நாகரிகத்தைக் கற்றுக் கொடுத்த நைல் நதிக் கரையெங்கும் இன்று சர்வாதிகார ஆட்சிகளுக்கு எதிரான மக்கள் புரட்சி, அலை அலையாய்... சுழன்று அடிக்கும் சுனாமியாய்... வெகுண்டெழுகிறது. அதிகாரவர்க்கத்தின் அடக்கு முறைகளுக்கு எதிராக ஒன்றுபட்டு திரளும் மக்களுக்கு முன், ஆயுதங்களும் ராணுவமும் பொம்மைகளாகிவிட மணிமகுடம் தரித்தவர்கள் இன்று மண்ணைக் கவ்வி வருகிறார்கள். ஆட்டம் காணத் தொடங்கி உள்ள அதிகாரப் போதை மன்னர்களை, உயிர் தப்பினால் போதும் என்ற நிலைக்கு தள்ளியுள்ளது, எரிமலையை விடப் பெரிய சக்தியான ஏழை - நடுத்தர மக்களின் கோபம். பெரும் நெருப்பில் பிழைப்பவர் எவர் என்பர்.

பிரெஞ்சு புரட்சி - சோவியத் புரட்சி - மாவோவின் செஞ்சீனப் புரட்சி - லத்தீன் அமெரிக்க நாடுகளில் சேகுவரா - பிடல் காஸ்ட்ரோ முன்னெடுத்த பாட்டாளி வர்க்கப் புரட்சி - வியட்நாமியர்களின் வீரப்புரட்சி இப்படி மக்கள் புரட்சியை இந்த மண் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சந்தித்துள்ளது. நீண்ட வருடங்களின் பின்னர் , கடந்த சில மாதங்களாக மத்திய கிழக்கு, ஆபிரிக்க நாடுகளின் தெருக்களில் அணி அணியாய் திரண்டெளும் மக்கள் கூட்டமும், அதன் தொடர்ச்சியாய் அரபு நாடுகள் ஒவ்வொன்றிலும் சர்வாதிகாரத்துக்கு எதிராகப் பற்றி எரியத் தொடங்கி உள்ள மக்கள் எழுச்சியும், நிகழ்காலப் புரட்சியின் நிதர்சன நெருப்புக்கள்...!



படிப்பகம்

நீண்ட வருடங்களாக ஜனநாயக உணர்வற்று உறக்கத்தில் கிடந்த ஆபிரிக்க, அரபு தேச மக்கள் திடீரென கொந்தளித்தது எப்படி...?, என்பதை உலகம் இமைக்காமல் பார்த்து வருகிறது. உறங்கிக் கிடந்த எரிமலைகளை பற்ற வைத்தது எது...? அரபு மண்ணும் ஏன் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகமும் கூட ஆச்சரியம் விலகாத அதிர்ச்சியில் பார்க்கிறது.

ஆபிரிக்க நாடான துனீசியாவில் வேலைகிடைக்காத ஓர் படித்த பாமர இளைஞன் தன்னைத்தானே தீ வைத்து மாய்த்துக் கொண்டு பற்ற வைத்த புரட்சித் தீ தான் இன்றைய புரட்சியின் முதல் துளி. அது எகிப்தையும் எரிமலை ஆக்கி 23 வருட கால துனீசியாவின் சர்வாதிகார ஆட்சிக்கும் சமாதி கட்டியது. அந்நாட்டு அதிபர் பின் அலியை நாட்டை விட்டே ஓட்டம் பிடிக்க வைத்த அந்தப் புரடசிக் கனலின் எல்லை லிபியா, அல்ஜீரியா, மொராக்கோ, ஜோர்டான், சிரியா, சவுதி, ஏமன், பாஹ்ரேய்ன் என விரிந்து கொண்டே போகிறது. எல்லை விரியும் இந்த மக்கள் எழுச்சி ஒரு வெற்றிப் புரட்சியாக சரித்திரம் படைக்குமா...? கேள்வியுடனான ஒரு சிறிய ஆய்வே இது.

## எரிமலையான எகிப்து

அதிபர் ஹோஸ்னி முபாரக்கின் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆட்சிக் காலத்தின் துயரத்தை அனுபவித்த, சகித்துக் கொண்டு அவல நிலையில் வாழ்ந்த, மக்கள் ஆட்சி என்றால் இதுதானா...? என வேதனையின் விளிம்பில் நின்ற எகிப்தியர்களுக்கு புரட்சி அவசியமானதுதான். அவர்களுக்கு ஆறுதல் வழங்கிய அந்த நாட்டின் பிரதான எதிர் கட்சியான இஹ்வான்களோ வெஞ் சிறையில் அடைக்கப்பட பொறுத்துப் பொறுத்துப் பார்த்து வெறுத்துப் போயிருந்தனர் மக்கள். சொந்த நாட்டின் முடிவை தீர்மானிக்கும், மக்களின் உரிமைகளை நீண்டகாலமாக மறுத்து வந்த அதிபர் முபாரக் ஆயுதங்களை மட்டும் நம்பியே எகிப்தை ஆட்சி புரிந்தார். இவற்றிற்கெதிராக எழுச்சிப் பெற்ற எகிப்து நாட்டு மக்கள் இந்த சர்வாதிகாரியை ஆட்சியை விட்டு அகற்றாமல் அடங்கப் போவதில்லை என்பதை தமது நடவடிக்கை மூலம் தெரிவித் துள்ளனர். ஒரு தனிமனிதரையும் அவருடைய குடும்பத்தினரையும் எதிர்த்து நடந்த எகிப்தின் மக்கள் போராட்டத்தில் ஏராளமானோர் கொல்லப்பட்டு ஆயிரத்திற்கு மேற்பட்டோர் காயமடைந்து கோடிக்கணக்கான மதிப்புடைய சொத்துக்கள் கொள்ளையடிக்கப் பட்டுமுள்ளன. எகிப்தின் வீதிகளில் நடை பெற்ற - நடைபெறும் மக்கள் புரட்சி திடீரென உருவானது அல்ல. நாட்டிற்கு நல்லதை

www.padippakam.com

நாடியவர்களால் பலமுறை எச்சரிக்கப்பட்ட முபாரக், அவற்றை யெல்லாம் செவிசாய்க்க மறுத்த நிலையிலேயே பேராட்டம் வெடித்தது, மக்கள் வீதிக்கு வந்தனர்.

இஸ்லாமிய அடிப்படை வாதிகள் ஆட்சிக்கு வந்துவிடுவார்கள் என பிரச்சாரம் செய்து எகிப்தில் ஏகாதிபத்திய ஆட்சியை நிலைநாட்ட மேற்கத்திய நாடுகள் முயற்சி செய்யக்கூடும் என்ற அச்சத்தில் ஹோஸ்னி முபாரக்கிற்கு எதிரான போராட்டத்தில் எதிர்கட்சியான இஹ்வான்கள் மிக சாதுர்யத்துடன் காய்களை நகர்த்தி வருகிறார்கள். கடுமையான அடக்குமுறைகளை சந்தித்த இஹ்வானுல் முஸ்லிமீன் என்கின்ற இயக்கத்தின் உள்கட்டமைப்பு மற்றும் போராட்ட வீரியம் வலுவாக உள்ளது. தேர்தல் நடந்தால் இவர்களுக்கே மக்கள் ஆதரவு கிடைக்கும் என கருதப்படும் நிலையில், தங்களது விருப்பத்திற்கு ஏற்ப தலை அசைக்கும் ஹோஸ்னி முபாரக் ஆட்சி கவிழ்ந்து விட்டால் என்ன நிகழும்...? இது குறித்த அச்சத்தின் உச்சத்தில் இருக்கும் அமெரிக்காவும், இஸ்ரேலும் எப்படி காய் நகர்தப் போகின்றன...? அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா, ஹோஸ்னி முபாரக்கை விமர்சித்தது ஏதோ ஜனநாயகம் மற்றும் மக்கள் உரிமை குறித்த கவலையினால் அல்ல என்பதும் தவிர்க்க முடியாத மக்கள் எழுச்சியை சந்திக்கும், 82 வயதான அவரை பதவியிறக்கிவிட்டு, அவர் போன்ற ஏகாதிபத்திய இளம் அடிவருடி ஒருவரிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் தான் என்பதும் ஏகாதிபத்தியத்தின் குணாம்சங்களை நன்றாக அறிந்தவர்களுக்கு புரியும்.

எகிப்து நாட்டு சர்வாதிகாரி ஹோஸ்னி முபாரக் ஆட்சியிலிருந்து வெளியேற வேண்டுமெனக் கோரி அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மக்கள் போராட்டம் வலுவடைந்த வேளையில் மொரோக்கோ, அல்ஜீரியா போன்ற மத்தியக் கிழக்கு நாடுகளிலிருந்தும் இது போன்று மக்கள் கிளர்ச்சி இயக்கங்கள் வெடித்ததாக செய்திகள் வெளியாகின. இவற்றை எல்லாம் வெளி உலகுக்கு கொண்டுவந்த அல்ஜஸீரா தொலைக்காட்சி எகிப்தில் தடை செய்யப்பட்டு அதன் செய்தியாளர்கள் கைது செய்யப்பட்டனர். மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள மக்கள் பல ஆண்டுகளாக அங்குள்ள எதேச்சதிகார, ஏகாதிபத்திய பிரதிநிதி ஆட்சியாளர்களால் துன்பத்திற்கு ஆளாகியிருந்தபோதிலும், கடந்த இரு ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள உலகப் பொருளாதார நெருக்கடி அந்த மக்களையும் மேலும் பாதிப்புக்குள்ளாக்கியது. சர்வதேச நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் பொருளாதாரச் சீர்திருத்தங்களைப்



படிப்பகம்

பின்பற்றும் பிரியமுள்ள நாடுகளாக இருந்த எண்ணை வளம் மிக்க எகிப்தும், ஜோர்டானும் உலகப் பொருளாதாரத்துடன் தங்களை ஆழமாகப் பிணைத்துக் கொண்டிருந்ததும் மக்கள் பாதிப்புக்கு மற்றொரு காரணம் எனலாம். சூயஸ் கால்வாய், சுற்றுலாத்துறை மற்றும் ஏற்றுமதிகள் மூலம் ஈட்டப்பட்டு வந்த எகிப்தின் வருவாயும் கடுமையாகப் பாதித்து, அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியையும் கடும் வீழ்ச்சிக்குள்ளாக்கியது. எகிப்தில் 2005இல் 34விழுக்காடாக இருந்த இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் அதிகரித்தது.இத்தகைய கடும் துன்ப துயரங்களின் தாக்கம்தான், இத்தகைய மக்கள் எழுச்சிக்கான உடனடிக் காரணங்களாகும். பனிப்போர் காலத்திற்குப் பின் அமெரிக்கா கொண்டுவர எத்தனித்த புதிய உலக ஒழுங்கு திட்டம், தொடர்ந்து நொருங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் உலக நிகழ்வுகளைத் தீர்மானிப்பதில் அமெரிக்காவிற்கு இருந்து வந்த திறன் கணிசமாக நலிவடைந்து வருகிறது என்பதையுமே இந்நிகழ்ச்சிப் போக்குகள் காட்டுகின்றன என்பது மிகவும் முக்கியமாகும்.

கடந்த காலங்களில் ஏகாதிபத்தியம், பல நாடுகளில் குறிப்பாக மத்தியக் கிழக்கு நாடுகளில் தன் உலகமய நலன்களைப் பாதுகாத்திடுவதற்காக மிகவும் கொடூர நிகழ்வுகளை நிகழ்த்தியது. 1953இல் ஈரானில் எண்ணெய் வளங்கள் தேசியமயமாக்கப்பட்ட போது அங்கே ஆட்சியிலிருந்த மொசாடேக், சிஐஏ-தலைமையில் நடைபெற்ற ராணுவ சதி மூலமாகத் தூக்கி எறியப்பட்டது, 1956இல் அதிபர் நாசர் சூயஸ் கால்வாய் போக்குவரத்தை தேசிய மயமாக்கியதை அடுத்து எகிப்துக்குள் ஆங்கிலோ பிரெஞ்சு ஊடுருவலை மேற்கொண்டது, எண்ணெய் வளங்கள் மீதான கட்டுப்பாடு, சூயஸ் கால்வாய் போக்குவரத்தில் கட்டுப்பாடுகளை விதித்தது, மற்றும் ஏகாதிபத்தியத்தின் நலன்களைப் பாதுகாத்திடு வதற்கு ஒத்துழைப்பு நல்கும் அமெரிக்க ஆதரவு ஆட்சிகளை இந்த நாடுகளில் நிறுவ வைத்தது, மற்றும் இப்பிராந்தியத்தில் இஸ்ரேல் ராணுவத்தின் மேலாதிக்கத்தை ஏற்படுத்தியது. இப்படியான அமெரிக்கா - ஜனநாயகம், மனித மாண்புகள் - மனித உரிமைகள் காவலர் என்று தன்னைத்தானே பிரகடனம் செய்து கொள்ளும் அமெரிக்கா, எகிப்து போன்ற நிகழ்ச்சிப் போக்குகள் தொடர்பாக மிகவும் எச்சரிக்கையாகவே காயை நகர்த்தும் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. துனீசியா, ஏமன் மற்றும் ஜோர்டான் - ஆகிய நாடுகளிலும் தற்போது அமெரிக்க ஆதரவு ஆட்சிகள்தான்.

www.padippakam.com

எகிப்தில் தொடர்ந்து தன் பிடியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்கிறது. தன்னிடம் வெகு காலம் வேலை பார்த்த உளவுத் துறைத் தலைவர் உமர் சுலைமான் என்பவரை துணை ஜனாதிபதியாக முபாரக் நியமித்ததன் மூலம் ராணுவத்தினரின் எதிர்ப்பைச் சமாளித்திடலாம் என்றும் அடுத்த தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்றும், முபாரக் அறிவித்ததும் மக்களால் உருப்படியான சீர்திருத்த நடவடிக்கைகளாகப் பார்க்கப்படவில்லை. இப்போது அனைவரின் கவனமும் வெகுகாலம் வெளி நாடுகளிலேயே இருந்து விட்டு தற்போது நாடு திரும்பி இருக்கக் கூடிய, மாற்றத்திற்கான தேசிய சங்கம் என்று அழைக்கப்படக்கூடிய, அமைப்புக்குத் தலைமை தாங்கும், முன்னாள் சர்வதேச அணுசக்தி முகமை தலைவர் எல்பாரடே மீது திரும்பியிருக்கின்றன. சர்வதேச அணுசக்தி முகமையில் அவர் தலைவராக இருந்த சமயத்தில் இராக் ராணுவ நடவடிக்கைகளின்போது அமெரிக்கா தனக்கு ஆதரவாக அவரைப் பயன்படுத்திக் கொண்டதுபோல் இப்போதும் முயற்சிக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

பல தலைமுறைகளாக, அரபு நாடுகளில் உள்ள மக்கள், அளப்பரிய தியாகங்களும் போராட்டங்களும் நடத்தியிருந்த போதிலும், அவை அனைத்தும் தலைவர்களின் சந்தர்ப்பவாதம் மற்றும் ஏகாதிபத்தியத்தின் பசப்பு வார்த்தைகள் ஆகியவற்றால் புரட்சிகர மாற்றங்கள் அங்கே ஏற்படாதவாறு சிதறடிக்கப்பட்டிருக்கின்றன. இப்போது எகிப்தில் நடைபெறும் மக்கள் எழுச்சியும் அதேபோன்று முடிவுக்கு வந்துவிடுமோ...? என்கிற நியாயமான அச்சம் எழவே செய்கிறது... இப்போது ஏற்பட்டுள்ள மக்கள் எழுச்சி, நிச்சயமாக எதேச்சதிகார அடிப்படை இஸ்லாமிய ஆட்சியைக் கொண்டுவராது என்பது நிச்சயம்.

புதிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முற்போக்குத் துனிசியன் கட்சியைப் பிரதி நிதித்துவப்படுத்தும் எட்டாஜ்டிட என்பவர், "நாம் புரட்சியைப் பாதுகாக்க வேண்டும், அதேசமயத்தில் பெண்கள் உரிமைகள் மற்றும் மதச்சார்பின்மை தொடர்பாக அடைந்திட்ட ஆதாயங்களையும் பாதுகாத்திட வேண்டும்" என்று குறிப்பிட்டிருக் கிறார். எகிப்தின் மக்கள் எழுச்சியும் அதனூடான இழப்புகளும் மக்களுக்கு பயனளிக்குமா...? வழமை போல பொறுக்கத்தான் வேண்டும்...



படிப்பகம்

www.padippakam.com

## புரட்சிக்கு வித்திட்ட துனீசியா

26 வயதேயான வேலையற்ற பட்டதாரி இளைஞன் முஹமத்தின் தற்கொலை மரணம், ஒரு மக்கள் புரட்சியாக மாறும் என்று எவரும் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள். ஆனால் அது சாத்தியமாகி இருக்கிறது துனீசியா தேசத்தில். பட்டப் படிப்பு முடித்தும் வேலை வாய்ப்பு இல்லாத நிலையில் ஜீவனத்திற்காக நடைபாதையோரமாக காய்கறி விற்றுக் கொண்டிருந்த முஹமத்தை அந்த நாட்டுக் காவல் துறையினர் கடைக்கு உரிமம் கேட்டு தொந்தரவு செய்தனர். எங்கு முறையிட்டும் பலனற்ற நிலையில் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டான் அந்தப் படித்த இளைஞன். ஊர், பேர் தெரியாத அந்த இளைஞனின் மரணச் சடங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். அவனது இறப்பும் அந்த மரணச் சடங்கும் தான் மக்களை சீற்றமடைய வைத்து அதிகார வர்க்கத்திற்கு எதிரான எழுச்சியாக அங்கே உருப்பெற்றது. அரச நிறுவனங்கள் தாக்கப்பட்டன, கடைகள் சூறையாடப்பட்டன. 23 வருடங்களாக துனீசியாவின் சர்வாதிகார ஆட்சி நடத்த உறுதுணையாக இருந்ததெனக் கருதப்படும் பிரெஞ்சு தூதரகம் கூட சுற்றி வளைக்கப்பட்டது. வேலையற்ற இளைஞர்களின் கலகமாக ஆரம்பித்த போராட்டம், வழக்கறிஞர்களும், தொழிற்சங்கங்களும் தமது ஆதரவை தெரிவிக்கும் வகையில் பெரும் போராட்டமாக மாறியது. உழைக்கும் வர்க்கமும், இழப்பதற்கு எதுவுமற்ற பாமர மக்களும் ஒன்று சேர்ந்து போராடினால் புரட்சி நிச்சயம் என்பதை துனீசியா மக்கள் சாதித்துக் காட்டியுள்ளனர்.

அரபுலகில் முதன் முதலாக இணையம் மூலம் ஒழுங்கமைக்கப் பட்ட புரட்சியும் இதுவாகும். ஒருபுறம் துனீசிய கொடுங்கோல் அரசின் இணையத் தடையை மீறி, டிவிட்டர், ஃபேஸ்புக் போன்ற சமூக வலையமைப்புகள் எதிர்ப்பு நடவடிக்கைகளை உடனுக்குடன் அறிவித்துக் கொண்டிருந்தன. மறுபுறம் அரசின் அடக்குமுறைகளை காட்டும் வீடியோக்களை, இணையத்தின் வழி பரவ விடாமல் அரச விற்பன்னர்கள் உடனுக்குடன் அழித்துக் கொண்டிருந்தார்கள். கலகத்தை அடக்க அனுப்பப்பட்ட காவல் படையினர், வழமையான துப்பாக்கிச் சூடு, கைதுகள், என்று மக்கள் எழுச்சியை அடக்கும் பணியில் ஈடுபபட்டனர். ஆனால் அனைத்துத் தடைகளையையும் மீறி, இறுதியில் மக்கள் சக்தி வென்றது.

துனீசியாவின் சர்வாதிகாரி பென் அலியே மக்கள் முன் வந்து கைது செய்த போராட்டக்காரர்களை விடுதலை செய்து, ஏதோ திடீரென்று உறக்கத்தில் இருந்து விழித்துக் கொண்டவர் போல,



படிப்பகம்

வேலையற்ற மக்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தப் போவதாக விடுத்த அறிவிப்பை யாரும் பொருட்படுத்தவில்லை. இறுதியில் நாட்டை விட்டு வெளியேறி, சவூதி அரேபியாவில் அகதித் தஞ்சம் கோர வேண்டிய அவல நிலை அவருக்கு ஏற்பட்டது.

மேற்கத்திய நாடுகளால் ஆதரவளிக்கப்படும் சர்வாதிகாரிகள், மக்களின் ஜனநாயக சுதந்திரத்தை மறுப்பதுடன் அரச அடக்குமுறைகளை கண்டு கொள்வதில்லை. அதேவேளை சாதாரண மக்களை பாதிக்கும் வேலைவாய்ப்பின்மை, வறுமை, போன்ற பிரச்சினைகளால் விரக்தியுறும் இளைஞர்கள் பட்டப் படிப்பு படித்தாலும் வேலையின்றி, வெளிநாடுகளுக்கு ஓடிக் கொண்டிருக்கிறார்கள். வெளிநாடு போக வசதியற்றவர்கள், வழி தெரியாதவர்கள் தீவிரவாதிகளாக மாறுகிறார்கள். மேற்கத்தைய நாடுகளும், உள்நாட்டு சர்வாதிகார ஆட்சியும் அவர்களை பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி அடக்கி ஆள முனைகின்றன. துனீசியாவிலும் கலகம் செய்த இளைஞர்களையும் அவர்களுக்கு ஆதரவாக வெகுண்டெழுந்த மக்கள் கூட்டத்தையும், பென் அலி, அல்கய்டா பயங்கரவாதிகள் என முத்திரையிட முனைந்தார். எதுவும் மக்கள் சக்தியின் முன் எடுபடாமல் போய் மக்கள் போராட்டம் மகத்தானது. மக்கள் போராட்டத்திற்கு கிடைத்த இந்த முதல் வெற்றியை அடுத்துத்தான் மேற்காசியா மற்றும் ஆபிரிக்க நாடுகளில் மக்கள் எழுச்சி புரட்சியாகிக் கொண்டிருக்கிறது.

## லிபியா

மக்கள் புரட்சியில் வட ஆபிரிக்க நாடான லிபியாவும் இப்போது இணைந்து கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. 42 வருடங்களாக அங்கே அதிபராக இருக்கும் முஆம்மர் கடாபிக்கு எதிராக மக்கள் நடத்தும் புரட்சி தீவிரமடைந்து அங்கே போர் மேகங்கள் சூழ்கின்றன. எந்த நேரமும் கடாபி கைது செய்யப்படலாம் அல்லது நாட்டை விட்டு தப்பிக்கலாம் என்கின்ற நிலை. கடாபி உடனே பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி தொடரும் மக்கள் போராட்டத்தில் வன்முறைகளும் பரவலாகி அங்கு தொழில் புரிந்த பல நாட்டவரும் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

கடாபி பதவியை விட்டு விலகாவிட்டால் நாட்டைவிட்டு துரத்தப்படுவார் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் அவரின் அரச படைகள் மக்கள் எழுச்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்க முயற்சி செய்வதாகவும் பல்லாயிரக் கணக்கான மக்களை கடாபியின் ராணுவம் குண்டு வீசி கொலை செய்வதாகவும்

தகவல்கள் வெளியாகின்றன. கடாபியின் அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன. அமெரிக்க போர்க்கப்பல்கள் லிபியாவை முற்றுகையிட்டுள்ளன. இருந்தும் கடாபியின் சர்வாதிகாரத் தொனியும், மக்கள் விரோதப் போக்கும் இன்றுவரை குறையவேயில்லை. ஆனால் கட்டுக்கடங்காமல் கொந்தளிக்கத் தொடங்கியுள்ள லிபிய மக்களின் நீண்ட கால கோபத்தின் முன் இது தொடர்ந்து எடுபடுமா...?

லிபியாவை குருதிக் காடாக மாற்றி சொந்த நாட்டுமக்களை ஒட்டுமொத்தமாக கொன்றொழிக்கும் கடாபியின் பல்முனை நடவடிக்கைகளையும் துணிவுடன் எதிர்கொண்டு போராடி வரும் ஆயிரக்கணக்கான மக்கள் போராளிகள் இதுவரை இரத்த சாட்சிகளாக மாறிய பொழுதும் கடாபியும் அவரது மகன்களும் அடங்குவதாகவோ இறங்குவதாவோ தெரியவில்லை. அதே வேளை எண்ணெய் வளமிக்க பகுதிகள் உள்பட லிபியாவின் முக்கிய பிரதேசங்களையெல்லாம் கைப்பற்றியுள்ள போராளிகள், தலைநகர் திரிபோலிக்கு 50 கி.மீ தொலைவிலுள்ள ஸாவியாவையும் தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துவிட்டதாத் தெரிவிக்கப்படுகிறது. தனக்கு ஆதரவான ராணுவத்தின் பின்னடைவால் கொதிப்படைந்த கடாபி அயல் நாடுகளிலுருந்து கூலிப் படைகளை இறக்குமதி செய்து ஆட்சியை காப்பாற்றுவதற்கான இறுதிப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்.

கடாபி பதவி விலகவோ அல்லது கொல்லப்படவோ செய்தால் அடுத்த தலைமைக்கான பணிகளும் திரைமறைவில நகர்ந்து கொண்டு இருக்கின்றன. கடாபியின் வீழ்ச்சியும், மக்கள் எழுச்சியும் நிதர்சனமாகும் என்பதை அறிந்துக்கொண்ட அமெரிக்கா, புரட்சியை முறியடிக்கவும், அதன் வெற்றியை தட்டிச் செல்லவும் முயன்று வருகிறது. கடாபியை வீழ்த்த ஆயுதம் தருகிறோம் என்ற அமெரிக்காவின் வாக்குறுதி இதனை நிரூபிக்கிறது. எல்லாவித உதவிக்கும் நாங்கள் தயார் என்பதை ஹிலாரி கிளிண்டன் அறிவித்துள்ளார். லிபியாவின் கடற்பகுதிக்கு போர் கப்பல்களையும், போர் விமானங்களையும் அனுப்பியுள்ளன அமெரிக்காவும் சில மேற்கத்திய நாடுகளும். ஆனால், அமெரிக்காவின் சதிவலையை அடையாளங் கண்ட தேசிய தற்காலிக ஆட்சிமாற்றக் குழு அனைத்து வெள்நாட்டு தலையீட்டையும், படை வரவுகளையும் தாங்கள் எதிர்ப்பதாக உறுதியாக தெரிவித்துள்ளது. இஸ்லாமிய நாடுகளின்

கூட்டமைப்பும் அமெரிக்கா போன்ற வெளிநாட்டுத் தலையீட்டை கண்டித்துள்ளது.

தினமும் ஏறத்தாழ 10 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெயை உற்பத்திச் செய்யும் லிபியாவின் எண்ணெய் வளத்தின் மீதுதான் மேற்கத்திய நாடுகள் நோட்டம் இருக்கும் என்பது தெரியாததல்ல. ஈராக், ஆப்கானிஸ்தான் இன்னும் பல நாடுகளைப் போல் லிபியாவிலும் ஒரு கைப்பாவை அரசை உருவாக்குவதுதான் அமெரிக்காவின் லட்சியம். தம்மை ஆதரிக்கும் சர்வாதிகார ஆட்சியாளர்கள் அவர்கள் எவ்வளவு கொடூரங்களை புரிந்த பிறகும் இறுதிவரை ஆதரிப்பதும், கடைசியில் அவர்கள் மக்கள் எழுச்சியினால் பதவி விலக நேரும் வேளையில், தாம் மக்கள் போராட்டத்திற்கு ஆதரவளிக்கிறோம் எனக் கூறிக்கொண்டு ஆட்சியை தட்டிப் பறிப்பது அமெரிக்க ஏகாதிபத்தியம், இதுநாள் வரை கடைப்பிடித்துவரும் தந்திரமாகும். சில நாடுகளில் அவர்களின் லட்சியம் நிறைவேறாமல் தந்திரங்கள் பலிக்காமல் போயுள்ளதையும் காண்கின்றோம்.லிபியா மக்களின் எழுச்சியும், சுதந்திரத்திற்கான போராட்டமும் எவ்வித வெளிநாட்டு சக்திகளின் தலையீடின்றி உருவானதாகும். ராட்சசனாக மாறியுள்ள கடாபிக்கு எதிரான ஐ.நா. - அமெரிக்க - ஐரோப்பிய யூனியனின் தடைகள் தற்காலிக நியாயமாக இருந்தாலும், அவை ஒருபோதும் லிபியாவின் மக்களை தண்டிப்பதாக இருக்கக் கூடாது. அனைத்தையும் உடைத்த லிபிய மக்கள் எழுச்சியின் வெற்றியே புரட்சியாகும்.

## அல்ஜீரியா

அல்ஜீரியாவும் மக்கள் புரட்சியை நோக்கி பயணிக்க தொடங்கியுள்ளது. தலைநகரான அல்ஜீர்யஸில் ஏராளமானோர் பங்கேற்ற போராட்டத்தை பாதுகாப்பு படைகள் கடுமையாக அடக்கியது. பொதுக் கூட்டங்களை தடை செய்யும் புதிய சட்டத்தை திரும்ப பெற வேண்டுமென்பது மக்களின் முக்கிய கோரிக்கையாகும். மக்கள் எழுச்சி கண்டு செய்வதறியாது தவிக்கிறது அல்ஜிரிய அதிகார வர்க்கம்.. இங்கும் வேலையில்லாத திண்டாட்டம் வறுமை என்பன அந்நாட்டு மக்களை ஆத்திர அமிலத்தில் ஆழ்த்தியது. துனீசியாவில் நடைபெற்றதை நிகழ்த்த விரும்புகிறோம் என வெளிப்படையாகவே தெரிவிக்கின்றனர் புரட்சியாளர்கள்.

அரசுக்கெதிரான போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்த Rally for Culture என்ற அமைப்பின் ஏராளமான தலைவர்கள் கைதுச் செய்யப்பட்டு மக்கள் போராட்டங்களுக்கு தடை

www.padippakam.com

விதிக்கப்பட்டது. ஆனால் இவற்றையெல்லாம் தாண்டி 1992 ஆம் ஆண்டு முதல் அல்ஜீரியாவில் அமுலில் உள்ள அவசர காலச் சட்டத்தை எதிர்த்தும் விலைவாசி உயர்வு, வேலைவாய்ப்பின்மை போன்றனவிற்கு எதிராகவும் பொதுமக்கள் வீதியில் இறங்கி போராட ஆரம்பித்துள்ளனர். போராட்டத்திற்கு பல்வேறு மாணவர் அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

## ஜோர்டான்

ஜோர்டான் அரசை தூக்கியெறிவோம் என அந்நாட்டு மக்களும் புரட்சியாளர்களாக உருவெடுத்ததையடுத்து விலைவாசியை குறைக்கவும் வேலையின்மையை போக்கவும் ஒரு புதிய நிதி திட்டத்தை அந்த நாட்டு அரசு அறிவித்தது. அது வெறும் கண்துடைப்பே எனக்கூறி மக்கள் திரள் வீதிக்கு வந்து தொடர்ந்து நீதி கேட்டு போராடியது.

பிரதமர் ஸாமிர் ரிஃபாயீ பதவியை விட்டு ஓடும் வரை போராடுவோம் என மக்கள் ஆவேசமாக தெரிவிக்கின்றனர். துனீசியாவின் பின் அலீ ஜெயினுல்ஆபிதீனை போல் நம் மன்னரும் அடைக்கலம் தேடி வெளியே ஓட வேண்டும் என போராட்டக் காரர்கள் தங்கள் விருப்பத்தினை தெரிவித்தனர். ஜோர்டானில் கடந்த 2009 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ரிஃபாயீ, நடைமுறைப்படுத்திய பொருளாதார சீர்திருத்தங்கள் மக்களின் ஆத்திர அணையை உடைத்தன. அத்தியாவசியப் பொருட்களுக்கு அளிக்கப்படும் வரிச் சலுகை நீக்கப்பட்டது மக்களை அதிருப்தியுற செய்தது.

நாட்டின் பிரதமரை மன்னர் அப்துல்லாஹ் நேரடியாக நியமிப்பதை கைவிட்டுவிட்டு ஜனநாயக ரீதியாக பிரதமரை தேர்வு செய்யவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர் போராட்டக் காரர்கள். மன்னர் வழிகாட்டியாக மட்டும் இருந்தால்போதும். நாட்டின் நிர்வாக விஜயங்களைச் செயல்படுத்த முனையக்கூடாது என போராட்டக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## ஏமன்

ஊழல் ஆட்சியாளர்களை எதிர்த்து ஏமன் நாட்டிலும் மக்கள் போராட்டத்தில் குதித்தனர். அங்கும் அதிபர் அலீ அப்துல்லாஹ் ஸாலிஹ் பதவி விலக வேண்டும் எனக்கோரிய அந்நாட்டுமக்கள் திரள் போராட்டங்களை தொடர்கின்றனர். ஸன்ஆ என்கின்ற பல்கலைக்கழகத்தில் நடந்த கண்டனப் பேரணியில் ஆயிரக் கணக்கானோர் பங்கேற்றனர். ஏமன் நாட்டில் மாணவர்கள், சமூக



படிப்பகம்

www.padippakam.com

சேவகர்கள், எதிர்கட்சியினர் என ஏராளமானோர் கலந்து கொண்ட, மன்னர் அப்துல்லாஹ் ஸாலிஹிற்கு எதிரான பிரமாண்டமான கண்டனப் போராட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. துறைமுக நகரமான ஏதனிலும் நடந்த போராட்டத்தில் போராட்டக்காரர்கள் மீது காவல்துறை துப்பாக்கிச்சூடு நடாத்தி 22 பேரைக் கைது செய்தது. நாட்டின் அதிபர் ஆயுள் முடியும்வரை ஆட்சிபுரிய வழிவகை செய்யும் வகையிலான சட்டமும் மக்களை கடும் கோபத்தில் ஆழ்த்தியுள்ளது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு போன்ற ஏகாதிபத்தியங்களின் ஆதரவுடன் அந்நாடுகளில் வாழும் அப்பாவி மக்களின் ஜனநாயக உரிமைகளை எவ்வளவு காலம் வேண்டுமானாலும் காலில் போட்டு மிதித்தாலும், அவர்கள், வறுமையில் வாடினாலும் அவர்களை தொடர்ந்தும் அடக்கி ஒடுக்கி ஆளலாம் எனக் கருதி சுகபோக வாழ்வில் மூழ்கியிருந்த சர்வாதிகாரிகளின் கனவு தகர்ந்து போனதன் காட்சிகளைத்தான் துனீஸ், கெய்ரோ, திரிபோலி, ஸன்ஆ, அம்மான், அல்ஜீர்யஸ் நகர வீதிகளில் மக்களின் போராட்டங்களாக நாம் காண்கிறோம்.

அரபுலக வீதிகளில் திரளும் இந்த மக்கள் சக்தியை, ஆதிக்க சக்திகளுக்கு விடுக்கப்படும் ஒரு எச்சரிக்கையாகவே பார்க்க வேண்டும். புதியதொரு சமத்துவ சமுதாயத்தைக் கட்டி எழுப்பக்கூடிய ஜனநாயக அமைப்பொன்றின் மூலமாகவே அமெரிக்காவின் கட்டளைகளுக்கு அடிபணிந்து ஆட்சி நடத்தும் சர்வாதிகார ஆட்சிகளை வீழ்த்திடவும், அடிப்படைவாத இஸ்லாமிய ஆட்சிகள் அமைவதைத் தடுத்திடவும் முடியும். மொசாடேக் தூக்கி எறியப்பட்ட சமயத்தில் நடைபெற்ற சம்பவங்கள் அதன் தொடராக அமெரிக்காவால் மன்னர் ஜா ஆட்சி நிறுவப்பட்டமை, ஈரானில் இஸ்லாமிய புரட்சி உருவாவதற்கு இட்டுச் சென்றன. இவை மத்தியக் கிழக்கு நாடுகளின் வேதனைமிகுந்த வரலாற்று நிகழ்வுகளாக இன்னமும் மக்களால் பார்க்கப்படுகின்றன.

இத்தகைய பின்னணியில், தங்கள் பிராந்தியத்தில் புதியதொரு வரலாற்றை உருவாக்கிட முயற்சிகள் மேற்கொண்டுள்ள அரபு மற்றும் ஆபிரிக்க மக்களின் போராட்டம் ஓர் சமுதாயப் புரட்சியாக மாற்றமடைய உலகம் முழுவதுமுள்ள நடுநிலையாளர்களின் முழுமையான ஆதரவு அவசியமாகிறது.

**05.03.2011**



படிப்பகம்

www.padippakam.com

# பினாயக் சென்னுக்கு ஆயுள் தண்டனை... கேள்விக் குறியாகிறதா இந்திய நீதித்துறை?

ஆளும் அதிகாரவர்க்கத்தின் ஆடுகளமாகி விட்டதா...? அல்லது நடுநிலை பார்வைக் கோளாறில் பரிதவிக்கிறதா...?, இந்திய நீதித்துறை என எண்ண வைத்துள்ளது பாரதீய ஜனதா கட்சி ஆட்சி நடத்தும் சத்தீஸ்கர் மாநிலத்தின் ராய்பூர் நீதிமன்றம் ஒரு மனித நேய மருத்துவருக்கு ஆயுள்தண்டனை அளித்து வழங்கிய தீர்ப்பு. பினாயக் சென் என்ற அந்த குழந்தைகள் நல மருத்துவர் செய்த ஒரே காரியம் அபலைகளுக்கு ஆதரவுக் குரல் கொடுத்ததுதுதான். இன்னமும் அப்பாவிகளாகவே வாழும் இந்தியாவின் சத்தீஸ்கர் மாநில பழங்குடி மக்களின் நலனுக்காக மருத்துவர் பினாயக் சென் மனித உரிமைப் போராளியாக மாறியதுதான் அவரைத் தீவிரவாதி என்று முத்திரை குத்தி ஆயுள் தண்டனைக் கைதியாக்கி இருக்கிறது.

தமிழ்நாட்டின் வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் பட்டம் பெற்ற டாக்டர் பினாய்க் சென் வறுமையில், ஏழ்மையில் வாடி வதங்கி மருத்துவ வசதி பெறமுடியாமல் தவித்த பாமர மக்களுக்கு இலவச மருத்துவ சேவை செய்து வந்ததும், இந்த சேவைக்காக எண்ணற்ற விருதுகள் பெற்றதும் அவரது சிறப்புக்கள். உலகளாவிய சுகாதாரம் மற்றும் மனித உரிமைகளுக்கான ஜொனாதன்மன் விருது பெற்ற முதல் இந்தியர் என்பதைவிட, தெற்காசியாவிலேயே இந்த விருதை வென்ற முதல் வெற்றியாளர் என்பது பினாயக் சென்னின் கூடுதல் சிறப்பு. சத்தீஸ்கர் மாநில மக்களின் சுகாதார மற்றும் ஊட்டச் சத்து நிலையைக் கண்காணித்து நல்லதொரு ஆரோக்கிய அறிவுரையை வழங்கியது மட்டுமல்லாமல், பழங்குடி மற்றும் வறுமையில் வாழும் நபர்கள் மீதான தாக்குதல்களைத் தடுத்து மனித உரிமைப் போராளியாகவும் தன்னை உருவாக்கிக் கொண்டவர் பினாய்க் சென்.



படிப்பகம்

சத்தீஸ்கர் மாநிலத்தின் இயற்கை வளங்கள், அந்த மாநில அரசின் முழு ஆதரவுடன் அந்நிய நிறுவனங்களால் நிர்மூலமாக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இந்த நடவடிக்கையானது பழங்குடி மக்களின் வாழ்க்கையை வேட்டைக்காடு ஆக்கிவிடும் எனக்கூறி அதற்கு எதிராக களம் இறங்கினார்கள் மாவோயிஸ்டுகள். இதனை எதிர்கொள்ளத் திராணியற்ற அந்த மாநில பாஜக அரசு பழங்குடி மக்களிடையே ஒரு அணியை உருவாக்கி அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்து, மாவோயிஸ்ட்களுடன் மோத விட்டது. 'சல்வா ஜூடும்' என்று பெயர் சூட்டப்பட்ட இந்த கும்பல் பல்வேறு கொடுமைகளைச் செய்வதாக மனித உரிமையாளர்கள் அம்பலப் படுத்தினார்கள். இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களின் பல பகுதிகளை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் மாவோயிஸ்ட் டுகள் சத்தீஸ்கர் மாநிலத்தில் அபரிமிதமாக இருக்கும் இயற்கை வளங்களை அம்மாநில அரசு, பன்னாட்டு நிறுவனங்களுக்குக் கூறுபோட்டு விற்பதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம் என்று கூறிவருகிறார்கள். சதிஸ்கார் மாநில அரசும், வெளிநாட்டு நிறுவனங்களும் கூட்டாகச் சேர்ந்து மேற்கொள்ளும் சுரண்டலுக்கு எதிராக காட்டுக்குள் இருந்து போராடுபவர்களில் முக்கியமான ஒரு தலைவர்தான் நாராயண் சான்யால் என்பவர். இந்த நாராயண் சான்யால் மீது நல்ல அபிப்ராயம் கொண்டவராக இருந்த டாக்டர் பினாயக் சென் சத்தீஸ்கர் மாநிலப் பழங்குடி மக்களுக்கு மருத்துவம் மற்றும் சட்ட ஆலோசனைகளை வழங்கி வந்ததால், அவருடன் மிகவும் நெருக்கமானார். அதன் வெளிப்பாடு நாராயண் சான்யால், அம்மாநில அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த போது, உடல் நலம் குன்றி இருந்த அவருக்கு சிறைக்குள் சென்று சிகிச்சை அளித்தார் மருத்துவர் பினாயக் சென்.

மருத்துவம் பார்க்க சிறைக்குள் வந்த பினாயக் சென், வெளியே என்ன நடக்கிறது என்ற தகவலை எடுத்து வந்து நாராயண் சான்யாலுக்கு சொன்னார் - மாவோயிஸ்ட் இயக்க நடவடிக்கைகளை விவரித்தார் - அப்போது சில கடிதங்களை பினாயக் சென்னிடம் நாராயண் கொடுத்தார் - அதை அவர் வாங்கிச் சென்று பிஜூ குஹாவா என்பவரிடம் கொடுத்தார் என்றெல்லாம் குற்றம் சாட்டப்பட்டு, 2007-ம் ஆண்டு மே 14 ஆம் தேதி, சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் மற்றும் சத்தீஸ்கர் சிறப்பு மக்கள் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கைது செய்யப்பட்டார் பினாயக் சென். இந்த பிஜூ குஹாவா என்பவர்

நாராயண் சான்யாலுக்குப் பொருளாதார ரீதியாகவும் கருத்தியல் ரீதியாகவம் வெளியில் இருந்து உதவியவர் எனத் தெரிவிக்கப் படுபவர்

கைது செய்யப்பட்ட பிநாயக் சென் மீது சத்தீஸ்கர் மாநிலத்தின் அமைதிக்கு அச்சுறுத்தலாக இருப்பவர், சட்டத்துக்குப் புறம்பான செயல்பாடுகளில் ஈடுபட்டவர் என குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. பினாயக்கை விடுதலை செய்யுமாறு இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட அவர்கள் சத்தீஸ்கர் அரசுக்கு இது தொடர்பாக விளக்கம் அளிக்குமாறு அனுப்பிய நோட்டீசுக்கு, நக்சல்களுடன் தொடர்புடையவர் இவர் என்று அரசு சார்பில் பதில் அனுப்பப்பட்து. இரண்டு மாதங்கள் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்ட சென் நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பின் உச்சநீதிமன்றம் பிணை வழங்கியதால் 2009-இல் விடுதலை செய்யப்பட்டார். அவர் மீதான குற்றச்சாட்டின் அடிப்படையில் அவரது வீட்டில் பல முறை சோதனைகள் செய்தும் வலுவான ஆவணங்களோ, சாட்சியங்களோ அரசுக்குச் சிக்கவில்லை. அதனால் வீட்டில் இருந்த பொதுவுடைமைக் கோட்பாட்டுப் புத்தகங்கள் மற்றும் சில கடிதங்களை எடுத்துச் சென்று அவற்றை மட்டுமே நீதிமன்ற ஆதாரமாக வைத்திருக்கிறார்கள் என்று மனித உரிமை ஆர்வலர்கள் சொல்லி வந்தார்கள்.

இந்நிலையில் பிநாயக் சென் மீதான வழக்கின் விசாரணை ராய்பூர் மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 2010 டிசம்பர் 24 அன்று நடந்து முடிந்தது. டாக்டர் பினாயக் சென்னிற்கு தேச துரோகம் (124-யு), கூட்டுச் சதி (120-டீ), சத்தீஸ்கர் சிறப்புப் பொதுப் பாதுகாப்புச் சட்டம் (8(1)) ஆகியவற்றின் கீழ் ஆயுள் தண்டனை வழங்கி நீதிபதி பி.பி.வர்மா தீர்ப்பளித்தார். மேலும், மாவோயிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த நாராயண சன்யால், பிஜு குஹாவா ஆகியோருக்கும் ஆயுள் தண்டனை வழங்கப்பட்து..

இவ்வழக்கில் பெரும்பாலான சாட்சிகள் பினாயக் சென்னிற்கு எதிராக சாட்சியம் அளிக்காத நிலையிலும், சத்தீஸ்கர் காவல்துறையின் புனைவு நிறைந்த குற்ற அறிக்கையை ஏற்றும், சட்டத்தைச் சாராமலும் ராய்பூர் நீதிமன்றம் இந்தத் தண்டனையை வழங்கியுள்ளதாக சட்ட வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். இந்திய நீதித்துறையில் நடக்கும் ஊழல்கள் பற்றி தினம் ஒரு செய்தி வெளியாகி வரும் இவ்வேளையில் இத்தீர்ப்பு இந்திய நீதி வழங்கும் முறையை மேலும் கேள்விக்குள்ளாக்குகிறது. மற்றவர்கள்

போல் நகரத்தில் தொழில் செய்து வசதி வாய்ப்புகளைத் தேடிக் கொள்ளாமல், பழங்குடியின மக்களின் நலனுக்காக கிராமங்களில் மருத்துவ சேவை புரிந்து வரும் பினாயக் சென்னிற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாதது என்பதோடு கண்டனத்திற்கும் உரியது. இலட்சக்கணக்கான மக்கள் செத்துப்போன போபால் விச வாயுக்கசிவு வழக்கில் குற்றம்சாட்டப் பட்டவர்களுக்கு இரண்டு வருட சிறை. ஆனால், தன் வாழ்நாளின் பெரும்பகுதியை மக்களின் நலனுக்குச் செலவிட்டவருக்கு ஆயுள் தண்டனையா...? என்று கொந்தளித்து இருக்கிறார் பிரபல எழுத்தாளரும் சமூக ஆர்வலருமான அருந்ததி ராய்.

மகாத்மா காந்தி போன்ற தலைவர்களே தேசத்துரோகிகள் எனப் பார்க்கப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ள நிலையில் பினாயக் சென்னுக்கு தண்டனை வழங்கியுள்ளது அவருக்கு பெருமைக் குறைவு இல்லை என்று எண்ண வைத்தாலும், சட்டத்தை மதித்து நடக்கும் ஒருவரை தேச துரோகி என நீதிமன்றம் கூறியுள்ளது ஏற்புடையதல்ல. அவரது மனைவி லீனா கூறியது போல் இத்தீர்ப்பு இந்திய ஜனநாயகத்திற்கே விடப்பட்டுள்ள ஒரு சவாலாகும்.வெள்ளையர்களை எதிர்த்து சுதந்தரத்திற்காக போராடியவர்கள் மீது அடக்கு முறையை ஏவ 1898-இல் கொண்டு வரப்பட்டதே இந்திய தண்டனைச் சட்டத்தின் 124-யு என்பதும் , நேரு பிரதமராக இருந்தபோது இச்சட்டம் ஜனநாயக இந்தியாவிற்கு ஏற்புடையதல்ல மிகவும் ஆட்சேபகரமானது, என இந்திய பாராளுமன்றத்தில் எதிர்த்துக் கூறியதும் கவனிக்கத்தக்கது. இந்த 124-யு சட்டப் பிரிவை முக்கியமாக்கி பிநாயக் சென்னுக்கு வழங்கப்பட்ட தேசத்துரோகத் தீர்ப்பை சர்வதேச மன்னிப்பு சபை முதல் உள்ளூர் மனித உரிமை அமைப்புக்கள் வரை அனைவரும் கண்டித்துள்ளனர். புகழ் பெற்ற அறிஞர் நோம் சாம்ஸ்கி, வரலாற்றறிஞர் ரொமீலா தாப்பர், முன்னாள் நீதிபதி ராஜேந்தர் சச்சார் உள்ளிட்டவர்களும் இத் தண்டனையை காட்டமாக எதிர்த்துள்ளனர்.

ஒரு நாட்டில் மனித உரிமை ஆர்வலர்களுக்குப் பாதுகாப்பற்ற சூழல் நிலவும் வேளையில், நீதி வேண்டும் மக்களின் கடைசி புகலிடமாக உள்ள நீதிமன்றங்களும் அவர்களுக்கு நீதி வழங்க மறுப்பது என்பது மனித உரிமையை ஒட்டு மொத்தமாக குழிதோண்டி புதைத்துவிடும் ஆபத்துள்ளது. ஒரு அரசை எதிர்த்து போராடினாலோ, அல்லது குரல் கொடுத்தாலோ அவர்கள் பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்கள், அரசை கவிழ்க்க சதித்திட்டம் தீட்டுகிறார்கள், தலைவர்களை கொல்வதற்கு முயற்சி

செய்கிறார்கள் என்று பொய்யான குற்றச்சாட்டுகளைக் கூறி கைது செய்து சிறையில் அடைத்து முடக்கிவிட நினைப்பதை அரசுகளின் கையாலாகாத் தனமாகவே கொள்ள வேண்டும்.

மக்களுக்காக, அவர்களின் ஊட்டச்சத்துக் குறைவை ஆய்வுகள் மூலம் வெளிக் கொண்டுவந்த, ஜல்வா ஜுடும் போன்ற கொடூரங்களுக்கு எதிராக போராடிய பினாயக் சென் மீது தேசத்துரோக வழக்கு பாயக் காரணம், இது போன்ற மனிதநேயச் செயல்பாடுகள் தான் என்றால், எது தேச பக்தி...? எது தேசத் துரோகம்..? அந்நிய நாட்டு நிறுவனங்கள் சொந்த நாட்டு கனிம வளங்களை கொள்ளையடிப்பதை அனுமதிப்பது தேச துரோகமா...? அதை எதிர்த்துப் போராடுவது தேசத் துரோகமா...? அப்படி போராடும் மக்களை அரசாங்கங்களே கூலிப்படைகளை அமைத்து ஆயுதங்கள் வழங்கி கொன்று குவிப்பது தேசத் துரோகமா...? அதை அம்பலப்படுத்திப் போராடுவது தேசத் துரோகமா...? எது தேசபக்தி...? எது தேசத் துரோகம்...? என்பது சட்டத்தின் கண்களுக்கு சிலவேளை தெரியாமல் போகலாம். ஆனால் அமைதியை விரும்பும், சமாதானத்தை விரும்பும் உலக சமுதாயம் அநீதிக்கு எதிராகவே செயல்படும்.

பினாயக் சென்னின் ஆயுள்தண்டனையை எதிர்த்து, இந்தியாவின் பிரபல சட்டமேதையும் பாஜக ஆட்சியில் மத்திய சட்ட அமைச்சராக இருந்தவருமான ராம் ஜெத்மலானி உச்ச நீதிமன்றத்தில் வாதாடப் போவதாக அவராகவே அறிவித்துள்ள தானது பினாயக் சென் மீதான நீதிமன்றத் தீர்ப்பில் அடங்கியள்ள (அ)நீதியை வெளிப்படுத்துவதுடன் நீதியான நீதியை பாரம்பரியம் மிக்க இந்திய நீதித்துறை வெளிப்படுத்தும் என்பதே உலகம் முழுதும் உள்ள மனிதநேய ஆர்வலர்களின் எதிர்பார்ப்பு.

**29.01.2011**

www.padippakam.com

# தேடி வந்த வல்லரசுகளும்...
# திரைமறைவு ரகசியங்களும்...

ஒரு காலத்தில் அடிமை வாழ்வும், வறுமை நிலையும் மண்டிக் கிடந்த இந்தியப் பெரும் தேசத்தை நோக்கி உலகத்தின் வல்லரசுகள் வரிசையாய் அணிவகுப்பு நடாத்துகின்ற உள்ளாங்கம் பற்றிய ஒரு சிறு ஆய்வே இது...

2010 ஆம் ஆண்டின் கடைசி 6 மாதங்களில் மட்டும் உலகத்தின் அதிகார பலம் பெற்ற 5 தலைவர்கள் குழாம் "இரு தரப்பு உறவு"- என்ற ஒற்றை வார்த்தையைச் சொல்லிக் கொண்டு இந்தியாவை நோக்கிய விஜய முற்றுகையை மேற்கொண்டனர். பிரிட்டன் பிரதமர் டேவிட் கம்ரோன் - அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா - பிரான்ஸ் அதிபர் நிக்கொலா சார்கோஸி - சீனப் பிரதமர் வென் ஜியாபோ - ரஷ்ய அதிபர் திமித்ரி மெத்வெதேவ் இப்படி அடுத்தடுத்து இந்தியாவை வலம் வந்த இவர்கள் ஐ.நா பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்புரிமையையும் - வீட்டோ அதிகாரத்தையும் கொண்ட மாமனிதர்கள்.

இந்திய தேசத்தின் வரலாற்றுப் பதிவு எனப்படும், இவர்களின் தொடர் வருகையின் போது அனைவரும் ஒட்டு மொத்தமாக இந்தியாவுக்கு கொடுத்த வாக்குறுதி எனப்படும் வார்த்தை - ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் வேண்டும் என்பதுதான். வல்லரசுகளின் இந்த வார்த்தைப் பிரயோகத்திற்கு பின்னர் இந்தியாவைப் பற்றிய ஒரு புதிய மதிப்பீடு உலக நாடுகள் மத்தியில் தலைகாட்டத் தொடங்கி உள்ளதும், இதுவரையில் இந்தியா மீது வைத்திருந்த கண்ணோட்டம் ஒரு புதிய பார்வையைப் பெற்றுள்ளதும், ஏதோ உண்மைதான். ஆனால் உலகத்தின் இந்த 5 பெரும் தலைகள் வருகையால் யாருக்கு லாபம் என்ற கூட்டல்



படிப்பகம்

கழித்தல்களைப் பார்த்தால் பல உள்ளார்ந்த விடயங்கள் தெரிய வருவதுடன் வல்லரசுகளின் சூட்சுமமும் வெளிவரும்.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கம்ரோன் தலைமையில் 6 அமைச்சர்கள் உள்பட 90 பேர் கொண்ட வர்த்தகப் பேராளர்கள் குழுவினர், 2010 ஜூலை 27 முதல் 29 வரை இந்தியாவில் முகாமிட்டிருந்தார்கள். ஒரு காலத்தில் இவர்களின் முன்னவர்களினால் அடிமையாக்கப் பட்டிருந்த இந்திய தேசத்தின் வர்த்தகச் சந்தையில் இன்று இடம்பிடிக்க வந்து சென்ற பிரிட்டன் குழாம், தம்முடைய ராணுவத் தளவாடங்களை விற்பனை செய்வதற்கு 1 பில்லியன் டொலர் தொகையில் ஓர் முக்கிய ஒப்பந்தம் உட்பட அடுத்த ஐந்தாண்டு காலத்துக்கான இரு தரப்பு வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் பல்வேறு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுச் சென்றுள்ளனர். ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ள 5 நாடுகளில் பிரிட்டனும், பிரான்சும் கடந்த காலத்தில் சக்திமிக்க வல்லரசுகளாக பொருளாதாரத்திலும் முதன்மை பெற்றிருந்தன என்பது உண்மை. ஆனால் இவற்றின் தற்போதைய பொருளாதார நிலைமை அவ்வளவு சிறப்பாக இல்லை என்பதும் அங்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துச் செல்வதுடன் பாரிய சமூக பொருளாதார நெருக்கடியினுள் இவை சிக்கியுள்ளன என்பதும் கண்கூடு. ஓரளவுக்கு ஜெர்மனியைத் தவிர ஐரோப்பிய நாடுகள் முழுவதினதும் நிலைமை இதுதான். இந்த நிலையில் உலக அளவில் மிகப் பெரிய சந்தை வாய்ப்புகளுடன் சீனாவுக்கு நிகராக - சவாலாக வளரும் இந்தியாவை இந்த நாடுகள் தமது தேவைக்கு சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கி உள்ளன என்பதுதான் உண்மை.. அதற்குப் பரிகாரமாக ஐ.நா.பாதுகாப்பு சபையில் இந்தியாவையும் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துச் சென்றுள்ளார் பிரிட்டன் பிரதமர். காந்தி சமாதிக்கு சென்று வந்த கம்ரோன், டெல்லி மைதானம் ஒன்றில் சிறுவர்களுடன் கிரிக்கெட் விளையாடி மகிழ்ந்தார். தீவிரவாதத்தை ஏற்றுமதி செய்வதை பாகிஸ்தான் உடனடியாக நிறுத்தியாக வேண்டும் என்று காட்டமாகவே விமர்சித்தார்.

இங்கிலாந்து பிரதமரை அடுத்து நவம்பர் 6-இல் இந்தியாவின் மும்பை நகரில் வந்து இறங்கியது அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா தலைமையிலான 3000 பிரதிநிதிகள் கொண்ட வர்த்தக மற்றும் பாதுகாப்புக் குழு. கூடவே ஒபாமாவுடன் 40 விமானங்கள், 6 குண்டு துளைக்காத வாகனங்கள் உட்பட்ட இத்யாதிகள். டிசம்பர் 6 முதல் 9 வரை மூன்று நாட்கள் இந்தியாவில் முகாமிட்ட இந்தக்

குழுவினரும் பல்லாயிரம் கோடி டொலருக்கான வர்த்தகத்தை கச்சிதமாக முடித்துச் சென்றனர். உலகின் அதிகாரபலம் மிக்க ஒரே மனிதர் எனப்படும் அமெரிக்க அதிபர் ஒபாமா, தன்னுடைய பதவியேற்புக்குப் பின், வெளிநாடு ஒன்றில் அதிக நாட்கள் தங்கியது இந்தியாவில்தான். தீவிரவாத்தின் கோரப்பிடிக்கு உள்ளான மும்பை நகரின் தாஜ் விடுதியிலேயே தங்கிச் சென்ற அவர், தீவிரவாதத்தின் வேரை வெட்டி எறியாமல் விடக் கூடாது என்றும் சூளுரைத்தார். இந்திய நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் உரையாற்றிய ஒபாமா, இந்தியாவை ஐ.நா.பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினராக்க வேண்டும் என்று பலத்த கரவொலிக்கிடையே தெரிவித்தார். மும்பையில் பள்ளிக் குழந்தைகளுடன் ஒபாமாவும் அவர் மனைவியும் ஆடிப் பாடி மகிழ்வித்த கையுடன் விமானம், மின்சாரம் மற்றும் இதர துறைகள் தொடர்பாக 10 பில்லியன் டொலருக்கு, வெற்றிகரமாக வியாபாரத்தையும் பேசி முடித்துச் சென்றுள்ளது அமெரிக்க குழு. இந்தியா உலகரங்கில் எழுச்சி பெறும் ஒரு வல்லரசாக இருப்பதால் தான், வீழ்ந்து கொண்டிருக்கும் வல்லரசான அமெரிக்க அதிபர் இந்தியாவுக்கு வந்தார் என்பதுதான் ஒபாமாவின் இந்திய வருகை பற்றிய இந்தியர்களின் தெளிவான கண்ணோட்டமாக இருந்தது. அமெரிக்கா உற்பத்தி செய்யும் ராணுவத் தளவாடங்களை இந்தியா வாங்க வேண்டும் என்ற கோரிக்கையின் மூலம் அமெரிக்காவில் கொஞ்சம் வேலை வாய்ப்பைப் பெருக்க முடியும் என்ற எண்ணத்தில்தான், ஒபாமா இந்தியா வந்தார் என்பதை சாதாரண பாமரன் கூடப் புரிந்து கொண்டிருந்தான்.

ஒரு காலத்தில் வலிமையாக இருந்த அமெரிக்கா தற்போது பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. 10 அமெரிக்கர்களில் ஒருவர் வேலையில்லாமல் இருக்கும் அந்நாட்டின் தற்போதைய கடன் தொகையோ 13.8 டிரில்லியன் டொலர். கடன் வாங்கும் தொகையில் பெரும்பகுதி, தற்போது ஈராக்-ஆப்கானிஸ்தான் போர்க்களத்தில் கரியாகிறது. இந்த நிலையில் அமெரிக்க உதவி, இந்தியாவுக்குத் தேவை என்பதை விட, மிக அதிகளவில் இந்தியா போன்ற நாடுகளின் உதவி அமெரிக்காவுக்குத் தேவை என்பதை முதன் முறையாக, அமெரிக்க கொள்கை நிபுணர்கள் மட்டுமல்ல மக்களும் உணர ஆரம்பித்திருக்கின்றனர். கடந்த செப்டம்பரில், அமெரிக்காவின் தேசிய புலனாய்வு குழு நடத்திய ஓர் ஆய்வு, உலகில் அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்து மூன்றாமிடத்தில் இந்தியா இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை மூன்றாம் உலக நாடாகக் கருதப்பட்டு வந்த இந்தியா இன்று

உலகின் மூன்றாவது சக்தி வாய்ந்த நாடு எனச் சொல்லப்டுகிற தென்றால், கடந்த 15 ஆண்டுகளில் உலகில் சக்தி வாய்ந்த நாடுகளின் வரிசை, முறை மாறி வருகிறது என்பதையும், இந்தியாவும் தன்னளவில் பெரும் மாறுதலுக்குட்பட்டிருக்கிறது என்பதையுமே அது காட்டுகிறது.

மூன்றாவதாக பிரான்ஸ் அதிபர் நிக்கொலா சார்கோஸி, டிசம்பர் 4 முதல் - 7 ஆம் தேதிவரை இந்தியாவில் நான்கு நாள் முகாம், கூடவே அவரின் கவர்ச்சிக் காதல் மனைவி கர்லா புருனே உட்பட நூற்றுக்கணக்கான வர்த்தக பிரதிநிதிகள். சர்ச்சைக்குரிய அணு சக்தி ஒப்பந்தம் ஒருபுறமிருக்க, அதனைப்பற்றி எதுவுமே பேசாமல், நேர் மாறான அணுசக்தி தயாரிப்பு தொடர்பாக 9.3 பில்லியன் டொலருக்கு சாமர்த்தியமாய் வியாபாரம் பேசி, பிரதமர் மன்மோகன் சிங்குடன் கையெழுத்திட்டு கிளம்பிச் சென்றுள்ளனர் பிரான்ஸ் குழுவினர். ஜி 20 நாடுகளுக்கு தற்போது தலைமை வகிக்கும் பிரான்சுடன் உள்நாட்டுப் பாதுகாப்பு, முதலீடு போன்ற பலதரப்பட்ட விடயங்களை இந்தியா பகிர்ந்து கொண்டாலும் கூட அணுசக்தி தொடர்பாகவே முக்கியப்படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. அணுசக்தி தயாரிப்பு, பரிமாற்றம் ஆகியவற்றில் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட முதல் நாடு என்ற பெருமை பிரான்சுக்கு கிடைத்துள்ளது. மும்பை நகரின் நவம்பர் 26 தீவிரவாதச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட டிரைடன் ஒபராய் விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, இந்தத் தாக்குதலில் பலியானவர்களுக்கான சிறப்பு அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சார்கோஸியும் ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடமளிக்க வேண்டும் என்று மறக்காமல் தெரிவித்தார்.

1960களில் போர்முனையில் சந்தித்துக் கொண்ட, இன்று ஆசிய மண்டலத்தின் மிகப் பெரிய ஆளுமைகளாக உருவெடுத்திருக்கும் சீனாவும், இந்தியாவும் நீயா...? நானா...? என்று மறைமுகமாக முட்டி மோதிக்கொண்டாலும் உலகளாவிய பொருளாதார சார்புநிலை இரு நாடுகளையும் தற்போது பிணைத்து வைத்துள்ளது. அந்த வகையில் சீன அதிபர் வென் ஜியாபோ, டிசம்பர் 15-17 வரை இந்தியாவில் முகாமிட்டிருந்தார். இப்பயணத்தின் போது 16 பில்லியன் டொலருக்கு சீனா இந்தியாவுடன் வர்த்தகம் பேசி முடித்தது. ஆனால் மற்ற 4 நாடுகளைப் போல் ராணுவம் - ஆயுதம் - அணுசக்தி என்றில்லாமல் பல்துறை சார்ந்த வர்த்தக ஒப்பந்தங்களாகவே இவை இருந்தன என்பது சிறப்பு. ஐ.நா

www.padippakam.com

பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் வேண்டும் என தன் பங்குக்கு தெரிவித்த சீன அதிபர், பாகிஸ்தான் பற்றி எதுவுமே பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இரு நாட்டுத் தலைவர்களின் சந்திப்புக்குப்பின்னர் தீவிரவாதத்தை இரு நாடுகளும் எதிர்க்கின்றன என்று கூட்டு அறிக்கை மட்டுமே வெளிவந்தது.

வரவிருக்கும் அடுத்த பத்தாண்டுகளில், உலகின் பிற எந்த நாடுகளையும் விட, இந்தியாவும் சீனாவும் தான், புதிய ஆதிக்க சக்திகளாக பரிணமிக்கப் போகின்றன என்கின்ற யதார்த்தமே இன்று இந்திய வெளியுறவுக் கொள்கை முன்பு உள்ள மிகப்பெரிய சவால். இந்தியாவும் சீனாவும் ஆசியாவின் முதலிடத்துக்குப் போட்டியிடு கின்றன. ஆகையால் விரைவில் இரு நாடுகளுக்குமிடையில் மோதல் ஏற்படும் என்று மேற்கத்திய நிபுணர்கள் ஆரூடம் கூறுகின்ற நிலையில், இந்திய-சீன உறவுகள், அடுத்து வரும் பல ஆண்டுகளை எப்படி வழிநடத்தப் போகின்றன...? என்பது சர்ச்சையான விடயமே. சீன பிரதமர் வென் ஜியாபோவும், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் கடந்த 6 ஆண்டுகளில், பலதடவைகள் சந்தித்துள்ளனர். இரு நாடுகளுக்கிடையேயும் அடிக்கடி நடக்கும் இந்த உயர்மட்ட சந்திப்புக்களும் பேச்சுவார்த்தைகளும் இருதரப்புக்கும் இடையேயான ஆரோக்கிய உறவுக்கான நல்ல அறிகுறி என்றே தோன்றுகிறது.

சோவியத்து ஒன்றியம் பிளவுபட்டபின், உலக மேடையில் மிகப் பெரிய அளவில் சரிந்தது ரஷ்யாவின் முக்கியத்துவம். அந்தப்பிராந்தியத்தில் தொடரும் பிரச்னைகள், உள்நாட்டுச் சிக்கல்கள் என்பவற்றால் மாறி வரும் உலகில் அதற்கென ஒரு புதிய இடம் இன்னமும் கண்டுபிடிக்கப் படவில்லை. இந்நிலையில் ரஷ்ய அதிபர் திமித்ரி மெத்வெதேவ், டிசம்பர் 21-22 இல் தமது குழுவுடன் இந்தியா வருகை புரிந்தார். இந்தியாவும் ரஷ்யாவும் அணுமின்சாரம்- ராணுவம் உள்ளிட்ட 295 மில்லியன் டொலருக்கான 30 வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன. ரஷ்ய அதிபரும், இந்தியப் பிரதமரும் கூட்டாக ஊடகவியலாளர்களை சந்தித்த போது ரஷ்ய அதிபர், பயங்கரவாதத்துக்கு உதவும், தூண்டிவிடும், பயங்கர வாதிகளுக்குப் புகலிடம் தரும் நாடுகள் குற்றவாளிகளே, அவர்களும் பயங்கரவாதச் செயல்களைச் செய்வோர் அளவுக்கே குற்றம் செய்தவர்கள் ஆகிறார்கள், மும்பைத் தாக்குதலில் ஈடுபட்டோருக்கு பாகிஸ்தான் தண்டனை அளிக்க வேண்டும்... என்று கடுமையாகவே சாடினார்.



படிப்பகம்

இந்தியாவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையேயான உறவு நீண்ட பாரம்பரியம் கொண்டது. இதுதான் இந்தியாமீது சீனா போர் தொடுத்த போது இந்தியாவுக்கு தோள் கொடுக்க வைத்தது ரஷ்யாவை. ஆனால் கடந்த 20 ஆண்டுகளில் இந்தியாவின் நம்பிக்கைக்குரிய, அரசியல் ரீதியிலான நட்பு நாடாக தொடர்ந்து ரஷ்யா இருந்த போதும், உலகளவிலான இந்தியாவின் அரசியல் பொருளாதார நிலைகளின் மாற்றத்தால் ரஷ்ய உறவின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது. மாறாக சீனாவுடனான இந்திய பொருளாதார உறவு குறுகிய காலத்தில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதுடன் இந்தியாவின் இராஜதந்திர நெருக்கம் அமெரிக்காவின் பக்கமே பலமாக இருக்கிறது. உலகின் மிகப் பெரிய நாடான - இயற்கை வளங்களுக்கு குறைவில்லாத நாடான ரஷ்யாவின் உதவி, எல்லாவற்றையும் விட இந்தியாவின் மின்சார உற்பத்திப் பாதுகாப்புக்கு இன்றியமையாதது. தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 9, 000 மெகாவாட் மின் உற்பத்தித் திறனுடைய அணு உலை, இன்று மேம்பட்டு வரும் இந்திய-ரஷ்ய உறவுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. அத்துடன் ரஷ்யாவின் சைபீரியப் பகுதியில் உள்ள சகாலின் தீவில், இந்திய அரசின் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு நிறுவனம் ரஷ்ய அரசுடன் இணைந்து எண்ணெய் மற்றும் இயற்கை வாயு கண்டறியும் திட்டத்தில் ஈடுபட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வளவு வர்த்தகம் மற்றும் வரலாற்றுப் பின்னணி கொண்ட ரஷ்ய அதிபரும், தமது இந்தியப் பயணத்தில் கணிசமான வர்த்தகத்தை பேசி முடித்துத்தான் சென்றுள்ளார்.

இப்படி உலகத்தின் 5 பெரும் தலைகளின் இந்திய வருகையால் யாருக்கு லாபம் என்று கணக்கு பார்க்கத் தொடங்கி இருக்கிறது உலகம். கணக்குப் பார்க்க இது என்ன வியாபரமா...? என்றால் ஆம் அதுதான் உண்மை. முழுக்க முழுக்க வியாபாரமே தான் முதன்மை. அவர்களின் இந்திய வருகையால் முக்கியமாக நடந்து முடிந்தது பல்லாயிரம் கோடி டொலருக்கான வர்த்தக ஒப்பந்தங்கள். அதற்குப் பிறகுதான் இருதரப்பு உறவு, சர்வதேச விவகாரம், தீவிரவாத ஒழிப்பு, பருவநிலை மாற்றம், ஐ.நா பாதுகாப்புச்சபையில் இந்தியாவிற்க்கு இடம் என்பதெல்லாம். இந்தியா சென்ற 5 நாட்டுத் தலைவர்களும் வெறும் அரசியல் மட்டும் பேசி கை குலுக்கிச் செல்லவில்லை, அதிபர்களாய் சென்றார்கள், ஆதாயமுள்ள வியாபாரிகளாய் திரும்பினார்கள்

நுகர்வோர் கலாசார அடிப்படையில் இயங்கி வரும் இன்றைய நவீன உலகத்தை ஆளுமை செலுத்துவது பொருளாதாரம்தான் என்பதனால் உலகில் பிற நாட்டுச் சந்தைகளைக் கைப்பற்றுவதுதான் ஒவ்வொரு நாட்டின் உள்நோக்கமாக அமைந்துள்ளது. சீனாவுக்கு அடுத்தபடியாக இன்று இந்தியப் பொருளாதாரம் பல மடங்கு உயரத் தொடங்கி உள்ளது. அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் நிதிச் சிக்கலில் மாட்டி பல சவால்களை எதிர் கொண்டு தவிக்கும் போது, மூழ்காத கப்பலாக இந்தியா தனது பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதனை வல்லரசுக்கான அனைத்து தகுதிகளையும் இந்தியா பெறத் தொடங்கி உள்ளது எனவும் சொல்லலாம். அதற்கான அங்கீகாரமாகக் கூட 5 நாட்டு வல்லரசுத் தலைவர்களின் இந்தியப் பயணத்தை எடுத்துக் கொள்ளலாம். அவர்கள் அனைவரும் ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு இடம் அளிக்க வேண்டும் என்று பேச்சுக்காகவாவது கோரி இருப்பது இந்தியாவின் வளர்ச்சிக்கான அங்கீகாரம் மட்டுமல்ல இந்திய வெளியுறவுக் கொள்கைக்கு கிடைத்த வெற்றி எனவும் கருதலாம்.

அதேவேளை பொருளாதார வல்லரசாக மாறக் கூடியது என்று கருதப்படும் பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா ஆகியவை இடம்பெற்றுள்ள பிரிக் நாடுகள் என்கின்ற கூட்டமைப்பில் இந்தியா தற்போது சீனாவுக்கு நிகராக போட்டி போட்டு உயரத் தொடங்கி உள்ளது. இதன் பின்னணியில்தான் ஐ.நா.பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் வேண்டும் என்று 5 வல்லரசுகளும் இந்தியாவின் கதவைத் தட்டி ஒரே குரலில் ஒலித்து விட்டுச் சென்றுள்ளனவோ எனவும் எண்ணலாம்.

இந்தியா சென்ற 5 வல்லரசு நாடுகளில், சீனாவைத் தவிர மற்ற 4 நாடுகளும் இந்தியாவுடன் பல பில்லியன் டொலர் மதிப்பில் ஆயுத விற்பனைக்கான ஒப்பந்தம் செய்துள்ளன. இந்த ஒப்பந்தங்கள் முன்னணி நாடுகளின் நவீன ராணுவத் தொழில் நுட்பங்களை இன்னும் சில ஆண்டுகளுக்குள் இந்தியாவுக்குள் இறக்குமதி செய்ய வழிவகுத்துள்ளது. சான்றாக அடுத்த 6 ஆண்டு காலத்துக்குள் பல பில்லியன் டொலருக்கு ஆயுதங்களை வாங்கிக் குவிக்கவும் இந்தியா திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இந்த ஆயுதங்கள் எந்த நாடுகளுக்கு எதிராக பயன்படுத்தப்படப் போகின்றன. முறுகல் நிலையில் இருக்கும் இந்திய சீன எல்லைப் பிரச்சினை பூதாகரமாக்கப்பட்டு, மேலைத் தேசங்களுக்கு சவாலாகிவரும் இந்திய சீன வளர்ச்சி மழுங்கடிக்கப்படப்

www.padippakam.com

போகிறதா...? அல்லது பாகிஸ்தான் வழியாக வளர்க்கப்பட்டு வரும் இஸ்லாமிய தீவிரவாதத்திறகு, எதிரான போரில் இந்துத்துவ இந்தியா பலிகடா ஆக்கப்படப் போகிறதா...?

அனைத்துக்கும் மேலாக இந்திய வளர்ச்சிக்கு காரணமான, இந்திய பொருளாதார மற்றும் வெளிநாட்டுக் கொள்கை வகுப்புகளினால் இந்தியாவினுள்ளேயே ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் களமாக்கப்பட்டு வல்லரசுகளின் வேட்டை நிலமாக இந்தியா மாற்றப்படப் போகிறதா...?

இந்திய தேசத்துக்கு இனிமேல் தான் முன்னைவிட அதிக விழிப்பு அவசியம். தந்திரங்கள் களையப்பட்டு, காப்பற்றப்படுமா இந்திய வளர்ச்சி...?

**24.12.2010**



படிப்பகம்

www.padippakam.com

# வல்லாதிக்க இரகசியங்களை வெளியிடும் விக்கிலிக்ஸ்

## ஜுலியன் அசேஞ்ஜின் கைது நிலைக்கப் போவது எது..?

அணுகுண்டுகள் இல்லை. ஆயுதங்கள் இல்லை. போர் விமானங்கள் இல்லை. சொல்லப் போனால் ஒரு துப்பாக்கி கூட இல்லை. ஆனால் அவரைக் கண்டு உலகத்தின் அணு ஆயுதப் பிதாமகன் அமெரிக்கா உள்ளிட்ட வல்லாதிக்க நாடுகளே அலறுகின்றன.

விக்கிலீக்ஸ் எனும் இணையத் தளத்தை மட்டுமே ஒற்றை ஆயுதமாக வைத்திருக்கும் இன்றைய உலகின் கதாநாயகன் ஜுலியன் அசாங்ஞேதான் அந்த மாமனிதர். அந்த இணையத்தளம் வெளியிட்ட-வெளியிடும் பரபரப்பான தகவல்கள் ஏகாதிபத்திய நாடுகளின் இன்னொரு கோரமுகத்தை ஆதாரங்களுடன் வெளிச்சத்துக்கு கொண்டு வந்து கொண்டிருக்கிறது. இதனைக் கண்டு நடுநடுங்கிப் போய்க் கிடக்கும் நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் இருப்பது அமெரிக்காதான் என்பது எழுதித் தெரியவேண்டிய ஒன்றல்ல. ஈராக், ஆப்கானிஸ்தான் உள்பட பல்வேறு நாடுகளில் அமெரிக்கா நடத்திய வெறித் தாக்குதல்களையும் அதன் பின்னணித் தகவல்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டியது விக்கிலீக்ஸ். விளைவு பாலியல் பலாத்காரம் என்கின்ற புகார் வழக்கின் அடிப்படையில் ஜுலியன் அசாங்கே கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட மற்றொரு ஜன நாயக அவலம்.

விக்கிலீக்ஸ் என்கின்ற இணைய தளம் 2007 ஆம் ஆண்டில் எவ்வித இலாப நோக்கமற்று சட்ட பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டதாகும். மனித குலத்திற்கு எதிரான கொடுமைகளை தோலுரித்துக் காட்டும் முக்கியமான செய்திகளையும் தகவல்களையும் சாதாரண பொது



படிப்பகம்

www.padippakam.com

மக்களிடம் கொண்டு போய்ச் சேர்ப்பதே இத்தளத்தின் முக்கிய நோக்கம். அந்த அடிப்படையில் உருவாக்கப் பட்டு நிலை தளராமல் செயற்பட்டு வரும் இந்த இணையத்தளத்தை வடிவமைத்து இதன் நிறுவனராகவும், முதன்மைச் செய்தி ஆசிரியராகவும் செயற்பட்டு வருபவர்தான் ஜூலியன் அசாங்கே. 1971 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் குயின்ஸ் லாண்ட் மாகாணத்தில் பிறந்த அசாங்கே, கணிப்பொறித்துறையில் நிபுணத்துவம் பெற்றவர். தேசாந்திரியான அவர் சுற்றித் திரி யாத நாடுகளே இல்லை, கால்கள் படாத கண்டங்களே இல்லை எனலாம். அனைத்தும் பரம ரகசியமான பயணம். ஆனால் அவைதான் இந்த இணையத் தளத்திற்கு உலகம் முழுவதும் 800 க்கும் மேற்பட்ட பகுதி நேர தன்னார்வத் தொண்டர்களைத் தேடித் தந்தது. 5பேரை மட்டுமே முழு நேரப் பணியாளர்களாக கொண்ட இத்தளத்தில் அனைத்தையும் ஒருங்கிணைத்து செயற்படுத்தும் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்தான் இன்றைய உலகின் நாயகன் அசாங்கே. ஆதாரங்களுடன் உலகத்தையே அதிரவைக்கும் செய்தி மூலங்கள், உலகின் அனைத்து மூலைகளிலிருந்தும் கிடைக்கின்றன. தகவல்கள் எங்கிருந்து வருகிறது யார் இதனை அளிக்கிறார்கள். எவரும் தெரிந்து கொள்ளமுடியாத அளவுக்கு மிகவும் கவனமாக கையாளப்படும் செய்தி இரகசியங்கள் இவை.

இன்றைய நவீன தொழில்நுட்ப உலகம் நாகரிகத்தின் உச்சியில் இருக்கிறது என்றால் அதற்கு உறுதுணையாக இருப்பவைகளில் ஊடகங்களின் பரிணாம வளர்ச்சியும் முக்கியமாக இருக்கிறது. உலகத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று மக்களாட்சி உயிர்த் துடிப்புடன் செயல்படவும், கொடுமைகளை வெளிச்சம் போட்டு வீதிக்கு கொண்டு வருவதிலும் ஊடகங்களின் பங்கு மகத்தானது. ஊடகங்களின் செயற்பாட்டு எல்லைகள் நாளுக்கு நாள் நீண்டு கொண்டே போவதுடன் அதற்கான கட்டாய தேவையும் அதிகரித்து வருகிறது.இன்று பல ஊடகங்களின் முக்கியத் தொழில் திறனாக புலனாய்வு என்பதும் தவிர்க்க முடியாத ஒன்றாக இருப்பதனால்தான் பல்வேறு ஊழல்களும், சமூக அநீதிகளும் கொடுமைகளும் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தப் படுகின்றன. இந்தப் பணியை முன்னின்று செய்வதில் முக்கிய புள்ளியாக 2007ம் ஆண்டில் முளைத்ததுதான் விக்கிலீக்ஸ். மனித குலத்துக்கு எதிராக உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்திய கொடுமைகளை காணொளிப் படங்களுடன் விக்கிலீக்ஸ் தளமேற்ற, இக் கொடுமைக்கு எதிராக மனித உரிமை ஆர்வலர்கள்



படிப்பகம்

அமெரிக்காவை நோக்கி சாட்சியங்களுடன் குற்றம் சாட்டத் தொடங்கினர்.

முன்னணி அரசாங்கங்களின் நிழல் நடவடிக்கைகள், அவற்றின் வர்த்தக முறை கேடுகள், மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிராக அரசுகளின் அடக்குமுறைகள், ராஜதந்திரம் என்ற போர்வையில் பிற நாடுகளின் மீது நடத்தப்பட்ட மறைமுகத் தாக்குதல்கள், உளவு பார்த்தல், அதனூடான போர்க்கள கொடுமைகள், கொலைகள், தடுப்புக்காவல்கள் இப்படி மனித உரிமைகளுக்கு எதிராக அரசாங்கங்கள் செய்த அநியாயங்களை அரங்கேற்றியது விக்கிலீக்ஸ். திட்டமிட்டு மறைக்கப்பட்டிருந்த, மனித சமூகத்திற்கு எதிராக நடைபெற்ற பல கொடுஞ்செயல்கள் தோண்டி எடுக்கப்பட்டு ஆதாரங்களுடன் அடுக்கடுக்காய் வெளியிடப்பட்டன. ஊடகம் என்ற அடிப்படையில் விக்கிலீக்ஸ் செய்தவை மிகப்பெரிய சாதனைகளாகவே உலக அளவில் பார்க்கப்படுகின்றன. இன்னமும் அவை வெளியிடப் போவதாகச் சொல்லும் திடுக்கிடும் தகவல்கள் பல வல்லரசுகளை உதறல் எடுக்க வைத்திருக்கின்றன. விக்கிலீக்ஸ் வெளியிட்ட தகவல்களை இரகசியத் திருட்டாக அமெரிக்காவும் அதன் ஆதரவு நாடுகளும் விமர்சிக்கின்றன. அவை அரசுகளின் இரகசியம் அல்ல. அப்பாவி மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட, தொடர்ந்து நடைபெறப் போகும் அநியாயங்களின் அதிர்ச்சித் தகவல்கள் என்று சொல்வதுதான் சரியானது. இன்று உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவிவிட்ட இணையத்தின் வழியாக பல்வேறு கோப்புகளும், தகவல்களும் மிகவிரைவாக பரிமாற்றம் செய்யப்படுகின்றன. இப்படி இணையத்தின் மின்னஞ்சல் போன்ற தகவல் பரிமாற்றங் களின் வழியாக நடைபெறும் தகவல் பரிமாற்றங்கள் விக்கிலீக்ஸ் இணையத் தளத்தால் கைப்பற்றப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதற்கான தொழில்நுட்பத்தில் கில்லாடி அசாங்கே எனவும் அறியப்படுகிறது.

ஈராக் மண்ணில் அமெரிக்க இராணுவம் நடத்திய வெறியாட்டத்தை உலக நாடுகள் அனைத்தும் அறியும். இருந்தும் அங்கு மூடி மறைக்கப்பட்ட கணக்கிலடங்காத திரை மறை கொடுமைகளை வெளி உலகத்துக்கு கொண்டு வந்த பெருமை விக்கிலீக்ஸையே சேரும். அமெரிக்க - ஈராக்கிய போரில் பளூஜா சிறைச்சாலை முக்கிய இடம்பிடித்த ஒன்று. அச்சிறைச்சாலையின் உண்மை நிலை (கொடுமை) பற்றி அமெரிக்கா இரகசியமாக வைத்திருந்த அறிக்கை ஒன்று விக்கிலீக்ஸ் இணையத்தில் வெளியாகியிருந்தது. அதே

www.padippakam.com

போல 2007 ஆம் ஆண்டு ஈராக்கில் இருந்த அமெரிக்க இராணுவத் தளபாடங்கள், அங்கு குவிக்கப்பட்டிருந்த ஆயுதங்களின் பட்டியல் பற்றிய முழு விபரமும் கூட வெளியாகியிருந்தது. இவை எல்லாம் அமெரிக்க இராணுவத்தின் உயர்மட்ட அதிகாரிகள் இடையே பரிமாறப்பட்ட ரகசிய கோப்புகள். அவற்றை விக்கிலீக்ஸ் வெளியிட்டு அமெரிக்காவை மட்டுமல்ல உலகத்தையே அதிர்ச்சியில் உறைய வைத்தது.

2008 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கிழக்கு திமோர் போராளிகளின் தலைவர் கொல்லப்பட்ட சம்பவத்தின் சாட்சி ஆவணங்கள் கூட விக்கி லீக்ஸுக்கு கிடைத்திருக்கின்றன. இத்தகைய ஆவணங்கள் எல்லாம் அந்தந்த நாடுகளின் உயர் மட்டங்களிலே மிகவும் இரகசியமாகளீ கையாளப்படுபவையாகும். 2008ஆம் ஆண்டு அமெரிக்க புலனாய்வுத்துறையினர் விக்கிலீக்ஸ் இணையத் தளத்தை முற்றாகச் செயலிழக்கச் செய்வதற்காக 32 பக்க புலனாய்வு அறிக்கை தயாரித்து இரகசியமாக வைத்திருந்தனர். ஆனால் அந்த அறிக்கையும் விக்கிலீக்ஸ் இணைய தளத்திடம் சிக்கியதுதான் வேடிக்கையிலும் வேடிக்கை.

இப்படி எண்ணற்ற இராணுவ, அரசு இரகசியங்கள் விக்கி லீக்ஸ் இணையத்தளத்திலே ஆதாரங்களுடன் கசிந்து கொண்டிருக்கின்றன. யாருமே சிறிதும் எதிர்பார்க்காத பல விடயங்கள் எவ்வித தணிக்கைகளும் இன்றி வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள அமெரிக்க தூதரகங்கள் வாஷிங்டனில் உள்ள தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிய இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட ரகசிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு விக்கி லீக்ஸ் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டன. பல்வேறு நாடுகளைப் பற்றி அமெரிக்கா வைத்துள்ள மோசமான அபிப்பிராயம், பிற நாடுகளின் உள்விவகாரங்களை அமெரிக்கா வேவு பார்த்த விதம் போன்றவை இதன் மூலம் வெட்டவெளிச்சமாகின. ஆப்கானிஸ்தானில் அமெரிக்க அட்டூழியம் குறித்த 90 ஆயிரம் ஆவணங்கள், ஈராக்கில் அமெரிக்க அட்டூழியம் குறித்த நான்கு இலட்சம் ஆவணங்கள் இதுவரை இந்த இணையத்தளத்தால் வெளியிடப்பட்டுள்ளன. ஈராக் தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்க ஹெலிகொப்டர் ஒன்று பொதுமக்களைச் சுட்டுக் கொன்ற வீடியோவும் வெளியிடப்பட்டது. அமெரிக்க அதிபர் பதவிக்குப் போட்டியிட்ட சாரா பாலின் என்பவரின் மின்னஞ்சலில் இருந்த சர்ச்சைக்குரிய பல தகவல்களும் வெளியிடப்பட்டது விக்கிலீக்ஸில்.



படிப்பகம்

www.padippakam.com

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் இடத்துக்கு தகுதியுடன் இருப்பதாக இந்தியா தனக்குத் தானே தம்பட்டம் அடித்துக் கொள்கிறது என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் ரகசியமாக தெரிவித்த கருத்தையும் வெளியிட்டது விக்கிலீக்ஸ். இந்நிலையில் அமெரிக்கா பல்வேறு நாடுகளிடம் கொண்டுள்ள வெளியுறவுக் கொள்கைகள் குறித்த ரகசிய ஆவணங்களை வெளியிடப் போவதாக ஜூலியன் சமீபத்தில் தெரிவித்தார். அவற்றை வெளியிடக்கூடாது எனக் கூறிய அமெரிக்கா அவற்றைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என மிரட்டலும் விடுத்தது. இதற்கு விக்கிலீக்ஸ் பணியவில்லை, அனைத்தினதும் விளைவு விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசேஞ்ச் மீது பாலியல் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டு அவரை துரத்த ஆரம்பித்துள்ளது ஏகாதிபத்தியம். பாலியல் பலாத்காரம் செய்தார் என்று எப்போதோ போடப்பட்ட வழக்கை தூசி தட்டிக் கையில் எடுத்துக் கொண்டு அவரைக் கைது செய்வதற்கு சுவிடன் நீதிமன்றம் பிடியாணை உத்தரவிட, அசாஞ்சே பிரிட்டிஸ் காவல் துறையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

விக்கிலீக்ஸ் இணையத்தில் வெளியான தகவல்கள் அநியாயத் துக்கு எதிரானவை என்பது மறுப்பதற்கில்லை. அதேவேளை தகவல்களைக் கைப்பற்றுவதற்காக கணினியின் நுணுக்கமான தொழில் நுட்பத்தை தெரிந்து கொண்டு திருட்டுத்தன முயற்சியில் இறங்கி வரும் விக்கிலீக்ஸின் பாணியும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல என்று சொல்லும் விமர்சனமும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றேதான். அசாங்கேயின் அபாரமான தொழில்நுட்ப அறிவு தீவிரவாதிகளுக்கும் கிடைக்க ஆரம்பித்தால் உலகத்தை ஆபத்திலிருந்து காப்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல என்பதும் உண்மையே. ஊழலற்ற திறந்த உலகம் ஒன்று அமைவதற்கு விக்கி லீக்ஸ் கார்ணமாக இருக்கிறது என்ற விமர்சனமும் சரியானதே.

விக்கிலீக்ஸ் இணையத்தை, முடக்கிப் போடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் அதிலிருந்து தப்பிக்க 355 மிரர் தளங்கள் துவங்கப்பட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் ஆதரவாளர்களால் தெரிவிக்கப் பட்டுள்ளது. மிரர் தளம் என்பது ஒரு இணையத்தளத்தில் இடம் பெற்றுள்ள அனைத்துத் தகவல்களும், அனைத்துப் பக்கங்களும் வேறு ஒரு தளத்திலும் காணும் வசதி ஆகும். அதன்படி விக்கிலீக்ஸ் தளத்தின் அனைத்துப் பக்கங்களையும், தகவல்களையம் வேறு தளங்கள் மூலம் பார்க்க முடியும். மறைக்கப்பட்ட பல்வேறு மனித உரிமைக் கொடுமைகளையும், கொலைகளையும் அம்பலப்படுத்திய



படிப்பகம்

www.padippakam.com

ஜூலியன் அசாங்கேக்கு நோபல் பரிசு கொடுக்கப்பட வேண்டும் என்று ரஷ்யா பரிந்துரைத்துள்ளது. மேலும் அவருக்கு அடைக்கலம் தரவும் சில நாடுகள் முன்வந்துள்ளதுடன் உலகம் முழுவதும் அசாங்கேக்கு ஆதரவுக் குரல்கள் பலமாக ஒலிக்கத் தொடங்கி உள்ளன.

உலகத்தின் சர்வாதிகாரியான அமெரிக்காவையே ஆட்டிப் படைக்கும் அசாங்கேயின் விக்கி லீக்ஸ் தமது பணியைத் தொடர வேண்டும் என்பதுதான் உலகின் பெரும்பாலானவர்களின் கருத்து. அப்போதுதான் வல்லாதிக்க நாடுகளின் கொடுஞ் செயல்கள் குறையும். அதன் கொடூர முகங்கள் வெளிச்சத்துக்கு வரும். பழி வாங்கும் நோக்கத்துடன் அசாங்கேயை சிறையில் அடைத்தாலும் அவர் தொடங்கிய பாணி ஊடகவியலுக்கே ஒரு புதிய பரிணாமத்தை கொடுத்தால் அதற்கு முன்னோடி என்ற பெருமை ஜூலியன் அசாங்கையே சாரும். இது நிகழ இன்றைய வல்லாதிக்கம் அனுமதிக்குமா என்கின்ற சந்தேகம் எழுப்பப்பட்டாலும் விக்கிலீக்ஸை அவ்வளவு எளிதாக ஆதிக்க சக்திகளால் அழித்துவிடமுடியாது, அது உலகம் முழுவதும் பெரும்பான்மையாக இருக்கும் அப்பாவி ஆற்றலர்களின் பக்கம்.

**17.12.2010**



படிப்பகம்

www.padippakam.com

# இன்றும் தொடரும் பஸ்க் போராட்டமும் ஸ்பெயின் அரசும்

உலகில் உருவெடுத்த பழங்கால நாடுகள் முதல் இன்றுவரை பொதுவாக அவற்றில் வாழ்கின்ற மக்களின் தாய்மொழிப் பெயராலேயே அழைக்கப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. இதற்குச் சான்றாக பல மொழிவழிப் பெயர் கொண்ட தொன்மைமிக்க நாடுகளைச் சுட்டிக் காட்ட முடியும். பண்டைய குமரிக் கண்டத்தில் தோன்றிய தமிழ்நாடு - ஆசியாக் கண்ட நாடுகளான சீனா, ஜப்பான், கொரியா, தாய்லாந்து, ஐரோப்பிய நாடுகளான கிரேக்கம், இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா, அயர்லாந்து - ஆபிரிக்கக் கண்ட நாடுகளான எகிப்து, சூடான், கொங்கோ, நைஜீரியா - இப்படி மிகப் பல நாடுகள் தங்களின் தாய்மொழிப் பெயரையே பூண்டு வந்துள்ளன.

ஆனால், கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு, ஐரோப்பாக் கண்டத்தைச் சேர்ந்த சில மன்னராட்சி நாடுகள், கப்பல் வர்த்தகம் புரியவெனச் சொல்லிக்கொண்டு கடல் வழி சென்ற பகுதிகளில் எல்லாம் தங்களின் ஆட்சியை நிலைநாட்டி குடியேற்ற நாடுகளைத் தோற்றுவித்தபோது தாய்மொழி அல்லாத பெயர் களையும் அன்றைய சில புதிய நாடுகள் தாங்க நேர்ந்தன.

குறிப்பாக, கடலோடி கொலம்பஸ், 1492ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டிலிருந்து மேற்குத் திக்கு நோக்கியும் - வாஸ்கொடகாமா 1497இல் போர்த்துக்கல் நாட்டிலிருந்து கிழக்கு திக்கு நோக்கியும் கப்பல்கள் மூலம் புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கப் புறப்பட்டனர். அதன் பிறகு தான் - தாய்மொழி அல்லாத பெயர்களையும் நாடு களுக்குச் சூட்டுகின்ற மாறுபட்ட ஒரு போக்கு தோன்றியதெனலாம்.



படிப்பகம்

ஸ்பெயின், போர்த்துக்கல், பிரான்ஸ், டென்மார்க், ஜேர்மனி, இங்கிலாந்து முதலான காலனித்துவ நாடுகள் தனி ஆட்சி கொண்டிருந்த பல நாடுகளை தங்கள் ஆக்கிரமிப்பால் ஒருங்கிணைத்துப் புதிய குடியேற்ற அடிமை நாடுகளை உருவாக்கிய போது அவற்றுக்கு வேறு வேறு பெயர்களைச் சூட்டினார்கள்!

அடிமை இருளில் சிக்கித் தவித்த இந்த நாடுகளின் (ஐரோப்பியர்களின் காலனி ஆதிக்க நாடுகளுக்கு) - விடியலுக்கு இரண்டாம் உலகப் போரானதே, வழி கோலியது எனக் கூறலாம். ஜெர்மனி நாட்டை ஆண்ட நாசி (ஆரிய) இனவெறியன் கிட்லரால் 1939ஆம் ஆண்டு தொடங்கிய இரண்டாம் உலகப் போர், 1945ஆம் ஆண்டு அவனது மறைவோடு முடிவுக்கு வந்தது. அந்தப் போரில், மேலே கூறப்பெற்ற ஐரோப்பிய வல்லாதிக்க நாடுகள் மிகக் கொடிய பேரழிவுகளுக்கு இரையாயின. அவற்றிலிருந்து தங்கள் நாட்டு மக்களையும் மண்ணையும் மீட்டாலே போதும் என்கிற நெருக்கடியில் சிக்கிய இந்த நாடுகள், தங்களின் குடியேற்ற நாடுகளின் மீது தொடர்ந்தும் ஆளுமை செலுத்த முடி யாத நிலை ஏற்பட்டு, அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளுக்கு விடுதலை வழங்க அல்லது அங்கிருந்து விலகிக் கொள்ள முன்வந்தன எனலாம்.இந்த இரண்டாம் உலகப் போரின் ஓர் இனிய விளைவே இந்தியா, இலங்கை, பர்மா (மியான்மார்) மலேயா முதலான பல நாடுகளுக்கு விடுதலை வாங்கித் தந்தது.

குடியேற்ற நாடுகளுக்கு விடுதலை அளிக்கப்பட்ட பொழுது, மிகக் கொடிய அநீதி ஒன்றும் இழைக்கப்பட்டது. ஐரோப்பிய பேரரசுகளால் முன்னர் தனித்தனியாக ஆட்சி நடத்திய பல்வேறு மொழிகள் பேசப்படும் பெரிய நாடுகளையும் சிறிய நாடுகளையும் தங்கள் நிர்வாகத் தேவைக்காக ஒருங்கிணைத்துதான் ஒரே நாடாக அவர்கள் உருவாக்கியிருந்தனர். ஆனால் அந்த நாடுகளை விட்டு இவர்கள் வெளியேறிய பொழுது தங்களது தேவைக்காக ஒருங்கிணைந்த நாடுகளை அப்படியே விட்டுச் சென்றது தான் இவர்கள் செய்த அநீதிகளுக்கெல்லாம் மகுடம் இட்டது போல ஆகிவிட்டது. இவர்கள் ஆட்சிக்கு முன்பு இருந்தவாறே ஒவ்வொரு தனிமொழி நாட்டுக்கும் அரசு உரிமையைப் பிரித்து ஒப்படைப்புச் செய்யத் தவறியதே அந்தந்த நாட்டின் பெரும்பான்மை மொழியினர் அரச நிர்வாகத்தை கைப்பற்றிக் கொண்டு சிறிய மொழியினரை அடக்கி ஆளக்கூடிய நிலையை எற்படுத்தியது.

www.padippakam.com

அதனால் தான் இந்தியாவில் இந்திமொழியும் பாகிஸ்தானில் உருது மொழியும் இலங்கையில் சிங்கள மொழியும் ஆட்சிமொழி அதிகாரத்தைப் பெற்று அந்த நாடுகளில் தொடர் சிக்கல்களை ஏற்படுத்தியது.

இத்தகைய பெரிய மொழிகளின் அரசியல் ஆதிக்கத்தை அந்தந்த நாட்டிலும் உள்ள சிறுபான்மை மொழிபேசும் மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாததன் வெளிப்பாடே இப்படியான மொழிசார் நெருக்கடிகளுக்கும் அது சார் போராட்டங்களுக்கும் காரணம்.

இங்கிலாந்து நாட்டின் குடியேற்ற நாடுகளில்தான், இப்படியான போராட்டங்கள் இடம்பெறுகின்றன என்பது இல்லை. ஏனைய, பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்பெயின், போர்த்துக்கல் போன்றவற்றின் குடியேற்ற நாடுகளிலும் தாய்மொழிப் பற்றின் விளைவான போராட்டங்கள் வெடித்துக் கொண்டேதான் வந்துள்ளன. இப்படியான காலனித்துவ நாடுகள் பலவற்றில் சிக்கல்களும் போராட்டங்களும் இடம்பெற்றுக் கொண்டிருக்க, ஆதிக்கம் செலுத்திய ஒரு நாட்டின் உள்ளேயே இதே போன்ற மொழிசார் போராட்டம் ஒன்று நீண்ட நாட்களாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. வணிகத்திற்கென கடலோடி நாடுகளைக் கைப்பற்றிய வரலாற்றின் பிதாமக்களான ஸ்பெயின் நாட்டின் உள்ளேயே இந்தப் போராட்டம் இன்றும் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

ஐரோப்பாக் கண்டத்தின் தென்மேற்கே சிறிய மொழிக் குழு ஒன்றே இந்தத் தனிநாட்டு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறது. 1921ஆம் ஆண்டில் பாஸ்க் என்னும் மொழிக்காக ஆரம்பிக்கப்பட்ட தனிநாடு விடுதலை இயக்கப் போராட்டம் ஏறத்தாழ தொண்ணூறு ஆண்டுகளாகப் பல்வேறு வடிவங்களில் - பெயர்களில் நடத்தப்பெற்று வருகிறது. ஸ்பெயின் நாட்டின் அரசியல் ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்து, பாஸ்க் மொழியை ஆட்சிமொழி ஆக்கித் தற்போதைய பாஸ்க் மொழி மாகாணத்தைத் தனி இறையாண்மை நாடாக உருவாக்க வேண்டும் என்பதே அந்த விடுதலை இயக்கத்தின் குறிக்கோள்.

அதன் வரலாற்றுப் பயணம் ஏன் தொடங்கியது...? எங்கே வளர்ந்தது...? எப்படியெல்லாம் தொடர்கிறது...?

ஐரோப்பாக் கண்டத்தின் மிகப்பெரிய நாடுகளில் ஒன்றான ஸ்பெயின், பிரான்ஸ் நாட்டின் தென்மேற்கில் அட்லாண்டிக்



படிப்பகம்

www.padippakam.com

பெருங் கடலையும், தெற்கில் மத்திய தரைக் கடலையும் கொண்ட ஐபேரியன் தீபகற்பம் என்னும் பரந்த நிலப்பரப்பில் அமைந்துள்ளது. மட்ரிட் நகரை தலைநகராகக் கொண்ட அந்நாட்டின் பெரும் பான்மையான மக்கள் ஸ்பெயின் மொழி பேசுபவர்கள். பாஸ்க் என்னும் மொழியினரும், கட்டாலன் மற்றும் கால்சியன் மொழிகள் பேசுவோரும் சிறுபான்மையராக வாழும் அந்த நாட்டின் மக்கள் ரோமன் கத்தோலிக்க மதத்தைத் தழுவியோரே ஆவர். மன்னர்களின் ஆட்சியே நடைபெற்று வந்த ஸ்பெயின் 1931இல் குடியரசு நாடாக மாறியது. பின்னர் 1935ஆம் ஆண்டில் அங்கே உள்நாட்டுப் போர் வெடித்து 1936 முதல் 1939 வரை நான்கு ஆண்டுகள் நடைபெற்ற போரின் முடிவில், மக்களாட்சி முடிந்து இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது. 36ஆண்டுகளாக தொடர்ந்த இராணுவ ஆட்சியில்தான் பாஸ்க் மொழி மாகாணம் போன்ற சில மாநிலங்களின் தன்னாட்சி (autonomy) அதிகாரங்கள் பறிக்கப்பட்டு ஸ்பெயின் மொழி மட்டுமே ஒரே ஆட்சி மொழியாக்கப்பட்டது. பாஸ்க் மொழி போன்ற மாநில மொழிகள் பின்னுக்குத் தள்ளப்பட அதன் வெளிப்பாடு பாஸ்க் மொழி இளைஞர்களின் விடுதலை கோரிக்கைக்கு வித்திட்டது.

பாஸ்க் மொழி பேசுவாரின் தாயகம் எனச் சொல்லப்படும் பாஸ்க் மாகாணம் ஸ்பெயின் நாட்டின் வடக்கு, வட மேற்குப் பகுதிகளில் பிஸ்கே வளைகுடாவை ஒட்டியும், மேற்குப் புறத்தில் பைரேனீஸ் என்னும் நீண்ட மலை அடிவாரங்களிலும் விரிந்துள்ளது. பாஸ்க் இனத்தின் நிலப்பரப்பு பிரான்ஸ் நாட்டின் ஒரு சிறு பிரிவிலும் இருப்பதாகவும் செல்லப்படுகிறது. பாஸ்க் தேசியக் கட்சி (Basc National Party) என்கின்ற அமைப்பு 1895ஆம் ஆண்டு சபினோ-டி-அரானா கொய்ரி என்பவரால் தோற்றுவிக்கப்பெற்றது. அவர் தீவிர ரோமன் கத்தோலிக் மதத்தைச் சேர்ந்தவராக இருந்ததனால், முற்போக்குக் கொள்கைகள் இல்லாத ஒரு பழைமைவாதியாகவே விளங்கினாலும் கூட, மக்களாட்சி மரபு நெறிகளின்படி, பாஸ்க் இனமக்களைப் பாதுகாப்பதற்கும், பாஸ்க் மாகாணத்திற்குத் தன்னாட்சி அதிகாரங்கள் (Autonomous Power) கிடைப்பதற்கும் ஏற்றவாறு தமது கட்சியின் கொள்கைகளை வகுத்திருந்தார்..

பாஸ்க் தேசியக் கட்சி - ஸ்பெயின் மொழி உச்சரிப்புச் சொல்லின் முதல் மூன்று எழுத்துகளையும் இணைத்து, பி.என்.வி. என்னும் சொற்றொடரால் தெரியப்பட்டது.



படிப்பகம்

பி.என்.வி. கட்சியின் தலைவர்களே, ஸ்பெயின் நாட்டின் மத்திய அரசுக்குக் கட்டுப்பட்டு பாஸ்க் மாகாண ஆட்சியை நடத்தி வந்தனர். ஆனால் அவர்கள், அந்த மாநிலத் தன்னாட்சி உரிமைகளைப் பெறுவதில் முனைப்பாகச் செயலாற்றாமல் நத்தைகளாகவே நடைபோட்டதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

இந்த அணுகுமுறை, பாஸ்க் தேசியக் கட்சியை 1921இல் இரண்டாகப் பிளவுபடச் செய்து பிரிந்து சென்ற புதிய பிரிவினரே பாஸ்க் மொழியினரின் மாகாணம் தனிநாடாக விடுதலை பெறவேண்டும் என்னும் கோரிக்கையை - கொள்கையை முன்வைத்துப் போராட முனைந்தனர்...!

ஸ்பெயின் நாட்டில் மக்களாட்சியை மடியச் செய்து 1936ஆம் ஆண்டு யூலை மாதத்தில் தமது இராணுவ ஆட்சியை நிறுவிய போர்த் தளபதி பிராங்கோ (Franco) என்பவர் பாஸ்க் மொழியினரின் தனிநாடு விடுதலைப்போரை முறியடிப்பதில் முனைப்பாக ஈடுபட்டார். அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளால் அந்த விடுதலை இயக்கத்தினரில் ஏராளமானோர் ஸ்பெயின் எல்லையை அண்மித்த பிரான்சில் உள்ள பாஸ்க்மொழி பேசும் மக்கள் வாழும் மாநிலப் பகுதிக்குப் புகலிடம் தேடி ஓடினர். ஸ்பெயின் நாட்டின் ஒரு மாகாணமான பாஸ்க்மொழி மாநிலத்தின் ஆட்சித் தலைவராக 1936 அக்டோபர் மாதத்தில் பதவி ஏற்ற ஜோஸ் அந்தோணி அக்குய்ரே என்பவரும் அந்தப் பிரெஞ்சு பாஸ்க் பகுதிக்குத் தப்பி ஓடும்படி நேர்ந்தது...! பாஸ்க் மொழி பிராந்தியத்தில் பெருந்தொழில்களுக்குப் பெயர் பெற்றதும் மக்கள் தொகை நிறைய மலிந்ததும் ஆன பில்பாவோ என்னும் பெரு நகரத்தை பிராங்கோவின் படைத்துருப்புகள் கைப்பற்றியிருந்தன. பிறந்த நாட்டை விட்டுத் தப்பி ஓடிய அந்தோணி அக்குய்ரே, பிரான்ஸ் நாட்டின் பாஸ்க் மொழியினர் மண்டலத்தில் 1952ஆம் ஆண்டு தலைமறைவு பாஸ்க் அரசு என்பதை அமைத்து ஸ்பெயினிலிருந்து பாஸ்க் மொழி நாடு விடுதலைஅடைவதற்கான விழிப்புணர்வை விதைத்தார். அதே காலத்தில், பாஸ்க் தேசியக் கட்சித் தலைவர்களின் மென்மையான அணுகுமுறைகளையே தொடர்ந்தும் கடைப்பிடிக்க ஆத்திரமடைந்த மாணவ சமூகம் பாஸ்க்மொழி மாகாணத்தில் உள்ள பில்பாவோ எனும் நகரில் இயங்கும் தியுஸ்தோ பல்கலைக் கழகத்தில், ‘பாஸ்க் தாய்நாடு விடுதலை இயக்கம்’ என்னும் போராட்டப் பாசறையை 1952ஆம் ஆண்டு தோற்றுவித்தது. ஸ்பெயின் மொழியில் ஈ.ரி.ஏ. எனப்பட்ட இந்த விடுதலை இயக்கம் தனது முதல் பொதுப் பேரவை மாநாட்டை பிரான்ஸ் நாட்டில் உள்ள பேயோன் நகரில்

1962ஆம் ஆண்டு நடத்தி அதிலே தனது விறுவிறுப்பான கொள்கைச் செயலாக்கத் திட்டத்தை அறிவித்தது.

பிராங்கோவின் இராணுவ சர்வாதிகார ஆட்சியை நெஞ்சுரத்தோடு எதிர்த்து, பாஸ்க் மொழிக்கு என்ற தனிநாடு விடுதலை அடைவதற்கு நேரடிப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்பதே ஈ.ரி.ஏ. விடுத்த விடுதலை கொள்கை அறிவிப்பு.

பாஸ்க் மொழி மாகாணத்தை நிர்வகித்து வரும் பி.என்.வி. என்னும் பாஸ்க் தேசியக்கட்சி முன்னரேயே தன்னாட்சி உரிமைகளை (Autonomous Power) வலியுறுத்தி வந்தபோதும், அதன் தலைவர்கள் ஸ்பெயின் நாட்டின் மைய அரசுக்கும், பிராங்கோவின் இராணுவ ஆட்சிக்கும் பணிந்து விடக் கூடியவர்களாகவே நடந்து கொண்டார்கள். அவர்களுடைய அடிமைத்தனப் போக்கை முற்றிலும் முறியடித்து நேரடிப் போராட்டத்தில் குதிக்கப் போவதாகவும் ஈ.டி.ஏ. இயக்கம் அறிவித்தது.

பாஸ்க் தேசியக் கட்சியின், கத்தோலிக்கக் கிறித்தவ மத வளர்ச்சிக்குத் துணைபோதல் தனி மனித முதலாளித்துவ ஆதிக்கத்தைத் தடுக்க முனையாமை போன்ற பிற்போக்குத்தனமான நிலைப்பாடுகளையும் ஈ.ரி.ஏ. விடுதலைப் பாசறை கடுமையாகக் கண்டித்ததுடன் தனது போராட்ட நடவடிக்கைகளையும் படிப்படியாக முன்னெடுத்தது. ஆரம்பத்தில் எந்த மதத்துக்கும் தனி ஆதரவு தராத நடுநிலைப் போக்கையே கொண்டதான இந்த விடுதலை இயக்கம் பொருளியல் சார்ந்த சோசிலிசம் என்னும் சமநீதிப் பொருள் பங்கீட்டையே ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்டு பின்னர் 1965ஆம் ஆண்டு நடைபெற்ற ஆறாவது பொதுப் பேரவை மாநாட்டில் மார்க்ஸியம்-லெனினிசம் போன்ற பொதுவுடைமைப் பொருளியல் கொள்கையை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றியது.

ஐரோப்பாக் கண்டத்தில் பெரும்பான்மையான மொழிகள் இந்தோ - ஐரோப்பிய பிரிவைச் சேர்ந்தவையே ஆகும். ஆனால், அவற்றைச் சாராத தனித்தன்மையுடன் பாஸ்க் மொழி தோன்றி வளர்ந்தனால் தான், ஸ்பெயின் மொழிக்கு அடிமைப்பட்டுக் கிடக்க, அந்த மொழி மக்கள் ஒப்புக்கொள்ளவில்லை என 1961ஆம் ஆண்டில் பிரான்ஸ் ஆய்வாளர் ஒருவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பாஸ்க் மொழி பேசுவோரின் மக்கள் தொகை 2005-இன் கணக்கீட்டுப்படி ஸ்பெயின் நாட்டின் வடபகுதியில் ஏறத்தாழ இருபத்து ஒரு இலட்சம் பேரும் பிரான்ஸ் நாட்டின் தென்மேற்குப்

www.padippakam.com

பகுதியில் ஏறத்தாழ இரண்டு இலட்சம் பாஸ்க் மொழி மக்களும் வாழ்கின்றனர். பாஸ்க் மொழிக்கு என்ற தனியாட்சிப் பேராட்டத்தை ஒடுக்க அந்த இனத்தவரின் விடுதலைப் போராட்டங்களை முறியடிக்கத் தம்முடைய படைத்துருப்புகளை பயன்படுத்த தொடங்கியது ஸ்பெயின் அரசு. அனைத்து அடக்கு முறைகளின் போதும் ஏதிலிகளாக ஓடிவரும் பாஸ்க் மொழியினருக்குப் புகலிடம் தந்தது பிரான்ஸ் நாட்டின் பிஸ்கே வளைகுடாப் பகுதியில் இருக்கும் பாஸ்க்மொழி மாகாணம்.

கால ஓட்டத்தில், ஈ.டி.ஏ., விடுதலை இயக்கம், துப்பாக்கிகளை ஏந்துகின்ற வெடிகுண்டுகளை வீசுகின்ற வன்செயல் நிலைக்கு ஸ்பெயின் நாட்டின் ஆட்சியாளர்களால் தள்ளப்பட்டது. அதன் முதல் படுகொலை, 1968 யூன் மாதம் பஸ்க் மாகாணத்தின் உள்ளூராட்சி அதிகாரியான ஜோஸ் ஆர்க்கே என்பவர் சுடப்பட்டதில் தொடங்கியது. பின்னர் பிராங்கோவின் ஆட்சி வழித்தோன்றலாக வரக் கூடியவர் என்று எதிர்பார்க்கப்பட்ட அட்மிரல் லூயிஸ் காரெரோ என்பவர் 1973 டிசம்பர் மாதத்தில் ஈ.டி.ஏ. போராளிகளின் வெடிகுண்டு வீச்சுக்குப் பலியானார்.

அவரது படுகொலைச் சாவு ஸ்பெயினை ஆண்ட பிராங்கோவின் வல்லாதிக்க ஆட்சியின் முடிவுக்கு ஒரு வெள்ளோட்டமாகவே அமைந்தது. ஸ்பெயின் நாட்டின் எதிர்க்கட்சிகள் எல்லாம் அவரது இறப்பை வரவேற்று ஈ.டி.ஏ.யின் வீரத்தை வாழ்த்தினர்!

பின்னர் தளபதி பிராங்கோ 1975இல் இயற்கை எய்தியதும், ஸ்பெயின் நாட்டின் இராணுவ ஆட்சி நீங்கி மீண்டும் மக்கள் ஆட்சி நிலைநாட்டப்பட்டது. ஆயினும் பிரித்தானியாவைப் போன்று மன்னர் குடும்பத்தை அரசுத் தலைவராக ஏற்கும் நாடாளுமன்ற ஆட்சி முறைக்கே அங்கும் வழிகோலப்பட்டது.

அதற்குப் பிறகாவது, பாஸ்க் மொழி மாகாணம், தனி இறையாண்மை கொண்ட நாடாக விடுதலை பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டதா என்றால் இல்லை...! ஸ்பெயினை ஆளும் மத்திய அரசினர், முன்னைவிடக் கொடுமையாகவே விடுதலை போராட்ட இயக்கங்களைத் தங்களின் படைத் துருப்புகளால் ஒடுக்கி ஒழித்துவிட முனைந்து செயல்பட்டனர்.

அதனால், மிக மிகுதியான துப்பாக்கிச் சண்டையிலும், வெடிகுண்டு வீச்சிலும் ஈ.ரி.ஏ., போர்ப் பாசறையினர் ஈடுபட ஸ்பெயின் அரச அதிகாரிகள் படையினர் என 1978இல் 68 பேர்களும்,



படிப்பகம்

www.padippakam.com

1979இல் 76 பேர்களும், 1980இல் 91 பேர்களும் அவர்களால் கொல்லப்பட்டனர். அந்நிலையில் 1992ஆம் ஆண்டு ஈ.டி.ஏ. அமைப்பின் பல உயர்நிலைத் தலைவர்கள் ஸ்பெயின் அரசினால் கைது செய்யப்பட்டு பாஸ்க் மொழி மாகாணத்தில் உள்ள பிடார்ட் நகருக்குக் கொண்டு செல்லப்பட்டு சிறை வைக்கப்பட்டனர். அந்தக் கைது நடவடிக்கை, தனிநாடு விடுதலை ஆதரவாளர்கள் இடையே எல்லை இல்லாத ஆத்திர நெருப்பையே விசிறிவிட அந்த மாகாணம் முழுவதும் பெருங்கிளர்ச்சிகள் வெடித்தன. அவற்றில் ஈடுபட்ட பல ஆயிரக்கணக்கான பொது மக்கள் மீது ஸ்பெயின் அரசு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டும் சிறைச் சாலைகளில் அடைத்தும் சித்திரவதை செய்தது. 1990இன் பிற்பகுதியிலிருந்து ஈ.ரி.ஏ. அமைப்பு முன்னெடுத்த பாஸ்க் விடுதலைப் போராட்டம் சிறுக சிறுக மழுங்கி காணா நிலைக்கு வந்து விட்டாலும் அந்த மக்களின் விடுதலை உணர்வுகள் இன்றும் இருப்பதன் வெளிப்பாடாக ஸ்பெயின் பிரான்ஸ் எல்லைப்பகுதியில் அப்பப்போ ஆங்காங்கே சில சம்பவங்கள் இடம் பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

பாலத்தீனம், செச்சனியா, திபேத் ஆகிய நாடுகளின் தனி ஆட்சி உரிமைப் போர்கள் தொடர்ந்து நடைபெறுகின்ற துன்பநிலையில், ஸ்பெயினின் பாஸ்க் மொழிபேசும் மக்கள் இன்றும் ஆளுமைக்கு எதிரானவர்களாகவே இருந்து வருகின்றனர்.

செர்பியாவிலிருந்து கொசோவோ மாநிலம் பிரிந்ததை ஏற்றுக் கொண்ட அதனை ஆதரித்த மேற்கத்திய வல்லரசு நாடுகளும், அவற்றின் ஊதுகுழலான ஐக்கிய நாடுகள் சபையும் ஒரு நூற்றாண்டுக்கு மேல் நடைபெற்ற பாஸ்க் மொழியினரின் ஆதங்கப் போரை மட்டும் ஆதரிக்காதது ஏன் என்பது ஆதிக்க சக்திகள் பற்றி ஆழமாக அறிந்த அனைவருக்கும் புரியும்.

பிரான்ஸ் நாட்டிலும் பாஸ்க் மொழியினர் வாழும் பகுதி இருக்கிறது. என்றாலும், பிரெஞ்சு ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் அந்த பகுதி மீது வரம்புமீறி ஆதிக்கம் செலுத்தாததாலும் ஸ்பெயினிலிருந்து ஓடி வரும் தங்கள் மொழியினருக்குப் புகலிடம் தந்து உதவுவதாலும் பிரெஞ்சு பாஸ்க் மொழி மாகாணத்துக்கு விடுதலை வேண்டும் என்கிற கோரிக்கை அங்கே எழவில்லை.

ஸ்பெயின் நாட்டின் அரசினரோ பாஸ்க் மொழியினருக்கு அடிப்படை உரிமைகளை வழங்காமல், தங்களின் ஆதிக்கத்தை அவர்கள் மீது செலுத்துகின்றனர். அதை எதிர்ப்பவர்களை



படிப்பகம்

www.padippakam.com

அழிக்கின்றனர். இன்றும் தொடரும் இந்தநிலைதான், ஈ.டி.ஏ., போன்ற விடுதலை அமைப்புகளை தோற்றுவித்தன. பல உயிர்களை அழித்தன. தாய்மொழிப் பற்றின் உந்துதலால் அதற்கெதிரான அடக்குமுறைகளால் பாதிக்கப்பட்ட உலகின் பல இன மக்கள் இன்றும் இன்னமும் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த மக்களின் மனங்களில் விடியல் விளக்கு என்றைக்கு எரிகிறதோ அன்று தான் இந்த உலகம் அமைதி பற்றியும் ஒற்றுமை பற்றியும் பேச முடியும்.

**10.12.2010**

கடந்த கால துன்பங்களை மறந்து எதிர்கால இணைந்த நல்வாழ்வை ஏற்படுத்திக் கொள்வதற்கு புதிய வழிமுறைகளைக் கண்டுகொள்வதுதான் நல்லிணக்கத்தின் பிரதான இலக்கும் முக்கிய பங்களிப்புமாகும்.

– பேராசிரியர் ஜோன் போல் லெடராக்



படிப்பகம்

www.padippakam.com

# விடுவிக்கப்பட்ட ஆங் சான் சூகி விடுவிப்பாரா பர்மிய மக்களை..?

இன்றைய நாளில் அனைத்துலக சமூகங்களாலும் அதிகம் கொண்டாடப்பட்ட மகிழப்பட்ட விடுதலை - அம்மையார் ஆங் சான் சூகியின் 15 ஆண்டுகால வீட்டுக் காவலுக்கு கிடைத்துள்ள விடுதலை. இந்த விடுதலை, உலகத்தின் அனைத்து மொழி ஊடகங்களிலும் முக்கிய இடத்தைப் பிடித்தது. மக்களாட்சியை வலியுறுத்தி ஒரு நெடிய போராட்டத்தை நடத்தி வரும் ஆங்சான் சூகியின் போராட்டக் குணத்துக்கு அனைவரும் மரியாதை கலந்த வணக்கம் செலுத்தினார்கள், செலுத்துகிறார்கள். அவரது போராட்டம், போற்றுதலுக்கும், வாழ்த்துதலுக்கும் உரிய ஒன்றுதான் என்பதில் எவ்வித மாறுபட்ட கருத்துக்கும் இடமிருக்க முடியாது.

ஆனால் ஆங் சான் சூகியின் வீட்டுக் காவல் விடுதலையால் மட்டும் அந்தத் தேசத்து மக்களுக்கு சுதந்திரச் சுவாசம் கிடைத்துவிடுமா...? என்பது இன்னமும் கேள்வியாகவே நிற்கிறது. ஒருவேளை உணவுக்கு வழி இல்லாமல், தமது அடிப்படை உரிமைகளுக்கு வாய் கூட திறக்க முடியாமல் இயற்கை வளம் மிகுந்த பர்மா தேசத்தை விட்டு இன்றும் கூட்டம் கூட்டமாய் லட்சக் கணக்கில் அகதிகளாய் வெளியேறும் அந்நாட்டு அப்பாவி மக்களுக்கு எப்போது விடுதலை கிடைக்கப் போகிறது...? இதன் மேல்தான் - இனிமேல்தான் ஆங் சான் சூகிக்கும் அவர் சார்ந்திருக்கும் கட்சிக்கும் மிகப்பெரிய பொறுப்பும் கடமையும் காத்திருக்கிறது. ஆங் சான் சூகிக்கு அமைதிப் பரிசும், விருதும் மட்டும் கொடுத்து இவ்வளவு காலமாக வேடிக்கை பார்த்த சர்வதேச சமூகம் அடுத்து என்ன செய்யப் போகிறது...? கடந்த 48 ஆண்டுகளாக அடக்குமுறை இராணுவ ஆட்சியின் பிடிக்குள் சிக்கித் தவிக்கும் பர்மாவும் அந்த மக்களும்



படிப்பகம்

www.padippakam.com

ஜனநாயக சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் நாட்களை இந்தச் சமூகம் எப்போது காட்டப் போகிறது.

அரிசி உற்பத்தியில் ஆசியாவின் அட்சயப் பாத்திரமாக விளங்கிய பர்மா, பர்மா தேக்கு என்ற உலகப் புகழ் பெற்ற வளம் பொருந்திய தேக்கு மரங்களை ஏற்றுமதி செய்த நாடாகவும் இருந்தது. அத்தோடு மட்டுமல்ல இயற்கை எரிவாயுவில் உலகில் முன்னணியில் இருக்கும் நாடு பர்மா. 30 டிரில்லியன் கன அடி இயற்கை எரிவாயுவையும், 3 பில்லியன் பீப்பாய் பெட்ரோலிய எண்ணை வளத்தையும் தன்மடியில் சுமந்து கொண்டிருக்கும் நாடு பர்மா. இத்தனை வளங்களையும் கொண்ட இயற்கை எழில்கொஞ்சும் அந்த நாட்டிற்கும் அதன் ஜனநாயக ஆட்சிக்கும் என்ன நடந்தது. ஏன் அங்கு தொடர்ந்து இராணுவ ஆட்சியும் அடக்கு முறையும்.

பர்மாவை தனது காலனியாக வைத்திருந்த ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திடமிருந்தும், ஜப்பானிய பாசிஸ்ட்டுகளிடமிருந்தும் அந்நாட்டு கம்யூனிஸ்ட்டுகளும், தேச பக்தர்களும் இணைந்து நின்று வீரஞ்செறிந்த போராட்டம் நடத்தியதன் விளைவாக 1948 இல் பர்மா சுதந்திர நாடாக மாறியது. அந்நாட்டின் விடுதலைக்காக பாசிஸ்ட்டு எதிர்ப்பு முன்னணி என்ற பெயரில் பல்வேறு தேச பக்த சக்திகளை ஒன்றிணைத்து களம் கண்டு போரிட்ட பர்மா கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் செயலாளர் ஆங் சான் சூகியின் தந்தையான ஆங் சான் ஆகும். விடுதலைக்காக போராடிய அவரும் அவரது சகாக்கள் பலரும் 1947 இல் அப்போது நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி பொறுப்பை ஏற்பதற்கு முன்னர் துப்பாக்கியால் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.இதைத் தொடர்ந்து பாசிஸ்ட் எதிர்ப்பு முன்னணியில் ஆங் சானோடு இணைந்து பணியாற்றிய "யூ நூ" சுதந்திர பர்மாவின் முதல் பிரதமரானார். விடுதலை பெற்ற பர்மாவின் முதல் பிரதமராக வரவேண்டிய ஆங் சானை ஒழித்துக் கட்டிய காலனித்துவ ஆளும் வர்க்கம் அந்நாட்டில் வலுவாக இருந்த கம்யூனிஸ்ட் போராளிகளையும், ஜனநாயக உரிமைகளுக்காக களம் கண்டவர்களையும் கருவறுப்பதற்கான தொடர் சதி வேலைகளில் ஈடுபட்டது. அதன் ஒரு பகுதியாக பிரதமர் "யூ நூ" தலைமையிலான கட்சியில் பிளவு ஏற்படுத்தப்பட்டு அதன் தொடர்ச்சியாக குழப்பமான அரசியல் நிலைமை ஒன்று அந்த நாட்டில் எற்படுத்தப்பட்டது.

இந்த சூழலைப் பயன்படுத்திக் கொண்ட அன்றைய பர்மாவின் இராணுவத் தளபதியாக இருந்த "நீவின்" 1962 இல் ஆட்சியை



படிப்பகம்

www.padippakam.com

கைப்பற்றிக் கொண்டார். ஜெனரல் நீவின் தலைமையிலான இராணுவ சர்வாதிகார அரசு "பர்மா சோசலிஸ்ட் திட்ட கட்சி" என்ற பெயரில் புதிய கட்சியை ஏற்படுத்தியதோடு 'பர்மிய வழியிலான சோசலிசம்' என்கின்ற புதிய அலங்காரமான பெயரையும் நடைமுறையற்ற செயல் பாடுகளையம் அரங்கேற்றியது. பல கட்சி செயல்பாடுகள் முடக்கப்பட்டன, சட்டமன்றம், நீதிமன்றம் போன்றனவும் முடக்கப்பட்டது, சர்வதேச சமூகத்திடமிருந்தும் பர்மாவை துண்டித்துக் கொண்டு, அனைத்து தொழில்களையும் தேசவுடைமையாக்கிக் கொண்டு (இராணுவ உடைமையாக்கிக் கொண்டு) முன்னேற்றப் பாதையில் செல்லப் போவதாக அறிவித்துச் செயல்பட்டது இராணுவ ஆட்சி. பர்மிய கம்யூனிஸ்ட் கட்சியும் (சி.பி.பி.) சட்ட விரோதமானது என தடை செய்யப்பட்டு, கட்சி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

ஆக மொத்தம் பல கட்சி ஜனநாயக நடைமுறை சவப்பெட்டிக்குள் தள்ளப்பட்டு, ஆட்சிமன்றம், நீதிமன்றம், பத்திரிகை சுதந்திரம் போன்ற ஜனநாயக உரிமைகளை காலில் போட்டு மிதித்துவிட்டு ஒரு பரிபூரண இராணுவ சர்வாதிகார ஆட்சி அந்த நாட்டில் அன்றே ஆரம்பமானது. தொடர்ந்து இராணுவ வீரர்களின் படை பலத்தை அதிகரித்தும், அவர்களுக்கு சலுகைகள் மேல் சலுகைகளை வாரி வழங்கியும் அடக்குமுறை - சர்வாதிகாரத்தின் மூலம் ஆட்சியை தக்க வைத்து வந்தது நீவின் அரசு. இதன் மூலம் அனைத்து வழியிலும் பர்மிய மக்களின் சுதந்திர காற்றுச் சுவாசம் நிறுத்திக் கொள்ளப்பட்டது. இதனால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் மேலும் அம்மக்களை படுகுழியில் தள்ளியன. இராணுவ அதிகாரிகளின் கைகளில் கொண்டு வரப்பட்ட நிறுவனங்கள் முறையாகவும், திறமையாகவும் நிர்வகிக்கப்படாமல் ஊழலுக்கு இரையாகி முடங்கிப் போனது.

இந்நிலையில், மேலும் ஒரு மக்கள் தாக்குதலை தொடுத்த நீ வின் அரசு ஏற்கனவே புழக்கத்தில் இருந்த பர்மிய ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என்று அதிரடியாக அறிவித்தது. இதனால் உழைக்கும் மக்கள் சிறுகச் சிறுகச் சேகரித்து வைத்த சேமிப்பு தொகை அனைத்தும் மொத்தமாக பறிபோனது. 1960 இல் 670 டாலராக இருந்த தனிநபர் வருமானம் 1989 இல் 200 டாலராக குறைந்தது. அரிசி ஏற்றுமதியில் முதலிடத்தில் திகழ்ந்த பர்மாவும் அதன் மக்களும் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இதன் விளைவாக ஏற்பட்டதே 1988ன் பர்மிய எழுச்சி.



படிப்பகம்

www.padippakam.com

இந்த எழுச்சியை ஒடுக்குவதற்கு சக்தியற்ற தளபதி நீ வின் பதவி விலகி அந்த இடத்தில் தனது கைப்பாவைகள் பலரை பதவியில் அமர்த்தினார். இருப்பினும் மக்களின் தொடர் போராட்டம் மற்றும் எழுச்சியின் விளைவாக 1989 இல் இராணுவ உயர் அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று ஆட்சியை கைப்பற்றியது. இந்தக் குழு பர்மாவில் அமைதியையும் - வளர்ச்சியையும் நிலை நாட்டப் போவதாக கூறிக் கொண்டு மக்கள் வளர்ச்சிக் கவுன்சில் என்ற பெயரில் இராணுவ உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவின் ஆட்சியாக தன்னை மாற்றிக் கொண்டு புதிய வடிவம் எடுத்தது. அதன் தற்போதைய சர்வாதிகாரிதான் ஜெனரல் - தான் ஸ்வே.

1960ம் ஆண்டு பர்மாவை விட்டு வெளியேறி இந்தியாவிலும் பின்னர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தனது உயர் கல்வியையும் கற்றுக் கொண்டிருந்த ஆங் சாங் சூகி தனது தாயாரின் உடல் நிலை பாதிப்படைந்ததைக் தொடர்ந்து தன்னுடைய கணவர் மற்றும் இரண்டு குழந்தைகளுடன் 1988ல் லண்டனிலிருந்து பர்மாவிற்கு திரும்பினார். அந்த வேளையில் பர்மாவில் ஜனநாயகத்திற்கான போராட்டம் வீறு கொண்டு நடைபெற்றுக் கொண்டிருந்தது. நாடு திரும்பிய பர்மிய மக்களின் அடையாளமாக திகழ்ந்த ஆங் சான் அவர்களின் பாரம்பரியத்தில் வந்த ஆங் சான் சூகியை சந்திக்க மக்கள் சாரை சாரையாக வந்தனர். நாட்டில் நிலவும் அடக்குமுறை, சர்வாதிகாரம் மற்றும் தங்களது துன்ப துயரங்களை விளக்கியதோடு, அவருக்கு தங்களது ஆதரவையும் தெரிவித்தனர். இதன் வெளிப்பாடும் பர்மாவின் அப்போதைய குழப்பமான, போராட்ட சூழலும்தான் ஆங் சான் சூகியை பர்மாவின் அரசியல் களத்திற்கு இழுத்து வந்தது. உழைக்கும் மக்களோடும், போராடும் மாணவர்களோடும் கரம் கோர்த்த ஆங் சான் சூகி நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஜனநாயகப் பாதையில் பர்மாவை மீட்டெடுக்க வேண்டும் என்று முழங்கினார். இதற்கு நாடு முழுவதும் பலத்த ஆதரவு கிடைக்க தனது ஆதரவாளர்களைக் கொண்டு என்.எல்.டி. - National League for Democracy (ஜனநாயகத்திற்கான தேசிய கட்சி) - என்ற பெயரில் புதிய கட்சியை துவக்கினார். பல்வேறு ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகள் இந்த அமைப்பில் தங்களை இணைத்துக் கொண்டன.

இதைத் தொடர்ந்து வீறு கொண்டு எழுந்த போராட்ட பேரலையை ஒடுக்குவதற்கு திட்டமிட்ட இராணுவ அரசு 1988-ஆகஸ்ட் மாதம் 8ஆம் தேதி 3000-க்கும் மேற்பட்ட போராட்ட வீரர்களை துப்பாக்கி குண்டுக்கு இரையாக்கியது, ஜனநாயக



படிப்பகம்

ரீதியான அமைதி வழியிலான போராட்டத்தை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தது இராணுவ சர்வாதிகார அரசு. 500க்கும் மேற்பட்ட புத்த துறவிகளும் நூற்றுக்கணக்கான மாணவர்களும், தேச பக்தர்களும் இந்த துப்பாக்கி சூட்டிற்கு பலியாகினர். பல்லாயிரக்கணக்கான மக்கள் சிறையில் அடைக்கப்பட்டதோடு, ஆயிரக்கணக்கானோர் நாட்டை விட்டே விரட்டியடிக்கப்பட்டனர். லட்சக்கணக்கான மக்கள் நாட்டினுள்ளேயே இடம் பெயர்ந்து அவதியுற்றனர். போராட்டத்தை வழிநடாத்திய ஆங் சான் சூகி வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். அவரது கணவர் மற்றும் குழந்தைகள் கூட அவரோடு இருப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. அந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட பலரது குடும்பங்கள் சிதறிச் சின்னா பின்னமாய் போயின. இதன் தொடர்ச்சியாக எழுச்சி பெற ஆரம்பித்த மாணவர்கள் போராட்டமும் அடக்கப்பட்டு மாணவரகள் அனைவரும் மிகவும் இளம் பருவத்திலேயே சிறைபிடிக்கப்பட்டு, மிகவும் கொடுமையான சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டனர். அந்த மாணவர் போராட்டக் காலத்தில் லட்சக்கணக்கான மக்கள் பர்மாவினுடைய கிழக்கு மேற்கு ஆகிய பகுதிகளினூடாக இந்தியாவையும் தாய்லாந்தையும் நோக்கி வெளியேறினார்கள்.

வளமான செல்வம் கொழிக்கும் ஒரு நிலப்பகுதி, கனிமவளங்கள் நிறைந்த ஆசியாவிலேயே மிக அதிகமாக அரிசி உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தானிய பூமி, இத்தனை செல்வங்களைக் கொண்ட ஒரு நாட்டின் அரசு இத்தனை ஒடுக்கு முறைகளை செய்கிறது, அதனை உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறதென்றால் தேசிய அளவிலான அல்லது உலகளாவிய முதலாளித்துவ சக்திகளே இந்த ராணுவ ஆட்சியை ஏற்படுத்தி அதன் பின்னணியில் இருந்து செயல் படுகிறது என்றுதானே பொருள். ஒரு ஜனநாயகப் போராட்டத்தில் பங்கேற்கின்றவர்கள் எந்தளவிற்கு பாதிக்கப்படுகிறார்கள் என்பதற்கு பர்மா மிகப்பெரியதொரு சாட்சியாக இருக்கிறது. சாதாரண பாமர மக்கள் அனைவரும் அடிமட்டத்தில் வேலை செய்கிறவர்கள் எல்லாருமே அரசாங்கத்தின் கண்காணிப்பிற்குள்ளாகிற மக்களாக இருக்கிறார்கள். பொதுமக்கள் அனைவருக்குமே சிறைக்குள் இருப்பதாக ஓர் உணர்வு. சொந்த தேசமே ஒரு சிறையாக இருப்பதான ஓர் உணர்வு அவர்களுக்கு.

1988ஆம் ஆண்டு நடைபெற்ற மகத்தான எழுச்சியைத் தொடர்ந்து 1990 மே மாதம் 27 ஆம் தேதி பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தியது இராணுவ அரசு. 93 கட்சிகள் போட்டியிட்ட இத் தேர்தலில் ஆங் சான் சூகியின் என்.எல்.டி. எனப்படும் ஜனநாயகத்திற்கான தேசிய

www.padippakam.com

கட்சி மகத்தான வெற்றி பெற்று 485 இடங்களில் 392 இடங்களை கைப்பற்றியது. இராணுவ ஆட்சியாளர்கள் எதிர்பாராத அளவில் இந்த வெற்றி அமைந்ததால், ஆங் சான் சூகி தலைமையில் ஜனநாயக அரசை அமைப்பதற்கு அனுமதிக்காமல், மக்கள் தீர்ப்பை தூக்கியெறிந்து ஆட்சி அதிகாரத்தை இராணுவ ஆட்சியாளர்களே தக்க வைத்துக் கொண்டனர். முதலாளித்துவ சர்வாதிகாரம் என்பது எப்போதுமே ஜனநாயகத்திற்கு நேர் விரோதமானது. சலகவிதமான அடக்குமுறைகளையும் மேற்கொண்டு ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வது.

இந்தத் தேர்தலைத் தொடர்ந்து ஜெனரல் தான் ஷா தலைமையிலான ஆட்சியாளர்கள் பர்மாவிற்குள் வெளிநாட்டு முதலீடுகளுக்கான கதவுகளை திறந்து விட்டனர். இதனால் பர்மாவின் எண்ணை வளம், அரிசி உற்பத்தி, தேக்கு மர ஏற்றுமதி, வைரச் சுரங்கங்கள் என அனைத்து துறைகளிலும் தாராளமாக அந்நியர்கள் நுழைந்து கொள்ளையடிக்க அனுமதிக்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டு முதல் இராணுவ ஆட்சியாளர்கள் அரசின் பட்ஜெட் - வரவு செலவு கணக்கை வெளிப்படையாக அறிவிப்பதில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. அரசின் மொத்த வருவாயில் 60வீதம் வரை இராணுவத்திற்கே செலவழிக்கப்படுகிறது. கல்விக்கும் - சுகாதாரத்திற்கும் வெறும் ஒரு சதவீதம் மட்டுமே ஒதுக்கப்படுகிறது. மொத்தத்தில் இராணுவத்திற்கும் அவர்களது குடும்பத்திற்கும் வாரியிறைத்து தங்களது ஆட்சி அதிகாரத்தை துப்பாக்கி முனையில் தக்க வைத்துக் கொண்டுள்ளது பர்மிய அரசு.

அரிசி ஏற்றுமதியில் முக்கிய இடத்தை வகித்த பர்மா இன்றைக்கு ஓப்பியம் எனப்படும் போதைப் பொருள் ஒன்றை ஏற்றுமதி செய்து வருவதில் இருந்தே அந்த நாடு இராணுவ ஆட்சியாளர்களால் எப்படி சீரழிக்கப்பட்டுள்ளது என்பதனை உணர முடியும். ஓப்பியம் ஏற்றுமதியில் முதலிடத்தை வகிப்பது அமெரிக்க வழியிலான ஜனநாயகம் நடைபெறும் ஆப்கானிஸ்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2008 ஆம் ஆண்டில் வால்கவ் ஹெவல் மற்றும் டெஸ்மண்ட் எம். டிட்டு என்ற இரு நோபல் பரிசு பெற்ற ஆய்வாளர்கள் பர்மா குறித்து ஆய்வு செய்து ஐ.நா.விற்கு சமர்ப்பித்த அறிக்கையில் பல அதிர்ச்சி யூட்டும் தகவல்கள் வெளியாகின. குறிப்பாக, அந்நாட்டு மக்கள் தொகையில் 75 சதம் பேர் வறுமைக் கோட்டிற்கு கீழே இருப்பதாக தெரிவித்துள்ளனர். ஐந்து வயதிற்கு உட்பட்ட 36



படிப்பகம்

சதவீத பர்மிய குழந்தைகள் குறைந்த எடையுடன் இருப்பதாகவும், மூன்றில் ஒரு பகுதி குழந்தைகள் 5 ஆம் வகுப்பு வரைகூட பள்ளி கல்வியை முடிப்பதில்லை என்றும் தெரிவித்துள்ளனர். மேலும் 2008 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி பர்மா அகதிகளில் 5 இலட்சம் பேர் தாய்லாந்திலும், 15,000 பேர் பங்களாதேசிலும், 60,000 பேர் இந்தியாவிலும், 25,000 பேர் மலேசியாவிலும் மேலும் 2,50,000 பேர் இஸ்லாமிய நாடுகளிலும் தஞ்சமடைந்திருப்பதாக கூறப்படுகிறது.

இராணுவ ஆட்சியாளர்களின் ஊழல் மற்றும் ஊதாரித்தனத்தாலும், அந்நிய நிறுவனங்கள் பர்மாவின் செல்வத்தை கொள்ளையடித்துச் செல்வதாலும் ஏற்பட்ட நெருக்கடியின் ஒரு பகுதியாகத்தான் பெட்ரோலிய பொருட்களின் விலை உயர்வும், அதையொட்டிய போராட்டமும் 2008ஆம் ஆன்டில் வெகுண்டு எழுந்தது. இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் மியான்மர் எனப்படும் பர்மாவில் ராணுவ ஆட்சி நடந்து வருவதும், சர்வதேச எதிர்ப்புகளை ராணுவ ஆட்சியாளர்கள் எளிதாகச் சமாளிப்பதும் வேதனைக்குரிய வியப்பாகும். ஜனநாயகத்துக்கு எதிரான சக்திகள் என்ற வகையில், ஈராக்கையும், ஆப்கானிஸ்தானையும் பார்த்த உலக நாடுகள் ஒரு சிறிய துளிகூட பர்மாவின் ஆட்சியைப்பற்றிப் பேசாதது அந்நாட்டின் ராணுவ ஆட்சியாளர்களின் பின்னணியை தெளிவாக்கும். ஹிட்லர், இடி அமீன், சதாம் குசேன் என ராணுவ, சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்ட முடிவு தெரிந்தும்கூட மியான்மர் ராணுவ ஆட்சியாளர்கள் தம் நாட்டில் மக்களாட்சி மலரத் தடைபோடுகிறார்கள்.

1991-இல் அமைதிக்கான நோபல் பரிசு ஆங்சான் சூகிக்கு வழங்கப்பட்டது. உலகைப் பொறுத்தவரை அவர் அமைதிக்காகப் பாடுபட்டவர் என்றால், பர்மிய ராணுவ ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை அவர் அமைதிக்கு எதிரானவர். இதுதான் இன்றைய உலகின் ஜனநாயகம்.

சமீபத்தில்(2010) பர்மாவில் நடந்து முடிந்த பொதுத் தேர்தல் முடிவை விடவும் மிகுந்த எதிர்பார்ப்புக்கு உள்ளாக்கிய விடயம் ஆங்சான் சூகியின் விடுதலைதான். இதற்கு முன்னர் பலமுறை அவரை விடுதலை செய்வதாகச் சொல்வதும், பின்னர் ஏதாவது வழக்குகளைப் போட்டு வீட்டுச் சிறையில் அடைப்பதுமே ராணுவ ஆட்சியாளர்களின் பழக்கம். இப்போதும் அதுபோல நடந்துவிடக் கூடாது என்று உலக நாடுகள் கவலைப்பட்டன. ஆனால் மாறாக



படிப்பகம்

www.padippakam.com

சூகி விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஆனால் இந்த விடுதலை நிரந்தரமானதா...? அல்லது மீண்டும் ராணுவ அரசு கை விலங்கை தூக்குமா...? உலக ஜனநாயகத்திற்குத்தான் வெளிச்சம்.

இப்பொழுதும் பர்மாவில் ஜனநாயகப் போராட்டம் வலிமையான நிலையில்தான் உள்ளது. ஜனநாயகம் என்பது மக்கள் சக்தி; ராணுவத்தின் பலம் என்பது அதன் குண்டுகளிலும் அதனுடைய வன்முறைகளிலும்தான் இருக்கும். ராணுவத்தின் வன்முறைகள் அதிகமாகும்போது அது பலமாகத் தெரியும். ஆனால் ஒரு தெளிவான எண்ணப் பார்வை கொண்ட அரசியலுக்கான ஜனநாயகம் சார் மாறுதல் என்பது, அதற்கான ஒரு சில தடைக்கற்கள் விலகும்போது ஒரு பெரிய மாற்றமாக குதூகலமாக அமையும்.

அத்தகைய மாற்றங்களை பர்மாவில் உருவாக்கக்கூடிய ஒரு போராட்டக் களத்தை வடிவமைத்துள்ள ஆங் சான் சூகிக்கு பக்க பலமாக பர்மிய மக்கள் அணி வகுத்துள்ளனர்.

ஆனால் இவர்களின் அமைதிப் போராட்டத்தை ஒடுக்க வழமைபோல் இப்போதும் ராணுவம் துப்பாக்கிகள் ஏந்தும் போது விளைவுகள் மீண்டும் விபரீதமாகலாம். அதனைத் தாங்கும் சக்தி அந்நாட்டு மக்களுக்கும் அந்தக் கொடுமைகளை தடுத்து நிறுத்தும் வலிமை அனைத்துலக நாடுகளுக்கும் இருக்க வேண்டும்.

அப்போதுதான் ஆங் சான் சூகியின் சிறைக்கதவுகள் உடைபட்டிருப்பது அவருக்கு மட்டுமல்ல, அப்பாவி பர்மிய மக்களுக்கும் உண்மையான விடுதலையைத் தேடித் தரும்.

**22.11.2010**



படிப்பகம்

www.padippakam.com

# அரச ஆதரவுப் பயங்கரவாதமும் பயங்கர வாதிகளும்

உலகின் பயங்கரவாத ஒழிப்புக்காக அவதாரம் எடுத்திருக்கும் நாடாக சர்வதேச சமூகத்தை ஏமாற்றி போலி வேடம் போடும் நாடுகளின் பட்டியலில் முதல் இடத்தில் இருப்பது அமெரிக்க தான் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆனால் இந்த அமெரிக்கா உட்பட்ட பலநாடுகளின் ஆதரவுடனேயே பல பயங்கரவாத அமைப்புக்கள் வளர்க்கப்படுகின்றன என்பதும் அவர்களாலேயே பல பயங்கரவாதங்கள் அரங்கேற்றப்படுகின்றன என்பதுவும் வேதனை கலந்த உண்மை. இப்படியான பயங்கரவாத (அமைப்புச்) செயல்பாடுகளினூடாக கடந்த இருநூறு ஆண்டுகளில் அமெரிக்கா மேற்கொண்ட ஆக்கிரமிப்புக்கள், அட்டூழியங்கள், அத்துமீறல்கள், போர் நடவடிக்கைகள், தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயக அரசுகளைக் கவிழ்த்த செயல்கள் இந்த கொடுமைகள் ஏராளம். உலகம் முழுவதும் அமெரிக்காவின் நேரடி அலல்து மறைமுக நடவடிக்கையால் சர்வதேச சமூகம் பெற்ற தீமைகள் சொல்லி மாளாது.

சர்வதேச பயங்கரவாதத்திற்காக, உலக நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்ட ஒரே ஒரு நாடு அமெரிக்காதான் என்பது வரலாறு அறிந்தவர்கள் அறிந்த வரலாறு. நிகராகுவா நாட்டின் மீது அமெரிக்கா தொடுத்த போரில் பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்ட நிலையில் திருப்பித் தாக்காத அல்லது அமெரிக்கா சொல்கிற 'பயங்கரவாத நடவடிக்கைகளில்' இறங்காத நிகராகுவா உலக நீதிமன்றத்தில் அமெரிக்காவிற்கு எதிராக வழக்குத் தொடர்ந்தது. உலக நீதிமன்றம் நிகராகுவாவிற்குச் சார்பாக வழங்கிய அன்றைய தீர்ப்பில் 'அமெரிக்கா ஏற்படுத்திய அழிவுகளுக்கு, அமெரிக்காவே இழப்பீடுகளை வழங்க வேண்டும்' என்றும்,



படிப்பகம்

www.padippakam.com

'அமெரிக்காவின் சட்ட விரோதமான இராணுவ நடவடிக்கைகள் உடனே நிறுத்தப் படவேண்டும் என்றும் ஆணையிடப்பட்டிருந்தது. உலகநீதி மன்றத்தின் தீர்ப்பக்கு அமெரிக்கா பணிந்ததா...? இணங்கிச் செயல்பட்டதா...? இல்லை! இல்லவே இல்லை!! உலக நீதிமன்றத்தின் தீர்ப்பை தூக்கி எறிந்த அமெரிக்கா மேலும் மிகப் பெரிய தாக்குதல்களை அதிகரித்தது. நிகராகுவா தனது பிரச்சனையை ஐக்கிய நாடுகள் சபைக்கு கொண்டு செல்ல ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேசச் சட்டத்தை அமெரிக்கா மதிக்க வேண்டும் என்று தீர்மானம் இட்டது. ஆனால் அங்கேதான் இருக்கிறதே 'வீட்டோ' அது பிரயோகிக்கப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானமே இரத்துச் செய்யப்பட்டது அமெரிக்காவால்.

ஓசாமா பின்லாடனை அன்றைய ஆப்கான் அரசு அமெரிக்காவிடம் ஒப்படைக்கவில்லை என்பதற்காக அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மீது குண்டு மழை பொழிந்தது. இன்றும் ஆப்கானில் அமெரிக்க ஆக்கிரமிப்பு தொடர்கிறது. ஆனால் 1990 களில் ஹெய்ட்டியில் சுமார் ஐயாயிரம் மக்களைக் கொன்று குவித்த பயங்கரவாதியான இமானுவேல் கொன்ஸ்டன்டைன் என்பவன் அமெரிக்காவில் தஞ்சம் புகுந்தான். அவனைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு ஹெயிட்டி அரசு பதினேழு ஆண்டுகளாக அமெரிக்காவை கோரி வருகின்ற போதும் இதுவரை அமெரிக்கா அந்தப் பயங்கரவாதியை ஒப்படைக்க மறுத்து வருகின்றது. இதேபோல் பயங்கரவாதச் செயல்களைப் புரிந்த ஜோன் ஹோரல் என்ற அமெரிக்கன் ஒருவனைத் தங்களிடம் ஒப்படைக்கும்படி கடந்த இருபத்தியொரு ஆண்டுகளாக கொஸ்டரீகா அரசு அமெரிக்காவை வேண்டி வருகின்றது. எதற்க்கும் அமெரிக்கா அசைந்து கொடுப்பதாக இல்லை. 1953 இல் ஈரானில் மக்கள் ஆதரவுடன் ஆட்சியமைத்த பிரதமர் மொசெடோவின் ஆட்சியை அமெரிக்கா கவிழ்த்தது. காரணம் ஈரானில் உள்ள எண்ணெய் வயல்களை பிரிட்டிஷ் நிறுவனங்களிடமிருந்து ஈரானின் நாட்டுடைமையாக்கப் பிரதமர் மொசெடோ முயன்றதுதான்! மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கவிழ்த்து விட்டு அங்கே மன்னர் ஆட்சியை அமெரிக்கா நிறுவியது. கௌதமாலா அரசு கலைப்பு, சிலியின் சல்வடோர் அலண்டே, கோங்கோவின் பட்ரீஸ் லுமும்பா, ஈராக் என்று இந்தப் பட்டியல் இன்று வரை நீண்டு கொண்டே போகின்றது. கியூபாவின் கம்யூனிச சித்தாந்தம் அமெரிக்காவுக்கு எதிரானதாக எண்ணப்பட்டு கியூபாவிற்கு எதிரான தொடர் செயற்பாடுகளையும் பிடல் கஸ்ரோவைக் கொலை



படிப்பகம்

www.padippakam.com

செய்வதற்கு அமெரிக்கா உளவு நிறுவனம் மேற்கொண்ட தொடர் கொலை முயற்சிகளையும் உலகமே அறியும்.

உலக அமைதிக்கு இன்று யாரால் ஆபத்து...? - என்று ஒரு கருத்துக் கணிப்பு 2006 ஆம் ஆண்டு மேற்குலக அமைப்பு ஒன்றினால் நடத்தப்பட்டது. ஒசாமா பின்லாடனை விட ஜோர்ஜ் புஸ்ஸால்தான் உலக அமைதிக்கு ஆபத்து என்று பெரும்பான்மையான பொது மக்கள் கருத்துத் தெரிவித்தார்கள் என்பதையும் சர்வதேச சமூகம் மறந்து விடவில்லை. அமெரிக்க பயங்கரவாதத்தால் உலகின் பலபாகங்களிலும் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், நோயாளிகள் என்ற பாகுபாடின்றி இதுவரை கோடிக்கணக்கான மக்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருப்பது. தொடர் கதையாகிக் கொண்டே இருக்கிறது;

1945 ஆம் ஆண்டு முதல் இன்று வரை சுமார் 200 இற்கும் அதிகமான தடவைகள் வெளிநாட்டு விவகாரங்களில் இராணுவ ரீதியாகத் தலையிட்டு தாக்குதல்களை நடத்தியுள்ள இந்த அமெரிக்க பயங்கரவாதம் 20 க்கும் அதிகமான வெளிநாட்டு விவகாரங்களில் கள்ளத்தனமாக தலையிட்டுள்ளது. இரண்டாம் உலகப் போரிலிருந்து இது வரை 23 நாடுகளின் மீது தனது ஏவுகணைகளை ஏவிவிட்டும் குண்டுகளை போட்டும் தாக்குதல்களை நடத்தி பல்லாயிரக் கணக்கான மக்களைப் படுகொலை செய்துள்ளது. இதில் உலகின் மாபெரும் மனித அவலங்கள் ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் அரங்கேறியது. அன்று அமெரிக்காவால் அதன் பயங்கரவாத சிந்தனையால் வளர்கப்பட்ட ஒசாமா பின் லேடனுக்காக இன்று முஸ்லிம் நாடுகளை இஸ்லாமிய பயங்கரவாதிகள் என்ற முத்திரை குத்தி அதன் பின்னணியில் தனது பயங்கரவாத நாடகத்தை அரங்கேற்றி வருகின்றது அமெரிக்கா. பல உலகப் பிரசித்தி பெற்ற நூல்கள் அமெரிக்காவின் வரலாற்று பயங்கரவாதத்தை பட்டியலிட்டுள்ளன. இரண்டாம் உலகப் போருக்குப் பின் தனக்கு சாதமாக உள்ள தலைவர்களை நியமிப்பதற்காக 20 நாட்டு தலைவர்களை அதிரடி நடவடிக்கை மற்றும் ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் அகற்றி தனக்கு சாதகமான தலைவர்களை நியமிக்க அமெரிக்காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ. பங்காற்றியது. இதில் 6க்கும் அதிகமான நாட்டுத் தலைவர்களை இது கொலையும் செய்திருப்பதாக இந்த நூல்கள் மிகவும் ஆதாரபூர்வமாக தமது வாதங்களை முன்வைக்கின்றன. சீனா 1945-46, கொரியா1950-53, மீண்டும் சீனா 1950-53, கௌதமாலா 1960, இந்தோனேஷியா 1958, கியூபா 1959-60, கௌதமாலா 1960, கொங்கோ 1964, பெரு 1965, லாவோஸ் 1964,



படிப்பகம்

www.padippakam.com

வியட்நாம் 1961-73, கம்போடியா 1969-70, மீண்டும் கௌதமாலா 1967-69, கிரேனடா 1983, லெபனான் 1984, லிபியா 1986, எல்சால்வடோர் 1980, நிகராகுவா 1980, பனாமா 1989, ஈராக் 1991-இன்று வரை, சூடான் 1998, ஆப்கானிஸ்தான் 1998 இன்றுவரை, யூகோஸ்லேவியா 1999 இவை அமெரிக்க ஆக்கிரமிப்பின் வெளிப்படைப் பட்டியல்.

அமெரிக்காதான் தீவிரவாதத்தின் ஊற்றுக்கண் அங்கிருந்துதான் தீவிரவாதம் பரவுகிறது, தீவிரவாதத்தின் பிறப்பிடங்களில் ஒன்றாக அமெரிக்கா மாறியுள்ளதாக கூறும் சிஐஏ யின் ரகசிய அறிக்கையை அம்பலப்படுத்தி அமெரிக்காவின் கோர முகத்தை அம்பலப்படுத்தி உள்ளது விக்கிலீக்ஸ் இணையதளம். அமெரிக்காவில் பயங்கர வாதத்தின் வளர்ச்சி குறித்தும், அதனால் உலக அளவில் ஏற்படும் விளைவுகள் குறித்தும் சிஐஏ தயார் செய்த ரகசிய ஆவணம் விக்கிலீக்ஸ் இணையதளத்தில் வெளியாகியுள்ளது. 3 பக்கங்களைக் கொண்ட 2010, பிப்ரவரி 2ம் தேதியிடப்பட்ட இந்த சிஐஏ அறிக்கையை விக்கிலீக்ஸ் இணையம் சமீபத்தில் வெளியிட்டது. டேவிட் ஹெட்லி உள்ளிட்ட பல அமெரிக்கர்கள் உலகின் பல பகுதிகளுக்கும் சென்று பல்வேறு வன்முறைக் காரியங்களுக்கு உதவியுள்ளனர் அல்லது நிகழ்த்தியுள்ளனர். இவர்களில் ஹெட்லி, மும்பையில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் மூளையாகச் செயல்பட்டவர். மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்கான கண்காணிப்புப் பணிகளை லஸ்கர்-இ-தொய்பா உதவியுடன் டேவிட் ஹெட்லி மேற்கொண்டதாகவும், அமெரிக்கா, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளுக்கு தாராளமாகச் சென்று வரும் வகையில் தாவூத் கிலானி என்ற அவரது பெயரை டேவிட் ஹெட்லி என அந்த அமைப்பு மாற்றியதாகவும் சிஐஏ ஆவணம் தெரிவிக்கிறது. இந்த அறிக்கையை வெளியிட்டுள்ள விக்கிலீக்ஸ், தீவிரவாதத்தின் ஏற்றுமதியாளராக அமெரிக்கா தெரிவதாக குறிப்பிட்டுள்ளது. தன்வசம் சிக்கியுள்ள மேலும் பல போர் ரகசிய அறிக்கைகளை விரைவில் வெளியிடப் போவதாகவும் விக்கிலீக்ஸ் கூறியுள்ளது.

அமெரிக்காவின் கோர முகம் மெள்ள வெளிச்சத்துக்கு வரும் நிலையில் அமெரிக்காவின் செயல்பாடுகள் போன்றே அரச ஆதரவுடனான பயங்கரவாதங்களையும் பயங்கரவாதிகளையும் வெறும் சில நாடுகள் வளர்த்துவரும் செய்திகளும் கசிந்து கொண்டு இருக்கிறது. இந்தியா, சீனா, ஐரேப்பாவின் சில நாடுகள், பிரித்தானியா, ரஷ்யா இப்படி பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இந்தப் பட்டியலில் இலங்கையும் இருக்கிறதா என்கின்ற ஐயமும்



படிப்பகம்

www.padippakam.com

எளாமலில்லை. கடந்த காலங்களில் புலிகளுக்கு எதிரான போரை இலங்கை அரசுகள் கையாண்ட விதமும் அப்பப்போ புலிகளுடன் பல அராங்கங்களினால் இரகசியமாகவும் பகிரங்கமாக ஜனநாயகம் என்கின்ற போர்வையிலும் மேற்கொள்ளப்பட்ட உறவுகள் என்பன இதனை வெளிக்காட்டும். ரணில் விக்கரமசிங்கா 2001ம் ஆண்டு புலிகளுடன் மேற்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை அதன் மூலம் மேலும் வளர்ந்த புலிப் பயங்கரவாதம், பிரேமதாச ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கும் புலிகளுக்கும் இருந்த இரகசிய உறவு வழங்கப்பட்ட ஆயுதங்களும் - வசதிகளும், சந்திரிகா அம்மையாரின் ஆட்சியின் இறுதியில் புலிகளுடன் மேற் கொள்ளப்பட்ட இரகசிய பேச்சுகள் என்பன இலங்கை அரசின் பயங்கரவாத ஊக்குவிப்புக்கு உதாரணங்கள்.

ஏன் இன்றும் கூட புலிகளின் முக்கியஸ்தரும் அவர்களுக்கு ஆயுத வளங்களை ஏற்படுத்தியவருமான கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனுடன் இன்றைய அரசாங்கம் வைத்துள்ள உறவும் அவருக்கு வழங்கப்படும் முக்கியத்துவமும் மீண்டும் ஒரு பயங்கரவாத நிலைமை இலங்கையில் ஏற்பட வழிவகுக்காதா...? என்கின்ற கேள்வி எழுப்பப்படுவதும் நியாமானதே.. துப்பாக்கி வைத்திருப்பவனை பயங்கரவாதி என்று சொல்லிக் கொண்டு அவனைத் தன்நலன் சார் தேவைகளுக்கு பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன அணுகுண்டும் பயங்கர ஆயுதங்களும் வைத்திருக்கும் நாடுகள்.

இதுதான் இன்றைய உலகின் துயரம்சார் யதார்த்தம்.

**01.11.2010**



படிப்பகம்

www.padippakam.com

# முற்றி வரும் அமெரிக்க ஈரான் முறுகல்... தோன்றுமா மோதல்...?

உலகின் முன்னணி வல்லரசு என்ற பெயரில் தொடர்ந்து மிகப் பெரிய தீவிரவாதியாக இருந்து வரும் நாடு - அமெரிக்கா என்பது அனைவரும் அறிந்த உண்மை. இஸ்லாமிய நாடுகளை பின்னுக்கு தள்ளி அவைகளை தன்னுடைய அடிமைகளாக்க வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் நீண்ட கால கனவுத் திட்டம். இதற்காக அமெரிக்கா எப்போதும் தன் கைவசம் வைத்திருக்கும் தீவிரவாத ஒழிப்பு என்கின்ற வார்த்தையின் பெயரில் உலகத்தின் பல்வேறு நாடுகளில் அதன் ஆக்கிரமிப்பினைச் செய்துள்ளது - தொடர்ந்து செய்தும் வருகிறது. ஒரு நாட்டின் விடுதலைக்காக அந்நாட்டின்மீது போர் தொடுப்போம் - ஒரு நாட்டில் ஜனநாயகம் காக்க புதிய தாராள முதலாளித்துவம் இலவசமாகத் தருவோம் - அந்நாட்டைச் சீர்திருத்துவதற்காக அடிமைப்படுத்துவோம் - ஒரு நாட்டில் அமைதியை ஏற்படுத்த அந்நாட்டை முன்னேற்ற அங்கு இரத்த ஆறு ஓடச் செய்வோம்... இதுதான் அமெரிக்காவின் எழுதப்படாத சித்தாந்தம்.

அமெரிக்காமீது இஸ்லாமிய இயக்கங்கள் நடத்திய தாக்குதல் சுதந்திரத்திற்கு எதிரான போர் எனவும், அமெரிக்கா இஸ்லாமிய நாடுகளின்மீது தொடுத்துள்ள போர் அந்நாடுகளில் சுதந்திரத்தை விதைப்பதற்கான போர் என்றும் புதிய சித்தாந்தம் பேசுகிறது அமெரிக்க வல்லாண்மை. இதற்கு ஆமாம் சாமி போடுகிறது ஐக்கிய நாடுகள் சபையும் பிரிட்டன் ஐரோப்பா போன்ற நாடுகளும். இந்தப் புதிய தர்மத்தைக் கூறியே ஈராக்கையும் ஆப்கானிஸ்தானையும் ஒன்றுமில்லாமல் ஆக்கிய அமெரிக்கா தற்போது அதன் இரத்தவெறி அடங்காமல் ஈரானையும் காவு கேட்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

உலகின் வளர்ந்த நாடுகள் என்பவையெல்லாம் போட்டி போட்டுக் கொண்டு அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து குவித்து வைத்துள்ளன. தற்போது உலகில் இருக்கும் அணு ஆயுதங்களில் ஏறத்தாழ 23 ஆயிரம் அணு ஆயுதங்களில் 22 ஆயிரம் அணு ஆயுதங்கள் கிட்டத்தட்ட 95 சதவீதம் அமெரிக்கா மற்றும் ரஷ்யாவில் தான் இருக்கின்றன. ரஷ்யாவிடம் 12 ஆயிரம் அணு ஆயுதங்களும் அமெரிக்காவிடம் 9 ஆயிரத்து 400 அணு ஆயுதங்களும், பிரான்ஸிடம் 300 அணு ஆயுதங்களும், சீனாவிடம் 240 அணு ஆயுதங்களும், பிரிட்டனிடம் 185 அணு ஆயுதங்களும் உள்ளன. உலகில் இந்த ஐந்து நாடுகளுமே அணு ஆயுத வல்லமை கொண்ட நாடுகளாக கருதப்பட்டாலும் இந்த ஐந்து நாடுகளைத் தவிர வேறு பல நாடுகளும் இன்று அணு ஆற்றல் பெற்ற நாடுகளாக திகழ்கின்றன.

இன்று உலகின் பொருளாதார செழிப்பு மிக்க நாடுகளாகக் கருதப்படும் ஜெர்மனி, ஜப்பான், அவுஸ்திரேலியா, சவூதி அரேபியா, குவைத், மலேசியா, தென்கொரியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் திட்டமிட்டாலும் கூட, ஏன் ஆசைப்பட்டால் கூட மிக எளிதில் அணு ஆற்றல் நாடாக விரைவிலேயே மாற முடியும் என்ற சாத்தியங்களையும் மறுக்க முடியாது. அணு ஆயுதங்கள் வைத்திருக்கும் நாடுகளைத் தவிர வேறு எந்த நாடுகளும் அணு ஆயுதங்கள் தயாரிக்காமல் பார்த்துக் கொள்வது (?) என்று அமெரிக்காவில் கூடிய அணு ஆயுத ஒழிப்பு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், சீனா என்ற இந்த ஐந்து நாடுகளைத் தவிர மற்றவை என்.பி.டி. (அணு ஆயுத பரவல் தடை சட்டம்) ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என இந்த ஐந்து நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன. ஆனால் இது, பல இதர நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எது எப்படியோ அணு ஆயுத அபாயம் என்ற பூச்சாண்டியைக் காட்டி ஈரானுக்கு எதிராகப் போர் தொடுப்பதற்காகவே இந்த மாநாடு நடத்தப்பட்டதாக உலக அரசியல் பார்வையாளர்கள் அப்போது கருத்து தெரிவித்திருந்தனர்.

அமெரிக்காவுக்குப் பெரும் மிரட்டலாக இருந்து வரும் ஈரான் நடத்திய அணு ஆயுதச் சோதனைக்காக முதலில் ஈரானுக்கு எதிராக பொருளாதாரத் தடைவிதிக்க வேண்டும் என்கின்ற அமெரிக்காவின் திட்டத்திற்கு உலக நாடுகள் பலவும் சரியான ஒத்துழைப்பு வழங்கவில்லை. ஈரானின் தீவிர ஆதரவு நாடான சீனா, ஈரான் மீதான பொருளாதாரத் தடைக்கு தனது ஆதரவு கிடையாது என திட்டவட்டமாக தெரிவித்துவிட்டது. பிரேசிலும், ஈரான் ஆதரவில்



படிப்பகம்

தீவிரமாக உள்ளது. ஈரான் ஆக்க வேலைகளுக்கு மட்டுமே அணு ஆற்றலை பயன்படுத்துகிறது அதை எங்களால் உறுதியாக சொல்ல முடியும் என ரஷ்யாவும், ஈரானுக்கு எதிரான நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை ஈரானின் அணு ஆற்றல், வளைகுடாப் பிராந்தியத்திற்கு ஓர் அச்சுறுத்தல் என தொடர்ந்து பரப்புரை செய்து வரும் இஸ்ரேலின் கருத்தை தனக்கு பின்புலமாக்கி ஈரான் தேசத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் அமெரிக்கா இறங்கி உள்ளது. இவற்றிற்கு மத்தியிலும் ஈரான் அடுத்தடுத்து ஏவுகணை சோதனைகளை வெற்றிகரமாக நடத்தியது கண்டு அதிர்ந்து போயிருக்கின்றன அமெரிக்காவும், இஸ்ரேலும்.

நீண்ட காலமாகவே ஈரானை குறிவைத்துவரும் அமெரிக்கா தனது கைக்கூலியான மன்னர் ஜாவை இஸ்லாமிய புரட்சி மூலம் பதவியிலிருந்து தூக்கியெறிந்ததிலிருந்து மீண்டும் ஈரானை தம் கைகளுக்குள் கொண்டுவந்து எண்ணெய் வளங்களை அபகரிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகத்தான் அணுஉலைகளை கண்காணிக்க அனுமதிக்க வேண்டும் என கோரிவருகிறது. அமெரிக்காவின் பதட்டத்திற்கு வேறொரு காரணமும் உண்டு. ஒரே நேரத்தில் ஒன்பது ஏவுகணைகளை பரிசோதனை செய்த இடம், ஹோமர்ஸ் நீரிணை. ஈராக்கிற்கு விடுதலை(!) கொடுத்தபோது மக்கள், பண்பாட்டு அருங்காட்சியகங்களையும் ஏனைய இடங்களையும் சூறையாடியதை வேடிக்கை பார்த்த அமெரிக்க ராணுவம் எண்ணெய் கிடங்குகளை மக்கள் நெருங்க விடாமல் பார்த்துக்கொண்டது. அதுபோல ஈரானுடன் போர் என்றாலும், சமாதான உடன்படிக்கை என்றாலும் (இரண்டின் பொருளும் ஒன்றுதான்) ஹோமர்ஸ் நீரிணை பாதுகாக்கப்பட வேண்டும் என்பது அமெரிக்காவின் திட்டம். காரணம், மத்திய தரைக்கடல் எண்ணை போக்குவரத்தில் நாற்பது விழுக்காடு குழாய் வழியாக இந்த நீரிணையில் தான் நடக்கிறது. இந்த இடத்தில் சோதனைகளை நடத்தியதன் மூலம் ஈரானை குறைத்து மதிப்பிட முடியாது என்பதை அமெரிக்காவுக்கு குறிப்பாக உணர்த்தியிருக்கிறது. அதனால் தான் தாக்குதலுக்கு ஆயத்த மாயிருக்குமாறு இஸ்ரேலுக்கு தெரியப்படுத்தியுள்ளது. இதை முன்கணித்துத்தான் ஈரான் அதிபர் அகமடிநிஜாட், அமெரிக்க ராணுவ தளங்களும், இஸ்ரேலும் தான் எங்கள் இலக்கு என்றும் இஸ்ரேல் துடைத்தெறியப்படும் என்றும் அண்மையில் அறிக்கைவிட்டார்.

ஈரானின் அணு உலைகளை கண்காணிக்க பன்னாட்டு அணுவிசை முகமையை அனுமதிக்க வேண்டும் என்று அமெரிக்கா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் கோரி வருகின்றன. இதுவரை இதனை ஈரான்

www.padippakam.com

ஏற்கவில்லை என்பதும் இது குறித்து கடந்த ஜூன் மாதம் நடந்த பேச்சுவார்த்தையில் அமெரிக்கா கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. யுரேனியம் செறிவூட்டலை கைவிடாத வரையில் ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை என வீராப்பாக அறிவித்தது அமெரிக்கா. இதுவரை அமெரிக்கா நடத்திய எந்தவொரு ஆக்கிரமிப்பு போர்களுக்கும் ஏதாவது ஒரு காரணம் சொல்லித்தான் நடத்தியுள்ளது. ஆனால் போர்முடிந்து எதையும் நிரூபித்ததுமில்லை அதை எந்த நாடும் எதிர்த்து கேட்டது மில்லை. அதேபோல் தான் ஈரான் விடயத்திலும் யுரேனியம் செறிவூட்டல் - அணு ஆயுதம் என்று கூறுகிறது. காரணம் எண்ணெய் வளம் என்பதைத்தவிர வேறெதுவாக இருக்க முடியும்.

உலகில் தீவிரவாதம் வளர்ந்ததற்கு அமெரிக்கா மிகப்பெரிய காரணம். அரபு நாடுகளின் எண்ணெய் வளத்தை சுரண்டுவதற்கு இஸ்ரேலை வளர்த்தது, அணுஆயுதப் பரவலுக்கு மையமாக அமைந்துள்ள பாகிஸ்தானை தொடர்ந்து ஆதரித்து வருவது, ஆப்கனில் அன்றைய சோவியத் யூனியனுக்கு எதிராக தாலிபான்களை கொம்பு சீவி விட்டது போன்ற பல்வேறு செயல்கள் மூலம் அமெரிக்கா, தீவிரவாதத்திற்கு எரியூட்டியது. இன்றைக்கு தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்துவதன் தேவை குறித்து காட்டுக் கூச்சல் போடும் அதே அமெரிக்கா உலகின் எல்லா நாடுகளும் இதில் தன்னோடு இணைய வேண்டும் என்றும் பிதற்றுகிறது.

அணுஆயுதங்கள் மேலும் பரவாமல் தடுப்பதும், அவை தீவிரவாதிகளின் கைகளில் கிடைப்பதைத் தடுப்பதும் இன்று மிக முக்கிய கடமையாக உள்ளது. இதில் ஏற்படும் சிறுசுணக்கம் கூட மிகப்பெரிய ஆபத்தில் முடியும் என்பதும் மறுக்கமுடியாத உண்மை. இந்த பின்னணியில்தான் அமெரிக்காவின் முன்முயற்சியால் 11.04.2010 அன்று வாஷிங்டன் நகரில் கூட்டப்பட்ட 47 நாடுகள் கலந்து கொண்ட அணுஆயுதப் பாதுகாப்பு மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. 1945-ல் ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாகி நகரங்களின் மீது அமெரிக்கா வீசிய அணுகுண்டுகளின் உச்சகட்ட அழிவிற்குப் பின் கூட்டப்பட்ட அணுஆயுத தடுப்பு மாநாட்டிற்குப் பின் இம்மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டின் மூலம் தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்துவதை விட தனது நலன்களுக்கு எதிராக செயல்படும் ஈரான் மீது உள்ள பொருளாதாரத் தடைகளை மேலும் இறுக்கமாக்க முயல்வதே அமெரிக்காவின் பிரதான நோக்கமாக உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

ஈரானில் புரட்சி ஏற்பட்டு மன்னர் ஜா பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்ட நாள் முதலே ஈரானை கட்டுக்குள் கொண்டுவர அமெரிக்கா என்னென்ன முயற்சிகளையோ மேற்கொண்டு வருகிறது. 1979 முதல் அமெரிக்காவின் தூண்டுதலால் ஈரானுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பொருளாதாரத் தடைகளால் ஈரான் பின்னடைவு எதையுமே சந்தித்துவிடவில்லை என்பதுதான் வரலாறு. இப்போது அதே தடைகளை மேலும் தீவிரமாக விதிக்க அமெரிக்கா முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஈரானின் அணு திட்டங்கள் அதனுடைய சுய தேவையைப் பூர்த்தி செய்யவும் தற்காப்புக்காகவும் தான் என்று பலமுறை கூறியாகிவிட்டது. ஈரானின் இறையாண் மைக்கு உள்பட்டு சர்வதேச அணுவிசை ஏஜென்சியின் ஆய்வுக்குழு நிலையங்களைப் பார்க்க அனுமதி தந்தாகி விட்டது. இதன் பிறகும் சந்தேகப்பட்டுக் கொண்டும், சட்டாம்பிள்ளைத் தனமாகவும் அமெரிக்கா நடந்து கொள்கிறது.

'அணு ஆயுத தயாரிப்பில் ஈரான் ஈடுபடுவதால் அந்த நாட்டின் மீது அடுத்து என்ன நடவடிக்கை என்பதைத் தீர்மானிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். பல்வேறு நடவடிக்கைகள் எங்கள் முன்னால் தேர்வுக்கு இருக்கின்றன' என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா சமீபத்தில் பேசியிருந்தார். அதற்குப் பதிலடி தரும் வகையில் ஈரான் அதிபர் நிஜாத், தலைநகர் டெக்ரானில் வெகு காட்டமாகப் பேசினார். 'அவர்களுக்கு (அமெரிக்கர்களுக்கு) என்ன துணிச்சல் இருந்தால் நம்மை (ஈரானை) இப்படி மிரட்டியிருப் பார்கள். உங்களுக்கு கடைசி காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. வெட்டியானுக்குச் சொல்லி வையுங்கள். உலகம் முழுவதையும் வம்புச் சண்டைக்கு இழுத்து அப்பாவிகளை பலிவாங்கும் நீங்களே பலியாவதற்கு நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. மேற்கு ஆசியப் பகுதியை விட்டு வெளியேறுங்கள். இல்லாவிட்டால் இங்குள்ள எல்லா நாடுகளும் சேர்ந்து உதைத்து வெளியேற்ற வேண்டியதிருக்கும். ஈரான் அதிபரின் இந்த ஆவேசம் கண்டு வெள்ளை மாளிகையின் இரத்தம் கொதித்திருக்கும்.

மேற்குலகின் சிம்ம சொப்பனமாக விளங்கி வரும் ஈரான் அதிபர், அமெரிக்காவின் மிரட்டல் கண்டு ஓடி ஒளியப் போவதில்லை. மாறாக எதிர்த்து நிற்கும் ஆற்றல் கொண்ட ஒரு தலைவராகவே விளங்கி வருகிறார். 54 வயதாகும் அவர் மூன்றாம் உலக நாடுகளின் உண்மையான பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கும் உலக தலைவர்களில் ஒருவராகச் செயல்பட்டு வருகிறார். அமெரிக்காவை மிகக் கடுமையாக விமர்சித்த மேற்காசிய தலைவர்களில் ஈரான்



படிப்பகம்

www.padippakam.com

அதிபர் நிஜாதிக்குத்தான் முதலிடமாக இருக்கும். 1979லிருந்து தூதரக உறவு முறிக்கப்பட்டிருந்த அமெரிக்காவுடன் உறவை புதுப்பிக்க அவர் விரும்பினார். அமெரிக்கா தனது கடந்த கால தவறுகளிலிருந்து பாடம் கற்று தன்னை திருத்திக் கொள்ள வேண்டும் என்றார். அமெரிக்க மண்ணில் - ஐ.நா. பெருமன்ற கூட்டத்திலேயே அமெரிக்காவை அவர் கடுமையாக விமர்சித்தார். நியூயார்க் இரட்டைக் கோபுரங்கள் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலுக்கு அமெரிக்க அரசு தான் காரணம் என்று கூறி ஐக்கிய நாடுகள் சபையில் பெரும் பரபரப்பை அவர் ஏற்படுத்தியபோது அவரது பேச்சைக் கண்டித்து அமெரிக்க குழுவினர் ஐ.நா. விலிருந்து வெளிநடப்பு செய்தனர். ஐ.நா. பொது சபை கூட்டத்தில் பேசிய ஈரான் அதிபரின் துணிச்சல்மிகு பேச்சையும், அமெரிக்கா மீது அவர் கூறிய குற்றச்சாட்டுக்களையும் கண்டு ஒட்டு மொத்த ஐ.நா. பிரதிநிதிகளே ஆடிப்போயினர்.

இந்த நியூயார்க் தாக்குதலை முன்வைத்துத் தான், தீவிரவாதத்தை ஒழிக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு ஆப்கானிஸ்தான் மீதும் இராக் மீதும் அமெரிக்கா போர் தொடுத்தது. தான் மட்டும் அணு ஆயுதங்களை குவித்து வைத்துக் கொண்டு, நாங்கள் (ஈரான்) அணு ஆயுதம் தயாரிக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு எங்களையும் அமெரிக்கா வம்புக்கு இழுத்து வருகிறது என்றார். அகமதிநிஜாத் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும்போதே அமெரிக்க ஐ.நா. குழுவினர் வெளிநடப்பு செய்தனர். அவர்களைத் தொடர்ந்து பல ஐரோப்பிய நாடுகளின் தூதர்களும் குழுவினரும் வெளிநடப்பு செய்தனர்.

அணு ஆராய்ச்சி விசயத்தில் நாங்கள் பேச்சுவார்த்தைக்குத் தயார். ஆனால், அது நேர்மையாகவும் மரியாதையுடனும் நடக்க வேண்டும். அடுத்த நாட்டுக்கு மரியாதை தராமல் செயல்பட்டால் பதிலுக்கு மரியாதை கிடைக்காது என்பதை அனைவரும் உணர வேண்டும். அதே போல ஈரான் மீது தொடர்ந்து பொருளாதாரத் தடைகளை விதித்து நமது வழிக்குக் கொண்டு வந்து விடலாம் என்று ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் நினைத்தால் அதன் மீது கொஞ்ச நஞ்சம் உள்ள நம்பிக்கையும் போய்விடும். சர்வதேச அணு ஆராய்ச்சி மையத்தின் சட்டதிட்டத்துக்கு உட்பட்டே ஈரானிய ஆராய்ச்சிகள் நடக்கின்றன. மற்றபடி யாருடைய நெருக்குதலுக்கும் ஈரான் பணிந்ததில்லை, இனியும் பணியாது என்றார் ஈரான் அதிபர்.



படிப்பகம்

அமெரிக்கா ஈரான் மீது போர் தொடுக்கும் நிலை வந்தால் அமெரிக்க வீரர்களை புதைப்பதற்காக பெரும் அளவில் சவக்குழிகளை தயார் செய்வதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது. ஈரான் மீது போர் தொடுப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக அமெரிக்கா அறிவித்ததை தொடர்ந்து தங்களுடைய உறுதியான நிலைபாட்டை அமெரிக்காவுக்கு காட்டுவதாக ஈரானின் இந்த அறிவிப்பு இருந்தது.

மேலும் அமெரிக்காவுக்கு பதிலடி கொடுக்க அரபு நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தலாம் என்பதும் அமரிக்காவின் ஐந்தாவது கப்பற்படை தலைமையகம் ஈரானுக்கு மிக அருகில் பஹ்ரைனில் அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வளவு துணிச்சலுடன் அனைத்துக்கும் தயார் நிலையில் இருக்கும் ஈரானுடன். அமெரிக்கா மோத நினைத்தால் அது உலக அளவில் பெரும் ஆபத்தினைத்தான் உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

**15.10.2010**

www.padippakam.com

# இந்தியாவின் சாதிவாரி கணக்கெடுப்பும்... வகுப்புவாரி இடஒதுக்கீடும்...

இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு (சென்சஸ்) நீண்ட காலத்திற்குப்பின் அதாவது 2011ல் நடைபெறும் என்கின்ற அரச அறிவிப்பு வெளியாகியள்ளது. நடைமுறைத் தேவைகளை ஒட்டி நீண்ட காலமாக நடைபெறாத கணக்கெடுப்பைப் பற்றிய விமர்சனங்கள் இந்தியாவின் மத்திய அரசு ஆழ்ந்த உறக்கத்திலேயே இந்த விடயத்தில் புதைந்து கிடந்து விட்டது என்கின்ற வகையில் வெளியாகியது. இப்பொழுதுதான் விழிப்பு வந்து, தக்க முறையில் செயலாற்றும் பொறுப்புணர்வை காட்டப்போவதன் அடையாள மாகத்தான் அந்த மத்திய அரசின் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பான அறிவிப்பு ஒன்று 1.10.2010 அன்று வெளியாகியுள்ளது. மக்கள் தொகை கணக்கெடுப்பு அதுவும் சாதிவாரியான கணக்கெடுப்பு அடுத்த 2011ஆம் ஆண்டு யூன் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும் என அரச அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. . இப்படி ஒரு கடமைப் பொறுப்பை - எத்தனையோ ஆண்டுகள் கழித்தாவது, இந்தியப் பேரரசு மேற்கொள்ள வேண்டிய கட்டாய நிலையை உருவாக்கிய பெருமை - இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தையே சேரும். ஏறத்தாழ மூன்று மாதங்களுக்கு முன்னர் அது அளித்த ஒரு தீர்ப்புதான் இந்த விழிப்பு வேலையைச் செய்துள்ளது.

முன்னர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த செல்வி. ஜெயலலிதா வகுப்புவாரி இடஒதுக்கீடு திட்டத்தைப் பொறுத்து, ஓர் அருஞ்செயலை புரிந்தார். அன்றைய அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, ஆகியோரின் கருத்துரைகளை ஏற்று, 1993ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்ட மன்றத்தில் அவரால் நிறைவேறச் செய்யப்பட்ட தீர்மானம்



படிப்பகம்

ஆதி திராவிடருக்கும் - பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் நூற்றுக்கு 69 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்க வகை செய்தது. அதற்கு இந்தியாவின் நாடாளுமன்றமும் ஒப்புதல் அளித்து உரிய சட்டத்திருத்த விதியை அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாம் பிரிவில் இடம்பெறச் செய்தது.

ஆயினும் அக்காலத்தில் உச்ச நீதிமன்றத்தில் பெரும்பான்மை யினராக இருந்த ஆரிய இனத்தையும் முன்னேறிய உயர்சாதி யினரையும் சேர்ந்த நீதிபதிகள் - பழந்தமிழரான ஆதிதிராவிடருக்கும் பிற்படுத்தப்பட்டவருக்கும் 69 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்கும் சட்ட விதியை ஏற்க மறுத்தனர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற நாடாளுமன்றத்தின் ஒப்புதல் எதையும் பெறாமலே - உச்ச நீதிமன்ற மேல்சாதி நீதிபதிகள் சிலர் மட்டுமே வகுத்த 50 விழுக்காடு இடஒதுக்கீடு வரையறையை காரணம் காட்டி, நாடாளுமன்றமே நிறைவேற்றிய 69 விழுக்காடு இட ஒதுக்கீடு சட்டவிதி குப்பைக் கூடையில் தள்ளப்பட்டது.

கால ஓட்டத்தில் 17 ஆண்டுகள் கடந்து தற்கால உச்ச நீதிமன்றம் - பழைய தனது பிடிவாதமான நிலைப்பாட்டுக்கு விடைகொடுத்து விட்டு ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களைப் பொறுத்து நேர்மையான தீர்ப்பு ஒன்றினை 13.7.2010 அன்று வழங்கியது. ஒடுக்கப்பட்ட - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு 69 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்கும் சட்ட விதி செல்லத் தக்கதே. இந்த இடஒதுக்கீட்டைத் தக்க வைத்துக்கொள்ள, சாதி வாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பை அரசு நடத்த வேண்டும். இது அந்தத் தீர்ப்பில் காணப்பெற்ற அழுத்தமான அறிவுறுத்தல்.

உச்சநீதிமன்றத்தின் இந்த சாதிவாரியான கணக்கெடுப்பு ஆணைக்கு எதிர்பார்த்தது போலவே ஆரிய இனத்தவர் ஆகிய உச்சிச் சாதியினர் கடுமையான எதிர்ப்பினைக் வெளிப்படுத்துகின்றனர். அவர்களால் நடத்தப்படும் ஆங்கில நாளேடுகளிலும் பிற பார்ப்பனப் பத்திரிகைகளிலும் கண்டனக் கட்டுரைகளும், தலையங்கங்களும் வெளிவருகின்றன. சாதி முறையால்தான் சமுதாயமே பிளவுபட்டு விட்டதாகக் கூறப்படும்பொழுது, அந்தச் சாதிகள் ஒழியாதபடி மக்கள் தொகை கணக்கெடுப்பில் அவற்றைப் புகுத்துவது சாதிகளைத் தொடர்ந்து வாழ வைப்பதாகத்தானே ஆகும்...? - என்பது அந்தப் பார்ப்பன வாதம் ஆகும்.



படிப்பகம்

சாதிப் பிரிவுகளை அடிப்படையாக வைத்து வழங்கப்படும் இடஒதுக்கீட்டின் மூலம், ஆதிதிராவிடரும் பிற்படுத்தப்பட்டவரும் முன்னேற்றம் அடைவதை முறியடிக்க வேண்டும் என்பதுதான் அவர்களது இந்த எதிர்ப்பின் உள்நோக்கம்; இந்து மத ஆரியர் (பிராமணர்) ஆகிய தங்களுக்குச் சமமாக அல்லது மேலாக, உயர்கல்வியிலும் வேலை வாய்ப்புகளிலும் திராவிட இனத்தைச் சேர்ந்த தமிழரும் மற்ற மொழியினரும் ஓங்கி வளர்வதை ஒழித்துக் கட்டவேண்டும் என்கிற சிந்தனையிலேயே சாதி வாரியான கணக்கெடுப்பை அவர்கள் சாடுகிறார்கள். பாப்பனியச்சின்னமான பூணூலைத் தங்கள் உடம்பை விட்டு எடுத்து எறிந்துவிட்டு சாதி ஒழிப்பைப் பற்றி இந்த வாதங்களைத் தொடுத்திருந்தால் கூட ஓரளவு அவர்கள் வாதங்களைப்பற்றி சிந்திக்கலாம். இன்றும் இந்து மத வெறியராகப் பூணூலுடனும் சமஸ்கிருத மந்திரங்களுடனும் உலாவரும் இவர்கள் சாதிய ஒழிப்புக்கு வழி தேடுகிறார்கள் என்பதுதான் வேடிக்கை.

இதே வேளையில் - ஆரியர் புகுத்திய வருணாச்சிரம தருமம் என்னும் தீண்டாமைத் தீயைக் கொண்ட சாதி முறையை ஒழிக்கத்தான் வேண்டும் என்று உரக்கக் குரல் கொடுத்த தந்தை பெரியார், பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர், நீதிக்கட்சித் தலைவர் டாக்டர் சி. நடேசனார் முதலான பெருமக்களே - அதே சாதிகளை அளவுகோல்களாக ,வைத்தே வகுப்புவாரி இடஒதுக்கீட்டு உரிமையையும் தேர்தலில் தனித்தொகுதி பிரிவையும் வலியுறுத்தினார்கள். முள்ளை முள்ளாலேயே எடுக்க முடியும்! என்பது போல எந்தச் சாதி முறையால் ஆரியர் அல்லாத திராவிட இனம் தாழ்த்தப்பட்டதோ - பிற்படுத்தப்பட்டதோ - அதே சாதி முறையைப் பயன்படுத்தியே ஒடுக்கப்பட்ட இன மக்களை உயர்த்த வேண்டும் என்கிற ஒரு தொலைநோக்கு வழிமுறையே இந்த இட ஒதுக்கீடு திட்டம். இத்தகைய வகுப்புவாரி உரிமைத் திட்டத்துக்கு நீண்ட நெடிய வரலாறே உண்டு.

ஏறத்தாழ மூன்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்தான் அயல் இனத்தவரான ஆரியர் இமயமலைக்குத் தெற்கே சிந்து நதிக்கரையிலும் கங்கை நதிக்கரையிலும் வந்து குடியேறினர். ஆனால் 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே குமரிக் கண்டத்தில் தோன்றிய மனித இனமாகச் சொல்லப்படும் தமிழ் மொழியினரைத் தங்களின் வேத மதச் சாதி முறையாலும் சமஸ்கிருத மந்திரங்களாலும் ஆசைகளையும் அச்சத்தையும் மூட்டி ஆரியர்கள் வீழ்த்தினார்கள். குறிப்பாக... சங்கங்களைத் தோற்றுவித்துத் தமிழ் இலக்கியங்களைப் படைத்த புலவர்களும் சித்தர்களும் வாழ்ந்த தமிழ்நாட்டில் - தமிழரின் திருமணம் உள்ளிட்ட வாழ்வியல் நிகழ்வுகள் அனைத்திலுமே

தமிழையே ஒழித்துக்கட்டி தங்கள் சமஸ்கிருதத்தை ஆளச் செய்த அளவில் ஆரியர் நிற்கவில்லை. அரசர்களும் உழைப்பாளிகளும் எழுப்பிய கோவில்களை விட்டே தமிழைத் துரத்தி அடித்துவிட்டு இன்றுவரை சமஸ்கிருத மந்திரங்களையே ஒலிக்கச் செய்து விட்டனர். தேவடியாள் பிள்ளைகள் என்னும் பொருள் கொண்ட சூத்திரர், தீண்டப்படாதவர் என்னும் ஆதிதிராவிடர் - பஞ்சமர் என்றெல்லாம் இழிவான சாதிப் பிரிவுகளை உருவாக்கி திராவிட இனத்தவரையே பல நூறு வகுப்பினராக பிளவுபடுத்தி தங்களுக்கு அடிமைகளாக ஆக்கிவிட்ட ஆரியர், கல்வி அறிவு பெறமுடியாதபடி திராவிடரின் மூளையையும் முடக்கிப் போட்டனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னைய இந்தக் கொடிய ஆரிய வரலாறு 250 ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட தொடக்க காலத்திலும் தொடர்ந்தது. வெள்ளையர் அறிமுகம் செய்த ஆங்கிலக் கல்வி முறையிலும் வேலை வாய்ப்புகளிலும் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு தாங்களே முதன்மை நிலை முன்னேற்றம் பெறும் தந்திரங்களைக் கையாண்டனர் ஆரியர்.

அவர்களுடைய இந்துமத மூடபக்தியையும் தீண்டாமைச் சாதிவெறியையும் எதிர்த்து முதன்முதலில் கடந்த 19ஆம் நூற்றாண்டில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த பண்டிதமணி அயோத்திதாசர் குரல் எழுப்பினார். டாக்டர் சி. நடேசனார் 1912இல் சென்னை திராவிடர் சங்கம் என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார். பின்னர் அவரே தென்னிந்திய விடுதலைக் கூட்டமைப்பு என்னும் நீதிக்கட்சியை நிறுவுவதற்கு தூண்டுகோலாகத் தொண்டாற்றினார். அந்த நீதிக்கட்சி 1920ஆம் ஆண்டில் சென்னை மாகாண ஆட்சியைக் கைப்பற்றிய நிலையில் தான் வகுப்புவாரி இடஒதுக்கீட்டு உரிமைக்குரிய முதல் சட்டம் அந்த ஆட்சியால் பிறப்பிக்கப் பெற்றது.

அந்த காலத்திலோ தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் தலைவராக இந்தியாவின் விடுதலைக்குப் போராடி வந்தார். ஆயினும்கூட திராவிட இனத்தவரின் உரிமைகளுக்காக நீதிக்கட்சி ஆட்சி வகுப்புவாரி இடஒதுக்கீடு திட்டத்திற்குக் கொண்டுவந்த சட்டத்தால் கவரப்பட்டு அந்தக் கொள்கையைக் காங்கிரசும் ஆதரித்தால்தான் மக்களிடையே அந்தக் கட்சிக்குச் செல்வாக்கு பெருகும் எனத் தெரிவித்தார்; அதற்காக காங்கிரஸ் மாநாடுகளில் தீர்மானம் நிறைவேற்றவும் பெருமுயற்சி எடுத்தார். ஆனால் காங்கிரஸ் கட்சியில் ஆதிக்கம் செலுத்திய சாதியப் பார்ப்பனத் தலைவர்களோ உண்மையான திராவிட இனமானம் படைத்த பெரியார் அவர்களின் தீர்மானம் தோல்வியையே தழுவுமாறு சூழ்ச்சி செய்தனர். அதனால் வெறுப்பு அடைந்துதான்

www.padippakam.com

இந்தச் சமூக நீதிப் புரட்சியாளர் 1925இல் காங்கிரசை விட்டு வெளியேறி சுயமரியாதை இயக்கம் என்னும் திராவிட இன எழுச்சிப் பாசறையைத் தோற்றுவித்தார். அடுத்து பேரறிஞர் அண்ணா தீட்டிய தீர்மானத்தின்படி சேலம் நகரில் 1944ஆம் ஆண்டு உருவெடுத்த திராவிடர் கழகம் என்னும் புதிய சீர்திருத்த இயக்கத்தின் நிலையான தலைவர் ஆனார் தந்தை பெரியார். 1947இல் இந்தியா விடுதலை பெற்ற பிறகும் வகுப்புவாரி இடஒதுக்கீடு திட்டத்திற்காகவே தொடர்ந்து அவர் குரல் கொடுத்து வந்தார். பெரியார் நடத்திய அறப்போராட்டங்களின் விளைவாகவே இடஒதுக்கீட்டுக்கு உரிய விதிகள் இந்தியாவின் அரசமைப்புச் சட்டத்திலேயே முதல் திருத்த விதியாக 1951ஆம் ஆண்டு இடம்பெற்றது.

இவ்வாறாக டாக்டர் சி. நடேசனார் சென்னை திராவிடர் சங்கம் என்பதை 1912இல் தோற்றுவித்த காலம் முதல் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டாக வகுப்புவாரி இடஒதுக்கீட்டு உரிமைக்காக நடைபெற்ற போராட்டத்துக்கான வெற்றி இந்த 2010ம் ஆண்டில்தான் கிடைத்தது இந்தியாவின் உச்சநீதிமன்றத் தீர்ப்பின் வாயிலாக! தமிழ்நாடு சட்டமன்றத்தில் 1993இல் நிறைவேறிய 69 விழுக்காடு இடஒதுக்கீடுக்கு உரிய தீர்மானத்தைத் தழுவிய அரசமைப்புச் சட்ட விதி செல்லத் தக்கதே என்னும் தீர்ப்பை அது வழங்கியுள்ளது. அத்துடன் அந்த இடஒதுக்கீடு முறைப்படி கிடைக்க சாதிவாரிக் கணக்கெடுப்பே நடத்தப்பட வேண்டும் எனவும் அரசுக்கு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்த ஆணை நிறைவேறுமா நிறைவேற்றப்படுமா என்கின்ற ஐயப்பாடுகளின் மத்தியில் இது தொடர்பில் இந்தியப் பேரரசு எடுக்கப்போகும் நடவடிக்கையைப் பற்றி உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள் 1.10.2010 அன்று செய்தியாளர்கள் மத்தியில் 'சாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு அடுத்த 2011ஆம் ஆண்டு யூன் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும் எனத் தகவல் வெளியிட்டுள்ளார்.

சாதிவாரிக்கணக்கெடுப்பு சரியான வடிவில் நடை பெறுகிறதோ இல்லையோ இந்த நிலைமையும் இது போன்ற இனிய செய்திகளும் ஒடுக்கப்பட்ட - பிற்படுத்தப்பட்ட - பல கோடி திராவிட தமிழர்க்கும் மற்ற மொழியினர்க்கும் முன்னேற்ற நம்பிக்கை விளக்கை எப்படியெல்லாம் ஏற்றும் என்பதை எண்ணியாவது மகிழ்வோமாக!

**04.10.2010**



படிப்பகம்

www.padippakam.com

# களம் காணத் தயாராகும் தமிழகத்து அரசியல்

அடுத்தாண்டு (2011) முற்பகுதியில் பெரும்பாலும் ஏப்பிரல் அல்லது மே மாதமளவில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படும் தமிழ்நாட்டின் சட்டமன்றத் தேர்தல் காற்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் அதிரடிப் பரபரப்பில் ஆழ்த்தி எச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபட வைத்துள்ளது. . தற்போதைய ஆளும் திமுக கட்சியின் கூட்டணியும் சரி - எதிர்க் கட்சியின் கூட்டணியும் சரி முன்பு இணைந்தபடியே தொடர்ந்து நீடிக்கும் எனச் சொல்ல முடியாத குழப்ப நிலையே காணப்படுகிறது. தோழமைக் கட்சிகளுக்கு இடையே ஐயப்பாடுகளும் அவ நம்பிக்கைகளும் துளைத்தெடுக்கும் ஈட்டிகளாக எழச்செய்துள்ளது வரவிருக்கும் தேர்தல்.

அடுத்த தமிழ்நாட்டின் ஆட்சியை எந்தக் கட்சி கைப்பற்றப் போகிறது...? எந்தத் தலைவர் முதலமைச்சர் ஆகப் போகிறார்...? உதய சூரியன்தான் தொடர்ந்து ஒளி வீசி உலா வரப் போகிறதா...? அப்படியானால் அதன்முதலமைச்மச்சர் யார்...? அல்லது காய்ந்து கிடக்கும் இரட்டை இலைகள்தாம் மீண்டும் பொலிவைப் பெற்று பறக்கப் போகின்றனவா...? இவற்றிற்கு தெளிவான, திட்ட வட்டமான விடைகள் கிடைக்க முடியாத ஒரு மேக மூட்டமே இன்று தமிழ்நாட்டின் மீது கவிந்துள்ளது. பலமானதாக இன்றுவரை இருக்கும் தற்போதைய முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையைக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியில் இடம் பெற்று உள்ள காங்கிரஸ் கட்சியின் முன்னணித் தலைவர்கள் சிலர், எதிர்கால மாநில அரசில் அமைச்சர் பதவிகள்



படிப்பகம்

www.padippakam.com

அளிக்கப்பட்டே தீர வேண்டும் என்கிற உரிமைப் பிரச்சனையை அழுத்தமாகவே வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர். இன்னும் சில தலைவர்களோ, சிறிய கட்சிகள் சிலவற்றைச் சேர்த்துப் புதிய கூட்டணி அமைத்து மறுபடியும் காங்கிரசின் காமராஜர் ஆட்சியை மலரச் செய்வதற்கும் மனப்பால் குடிக்கின்றனர்.

முன்னாள் முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா அவர்களின் தலைமையைக் கொண்ட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அண்மைய நாட்களில் கோவை, திருச்சி ஆகிய நகரங்களில் நடாத்திய பொதுக் கூட்டங்களில் கூடிய வியக்கத்தக்க மிகப் பெரிய மக்கள் வெள்ளம் காங்கிரசை மட்டுமல்ல திமுக தொண்டர்களையும் கலங்க வைத்துள்ளது. அண்மையில் இடம்பெற்ற பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் வரையிலும் தமது கட்சியைத் தனித்தே போட்டியிடச் செய்த, எந்தக் கூட்டணியோடும் தங்கள் கட்சி இணையாது என்று மார்தட்டி வந்த தேசிய முற்போக்குத் திராவிட கழகம் (தே.மு.தி.க.) நிறுவனர் - தலைவர் நடிகர் விஜயகாந்த் இப்பொழுது காங்கிரசுக் கட்சியுடனோ அல்லது அண்ணா தி.மு.க.வுடனோ கூட்டணி வைக்க திரைமறைவு முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார் என்கிற செய்தியும் வெளியாகியுள்ளது.

புதிய கூட்டணிகள் எவ்வாறு அமையப் போகின்றன என்கிற தெளிவற்ற குழப்பமான முகில் மூட்டத்தாலேயே - தமிழ்நாட்டின் வாக்காளப் பெருமக்களும் வர இருக்கின்ற 2011ஆம் ஆண்டுத் தேர்தலில் எந்தக் கூட்டணியை - எந்தத் தலைவரை - ஆட்சியில் அமர்த்தப் போகிறார்கள் என்பதை அறுதியிட்டுக் கணிக்க முடியாத அரசியல் சூழலே இன்றைய நாள் வரை நிலவுகிறது. தமிழ்நாட்டின் பொற்காலம் எனக் கூறப்பட்ட காமராஜர் ஆட்சிக் காலத்தின் பின்னர் இடம்பெற்ற அனைத்து தேர்தல் காலங்களிலும் இப்படியான ஒரு குழப்ப நிலைமையில் தான் தமிழகத்தின் தேர்தல்களம் இருந்து வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு காங்கிஸ் கட்சியின் முன்னணித் தலைவர்கள் பலருக்கு திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியில் நீடிப்பதால் - தங்களுடைய காமராஜர் ஆட்சிக் கனவு பலிக்காதே அதன் மூலம் தமக்கு பதவிவாய்ப்புக்கள் கிடைக்காதே என்கிற ஏக்கமும் எரிச்சலும் அதிகரித்து வருகிறது. அதன் எதிரொலியாகத்தான் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆட்சி நடத்தும் முறையையும் அவருடைய திட்டங்களையும் முன்னாள் மத்திய அமைச்சரும் தந்தை பெரியாரின் கொள்ளுப் பேரனுமான திரு. ஈ.வெ.கே.எஸ். இளங்கோவன்



படிப்பகம்

www.padippakam.com

இடித்துக் கூறி விமர்சித்து வருகிறார் துணிச்சலோடு. காங்கிரசுக் கட்சியின் மைய அரச நிதி ஒதுக்கீட்டில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்கெல்லாம் கலைஞர் பெயரைச் சூட்டி மாநில அரசுத் திட்டங்களாக விளம்பரம் செய்கிறது திமுக அரசு எனப் பகிரங்கமாகவே தெரிவிக்கும் இளங்கோவன் நடைபெற இருக்கும் சட்டமன்றத் தேர்தலில் மொத்தம் உள்ள 235 தொகுதிகளில் 110 தொகுதிகளைத் தங்கள் காங்கிரசுக் கட்சிக்குத் தி.மு.க ஒதுக்கித் தர வேண்டும் என்றும் புதிதாக அமையக் கூடிய தமிழ்நாடு மாநில அரசில் காங்கிரசுக் கட்சிக்கு அமைச்சர் பதவிகளில் பங்கு தரவேண்டும் என்றும் பகிரங்கமாகவே முழங்கி வருகிறார். இளங்கோவனின் ஆணித்தரமான நிபந்தனைப் பேச்சுகள் தி.மு.க - காங்கிரஸ் கூட்டணிக்கே வேட்டு வைக்கும் போக்கிலேயே வெளிப்படுகின்றன என்பதனையும் முதலமைச்சர் கலைஞர் மனத்தில் இந்தப் பேச்சுக்கள் வெறுப்பு நெருப்பை வீசுகின்றன என்பதனயும் திமுக முன்னணியினர் சிலரின் அண்மைய சில கருத்து வெளிப்பாடுகள் உணர்த்துகின்றன. தி.மு.க ஆட்சி மீதும் அதன் தலைவர் மீதும் விமர்சனக்கணைகளை ஏவிவிடும் இளங்கோவனின் துணிச்சல் நெருப்புக்குப் பின்புலத்தில் இருந்து ஊக்கம் அளிப்பவர் இந்தியாவின் எதிர்காலப் பிரதமர் என எண்ணப்படும் காங்கிரஸ் கட்சியின் இன்றைய இளம்புயல் ராகுல் காந்தியே என்னும் ஊகங்களும் உலா வருகின்றன.

ராகுல் காந்திக்கு தமிழகத்தில் இருக்கும் தி.மு. கழகத்துடனான கூட்டணி மீது இந்த அளவுக்கு எட்டிக்காய் கசப்பு ஏற்படுவதற்கான சில காரணங்களை அவருடைய ஆதரவாளர்கள் அழுத்தமாகவே கூறுகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1949ஆம் ஆண்டு தோற்றுவித்த திராவிட முன்னேற்றக் கழகம் பதினெட்டே (18) ஆண்டுகளில் 1967ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டது. அப்பொழுது வீழ்த்தப்பட்ட காங்கிரசுக் கட்சியின் ஆட்சியும் அந்தக் கட்சியின் பலமும் இந்த 2010 வரையிலும் எழுந்திருக்கவே முடியாத அளவுக்கு தமிழகத்தில் முடமாக்கப்பட்டுள்ளது.

கடந்த நாற்பத்து மூன்று (43) ஆண்டுகால நீளமும் அண்ணாவால் தோற்றுவிக்கப்பட்ட, வளர்க்கப்பட்ட, திராவிட இயக்கத்தைச் சேர்ந்த இரண்டு கட்சிகள் மட்டுமே தமிழ்நாட்டை மாறி மாறி ஆள்வதற்கு இடம் தந்தது. ஒருகாலத்தில் காங்கிரஸ் பேரியக்கத்தின் தென் இந்திய பலமாகவும் தளமாகவும் திகழ்ந்த காங்கிரஸ் கட்சிக்கு மீண்டும் புத்துயிர் அளிக்க விரும்பும் ராகுல் 43 ஆண்டுகள்



படிப்பகம்

தொடர்ச்சியாக வீழ்ச்சியை சந்தித்தது கட்சிக்கு ஒரு அவமானம் எனவும் கருதுகிறாராம். எப்படியும் வரும் 2011 தேர்தலிலோ இல்லை அதற்கு அடுத்த தேர்தலிலோ தங்கள் தேசியக் கட்சி தமிழக அரசைக் கைப்பற்ற வேண்டும் என்றால் தி.மு.க கூட்டணியை உதறிவிட்டு இந்திய தேசியத்தை முழுமையாக ஏற்கக்கூடிய சிறிய கட்சிகளை இணைத்துக்கொண்டு தனிக்கூட்டணி அமைத்துத் தேர்தலில் போட்டியிடுவது தான் சரியான வழி என அவர் எண்ணுவதாகவும் சொல்லப்படுகிறது.

ஆனால் தம்முடைய மகன் ராகுல் காந்தியின் தமிழ்நாட்டு ஆட்சிக் கனவை காங்கிரசுக் கட்சியின் தலைவியான அன்னையார் சோனியா காந்தி ஏற்பார் என்று இன்றைய நிலையில் தோன்றவில்லை. அதற்கான எந்த சமிஞ்சைகளும் அவர் தரப்பில் இருந்தோ அல்லது காங்கிரசின் உயர்மட்ட தலைவர்கள் தரப்பில் இருந்தோ வெளியாகவில்லை. காங்கிரஸ் கட்சியின் தலைமையைக் கொண்ட திமுக உட்பட்ட ஐக்கிய முற்போக்குக் கூட்டணி 2004ஆம் ஆண்டு தேர்தலை ஒட்டி அமைக்கப்பட்டு எதிர்கொண்ட இந்திய பராளுமன்ற தேர்தலில் இந்தியாவின் மைய அரசை அமைக்கத் தேவையான தனிப் பெரும்பான்மைத் தொகுதிகளைக் காங்கிரசால் கைப்பற்ற முடியவில்லை. எனவே சிறுபான்மை ஆட்சியையே அந்தத் தேசியக் கட்சி அமைத்தது.

அந்த நெருக்கடியான நேரத்தில் அதற்குக் கைகொடுத்து, டாக்டர் மன்மோகன் சிங் தலைமை அமைச்சர் ஆவதற்குப் பேருதவி புரிந்தவர் - தி.மு.கழகத் தலைவர். 2009ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலிலும் காங்கிரசின் கூட்டணியிலேயே தமது கழகத்தை நீடிக்கச் செய்த கலைஞர் அதற்கு பலமாக தற்போதும் மத்திய அரசில் தமது அமைச்சர்களை இடம் பெறச் செய்துள்ளார். முதலாளித்துவ அமெரிக்காவிற்கு இந்தியாவை அடகு வைத்து விட்டார் - முதலாளித்துவ மனப்பான்மையில் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் என்கிற குற்றச்சாட்டை முன்வைத்து அவரது தலைமையிலான அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை இடதுசாரிப் பொதுவுடைமைக் கட்சிகள் எடுத்து மத்திய நெருக்கடி ஏற்படுத்திய சோதனையான வேளையில் சிறுபான்மைக் காங்கிரசுக் கட்சியின் மத்திய அரசு கவிழ்ந்துவிடாதபடி முட்டுக் கொடுத்து காப்பாற்றியவர் தி.மு.க தலைவர் கருணாநிதி. இவ்வாறு இக்கட்டான வேளைகளிலெல்லாம் தமது கட்சிக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்த நன்றி உணர்வுடன் நடக்கின்ற போக்கிலேயே - தமிழ்நாட்டில் தி.மு.

www.padippakam.com

கழகக் கூட்டணியிலேயே காங்கிரசுக் கட்சி தொடர்ந்தும் நீடிக்கும் எண்ணத்தில் இருக்கிறார் சோனியா காந்தி எனச்சொல்லப்படுகிறது.

இதே வேளையில் தமிழ்நாட்டில் தி.மு.க.வின் ஆட்சியும் தனிப்பெரும்பான்மை அற்ற நிலையில், காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இல்லை என்றால் ஆட்சியே இல்லை என்கின்ற நிலையிலேயே தற்போதைய பதவிக்காலத்தின் இறுதியை எட்டியள்ளது. இந்த நிலையில் மீண்டும் ஆட்சி அமைப்போம் என்கின்ற உறுதியுடன் தேர்தலை எதிர்கொள்ளவுள்ள திமுக தம்முடைய கூட்டணியை விட்டுத் தமிழ்நாடு காங்கிரசுக் கட்சி வெட்டிக்கொண்டு போய்விடாதபடி எச்சரிக்கையான அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்கிறது. திருமதி சோனியா காந்தியின் அரசியல் நட்புறவைக் கட்டிக் காப்பதிலும் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் தலைமையிலான மத்திய அரசுடன் மோதல் போக்கு முளைவிடாதபடியும் விழிப்பாக இருக்கிறார் கலைஞர்.

இவ்வாறாக முதலமைச்சர் கலைஞரும் திருமதி சோனியா காந்தியும் தங்களுடைய கட்சிகளின் கூட்டணியை உடைந்து விடாமல் காப்பாற்றிக் கொள்ளும் காய்களை நகர்த்தினாலும் நடைபெற இருக்கும் 2011ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் உறுதியான முறையில் வெற்றிக் கனியை இந்தக் கூட்டணி எளிதாகக் கொய்துவிட முடியுமா?

நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக எத்தனையோ இலவசத் திட்டங்களை முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி முனைப்போடு நிறைவேற்றி வருகிறார் என்பது உண்மையே...! என்றாலும் கூட அன்றாடத் தேவைப் பொருள்களின் விலைகளோ குறிப்பாக பெற்றோல், மண்ணெண்ணை, சமையல் எரிவாயு போன்வற்றின் விலைகள் ஏவுகணைப்பாய்ச்சலில் ஏறிக் கொண்டே போகின்றன...! அவற்றைக் கட்டுப்படுத்த இந்திய மத்திய அரசும் தமிழ்நாடு திமுக அரசும் உருப்படியான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவில்லையே என்கிற ஆத்திர நெருப்பு ஏழை - நடுத்தர மக்கள் அனைவரின் உள்ளத்திலும் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது என்பது யதார்த்த உண்மை.

இதன் வெளிப்பாடுகளே இந்த தேர்தலுடன் அரசியலை விட்டே காணாமல் போய் விடுவார் என்று எண்ணப்பட்ட புரட்சித் தலைவர் எம்ஜியாரின் வாரிசு என்று இன்று அவரை வணங்கும் ரசிகர்களால்



படிப்பகம்

போற்றப்படும் ஜெயலலிதா அம்மையாரின் அண்மைய சில கூட்டங்களுக்கு திரண்ட மக்கள் கூட்டமாகும். மேலும் கடந்த 10வருடங்களுக்கு மேலாக நாட்களின் பெரும் எண்ணிக்கையை நீலகிரி மாவட்டத்தின் கொடநாடு சொகுசு பங்களாவில் தோழி சசிகலா அம்மையாருடன் களித்துக் கொண்டிருக்கும் ஜெயலலிதாவின் அரசியல் பொலிவுக்கு கருணாநிதி குடும்பத்தவரின் ஆட்சி ஆதிக்கமும் தென்மாவட்டங்களில் கலைஞரின் மூத்த வாரிசு என்று சொல்லப்படும் மு.க. அழகிரி நடாத்தும் ராஜாங்கம் என்பனவும் காரணமாக சொல்லப்படுகிறது.

அடுத்து களம் காணத்தயாராகுபவர் சினிமாவில் சாதனை படைத்தவர்கள் அரசியலை இலகுவாக வென்றுவிடலாம் என்பதற்கு தமிழகத்தில் ஒரே ஒரு உதாரணமாக அமைந்த எம்ஜிஆரின் பாணியை பின்பற்றிக் கொண்டு கடந்த தேர்தலில் கட்சி கட்டிக் களம் இறங்கிய விஜயகாந்த், அண்மையில் நடந்த இடைத் தேர்தல்கள் அனைத்திலும் கட்டும்பணத்தை இழக்கும் தோல்வியை தழுவி இருக்கும் தொண்டர்களின் அதிருப்தியையும் சம்பாதித்துக் கொண்டிருக்கும் இவர் வரும் தேர்தலில் ஒரு மூன்றாவது சக்தியாக சிலசமயம் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாகக் கூட வரலாம் என சில ஆருட சக்திகள் கூறுகின்றன. இவை தவிர்ந்த அதிமுகவின் தயவை மட்டுமே நம்பி இருக்கும் மதிமுக இடதுசாரிகள் உட்பட்ட சிறிசுகள் பற்றி அலட்டிக்கொண்டு அசிரத்தைக்கு ஆளாதல் ஆரோக்கியமானதல்ல.

இறுதியாக இக்கட்டான ஒரு சூழலில் தேர்தல் களம் காணத் தயாராகி வருபவர் சாதி அரசியலின் பிதாமகனும் சந்தர்ப்ப வாதத்திற்கு முன்னுதாரணமாக திகழ்பவருமான டாக்டர் ராமதாசும் அவரது பாமாகவும் தான். அவர் கட்சி ஆரம்பித்த காலம் முதல் ஒவ்வொரு தேர்தலிலும் அவரே தனது கூட்டணியை தெரிவு செய்த - அவரை எப்படியும் தமது கூட்டணிக்குள் இழுத்துவிடவேண்டும் என்று ஏனைய கட்சிகள் முயற்சித்த நிலைமாறி இன்று எந்தக் கூட்டணிக்குள்ளும் கௌரவத்துடன் நுழைய முடியாத ஒரு திரிசங்கு சொர்க்க நிலைக்கு அவரது கட்சி தள்ளப்பட்டுள்ளது. 2011ல் தானே தமிழகத்தின் முதல்வர் இதோ நிழல் வரவு செலவுத்திட்டம் என திமுக கூட்டணியில் அங்கம் வகித்துக்கொண்டே கடந்த பல வருடங்களாக கலைஞர் அரசுக்கு பெரும் நெருக்குதலை கொடுத்து வந்த ராமதாசின் நிலைதான் இன்றைய தமிழகத்து அரசியல் களத்தில் பரிதாபமானது.

இது தவிர இலங்கைத்தமிழர் அரசியலை - அவலத்தை முன்னிறுத்தி உண்மைக்கு புறம்பான உணர்ச்சியூட்டும் வகையிலான தேசிய அரசியல் தமிழகத்து வாக்காளர் மத்தியில் என்றும் எடுபட்டது இல்லை. இப்படியான கூட்டத்தில் சிக்கியிருக்கும் விடுதலைச்சிறுத்தைகள் கட்சியும் திருமாவளவனும் திமுக கூட்டணியில் சாதுரியமாக தம்மை தக்க வைத்துக் கொணடிருப்பதால் அவர்களது தேர்தல் களமும் அர்த்தமுள்ளதாகும் என எதிர்பார்க்கலாம். தி.மு.கழகம் - காங்கிரசுக் கட்சி - விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம் - இணைந்த கூட்டணி எப்படியும் தேர்தல் வெற்றிக் கனியைப் பறித்துவிடும் என நம்பிக்கையோடு நடைபோடுகிறார்கள் இந்த மூன்று கட்சிகளையும் சேர்ந்தவர்கள்.

நடிகர் விஜயகாந்தின் தே.மு.தி.க. அதிமுக கூட்டணியில் இணைக்கப்பட்டால் அந்தக் கூட்டணிக்கே வெற்றி உறுதி எனவும் கணிக்கப்படுகின்றது. இது நடந்தால் ஜெயலலிதா மூன்றாம் முறையாக முதலமைச்சராகும் வாய்ப்பு ஏற்படலாம்.

ஆனால் இன்றைய தமிழகத்து வாக்காளன் ஒன்றும் முன்னைய தலைமுறையினரைப் போல முட்டாள்கள் அல்ல என்பது கடந்த தேர்தல்களில் எப்படி கோடிடப்பட்டதோ (அனைத்து தரப்பினரும் வழங்கும் பணப்பட்டுவாடாக்களை பெற்றுக் கொண்டு தான் விரும்பும் வேட்பாளனுக்கே வாக்களித்தல்) அதுபோலவே 2011 தேர்தல் களமும் அமையும் என்பதே யதார்த்தம்.

**27.09.2010**

www.padippakam.com

# விடுதலை வேண்டி நிற்கும் செச்சினியா...! விடுவிக்கமா...? ரஷ்யப் பேரரசு

## அங்கம். 01

மனிதர்கள் உள்ளிட்ட உயிர் இனங்கள் அனைத்தினதும் உறைவிடமான நிலக்கோள் உலகம் என்னும் சொல்லினுள் அடக்கப்படுகிறது. விரிந்து பரந்த விண்ணகத்தில் உலா வரும் ஞாயிறு என்னும் சூரியனில் இருந்து தெறித்து விழுந்த ஒரு சிறு துண்டம்தான் இந்த நிலக்கோள் எனவும் இது பின்னர் குளிர்ச்சி அடைந்து, கடலும் மணலும் கற்பாறையும் கனிமச் சுரங்கமும் பிணைந்த மண்ணகமாய் மலர்ந்துள்ளது என்பதும் ஆய்வாளர்கள் பலரின் கணிப்பு. விந்தைகள் மலிந்த ஓர் இயற்கைப் பேராற்றலைக்கொண்ட அதனாலான விளைவுகளை சந்திக்கும் இந்த மண்ணகம் எத்தனை ஆயிரம் அல்லது இலட்சக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது என்னும் வினாவுக்கு அறுதியான விடை இன்றுவரை காணப்படவில்லை.

எண்ணிக்கையில் அடங்காத எழில்கொஞ்சும் இயற்கைச் செல்வங்கள் பல்தரப்பட்ட நிறைந்த வளங்கள் கொண்ட இந்த நிலக் கோளத்தில் தோன்றிய ஆறு அறிவு பூண்ட மனித இனம்மட்டுமே தங்களுக்கு எனத் தனித்தனி நாடுகளை அமைத்துக் கொண்டு வாழ்கின்றனர் ஆள்கின்றனர்.

நாடு என்பதை உருவாக்கிக் கொள்ள உந்துதல் அல்லது எண்ணம் தந்த மூலத் தளமாக அந்த இனம் வாய்மொழியாகப் பேச வல்ல தாய் மொழியே அமைந்தது எனலாம்...! தாய்மொழியின் பெயரை வைத்துத்தான் தொன்மைக் காலத்தில் மனித இனங்களே

www.padippakam.com

வெவ்வேறுவகையினராக வகுக்கப்பெற்றனர் அவர்களின் நாடுகளும் அழைக்கப்பெற்றன. மிகச் சில நாடுகளைத் தவிர பெரும்பாலான நாடுகள் அவற்றில் வாழும் பழைமையான இனங்களின் தாய்மொழிப் பெயரையே தாங்கியுள்ளன. கிரேக்கம், துருக்கி, எகிப்து, சீனா, மங்கோலியா, ரஷ்யா, ஜெர்மனி, பிரான்சு, இங்கிலாந்து, அயர்லாந்து, கொரியா, தாய்லாந்து, வியட்நாம் இப்படிச் சான்றுகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

தொன்மையான தமிழையும் வேறு பல மொழிகளையும் பேசுகின்ற பல்மொழிக் கலாச்சரம் உள்ளடங்கிய பலவகை இனத்தவரும் வாழ்கின்ற பரந்த துணைக் கண்டம் இந்தியா. பதினெட்டாம் நூற்றாண்டில் இதனை கைப்பற்றி ஆண்ட (சுரண்டிய) பிரித்தானியர்கள் இந்தியாவை ஒரே நாடாக உருவாக்கினர். இந்திய சுதந்திரத்திற்கு பின்னர் அந்தப்பெரு நிலப்பரப்பிலே பெரு மொழிவாரியாகவே 28 மாநிலங்கள் பிரிக்கப்பட்டுள்ளதும் இன்றும் சில மாநிலங்களில் வாழும் சிறுமொழிப்பிரிவினர் தமக்கென மொழிவாரி தனி மாநிலக் கோரிக்கைகளை முன்வைப்பதையும் காண்கின்றோம்.

ஏறத்தாழ மூன்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மைய ஆசியாக் கண்டத்திலிருந்து இமய மலைக்குத் தெற்கே பிழைக்க வந்த ஆரிய இனம் பலவகை சூழ்ச்சிகளைக் கையாண்டு வீழ்ச்சிப் பாதாளத்தில் உருட்டித் தள்ளியது தமிழ் இனத்தை என வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். தீண்டாமைச் சாதிமுறை நஞ்சைக் கொண்ட தங்களது வேதமதம் என்னும் இந்து மதத்தாலும், சமஸ்கிருத மொழியாலும் தமிழ் இனத்தையே பிளவுபடுத்தித் தங்களுக்கு அடிமைகளாக இழிந்த நிலைகளுக்குத் தள்ளியதோடு ஆரியர் நிற்கவில்லை எனவும் தமிழின் தனித் தூய்மையையே தங்களது வடமொழிக் கலப்படத்தால் அழித்தனர் எனவும் திருமணம், இறந்தார்க்கு இறுதிக் கடன் (கருமாதி) முதலான தமிழரின் வாழ்வியல் நிகழ்வுகளிலிருந்து கூட தமிழை வெருட்டியடித்து ஒழித்தனர் தங்களின் சமற்கிருத மந்திரங்களால் எனவும் சொல்லப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் ஆங்கிலேயர் ஆட்சி வரை ஆரியர்களால் வீழ்த்தப்பட்ட (தாழ்த்தப்பட்ட) பழந்தமிழ் இனத்தவர்க்கு முதன்முதலில் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்கின்ற பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் எழுப்பிய முழக்கமே ஒரு எழுச்சியை ஏற்படுத்தியது எனவாம். இந்தியா போன்றே இலங்கையிலும் ஆட்சிமுறை இணைப்பை மேற்கொண்ட பிரித்தானியர்கள் நாட்டைவிட்டு வெளியேறியதும் முழு



படிப்பகம்

www.padippakam.com

இலங்கைக்குமான ஆட்சி அதிகாரம் பெரும்பான்மை சிங்கள மொழிபேசும் இனத்தவர் வசம் சென்றது. அதன் தொடராக கடந்த 30 வருடங்களுக்கு மேலாக பலவடிவங்களில் நடாத்தப்பட்ட தமிழர் போராட்டங்களும் இந்த மொழியின் வழி வந்ததாகவே அமைந்திருந்தது. இந்த மொழியின் அடிப்படையிலேயே இன்றும் பல நாடுகளில் வாழும் மக்கள் குழுமங்கள் விடுதலை வேண்டிப் போராடுகின்றன. அயல்மொழியாளர்களின் வல்லாட்சி ஆதிக்கத்தை எதிர்க்கும் மொழிப் பற்றாளர்கள் தமது தாய்மொழியை அதன் பெயரை அடித்தளமாக வைத்தே உலகில் ஆங்காங்கே தனிநாட்டு விடுதலை இயக்கங்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த நூற்றாண்டில் அயர்லாந்து, வங்கதேசம், நமீபியா, செக்நாடு சுலோவாக்கியா, கிழக்கு திமோர், சோவியத் ரஷ்யா, ஜோர்ஜியா, உக்ரெயின் இப்படிப் பல நாடுகள் விடுதலை ஒளியைக் கண்டது தாய்மொழித் தாகம் தந்த உந்து விசையால் தானே...? அந்த 20ம் நூற்றாண்டிலேயே தொடங்கப்பெற்ற பாலஸ்தீனம், குர்திஸ்தான், இந்தோனேசியாவில் அடங்கியுள்ள அச்சே (ACHE) சீனாவினால் மாநிலமாகக் கையகப்படுத்தப்பட்ட திபேத், சீக்கியருக்கு உரிய காலிஸ்தான், பாகிஸ்தானும் இந்தியாவும் படைகள் மூலம் பங்கு போட்டுக் கொண்டுள்ள காஷ்மீர் ரஷ்ய பேரரசால் கைப்பற்றப்பட்டுள்ள செச்சினியா முதலான பல தனி நாடுகளின் விடுதலைப் போராட்டங்களும் தாய்மொழிப் பற்றின் வலிமையினால் தானே, இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் தொடர்ந்து நடைபெற்ற வண்ணம் உள்ளன...! இந்த அடிப்படையிலே ரஷ்யப் பேரரசின் வல்லாட்சியை எதிர்த்து செச்சினியா மக்கள் நடத்தும் தனிநாட்டு விடுதலைப் போராட்டமும் பல ஆண்டுகளாக தொடர்ந்து கொண்டே போகிறது.

செச்சினியா என்னும் நாடு மிகவும் தொன்மையான கி.மு. 40,000 (நாற்பது ஆயிரம்) ஆண்டுகளுக்கு முன்பே உருவெடுத்த வரலாறு படைத்தது எனச் சொல்லப்படுகிறது. ஐரோப்பா கண்டத்தின் தென்கிழக்குப் பகுதியில் வடக்குக் காகசஸ் மலையின் சரிவுகளில் இதன் குடியேற்றங்கள் அமைந்துள்ளன. செச்சினிய மலைக் குகைகளில் தென்படும் ஓவியங்கள், கல்வெட்டுகள், ஏறத்தாழ எட்டாயிரம் ஆண்டுகள் தொடர்ந்து இங்கே மனிதக் குடியேற்றங்கள் நடைபெற்ற சான்றுகளை தெரிவிப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். பெரும்பான்மை இனத்தவராக செச்சனை தாய்மொழியாகக் கொண்டு வாழும் செச்சினியாவைச் சுற்றிலும் ரஷ்ய நாட்டின் கூட்டாட்சி மண்டலங்களே சூழ்ந்து இருக்கின்றன.



படிப்பகம்

மேற்கு எல்லையில் ஒசெட்டியாவும் இன்குஸ்தியாவும் வடக்கில் ஸ்ராவ்ரோபோல் கிழக்கில் தாஜெகிஸ்தான் தெற்கில் ஜோர்ஜியா குடியரசு என்பன அமைந்துள்ளன. 15,300 சதுர கிலோ மீட்டர்கள் பரப்பளவு கொண்ட செச்சினியாவின் தலைநகர் குரோசுனி. கி.பி. 15ஆம் நூற்றாண்டு முதல் செச்சினியர்கள் அனைவரும் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றியே வாழ்கின்றனர். அண்டை நாடுகளைச் சேர்ந்த கிறித்தவர்களான ஜோர்ஜியாக்களுடனும், கோச் சக்குகளுடனும் அடிக்கடி இவர்கள் சண்டைபோடும் அவலநிலை அன்றிலிருந்தே ஏற்பட்டது.

தனி ஆட்சியைக் கொண்டிருந்த செச்சினியா கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ரஷ்ய நாட்டின் ஆளுகைக்குள் அடங்க நேர்ந்தது. அப்போதே மன்சூர் உசுர்மா என்னும் இஸ்லாமிய சேக் ஒருவர் தலைமையில், செச்சினியாவின் தனியாட்சி உரிமைக்காக ரஷ்யாவின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பின்னர் 1834 முதல் 1859 வரை அவார் இமாம் சமூல் என்பவரும் ரஷ்ய ஆதிக்கத்தை எதிர்த்துப் போர் தொடுத்தார். எதுவும் வெற்றியளிக்கவுமில்லை. செச்சினியாவுக்கு விடிவுகாலம் விளையவுமில்லை. தொடர்ந்த கால ஓட்டம் இருபதாம் நூற்றாண்டின் முதல் பகுதியில் மூண்ட முதலாம் உலகப் போரை கண்டது. அடுத்து, 1917இல் ரஷ்யப் புரட்சி வெடித்து. மாவீரன் லெனின் பொதுவுடைமை ஆட்சியைக் கொண்ட சோவியத் சோசிலிஸ குடியரசுகளின் ஒன்றியத்தை (USSR) நிறுவினார். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அயலிலிருந்த ஐரோப்பிய மேலாதிக்க சக்திகளுக்கும் பெரும் சவாலாக விழங்கிய இந்தப் புதிய நாடு ஒரு மாபெரும் இடதுசாரிய சக்தியாக 1991ம் ஆண்டு வரை விளங்கியது. 100ற்க்கும் மேற்பட்ட இனக் குழுமங்களை அந்த மக்களின் பிரதேசங்களோடு உள்ளடக்கிய இந்த சோவியத் ரஷ்ய குடியரசு காலத்தில் செச்சினியா அடைந்த நிலை என்ன...?

## அங்கம். 02

**கா**கசஸ் மலைகளுக்கு வடபுலத்தில் மன்னர் ஆட்சியின்கீழ் இருந்தவையே ரஷ்ய நாடும், அதனை ஒட்டிய ஜோர்ஜியா, ஒசட்டியா, இங்குதாஜஸ்தான், செச்சினியா முதலான நாடுகளும்.

காரல் மார்க்ஸ் அவர்களின் ஏழைப் பாட்டாளிகளை வாழச் செய்வதற்கான பொதுவுடைமைத் தத்துவங்கள் மாவீரர் விளாடிமிர் லெனின் அவர்களால் இந்த நாடுகளில் முதன்முதலாகப் பரப்பப்பட்டது. 1891இல் சட்ட அறிஞர் பட்டம் பெற்ற லெனின்,

1902இல் அனைத்து ரஷ்ய சமூக மக்களாட்சி உழைப்பாளர் கட்சி என்பதைத் தோற்றுவித்தார். அதிலிருந்து உருவெடுத்ததுதான் போல்சுவிக் கட்சி எனவும், அதற்குத் தலைமை ஏற்று அவர் ஆற்றிய சொற்பொழிவுகளாலும் தீட்டிய கட்டுரைகளாலும்தான் 1905இல் முதல் ரஷ்யப் புரட்சி வெடித்ததாகவும் சொல்லப்படுகிறது!.

ஜார் மன்னனின் ஆட்சியின் அடக்குமுறை வழக்குகளிலிருந்து தப்பிக்க நாட்டை விட்டு வெளியேறிய லெனின் - பத்து ஆண்டுகள் பாரிஸ், ஜெனிவா, இலண்டன் முதலான பல ஐரோப்பிய நகரங்களில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தார். அத்தகைய துன்பக் காலத்திலும் அவர் தோற்றுவித்த சுபார்க் மற்றும் பிராவ்தா ஆகிய ஏடுகள் சிந்தனைக் கிளர்ச்சியை மக்களிடையே மூட்டின. இவற்றின் வெளிப்பாடு, 1917ஆம் ஆண்டு ரஷ்யப் புரட்சி விரைந்து பரவி, மன்னர் ஆட்சியை வீழ்த்தியது. அதே ஆண்டின் ஒக்டோபர் திங்கள் 25ஆம் நாள் ரஷ்யாவையும் மற்ற சில நாடுகளையும் ஒருங்கிணைத்து சோவியத் இணைப் பொருளியல் (சோசலிச) குடியரசு நாடுகளின் ஒன்றியம் என்னும் பெயரில் உலகின் முதல் பொதுவுடைமைப் பேரரசை லெனின் நிறுவினார்.

அதுவரையில் ரஷ்ய மன்னரின் ஆளுகைக்கு அடங்க நேர்ந்த போதிலும், செச்சினியா ஒரு தனியாட்சி நாடு போன்றே இருந்தது. ஆனால் சோவியத் குடியரசுகளின் ஒன்றியப் பெருநாடு தோற்றுவிக்கப்பட்ட பிறகு - ஒரு மாகாணம் என்கிற நிலையில் கூட இல்லாமல், ஒரு மாவட்டம் என்கிற தாழ்நிலைக்கே தள்ளப்பட்டு, அந்தப் பேரரசுக்குள் செச்சினியா சேர்க்கப்பட்டு விட்டது. சிறிது காலம் சென்றதும், ஜோசப் ஸ்டாலின் அவர்களின் ஆட்சிக் காலத்தில் அந்தச் செச்சினியா மாவட்டம் இங்குசேட்டியா என்னும் மற்றொரு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. பல நூற்றாண்டுகளாக செச்சினிய மக்கள் கொண்டிருந்த தனியாட்சி உரிமைகள் அனைத்தும் இழக்கப்பட்டு (பறிக்கப்பட்டு), சோவியத் ஒன்றிய ஆட்சிக்குள் ஒடுங்க நேர்ந்த நிலையிலேயே அந்த மக்கள் தங்களின் ஆட்சி உரிமைகளை மீட்டு எடுப்பதற்காக போராடத் துணிந்தனர்

1939இல் ஜேர்மனிய ஆட்சித் தலைவர் கிட்லர் என்னும் ஆரிய வெறியனால் இரண்டாம் உலகப் போர் தொடங்கப் பெற்றது. அடுத்த ஆண்டில்(1940) ஜோசப் ஸ்டாலின் நடத்திய சோவியத் ஆட்சியை எதிர்த்து, ஒடுக்கப்பட்ட செச்சினியர்கள் தங்கள் நாட்டின் உரிமைகளை வென்றெடுக்கக் கிளர்ச்சிகளை நடத்த முற்பட்டனர்.

ரஷ்ய நாட்டின் மைய அரசு, கிளர்ச்சியாளர்கள் எனப்பட்ட செச்சினியர்களுக்குக் கொடுமையான தண்டனைகளைத் தந்த அளவில் மட்டும் நிற்காமல் இரண்டாம் உலகப் போர் 1944இல் முடிவுக்கு வருவதற்கு முன்பே ஒட்டுமொத்த செச்சினிய இன மக்களையும், சைபீரியாவுக்கும் கஜகஸ்தான் குடியரசு நாட்டுக்கும் நாடு கடத்தல் செய்தது. இந்தக் கொடுந்தண்டனைகளுக்கெல்லாம் ஜோசப் ஸ்டாலினும், அவருடைய தோழர்களும் கூறிய காரணம் மேலும் அநியாயமாகவும் வேடிக்கையாகவும் இருந்தது.

கிட்லரின் படைகள் எமது சோவியத் ரஷ்யா மீது படையெடுத்து வரும்போது - அந்த வேளையாகப் பார்த்துதான் செச்சினியர்கள் தங்கள் உரிமைப் போராட்டத்தைத் தொடங்க வேண்டுமா...? அப்படியானால் எங்கள் ஆட்சி வீழ்ச்சி அடைவதற்காக அவர்கள் ஜேர்மனி நாட்டுக்குத் துணை போகிறார்கள் என்று தானே பொருள்...? அத்தகைய வஞ்சகத்தை (துரோகத்தை) ஒழித்துக்கட்டத்தான் அவர்களை நாடு கடத்தல் செய்ய வேண்டியுள்ளது என்று வாதிட்டார்கள் அவர்கள். கிட்லரின் படை அணி பல சோவியத் குடியரசு நாடுகளைத் தாண்டி, செச்சினியாவின் எல்லையை எட்டவே முடியாது என்பது பூகோள யதார்த்தமாக இருக்க, ஜேர்மனியரின் ஒத்துழைப்போடுதான் செச்சினியாவின் கொரில்லா விடுதலைப் படை அங்குள்ள குரோசுனி நகரத்தை 1942இல் முற்றுகையிட முயன்றது என்று கூறி, அதனையே ஒரு முகாந்தரம் ஆக்கி, செச்சன் - இங்குசெட்டியா என்னும் குடியரசு நாடு என்பதையே அழித்து விட்டது சோவியத்து ஒன்றியம்...!

ஜோசப் ஸ்டாலின் மறைந்த பிறகு சோவியத் ஒன்றிய நாட்டை ஒரு வல்லரசாக வலிமைப்படுத்திய பெருமைக்குரிய நிகிதா குருச்சேவ் அந்த நாட்டின் ஆட்சித் தலைவர் ஆனார். அவர் மேற்கொண்ட சீர்திருத்தத் திட்டங்களால் செச்சினியர்களுக்கு மீண்டும் ஓரளவு மறுவாழ்வு வெளிச்சம் தெரிந்தது. நாடு கடத்தப்பட்ட செச்சினிய இனத்தினர் 1956ஆம் ஆண்டுக்குப் பின்னர் மறுபடியும் தங்கள் தாயகம் திரும்ப அனுமதிக்கப்பட்டனர். செச்சினியா என்னும் குடியரசு நாடும், சோவியத் ஆட்சிக்குக் கட்டுப்பட்டதாக உருவாக்கப்பட்டது. ஆனாலும் கூட இந்தக் குடியரசுக்கு தன்னாட்சி உரிமைகள் வழங்கப்படவுமில்லை அவர்களது செச்சன் மொழி இதன் ஆட்சி மொழியாககப்படவுமில்லை. தொடர்ந்து ரஷ்ய மொழியே ஆட்சி மொழியாகவும் அதனைக் கற்றால்தான், வேலை வாய்ப்புகளிலும், மற்றப் பொருளியல் - அறிவியல் களங்களில் முன்னேற முடியும் என்கிற கட்டாயச் சூழல்களுக்கும் செச்சினியர்கள் தள்ளப்பட்டனர்.

பதினெட்டாம் நூற்றாண்டில், ஐரோப்பாக் கண்டத்திலிருந்து வந்த பிரிட்டன் பேரரசு எப்படி இந்தியா, இலங்கை, பர்மா (மியான்மர்) மலேயா முதலான நாடுகளை அடிமைப்படுத்தி ஆள முற்பட்டதோ - அதே வல்லாண்மை ஆதிக்கத்தைத்தான் குருச்சேவ் ஆட்சிக்காலம் தொடங்கிய பிறகும், சோவியத்து ரஷ்ய ஒன்றிய வல்லரசும் செச்சினியா மீது செலுத்தியது. கால ஓட்டத்தில், பனிப்போர் வெற்றியாக சொல்லப்பட்ட முதலாளித்துவ அமெரிக்க வல்லரசின் தந்திரங்களினால், ரஷ்ய ஆட்சிக்கு வந்த போரிஸ் ஜெல்ட்சின் உருவாக்கிய உள்நோக்குத் திட்டங்களினால் சோவியத் ஒன்றியப் பெருநாடே 1991இல் பல தனித்தனி நாடுகளாக (துண்டங்களாக) உடைந்து சிதறியது. பலவேறு மொழிகள் பேசப்படும் பதினைந்து பெரிய குடியரசுகளும் பதினைந்து சிறிய குடியரசுகளும் ஒருங்கிணைந்து உருவெடுத்த சோவியத் ஒன்றிய நாட்டின் மைய அரசு - ரஷ்ய மொழியை மட்டுமே அந்தப் பரந்த நாட்டின் ஒரே ஆட்சி மொழியாக்கி மற்ற எல்லா குடியரசுகளிலும் திணித்ததுதான அதன் உடைவை சுலபமாக்கியது எனலாம்.

அங்கே ஒவ்வொரு குடியரசுக்கும் (தன்னாட்சி தகுதிநிலை கொண்ட மாகாணம் அல்லது மண்டலம்) தனித்தனித் தாய்மொழி உண்டு. தங்கள் தாய்மொழியின் உரிமையைப் பறித்து, ரஷ்ய மொழியை மட்டுமே ஆட்சிமொழியாகத் திணித்த ரஷ்யத் தலைவர்களின் மொழி ஆதிக்கமே, மற்ற மொழி இனத்தவர்க்குத் தனி நாடு விடுதலை உணர்வை ஊட்டி சோவியத் ஒன்றியப் பெருநாட்டை உடைத்துச் சிதறச் செய்யக் காத்திருந்த முதலாளித்துவ சக்கதிகளுக்கு வழி சமைத்துக் கொடுத்தது. பல மொழிகளும் பல இனத்தவரும் வாழும் ஒரு பெரிய நாட்டில், மைய அரசைக் கைப்பற்றிக் கொள்ள முடிந்த பெரும்பான்மை மொழிக்கு உரியவர்கள் தங்கள் மொழியை மட்டுமே ஒரே ஆட்சி மொழி ஆக்கும் பொழுது - மற்றச் சிறுபான்மை மொழிகளைப் பேசுவோர் தங்கள் தாய்மொழிக்கு என்று தனிநாடு விடுதலை அடையப் போராட்ட இயக்கங்களைத் தோற்றுவித்துக் கொள்வது இயற்கையே.

இதன் சான்றுகளாக இந்தியா, பாகிஸ்தான், இலங்கை முதலான நாடுகளைக் கொள்ளலாம். இந்தியாவில் இந்தி மட்டுமே ஒரே ஆட்சி மொழியாக்கப்படதால்தான் தமிழ்நாடு தமிழருக்கே என்னும் தனிநாடு முழக்கத்தைத் தந்தை பெரியாரே எழுப்பினார். சீக்கியர்களுக்கு பஞ்சாபி சுபா என்னும் தனிநாடு விடுதலை கேட்டு தாராசிங் போராடினார்; பின்னர் காலிஸ்தான் தனிநாடு விடுதலை இயக்கத்தை பிந்திரன்வாலே நடத்தி மாண்டார். பாகிஸ்தானில் உருது

மொழியை மட்டுமே ஆட்சி மொழி ஆக்கித் திணித்ததால்தான், முஜிபுர் ரகுமான் பங்களாதேஸ் விடுதலைக்குப் போராடி வென்றார். இலங்கையில் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக்கப்பட்ட பின்னர் தான் தமிழ் ஈழம் கோரிக்கை வலுப்பெற்றது. இதே போலத்தான் ரஷ்ய நாட்டின் மொழி ஆதிக்கத்தையும் அரசியல் ஆதிக்கத்தையும் எதிர்த்து செச்சினிய குடியரசு மக்கள் தனிநாடு விடுதலைக்குப் போராடத் துணிந்தனர்; முனைந்தனர். சோவியத் ஒன்றியத்தின் சிதறல்-வீழ்ச்சிக்குப் பிறகு, செச்சின் இனத்தவர்க்காகப் புதிய விடுதலை இயக்கம் ஒன்றை செச்சின் தேசிய காங்கிரஸ் என்னும் பெயரில் தளோகர் துதயேவ் என்பவர் தோற்றுவித்தார். சோவியத் ஒன்றிய நாட்டின் வான்படைத் தளபதியாக இருந்து செச்சினியா திரும்பிய இவர் செச்சினியா ஒரு தனியாட்சி நாடாக விடுதலை பெற்றுஇ உலக நாடுகளின் அங்கீகாரத்தை அடைய வேண்டும் என்பதற்காக பலபோராட்டங்களையும் வேலை நிறுத்தங்களையும் போரிஸ் ஜெல்ட்சின் ஆட்சிக்கு எதிராக முன்னெடுத்தார்.

இவற்றை கடுமையாகவே எதிர்த்த ரஷ்ய கூட்டாட்சி நாடு தங்களின் எதிர்ப்புக்கு மூன்று காரணங்களை முன்வைத்தனர்.

1. முந்தைய சோவியத் ஒன்றிய ஆட்சியில், பால்டிக் - மைய ஆசியா - காகசஸ் மாகாணங்களைப் போல செச்சினியா ஒரு தனி உரிமை மாகாணமாக அடங்கி இருக்கவில்லை. எனவே, சோவியத் சட்டப்படித் தனிநாடாகப் பிரிந்து போகும் தகுதி அதற்கு இல்லை.

2. செச்சினியாவுக்கு தனி நாடு விடுதலை தந்தால், தாதர்ஸ்தான் போன்ற மற்ற மற்ற ரஷ்யக் குடியரசுகளின் பிரிவினைக் கோரிக்கைகளையும் ஏற்கும்படி நேர்ந்து ரஷ்ய நாட்டின் ஒருமைப்பாடே உடைந்து போகும்.

3. ரஷ்யக் கூட்டாட்சி நாட்டில் மிகப் பெரிய எண்ணெய் வள உற்பத்தி மையத் தளமாக விளங்குவது செச்சினியா. அது தனி நாடாகப் பிரிந்து போய் விட்டால் - நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளியல் முன்னேற்றத்தையும், எரிசக்திப் பலன்களும் கடுமையாக உருக்குலைத்துவிடும்.

இந்த மூன்று தலையாய காரணங்களின் அடிப்படையில்தான், ரஷ்ய கூட்டாட்சியின் தலைவர் போரிஸ் ஜெல்ட்சின் - செச்சினிய விடுதலைக் கோரிக்கையை ஏற்பதற்கு முழு மூச்சாக மறுத்தார்.

அவருக்குப் பின்னர் வந்த விலடிமிர் புற்றின் ஆட்சியாளர்களும் அவரது நிலைப்பாட்டையே அழுத்தமாகக் கடைப்பிடித்துத் தங்களின் ஆதிக்க சிந்தனையை இன்றுவரை வலிமைப்படுத்தி வருகின்றனர்.

இவர்களுடைய அடக்குமுறைக் கொடுமைகளுக்கு அஞ்சி செச்சினிய மக்கள் தங்களின் விடுதலைக் குறிக்கோளை கைவிடுவதாகவோ அங்கு நிலவும் விடுதலைப் போராட்டப் புயல் ஓய்வதாகவோ இல்லை...!

சோவியத் ஒன்றியப் பேரரசு 1991ஆம் ஆண்டு உடைந்து சிதறியபோது, மற்ற மொழிகளின் குடியரசுகள் ரஷ்ய மொழிக் குடியரசின் ஆதிக்கத்திலிருந்து பிரிந்து, தனி இறையாண்மை கொண்ட நாடுகளாக ஆயின. செச்சினியா குடியரசும் 1991 நவம்பர் மாதம் முதல் விடுதலை பெற்ற தனியாட்சி நாடாக இயங்கத் தலைப்பட்டது. ஆனால், 1994 வரை ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் மட்டுமே செச்சின் மொழி மக்கள் தன்னுரிமை தழைக்கும் வெளிச்சத்தில் அமைதியாகவும் அகமகிழ்வோடும் வாழ்வதற்கு முடிந்தது! அதன்பின்னர், ரஷ்ய மொழி ஆதிக்கமும், கிறீஸ்த்தவ மத ஆதிக்கமும் கொண்ட ரஷ்ய நாட்டின் ஆட்சியாளர்கள் செச்சின் மொழி பேசும் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த செச்சினிய மக்களை, தனியாட்சி கொண்ட நாட்டினராகத் தழைத்து வாழ அனுமதிக்கவில்லை.

அந்தநாட்டை தமது ஆளுமைக்குள்ளேயே வைத்திருப்பதற்கு ரஷ்ய ஆட்சியாளர்கள் இன்றும் முனைப்புக் காட்டுவதற்கு மிகப்பெரிய எண்ணெய் வள உற்பத்தி நாடாக, செச்சினியா இருப்பதும் ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம். தனியாட்சி நாடாக இருந்த திபேத் என்பதைப் பொதுவுடைமைச் சீனா, தன் படை மூலம் கைப்பற்றித் தன்னுடைய மாநிலங்களில் ஒன்றாக எப்படி ஆக்கிக் கொண்டதோ அதேபோலவே செச்சினியா என்னும் தனி இறையாண்மை கொண்ட இஸ்லாமியர் நாட்டை, பொதுவுடைமை ஆட்சி முறையைப் புதைகுழிக்குள் மூடிவிட்ட ரஷ்ய நாடும், தனது ஆதிக்கச் சிறைக்குள்ளே அடைத்து வைத்துள்ளது.

1994ஆம் ஆண்டு ரஷ்ய நாட்டின் படைத் துருப்புகள் ஆதிக்க வெறியுடன் செச்சினியா நாட்டின் உள்ளே புகுந்தன. அதன் தலைநகர் குரோசினியைக் கைப்பற்றிவிட முனைந்தன. ஆனால் அங்குள்ள தனி விடுதலைக் கொரில்லாப் படைக் குழுக்கள்

அவற்றை நெஞ்சுரத்தோடு எதிர்த்து முன்னேறவிடாமல் தடுத்தன. அவற்றுக்குத் தலைமை தாங்கிய அசுலான் மாசுகதோவ் என்னும் புரட்சியாளர் செச்சினியாவின் தனியாட்சி உரிமைத் தகுதியை நிலைநாட்டியே தீர்வது என்பதில் உறுதியாக நின்றார். புதுமையான போர்க் கருவிகளுடன் தரைப் படையாலும், விமானப் படையாலும் ரஷ்ய நாடு செச்சினியா மீது கொடுமையான தாக்குதல்களைத் தொடுத்த போதிலும் அவற்றுக்கெல்லாம் ஈடுகொடுத்துப் போரிடும் அளவுக்குத் தம்முடைய விடுதலைப் படையை வழி நடத்தினார் அவர். 1994 முதல் 1996 வரை அவர் தலைமையிலான செச்சினிய விடுதலைப் படையணி ரஷ்யப் படையின் ஆக்கிரமிப்பை எதிர்த்து நடாத்திய மாபெரும் சண்டைதான் செச்சினியாவின் முதல் விடுதலைப் போர் என்னும் பெயர் பெற்றது.

அந்தக் கடுமையான தாக்குதலின்போது, செச்சினியா விடுதலை போராளிகளை வீழ்த்த முடியாததால் அன்றைய ரஷ்ய நாட்டின் ஆட்சித் தலைவர் போரிஸ் யெல்ட்சின், 1996ஆம் ஆண்டில் தாமே போர் நிறுத்தம் பற்றி அறிவிக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டார். ஓர் ஆண்டு கழிந்ததும் செச்சினியா அரசுடன் அமைதி உடன்படிக்கை ஒன்றையும் அவர் செய்து கொண்டார். அந்த முதல் விடுதலைப் போருக்குப் பிறகு, செச்சினியாவின் நாடாளுமன்றத்துக்கும் குடியரசுத் தலைவர் பதவிக்கும் 1997 சனவரி மாதத்தில் தேர்தல்கள் நடைபெற்றன. விடுதலை மாவீரர் அசுலான் மாசுகதோவ் வெற்றிக் கனியைக் கொய்து குடியரசுத் தலைவராக நான்கு ஆண்டுகள் காலத்திற்குக் கோலோச்சும் பொறுப்பினை ஏற்றார்.

ரஷ்யாவின் கொடிய நவீன தாக்குதல்களினால் சொல்லொணாத பேரழிவுக்கு இரையாகி இருந்த செச்சினியாவில் பொருளியல் சீரழிவு, பஞ்சம் பட்டினி என்பன ஏழை எளிய மக்களை வாட்டி எரித்த இக்கட்டான சூழலில் ஆட்சிப்பொறுப்பில் அமர்தப்பட்ட அசுலான் மாசுகதோவ் பெரும் சிரமங்களை எதிர்கொண்டார்;. அதன்விளைவு தங்கள் நாட்டையே கைப்பற்றிக் கொள்ள வந்த ரஷ்ய அரசாங்கத்திடமே நிதி உதவி புரியுமாறு வேண்டுகோள் விடுக்க வைத்தது. அப்போதைய அந்நாட்டின் ஆட்சித் தலைவர் பொறிஸ் யெல்ட்சின் அவரது கோரிக்கையை ஏற்று பெரும் நிதி உதவியினை செச்சினியாவிற்கு வழங்கினார். ஆனாலும் கூட இந்த நிதியியைக் கொண்டு சரியான முறையில் அசுலான் மாசுகதோவ் அவர்களினால் பொதுமக்களை வறுமை நெருப்பில் இருந்து மீட்க முடியவில்லை. அரசின் நிர்வாகத்தில் இருந்த பல

www.padippakam.com

அதிகாரிகளும், சமூகப் புல்லுருவிகளும் இணைந்து தங்களுக்குள் உதவி நிதிகளைப் பங்குபோட்டுக் கொள்ள மிக மோசமாக முடமாகிப் போன செச்சினியாவின் பொருளாதார நிலையை நிமிர்த்தவே முடியவில்லை. போரின்போது தங்கள் குடியிருப்புகளை இழக்க நேர்ந்த ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் (செச்சினியா மக்கள் தொகையில் நாற்பது விழுக்காட்டினர்) புலம் பெயர்ந்தோர் ஆக அகதிகள் முகாம்களில் அடைபட்டுத் தவித்தனர்.

இந்தத் துன்பச் சுமைகள் ஒருபுறம் வாட்டி வதைத்த அதே நேரத்தில் சற்றுப் பண வளம் படைத்தவர்களைக் கடத்திப் பணம் பறிக்கும் கும்பல்களின் கொள்ளைச் சம்பவங்கள் என செச்சினியாவின் நிர்வாகம் சீர்கெடுக்கப்பட்டது. ஒரே ஆண்டில் (1998) மட்டும் 176 ஆள்கடத்தல்கள், பல நூற்றுக்கணக்கான கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றன. இப்படியான சமூகப் புல்லுருவிகளை ஒழித்துக் கட்டுவதற்காக அதே ஆண்டில் குடியரசுத் தலைவர் மாசுகதோவ் ஓர் இயக்கத்தையே தோற்றுவித்தார். நாடு முழுவதும் கடத்தல்காரர்களுடன் தேசிய பாதுகாப்புப் படை எனப்பட்ட அந்த இயக்கத்தினர் நடத்திய மோதல்களைக் காரணம் காட்டி, செச்சினியா தலைநகர் குரோன்சியில் உள்ள அரச உயர் அதிகாரிகள் நெருக்கடி நிலைமை பிரகடனம் செய்ய நிலைமை மேலும் மோசமானது. அயல் மதத்தவரையும் இனத்தவரையும் பெரும்பான்மையாகக் கொண்ட அந்த தேசியப் பாதுகாப்புப் படையினருக்கும் இஸ்லாமிய மதப் போராளிகளுக்கும் இடையே கடும் சண்டைகள் வெடித்தன. இப்படியான உள்நாட்டு கலவரங்களில் செச்சினியா சிக்கித் தவிக்கும் பொழுதே, இதன் அண்டையில் உள்ள குடியரசான தாஜஸ்தான் மக்கள், ரஷ்யாவிலிருந்து விடுதலை பெறுவதற்கு உரிய கலவரங்களை ஆரம்பித்தனர். 1999 செப்டம்பர் மாதத்தில் அந்த நாட்டின் தீவிரவாதிகள் ரஷ்ய நாட்டின் உள்ளே புகுந்து மாளிகைக் கட்டடங்கள் மீது வெடிகுண்டுகளை வீசினர். தலைநகர் மொஸ்கோ உள்ளிட்ட பல நகரங்களிலும் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இப்படியான தாஜஸ்தான் போராளிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் அனைத்திற்கும் செச்சினியா விடுதலை இயக்கத்தினரே பொறுப்பாளிகள் என்னும் அபாண்டப் பழியை ரஷ்ய உளவுப் படையினர் சுமத்தினர். செச்சினியாவை மீண்டும் படையெடுத்துக் கைப்பற்றும் உள்நோக்கத்தோடு தான் அப்படி ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதாக செச்சினிய தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதை உறுதிப்படுத்துவது போல் ரஷ்யாவின் படைத் துருப்புகள் 1000 அக்டோபர் மாதம் மீண்டும் செர்சினியாவின்



படிப்பகம்

www.padippakam.com

உள்ளே புகுந்து தங்களின் தரைப்படைத் தாக்குதலைத் தொடுக்க அதனை முறியடிக்க எழுந்ததுதான் செச்சினியாவின் இரண்டாம் விடுதலைப் போர்...!

இன்றும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் செச்சினியாவின் இந்த இரண்டாம் விடுதலைப் போரில் ரஷ்யாவின வலிமை மிகுந்த படைத் துறை (இராணுவம்) கூர்மையான திட்டமிடலுடன் செச்சினியாவைத் தங்களின் மாகாணமாக ஆக்கியே தீர்வது என்னும் இலக்குடன் இறங்கி இருக்கிறது. 2000ஆம் ஆண்டு பிப்பிரவரி 5ம் திகதி; ஒரு நாளில் மட்டும் ஆல்டி என்னும் இடத்தில் அறுபது (60) செச்சினிய குடிமக்கள் ரஷ்யப் படை வீரர்களால் படுகொலை செய்யப்பட்டனர். தலைநகர் குரோன்சியையும் அதே மாதம் அவர்கள் மீண்டும் கைப்பற்றினர். அத்தகைய அட்டூழிய கொலைகளைக் கண்டு அஞ்சி நடுங்கவில்லை செச்சினியா விடுதலை இயக்கத்தினர். ஜெல்ட்சினின் முதலாளித்துவ வல்லாண்மை ஆட்சிக்குப் பாடம் கற்பிக்கும் போக்கில், 2002 அக்டோபர் மாதத்தில் மொஸ்கோ தலைநகரில் உள்ள ஒரு பெரிய திரையரங்கை துப்பாக்கி முனையில் முற்றுகையிட்டனர் செச்சினிய போராளிகள்; 130 (நூற்று முப்பது) பேர்கள் அப்போது கொல்லப்பட்டனர்.

இரண்டாம் செச்சினியா விடுதலைப் போர் நடைபெறும் பொழுதே, ரஷ்யப் பேரரசுக்கு ஆதரவான சில குரல்களும் பகிரங்கமாகவே செச்சினியாவில் எழத் தொடங்கிவிட்டன. அவர்களுடைய ஆலோசனையுடனும் ஒத்துழைப்புடனும், 2003 மார்ச்சு 23ம் திகதி செச்சினியா தனி நாடாகப் பிரிந்து விடுவதா...? அல்லது ரஷ்யக் கூட்டரசின் ஒரு குடியரசு மாகாணமாக இருப்பதா...? என்பதற்கான ஒரு பொது வாக்கெடுப்பு ரஷ்ய ஆட்சியாளர்களால் செச்சினியா முழுவதும் நடத்தப்பட்டது. இதில் விடுதலை இயக்கத்தினர் வெற்றிபெற முடியவில்லை. இஸ்லாமிய செச்சினியருக்கு எதிராக ரஷ்யாவை ஆதரிக்கும் அயல் மொழியினரும் அயல் மதத்தவரும் நிறைய எண்ணிக்கையில் கள்ள வாக்குகள் போட்டதாகவும் இதற்கு அரசு அதிகாரிகளும் ஒத்துழைப்பு வழங்கியதாகவும் செச்சினிய விடுதலை இயக்கத்தினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பொது வாக்கெடுப்பின் முடிவை ஒட்டி, செச்சினியாவின் தனியாட்சி இறையாண்மைத் தகுதி பறிக்கப்பட்டு, ரஷ்யக் கூட்டரசுக்குள் அடங்கிய ஒரு குடியரசு மாகாணம் என அது அறிவிக்கப்பட்டது. அதற்கு உரிய மண்டல அரசமைப்புச்



படிப்பகம்

சட்டத்தையும் 2003 ஏப்பிரல் 2ம் திகதி முதல் ரஷ்யாவின் கூட்டாட்சி செயல்முறைக்குக் கொண்டுவந்து அதே ஆண்டு ஒக்டோபர் 5ம் திகதி, செச்சினியா குடியரசுத் தலைவர் பதவிக்கும் சட்டப் பேரவைக்கும் பொதுத் தேர்தல் நடாத்தப்பட்டது. அந்தத் தேர்தலிலே போட்டியிடக்கூடாது என்று செச்சினியா விடுதலை இயக்கத்தினரை ரஷ்ய ஆட்சியாளர்கள் தடுத்து விட்டனர். அதனால் முந்தைய குடியரசுத் தலைவர் ஆன அசுலான் மாசுகதோவ் வேட்பாளராக நிற்க முடியவில்லை. முன்னர் செச்சினியாவின் விடுதலை இயக்கப் போராளியாக இருந்துவிட்டுப் பின்னர் ரஷ்யப் பேரரசின் ஆதரவாளர் ஆக மாறிவிட்ட அகமது கதிரோவ், தேர்தலில் போட்டியிட்டுக் குடியரசுத் தலைவர் ஆனார். இந்தத் தேர்தலையோ அகமது கதிரோவின் தெரிவையோ செச்சினிய விடுதலைப் படையினர் ஏற்றுக் கொள்ளவில்லை. தலைநகர் குரோன்சியில் உள்ள கால்பந்து விளையாட்டுத் திடலில் ஒரு விழா மேடைக்குக் கீழே வைக்கப்பட்ட கண்ணிவெடியால் 2004 மே மாதம் 9ஆம் திகதி அவர் கொல்லப்பட்டார். அவரது மறைவுக்குப் பின்னர், அவருடைய மகன் இரமசான் கதிரோவ், 2005 முதல் செச்சினியாவின் தற்காலிகத் தலைமையமைச்சர் ஆக்கப்பட்டார், பின்னர் ரஷ்ய மைய அரசினால் 2007 முதல் அவர் குடியரசுத் தலைவராக உயர்த்தப்பட்டு உள்ளார்.

ரஷ்ய கூட்டாட்சிக்குள் அடங்கிய ஒரு குடியரசு மாகாணமாக செச்சினியா ஆக்கப்பட்டு விட்ட நிலையில் அதன் தனியாட்சி விடுதலைக்காகப் போராடி வந்த அசுலான் மாசுகதோவ் 2005 மார்ச் எட்டாம் நாள், ரஷ்யப் படைத் துருப்புகளால் படுகொலை செய்யப்பட்டார். அவரைப் போன்றே அவரது ஆட்சியில் துணைத் தலைமையமைச்சராக இருந்த அகமது சகாயேவ் முதலான விடுதலை இயக்க முன்னணித் தலைவர்கள் பலரும் துப்பாக்கிக் குண்டுகளுக்கு பலியாகி மடிந்தனர். ஆனாலும் கூட செச்சினியாவின் பல பகுதிகளில், உள்ள இளைய தலைமுறையினர் உள்ளங்களில் தனிநாடு விடுதலை உணர்வு தணிந்து விடவில்லை என்பதை இன்றைக்கும் ஆங்காங்கே நடக்கும் தாக்குதல் சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன. ரஷ்யக் கூட்டாட்சிக்கு எதிராக விடுதலைக் கோரிக்கையை எழுப்புகின்ற செச்சினியா மக்கள், தாங்கவே முடியாத சித்திரவதைக் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அவர்கள் அடிப்படை உரிமைகள் எல்லாம் பறிக்கப்பட்டுச் சிறைச் சாலைகளில் அடைக்கப் படுகிறார்கள்.

அவர்களுடைய மிகக் கொடிய துன்ப வாழ்வு குறித்து அனைத்துலக மன்னிப்புச் சபை (அம்னெஸ்டி இன்டர்நேசனல்)

www.padippakam.com

2009 யூலை 1ம் திகதி விளக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டது. செச்சினியா குடிமக்கள், ஆள்கடத்தல் முதல் உடல் சித்திரவதைகள் வரை, பலவகைத் தாக்குதல்களுக்கும் ஆளாக்கப்படுகின்றனர். அவற்றிலிருந்து அவர்களை மீட்பதற்கு உரிய எந்த நிவாரண நடவடிக்கைகளையும் ரஷ்யக் கூட்டாட்சியோ செச்சினியா குடியரசு நிருவாகமோ எடுக்கவில்லை. அடிப்படை உரிமைகள் பறிக்கப்படும் செச்சினியா மக்களைப் பொறுத்து ஒரே ஒரு முடிவுக்கே எம்மால் வர முடிகிறது. செச்சினியாவில் சட்டத்தின் ஆட்சியே நடைபெறவில்லை. அதனால் மேலும் மேலும் துன்பச் சுமைகளால் நெரிக்கப்படும் பேரழிவுக்கே செச்சினிய மக்கள் தள்ளப்படுகிறார்கள் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

சென்ற இருபதாம் நூற்றாண்டில் தாய்மொழி வேட்கையின் உந்துவிசையால் பங்களாதேஸ், சோவியத் ஒன்றியத்தில் இருந்த ஜார்ஜி, உக்ரெயின் போன்ற நாடுகள் தனி இறையாண்மை கொண்ட நாடுகளாக விடுதலை பெற்றன. இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும், கிழக்கு திமோர் (இந்தோனேசியா), கொசாவா போன்ற நாடுகள் விடுதலை வெளிச்சக் கதிர்களைக் கண்டன. செச்சினியா, பாலஸ்தீனம், குர்திஸ்தான், முதலான பல நாடுகள், தொடர்ந்தும் துவளாமல் விடுதலைப் போராட்டங்களை நடாத்துகின்றன.

தாய்மொழித் தன்மானத் தூண்டுதலால் அல்லது மாற்று மொழி அடக்கு முறையால் தலைதூக்கும் விடுதலை இயக்கங்கள் சுயநல சிந்தனையற்று மக்கள் நல செயல்பாட்டுடனும் அயல் நாடுகளின் அசைவுகளை கருத்தில் கொண்டும் செயல்படுவார்களேயானால் தனியாட்சி உரிமைப் போரில் அவர்கள் வெற்றிக் கனியை பறிப்பார்கள் என்பது வரலாறுகள் எமக்கு உணர்த்தும் பாடமாகும்.

**26.08.2010, 01.07.2010**



படிப்பகம்

# மூழ்கடிக்கப்பட்ட கப்பல் மர்மமும் முற்றும் வட-தென் கொரிய முறுகலும்

எந்த நேரத்திலும் போருக்கு பீரங்கி தூக்க தயாராக இருந்த பரம்பரை எதிரிகளான வட-தென் கொரிய நாடுகள் இடையே அண்மைய கப்பல் மூழ்கடிப்பு விவகாரம் மேலும் கொதிப்பை ஏற்படுத்தி போர் ஒன்று ஏற்படுமோ என்கின்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த மார்ச் மாதம் வடகொரியாவை ஒட்டி கடற்பகுதியில் சென்று கொண்டிருந்தபோது தென்கொரிய போர்க் கப்பல் ஒன்று மர்மமான முறையில் மூழ்கியது. அந்த கப்பலில் இருந்த 46பேரும் மரணம் அடைந்தனர். மூழ்கிய கப்பலை மீட்டு தென்கொரிய ராணுவம் ஆய்வு நடத்தியதில் நீருக்குள் சென்று தாக்கும் ஏவுகணை மூலம் அந்தக் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது தெரிய வந்ததாகவும் கப்பல் மூழ்கிய இடத்தில் ஏவுகணையின் பாகம் ஒன்று கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடகொரியாதான் எங்கள் கப்பலை மூழ்கடித்தது என்று அறிவித்த தென்கொரியா, வட கொரியா மீது பல்வேறு பொருளாதார தடைகளை விதித்ததுடன் சர்வதேச அளவிலும் பொருளாதார தடைகளை விதிக்க வைக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளது. இதனையடுத்து வடகொரியா, தென்கொரியாவுக்கு கடும் மிரட்டல் விடுத்துள்ளதும், உலக நாட்டாண்மை அமெரிக்காவும் தென் கொரியாவுடன் சேர்ந்து வட கொரியாவை மிரட்ட ஆரம்பித்துள்ளதும் இன்று சர்வதேச அளவில் பரபரப்பான செய்தியாகி அந்தப் பிராந்தியத்தில் போர் ஒன்ற வெடித்து விடுமோ என்கின்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. வட கொரியாவோ எதற்கும் அஞ்சுவதாக இல்லை. இது தொடர்பாக வடகொரிய

பாதுகாப்பு கமிசன் வெளியிட்ட அறிக்கையில் தென்கொரிய கப்பல் மூழ்கியதற்கும், எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனவும் வேண்டும் என்றே எம்மீது குற்றச்சாட்டை கூறுகின்றனர் இதை காரணம் காட்டி பொருளாதார தடை போன்றவற்றை கொண்டு வர முற்பட்டால் போர் உள்பட பல்வேறு கடும் நடவடிக்கைகளில் இறங்குவோம் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த மிரட்டலையடுத்து இரு நாடுகளுக்கும் இடையேயான பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது. தென் கொரியாவுக்கு ஆதரவாக குரல் கொடுக்கும் அமெரிக்காவும் தனது விசுவாசத்தின் குரலை பலமடங்கு உயர்த்தி இந்த விவகாரத்தில் ஆழமாக கால் பதிக்கிறது. இரு கொரிய நாடுகளையும் மையமாக வைத்து அமெரிக்கா நடத்துகின்ற அரசியல் சதுரங்கம் இன்று நேற்றல்ல. பல்லாண்டுகளாகவே இந்தப் பிராந்தியத்தில் தொடர்கிறது. தற்போது இந்த விவகாரத்தினூடாக ஏகாதிபத்தியத்தின் கோர முகத்தை வெள்ளை மாளிகை வெளிப்படையாகவே காட்ட ஆரம்பித்துள்ளது. தென்கொரிய கடற்படை கப்பலை மூழ்கடித்ததற்காக அந்த நாட்டிடம் வடகொரியா உடனடியாக மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், இந்த தாக்குதலுக்கு காரணமானவர்களை தண்டிக்க வேண்டும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா எச்சரித்து இருக்கிறார். மேலும் தென்கொரியாவை மிரட்டும் போக்கை வடகொரியா கைவிடவேண்டும் என்றும் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப்போருக்கு முன்புவரை கொரிய தீபகற்பம் ஜப்பானின் கீழ் இருந்தது. அந்தப் போரில் அச்சு நாடுகளின் தோல்வி, ஹிரோசிமா நாகசாகியில் அமெரிக்க அணுகுண்டு வீச்சினால் ஏற்பட்ட அழிவு, அதிர்ச்சி, ஆகியனவற்றை அடுத்து நேச நாடான அமெரிக்காவின் ஆளுமையின் கீழ் வந்தது கொரியா. பின்னர் ரஷ்ய சமூக ஏகாதிபத்தியமும் அதற்கு உரிமை கோரியதால் ஒரு உடன்பாடு ஏற்பட்டு 38வது அட்ச ரேகையின் வடபகுதியை ரஷ்யாவும், தென்பகுதியை அமெரிக்காவும் ஆளுமைப்படுத்த அதுவே வடகொரியா, தென்கொரியா என்று தனித்தனி நாடாகியது.

அதுவரை உறவினர்களாக கொரியர்களாக இருந்தவர்களிடம் திட்டமிட்டு பகைமை வளர்க்கப்பட்டது. இதில் 1950ல் வடகொரியா தென்கொரியாமீது தொடுத்த போரும் சேர்ந்து கொள்ள வெற்றிகரமாக பலப்போட்டி, ஆயுதப்போட்டி, என்பனவும் தொடங்கியது. வடகொரியாவுடன் ஒப்பிடுகையில் பற்பல மடங்கு அதிக

www.padippakam.com

வளங்களைக்கொண்ட தென்கொரியா அமெரிக்க முதலாளித்துவ பாணியில் முன்னேறியது(!) போதிய விளை நிலமில்லாத வடகொரியாவில் விவசாயத்தில் கொண்டுவரப்பட்ட கூட்டு கம்யூன் முறையும், ரேசன் பகிர்வுத் திட்டங்களும் ஓரளவுக்கு நிலைமையை சமாளித்தாலும் போதுமான அளவுக்கு இருக்கவில்லை. இந்த நிலையில் யூரேனிய தொழில்நுட்ப ஆய்வுகளில் தடம் பதித்த வடகொரியா இவற்றில் குறிப்பிடத்தக்கமுன்னேற்றத்தையும் கண்டது தன்னுடைய கட்டுப்பாட்டில் இருந்த தென்கொரியாவிலும், தன்னுடைய மேலாதிக்கத்தை ஒரு வழியில் ஏற்றுக்கொண்ட ஜப்பானிலும் ஏவுகணைகளையும் அணு ஆயுதங்களையும் குவித்தது அமெரிக்கா. இந்த நிலையில் வடகொரியாவும் அணுஆயுத ஏவுகணை ஆராய்ச்சியில் இறங்க அணு ஆயுத பரவல் தடைச்சட்ட ஒப்பந்தம் என்கின்ற பூச்சாண்டியைக் காட்டி அமெரிக்காவும் அதன் எகாதிபத்திய கூட்டாளிகளும் வடகொரியாவை மிரட்டி வருகின்றன தன்னைத்தவிர வேறுயாரும் ராணுவ மேலாதிக்கம் பெற்றுவிடக் கூடாது என்பதில் குறியாக இருக்கும் அமெரிக்கா எந்த ஒரு நாடு ஏவுகணை தொழில்நுட்பத்தையோ, அணு ஆயுத பரிசோதனையோ நடத்தினால் கடுமையாக எதிர்ப்பதுடன் ஐநா சபை மூலம் பொருளாதாரத்தடை உட்பட பல்வேறு தடைகளை ஏற்படுத்தும்.

உலகின் வல்லரசுகள் எனப்படும் ஐந்து நாடுகளைத்தவிர ஏனைய நாடுகள் அணுத்தொழில்நுட்ப ஆய்வில் ஈடுபடுவதை தடுக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்டது தான் இந்த அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம். வடகொரியாவும் இதில் 1985ல் ஒப்பமிட்டது, தென்கொரியாவிலும் ஜப்பானிலும் அமெரிக்கா நிறுவி வைத்திருக்கும் அணு ஆயுதங்களை விலக்கிக்கொள்ளவேண்டும் என்கின்ற நிபந்தனையுடன். ஆனால் இன்று வரை உலக சட்டாம்பிள்ளை அமெரிக்கா இதை நிறைவேற்றவில்லை என்பதுடன். வடகொரியாவின் அனைத்து தொழில்நுட்பங்களையும் சோதனை செய்யவேண்டும் என நிர்ப்பந்தித்து வருகிறது. இதனால் 2003ல் அணுஆயுத பரவல் தடை ஒப்பந்தத்திலிருந்து வடகொரியா விலக அன்றிலிருந்து ஐநா சபை பொருளாதாரத்தடை உட்பட பல்வேறு தடைகளை விதித்து வருகிறது.

அதையும் மீறி தன்னுடைய அணுத்தொழில் நுட்பத்தை மேம்படுத்தி வருவதுடன் தன்னிடம் அணுஆயுதங்கள் இருக்கிறது என்று வெளிப்படையாகவும் அறிவித்து தனது செயல்திறனை மட்டுமல்ல அமெரிக்காவின் கோபத்தையும் பலமடங்கு உயர்த்திக் காட்டியது வட கொரியா. இப்படி நீறு பூத்த நெருப்பாய் இருந்த



படிப்பகம்

www.padippakam.com

பகை நிலையில்தான் தென் கொரிய கப்பல் மூழ்கடிக்கப்பட்டு அந்த விவகாரத்தை கையில் எடுத்து அமெரிக்கா களத்தில் இறங்கி இருக்கிறது.

இரண்டாம் உலகப் போர் முடிந்த அடுத்த சில ஆண்டுகளிலேயே கொரிய மண்ணில் அமெரிக்க ஏகாதிபத்தியம் குடித்த மனித உயிர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காது. முதலாளித்துவ வரலாற்றாளர்களால் மூடி மறைக்கப்பட்ட இந்த உண்மையை, தென்கொரியாவில் தோண்டத் தோண்ட வெளிவரும் படுகொலைக் குழிகளின் எலும்புக் கூடுகள் பல ஆண்டுகளுக்கு முன்னரே நிரூபித்துக் காட்டின.

இரண்டாம் உலகப் போரில் ஜப்பானிய ஏகாதிபத்தியம் தோல்வியுற்று சரணடைந்ததும், அதன் கொலனியாக இருந்த தென்கிழக்காசிய நாடுகளான, கொரியா, வியட்நாம், இந்தோனேசியா, மலேசியா, ஆகிய நாடுகளில் கம்யூனிஸ்டுகளும் நாட்டுப் பற்றாளர்களும் இணைந்து, காலனி ஆதிக்கத்துக்கு எதிரான தேச விடுதலைப் போரில் முன்னேறி, புதிய சுதந்திர அரசுகளை நிறுவி அதிகாரத்தைக் கைப்பற்றினர்.

அவற்றுக்கெதிராக ஆங்கிலேய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஆக்கிரமிப்புப் போர் தொடுத்து கம்யூனிஸ்டுகளையும் தேசப் பற்றாளர்க்லளையும் படுகொலை செய்து தமது பொம்மையாட்சிகளை நிறுவி புதிய காலனியாதிக்கத்தை நிலைநாட்டினர். கொரியாவின் தென்பகுதியில் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகள் வந்திறங்குமுன்னர், கொரியாவின் அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களும் கம்யூனிஸ்டுகளும் கூடி தேசவிடுதலை முன்னணியின் தலைவரான லியூவூன்கியாங் என்பவர் தலைமையிலான கொரிய மக்கள் குடியரசைப் பிரகடனம் செய்தனர். ஆனால், அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களோ தென்கொரியாவைக் கைப்பற்றிக் கொண்டு, தேச விடுதலை முன்னணியை ஒடுக்கி, லியூவூன்கியாங்கையும் இதர தலைவர்களையும் படுகொலை செய்து, சைங்மான் ரீ என்ற சர்வாதிகாரி தலைமையில் அமெரிக்க ஆதரவு பொம்மையாட்சியை நிறுவினர்.

ஏற்கெனவே கொரியாவின் வடபகுதியை ஜப்பானிடமிருந்து விடுதலை செய்து சுதந்திர அரசை நிறுவியிருந்த கம்யூனிஸ்டுகளும் நாட்டுப்பற்றாளர்களும், தென்பகுதியைக் கைப்பற்றிய அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போர் தொடுத்து கொரியாவை



படிப்பகம்

ஐக்கியப்படுத்த முயன்றனர். கொரிய மக்களின் நீதியான இப்போரை அன்றைய சோவியத் ரஷ்யாவும் சீனாவும் ஆதரித்து ஆயுத உதவியோடு படைகளையும் அனுப்பின. மறுபுறம் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள், கொரியாவின் தென் பகுதியில் தமது பொம்மையாட்சியை நிறுவி, வடபகுதியின் மீது போர் தொடுத்தனர். 1950 ஜூன் 25ஆம் தேதியிலிருந்து 1953 ஜூன் 27ஆம் தேதி வரை நீடித்த இப்போர், இரண்டாம் உலகப் போருக்குப் பின் நடந்த மிகக் கொடிய போர் என்று சித்தரிக்கப்படுகிறது. அதன்பிறகு, சமாதான ஒப்பந்தம் ஒன்று உருவாகி கம்யூனிஸ்டுகள் தலைமையிலான வடகொரியா, அமெரிக்கக் கைக்கூலிகளின் தலைமையிலான தென்கொரியா என கொரிய நாடு பிளவுபட்டது.

மூன்றாண்டுகளுக்கு நீடித்த கொரியாவின் தேச விடுதலைப் போரின் போது, அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் கட்டவிழ்த்துவிட்ட பயங்கரவாதமும் படுகொலைகளும் பாசிச கிட்லருக்கே பாடம் சொல்லித் தருவதாக இருந்தன. அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் வடகொரியாவின் மீது போர் தொடுத்து பேரழிவுகளை நடத்தியதோடு மட்டும் நின்றுவிடவில்லை. தமது பொம்மையாட்சியின் கீழுள்ள தென்கொரியாவில் கம்யூனிஸ்டுகளையும் நாட்டுப்பற்றாளர்களையும் தொழிற்சங்க விவசாய இயக்கத்தினரையும் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்தனர்.

சர்வாதிகாரி சைங்மான் ரீ தலைமையிலான அமெரிக்க பொம்மையாட்சி, கம்யூனிசத்தை ஆதரித்த 3 இலட்சம் விவசாயிகளை சுட்டுக் கொன்று பிணங்களை பாரிய குழிகளிலும் பயனற்ற பல பழைய சுரங்கங்களிலும் போட்டு மூடிப் புதைத்தது.

இலட்சக்கணக்கான கொரிய மக்களின் இந்தப் பயங்கர இனப்படுகொலை செய்திகள் அமெரிக்காவிலேயே கசிய ஆரம்பிக்க, இது கம்யூனிஸ்டுகளின் அவதூறு பிரச்சாரம் என்று அமெரிக்கா அன்று பூசி மெழுகியது. மறுபுறம், வடகொரியாவும் சீனாவும் தான் அப்பாவி கொரிய மக்களைக் கொன்றதாக இன்று வரை பொய்ப் பிரச்சாரத்தை நடத்தி வருகிறது.

கடும் வேதனையைச் சுமந்து கொண்டு காலங்கள் உருண்டோடின. 2002ஆம் ஆண்டில் தென்கொரியாவில் வீசிய கடும் புயல் பெருமழையால், பல்லாயிரக்கணக்கானோரைக் கொன்று புதைத்த மிகப் பெரிய மரணக் குழி ஒன்றிலிருந்து எலும்புக் கூடுகள் வெளியே

www.padippakam.com

தெரியத் தொடங்கிய பின்னரே, அமெரிக்காவின் இனப்படுகொலை பற்றிய உண்மைகள் அப்பட்டமாக வெளியே வந்தன.

இந்நிலையில் தற்போது மீண்டும் வட கொரியா நோக்கி தனது மிருக பலத்தை காட்ட முனைந்திருக்கிறது அமெரிக்கா. அதற்கு பதிலடி கொடுக்க தயாராகவே இருக்கிறது வட கொரியா எனச் சொல்லப்படுகிறது. 40 வருடங்களின் பின்னர் தென் கொரிய மரணக் குழிகளில் புதைக்கப்பட்ட அமெரிக்க அராஜக உண்மைகளை 2002-இல் வெளிவந்து உலகத்தையே அதிர வைத்தன.

மீண்டும் தற்போது அதன் கோரமுகம் வெளியே தலை தூக்கத் தொடங்கி உள்ளது. இது நிறைவேறுமா...? கொரிய நாடுகளிடையே மீண்டும் போர் மூழுமா...?

கப்பல் மூழ்கடிப்பின் மர்மங்கள் வெளிவருமா...?

**31.05.2010**



படிப்பகம்

www.padippakam.com

# பழமை வாதம் + தாராள ஜனநாயகம் = பிரித்தானிய புதிய அரசு

உலக அளவில் சுதந்திரத்தின் எல்லைக்கு மிகப் பெரிய பரப்பளவைக் கொண்ட இங்கிலாந்து தேசத்தில் 70 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கூட்டணி ஆட்சி கூடு கட்டத் தொடங்கி உள்ளது. கூட்டணியில் அங்கம் வகிக்கும் இரு கட்சிகளும் பல்வேறு முரண்பாடான கொள்கைகளைக் கொண்டவை என்பதும் முக்கிய பல தமது கொள்கை ரீதியான விட்டுக் கொடுப்புக்களுடனேயே அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளதும் அனைவருக்கும் தெரிந்ததே. இந்நிலையில் இரு கட்சிகளும் சேர்ந்து அமைத்துள்ள புதிய அரசாங்கம் திறம்பட நடாத்தி முடிக்கப்படுமா...? இல்லை பாதி வழியிலேயே பயணம் முடிந்து விடுமா...? என்கின்ற கேள்வி எழுவது நியாயமானதே.

பாராளுமன்ற அமைப்பின் தாயகம் எனக் கருதப்படும் இங்கிலாந்தின் பாராளுமன்றம் தற்கால அனைத்து வடிவிலான பாராளுமன்றங்களின் வழிகாட்டி எனப் போற்றப்படுகிறது. எழுதப்படாத அதன் அரசியலமைப்பு, மக்களாட்சியின் அடிப்படை ஆவணமாகக் கருதப்படுகிறது.

இங்கிலாந்து மக்கள், அரசியல் அதன் பின்னணிகள் அவற்றினூடான பிரச்சினைகள் என்பன பற்றியெல்லாம் தெளிவான கருத்தும், ஒற்றுமைப் பண்பும் கொண்டவர்கள். தாம் விரும்பும் அரசியல் தலைவர்களிடம் நன்மதிப்பையும் வைத்திருப்பவர்கள். ஏனைய ஐரோப்பிய நாட்டு மக்களை விட அரசியல் விழிப்புணர்வு



படிப்பகம்

www.padippakam.com

அதிகம் உடைய இங்கிலாந்து மக்கள் மத்தியில் மரபுகளை மீறுகின்ற அரசியல் தலைவர்கள் வெறுப்புக்கு ஆளாகியுள்ளனர்.

இங்கிலாந்து மக்கள் மட்டுமல்ல பல மாற்று சிந்தனைகளை கொண்டவர்கள் உட்பட்ட அனைத்து அரசியல் தலைவர்களும் மரபுகளை மதித்தே நடந்து வருகின்றனர். சட்டம் எனும் வெறும் எலும்புக்கூட்டிற்கு, அழகூட்டும் சதையாக மரபுகள் அமைந்துள்ளன என்ற ஜென்னிங்ஸனின் கூற்றுக்கு ஏற்பவே பிரித்தானிய மக்களில் பெரும் விகிதத்தினர் இன்றும் வாழ்கினர். பழமை விரும்பிகளான இந்த மக்கள் பாரம்பரிய மன்னர் முறைமை தொடர்ந்து இருப்பதை விரும்புகின்றனர். அரசி தமக்கு பாதுகாப்பு அளிப்பார் என்பதை கூடுதலான மக்கள் இன்றும் நம்புகின்றனர். அரண்மனையில் அரசி இருக்கிறார் என்ற எண்ணத்தில் மக்கள் நிம்மதியாக தங்கள் வீடுகளில் தூங்குகின்றனர் என்று கூறுவார்கள். இத்தகைய பல்வேறு நடைமுறைகள் மற்றும் மக்களின் நம்பிக்கையின் காரணமாகவே அரண்மனைச் சட்ட நடைமுறைகளும் அதனூடான அரசப் பதவிகளும் வடிவமைக்கப்பட்டு தொடர்ந்து பேணப்பட்டு வருகிறது.

இங்கிலாந்து தேசத்தின் அண்மைய தேர்தல் களம் இந்த முறை மும்முனைப் போட்டியை சந்தித்து, பல்வேறு பின்னணிகளுடன் தேர்தல் நடந்தேறியது. 1930களுக்குப் பின்னால் உலகம் சந்தித்திருக்கும் மிகப் பெரிய பொருளாதாரப் பின்னடைவு இங்கிலாந்தையும் அதிக அளவில் பாதித்த்துள்ளது. அதனுடைய வெளிப்பாடும் தேர்தல் களத்தில் தெளிவாகவே எதிரொலித்தது. அடுத்து இங்கிலாந்துப் பாரளுமன்ற அரசியல் சரித்திரத்தில் கண்டிராத அளவில் அரசியல்வாதிகள் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை நிலைகுலைந்து போகுமளவிற்கு பாரளுமன்ற உறுப்பினர்களின் செலவுகள் குறித்து வெளியாகிய செய்திகள் சர்ச்சையைக் கிளப்பி இருந்தன. முதன்முறையாக இங்கிலாந்துப் பாரளுமன்றச் சரித்திரத்தில் போட்டியிடும் முக்கிய மூன்று கட்சித் தலைவர்களுக்கிடையில் தொலைக்காட்சியில் பொது விவாதம் நடத்தப்பட்டதும் மற்றுமொரு காரணியாக அமைந்திருந்தது.

வங்கிகளின் கட்டுப்பாடற்ற வியாபார முறைகளினால் பொருளாதர முன்னணி நாடுகளான அமெரிக்கா, ஜேர்மனி, ஜப்பான், இங்கிலாந்து உட்பட்ட பல நாடுகளின் முக்கிய வங்கிகள் அதளபாதளத்துக்கு தள்ளப்பட்டன. நாட்டின் முக்கிய வங்கிகளில் சேமிப்புக் கணக்குகளை வைத்திருக்கும் சாமான்ய சராசரி



படிப்பகம்

பிரஜைகளின் கடும் உழைப்பை இழக்கும் அபாயத்திற்கு அவர்கள் தள்ளப்பட்டார்கள். பங்குச் சந்தைகள் படுவீழ்ச்சியடைந்தன. இதுவரை இத்தகைய ஒரு பொருளாதரா நெருக்கடியை இத்தகைய முனையில் சந்தித்திராத அந்நாட்டு அரசாங்கங்ளும் அவைகளின் தலைவர்களும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை துணிந்து எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அண்டை மற்றும் நட்பு நாடுகளின் மேற்கூறிய தாக்கங்களினால் வீழ்ச்சியடைந்திருந்த கோர்டன் பிரவுணின் முன்னைய அரசாங்கம் மற்றொரு பெரிய தாக்குதலுக்கும் உள்ளானது.

இங்கிலாந்து தினசரி நாளேடுகளில் ஒன்றான டெய்லி டெலிகிராப் பத்திரிகை இங்கிலாந்து அரசியல் வானில் ஒரு பேரிடியைத் தூக்கிப் போட்டது. பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது சலுகைகளின் வழி அரசாங்கத்திலிருந்து எவ்வகையான செலவுகளுக்கு எவ்வளவு பணத்தை கோருகிறார்கள், பெறுகின்றார்கள் என்னும் விபரங்கள் அடங்கிய ஒலி நாடா ஒன்று இப்பத்திரிகையின் கைகளில் கிடைக்க, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடியாக முக்கிய அரசியல் கட்சிகளைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் வண்டவாளங்களை அப்பத்திரிக்கை வெளிக்கொணரத் தொடங்கியது. அனைத்து ஊடகங்களும் இந்தத் தகவல்களை இறுக்கிப் பிடிக்க பிரித்தானிய அரசியலிலும் அரசியல்வாதிகளும் தீண்டத்தகாதவர்கள் போன்றதொரு நிலை ஏற்பட்டது. பொருளாதார வீழ்ச்சியினால் தமது அன்றாட வாழ்க்கைச் செலவுகளுக்கே தத்தளிக்கும் மக்களுக்கு, பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது சொகுசு வாழ்க்கைக்காக அரசாங்கத்திலிருந்து தாம் வரியின் மூலம் செலுத்தும் பணத்தை பெற்றுக்கொள்வது, அதைக் கையாடல் செய்வததற்கு சமனாகக் கருதப்பட்டது. அதிகாரத்திலிருந்த தொழிற்கட்சிக்கும், பிரதமர் கோர்டன் பிரவுணுக்குமே இதனால் அதிக அளவில் பாதிப்பு உண்டாகியது.

இதுவரை நடந்த தேர்தல்களில் எப்போதும் மூன்றாவது நிலைக்குத் தள்ளப்படும் சுதந்திர ஜனநாயகக் கட்சியும் (லிபரல் டெமகிரட்ஸ்) அதன் தலைவர் நிக் கிளார்க்கும் இச்சந்தர்ப்பத்தை மிகவும் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார்கள் தலைவர்களுக் கிடையிலான முதலாவது சுற்று விவாதம் முடிந்ததும் சமீபகால இங்கிலாந்து அரசியல் கண்டிராத ஒரு புதிய திருப்பம் உண்டாகியது. அரசியல்வாதிகளில் மிகவும் வெறுப்படைந்திருந்த இங்கிலாந்து மக்களில் பலருக்கு இவ்விவாதத்தில் நிக் கிளார்க் ஈடுபட்ட விதமும், அவர் தனது கட்சியின் கொள்கைகளை முன்வைத்த விதமும்

ஒரு புதுவிதத் தெம்பைக் கொடுக்க, கருத்துக் கணிப்புக்களில் கொன்சர்வேட்டிவ் கட்சிக்கு நிகராக போட்டிபோடும் அளவிற்கு லிபரல் டெமகிராட்ஸ் கட்சிக்கும் அதன் தலைவர் நிக் கிளார்க்குக்கும் ஆதரவு வலுத்தது. விளைவு இதுவரை ஆட்சியிலிருந்த தொழிற்கட்சி பின் நிலைக்குத் தள்ளப்பட்டது.

இவை அனைத்தினதும் பிரதிபலிப்பே மே 6-ஆம் தேதி பிரிட்டனில் நடைபெற்ற தேர்தலில் எந்த கட்சிக்கும் பெருபான்மை கிடைக்காமல் கூட்டணி ஆட்சி என்கின்ற நிலை ஏற்படுத்தப்பட்டது. 306 இடங்களை பெற்ற கொன்சர்வேடிவ் கட்சித் தலைவர் டேவிட் கமரூன் பிரதமராக பதவி ஏற்றுக் கொள்ள 57 இடங்களை பெற்ற லிபரல் டெமக்ரடிக் கட்சியின் தலைவர் நிக் கிளெக் துணைப் பிரதமராகியுள்ளார். 258 இடங்களுடன் இரண்டாம் இடம் பெற்ற தொழிலாளர் கட்சி தலைவரும் முன்னாள் பிரதமருமான கோர்டன் பிரௌன் மகாராணியிடம் தனது ராஜிநாமா கடிதத்தை அளித்து பிரிட்டனின் பாரம்பரிய முறையுடன் விடை பெற்றார்

இரண்டாம் எலிசபெத் ராணியார், கொன்சர்வேடிவ் கட்சித் தலைவர் கமரூனுக்கு ஆட்சியமைக்க அழைப்பு விடுக்க பலநாட்கள் பல சுற்றுக்கள் பேச்சுவார்தையின் பின்னரான உடன்பாட்டுடன் தமக்கு ஆதரவு தரும் லிபரல் டெமக்ரடிக் கட்சியின் துணையுடன் அவர் பிரதமராக பதவி ஏற்றுக் கொண்டார். லிபரல் டெமக்ரடிக் கட்சியின் மேலும் 4 உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவி வழங்கப் பட்டுள்ளது. மிக இளம் வயதில் பிரிட்டிஸ் பிரதமராகப் பொறுப்பேற்கும் இரண்டாமவர் என்ற பெருமையும் கமரூனுக்கு கிடைத்துள்ளது. இதற்கு முன்பு லோர்ட் லிவர்பூல் தனது 42-வது வய்தில் பிரதமரானார். ஓரளவுக்கு ஒத்த சிந்தனையுடைய லிபரல் டெமாக்ரடிக் கட்சியுடன் கூட்டணி அரசு அமைப்பது தொடர்பாக தொழிலாளர் கட்சி நடாத்திய பேச்சுக்களில் இணக்கம் காணப்படாமல் போனது கவனிக்கப்பட வேண்டியது. 13 ஆண்டுகளாக பதவியில் இருந்த தொழிலாளர் கட்சியின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.

ஆட்சி அமைத்துள்ள மாற்று கருத்துகள் கொண்ட இரு கட்சிகளும் மேற்கொண்ட விட்டுக் கொடுப்புக்களில் பிரிட்டனுள் வாழும் வாழ விரும்பும் வெளிநாட்டவர் தொடர்பான கொள்கையின் தளர்வை மூத்த பங்காளியும் பிரித்தானியாவின் தோதல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்கின்ற கட்சியின் நீண்ட

www.padippakam.com

நாள் கோரிக்கையை இளைய பங்காளியும் மேற் கொண்டமை முக்கியமானது.

இரண்டாம் உலகப் போர்காலத்தில் வின்ஸ்டன் சர்ச்சில் பிரிட்டன் பிரதமராக இருந்தபோது உலகப் போரை முன்னிட்டு கூட்டணி ஆட்சி நடைபெற்ற பின்னர் தற்போதுதான் பிரிட்டனில் கூட்டணி ஆட்சி ஏற்பட்டுள்ளது. இங்கிலாந்து மக்களின் அரசியல் கலாச்சாரம் பழமைவாதம் ஆகும். இக்கொள்கையின் காரணமாக அரசியலில் தீவிர திடீர் மாற்றங்களை மக்கள் எப்பொழுதும் விரும்புவதில்லை. அரசியல் மாற்றங்கள் அரசியல் நிறுவனங்களுக்கும் மக்களுக்கும் எவ்வித சீர்குலைவையும் ஏற்படுத்தாத முறையில் நிகழ வேண்டும் என்பதே மக்களின் விருப்பம்.

நீண்ட நாட்கள் நடத்தப்படும் உள்நாட்டுப் போருக்குப் பிறகு தான் நாடுகளினுள் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சில சம்பவங்களில் இரத்தம் சிந்தல் உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன. ஆனால் இங்கிலாந்தில் அவை ஒரு சிம்மாசன உரையின் மூலம் அறிவிக்கப்படுகின்றன. .

இன்று இருக்கும் இச்சூழலில்தான் 70 ஆண்டுகளுக்குப் பிறகு மாற்று கருத்துகள் கொண்ட இரு கட்சிகளும் கூட்டணி ஆட்சியில் கை கோர்த்து நிற்கின்றன. இந்த ஆட்சி இங்கிலாந்து தேசத்தை என்ன செய்யப் போகிறது...? இதனைத்தான் உலகத்தின் அனைத்து நாடுகளின் கண்களும் இன்று உன்னிப்பாக கவனிக்க ஆரம்பித்துள்ளன. முடிவுரையா...? முகவுரையா...? காலத்தின் கைகளில் மட்டுமே...!

**17.05.2010**



படிப்பகம்

www.padippakam.com

# சூதாட்டத் தளமாகும் இந்திய கிரிக்கெட் ஆடுகளம்...

கௌரவ மிக்க விளையாட்டாகக் கருதப்பட்டு வந்த கிரிக்கெட் விளையாட்டு இன்று சூதாட்டக் களமாகவும் ஊழலின் ஒட்டு மொத்த கூடாரமாகவும் மாறிவிட்டது. இந்தியாவில் பணக்காரர்களின் கருப்பு பண விளையாட்டுக்கு கிரிக்கெட் ஒரு புதிய ஆடுகளமாகவும், நிழல் உலக கும்பலின் மிகப் பெரிய வருமானத்துக்கான ஓர் அதிநவீனச் சாதனமாகவும் பரிணாமம் அடைந்திருக்கும் கிரிக்கெட் விளையாட்டை இந்தியாவின் ஒவ்வொரு ரசிகனும் வேதனையுடன் நோக்குகின்றான்.

அண்மையில் நடந்து முடிந்த ஐ.பி.எல். போட்டி முடிவும், அதில் இந்திய மத்திய அமைச்சர் சசி தரூர். மற்றும் , கிரிக்கெட் அணிகளை கொள்முதல் செய்த வியாபாரிகள் நடத்திய வணிகச் சித்து விளையாட்டுகளைக் கண்டு வேதனை அடையாதவர்கள் யாரும் இருக்க முடியாது. கோடிக்கணக்கான ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் கிரிக்கெட் விளையாட்டும், கிரிக்கெட் மைதானமும் ஒரு சூதாட்ட பூமியாக மாறிவிட்ட கொடுமை என்று சொல்லாமல் எப்படி வர்ணிப்பது...? விளையாட்டு மைதானங்களில் வீரர்களின் திறமைகளால் நிரூபிக்கப்பட வேண்டிய வெற்றி, தோல்விகள், அதில் முதலீடு செய்த பணக்கார முதலைகளால் எங்கோ ஒரு மறைவிடத்தில் தீர்மானிக்கப்படுவதாக மாறி இருப்பதுதான் கொடுமையிலும் கொடுமை. கனவு நாயகனாகவும், முன் உதாரணமாகவும் ரசிகர்களால் போற்றப்படுகிற கிரிக்கெட் வீரர்கள் பணத்துக்காக சோரம் போகும் சோகத்திற்கு உள்ளாகி விட்டது கிரிக்கெட்.



படிப்பகம்

கிரிக்கெட் அணிகளை விலை கொடுத்து வாங்கும் நடிகர் நடிகையர் பல கோடிக்கணக்கான பணத்தை சர்வ சாதாரணமாக முதலீடு செய்கிறார்கள் என்றால் இந்தச் சூதாட்டத்தின் வளம் நன்கே புரியும். அதேபோல் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளை ஒளிபரப்பும் தொலைக் காட்சி நிறுவனங்கள் குவிக்கும் கோடிகளும் கொஞ்சம் நஞ்சமல்ல. கிரிக்கெட் எனும் வட்டம் முழுவதுமே குறிப்பாக ஐபிஎல் போட்டிகள் பணத்தை உருவாக்கும் ஒரு சூதாட்டத் தொழிற்சாலையாகவே மாறிப் போய்விட்டது. சாதாராண குடிமகனுக்கு உற்சாகமான பொழுது போக்கு. ஆனால், இதில் முதலீடு செய்த கருப்புப் பண மன்னர்களுக்கோ இது ஒரு பண வேட்டைக் களம்.

11 முட்டாள்கள் விளையாடும் விளையாட்டை 11 ஆயிரம் முட்டாள்கள் பார்க்கிறார்கள் என்று ஜோர்ஜ் பெர்னார்ட்ஷா கூறினார். இன்று கிரிக்கெட் என்பது 11 அதிபுத்திசாலிகள் விளையாடுவதை கோடிக்கணக்கான முட்டாள்கள் பார்க்கும் விளையாட்டு என்று எண்ணும் அளவுக்கு நிலைமை வந்துவிட்டது. ஒரு கௌரவமான விளையாட்டு இன்று சூதாடிகளின் கைகளுக்குள் சென்றுவிட்டதைப் பார்த்துக்கொண்டு விளையாட்டை ரசிப்பதைத் தவிர கிரிக்கெட் ரசிகர்களுக்கு வேறுவழியில்லை. உலகளவில் அதிகமான மக்களால் ரசிக்கப்படும் விளையாடப்படும், கால்பந்தாட்டத்தில், இந்தியா இன்று வரை உலககோப்பைப் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதிச் சுற்றுக்கு கூட தகுதி பெற்றதில்லை. அதேபோல் ஒலிம்பிக் மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சின்னஞ் சிறு நாடுகளெல்லாம் பதக்கங்களை வாரிக் குவித்து பெருமை சேர்த்துக் கொண்டிருக்க இந்தியா மட்டும் மிகமிகப் பின்னிலையில் உள்ளது என்பதும் பரிதாபம். ஒரு கால கட்டத்தில் கொடிகட்டிப் பறந்த இந்தியாவின் தேசிய விளையாட்டு ஹாக்கி , இன்றைக்கு, இருக்கும் இடம் தெரியாமல் போய்விட்டது. இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் பெரும்பாலான மக்களால் கொண்டாடப்படும் விளையாட்டான கிரிக்கெட் மீதான மோகமும், அதனுடைய வளர்ச்சியும்தான் மற்ற எந்த விளையாட்டும் அங்கே எழுச்சி பெறாமல் போனதற்கான காரணம்.

இந்தியத் துணைக் கண்டம் பிரிட்டனின் ஆதிக்கத்திற்கு ஆட்பட்டிருந்த போது அந்த நாட்டுபிரபுக்களின் பொழுது போக்கிற்காக உருவாக்கப்பட்டதுதான் கிரிக்கெட் என்று சொல்லப்படுகிறது. இந்திய மண்ணிற்கும் மக்களுக்கும் தொடர்பில்லாத இறக்குமதிசெய்யப்பட்ட இந்த விளையாட்டு

ஒட்டு மொத்த சமுதாயத்தையும் சீரழித்துக் கொண்டிருக்கிறது. இங்கிலாந்தின் காலனி ஆதிக்கத்திற்கு ஆட்பட்டநாடுகளில் மட்டும்தான் இந்த கிரிக்கெட் எனப்படும் மட்டைபந்து விளையாட்டு அதிகப்படியாக ரசிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில்தான் கிரிக்கெட் பித்தர்கள் அதிகமாக இருக்கிறார்கள். கிரிக்கெட் பற்றி பேசினால் அதைப்பற்றி தெரிந்து வைத்திருந்தால் போட்டிகளுக்கு சென்றால் பெரு மேதாவித்தனம் என்கிற போக்கும் வேர்விட்டுள்ளது.

கிரிக்கெட் மூலமாக விளம்பரப்படுத்துவதன் மூலம், இந்தியாவில் தமது பொருட்களை விற்று பலகோடிகளை சம்பாதிக்க முடியும் என்பதைப் புரிந்து கொண்ட பல பன்னாட்டுநிறுவனங்கள் இந்த விளையாட்டிற்கு ஆதரவு என்ற பெயரில் பணத்தை வாரியிறைக்கின்றன. பல்லாயிரம் கோடிகளை சொத்தாகக் கொண்ட இந்திய கிரிக்கெட் வாரியத்தால் உருவாக்கப்பட்ட ஐபிஎல் முழுக்க முழுக்க வரி ஏய்ப்புக் கொண்ட பண முதலைகளை உள்ளடக்கியதாகவே இருக்கிறது.

முகேஸ் அம்பானி, விஜய் மல்லையா, இந்தியா சிமெண்ட் சீனிவாசன் போன்ற தொழிலதிபர்களும், சாருக்கான், பிரித்தி ஜிந்தா, சில்பா ஷெட்டி போன்ற மும்பை திரைப்பட நட்சத்திரங்கள் என்று அந்த எண்ணிக்கை கூடிக் கொண்டே இருக்கிறது. கடந்த 2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ருவன்றி ருவன்றி என்கின்ற பெயரில் இருபது ஓவர் மட்டைபந்துப் போட்டிகள் தற்பொழுது மூன்றாவது ஆண்டாக போட்டிகளை நடத்திய நிலையில் இந்த விளையாட்டிற்கான சூதாட்டம் 5ஆயிரம் கோடிகளைக் கடந்து சென்றுள்ளது. ஏற்கனவே கிரிக்கெட் போட்டியில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் விளையாடியபோது ஆரம்பித்த சூதாட்டம் இன்று 100 கோடிகளையும் தாண்டி களைகட்டி நிற்கின்றது. இதில் பினாமிகள் பெயரில் அரசியல் வாதிகளும் கோலோச்சுகின்றார்கள். ஆட்டத்துக்கு பெருவாரியான ரசிகர்கள், இருக்கிறார்கள் என்கின்ற ஒன்றை மட்டுமே முதலீடாக வைத்து எந்த உழைப்பும் இல்லாமலேயே ஒரு கூட்டம் மிக எளிதாக, பல ஆயிரம் கோடி ரூபாயை சம்பாதிக்கும் என்றால் அதை இந்திய அரசு கண்டும் காணததுபோல இருக்கிறது என்றால் இதன் பின்னணி என்ன?

ஏழைகள் நிறைந்த பணக்கார நாடு என இந்தியாவைக் குறிப்பிடுவதுண்டு. இந்தக் கூற்றை ஐபிஎல் ஏலம் மூலம் நிரூபித்துக் கொண்டிருக்கிறது இந்திய கிரிக்கெட். அதேவேளை இந்தியாவின் தேசிய விளையாட்டான ஹாக்கி அணியின் நிலையைப்

பார்க்கும்போது வேதனையே ஏற்படுகிறது? அண்மையில் சம்பள பாக்கி, சிறப்பாக விளையாடியதற்கான ஊக்கத்தொகை உள்பட தலா நான்கரை லட்சம் ரூபாயை தரக் கோரி இந்திய ஹாக்கி அணியில் இடம்பெற்றுள்ள22 பேரும் போராட்டம் நடத்தும் சூழலுக்குத் தள்ளப்பட்டனர். மொத்தமே 1 கோடி ரூபாய்தான். அதுகூட கைவசம் இல்லாமல் இந்திய ஹாக்கி சங்கம். தவித்து நின்ற போது அதன் ஆதரவு நிறுவனமான சகாரா நிறுவனம் வழங்கிய நிதியை வைத்து பிரச்சினை சமாளிக்கப்பட்டது. தேசிய விளையாட்டுக்கு ஏற்பட்ட தேசிய அவமானம் இது.

ஆனால், கிரிக்கெட்டைப் பொறுத்தவரை 50 லட்சம், 25 லட்சம், 15 லட்சம் என வீரர்கள் ஒப்பந்தம் பேசப்படுகின்றனர். கோடிக் கணக்கில் பணம் புரளும் ஐபிஎல் விளையாட்டின் மூலம் சூதாடிகள் கோடிகளை அள்ளிச் செல்கின்றனர். இந்தியாவில் மற்ற விளையாட்டுகள் வறட்சியில் வாடும்போது கிரிக்கெட்டுக்கு மட்டும் ஏன் இந்தப் பணமழை. சூதாட்டத்தின் பிடியிலிருந்து கிரிக்கெட்டை மீட்கப் போவது யார்...?

விரக்தி அடையும் ரசிகன் தனது தேசிய விளையாட்டு உட்பட கிராமிய பண்பாட்டு விளையாட்டுக்களை நோக்கி செல்வானா...?

**03.05.2010**

www.padippakam.com

# பிரபாகரன் தாயார் விவகாரம் அவமானப்பட்டு நிற்கும் இந்திய நிர்வாகம்

இந்திய அரசநிர்வாகத்தை வெட்கித் தலைகுனிய வைத்துள்ள மற்றொரு சம்பவம் இந்திய மண்ணில், அதுவும் தமிழ்நாட்டின் தலைநகரில் நிகழ்ந்துள்ளது. அதிகம் பேசவும், நடக்கவும் இயலாத நிலையில் இருக்கும் 81வயது நிரம்பிய பிரபாகரனின் தாயாரான பார்வதியம்மாள 6 மாத கால மருத்துவ விசா பெற்றுக்கொண்டு சென்னை விமான நிலையம் வந்து சேர்ந்தபோது நள்ளிரவு நேரத்தில் விமானத்தில் வைத்தே திருப்பி அனுப்பப்பட்ட சம்பவமானது இந்திய நிர்வாக நடைமுறையின் மற்றொரு கரும்புள்ளி ஆகியுள்ளது.

வந்திறங்கிய விமானத்திலேயே பார்வதி அம்மையாரை அமர வைத்து, உங்களுக்கு எமது தூதரகம் தவறாக விசா வழங்கி விட்டது, நாங்கள் உங்களை இந்தியாவிற்குள் அனுமதிக்க முடியாது' என்று கூறி, அவரை அதே விமானத்தில் மீண்டும் மலேசியாவுக்கு திருப்பி அனுப்பினர் - உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று மார் தட்டிக் கொள்ளும் இந்தியாவின் குடிநுழைவுத் துறை அதிகாரிகள்...! இதனை ஒட்டி அடுத்தடுத்து அரங்கேறி வரும் அரசியல் பின்னணியை ஆழமாக நோக்கினால் தமிழ்நாட்டின் அரசியல் சாக்கடை மூச்சடைக்க வைக்கும். திருப்பி அனுப்பப்பட்ட நிகழ்வின்மூலம் 81 வயதான பார்வதியம்மாள் உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் எவ்வளவு பாதிக்கப்படிருப்பார் என்பதனையோ இதன் மூலம் அவர் அடைந்திருக்கும் மனஉளைச்சலைப் பற்றியோ யாரும் எண்ணியதாக தெரியவில்லை.



படிப்பகம்

நடைபெற்றுக்கொண்டிருக்கும் தமிழக சட்டப் பேரவை கூட்டத்தொடரில் இப்பிரச்சினை பெரிய அளவில் கிளப்பப்பட்டு கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தில் பேசிய பல உறுப்பினர்கள் (காங்கிரஸ் கட்சியின் சட்டப் பேரவைத் தலைவர் சுதர்சனம் தவிர) பார்வதி அம்மாள் திரும்ப அனுப்பப்பட்டதைக் கண்டித்ததோடு மட்டுமின்றி, அவருக்கு மீண்டும் அழைப்பு விடுத்து தமிழகத்தில் மருத்துவ சிகிச்சைப் பெற அனுமதிக்க வேண்டும் என்று பேசியுள்ளனர் இந்த விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய முதலமைச்சர் கருணாநிதி அளித்த விளக்கம் வேடிக்கை நிறைந்த கேலியாக அமைந்துள்ளது.

இரவு 12 மணிக்கு விமான நிலையத்திலே இந்தச் சம்பவம் நடப்பதாக எனக்குச் செய்தி கிடைக்கிறது. நான் விமான நிலையத்திற்குத் தொடர்பு கொள்கிறேன், அந்த அம்மாள் திருப்பி அனுப்பப்பட்டு விட்டார்கள் என்று செய்தி மட்டுமே எனக்குக் கிடைக்கிறது. அந்தச் செய்தி கூட முறையாக உரிய வகையில் எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. தமிழக அரசில் யாருக்கும் தெரிவிக்கப்படாமல் பார்வதியம்மாள் திரும்ப அனுப்பப்பட்டு விட்டார்கள். இதுதான் தமிழகத்தின் அனைத்து அதிகாரங்களையும் கொண்டுள்ள முதல் மனிதரின் விளக்கம். இந்தியாவில் சிகிச்சை பெறுவது தொடர்பாக மத்திய அரசுடன் பார்வதி அம்மையார் சார்பாக கடிதப் போக்குவரத்து இருந்துள்ளது என்றும், ஆனால் அது மாநில அரசுக்குத் தெரியாது என்றும் முதல்வர் கூறியுள்ளார். இந்திய மத்திய உள்துறை அமைச்சகத்திற்குத் தெரியாமல், குடியேற்றத்துறை அறிந்திராத நிலையில் பார்வதி அம்மையாருக்கு மலேசியாவில் விசா வழங்கப்படவில்லை என்பதும் மத்திய உள்துறை அமைச்சகம் சம்மதமளித்த பின்னரே அவரது விசா வழங்கப்பட்டிருக்கிறது என்பதும் கருணாநிதியின் சட்டசபை உரையிலிருந்து மட்டுமல்ல வழமையான இலங்கையருக்கான இந்திய விசா வழங்கும் நடைமுறைகளிலிருந்தும் புலனாகும்.

மதிமுக பொதுச் செயலர் வைகோ, பழ. நெடுமாறன் உள்ளிட்ட தமிழ் உணர்வாளர்கள் எனப்படுவோர் பலரும்தமது தொண்டர்களுடன் பார்வதி அம்மாளை வரவேற்பதற்காக சென்னை விமான நிலையத்தில் விமானம் தரையிறங்குவதற்கு முன்னதாகவே கூடிவிட்டனர். அவர்கள் அங்கு செல்வதற்கு முன்னதாகவே விமான நிலையத்தில் குவிக்கப்பட்டிருந்த தமிழக காவல்துறையினரால் தொண்டர்கள் சகிதம் அங்கே வந்த வைகோவும் நெடுமாறனும் தடுத்து நிறுத்தப்பட்டடு அவர்களுக்கும் காவல்துறையினருக்கும்

www.padippakam.com

இடையில் பெரும் வாக்குவாதம் இடம் பெற்றுள்ளது. இது எதுவுமே சென்னையில் இருந்த மாநில முதலமைச்சருக்குத் தெரியவே தெரியாதாம். இதனை எல்லாம் அனைவரும் நம்பிவிட்டார்களாம்.

இது அனைத்தையும்விட திமுகவின் முரசொலி ஏட்டில் குத்தீட்டியார் பதில்கள் என்ற பகுதியில் ஒரு மிகப் பெரிய கண்டுபிடிப்பு பிரசுரமாகியிருந்தது. அதாவது, வைகோவும், நெடுமாறனும் தமது தொண்டர்களுடன் அங்கு கூடி கோசம் போடாமல் இருந்திருந்தால் மத்திய அரச அதிகாரிகள் அவரை திருப்பி அனுப்பி இருக்க மாட்டார்களாம். பார்வதி அம்மாள் யார் என்றே தெரியவராமல் அவர் மக்களோடு மக்களாக வெளியே சென்றிருப்பாராம். இவர்கள் கூடிக் கோசமிட்டதுதான் இந்தச் சமபவம் நிகழக் காரணமாம். அடடே என்னே கண்டுபிடிப்பு...? எவ்வளவு பெரிய ராஜதந்திரம்...? பிரபாகரனின் தாயார் என்பதற்கு அப்பால் 81வயதான பக்கவாதம் தாக்கி நடக்க முடியாத நிலையில் உள்ள ஒரு பெண்மணி உரிய விசாவுடன் சென்னை வரும்போது அவரை வரவேற்பதற்காக சிலர் கூடியதுதான் அவர் திருப்பி அனுப்பப்பட காரணம் என்று கூறுவதை வேதனை கலந்த சிரிப்புடன்தான ஏற்றுக் கொள்ள முடியும்.

அதேவேளை தமிழகத்திலுள்ள தமிழ் உணர்வாளர்கள் எனப்படும் வைகோ நெடுமாறன், சீமான் போன்ற விடுதலைப்புலி ஆதரவாளர்களின் செயல்பாடுகள் தமிழகத்திலும் இலங்கையிலும் ஏற்படுத்திய அனர்த்தங்களும் மறுக்கவோ மறக்கவோ முடியாதன. பிரபாகரன் வருவார் ஈழப்போராட்டம் தொடரும் என இன்றும் கூறிக்கொண்டு மக்களை குழப்பி வரும் இவர்கள் பிரபாகரனின் தாயாரையும் தமது அரசியல் இருப்பிற்காக பயன்படுத்துவார்கள் என இந்திய உளவுத்துறையும் தமிழக முதல்வரும் எண்ணியிருப்பதற்கும் நியாயமான பல காரணங்கள் உள்ளன. நோயாளியான பிரபாகானின்தாயாரை வரவேற்க தொண்டர்கள் சகிதம் இவர்கள் விமான நிலையத்தில் கூடியதும் அங்கே கோசங்களும் முழக்கங்களும் எழுப்பப்பட்டதும் இவர்களின் நிச முகத்தை வெளிப்படுத்தியதுடன் அரச தரப்பின் நியாயப்படுத்தலுக்கும் வழிவகுத்துவிட்டது.

வன்னிப்போரின் இறுதி நாட்களில் அங்கு சிக்கியிருந்த அப்பாவி மக்களை மீட்பதற்கு ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளாமல் அவலமான அந்த வேளையிலும் கூட தமது அரசியல் லாப செயல்பாடுகளை மட்டுமே மேற்கொண்டு அந்த மக்களின் அழிவுக்கும் ஏன் அவர்கள் ஆதரித்த விடுதலைப்புலிகளின்



படிப்பகம்

அழிவுக்கும் கூட ஏதோ ஒரு வகையில் காரணமாய் இருந்த இந்தப் போலி உணர்வாளர்களை உணர்வுள்ள எந்தத் தமிழனும் மன்னிக்க மாட்டான். இவர்களின் உசுப்பேத்தும் செயல்பாடுகளும்உணர்ச்சி பொங்கும் அறிக்கைகளும் மேடைப்பேச்சுக்களும் தமிழகத்தின் அப்பாவி இளைஞர்களை உணர்ச்சியின் விளிம்புக்கே தள்ளி முத்துக்குமார் உட்பட்ட பல இளைஞர்களை தீக்குளிக்க வைத்ததும் இந்த அப்பாவி இளைஞர்களின் மரணங்களைக் கூட இவர்கள் தமக்கான அரசியலாக்கியதும் மறக்கவும் மன்னிக்கவும் முடியாத இவர்களின் பக்கங்கள்.

பிரபாகரனின் தந்தை வேலுப்பிள்ளையும், தாயார் பார்வதியும் 1980களிலிருந்து 2003 ஆம் ஆண்டுவரை நீண்ட நாட்கள் திருச்சியில் இருந்தவர்கள். 2001இல் ஏற்படுத்தப்பட்ட ரணில், பிரபாகரன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரான சமதான காலத்தில் தாமாகவே இலங்கைக்கு சென்று விட்டார்கள். அவர்கள் மீண்டும் இந்தியா திரும்ப அனுமதிக்கக் கூடாது என்று அன்று தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதாவின் அரசாங்கம் மத்திய அரசுக்கு தெரிவித்ததன் பிரகாரமே அவர்கள் இருவரையும் தடை செய்யப்பட்டோர் பட்டியலில் மத்திய அரசு சேர்த்து விட்டது என்றும் தமிழக முதல்வர் தரப்பில் விளக்கம் தரப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்டோர் பட்டியலில் பார்வதி அம்மையாரின் பெயரை இடம்பெறச் செய்ததே அதிமுக அரசுதான். எனவே அவர்கள் தான் இந்தச் சம்பவத்திற்கு முழுப் பொறுப்பேற்க வேண்டும் என்று அரசியல் விளக்கம் கூறும் தற்போதைய தமிழக முதல்வர் கருணாநிதிக்கு மத்திய அரசால் தடை செய்யோர் பட்டியலில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு அதே மத்திய அரசின் கட்டுப்பாட்டில இருக்கும் ஒரு தூதரகம் எப்படி விசா வழங்கியது என்பதற்கு விளக்கம் தர முடியாமல் போய்விட்டது.

உலக நாடுகள் எங்கிலும் வசிக்கும் இலங்கை தமிழர் ஒருவருக்கு (அவர் எந்தநாட்டின் குடியுரிமம் உள்ளவராக இருந்தாலும்) இந்திய விசா வழங்குவதற்கு பல நடைமுறைகள் கடைப்பிடிக்கப் படுகின்றன. முதலில் இலங்கை அரசிடம் ஒப்புதல் பெறப்பட வேண்டும். அதன் பின்னர் இந்திய மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்திடம் அவர்களைப் பற்றிய விவரம் தெரிவிக்கப்பட்டு அவர்கள் அனுமதித்த பிறகே வெளிநாட்டில் இயங்கி வரும் இந்திய தூதரகங்கள் இலங்கை தமிழர்களுக்கு விசா வழங்கி வருகிறது. காலதாமதமாகும் இந்த நடைமுறைகளால் இலங்கைத் தமிழர்கள்

www.padippakam.com

விசா பெறுவதற்காக அவர்கள் வாழும் நாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களுக்கு பலமுறை அலைவதும் சிலரின் விண்ணப்பங்கள் டில்லி கொழும்பு விசாரணைகளின் பின்னர் நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுவதும் வழமையாக இருந்து வருகிறது.

அப்படி இருக்கையில் பிரபாகரனின் தாயார்தான் பார்வதி அம்மாள் என்பதோ அவர் தடை செய்யப்பட்டோர் பட்டியலில் இருப்பதோ இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எப்படி தெரியாமல் போகும்...? தமிழக அரசும் இந்திய உளவுத்துறையும் சுற்றுகிற பூவினை ஒவ்வொரு தமிழனும் முகர்ந்து பார்க்க வேண்டும் என்று எண்ணப்படுவதுதான் வேடிக்கை...?

இலங்கைத் தமிழர்களின் யதார்த்த நிலைமை புரிந்து கொள்ளாமல் (பலர் புரிந்தும் புரியாதது போல) அந்த மக்களை வைத்து தொடர்ந்து உள்ளூர் அரசியல் நடாத்தி வருபவர்களின் செயல்பாடுகள் நிறுத்தப்படும் வரை அப்பாவி இலங்கைத் தமிழர்கள் பாதிக்கப்படுவதும் சிரமங்களுக்கு ஆளாவதும் நிகழத்தான் போகிறது.

அதேவேளை ஜனநாயகம் ஜனநாயகம் என்று பீற்றிக் கொண்டு மனிதாபிமானத்திற்கு படிப்படியாக கல்லறை கட்டி வரும் இந்திய தேசத்தின் முகத்தில் சர்வதேச அளவில் தொடர்ந்து கரி பூசப்பட்டு வருகிறது.

இன்னும் - இன்னும் அதன் அழுக்கடைந்த சிந்தனைகள் அரங்கேறுமானால் ஜனநாயகம் மட்டுமா வெட்கித் தலைகுனியும்...?

**25.04.2010**



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை பொதுத்தேர்தலும் காணமல் போகும் தமிழ்தேசியமும்

அரசியலில் பெரும்பாலும் முகமூடி தரித்த வேடதாரிகள்தான் இருப்பர் என்கின்ற கருத்து மீண்டும் ஒரு முறை இலங்கை அரசியல் மூலம் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. தமிழ்த் தேசியம் தொடர்பாக பேசப்பட்ட வீரவசனங்கள் அனைத்தும் பூனைக் குட்டி வெளியே வந்த கதையாகிவிட்டது.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்தே தம் நலன் சார் அரசியலுக்கான ஒரு மிகப் பெரும் கருவியாக அரசியல் வாதிகளால் கையில் எடுக்கப்பட்டதுதான் தமிழ்தேசியமும் அதனூடான இனவாதமும். இதனை வைத்தே காலம் காலமாக மக்களை ஏமாற்றி வருவதை இலங்கை தமிழ் அரசியலை தம் ஆளுமைக்குள்ளேயே வைத்திருந்த அரசியல்வாதிகள் வாடிக்கையாக கொண்டுள்ளனர். தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டதற்கு சிங்கள தலைவர்கள் மட்டும்தான் காரணம் என இவர்கள் வாடிக்கையாக நீலிக் கண்ணீர் வடிப்பதுதான் வேடிக்கை.

தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டதில் தமிழ் தலைவர்களுக்கும் முக்கியப் பங்குண்டு என்பதையும் இனப்பிரச்சினைக்கு அன்றே தீர்வு காணமுடியாமல் போனதில் தமிழ் தலைவர்கள் இழைத்த தவறுகளையும் வரலாறு தெரிந்தவர்கள் மறைக்க முடியாது. கடந்த காலங்களில் தேசியம் பேசிப்பேசியே தமிழ் மக்களின் வாக்குகளை பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாய் வலம் வந்த இவர்கள் தமிழ் மக்களுக்கு செய்ததுதான் என்ன என்றால் இன்றைய அழிவுகள்தான் பதிலாக வரும்...?



படிப்பகம்

ஆரம்பத்தில் தமிழ் மிதவாத தலைவர்களிடம் நம்பிக்கைவைத்து ஏமாந்த தமிழ் மக்கள் பின்னர் ஆயுதங்களின் மீது நம்பிக்கை கொண்டவர்களிடம் சென்றனர். அங்கும் ஆரம்பத்தில் இருந்த அணுகுமுறைகளும், சகோரத்துவமும் பொய்த்துப்போக அங்கும் தமிழ் மக்களுக்கு ஏமாற்றம். ஆயுதக் குழுக்களிடையே மக்கள் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் யதார்த்தமான அணுகுமுறைகள் இல்லாமை, சகோதரப்படுகொலைகள், தனித்துவ மேலாதிக்கம் என்பனவே தமிழ் மக்கள் முன்னர் அனுபவித்த உரிமைகளையும் இன்று இழந்து நிர்க்கதியாக உள்ளமைக்கு காரணம்.

தொடக்கத்தில் மிதவாதம் பேசி பின்னர் ஆதிக்க ஆயுதக் குழுக்களின் கைப்பாவையாகச் சரணடைந்தவர்களாலும் மிதவாதத்தின் அங்கீகாரம் இன்மையால் தீவிரவாதத்தினுள் நுழைந்து அல்லாக்கி அங்கிருந்து தூக்கி வீசப்பட்டு சரணாகதி அரசியலுக்கு வழிசமைத்தவர்களாலும் தான் தமிழ் ஈழம் என்ற கனவு மாளிகைக்கு வர்ணம் பூசப்பட்டது. அந்தக் கனவினை மக்கள் நெஞ்சில் ஒரு திரைப்படமாகக் காண்பித்தே அவர்கள் நாடாளுமன்ற வாதிகளாக சொகுசு வாழ்கை நடத்தி உலகை வலம் வரத் தொடங்கினர். ஈழத் தமிழர்களிடம் மட்டுமில்லாமல் உலகத் தமிழர்கள் மத்தியிலும் இந்த தமிழ் தேசிய அரசியல் கும்பல் இந்தக் கனவை வளர்த்து புதிய ரட்சகர்களாக உலாவந்தது. அவர்களால் உண்மையான தேசியம் என்பதற்கான ஒரு முறையான வரையறை கூட செய்யப்படவில்லை என்பதுதான் சோகம்.

ஒரு நிலப்பரப்பில் ஆதிக்கம் செலுத்தும் சக்திகள் எவை என்பதற்கான போராட்டம் மட்டுமே எமது மண்ணில் ஒழிய ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் ஒரு தேசிய இனத்தின் அரசியல் பொருளாதார சமூக விடுதலையை முன்நிறுத்திய மக்களாட்சியை ஏற்படுத்துவதற்கான உண்மையான கொள்கைப் போராட்டமாக அது இருக்கவில்லை. தமிழ்த் தேசியம் என்ற ஒற்றைச் சொல்லால் துப்பாக்கிகள் பேசியதும் அதற்கு வழிமொழிந்து அவர்களின் தயவில் வந்த நாடாளு மன்றவாதிகள் வெட்டிப் பேச்சு பேசியதும்தான் அழிவுகளுக்கு அடியிட்டுக் கொடுத்தது.

காலனித்துவ ஆட்சிகளின் மன்னர்களான பிரித்தானியர்கள் இலங்கையை விட்டுச் சென்றவுடன் இலங்கையை ஒரு சிங்கள - பௌத்த தேசமாக முகவரிப்படுத்த சில சிங்கள தலைவர்கள் முனைந்தபோது வெடித்த பிரச்சைனைதான் தேசிய இன வாதப்பிரச்சினை. அந்த வேளையிலேயே இதனை யதார்த்த

www.padippakam.com

பூர்வமாகவும் இராஜதந்திரமாகவும் எதிர்கொள்ளாமல் தமிழ் காங்கிரஸ், தமிழரசுக்கட்சி ஆகியவற்றின் தம்நலன் சார் செயல்பாடுகளின் முனைப்பே இன்றைய நிலைக்கு காரணம் எனலாம். இதன் பின்னரான தமிழர் விடுதலைக் கூட்டணியும் பாராளுமன்ற கதிரைகளுக்காக தமிழ் ஈழம் என்கிற வறட்டு பிரச்சாரத்தை கையில் எடுக்க அவர்கள் வழிவந்து தனி மீட்பர்களாகிய விடுதலைப் புலிகளும் தேசியக் கோட்பாட்டை பேச்சளவிலும் ஆதிக்க சிந்தனையை மட்டுமே செயலிலும் கொண்டிருந்ததால் ஈழத் தமிழினம் மிகப் பெரிய அழிவை சந்திக்க வேண்டியதாயிற்று. இதன் தொடர்ச்சியும் இன்றைய உலக மயமாக்கல் சூழலுமே தமிழ்த் தேசியத்தை ஒரு கேலிப் பொருளாகவே மாற்றியுள்ளது.

தமிழ்த் தேசியம் தமிழரிடையே இன, மொழி உணர்வுகளை மட்டும் வளர்த்து (இனவாதம்) மனிதனின் பொதுப்புத்தியை கூர்மழுங்கச் செய்தது என்பதுதான் உண்மை. இந்த உணர்வுகள் ஆதிக்க வன்முறை உணர்வுக்கு மட்டுமே வழிவகுக்கும். அன்றாட வாழ்வின் முக்கிய பிரச்சினைகள் பல. பொருளாதாரம், சமூக சமத்துவம், சகோதரத்தவம் போன்றன சார்ந்ததாக இருக்க தமிழ்த் தேசியம் மொழியை மட்டும் முன்னிறுத்தி முற்போக்கான போராட்ட சக்திகளை வீணடிக்கின்றது. மனிதரிடையே காணப்படும் ஏழ்மை, ஏற்றத்தாழ்வுகள், சாதியப் பாகுபாடுகள் அதனூடான ஒடுக்குமுறை, வேலையின்மை போன்ற அடிப்படை சிக்கல்களுக்கு தகுந்த முக்கியத்துவம் தராமல் தமிழ்த் தேசியம் என்ற கூர் மழுங்கிப் போன வாதம் ஈழத் தமிழர்களின் ஒட்டு மொத்த வாழ்க்கையையே சிதறடித்ததது என்பதுதான் உண்மை.

தமிழரிடையே சமத்துவத்தை முன்வைத்து எழுந்த பொதுவுடமை இடதுசாரி போக்குகளுக்கு தமிழ்த் தேசியம் வலு சேர்க்காமல் வலதுசாரிப் போக்குக்களையே வெளிப்படுத்தியிருந்ததுதான் இவ்வளவு பெரிய கெடுதல்கள் அழிவுகளுக்கு வழிவகுத்து. தமிழ்த் தேசியப் போராட்டத்தை புலிகள் ஆதிக்க நோக்கில் முன்னெடுக்க விழைந்ததும் அதனை பாசிச தேசியவாதமாக உருமாற்றியதும்கூட ஈழத் தமிழ் மக்களுடைய தேசிய இனப்பிரச்சினை இதுவரை தீர்க்கப்படாததற்கு முக்கிய காரணம் எனலாம். தமிழ் தேசியம் என்ற பெயரில் தமிழ் மக்களுக்கு கிடைத்தது கொடுமையும் அழிவுகளும் மட்டுமேதான்.

இவற்றை எல்லாம் புரிந்து கொண்டும் இவற்றிற்கெல்லாம் தொடர் காரணகர்த்தாக்களாக இருந்துகொண்டும் இருக்கும் தமிழ்



படிப்பகம்

www.padippakam.com

தேசிய கூட்டமைப்பினர் இன்றும் பாராளுமன்ற ஆசனங்களுக்காக பேரம் பேசுவதும் மல்லுக்கட்டுவதும் வேடிக்கையான வேதனை. புலிகள்தான் மக்கள், மக்கள்தான் புலிகள், என்று வசனம் பேசியவர்கள் அவர்களின் அழிவுச்செய்தியின் மை காய்வதற்குள்ளாகவே இலங்கை அதிபர் தேர்தலின் முக்கிய வேட்பாளர்களிடம் பேரம் பேசியது இவர்களின்தேசிய விசுவாசத்தையும் புலி விசுவாசத்தையும் மக்களுக்கு உணர்தியது. திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், வெ. யோகேஸ்வரன், மு. ஆலாலசுந்தரம், வி. தர்மலிங்கம், தோழர்கள் பத்மநாபா, சிறீ. சபாரட்ணம் உட்பட்ட இவர்களின் தலைவர்களையே தேசியத்தின் பெயரில் அழித்த பாசிசக் கும்பலின் கால்களை கதிரைகளுக்காக மட்டுமே வருடிய கூட்டமைப்புக்கு புலிகளின் அழிவும் அதனூடான மக்களின்அழிவும் எம்மாத்திரம்.

இலங்கையின் பொதுத் தேர்தலுக்கு நாள் குறித்தாகி விட்டது. அடுத்தகட்ட நகர்வுக்கு திட்டம் தீட்டத் தொடங்கிவிட்டனர் இந்தத் தமிழ்த் தேசியவாதிகள். அப்பாவித் தமிழ் மக்களை தூண்டிலில் மாட்ட வைக்க வழக்கம் போலவே வலை விரிப்புக்கள். மீண்டும் தேசியத்தையே பேசி மீண்டும் தமிழினத்தை அழிவுப் பாதைக்கு கொண்டு செல்லும் திட்டமிடல் ஒருபுறம், மறுபுறம் யாருடன் கூட்டணி வைத்து கணிசமான இடங்களைப் பெறமுடியும் என்ற கணக்கியல் திட்டமிடல். சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கை வரலாற்றின் மற்றொரு கச்சேரிக்கு ஆயத்தங்கள் ஆரம்பமாகி விட்டன.

தேசியவாதம் என்பது ஆபத்தானது, நவீன மானிட சமூகத்தால் நிராகரிக்கப்படக் கூடிய ஒன்று. தேசிய விடுதலையின் வெற்றி என்பது மக்கள் விடுதலையுடன் சம்பந்தப்பட்டதாகும். அவ்வாறான மக்கள் விடுதலையை தேசியவாதத்தால் ஒரு போதும் பெற்றுத்தர முடியாது. இவற்றை எல்லாம் இவர்கள் புரிந்துள்ளார்களோ இல்லையோ மக்கள் சிறிது சிறிதாக புரிந்து வருகிறார்கள் என்பதை இவர்கள் விரைவில் புரிந்து கொள்வார்கள். இன்றைய இலங்கைத் தமிழரின் நிலையில் தேசியவாதம் ஒருபோதும் வெற்றி பெறாது என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கு நன்றாகவே தெரியும்.

அதனால் என்ன...? அவர்களுக்கு தேவை எல்லாம் அவர்கள் சொந்த வாழ்வினதும் அவர்கள் சார்ந்த சமூகம், சொந்தங்களினது வளம் மட்டும் தானே...!

வேடங்களின் புனைவே அதற்காகத்தானே...!

**20.03.2010**



படிப்பகம்

www.padippakam.com

# நித்தியானந்தன் - ரஞ்சிதா விவகாரம் அலசப்படுகிறதா சமூக நியாயங்கள்...?

தமிழகத்தின் ஊடக ஜம்பவான்கள் எனப்படும் 'சன்' தொலைக் காட்சி, நக்கீரன் இதழ் இணையம் ஆகிவற்றின் கைங்கரியத்தில் சில நாட்கள் ஒட்டு மொத்த தமிழ்நாடும் ஒரேயொரு விடயத்தில் மட்டும் மூழ்கிப் போய்க் கிடந்தது. இந்தியாவின் எல்லைகள் தாண்டியும் சூடான பேசுபொருளாய் மாறி இருந்த, இருக்கும் அந்த விவகாரம் சாமியார் நித்யானந்தா - நடிகை ரஞ்சிதா சமாச்சாரம் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

நம் சமூகத்தில் வெவ்வேறு விதமான விவாதங்களை கிளப்பிய, ஒரு நடிகையுடன், அந்த இளந்துறவி நடத்திய பாலியல் உறவுக் காட்சிகள் சாமியாரின் ஆசிரமத்துக்கும் அவர் படம் தாங்கிய பதாகைகளுக்கும் தீ வைப்பு - சேதம், கண்டனக் கூட்டங்கள், என பல்வேறு கோணங்களில் தமிழகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சட்டமும் தன்கடமையைச் செய்கிறதாம்.

கடந்த கால் நூற்றாண்டு காலமாக கீழைத்தேய நாடுகளை குறிப்பாக இந்தியாவை புற்றீசல்கள் போல மொய்த்திருக்கும் பன்னாட்டு நிறுவனங்களும் அதன் வழியான மேலைத்தேய கலாச்சார மோக நிலையினதும் கோர முகங்களில் ஒன்றுதான் காளான்கள்போல உருவாகி இருக்கும் சாமியார்களும், யோகா குருக்குலங்கள் போன்றனவும். பாரிய அளவில் பன்னாட்டு நிறுவனங்களில் வேலை பார்ப்பவர்களின் வேலைப்பழு, சிந்தனா மாற்றம் ஆகியன ஏற்படுத்தும் மன அழுத்தங்களை நாம் குறைக்கிறோம் என்கிற பெயரில்தான் கூடுதலான யோகா



படிப்பகம்

மற்றும் தியான ஆசிரியர்கள் காவி உடை தரித்துக் களம் இறங்கி இருக்கிறார்கள். இவர்களை முற்றும் துறந்த முனிவர்களாகவும், தேவதூதர்களாகவும், சாப விமோசனம் தரும் ஜீவன் முக்தர்களாகவும் கருதியதன் விளைவுகள்தான இது போன்ற தொடர் சம்பவங்கள்.

தவறுகளை மக்களுக்கு அடையாளம் காட்டி சமுதாயம் சீர்கெடாமல் காப்பாற்ற வேண்டிய கடமை ஊடகங்களுக்கு உண்டு என்பதில் மாறுபட்ட கருத்து யாருக்கும் இருக்காது. ஆனால் தவறை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறோம் என்கிற பெயரில் மீண்டும் மீண்டும் அந்தப் படத்தை ஒளிபரப்பி மக்கள் மனதில் அருவருப்பை ஏற்படுத்தியதை எப்படி ஏற்றுக் கொள்வது...? தமிழகத்திலுள்ள பெருவாரியான பெற்றோர்கள் தொடராக ஒளிபரப்பான இந்தக் காட்சியை குழந்தைகள் பார்த்து விடுவார்களோ என்று பயத்தில் கேபிள் இணைப்பை தாங்களாகவே துண்டித்ததாகவும் தகவல்கள் வெளியாகி இருந்தன.

எவ்வளவு செல்வாக்கு படைத்த மனிதர்களும் ஏன் ஆன்மீகத்தில் ஆழமாக ஈடுபாடு கொண்டவர்கள் கூட காமத்தை வெல்ல முடியாமல் கடைசியில் தோற்றுத்தான் போயிருக்கிறார்கள். இதைத்தான் கடவுளர் வரலாறுகளும், தேசங்களின் வரலாறுகளும், வருடக்கணக்காகவே சொல்லி வருகின்றன. ஆனாலும் சாதாரண மக்களுக்கு தங்களிடம் காமத்தின் மீதிருக்கும் ஒரு மரியாதை கலந்த பயத்தையும், விருப்பம் கலந்த வெறுப்பையும் நீக்க முடிவதில்லை.

நித்தியானந்தம் என்கிற தனி நபரும், ரஞ்சிதா என்கிற பெண்மணியும் கலந்து கொண்டிருக்கும் ஒரு நிகழ்வு என்கிற பட்சத்தில் இது இருந்திருந்தால், சாதாரண சுவராசியமான ஒரு நிகழ்வாக இதுவும் மாறிப் போயிருக்கும். மாறாக தன்னையொரு அவதாரப் புருஷனாகவும், மக்களுக்கே அறிவுரை சொல்லும் மகானாகவும், ரட்சிக்க வந்த புனிதராகவும் காட்டிக் கொண்டதால் தான் நித்தியானந்தாவின் காவி வாழ்க்கை களங்கப்பட்டிருக்கிறது. நித்தியானந்தம் ஒரு சாமியார் என்கிற ரீதியிலேயே கவனிக்கப்பட்டு விட்டாலும் அவருக்குள் இருந்த இயற்கையான, இயல்பான மனித குணம் இல்லாமல் போயிருக்காது. ஆனால் அதற்காக அவர் அதனைப் பயன்படுத்தியவிதம்தான் அவருக்கு சிக்கலை ஏற்படுத்தியது எனலாம். சாமியார்தனத்தை உறுதிப்படுத்தும் அவரது சீருடையான காவியுடையையாவது அவரது லீலைகளின் போது தவிர்த்திருக்கலாம்.

www.padippakam.com

நடந்ததெல்லாம் ஒரு நிகழ்வு என்று சொல்லிவிட்டுப் போக யாருக்கும் மனமில்லை. அவர் ஒரு சாமியார்... சாமியார் பெண்ணுடன் சல்லாபிக்கலாமா...? என்கிறார்கள். அத்தனை பேரின் கோபச் சொல்லாடல்களும் நித்தியை துளைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் இதற்கெல்லாமான தகுதிகள் யாருக்கு உண்டு...? அந்தக் காட்சிகளை ஒளிபரப்பிய ஊடகங்களுக்கு உள்ளதா...? கண்டனக்குரல எழுப்புபவர்களுக்கு உள்ளதா...? அல்லது இந்தச்சம்பவத்தையே மறுக்கும் இந்து முன்னணி இராம கோபாலனுக்குத்தான் இருக்கிறதா...?

இன்னைறய தமிழகத்தின் ஊடகங்களில் ஒலிபரப்பாகும் பல காட்சிகள், சினிமாக்களில் இடம்பெறும் சிலகாட்சிகள் என்பன நித்தியும், ரஞ்சிதாவும் இருந்த காட்சிகளுக்குக் குறைந்ததல்ல... வெறுமனே கட்டில் அறை காட்சிகள் மட்டும்தான் ஆபாசம் என்று இவர்கள் சொல்லப் போகிறார்களா...? இன்றைய சில ஊடகங்கள் சிற்றின்பத்தையும் கிசுகிசுக்களையும் கட்டுக்கதைகளையும் மையமாக வைத்தே தமது பிழைப்பை நடாத்துவது கண்கூடு.

சாமியார் நித்தியானந்தத்தையும் அந்தக் காட்சிகளையும் குதறியெடுக்கும் பலரும் உடன் காட்சியளிக்கும் அந்தப் பெண் ரஞ்சிதாவை ஏன் நினைத்துப் பார்க்கவில்லை...? கணவருடன் கருத்து வேறுபாடு, விவாகரத்து, திரைப்படங்களில் நடிக்க வாய்ப்பில்லை, சின்னத்திரையிலும் தன்னை அறிமுகப்படுத்திய இயக்குநரின் சிலுமிசத்தால் மோதல் ஏற்பட்டு அங்கிருந்தும் விலக வேண்டிய நிர்ப்பந்தம். இத்தனை சிக்கல்களை எதிர்கொண்ட ஒரு பெண்ணின் மனநிலை எப்படி இருக்கும். இதற்குத்தான் களம் (மடம்) அமைத்திருக்கிறார்களே மன அமைதியை அள்ளி வழங்கும் நித்தியானந்தன் போன்றவர்கள். ஏற்கெனவே அமைதி வேண்டி வந்திருந்த மனிதர்களில் ஒருவரோடு ஒருவராக இணைந்த ரஞ் சிதா என்கின்ற அபலைப் பெண்ணை நித்தி தன்னுடன் ஒட்டிக் கொண்டதுதான் இத்தனைக்கும் காரணம்.

அந்தரங்க அறைக்குள் திருட்டுத்தனமாக கமராவை நுழைத்ததில் சிக்கிய அந்தக் காட்சியில் ரஞ்சிதா நடந்துகொண்டிருக்கும் விதத்தினைப் பார்க்கின்ற போது எந்த அளவிற்கு நித்தி மீது அவர் மரியாதையையும் அன்பையும் வைத்திருந்தார் என்பதை புரிய முடிகிறது. நிச்சயம் அது ஒரு உடன்படிக்கையின் பேரில் நடத்தப்பட்டவிதமாக இருக்கவில்லை என்பதை உன்னிப்பாக அந்தக்காட்சியை அவதானிப்பவர்கள் புரிவர். இன்று பரிதாபமாக



படிப்பகம்

www.padippakam.com

நிலைக்கு தள்ளப்பட்டுள்ள ரஞ்சிதாவைப் பற்றி இந்த ஊடகங்கள் ஏன் பேசவில்லை...? ஒரு வேளை இந்த இரகசிய காட்சிக்காக அவர்கள் கேட்ட தொகை கிடைத்திருந்தால் அந்தப் பெண்ணுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காதோ...! தொடரும் காலங்களில் அவர் எப்படி நம்மவர் மத்தியில் தயக்கமில்லாமல் நடமாட முடியும்? எத்தனை கேள்விகளுக்கு அவரால் பதில் சொல்ல வேண்டும் முடியும்? கேள்விகள் அனைத்தும் தார்மீக ரீதியாக வருமா? 'அந்தக்' காட்சிகளை மையமாக வைத்துதானே கூடுதலான கேள்விக் கணைகள் பறந்து வரும். ஒரு பெண்ணால் இவற்றை எல்லாம் எப்படி சகித்துக் கொள்ள முடியும்? சாதனை செய்ததாக கூறும் இந்த ஊடகங்கள் அவர்களுக்கு சமூக தர்மம் இருந்திருந்தால் ரஞ் சிதாவின் பொருட்டாவது இந்த வீடியோவை வெளியிடாமல் இருந்திருக்கலாம். அந்தப் பெண்ணின் கண்மூடித்தனமான பக்தியும், காதலையும்தான் அந்த வீடியோவில் காணமுடிகிறது. ஒரு கணவருக்கும், மனைவிக்குமான உறவு போல இருந்த அவற்றை இப்படி பகிரங்கப்படுத்தியிருப்பதில் காணாமல் போயிருப்பது நாம் சொல்லும் நமது நாகரிகமும் சேர்ந்துதான்.

இந்து மதம் வேரோன்றியிருக்கும் இந்திய நாட்டில் மக்கள் சந்திக்கும் பிரச்சினைகளும் மன அழுத்தங்களும் பெரிது பெரிதாக வளர்ந்து கொண்டேயிருப்பதும் சாமியார்களுக்கும், கடவுள் களுக்கும் பஞ்சமில்லாமல் இருப்பதும்தான இது போன்ற அவலங்களுக்கு காரணம். பணபலம் சேவகப்படை வளம் கொண்ட நித்தி இன்று ஒதுக்கப்பட்டிருந்தாலும் நாளை அவரை அவரே காத்துக் கொள்வார் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் அந்த மனிதரை நேசித்தக் குற்றத்திற்காக ரஞ்சிதா இனி வாழ்க்கை முழுவதும் தன்னை எப்படி வைத்துக் கொள்ளப் போகிறார் என்பதுதான் கேள்வி...?. நித்தி செய்த குற்றத்திற்காக வேண்டுமானால் அவருடைய காவி உடையைப் பறித்துவிடலாம்.

ரஞ்சிதாவிற்கு இழைக்கப்பட்ட கொடுமைக்காக அதற்கு காரணமாயிருந்த ஊடகங்கள் என்ன செய்யப் போகின்றன...?

**13.03.2010**



படிப்பகம்

www.padippakam.com

# பிரபல இந்திய ஓவியர் உசேனுக்கு கத்தார் குடியுரிமை 'மதசார்பற்ற' தேசத்துக்கு மற்றொரு அவமானம்

உலகின் முன்னணி ஓவியர்களில் ஒருவரான இந்திய நாட்டின் எம்.எப். உசேனுக்கு, கத்தார் தேசம் குடியுரிமை வழங்கி கவுரவித்திருக்கிறது. பிறந்து வளர்ந்த நாட்டில் ஒரு முற்போக்குச் சிந்தனையாளனை வாழ வகை செய்து கொடுக்க துப்பில்லாத மதச்சார்பற்ற நாடு என்று சொல்லிக் கொள்ளும் இந்திய தேசம் இதற்காக தலை குனிந்து நிற்கிறது.

கத்தார் நாடு வழங்கியுள்ள குடியுரிமை குறித்து துபாயில் வசித்து வரும் ஓவியர் உசேன் இந்திய ஆங்கில நாளிதழ் ஒன்றினூடாக உறுதிப்படுத்தியுள்ளார்; இந்தியர் ஒருவரின் இரட்டைக் குடியுரிமையை இந்தியச் சட்டம் ஏற்றுக் கொள்ளாது என்பதால், உசேன் பிறந்து, வளர்ந்து கொண்டாடப்பட்ட தன் சொந்த இந்திய மண்ணின் குடி உரிமையை உதறித் தள்ள முன்வந்துவிட்டார். கத்தார் நாட்டின் குடியுரிமை கோரி உசேன் விண்ணப்பிக்கவில்லை என்பதும் அவருடைய முற்போக்குச் சிந்தனையின் மகத்துவம் அறிந்த அந்த நாடு தானாகவே முன்வந்து அவருக்கு அந்நாட்டு குடியுரிமை வழங்கி கவுரவித்துள்ளது என்பதும் முக்கியமானது.

அவருக்கு எதிரான சிக்கல்களுக்கெல்லாம் காரணம் இந்துக் கடவுள்களை அவரது ஓவியங்கள் சில விமர்சிக்கின்றதாம். இந்தியாவில் உள்ள சங்பரிவார் கும்பல் அவருக்கு எதிராக வரிந்து கட்டிக் கொண்டு களம் இறங்கியது. பல்வேறு கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டன. அவர் வரைந்த ஓவியங்கள் பல காவிக் கும்பலால்



படிப்பகம்

www.padippakam.com

அடித்து நொறுக்கப்பட்டன. அவருடைய ஓவியக் கண்காட்சியையும் பல்வேறு இடங்களில் சங்பரிவாரக் கும்பல் சீர்குலைத்தது.

மத வெறிபிடித்த இந்துத்துவா கும்பலின் தொடர் தொல்லைகளால் அவர் 2006 ஆம் ஆண்டு முதல் துபாயிலும், லண்டனிலும் மாறிமாறி வசித்து வருகிறார். இந்தியாவில் பிறந்த இந்தியக் குடிமகனான அவரால், இந்தியாவைத் தவிர அனைத்து உலக நாடுகளிலும் சுதந்திரமாக வலம் வரமுடிகிறது. இந்துத்துவா கும்பல் அவருடைய உயிருக்கு குறிவைத்து அலைகின்றன அவருக்கு எதிராக இந்திய நீதிமன்றங்களில் 900க்கும் அதிகமான வழக்குகள்.

வெளிநாட்டில் தஞ்சம் புகுந்திருக்கும் உசேனை, இந்தியாவுக்கு மீண்டும் திரும்ப வரவழைத்து காவிக்கும்பலிடமிருந்து காப்பாற்றி அவருக்கு போதிய பாதுகாப்பு அளிக்க இந்திய அரசின் நிருவாகத்திற்கு ஆளுமை இல்லை. பாஜக, மதச்சார்பற்றதென சொல்லும் காங்கிரஸ் கூட்டணி ஆட்சிகள் இரண்டுமே உசேனின் கருத்துச் சுதந்திரத்தைக் காப்பாற்ற எவ்வித ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்பதுதான் வேதனை.

இந்தி மொழி மாதப் பத்திரிகை ஒன்று 1970களில் அவர் வரைந்த ஓவியங்களை 1996 இல் வெளியிட்டது. இந்த ஓவியங்களில் சில இந்துக் கடவுளை அவமதிப்பதாக அமைந்துள்ளதாம். உசேனுக்கு எதிரான அவதூறு வழக்குப் பதிவுகளும் சங்பரிவாரின் தொல்லைகளும் இந்த ஓவியங்கள் வெளியான 1996 முதலே தொடங்கிவிட்டன. 1996 ஆம் ஆண்டில் உசேனின் ஓவியங்கள் வைக்கப்பட்டிருந்த கண்காட்சியை அடித்து நொறுக்கி சேதப்படுத்தினார்கள். 1998 ஆம் ஆண்டு மே மாதத்தில் தெற்கு மும்பையில் உள்ள உசேனின் வீட்டிற்குள் புகுந்து ரகளை செய்தனர். உசேனின் கண்களைத் தோண்டுபவருக்கோ அல்லது அவரது கைகளை வெட்டி எறிபவருக்கோ 1கிலோ தங்கம் தருவதாக குஜராத்தைச் சேர்ந்த ஜசுபாய் படேல் என்பவர் வெளிப்படையாகவே அறிவித்தார். இதற்கெல்லாம் மேலாக மத்தியப் பிரதேச காங்கிரசின் பிரிவு ஒன்று, உசேனின் கைகளை வெட்டி எறியும் தேச பக்தருக்கு ரூ. 11 லட்சம் தருவதாகக் கூறியது. இது நடந்தபோதெல்லாம் உசேனுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் எதுவும் கிடைக்காமல் அவரை இந்தியாவை விட்டு விரட்டியது.

இத்தகைய வன்முறை வெறியாட்டங்கள் மற்றும் பேச்சுகளுக்கு எதிராக சட்டம் தனது கடமையைச் செய்ததா? கட்சிகள் வெளிப்படையாக வருத்தமாவது தெரிவித்தனவா? கிடையவே



படிப்பகம்

www.padippakam.com

கிடையாது. மத்திய அரசும், சம்பந்தப்பட்ட மாநில அரசுகளும் கூட மவுனியாயிருந்தன. இந்தியாவின் கலாசார மதிப்புகளை உலகுக்கு காட்டியதில் யாருக்கும் குறையில்லாத எம்.எப். உசேனுக்கு இந்தியாவில் நிம்மதியாக வாழ முடியாத நிலை. மத ரீதியாக எழுந்துள்ள உசேன் விவகாரத்தில் மதச்சார்பற்ற இந்திய தேசத்தின் அணுகுமுறை வெட்கக் கேடான ஒன்றே என்பதில் எவ்வித ஒளிவுமறைவுமில்லை.

இந்தப் பிரபல ஓவியர் எம்.எப். உசேன் ஒன்றும் இந்து மதத்திற்கு எதிரானவரோ இந்திய கலாசாரத்திற்கு விரோதமானவரோ இல்லை. கீதையை விரும்பிப் படித்தவர் எனவும், உபநிடதங்களைப் படித்து உள்வாங்கியவர் எனவும் சொல்லப்படுகிறது. 1968ஆம் ஆண்டு ராம்மனோகர் லோகியா என்பவர், ராமாயணக் காவியத்தை சித்திர வடிவங்களில் வரைந்து தரும்படி வேண்ட ஏழு ஆண்டுகள் செலவு செய்து ராமாயணத்தை விளக்கும் 150 சித்திரங்களைப் படைத்தார். இவர் பொதுவாக சித்திரம் வரையும் வேலைகளைத் துவங்குவதற்கு முன்பாக ஒரு விநாயகர் உருவத்தை வரைந்து விட்டுத்தான் பிறகு தன்னுடைய ஓவியப் பணியைத் துவக்குவாராம். .

இவரிடம் சில முஸ்லீம்கள், ஏன் நீங்கள் இசுலாமிய தத்துவத்தை விளக்கும் வகையில் சித்திரங்கள் வரையக் கூடாது என்ற கேட்ட போது உங்களுக்கு இந்துக்களுக்கு உள்ளது போல் சகிப்புத் தன்மை கிடையாது, ஒரு எழுத்து வடிவத்தில் தவறு வந்து விட்டாலும், அந்தச் சித்திரத்தைக் கிழித்து எறிந்து விடுவீர்கள் என்று பதில் சொன்னதாக ஒரு தகவல் அன்றே வெளியாகி இருந்தது.

மகள் ரயீசாவுக்குத் திருமணம் நடத்தியபோது இவர் தயாரித்திருந்த திருமண அழைப்பிதழ் முஸ்லீம்கள் பலரை அதிரவைப்பதாக அமைந்திருந்தது. சிவன் தொடையில் பார்வதி அமர்ந்திருப்பது போலவும், சிவனுடைய ஒரு கை பார்வதியின் மார்பின் மேல் உள்ளது போலவும் இவர் வரைந்த திருமண அழைப்பிதழ் இருந்தது. உலகம் பூராவும் உள்ள தன் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் அந்த அழைப்பிதழை அனுப்பியதன் மூலம் தனது உணர்வில், இரத்தத்தில் எது ஊறிக் கிடக்கிறது என்பதைப் பறைசாற்றியிருந்தார் உசேன். இந்திய மண்ணின் வரலாற்றை, மரபை, கலாசாரத்தை நேசித்த ஒரு ஓவியர், வரைந்திருக்கும் எண்ணற்ற ஓவியங்கள் குறித்து உலகமே பேசுகிறது. வியக்கிறது. ஆனால் அதே அவருடைய சில ஓவியங்களை சர்ச்சைக்குள்ளாக்கி அவரை அவர் பிறந்த இந்திய



படிப்பகம்

www.padippakam.com

மண்ணில் வாழமுடியாமல் விரட்டி அடித்துள்ளன மதவாத சக்திகள். இதுதான் இந்தியாவின் தொடர் விந்தையும், துயரமும்!

இந்து மதமாக இன்று கற்பிக்கப்படும் மதத்தின் புராணங்களில் பரிசுத்தத்திற்கு மறு பெயர் நிர்வாணம் என்றும் சொல்லுகிறது, புனிதம் என்றும் சொல்லுகிறது. வால்மீகி ராமாயணம், கம்பராமாயணம், மகா பாரதம் - இவைகள் நிர்வாணம் என்பதை தெய்வ வடிவில்தான் பார்க்கின்றன. சிவலிங்கம் என்பதே படைப்பின் ரகசியம் பொதிந்த குறியீடாகவே இருக்கிறது. இதையெல்லாம் கற்றுத் தெளிந்த உசேன் இந்து பெண் தெய்வங்களை அந்த நோக்கில் ஒரு ஓவியர் என்ற உணர்வோடு வரைந்திருப்பார். அதில் கலைத்தன்மையை பார்ப்பதை விட்டு தம் நலனுக்காக உள்ளர்த்தம் கற்பிக்கவே சிலர் இருந்தார்கள். ஒரு ஓவியத்தில் சோகமே உருவகமாக, விரிந்த கூந்தலுடன் அழுதுகொண்டு மண்டியிட்டுச் சரிந்துகிடக்கும் ஒரு பெண்ணாக இந்தியாவைச் சித்தரித்திருந்தார் உசேன். பெரும் கலவரங்களால் சோதனைகளுக்குள்ளாகியிருந்த தேசத்தின் நிலை குறித்து வெதும்பிய ஒரு கலைஞனின் பார்வை அது.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் அந்த ஓவியத்தை வாங்கிய ஒருவர் அதைப் 'பாரத மாதா' எனப் பெயரிட்டு அழைத்தபோது நெருக்கடி தொடங்கியது. 'பாரத மாதா'வை உசேன் ஆபாசமாகச் சித்தரித்துவிட்டதாகக் குற்றம் சுமத்தி, அவரது ஓவியங்களை அடித்து நொறுக்கத் தொடங்கினார்கள் இந்துத்துவ அடிப்படைவாதிகள். சரஸ்வதியை நிர்வாணமாக வரைந்து விட்டார் எனவும் அலறல்களும் கூப்பாடுகளும் கேட்கத் தொடங்கின. உசேனின் பொதுப்பார்வை குறித்து புரிதல் இல்லாதவர்கள்தான் அவரை ஓட ஓட துரத்திக்கொண்டு இருக்கிறார்கள். உசேனின் நிர்வாண ஓவியங்கள் தொடர்பான வழக்குகள் பலவற்றில் ஒன்றின்போது டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்த சஞ்சய் கௌல் அவர்கள் வழங்கிய தீர்ப்பு ஒன்று காமசூத்ராவை உருவாக்கிய தேசத்தின் பாலியல் அணுகுமுறைகள் குறித்ததாக அமைந்திருந்தது மகிழ்வுடன் கவனிக்கப்பட வேண்டியது. 'பாலியல் ஒரு கலை என்னும் ஆரோக்கியமான புரிதலைக் கொண்டது நம் மரபுகள். இந்தியர்கள் பாலியலை ஒரு கலையாகக் கற்றுக்கொண்டனர்; பரிசோதனைகளை மேற்கொண்டனர்; அதன் நுட்பங்களை சக மனிதர்களுடன் பகிர்ந்துகொண்டனர். பிறகு அவற்றை ஓவியங்களாகவும் சிற்பங்களாகவும் காப்பியங்களாகவும் நடனங்களாகவும் மாற்றித் தொடர்ந்துவரும் தலை முறைகளுக்குக் கையளித்துச் சென்றனர். பாலியல் செயல்பாடுகளை அவர்கள் ஒருபோதும் பாவமாகக் கருதியதில்லை, மூடிய கதவுகளுக்குள்



படிப்பகம்

விவாதிக்கும் ஒரு விடயமாகவும் கருதவில்லை. வாழ்வை முழுமைப்படுத்தும் அதன் உன்னதமான ஒரு பகுதியாகவே பாலியலை இந்தியர்கள் கருதினர் எனக் குறிப்பிட்ட நீதிபதி கௌல், பண்பாட்டைத் தூய்மைப்படுத்துவதாகச் சொல்லிக் கொள்ளும் அடிப்படைவாதிகள் உண்மையில் தேசத்தை மறுமலர்ச்சிக் காலத்திற்கு முந்தைய ஒரு காலத்திற்குப் பின்னோக்கி இழுத்துச் செல்ல முயல்கிறார்கள்; எனக் கடுமையாக விமர்சித்திருந்தார்.

இந்நிலையில்தான் தற்போது 95 வயதான உசேன், கடந்த பல ஆண்டுகளாக வெளி நாடுகளில் தஞ்சம் புகுந்து வாழ்க்கை நடத்தி வருகிறார். தற்போது துபாயில் தங்கி இருக்கும் அவர் வியாபார நோக்கிலான ஓவிய வரைதலை நிறுத்தி, இந்திய அரேபிய கலாசாரத் தொடர்புகள் குறித்த ஓவியங்களை வடிவமைப்பதில் ஈடுபட்டுள்ளார். உசேனின் சிந்தனை வளமிக்க ஓவியம் பற்றி அறிந்த ஐக்கிய அமீரகத்தின் கத்தார் நாட்டு முதல் பெண்மணியும் அந்நாட்டு அதிபரின் மனைவியுமான ஜேக் மோஜா, கலாசார முக்கியத்துவம் வாய்ந்த உசேனின் ஓவியங்களுக்கு மதிப்பளிக்க முன்வந்துள்ளார். இரு நாட்டு கலாசார வரலாறுகள் தொடர்பாக உசேனால் வரையப்படும் ஓவியங்கள், தோஹா நகரில் உள்ள தனி அருங்காட்சியகத்தில் வைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. அது மட்டுமல்லாமல் கத்தார் தேசம், உசேனுக்கு குடியுரிமை வழங்கி கவுரவித்துள்ளது. வெளிநாட்டைச் சேர்ந்தவர் களுக்கு குடியுரிமை வழங்குவதை அபூர்வமாக கொண்டுள்ள அரபு நாடுகளில் ஒன்று எம்.எப். உசேனுக்கு குடியுரிமை வழங்கி மரியாதை செலுத்தியுள்ளது.

ஆனால், முற்போக்குச் சிந்தனை வளம் கொண்ட ஓர் ஓவியரை தன்னுடைய சொந்த தேசத்தில் சுதந்திரமாகக் கூட நடமாட முடியாமல் செய்திருக்கிறது இந்தியாவின் மதவாதம். உசேன் விவகாரத்தில் இந்திய நிருவாகம் குற்றவாளியாக கை கட்டி நிற்கிறது, மதவாத சக்திகளின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தமுடியாத ஒரு கோழையாக குப்புறக் கிடக்கிறது இந்தியா. ஒடுக்க முடியாத அல்லது ஒடுக்கப்படாத மதவாத சக்திகளுக்குப் பயந்து தான்பிறந்த தேசமே வேண்டாம் என்ற முடிவுக்கு ஒரு பிரபல இந்திய ஓவியனை தள்ளியுள்ளதானது ஒவ்வொரு இந்தியனுக்கும் வெட்கம் தரக் கூடிய ஒன்றே.

உசேனுக்கு கத்தார் தேசம் குடியுரிமை வழங்கிய நாள்...! இந்தியாவின் துயரம் நிறைந்த நாளே...!

**01.03.2010**

www.padippakam.com

# மண்டியிட்ட ஒபாமாவும்...
# மனம் மாறாத சீனாவும்...

கிட்டத்தட்ட உலகத்தின் அனைத்து ஊடகங்களுமே அந்தப் படத்தை வெளியிட்டன. அது, அமெரிக்க அதிபர் ஒபாவின் சமீபத்திய ஆசிய நாடுகள் சுற்றுப் பயணத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

அந்தப் படம் சீன பெருஞ்சுவர் அருகே நின்று ஒபாமா எடுத்துக் கொண்ட படமோ சீனாவில் விமானத்தை விட்டு இறங்கும்போது தனி ஆளாக அவரே அவருக்கு குடை பிடித்துக் கொண்டு வந்தபோது எடுத்த படமோ அல்ல...?

ஜப்பானில் அந்நாட்டு மன்னர் முன் மண்டியிட்டு ஒபாமா மரியாதை செலுத்திய படம்தான் அது. மரியாதைக்காக மன்னர் முன்னான மண்டியிட்ட இநதப் புகைப்படம் பரபரப்பாக பேசப்பட்டாலும் இதுபற்றி சாமானியனுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லைதான்.

பராக் ஹூசைன் ஒபாமா தன்னுடைய ஆசிய நாடுகளுக்கான முதல் சுற்றுப்பயணத்தை நவம்பர் 13, 2009 ஆம் தேதி தொடங்கினார். முதலில் ஜப்பான், சிங்கப்பூரில் ஆசிய-பசிபிக் மாநாடு தொடர்ந்து சீனா கடைசியில் தென் கொரியா என 4 நாடுகளில் அவர் ஒரு வார காலம் வலம் வந்தார்.

இந்த 4 நாடுகளுக்கு அவர் சென்று வந்தாலும் மிக அதிக அளவில் அவருடைய ஒவ்வொரு வார்த்தையும் உன்னிப்பாக கவனிக்கப் பட்டது சீனாவில்தான்.



படிப்பகம்

சரியாக 24 ஆண்டுகளுக்கு முன். 1984ம் ஆண்டு, 18 வயது நிரம்பி இருந்த எலிசபெத், திடீரென காணாமல் போனாள். பொலீசில் புகார் செய்யப்பட்டது. மத நம்பிக்கை அதிகமாகி, ஒரு மதக்குழுவுடன் மகள் சென்று விட்டாள் என மனைவி ரோஸ்மேரியை தேற்றினார் தந்தை ஜோசப். போலீசாரிடமும் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்களும் எலிசபெத்தை தேடும் பணியை நிறுத்தி விட்டனர். திடீர். திடீரென. வீட்டு வாசலில் கடிதம் காணப்படும். அதை எலிசபெத் எழுதியிருப்பாள். கடிதத்தை பார்த்து ரோஸ்மேரி கண் கலங்குவார். இப்படி சில ஆண்டுகள். பின்னர் ஒரு நாள் வீட்டு வாசலில் மூன்று குழந்தைகள் அழுதபடி நின்றன. 'அவை, எலிசபெத் குழந்தைகள்; அவளால் வளர்க்க முடியவில்லை என்பதால், வீட்டு வாசலில், விட்டு விட்டு சென்று விட்டாள்' என ஜோசப் கூற, ரோஸ்மேரிக்கு பாசம் பொங்கி மூன்று குழந்தைகளையும் அன்புடன் வளர்க்க தொடங்கினார். அக்குழந்தைகளும். உள்ளூர் பள்ளிக்கு சென்று வந்தனர்.

அந்நகர மக்களுக்கு, ஜோசப் குடும்பத்தின் மீது, மிகுந்த மதிப்பு ஏற்பட்டது. யாருடனும் பேசாமல் இருக்கும் ஜோசப் மீது இரக்கமும் தோன்றியது. மகள் காணாமல் போன சோகத்தில் இருந்து அவர் மீளவில்லை என்று நகர மக்கள் பேசிக் கொண்டனர். இப்படியே பல ஆண்டுகள் உருண்டோட கடந்த மாதம் 19ம் தேதி, உள்ளூர் மருத்துவமனையில், 19 வயது இளம் பெண் ஒருவரை ஸ்டெச்சரில் கிடத்தியபடி, ஜோசப் அழைத்து வந்தார். கோமா நிலையில், மிகவும் பலவீனமாக காணப்பட்டார். அப்பெண் யார் என்று டாக்டர்கள் கேட்டதற்கு, ஜோசப்பால், சரியான பதிலை கூற முடியவில்லை: ஏதேதோ கூறி பூசி மழுப்பினார்.

சந்தேகம் அடைந்த டாக்டர்கள், போலீசாருக்கு தெரியப்படுத்த போலீசாரும், ஜோசப்பிடம் விசாரணை நடாத்தப்பட்டது. . துவக்கத்தில், ஜோசப்பிடம் இருந்து எந்த தகவலும் வராத நிலையில் அவரது வீட்டுக்கு சென்ற போலீசார் மனைவி ரோஸ்மேரியிடம் விசாரித்தனர். அவருக்கும் ஒன்றும் தெரியவில்லை. வீடு சோதனை செய்யப்பட்ட போது, வீட்டின் கீழ்பகுதியில் ஒரு நிலக்கீழ்பகுதி (Under Ground Room) உண்டு. எலக்ட்ரீசியனான (Electrician) ஜோசப், அங்கு ஐந்து அறைகளை கட்டி இருந்தார். தொழில் ரீதியான பணிகளை அவற்றில் மேற்கொண்டு வந்ததாக தெரிவிக்கப்பட்ட அங்கும் ஒன்றும் கிடைக்கவில்லை. போலீசாரால் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

மீண்டும் ஜோசப்பிடம் தீவிரமாக (தம்பாணியில்) விசாரிக்க தொடங்கிய பொலீசாருக்கு பல திடுக்கிடும் உண்மைகள் தெரிய வந்தன. போலீசார் மட்டுமல்ல நாடே அதிர்ந்து போனது. காணாமல் போன மகள் எலிசபெத், வீட்டு நிலவறையில்தான் உள்ளார்: அவளுடன் பல ஆண்டுகள் உடலுறவு வைத்துள்ளேன். அவள் மூலம் ஏழு குழந்தைகள் பிறந்தன. அதில் ஒரு குழந்தை இறந்து விட்டது. அக்குழந்தையின் உடலை எரித்து விட்டேன். மூன்று குழந்தைகளுடன், நிலவறையில் எலிசபெத் வசித்து வருகிறார். மற்ற மூன்று குழந்தைகள், வீட்டின் மேல் பகுதியில் மனைவி ரோஸ்மேரியிடம் வளர்கின்றன. மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளம் பெண், எலிசபெத்தின் மூத்த மகள்.

ஜோசப் மூலம் கிடைத்த . இந்த தகவல்களை அடுத்து பொலீசார் அவர்கள் வீட்டின் நிலக்கீழ் பகுதியை மீண்டும் சோதனை செய்தும் ஏலிசபெத் மற்றும் இரண்டு குழந்தைகள் எங்கு உள்ளனர் என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை. ஜோசப் அங்கு அழைத்துவரப்பட்டார். அங்குள்ள ஒரு அறையில், ஒரு மர ஷெல்ப் உள்ளது. அதை ஜோசப் அகற்றினார். அங்கே காணப்பட்ட ஒரு கொன்கிரீட் கதவை திறந்த பார்த்த பிறகு தான், ஜோசப் எவ்வளவு பெரிய கிராதகன் என்பது தெரியவந்தது. உலகம் முழுவதும் பரவியது.

மூன்றுமாடி கொண்ட ஜோசப்பின் வீட்டின் இரண்டாவது மாடியில் தான் ரோஸ் மேரி மற்றும் எலிசபெத்தின் மூன்று குழந்தைகள் வசித்து வந்துள்ளனர். இந்த வீட்டின் சில பகுதிகளை ஜோசப். அவ்வப்போது, வாடகைக்கு விட்டுள்ளார். வீட்டின் வெளிப்பகுதியில் இருந்து தான், வீட்டின் கீழ் பகுதிக்கு செல்ல முடியும். மனைவி ரோஸ்மேரி, வாடகைக்கு குடியிருந்தவர்கள் என யாருமே, நிலக்கீழ் பகுதிக்கு சென்றது இல்லை. வீட்டில் ஜோசப் மட்டுமே, தினமும், அப்புகுதிக்கு சென்று வருவான். நிலக்கீழ் பகுதியின் ஒரு அறை வழியாக, ரகசிய பகுதியை உருவாக்கிய ஜோசப், இப்பகுதிக்கு செல்லும் வழியை ஷெல்ப் ஒன்றினால் மறைத்துள்ளான். ஷெல்பை, அகற்றினால், ஒரு கொன்கிரீட் கதவு வரும். எலக்ட்ரோனிக் தொழில்நுட்ப உதவியுடன் இந்த் கதவை ரகசிய எண் பதிவு செய்து, ரிமோட் கண்ட்ரோல் மூலமே திறக்க முடியும். அந்த ரிமோட் கண்ட்ரோல் ஜோசப்பிடம் இருந்தது. கொன்கிரீட் கதவை திறந்து சென்றால், ஐந்து மீட்டர் தூரத்துக்கு நீளமான குறுகிய வழி காணப்படும் . அதன் முடிவில், ஒரு குட்டி சமையல் அறை: ஷவர் வசதியுடன் கொண்ட குளியலறை. இரண்டு படுக்கை அறைகள். அனைத்து அறைகளும் குட்டி, குட்டியாக



படிப்பகம்

மொத்தம் 650 சதுர மீட்டர் பரப்பளவுக்குள் அடங்கி விடும். ரகசிய பகுதியின் உயரம் ஐந்தரை அடியை தாண்டாது. ரகசிய பகுதியில், காற்று வசதி கிடைக்க, வெளிப்புறத்துடன் ஒரு குழாய் இணைக்கப்பட்டுள்ளது. அந்த அறையில் ஜன்னல் கிடையாது.

இங்கு தான், 24 ஆண்டுகளாக எலிசபெத் அடைக்கப்பட்டு இருந்தார். தந்தையின் கட்டாய உடலுறவுக்கு ஆட்பட்டு. வரிசையாக ஏழு குழந்தைகள் பெற்றெடுத்து இருக்கிறார். மருத்துவ வசதி ஏதும் இன்றி பிறந்துள்ள இக் குழந்தைகளில்ஒரு குழந்தை இறந்து விட்டது. மூன்று குழந்தைகளை, எலிசபெத்துடன் வசிக்க வைத்துள்ளான் ஜோசப். நிலக்கீழ் இருந்த குழந்தைகளுக்கு வெளி உலகமே தெரியாது. கொன்கிரீட் கதவுக்கு பிறகு என்ன இருக்கிறது என்பது புரியாது. ரகசிய பகுதியில். டிவிடி வீடியோ பிளேயர். ரேடியோ ஆகியவை உண்டு.

சூரிய வெளிச்சம் மற்றும் போதிய காற்று இல்லாத பகுதியில் வசித்து வந்ததால், எலிசபெத் மற்றும் இரண்டு மகன்கள், உடல் வெளுத்து போய், மெலிந்த நிலையில், மிகவும் பலவீனமாக காணப்பட்டனர். அவர்களை போலீசார் மீட்டு, மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். இதில், ஐந்து வயது மகன் பெலிக்ஸ் மட்டுமே, நல்ல மன நிலையில் உள்ளான். 18 வயது மகன் ஸ்டீபன், 42 வயதான எலிசபெத் ஆகியோர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜோசப்பின் இந்த அடாத செயல், உலகளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் தனி ஒரு மனிதனால், நாட்டுக்கே அவமானம் ஏற்பட்டு விட்டது என, ஆஸ்திரிய மக்கள் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதாகவும் ஊடகங்கள் சில கருத்து வெளியிட்டுள்ளன. இந்த நிகழ்வு இடம்பெற்று பலவாரங்களின் பின்னர் கடந்தவாரம்தான் ஒருசில சர்வதேச ஊடகங்களின் சாதாரண செய்தியாகவும் சில ஆசிய ஊடகங்களில் சுவராசிய செய்தியாகவும் விமர்சனமாகவும் பதிவாகியிருந்தது. மூன்றாம் உலக நாடுகளில் மனித உரிமை மீறல்கள் பெண்அடக்குமுறைகள் என உரத்துக் கூறும் - இவர்களின் சுரண்டலினாலும் அறிவு மழுங்கடிப்பினாலும் இன்றும் நிலவும் சமூக பின்னடைவுகளை ரசனைக் காட்சிகளாக்கும் - அடக்கு முறைகளையும் ஆதிக்க மனோபாவத்தையும் இன்றும் கொண்டிருக்கும் ஐரோப்பியர்கள் இந்த நிகழ்வை எப்படி எதிர்கொள்வார்கள் எப்படி வியாக்கியானம் கொடுக்கப் போகிறார்கள்.

ஜோசப் பிரிட்செல் என்கின்ற (இந்த கதையின் நாயக வில்லன்) அந்த மனிதனின் பின்தளம் பற்றியதான இந்த கொடூர எண்ணத்தை அவனுக்கு ஏற்படுத்திய காரணிகள் பற்றியதான ஆய்வுகளிலும் அதன் வெளிப்பாடாக மனோ நிலை பாதிக்கப்பட்ட ஒரு அசாதாரண மனிதன் இவன் என்கின்ற சினிமா கதை போன்ற முடிவுகளிலும்தான் இதற்கான விடைஅமையும் என்பதுதான் நிதர்சனம். மலேசியா பிலிப்பைன்ஸ் இந்தோனிசியா போன்ற நாடுகளில் ஆங்காங்கே தந்தை மகள் உறவுடையவர்கள் கலவியில் ஈடுபடுவதும் திருமணம் செய்து கொள்வதும் சிறுக சிறுக அதிகரித்து வருவதாக அங்குள்ள சமூக மத ஆர்வலர்கள் வருத்தம் தெரிவித்து வருகிறார்கள். இரு மனமும் ஒருமனமாவதுதான் திருமணம் என்றால் இப்படியான இணைப்புக்கள் ஏன் வருத்தமானதாகிறது புதினமாகிறது என்பதுதான் புரியவில்லை.

எப்படியோ வெளிவந்த இது போன்ற கொடூரமான சம்பவங்கள் நல்ல நாகரீகமும் பண்பாடும் கொண்டவர்கள் என நம்மவர்கள் சிலரே மார்தட்டும் மேலைத்தேயவர்கள் மத்தியில் அப்பப்போ ஆங்காங்கே நடக்காமலா இருக்கிறது...? என்பதும் இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண் எலிசபேத் தொடர்ந்து 24 ஆண்டுகள் அந்த நிலக்கீழ்சிறையில் எந்தவித எதிர்ப்பையும் வெளிப்படுத்தாமல் இருந்தாளா...? எப்படி அவளால் ஏழு பிள்ளைகளுக்கு தாயாக முடிந்தது...? இவை நடைமுறையில் சாத்தியமா...? என்பன போன்ற கேள்விகளும் எழத்தான் செய்கின்றன.

**16.02.2010**

www.padippakam.com

# தற்கொலைக்குத் தயாராகிறதா பூமிப்பந்து...? வழி சமைக்கிறதா மேற்குலகம்...?

டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகன்...இந்த குளிர்காலத்தின் ஆரம்ப மாதம்... 11 நாள்கள்... 193 நாடுகள்... 45 ஆயிரம் பிரதிநிதிகள்... ஒட்டு மொத்த உலகத்தின் முக்கியத் தலைவர்கள், அணிதிரண்டு ஆர்ப்பரித்து, கூடிக்கூடி விவாதித்து, கோஷமிட்டு எதிர்பார்த்தபடியே உடன் தீர்வு எதுவுமற்று முடிந்துள்ளது பருவநிலை மாற்ற மாநாடு.

கோபன்ஹேகன் பருவநிலை மாற்ற மாநாடு- உலகத்தைக் காப்பாற்ற உலகமே திரண்ட ஒரு நிகழ்வு. சிறிது சிறிதாய் அழிந்து கொண்டிருக்கும் இந்தப் பூமிப் பந்தைக் காப்பாற்றும் ரட்சகனாய் இந்த மாநாடு மாறக்கூடாதா...? என்பதுதான் மாநாடு நடந்து முடிந்த 11 நாள்களும் உலகத்தின் கூட்டுப் பிரார்த்தனையாக இருந்தது. ஆனால் முடிவு எதுவுமற்றதனாலும் முடிவு என்ற பெயரில் ஒப்பந்தம் ஒன்று போடபபட்டுள்ளதுதான் தீர்வு எனச் சொல்லப்படுகிறது. பூமியைக் காப்பாற்றுவதற்காக கூடிய உலக நாடுகள் வழக்கம் போலவே வளரும் நாடுகள்- வளர்ந்த நாடுகள்- பரம ஏழை நாடுகள் என தனித் தனியாக கூட்டணி அமைத்து அரசியல் அரங்கேற்றத்தை திட்டமிட்டுச் செய்தன.

கரியமில வாயுவால் பூமி நாசமாகிக் கொண்டிருக்கிறது. மனிதகுலத்தின் நாகரிக வளர்ச்சி அதற்கான தொழில் நுட்ப அதிகரிப்பு அவற்றின் வெளிப்பாடு பசுமை இல்ல வாயுக்கள் என்று சொல்லக் கூடிய கரியமில வாயு, மீத்தேன், நைட்ரஸ்ஆக்சைடு, கார்பன் டெட்ரா, புளோரா கார்பன் போன்ற நாச வாயுக்களின்



படிப்பகம்

www.padippakam.com

சித்தாந்த ரீதியாக எதிரெதிர் துருவங்களாக உள்ள பொதுவுடமை பூமியில் ஏகாதிபத்திய சக்கரவர்த்தியின் பயணம் இது.

உலகின் 'பெரிய அண்ணன்' என்ற கர்வத்துடன் உலகம் முழுவதும் தனது அதிகார ஆதிக்கத்தை காட்டிவரும் அமெரிக்காவின் பொருளாதார பலம் என்பது சிறிது சிறிதாக குறையத் தொடங்கி வேலை இழப்புகள் அதிகரித்துள்ளன. தனிநபர் வருமானம் குறையத் தொடங்கி உள்ளது. கிட்டத்தட்ட 100க்கும் அதிகமான வங்கிகள் திவாலாகி விட்டன. இன்னும் ஏராளமான வங்கிகள் அபாய கட்டத்தில் உள்ளன. இதை எல்லாம் தாண்டி அமெரிக்க நாணயமான டொலருக்கு வரலாறு காணாத நெருக்கடி... உலகத்திலேயே முன்னணி நாணயம் என்று மிகப்பெரிய கர்வத்துடன் வலம் வரும் அமெரிக்க டொலருக்கான மரியாதை இன்னும் தொடருமா என்பதான கேள்விக்குறி...உலகம் முழுவதும் நிலகுலைந்து போயிருந்த பொருளாதாரத் தேக்க நிலை சற்று வளர்ச்சி முகம் நோக்கி தலை எடுத்தாலும் அமெரிக்க டொலரின் உறுதித் தன்மைக்கு அது கை கொடுப்பதாக இல்லை. உலகில் உள்ள பல்வேறு நாடுகளில் கையிருப்பு நாணயமாக 64 விழுக்காடு அமெரிக்க டொலர் இருக்கிறபோதும் டொலரை ஓரம் கட்டிவிட்டு யூரோவோ அல்லது அந்தந்த நாடுகளின் நாணயமோதான் முன்னுக்கு வரப் போவதாக பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். எண்ணெய் உற்பத்தி நாடுகள் மத்தியில் டொலர் மதிப்பு வீழ்ச்சி தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

அமெரிக்காவின் நெருக்கமான நாடான சவுதி எண்ணெய் வர்த்தகம் டொலரில் தொடர்ந்து இருக்க விரும்புகிறது. ஆனால்கச்சா எண்ணெய் உற்பத்தி நாடுகள் கூட்டத்தில் வெனிசூயிலா மற்றும் ஈரான் ஆகிய இரு நாடுகளும் பரிவர்த்தனை அமெரிக்க டொலரில் தேவைதானா...? என்று கடந்த இரு ஆண்டுகளாகவே கேள்வி எழுப்புகின்றன. கச்சா எண்ணெயை விற்று டொலராகப் பெற்று அதை வைத்து நமக்குத் தேவையான பொருட்கள் வாங்கும் போது டொலர் வீழ்ச்சியால் அப்பொருட்கள் கூடுதல் விலை மதிப்பு பெறுகின்றன. இதைத் தடுக்க யூரோ, யென் போன்ற கரன்சிகளுக்கும் வர்த்தகம் செய்தால் என்ன என்பது இவர்கள் கேள்வி. ரஷ்யாவும் சீனாவும் தங்களுக்குள் நடக்கும் வர்த்தகத்தில் டொலர் தேவையின்றி பரஸ்பரம் இருநாட்டு கரன்சிகளை பயன்படுத்திக் கொள்வது என்ற முடிவுக்கு ஏற்கனவே வந்து ஒப்பந்தமும் ஆகியிருக்கிறது. இப்பாணியில் பிரேசில் இந்தியா ஆகியனவும் பேச்சு நடாத்துகின்றன. இவைகளின் அடிப்படையில் டொலரின்



படிப்பகம்

ஆதிக்கம் வெகுவாகவே குறையலாம் என்கின்ற உண்மையை அச்சத்துடன் உணர்ந்ததால்தான் தனது சீன பயணத்தின்போது அதற்கு நிவாரணம் காணும் முயற்சியில் தீவிரமாகவே காய்களை நகர்த்தினார் ஒபாமா.

இந்தச் சுற்றுப் பயணத்தில் சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே உள்ள நாணயப் பரிவர்த்தனையில் அமெரிக்க டொலர் வீழ்ச்சி அடையாமல் இருக்க பல்வேறு குட்டிக் கரணங்களை சீன அதிபர் ஹூ ஜிந்தோவிடம் போட்டு பார்த்தும் முடிவுகள் ஒபாமாவுக்கு சாதகமாக இருந்ததாக தெரியவில்லை. அதிக அளவு அமெரிக்க டொலரை கையிருப்பாக வைத்திருக்கும் நாடுகளில் சீனாவுக்கு முதலிடம் உண்டு. அமெரிக்காவின் பொருளாதார வெற்றி சீனாவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. அப்படி எதிர்பார்த்த வெற்றி ஏற்படவில்லை என்றால் அது அமெரிக்க - சீன பொருளாதார உறவை பாதிக்கும். வேண்டுமென்றே தன் நாட்டு நாணயமான யுவானை சற்று மதிப்புக் குறைவாக வைத்திருப்பதின் மூலம் அமெரிக்காவுக்கு தன் பொருட்களை அதிக ஏற்றுமதி செய்யப் பார்க்கிறது சீனா என்ற பேச்சும் இருக்கிறது. மேலும் உலக அளவில் ஆதிக்கம் செலுத்தும் நாடுகளின் பட்டியலில் மிகவேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது சீனா. பல்வேறு துறைகளிலும் சீனாவின் வளர்ச்சி உலக நாடுகளை அதிர வைத்திருக்கிறது. ஆசிய மணடலத்தில் இந்தியாவும் சீனாவும் நீயா...? நானா...? என்று போட்டி போட்டுக் கொண்டு தனது பயணத்தை தொடங்கி தொடர்கின்றன.

உலக நாடுகளின் கவனத்தில் முக்கிய இடத்தில் உள்ள சீனாவுடன் பல நாடுகளும் உறவு கொள்ள முனைகின்றன. கடந்த சில மாதங்களாகவே ஜப்பான், அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து உள்பட பல்வேறு நாடுகள் பல்வேறு பிரச்சினைகளுக்காக சீனாவிடம் நெருக்கம் கொள்ள ஆரம்பித்துள்ளன.

இதனை உணர்ந்ததன் விளைவே சீனா விடயத்தில் ஒபாமாவின் மிகக் கவனமான 'நல்ல பிள்ளை' முயற்சிப்பு என்பது தெளிவாகிறது... அதனாலேயே சீனாவின் உணர்வு பூர்வமான எதிரியான தலாய் லாமா சமீபத்தில் அமெரிக்கா சென்ற போது அவரை சந்திக்கமால் ஒபாமா தவிர்த்ததும் திபெத் சீனாவின் அங்கம் என்று அவர் அறிவித்ததும்எனச் சொல்லப்படுகிறது. இப்படி எல்லாம் சீனாவின் தோழனாக காட்டிக் கொள்ள ஒபாமா முயற்சி செய்தும் கூட அவருடைய சீன பயணத்தில் தான் நினைத்தை எதுவுமே செய்ய முடியவில்லை என்பதுதான் உண்மை.

www.padippakam.com

வெள்ளை மாளிகையை விட்டு ஆசியா நோக்கி புறப்படும் போதே சீனாவில் சில காரியங்களைச் சாதிக்க வேண்டும் என்பதுதான் ஒபாமாவின் திட்டம். குறிப்பாக நாணய பரிவர்த்தனை. தட்பவெப்ப நிலை மாற்றம், மனித உரிமை மீறல் விடயங்கள். ஆனால் இவற்றில் எதற்குமே சீனாவின் செங்கொடிகள் அசைந்து கொடுக்காத நிலையில் பாவம் பெய்ஜிங்கை விட்டு வெறுமனேயே புறப்பட்டுச் சென்றார் ஒபாமா.

தன்னுடைய ஆசிய பயணம் முடிந்த கையோடு தற்போது இந்திய பிரதமருக்கு வெள்ளை மாளிகையில் விருந்து உபாசாரம். சீனாவுடன் அமெரிக்கா தோழமை காட்டக் கூடாது. சீனாவின் பக்கம் வெள்ளை மாளிகை சாய்ந்துவிடக் கூடாது என்பதுதான் இந்தியாவின் முழு விருப்பம். இதன் வெளிப்பாடாகவே இந்தியாவின் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை அமெரிக்க டொலரில் மட்டுமே தொடரும் என இந்த விஜயத்தின் போது மன்மோகன் சிங் உறுதியளித்து ஒபாமாவை உற்சாகப்படுத்த விளைந்திருக்கிறார்.

தந்தை கென்யா நாட்டவர். தாயார் கான்சான் தேசத்தவர். ஒரு சகோதரி இந்தோனேசிய தந்தைக்கு பிறந்த அவர் கனடாவில் உள்ள சீனர் ஒருவரை மணம் முடித்துள்ளார். எங்கள் குடும்பத்தினர் ஒன்று சேர்ந்தால் அது ஐ.நா. சபை. போன்றதாகும் என்று இதனை ஒபாமாவே அடிக்கடி நகைச்சுவையுடன் கூறுவதுண்டு இந்தோனேசிய தந்தைக்கும் தனது தாயாருக்கும் பிறந்த ஒபாமாவின் மற்றொரு சகோதரர் சீனப் பெண்மணி ஒருவரை மணந்து சீனாவில்தான் இருக்கிறார். அவர்களை பெய்ஜிங்கில் சந்திக்க ஒபாமா ஒதுக்கிய நேரம் வெறும் 5 நிமிடங்கள்தான் என கனடாவில் இருக்கும் சகோதரி கவலை வெயிட்டுள்ளார்.

இனம் மதம் இவற்றை எல்லாம் கடந்த ஒரு தலைவராக ஒபாமா திகழ்வார் என்று அவருடைய அதிபர் தேர்தல் பிரச்சாரத்தின் போது பெருமையாக பேசப்பட்டது. அதன்படி அவர் அதிபராக பதவியேற்ற உடன் ஆபிரிக்க நாடுகளிலும் வளைகுடா நாடுகளிலும் அவர் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். பரம எதிரிகளாக கருதப்படும் இஸ்லாமிய நாடுகளுடன் எல்லாம் நட்புக் கொள்ளவே ஆசைப்படுவதாக அவர் அறிவித்தார்.

ஒபாமாவின் இந்த 8 நாள் ஆசிய சுற்றுப் பயணத்தில் தன்னுடைய தாயுடனும் வளர்ப்புத் தந்தையுடனும் இளம் வயதில் 4 ஆண்டு



படிப்பகம்

காலம் வாழ்ந்த இந்தோனேசியாவை அவர் திரும்பி பார்க்கவே இல்லை என்பதும் குறிப்பிடவேண்டியது.

ஒபாமாவுக்கு ஏமாற்றம் அளித்த ஆசிய பயணம் மாதிரி தங்களுடைய நாட்டுக்கு வராமல் ஒபாமா போய்விட்டாரே என்று நிறைய ஏமாற்றத்துடன் இந்தோனேசிய மக்கள்.

**05.02.2010**

பேச்சுவார்த்தை என்பது போரைத் தவிர்ப்பதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொண்டோம். முடியவில்லை என்று இரண்டு தரப்புகளும் ஒன்றையொன்று குற்றஞ்சாட்ட மட்டுமே.

– வோல்ட்ரீம்

www.padippakam.com

# ஆஸ்திரியா, மார்தட்டும் ஐரோப்பியர்களை அவமானத்திற்கு ஆளாக்குகிறதா...?

இப்படியெல்லாம் உண்மையில் நடந்து இருக்குமா? இப்படியும் ஒரு கிராதகன் இருப்பானா? போன்ற கேள்விகள் கடந்த சில நாட்களாக உலகம் முழுவதும் எழுப்பப்பட்டு வருகிறது. இந்த கேள்விகளுக்கான கதாநாயகனுக்கு வயது 73. பார்ப்பதற்கு அப்பாவி போன்ற தோற்றம். ஆனால், சொந்த மகளை, 24 ஆண்டுகள், தனது வீட்டின் நிலக்கீழ் அறை (under ground) மறைத்து வைத்து. அவள் மூலம் ஏழு குழந்தைகளுக்கு தந்தையாகி, கொடூர சரித்திரம் படைத்தவன் இவன். இந்த சம்பவம் வெளிச்சத்துக்கு வந்ததும், ஆஸ்திரியா (Austria) நாடே பெரும் தலைகுனிவுக்கு ஆளாகியுள்ளது. 'தனியொரு மனிதானல். சீர்கெட்டு போன நாட்டின் பெருமையை நிலை நிறுத்த பாடுபடுவேன்' என, அந்நாட்டு அதிபரே கூறும் அளவுக்கு. மனிதத்தன்மை. நாகரிக பண்புகள் ஏதும் இன்றி, அரக்க தன்மையுடன் செயல்பட்டவனின் கதை இது.

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான செல்வசெழிப்பு மிக்க ஆஸ்திரிய நாட்டி ன் இன்றைய மக்கள் அமைதியான வாழ்க்கையை வாழ்ந்து வருபவர்கள். தலைநகர் வியன்னாவில் இருந்து 120 கி.மீ., தொலைவில் உள்ள சிறிய நகரம் அம்செட்டிடென். ஆழகான தெருக்கள்; அங்கொன்றும், இங்கொன்றுமாய் சில வீடுகள். இந்த நகரை சேர்ந்த கொடூர கதாநாயகனின் பெயர் ஜோசப் பிரிட்செல், தற்போது இவனுக்கு 73 வயது. இவனது மனைவி ரோஸ்மேரி, அம்செட்டிடென் நகரில் மூன்றடுக்கு வீடொன்றில், இவர்கள் வசித்து வந்தனர். இவர்களின் மகள் எலிசபெத்.



படிப்பகம்

கலவை வளிமண்டலத்தில் கலந்து பூமி முழுக்க தனது அழிவுப் பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதனால் பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள ஓசோன் தடுப்பு மண்டலம் ஓட்டையாகிக் கொண்டிருக்கிறது. இந்த துவாரம் அதிகரிக்க அதிகரிக்க பூமியின் வெப்பநிலை அதிகரிக்கும். இதனால் பனிமலைகளால் சூழப்பட்டுள்ள பூமியின் வட-தென் துருவங்கள் உருகத் தொடங்கும். கடல் மட்டம் அதிகரிக்கும், கடலோர நாடுகளும், நகரங்களும் தண்ணீருக்குள் மூழ்கும். மழை அளவு குறையும். ஒட்டு மொத்த தட்பவெப்பநிலையும் மாறும். பலவிதமான குணப்படுத்த முடியாத நோய்களும் பரவத் தொடங்கும். சொல்லப் போனால் இந்தப் பூமி சிறிது சிறிதாக அழியும். இதனை எப்படித் தடுக்கலாம் என்பதறகாகவே உலக நாடுகள் ஒன்று கூடின, தொடராக ஆலோசித்தன.

இதுவரை தொழிற்புரட்சி என்ற பெயரில் இந்த நாச வாயுக்களை எல்லாம் உற்பத்தி செய்து தங்களின் கஜானாக்களை நிரப்பி பணக்காரர்களாய் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும் வளர்ச்சி அடைந்த நாடுகள் இதற்கு என்ன விலை கொடுப்பது...? அந்த நாடுகள் இவ்வாறான நச்சுப் புகையை எவ்வளவு குறைப்பது...? அதற்கு உத்தரவாதம் ஏதும் உண்டா...? சீனா, இந்தியா, பிரேசில் போன்ற வளரும் நாடுகள் போட்டி போட்டு கக்கிக் கொண்டிருக்கும் இந்த நச்சு வாயுக்களை எப்படிக் குறைப்பது...? அப்படிக் குறைத்தால் அந்த நாடுகளின் வளர்ச்சியின் தேக்கத்தில் ஒரு பெரிய முட்டுக் கட்டை ஏற்படுமே. . அதற்கு என்ன செய்வது...? இந்தப் பூமியின் ஒரு ஓரத்தில் சவலைப் பிள்ளைகளாக எலும்பும் தோலும் போர்த்திக் கிடக்கும் ஆபிரிக்க கண்டத்தின் ஏழை நாடுகளுக்கு என்ன தான் நிவாரணம்...? இதற்கு எல்லாம் எப்படித்தான் தீர்வு காண்பது...?

இவற்றை முதன்மைப் படுத்தித்தான் 193 நாடுகளின் தலைவர்களும் டிசம்பர் 7ம் தேதி தொடங்கி 18ம் தேதி வரை 11 நாட்களாக பேசிப்பேசி சலித்துப் போய் உருப்படியாக எந்த முடிவும் எடுக்கப்படாத நிலையில் டென்மார்க்கை விட்டு பெட்டியைக் கட்டியுள்ளனர். இந்த மாநாட்டில் மொத்தம் எட்டு வரைவுத் தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன. இவை அனைத்தும் அமெரிக்கா மற்றும் பேசிக் அமைப்பில் இடம் பெற்றுள்ள இந்தியா, சீனா, பிரேசில், தென் ஆபிரிக்கத் தலைவர்கள் முன்பு இறுதிப் பரிசீலனைக்கு வைக்கப்பட்டன. பேசிக் (Basic) அமைப்பை திருப்திப்படுத்தி உடன்பாட்டை ஏற்படுத்தும் பொறுப்பு அமெரிக்க

அதிபர் ஒபாமாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், சீனப் பிரதமர் வென் ஜியாபோ மற்றும் பிரேசில், தென் ஆபிரிக்க தலைவர்களுடன் ஒபாமா தீவிர ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையின் இறுதியில், இந்தியா, சீனா, பிரேசில், தென் ஆபிரிக்கா மற்றும் அமெரிக்காவுக்கு இடையே உடன்பாடு ஒன்று எட்டப்பட்டது. இந்த ஒப்பந்தமே கோபன்ஹேகன் மாநாட்டின் பிரகடனமாகவும் அறிவிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் வளரும் நாடுகளின் பெரும்பாலான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதாக அமையவில்லை என்பதுதான் வேதனையையும் இதுவாவது நடைமுறைக்கு வருமா என்கின்ற எண்ணத்தையும் ஏற்படுத்தியுள்ளது. .

பூமியின் வெப்ப நிலையை, 2 சென்டிகிரேடுக்கு மேல் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று ஒப்பந்தத்தில் முக்கியமாக கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த இலக்கை எட்டத் தேவையான புகை மாசுக் கட்டுப்பாட்டு அளவு குறித்து எந்தவித உத்தரவாதமும், இலக்கும் ஒப்பந்தத்தில் இடம் பெறவில்லை. மேலும், ஏழை நாடுகள் புவிவெப்ப மாற்றத்திற்கேற்ப தங்களை மாற்றிக் கொள்வதற்கு வசதியாக அடுத்த ஆண்டிலிருந்து 2012ம் ஆண்டு வரை அமெரிக்கா ஐரோப்பா போன்ற முன்னேறிய நாடுகளால் 30 பில்லியன் டாலர் நிதியுதவி அளிக்கப்படும். அதேபோல 2020ம் ஆண்டுக்குப் பின்னர் 100 பில்லியன் டாலர் நிதியுதவி அளிக்கப்படும் எனத் தெரிவிக்கும் இந்த ஒப்பந்தம் 2050ம் ஆண்டுக்குள் உலகின் புகை மாசு அளவினை 80 சதவீதமாக குறைக்க வேண்டும் என்ற முந்தைய கோரிக்கையை கைவிட்டுள்ளது.

வன அழிப்பைத் தடுக்க ஏழை மற்றும் வளரும் நாடுகளுக்கு நிதியுதவி செய்ய தனியாக ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதேசமயம், அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தைய நாடுகள் சில கோரி வந்த, வளரும் நாடுகள் மேற்கொள்ளும் புகை மாசுக் குறைப்பு நடவடிக்கைகளை பரிசோதிக்க அல்லது கண்காணிக்க வேண்டும் என்ற கோரிக்கை கைவிடப்பட்டுள்ளது. இது அர்த்தப்பூர்வமான ஒப்பந்தம். ஆனால் இந்த முன்னேற்றம் போதாது. மேலும் நிறைய தூரம் போக வேண்டியுள்ளது என இந்த ஒப்பந்தம் குறித்து தெரிவித்த அமெரிக்க அதிபர் ஒபாமா இந்த ஒப்பந்தம் அனைவருக்கும் பூரண திருப்தியைத் தராவிட்டாலும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் எதிர்காலத்தின் நடவடிக்கைகள் மிகச் சிறந்ததாக அமையலாம் எனவும் கூறினார். .

சில நாடுகள் (சீனாவைக் குறிப்பிட்டுச் சொன்னதாக கூறப்படுகிறது) தங்களது நிலையிலிருந்து இறங்கி வராமல் பிடிவாதம் செய்ததால்தான் ஒப்பந்தத்தின் பலம் அதிகரிக்க வாய்ப்பில்லாமல் போனது என்றும் ஒபாமா மாநாட்டின் இறுதியில் தெரிவித்தார். அமெரிக்காவுக்கும், பேசிக் அமைப்புக்கும் இடையே ஏற்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தை மாநாட்டில் கலந்து கொண்டுள்ள அனைத்து 193 நாடுகளும் ஏற்றுக் கொள்ளுமா? என்பது தெரியவில்லை. இப்படி பல ஒட்டைகளும், சில உடைசல்களுமாக கோபன்ஹேகன் ஒப்பந்தம் உருவாகியுள்ளது.

இந்த ஒப்பந்தம் குறித்து வளரும் நாடுகளின் கூட்டமைப்பான ஜி-77 அமைப்பின் தலைவரான லுமும்பா டி அபிங் கூறுகையில், இந்த ஒப்பந்தம் நிச்சயம் ஆபிரிக்கா மற்றும் சிறிய தீவு நாடுகளில் பேரிழப்பை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. பல நாடுகளை இந்த ஒப்பந்தம் நிரந்தர ஏழைகளாகவே வைத்திருக்க வகை செய்யும். ஒபாமாவுக்கும், புஸ்ஸுக்கும் வேறுபாடுகள் இல்லை என்பதையே இந்த ஒப்பந்தம் காட்டுகிறது என்று குறை கூறியுள்ளார்.

இந்த மாநாட்டில் அதிமாக நடந்தவை ஆர்ப்பாட்டங்களும், அடுத்தடுத்த நாடுகளை குறை கூறியவையும்தான். ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்காவையும், சீனாவையும் சாட, ஆபிரிக்கா, மற்றும் பிற ஏழை நாடுகள் உலக நாடுகள் அனைத்தின் மீதும் நியாயமான முறையில் குற்றம் சுமத்தின. வாயுக்கள் வெளியேற்றக் குறைப்பு என்ற திட்டமிடலில் எந்த வித முன்னேற்றமும் இல்லை, புவி வெப்பமடைதலால் ஒட்டு மொத்த உலகமுமே பாதிக்கப்படும். ஆனால் அதற்கு எந்த விதத்திலும் காரணமாகாத ஏழை நாடுகளுக்கான நிதி உதவியிலும் பெரிய அளவுக்கு முன்னேற்றமில்லை. வானிலை மாற்ற விளைவுகளால் பெரிதும் பாதிக்கப்படும் ஏழை நாடுகளுக்கு ஆண்டொன்றுக்கு 400 பில்லியன் டொலர்கள் நிதி தேவைப்படும் நிலையில், 10 பில்லியன் டொலர், 20 பில்லியன் டொலர், 30 பில்லியன் டொலர் என்று அநியாயத்திற்கு பேரம் பேசின ஜி- 8 என்ற வளர்ச்சி அடைந்த பணக்கார நாடுகள். .

ஒப்பந்தத்தை வரைந்தவர்களே 'போதாது' என்று வர்ணிக்கும் இந்த ஒப்பந்தம் எந்த விதத்திலும் பூமியை வெப்பவாயு விளைவுகளிலிருந்து காப்பாற்றாது என்று அங்கு அதிருப்தியுடனும், வெறுப்புடனும் வெளியேறிய ஏழை நாட்டு பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். கரியமிலவாயு வெளியேற்றத்தை தொழிற்புரட்சிக்கு முந்தைய

www.padippakam.com

நிலைக்கு கொண்டு செல்லும் நோக்கமோ, புவி வெப்ப நிலையை 2100ஆம் ஆண்டுக்குள் 2டிகிரி செல்சியஸ் உயர விடாமல் தடுக்கும் நோக்கமோ அங்கு கடைசி நேரத்தில் வந்த ஒபாமா உள்ளிட்ட பணக்கார நாட்டு தலைவர்களுக்கு இல்லை.

உருப்படி இல்லாத இந்த ஒப்பந்தத்தை இந்தியா, தென் ஆபிரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை ஆதரிக்க ஜி- 77 நாடுகளின் பிற தலைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். சூடான் மற்றும் பிற ஆபிரிக்க நாடுகள் இந்த ஒப்பந்தத்தை கிழித்துப் போடாத குறையாக நிராகரித்து ஒதுக்கி உள்ளன. இந்த மாநாட்டில் உருப்படியான, பொறுப்பான ஒப்பந்தம் ஏற்படமுடியாததற்கு முக்கிய காரணம் வளர்ந்த அமெரிக்காவிற்கும், மிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் சீனாவிற்கும் இது குறித்து ஏற்பட்ட கருத்து வேறுபாடே என்று சொல்லப்படுகிறது. உலக வெப்பவாயு வெளியேற்றத்தில் கிட்டத்தட்ட பாதிப் பங்கு வகித்து வரும் இந்த இரு நாடுகளுக்கும் இடையே இதர 3 ஆம் உலக நாடுகளின் வெப்ப வாயு வெளியேற்றக் குறைப்பை கண்காணிக்கும் உரிமை தொடர்பாக கருத்து வேற்றுமைகள் தோன்றியது. வெப்பவாயு வெளியேற்றக் குறைப்புக் கண்காணிப்பில் நாடுகளுக்கு இடையே வெளிப்படையான அணுகுமுறை தேவை என்று ஒபாமா வலியுறுத்த, சீனாவோ, எந்த ஒரு சர்வதேச தலையீடும் இந்த விவகாரத்தில் ஈடுபட்டால் அது தங்கள் நாட்டு இறையாண்மையை பாதிக்கும் என்று மறுத்துவிட்டது.

இந்த மாநாடு மூலம் அமெரிக்காவின் வல்லாதிக்க முகம் மீண்டும் ஒரு முறை வெளிச்சத்துக்கு வந்துள்ளதுதான் நிஜம். மனித நாகரீகம் காப்பாற்றப்படுவது, இயற்கை வளம் மிக்க ஏழை நாடுகளை புவி வெப்பமடைதலின் அபாயத்திலிருந்து காப்பாற்றுவது என்ற சாதாரண குறைந்தபட்ச மனிதத் தன்மை கூட ஒபாமாவின் உரையில் இடம் பெறாமல் போனதுதான் கொடுமை. இந்த மாநாட்டில் ஒபாமா ஆற்றிய உரையினால் பல நாட்டு பிரதிநிதிகள் கடும் எரிச்சலும் ஏமாற்றமும் அடைந்தனர் என்றும் சொல்லப்படுகிறது.

'தற்போது மிகப் பெரும் ஆய்வுக்குப் பிறகே இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது. இருப்பினும் இது போதுமானதல்ல. கோபன்ஹேகன் மாநாட்டில் சர்வதேச அளவில் செயல்படுத்தக்கூடிய ஒரு நிலையான தீர்மானத்தை எட்ட முடிந்தது என்பது நிறைவைத் தருகிறது. இருப்பினும் கரியமில வாயு வெளியேற்றத்தை சட்ட



படிப்பகம்

ரீதியாகக் கட்டுப்படுத்துவது இனி வரும்காலங்களில்தான் சாத்தியமாகும். இந்தத் தீர்மானத்துக்கு முழுவடிவம் கொடுத்து அதைச் செயல்படுத்துவது ஒவ்வொரு நாட்டிடமும் உள்ளது, எனவும் கரியமில வாயு வெளியேற்றத்தை முழுமையாகக் கட்டுப் படுத்துவதற்கான ஆண்டு 2050 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்குள் இலக்கை எட்ட வேண்டுமெனில் இன்னும் முனைப்புடன் செயல்பட வேண்டும். 'என்றும் மாநாட்டு உரை நிகழ்த்திவிட்டு தனது நெருக்கமான தலைவர்களுடன் மீண்டும் ஒருமுறை ஆலோசித்துவிட்டுக் கிளம்பினார் ஒபாமா. இந்த மாநாட்டில் இதைத்தானா எதிர்பார்த்தன உலக நாடுகள்? வல்லூறுகளிடமிருந்து எப்படி முத்தங்களை எதிர்பார்க்க முடியும்...!

நடந்து முடிந்த மாநாடு குறித்து உலகம் முழுவதும் வாத பிரதிவாதங்கள் வலுத்து வருகின்றன. மாநாட்டு முடிவு கண்டு விரக்தியின் உச்சிகே சென்றுள்ள சுற்றுச் சூழல் ஆர்வலர்களும், இயற்கை பாதுகாப்பு விரும்பிகளும் இந்த உலகம் வாய் பிளந்து காத்திருக்கும் அபாயத்தினை அதன் உண்மைகளை அனைவருக்கும் உறைக்கும்படி சொல்லி உள்ளனர்.

'மிகவும் கீழ்த்தரமான இந்த ஒப்பந்தத்தை கையெழுத்திட்டதன் மூலம் உலகத் தலைவர்கள் உலகில் உள்ள பல ஏழை நாட்டின் குழந்தைகளுக்கு மரண சாசனம் எழுதியுள்ளனர். அடுத்த ஆண்டு இறுதியில் மெக்சிகோவில் நடைபெறும் மாநாட்டிற்குள் ஏழை நாடுகளைச் சேர்ந்த 2 லட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் இறந்து விடும். என்று கூறியுள்ளார் 'குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்' என்ற அமைப்பின் கொள்கை ஆலோசகர் லிடியா பாக்கர்.

அவரது இந்தக் கூற்றை உண்மையாக்கப் போகிறதா இரக்கமற்ற இந்த மேற்குலகம்...?

**12.02.2010**

www.padippakam.com

# அமெரிக்க வசமாகுமா...?
# பாகிஸ்தான் அணுகுண்டுகள்...
# அனுமதிப்பார்களா தீவரவாதிகள்...?

அல்கொய்தா - அணு குண்டு - பாகிஸ்தான் இந்த வார்த்தைகளால் ஆட்டம் கண்டுபோய்க் கிடக்கிறது அமெரிக்கா.

2011 செப்டம்பர் 11 இல் உலகத்தையே நிலைகுலைய வைத்த அல்கொய்தா அமைப்பின் தலைவன் ஒசாமாவை வேட்டையாடப் புறப்பட்ட அமெரிக்க துருப்புகள் இன்னும் ஆப்கான் தேசத்தின் டோரோபோரா மலைகளில் கூடாரத்தை காலி செய்யமுடியாமல் ரொட்டி சுட்டுக் கொண்டிருக்கின்றன. கூடவே துணைக்கு நேட்டோ நாடுகளின் ராணுவம் பீரங்கிகளையும் ஏவுகணைகளையும் சுமந்த் படியே! வேட்டைப் பொருள் கிடைக்காத நிலையில் நாம் வேட்டையாடப் படுவோமோ. என்ற பீதி வார்தைகள் அளவுக்கு அதிகமாகவே வெளியாகியுள்ளது. உலகத்தின் வல்லரசு நாயகன் ஒபாமாவிடமிருந்து. உண்மையிலேயே அமெரிக்காவுக்கு தொடை நடுக்கம் வந்துவிட்டதா...? இல்லை பீதி முலாம் பூசப்பட்ட வார்த்தைகளுக்குப் பின்னே வேறு ஏதும் ஒளிந்திருக்கிறதா...?

கடந்த டிசம்பர் 2ஆம் தேதி - வாஜிங்டன்னின் வெஸ்ட் பொய்ண்ட் (West Point) ராணுவ அகாடமியில் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தொடர்பான கொள்கை முடிவை அறிவித்தார் ஒபாமா. அமெரிக்க தொலைக் காட்சியில் 35 நிமிடம் ஒளிபரப்பான அவருடைய உரை உலகம் முழுவதும் அலசப் படுகிறது.



படிப்பகம்

'அமெரிக்கா தலைமையிலான சர்வதேச படையால் ஆப்கானிஸ்தானில் தோல்வி அடைந்த அல்கொய்தா தலைவர்கள் எல்லை கடந்து பாகிஸ்தானுக்குள் நுழைந்து அங்கு தங்களுக்கு என்று சொர்க்கபூமியை உருவாக்கிக்கொண்டனர். ஆப்கானில் தேர்ந்து எடுக்கப்பட்ட அரசாங்கம் இருந்தாலும் அது ஊழல் போதைப்பொருள் வியாபாரம் ஆகியவற்றால் தடுமாறி வருகிறது. இந்த அரசாங்கத்தை கவிழ்க்கவேண்டும் என்பதில் அல்கொய்தாவும் தலிபான்களும் இணைந்து முயன்று வருகின்றன. பாகிஸ்தானில் உள்ள அணுஆயுதங்களை கைப்பற்றி அவற்றின் மூலம் அமெரிக்கா மீதும் அதன் தோழமை நாடுகள் மீதும் தாக்குதல் நடத்துவதில் அல்கொய்தா தலிபான் தீவிரவாதிகள் ஆர்வம் கொண்டு உள்ளனர். பேரழிவு ஆயுதங்களை தீவிரவாதிகள் கைக்கு கிடைக்காமல் செய்யவேண்டும் என்பதில் நாங்கள் அதிக ஆர்வம் காட்டி வருகிறோம்... இவை தான் உருக்கம் கலந்த எச்சரிக்கையுடன் வெளியாகிய ஒபாமாவின் கருப்பொருள் வார்த்தைகள்...

அப்பொழுதிலிருந்தே இதில் ஏதோ அரசியல் வியூகம் இருப்பதாக உணரத் தொடங்கி விட்டது உலகம். இந்த உரை இடம்பெற்ற சில நாட்களிலேயே அதவாது டிசம்பர் 8ஆம் தேதி பாகிஸ்தான் அரசுக்கு அமெரிக்காவினால் ஓர் அதிர்ச்சித் தகவல் அனுப்பப்பட்டுள்தாக செய்திகள் வெளியாகியுள்ளன. 'பாகிஸ்தானிலுள்ள தலிபான் மற்றும் இதர தீவிரவாத முகாம்களை மூட அந்நாட்டு அரசு உறுதியான நடவடிக்கையை எடுக்காவிட்டால், அமெரிக்காவே அதனை செய்ய தனது படையை பாகிஸ்தானுக்கு அனுப்ப வேண்டி ஏற்படும் என எச்சரிக்கை விடுத்து தகவல் அனுப்பி உள்ளதாக 'த நியூயார்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இவற்றை மேலோட்டமாகப் பார்த்தால் தீவிரவாதத்தை அழிப்பதற்கான அமெரிக்காவின் அதிரடி பாணி என்று மட்டும்தான் தெரியும். ஆனால் ஒபாமாவின் வார்த்தை அலங்காரங்களில் வழக்கமான அமெரிக்க ஆதிக்க தொனியும், அரசியல் சூட்சுமமும் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதாகவே சர்வதேச அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர். கொஞ்சம் வெளிப்படையாகச் சொல்லப் போனால் பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் முதல், அரசியல் நடவடிக்கை வரை அனைத்தும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும் என்பதுதான் அது. ஆனால் அது எந்த அளவுக்கு சாத்தியப்படும்? அப்படியே வந்தாலும் கூட அமெரிக்க எதிர்ப்புச் சிந்தனை கொண்ட பெரும்பான்மையான பாகிஸ்தானியர்கள் இதனை பொறுத்துக் கொண்டிருப்பார்கள்..?

இதனால் ஏற்படும் மக்கள் கொந்தளிப்பினால் எப்படியான எதிர்விளைவுகள் ஏற்படும்? அதனை அடக்க அமெரிக்கா கொடுக்க வேண்டிய விலை போன்றனவும் அலசப்படுகின்றன.

பாகிஸ்தானின் அண்டை நாடுகளில் இந்தியா , அமெரிக்காவின் உற்ற தோழனாகி விட்டது. இட்ட வேலையை செய்து முடிப்பதில் வெள்ளை மாளிகையின் விசுவாசியாக மாறிவிட்டது டெல்லி செங்கோட்டை. மற்றொரு நாடான ஆப்கானிஸ்தானில் 100 சதவீதம் அமெரிக்காவின் நிழல் அரசாங்கம் என்பதும் ஆப்கானின் அதிபராக ஹமீட் ஹர்சாய்தான் தொடர வேண்டும் என்பதற்காக சமீபத்திய தேர்தலில் அமெரிக்கா மேற்கொண்ட சித்து விளையாட்டுகளும் அனைவரும் அறிந்ததே. அதேபோல் பாகிஸ்தானையும் வளைக்க மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளும் பலன் அளிக்காத நிலையில் தான் தற்போது நேரடியாகவே பாகிஸ்தானில் களம் புகப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

பாகிஸ்தானால் அமெரிக்காவை எந்த அளவுக்கு எதிர்க்க முடியாதோ அதே அளவுக்கு அல்கொய்தா, லஸ்கர்- இ-தொய்பா போன்ற பல்வேறு தீவிரவாத இயக்கங்களளையும் (மறைமுகமாக) ஆதரிக்க வேண்டிய கட்டாயத்தில் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் உள்ளனர். ஒபாமா சொல்வது போல் பாகிஸ்தான் பயங்கரவாதத்தின் கருவறை என்பதிலோ அங்கு 50 க்கும் மேற்பட்ட தீவிரவாத இயக்கங்கள் முளை விட்டு செழித்து வளருகின்றன என்பதிலோ எதுவித ஐயப்பாடும் இல்லை. இன்று உலகநாடுகளின் பெரும்பாலான நாடுகளில் அரங்கேற்றப்படும் நாசவேலைகளின் நாயகர்களுக்கும், பாகிஸ்தானுக்கும் ஏதாவது ஒரு தொடர்பு இருந்து கொண்டே இருக்கிறது என்கிறது ஓர் ஆய்வு. அதேவேளை பயங்கரவாதிகளின் சொர்க்கம் என்று ஒபாமாவால் வருணிக்கப்படும் பாகிஸ்தானை அந்த சொர்க்கத்தை கட்டி எழுப்பியதில் வெள்ளை மாளிகைக்கும் இருந்த பெரும் பெரும் பங்கை வரலாறு மறந்து விடவில்லை.

1979 ஆம் ஆண்டில் ஆப்கானுக்குள் சோவியத் படைகள் நுழைந்த பின், 1980களில் தான் ஜிகாத் இயக்கங்கள் பாகிஸ்தானில் வேரூன்றத் தொடங்கின. ஆப்கான் படைகளுக்கு ஆதரவாகவும் ரஷ்யப் படைகளை எதிர்த்தும் முஜாகிதீன்கள் அப்போது கொரில்லா யுத்தம் நடத்தினார்கள். இதற்கு ஆதரவாக அமெரிக்க ஆதரவுலகம் முழுவதிலும் இருந்து ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் பாகிஸ்தானை நோக்கிச் சென்றார்கள். இதுவே பாகிஸ்தானில்

www.padippakam.com

பயங்கரவாதம் முளைவிட முதல் காரணமாக இருந்தது. அப்போது பாகிஸ்தான் அதிபராக இருந்த ஜெனரல் ஜியா உல் ஹக் பயங்கரவாதிகளுக்குத் தேவையான உதவிகளை செய்தார். பின்னர் அடுத்தடுத்து பாகிஸ்தானின் உயர் பதவிகளுக்கு வந்த அனைவரும் நேரடியாகவோ அல்லது ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பின் மூலமாகவோ பயங்கரவாதிகளுக்கு உதவத் தொடங்கினர். பயங்கரவாதத்துக்கு உதவாத பாகிஸ்தனத்தின் பிரதமர் மற்றும் அதிபர்களின் உயிருக்கே அச்சுறுத்தல் ஏற்படத் தொடங்கியது.

சர்வதேச அளவில் நடக்கும் 90 சதவீத பயங்கரவாத செயல்களுக்கும் பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு தொடர்பு இருக்கிறது என்று 1987ஆம் ஆண்டில் வெளியான ஓர் அறிக்கையிலேயே தெரிவிக்கப்பட்டது. இந்த தீவிரவாத அமைப்புகள் எல்லாம் மதவாத சித்தாந்தங்களுக்கு உட்படுத்தப் பட்டிருப்பதும் இவற்றை எதிர்க்கும் பாகிஸ்தானிய அரசுகளும், அதிபர்களும் மக்கள் விரோத சக்திகளாக்கப்படுவதும் இன்றும் தொடர்கிறது. அண்டை நாடான இந்தியாவுக்கு சில நெருக்கடிகளையும், தொந்தரவுகளையும் கொடுப்பதற்கு இந்த தீவிரவாத இயக்கங்களைத்தான் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பு பயன்படுத்தி வருகிறது. சில இடங்களில் தம்மால் நேரடியாக களம் இறங்கி சந்திக்க முடியாத பிரச்சினைகளை தீவிரவாதிகளை பயன்படுத்தி காரியத்தை முடித்துக் கொள்கிறது இஸ்லாமாபாத்.

இந்நிலையில் ஆப்கான் தேசத்துக்கு தங்களால்தான் பாதுகாப்பு என்று கூறி வரும் அமெரிக்க தலைமையிலான படைகளை அந்நாட்டு மக்களே வெறுக்கத் தொடங்கி உள்ளனர். பல இடங்களில் தீவிரவாதிகளுக்கான தாக்குதல் என்ற பெயரில் அப்பாவி பொதுமக்கள் பலியாகி வருகின்றனர். தற்போது பாகிஸ்தானுக் குள்ளும் நேரடியாக இறங்கப் போவதாக அமெரிக்கா வெளிப்படையாக அறிவித்துள்ள நிலையில் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் மேலும் அதிகரித்து தினந்தோறும் நூற்றுக்கணக்கான உயிர்களை பாகிஸ்தான் பலி கொடுத்து வருகிறது. பாகிஸ்தான் உளவு துறையான (ஐ.எஸ்.ஐ.) மற்றும் ராணுவத்தின் ஒருபிரிவு ஆகியவற்றின் ஆதரவும் தீவிரவாதிகளுக்கு இருப்பதாக கூறப்படுகிறது. அமெரிக்க படைகளும் நேரடியாக பாகிஸ்தான் எதிர்தாக்குதல் களத்தில் இறக்கப்பட்டால் விளைவுகள் இன்னும் அதிகரிக்கலாம் என அஞ் சப்படுகிறது. .



படிப்பகம்

பாகிஸ்தானில் இருக்கும் அணுகுண்டுகள் மற்றும் அணு ஆயுதங்கள் அனைத்தும் தீவிரவாதிகள் கைப்பிடியில் சிக்கும் ஆபத்து உள்ளது என்பதிலும் அதிலிருந்து அவை காப்பற்றப்பட வேண்டும் எனபதிலும் மாற்றுக்கருத்து இருக்கமாட்டாது. ஒபாமா அரசில் உள்ள உயர் அதிகாரிகளுக்கும், பாகிஸ்தான் ராணுவத்துக்கும் இடையே ஒரு ரகசிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் அதன்படி, பாகிஸ்தானில் உள்ள அணு குண்டு பாதுகாப்புக்கு நன்கு பயிற்சி பெற்ற அமெரிக்க படையினரும் கூடுதலாக ஈடுபட உள்ளதாகவும் அமெரிக்காவை சேர்ந்த பிரபல பத்திரிகையாளர் செய்மவுர் என்பவர் அமெரிக்க உளவுத்துறையை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டுள்ளதும் இங்கே கவனிக்கவேண்டியது. அதேவேளை பாகிஸ்தானில் உள்ள அணு குண்டுகள், அணுஆயுத திட்டங்கள் மற்றும் அணு ஆயுதங்களை தங்கள் பாதுகாப்பின் கீழ் கொண்டு வரும் எண்ணம் எதுவும் இல்லை என அமெரிக்க அரச சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதனை நம்புவதற்கோ ஏற்றுக் கொள்வதற்கோ யாரும் தயராக இல்லை.

ஒருவேளை பாகிஸ்தானிலுள்ள அணு ஆயுதங்கள் அமெரிக்காவின் கைகளில் சிக்கினால் ஏகாதிபத்தியத்தின் அதிகார ஆதிக்கம் பாகிஸ்தானில் மட்டுமல்ல ஆசியா பூராவுமே உச்சம் தொடலாம். அப்படி நடந்தால் உள்நாட்டுக் குழப்பங்களும் தீவிரவாதத் தாக்குதல்களும் பாகிஸ்தானத்தில் இன்னும் வலுவடையும் என்பதுடன் ஒட்டு மொத்த இஸ்லாமிய உலகின் கடுமையான் வெறுப்புக்கும் பராக் உசேன் ஒபாமா அரசு உள்ளாகும் என்பதும் மறுக்க முடியாத ஒன்று.

அல்கொய்தா - அணுகுண்டு - பாகிஸ்தான் - இந்த விசயத்தில் ஒபாமாவின் நிதானமான அணுகுமுறையைப் பொறுத்தே அதன் எதிர்விளைவுகள் அமையும். அமெரிக்க வல்லரசை விட பாகிஸ்தானில் அதிகமாகவே வேர் விட்டிருக்கிறது பயங்கரவாதத்தின் வேர்கள்.

**01.02.2010**

www.padippakam.com

# ஒரு புத்தமதத் துறவியின் அரசியல் அசைவு

உலகம் முழுவதும் பிரச்சினைகளின் பிறப்பிடங்களாய் இருப்பவை எல்லைக் கோடுகள்தான். இதனால் இந்தப் பூமி சந்தித்த போர்க் களங்களின் எண்ணிக்கையும் ஏராளம்..! உயிரிழப்புக்களும் ஏராளம் ஏராளம்...! அதற்கான தீர்வுகள் இன்னமும் கிடைக்காமல் எந்த நேரமும் வெடிக்கத் தயாராகவே உள்ள காயம் மாறாத தேசங்கள் பல. இதன் வடிவமாகவே ஏழாம் பொருத்தமாக இருக்கும் இந்தியாவும் சீனாவும் மீண்டும் முட்டி மோதிக் கொள்ள ஆயத்தமாவதாக செய்திகள் வருகின்றன.

மியான்மர், பூட்டான், சீனா இவைகளுக்கிடையே அழகிய மலைக் கவிதையாய் விரிந்து கிடக்கும் அருணாச்சல பிரதேசம்தான் இந்திய சீனா உறவின் தொடர் விரிசலுக்குக் காரணம். 1858-லேயே ஆங்கிலேயர்களால் இந்தியாவுடன் இணைக்கப்பட்ட இங்குள்ள பூர்வீகக் குடிகள் திபெத்திலிருந்து குடியேறியவர்கள். 1913-14 இல் சீனா, பிரிட்டன், திபெத் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் சிம்லாவில் கூடி வகுத்த 890 கி.மீ நீள எல்லைக் கோடும், தவாங் என்ற பகுதியை அன்றைய ஆங்கிலேயே அரசு இந்தியாவிற்கு சொந்தமானதாக நிர்ணயம் செய்தது. ஆனால் அன்று முதல் இன்றுவரை இவற்றை ஏற்க சீனா மறுத்து வருகிறது.

அருணாச்சலப்பிரதேச பகுதிக்கு உரிமை கொண்டாடிய சீன அரசு 1962-அக்டோபர் 20 இல் தனது துருப்புகளை அங்கே ஊடுருவச் செய்து இந்திய சீன எல்லையில் படைகளைக் குவித்தபோது அதற்கு இந்தியா பதிலடி கொடுக்க போர் உக்கிரமடைந்து. இரு



படிப்பகம்

தரப்பிலும் பெருமளவு சேதம் ஏற்பட்டு அதே ஆண்டு நவம்பர் 20 ஆம் தேதி போர் நிறுத்தம் செய்வதாக சீனாவே அறிவித்தபின்னர் போர் நிலைமை தணிந்திருந்தாலும் பிரச்சினைகள் நீறு பூத்த நெருப்பாகவே இருந்து கொண்டு வருகிறது. தற்போது இந்தியாவின் ஆளுகைக்கு உட்பட்ட அருணாச்சல பிரதேச மாநிலத்துக்கு கடந்த மாதம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தேர்தல் பிரச்சாரத்திற்காக சென்றதற்கு கடும் கண்டனம் தெரிவித்திருந்த சீனா சர்ச்சைக்குரிய இந்த எல்லையில் மீண்டும் தமது படைகளை ஊடுருவச் செய்துள்ளது.

சீனா செல்ல விரும்பும் காஷ்மீரிகளுக்கு இந்திய அரசு வழங்கிய கடவுச் சீட்டில் விசாவை பதிவு செய்யாமல் தனித்தாள் ஒன்றில் விசா வழங்கி சீனா தனது கோபத்தின் உச்சத்தை பலமடங்கு உயர்த்தியுள்ளது. பிரம்மபுத்திரா நதியில் சீனா அணை கட்டப்போவதாகவும் செய்திகள் கசிந்தன. இந்நிலையில் இருதரப்பும் ஆவேச அறிக்கைப் போர் நடத்தி போர்க்கள நிலைக்கும் பதற்றத்திற்கும் உச்சம் சேர்த்தன. ஆனால் கடந்த அக்டோபர் கடைசி வாரத்தில் தாய்லாந்தின் ஹீவாஹின் நகரில் நடைபெற்ற 7 -ஆவது ஆசியான் மாநாட்டில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கும் சீன பிரதமர் வென் ஜியாபாலோவும் பூங்கொத்துகள் கொடுத்து கட்டித் தழுவி விரிவாக பேச்சு நடத்தி, புன்னகையுடன் ஊடகங்களுக்கு பேட்டியும் அளித்தனர். ஒருவழியாக பிரச்சினை முடிந்தது என்றுதான் அனைவரும் நினைத்தனர். ஆனால் அந்த நினைப்பு வெகு நாளைக்கு நீடிக்கவில்லை. மீண்டும் இரண்டு தரப்பும் களத்தில் குதிக்க தயாராகி வருவதாக அறிக்கைகள் செய்திகள்... தற்போதைய பிரச்சினைக்கு காரணம் புத்த மதத் துறவி தலாய் லாமாவின் தவாங் பகுதி சுற்றுப் பயணம். ஒரு துறவியின் மதச் சுற்றுப் பயணம் வல்லரசு நாடுகளாய் வளர்ந்து கொண்டிருக்கும் சீனாவையும் இந்தியாவையும் மீண்டும் தமது பீரங்கிகளை துடைக்கத் தொடங்கி வைத்துள்ளது. ஒரு புத்தமத துறவியின் பயணத்துக்கு பின்னே ஒரு போர்க்களமா...?

நாடு கடந்த திபெத்திய அரசை பிரகடனம் செய்து இந்தியாவில் தஞ்சம் புகுந்திருப்பவர் திபெத்தின் புத்த மதத்துறவியான 14 -வது தலாய் லாமா. 1954-ல் திபெத்தை சீனா ஆக்கிரமித்தபோது அங்கிருந்து தப்பி இந்தியாவில் தஞ்சம் புகுந்து இந்திய அரசின் ஆதரவுடன் இவர் நிறுவிய நாடு கடந்த திபெத்திய அரசு இப்போது இந்தியாவின் தர்மசாலாவை மையமாகக் கொண்டு இயங்கி வருகிறது. தமிழகம் உட்பட இந்தியா முழுக்க 35 இடங்களில் திபெத்தியர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் உள்ள பகுதி

தனி குடியேற்ற இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. எல்லைப் பகுதியான கொள்ளேகாலில் கூட திபெத்திய குடியேற்றப் பகுதிகள் உள்ளன. தலாய் லாமா திபெத்திலிருந்து தப்பி இந்தியாவுக்குள் நுழைந்த முதல் இடம் அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் உள்ள தவாங். உள்ளத்தாலும் உடலாலும் சோர்ந்து அங்கிருந்து தப்பி வந்த தலாய் லாமாவுக்கு இந்தப் பகுதி மக்கள்தான் முதலில் அடைக்கலம் கொடுத்தவர்கள்.

இங்குள்ள 400 ஆண்டு பழமைமிக்க புத்தர் கோயிலுக்கு கடந்தவாரம் சென்ற தலாய் லாமாவை அருணாச்சலப் பிரதேச முதல்வர் டோர்ஜி காண்டு உள்பட அரசுப் பிரதிநிதிகளும் புத்த மதத்தைச் சேர்ந்த 35,000க்கும் மேற்பட்ட மக்களும் வரவேற்றார்கள். தவாங் பகுதியே கோலாகலமாகக் காட்சியளித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. சீனாவிலிருந்து தப்பி ஓடி வந்த தலாய் லாமா தன்னுடைய சீடர்களுடன் தஞ்சம் புகுந்த இடமான இந்த தவாங் பகுதி திபெத்தியர்களின் புண்ணிய பூமியாக கருதப்படுகிறது.

அப்பகுதிக்கு தலாய் லாமா செல்லும் போது எல்லாம் அதற்கு எதிராக ஓங்கி உயரும் சீனாவின் குரலால் எல்லையிலுள்ள அப்பகுதியினதும் அங்கு வாழும் மக்களினதும் கொதி நிலையும் உயர்ந்தே இருக்கும். தற்போது 6 ஆவது தடவையாக அவர் தவாங் பகுதிக்கு சென்றுள்ள நிலையில் சீனாவிடமிருந்து முன்னெப்போது மில்லாத அளவிற்கு பலத்த எதிர்ப்பு கிளம்பி இரு நாடுகளும் தமது படைகளை எல்லைகளில் குவித்து வருகின்றன. தவாங் வருகையில் மனம் குளிர்வதாக பேட்டி அளித்துள்ள தலாய்லாமா எனது வருகையில் எவ்வித அரசியல் உள்நோக்கமும் இல்லை. நான் எங்கு சென்றாலும் மனித நேய மாண்பையும் சர்வதேச சகோதரத் துவத்தையும் மட்டுமே வலியுறுத்துகிறேன். இதை வலியுறுத்தவே தற்போது தவாங்குக்கும் வந்துள்ளேன். என்றும் 50 ஆண்டுகளுக்கு முன்பு திபெத்தை சீனா ஆக்கிரமித்த போது இமயமலையிலிருந்து தவாங் வழியாக இந்தியாவில் தஞ்சமடைந்தபோது மிகுந்த மன உளைச்சலுடனும் நம்பிக்கையை இழந்தும் காணப்பட்டேன். ஆனால் இப்போது நான் மகிழ்ச்சியாகவும் மிகுந்த நம்பிக்கையுடனும் இருக்கிறேன் எனவும் தெரிவித்தார். திபெத் மீது தொடர்ந்து தனது ஆதிக்கம் நீடிக்க வேண்டும் என்கின்ற சீனாவின் நினைப்பை வன்மையாகக் கண்டிக்கிறேன்' என்றும் தனது பேட்டியில் தலாய்லாமா கூறினார்.

www.padippakam.com

என்னதான் ஆன்மீகப்பயணம் என அவர் கூறினாலும் அவருடைய ஒவ்வொரு அசைவிலும் ஒருவித சர்வதேச அரசியல் ஒளிந்திருக்கிறது என்பதனை உணரலாம். அவரை மையப்படுத்தி அமெரிக்கா உட்பட்ட சில ஏகாதிபத்திய நாடுகள் அரசியல் பகடைகளை தொடர்ந்து உருட்டிக் கொண்டிருப்பதனையும் இதன்மூலம் சீனா மீதான மறைமுக எதிர்ப்பு உணர்வு வெளிப்படுத்தப்படுவதனையும் காணலாம். சீனாவின் கம்யூனிச அரசைப் பொருத்தமட்டில் தலாய் லாமா ஏகாதிபத்தியத்தின் கைக்கூலி. பிற்போக்கு நிலவுடைமைச் சக்தி. முக்கியமாக சீனாவின் தலைமையை ஏற்க விரும்பாமல் தர்மசாலாவில் இருந்தபடி திபெத்தியர்களைத் தூண்டிவிட்டு சீனாவில் கலகத்தை ஏற்படுத்தும் ஒரு பிரிவினைவாதி. அவ்வளவுதான்.

சீனாவின் கம்யூனிசமும் சந்தைப் பொருளாதாரமும் கலந்த குழப்பமான அரசியல் நிலை திபெத்திய பாரம்பரியக் கலாசாரத்தை நாசமாக்கிவிடும். தன்னாட்சி அதிகாரம் இல்லாத திபெத் தனி அடையாளம் இல்லாமல் போய்விடும் என்ற அச்சம் தலாய் லாமா வட்டாரத்தில் நிறையவே உலா வருகின்றன. பல்வேறு துறைகளிலும் பலம் பொருந்திய சீனாவுடன் மல்லுக்கு நிற்பதற்கு காவித்துறவிக்கு இந்தியாவினதும் சீனத்திற்கு எதிரான ஏகாதிபத்திய நாடுகளினதும் உதவியும் ஆசியும் அவசியம். அவர்களின் அசைவுக்கு ஏற்ப லாமா ஒருபோதும் ஆட்டம் போடத் தயங்கியதில்லை. அந்த வகையில்தான் அவருடைய தற்போதைய தவாங் பயணமும் கூட. தனக்கு அடைக்கலம் கொடுத்த இந்தியாவுக்கு தன்னுடைய விசுவாச வெளிச்சத்தை விளம்பரப் படுத்திக் கொள்வதற்காக இதனை ஒரு வாய்ப்பாக அவர் பயன்படுத்திக் கொண்டார்.

இந்திய அரசு கொடுத்த அழுத்தத்தின் காரணமாகவே தற்போது நிலவிவரும் சிக்கலான சூழலில் தலாய் லாமா அருணாச்சல பிரதேசத்திற்குப் பயணம் மேற்கொண்டுள்ளார் எனவும் சொல்லப்படுகிறது. தலாய் லாமாவின் பயணத்தின்போது சீனா தாக்குதல் நடத்தினால் அதனை முறியடிக்க ரஷ்யாவுடன் இணைந்து தயாரித்த பிரம்மோஸ் ஏவுகணைகளை இந்திய இராணுவம் எல்லைப் பகுதியில் நிலைப்படுத்தியுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

சீனா என்றுமே இந்தியாவின் நண்பனாக இருக்கமுடியாது. அதிகபட்சம் சீனா இந்தியாவின் வெளிப்படையான எதிரியாக இல்லாமல் இருக்கலாம். சீனா சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் சிக்கிமை இந்தியாவின் பிரதேசம் என்று ஏற்றுக்கொண்டது.



படிப்பகம்

இன்றுவரை அருணாசலப் பிரதேசத்தை இந்தியாவுடையது என்று ஏற்காத சீனா மக்மோன் எல்லைக்கோட்டை ஒரு போதும் அங்கீகரிப்பதில்லை. என்கின்ற நிலையிலும் மாறுதலை ஏற்படுத்தலாம்.

ஆனால் சீனாவுக்கு எப்போதும் ஒருபக்கப் பல்வலிபோல திபெத் குடைந்துகொண்டே இருக்கவேண்டும் என்பதற்காக இந்தியா தலாய் லாமாவை தொடர்ந்தும் ஆதரித்தால் அது அற வழிபாட்டு நிலையாக இருக்காது. தலாய் லாமாவும் திபெத்தியர்களும் இந்தியாவின் நண்பர்கள்; அவர்களுக்கு இந்தியாவின் கதவுகள் திறந்தே இருக்கும் என்று சொல்லும் இந்தியா தலாய்லாமாவிடம் மற்றொரு உண்மையையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். திபெத் தொடர்பாக திபெத்தில் தன்னாட்சி உரிமை தொடர்பாக இந்தியா சீனாவிடம் எந்த முகத்தைக் கொண்டு பேசமுடியும். அப்படிப் பேசினால் சீனதரப்பிலிருந்து காஷ்மீர் என்ற கொடி தூக்கப்படாதா...?. இந்தியாவில் பல இடங்களில் சுய நிர்ணய உரிமையை வைத்து நடைபெறும் போராட்டங்களை தார்மீக வழியில் எதிர்கொள்ள இந்தியா தயாராக இல்லை.

திபெத்திய அரசியலுக்காக இரு வளரும் வல்லரசுகளிடையே மோதல் உருவாவதுதான் தலாய் லாமாவின் காய் நகர்த்தல் என்றால் அந்தக் காவி உடைக்குள் ஒளிந்திருக்கும் தந்திரத்தை இரு நாடுகளும் புரிந்து கொண்டு ஆக்கப்பூர்வ பேச்சுவார்த்தைக்கு முன்வருவதே நல்லது.

**20.01.2010**

# தொடரும் அல்கொய்தாவின் அச்சுறுத்தல்கள்...

செப்டம்பர் 11, 2001... அதுவரை அந்த அமைப்பின் பெயரும், அந்த தலைவனின் பெயரும் பரவலாக பெரும்பாலானவர்கட்கு, தெரியாமலே இருந்தது எனலாம். அந்த நாள் உலகத்தின் வல்லரசு என்று மார்தாட்டிக் கொண்டிருந்த அமெரிக்காவின் உயர்ந்த கட்டிடத்தை 3 விமானங்களால் மோதி உடைத்து 3 ஆயிரம் அப்பாவி மக்களை படுகொலை செய்த நாள்.

**உலகமே அதிர்ந்தது... ஆச்சரியப்பட்டது...**

அது எந்த அமைப்பு...? அதன் தலைவன் யார்...? என்ற தேடல் ஆரம்பித்தது. அல்கொய்தாவும், அதன் தலைவன் ஒசாமா பின் லேடனும் அதிர்ச்சிப் பொருளாய் மாறிப்போனார்கள். நீண்ட தாடிக்காரரான ஒசாமாவின் கும்பல் எங்கே வரும்? எப்படி வரும்? என்ன செய்யும்? என்பது யாருக்குமே தெரியாது. ஆனால் ஒட்டு மொத்த உலகத்தையே அலறவைக்கும் நாச வேலைகளை மிகவும் கமுக்கமாகவும், கண கச்சிதமாகவும் முடித்து விடுகிறது அந்தக் கும்பல். நவீன அறிவியல், தகவல் நுட்ப கண்டுபிடிப்புகள் உலகம் முழுவதும் அணிவகுத்து வரும் நிலையிலும் அவற்றின் கண்களில் மண்ணைத் தூவி எப்படி தங்களின் சதி வேலைகளை சத்தமில்லாமல் அரங்கேற்ற முடிகிறது என்பதுதான் இன்றுவரை ஒபாமா முதல் ஒட்டுமொத்த உலகமும் விடை கண்டு பிடிக்க முடியாத கேள்வி.

இந்த உலகத்தையே இஸ்லாமிய சித்தாந்தத்தின் கீழ் கொண்டு வர வேண்டும், இஸ்லாமுக்கு எதிரான சக்திகளை பூண்டோடு அழிக்க வேண்டும், அவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள

www.padippakam.com

அமெரிக்கா மற்றும் அதன் தோழமை நாடுகளை ஒழித்துக் கட்ட வேண்டும். இந்த அடிப்படை க் கொள்கைகளுடன் 1988 ஆகஸ்ட் மாதத்திற்குப் பிறகு உருவானதுதான் அல்கொய்தா. சன்னி முஸ்லிம் பிரிவு இளைஞர்கள் மூளைச் சலவை செய்யப்பட்டு இந்த இயக்கத்தில் இணைத்துக் கொள்ளப்படுவதாக சொல்லப்படுகிறது. இந்த அமைப்பின் தலைவரான ஒசாமா பின்லேடன் மிகப் பெரிய செல்வந்தர் குடும்பத்தில் சவுதி அரேபியாவில் பிறந்தவர்.

1990களில் இஸ்லாமிய இளைஞர்களிடம் தமது கொள்கைகள் குறித்து தொடர்ந்து பரப்புரை மேற்கொண்ட ஒசாமா இஸ்லாமிய நாடுகளில் வசித்து வந்த அமெரிக்கர்களையும், அங்கு முகாமிட்டிருக்கும் அமெரிக்க இராணுவத்தினரையும் கொலை செய்யுமாறு முஸ்லிம்களை வேண்டி 'பாத்வா' எனப்படும் வேண்டுகோள் அறிக்கைகள் இரண்டை வெளியிட்டார். சூரியத் சட்ட திட்டங்களை மீண்டும் இஸ்லாமிய மதத்தில் கொண்டுவருவதை தீவிரமாக ஆதரித்து இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்த பின்லேடன், ஆப்கான் மட்டுமே உலகத்தில் முழுமையான முஸ்லீம் நாடு என்றும் அறிவித்தார்! அமெரிக்காவும், இஸ்ரேலும் இஸ்லாத்தின் எதிரிகள் என்றும் அவர்களை அழிப்பதே இஸ்லாத்திற்கு செய்யும் தொண்டு என்றும் கருதியே அல்கொய்தா இயக்கம் தொடங்கப்பட்டதாக சொல்லப்படுகிறது.

எகிப்து, ஆப்கான் என அல்கொதா இயக்கத்தின் வேர்கள் ஆரம்பத்தில் முளைவிட்டு இன்று உலகத்தின் அனைத்து நாடுகளிலும் அவர்களின் இயக்கம் திரை மறைவில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. குண்டு வெடிப்புகள், விமானக் கடத்தல், தற்கொலைப் படைத்தாக்குதல் என நாச வேலைகளின் அனைத்து துறைகளையும் கரைத்துக் குடித்துள்ள அல் கொய்தா ஆட்கள் உலகம் முழுவதும் வைத்திருக்கும் தொடர்புகளைக் கண்டு அஞ்சாத தேசமில்லை. உலகத்தின் பல்வேறு இஸ்லாமிய அமைப்பு களுடனும் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கும் அல்கொய்தா வினர் ஒத்த சிந்தனைகளை உடைய இஸ்லாமிய தீவிரவாதிகளை ஒருங்கிணைத்து அவர்களை தங்களுக்கான பிரதிநிதிகளாகச் செயல்பட வைப்பதில் சிறந்து விளங்குகின்றனர். எந்தச் சதிவேலைகளையும் மிகவும் கவனமாக திட்டமிட்டு அரங்கேற்று வதில் அல்கொய்தாவினருக்கு நிகரான தீவிரவாத அமைப்புகள் வேறு எதுவும் இல்லை என்ற கருத்தும் நிலவுகிறது.



படிப்பகம்

அமெரிக்காவின் இரட்டை கோபுரங்களை தகர்த்த பின்னர்தான் அல்கொய்தாவின் கோர முகம் உலகத்துக்கு தெரியவந்தது. அதன் பின்னரே அமெரிக்கா, உலக நாடுகள் பலவற்றின் ஆதரவுடன் தீவிரவாத துடைத்தொழிப்பில் இறங்க ஆரம்பித்தன. அல்கொய்தா அமைப்பும், ஒசாமாவும் ஆப்கான் மலைப் பகுதியில்தான் ஒளிந்திருப்பதாகக் கருதும் அமெரிக்கா, அங்கு சுமார் 1 லட்சம் பன்னாட்டுப் படைகளை அனுப்பி தலிபான்களையும், அல் கொய்தாவையும் வேட்டையாடுமாறு உத்தரவிட்டுள்ளது. ஆனால் முடிவோ இதுவரை அமெரிக்காவுக்கு சாதகமாக இல்லை. 2001 முதல் இன்று வரை அமெரிக்கா பின்லேடனையும், அவருடைய ஆட்களையும் தேடிக் கொண்டேதான் இருக்கிறது.

இதற்கிடையில் கடந்த கிறிஸ்துமஸ் நாளன்று நைஜீரியா நாட்டில் உள்ள லாகோஸ் நகரில் இருந்து நெதர்லாந்தில் உள்ள அம்ஸ்டர்டாம் நகருக்கு ஒரு விமானம் சென்றது. அதில் பயணம் செய்த அமெரிக்கா செல்லும் பயணிகள் அம்ஸ்டர்டாம் விமானநிலையத்தில் இருந்து அமெரிக்காவில் உள்ள டெட்ராய்ட் நகருக்கு அமெரிக்காவுக்கு சொந்தமான நார்த் வெஸ்ட் ஏர்லைன் விமானத்தில் ஏற்றப்பட்டு அவர்களது பயணம் தொடர்ந்தது. 278 பயணிகளுடன் பறந்நத அந்த விமானம் அமெரிக்க எல்லைக்குள் நுழைந்து டெட்ராய்ட் நகருக்கு அருகே பறந்து கொண்டிருந்தபோது விமானத்தின் 3-ஆவது வரிசையில் அமர்ந்திருந்த பயணி ஒருவர் திடீரென குனிந்து தனது காலில் இருந்த ஏதோ ஒரு பொருளை எடுத்து தீப்பற்ற வைத்தார். அருகில் இருந்த பயணிகள் அலற மற்ற பயணிகள் பாய்ந்து சென்று அவரை மடக்கி தீ பரவவிடாமல் தடுத்தனர். விமான ஊழியர்களும் தீயணைப்பு கருவிகளுடன் இணைந்து தீ உடனடியாக அணைக்கப்பட்டது. பயணிகளும், ஊழியர்களும் அவரை மடக்கிப் பிடித்து கட்டிப்போட டெட்ராய்ட் நகரில் விமானம் அவசரமாக தரை இறக்கப்பட்டது. விசாரணையில் அந்த பயணி அல்கொய்தா தீவிரவாத இயக்கத்துடன் தொடர்பு உடையவர் எனவும் விமானத்தை தகர்க்கும் நோக்கத்துடனேயே தீ பற்ற வைக்கப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளதாம்.

23வயதுடைய அப்துல் முதலாத் என்கின்ற நைஜீரியா நாட்டைச் சேர்ந்த அந்த இளைஞர் லண்டன் நகரத்தில் உள்ள உயர் கல்லூரி ஒன்றின் மாணவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. பயணிகளின் தீவிர நடவடிக்கையால் இந்த மிகப் பெரிய சதி வேலை முறியடிக்கப் பட்டிருக்கா விட்டால் மீண்டும் ஒரு 2001 துயரச் சம்பவம் நடந்திருக்கும். இதனை அடுத்து ஆவேசமடைந்த அமெரிக்க

அதிபர் ஒபாமா 'அல்-கொய்தா' தீவிரவாதிகளை உடன் ஒழிக்க வேண்டும். நமக்கு பலவிதங்களில் அச்சுறுத்தலாக உள்ள அவர்கள் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஏமன், சோமாலியா போன்ற நாடுகளில் இருப்பதாக அறிய வருகிறது. அவர்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் சரி தேடிக்கண்டுபிடித்து அவர்களை அழிப்போம்...' என்றார். இதுமட்டுமின்றி அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகளையும் சகட்டுமேனிக்கு திட்டித் தீர்த்தார் ஒபாமா. நமது புலனாய்வு அமைப்பினர் பயங்கரவாதிகளை பற்றிய ஏராளமான தகவல்களை சேகரித்துள்ளனர். இருப்பினும் இந்த தகவலை மற்ற துறையினரோடு பகிர்ந்து கொண்டிருந்தால், கடந்த 25ஆம் தேதி விமானத்தை தகர்க்க சதி நடந்தே இருக்காது. புலனாய்வுத் துறையினர் இந்த அலட்சியப் போக்கை மன்னிக்க முடியாது. இனி மேலும் இதுபோன்ற அஜாக்கிரதையான செயலை புலனாய்வுத் துறையினர் மேற் கொள்ளக்கூடாது. அவர்களது நடவடிக்கையில் தான் அமெரிக்க மக்களின் வாழ்க்கை உள்ளது. நாம் திறமையாக செயல்பட்டால் மட்டும் போதாது விரைவாகவும் செயல்பட வேண்டும். ஏமன் போன்ற நாடுகளில் உள்ள அமெரிக்கர்களை மட்டும் அல்-கொய்தா பயங்கரவாதிகள் குறிவைக்கவில்லை. ஒட்டுமொத்த அமெரிக்காவையே குலைக்க சதி செய்கின்றனர். இதற்கு நாம் ஒரு போதும் இடம் கொடுக்கக்கூடாது. எந்தவித தாக்குதலையும் எதிர்கொள்ளும் வகையில் தான் உங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்று புலனாய்வுத்துறையினர் மீது கோபம் கொப்பளித்துள்ளார் ஒபாமா.

2001-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ஆம் தேதி இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட பிறகு, முடுக்கி விடப்பட்ட அமெரிக்க உளவுத்துறை சமீபகாலமாக மந்தநிலையில் செயல்படுவதே இந்த பின்னடைவுக்கு காரணம் என அமெரிக்க ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அல்கொய்தாவை ஒழித்துக் கட்ட என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்வோம். அதே சமயத்தில், உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம் சமூகத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தும் நமது கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லை' என்றும் கூறி இருக்கிறார் அமெரிக்க அதிபர்.

இஸ்லாமிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் நெடுங் காலமாகவே சித்தாந்த ரீதியான கருத்து மோதல்களும் பொருளாதார சிக்கல்களும் உள்ள நிலையில் சதாம் உசேன் அமெரிக்காவால் தூக்கிலிடப்பட்ட சம்பவமும் ஆப்கான் மற்றும் வளைகுடா நாடுகளில் அமெரிக்க ராணுவம் ஆக்கிரமித்து முகாமிட்டு வருவதும், ஒவ்வொரு

www.padippakam.com

இஸ்லாமியனையும் வெள்ளை மாளிகை நிருவாகத்தின் மீது சீற்றம் கொள்ளச் செய்துள்ளது. அதற்கு வடிவம் கொடுக்கும் விதமாக அல்கொய்தா நடத்தும் தீவிரவாதக் களப்பணிகளுக்கு பெரும்பாலான இஸ்லாமிய நாடுகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தமது ஆதரவினையும், உதவிகளையும் அல்கொய்தாவுக்கு வழங்கி வருகின்றன என்பது மறுப்பதற்கில்லை.

உலகில் ஏறக்குறைய 180 கோடி மக்கள் இஸ்லாமிய மதத்தை பின்பற்றுகின்றனர். மொத்த நாடுகளில் 30-40 நாடுகளில் இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். உலகின் மொத்த மக்கள் தொகையில் 20வீத முஸ்லீம்கள் அரபு நாடுகளில் வசிக்கின்றனர். ஆசிய கண்டத்திலும் அதிக இஸ்லாமியர்கள் வசிக்கின்றனர். இஸ்லாமே உலகின் இரண்டாவது பெரிய மதமாகவும் இருக்கின்றது. மத ரீதியான சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு அம்மக்களிடம் உணர்வுகளைக் கிளறிவிட்டு 'ஜிகாத் எனும் புனிதப் போருக்கு அல்கொய்தா ஆதரவு கோரி வருகிறது. இப்படியான நிலையில் அல்கொய்தாவின் தீவிரவாத வேர்களை அமெரிக்காவால் வெட்டி எறிவது என்பது எவ்வளவு தூரத்திற்கு சாத்தியம் என்பது தெரியவில்லை.

இதனை எல்லாம் கருத்தில் கொண்டே அமெரிக்க அதிபராக பராக் ஒபாமா பதவியேற்றவுடன் இஸ்லாமிய நாடுகளில் வலம் வந்து அவற்றுடன் நெருக்கமான உறவு கொள்ள விரும்புவதாகவும் அறிவித்தார். இஸ்லாமிய நாடுகள் எதிரிகள் அல்ல என்று பராக் ஒபாமா அறிவித்தாரே தவிர அந்நாடுகளை கவரும் விதமாக அந்த நாடுகள் மீதான மேலாளுமை தொடர்பாக எவற்றையும் உருப்படியாகச் செய்யவில்லை.

கடந்த 9 ஆண்டுகளாக ஒசாமாவைத் தேடி வரும் அமெரிக்க ராணுவம், இன்னும் அவருடைய இருப்பிடத்தைக் கூட கண்டுபிக்க முடியவில்லை. அல்கொய்தாவால் நடத்தப்படும் அடுத்த தாக்குதல்கள் உலகத்தின் எந்த மூலையில் நடந்தாலும் அது அமெரிக்க நிருவாகத்திற்கு அவமானதாகவே அமையும்.

தங்களின் இருத்தலை வெளிப்படுத்தும் விதமாகவும், அமெரிக்காவுக்கு சவால் விடும் வகையிலும் அவ்வப்பொழுது தனது கோர முகத்தை உலகத்துக்கு நினைவு படுத்திக் கொண்டே இருக்கிறது அல்கொய்தா. இதனை அமெரிக்காவால் எப்படி தடுத்து நிறுத்த முடியும் என்பது விடை காணமுடியாத கேள்வியே...?



படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்காவின் ஆவேச அறிக்கைகளாலும் தொடரும் ஆக்கிரமிப்புக்களாலும் பின்லேடன் குழுவை ஒழித்து விட முடியும் என்பதும் யதார்த்ததுக்கு மாறானதே.

நாளுக்கு நாள் உலகம் முழுவதும் வேர் விட்டு கிளை பரப்பி வரும் அல்கொய்தாவை அழிப்பது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு ஒரு மிகப் பெரிய சவாலாகவே இருக்கும்.

இருதரப்புக்குமான வல்லாதிக்க மோதல்களில் அப்பாவிகள் பலியாவதுதான் தொடர் துயரமாக மாறிவருகிறது என்பதுதன் கொடுமையின் உச்சம்.

**09.01.2010**

"நியாயமான யுத்தம்" என்று எதுவும் கிடையாது. எமது யுத்தம் எப்போதும் நியாயமானது. உங்கள் யுத்தம் எப்போதும் நியாயமற்றது. யுத்த தரப்புகளின் நியாயம் இதுவே.

– ஜயதேவ



படிப்பகம்

www.padippakam.com

# தனித் தெலுங்கானா கலவரங்கள்... இந்திய உடைப்பின் அஸ்திவாரமா?

ஆந்திராவில் ஆரம்பித்த தெலுங்கானா பிரிவினைவாத நெருப்பு, தற்போது இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கும் பரவத் தொடங்கி உள்ளது. இதனால், இந்தியா என்கிற ஒரு பெரிய துணைக் கண்டம் சிதறத் தொடங்கி விடுமோ என்கிற அச்சம் எழுவது நியாயமானதே.

சுதந்திர இந்தியாவில் மொழி வழி மாநிலங்களுக்கான கோரிக்கை 50-களின் தொடக்கத்தில் வலுவாக எழுந்து மொழிவாரி மாநிலங்கள் உருவானபோது, தெலுங்கு மொழி பேசும் மக்கள் வசித்த பகுதிகளை ஆந்திர மாநிலமாக உருவாக்க முடிவு செய்யப்பட்டது. இதுகுறித்து ஆய்வு செய்து அறிக்கை தருமாறு அப்போதைய இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேரு மாநில சீரமைப்பு ஆணையத்தை 1953 இல் அமைத்தார். ஆய்வு செய்த ஆணையம் ஆந்திராவுடன் தெலுங்கானாவை இணைக்க பரிந்துரைக்கவில்லை. அப்படி இணைத்தால் அரசுக்கு வருவாயினை அள்ளித் தரும் தெலுங்கானா பகுதிக்கு எந்த நன்மையும் கிடைக்காது என்று ஆணையம் தெரிவித்தது.

அன்றைக்கு ஒரே மாநிலமாக தென்னிந்தியாவில் இருந்த சென்னை ராஜதானியிலிருந்து, விசால் ஆந்திரா (பரந்த ஆந்திரா) மாநிலத்தை உருவாக்கவேண்டும் என்று 1952 ஆம் ஆண்டு அக்டோபர் 19 ஆம் தேதி சென்னையில் உண்ணாவிரதத்தைத் தொடங்கிய பொட்டி ஸ்ரீ ராமுலு, 59வது நாளில் உயிர் நீத்தார். அதைத் தொடர்ந்து நடந்த கிளர்ச்சிகளால், மத்திய அரசு, 1953, அக்டோபர் 1 ஆம் தேதி கர்னூலை தலைநகராகக் கொண்டு ஆந்திர மாநிலத்துக்கு ஒப்புதல் அளித்தது. அப்போது நிஜாமின் ஆட்சியின் கீழ் இருந்து வந்த தெலுங்கானா 1956, நவம்பர் 1இல்



படிப்பகம்

www.padippakam.com

விடுவிக்கப்பட்டு, ஆந்திர மாநிலத்துடன் இணைக்கப்பட்டு ஹைதராபாத் தலைநகராக மாறியது. அப்படி இணைக்கப்பட்ட போது. தெலுங்கானா பகுதி மக்களின் கோரிக்கைகள் கட்டாயம் நிறைவேற்றப்படும் என்று மத்திய அரசு தரப்பில் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. ஆனாலும் அரசின் தெலுங்கானா இணைப்பு முடிவு கண்டு அப்பகுதி மக்கள் கொந்தளித்தனர். மாணவர்கள் பொங்கி எழுந்தனர். 1963இல் தீவிரமடைந்த போராட்டம், ஐதராபாத் உஸ்மானியா பல்கலைக் கழக மாணவர்களால் கொதிநிலையை எட்டியது. இப்பிரச்சினைக்காக இதுவரை சுமார் 375 மாணவர்கள் உயிர்த் தியாகம் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மக்களின் முக்கியப் பிரச்சினையாக இவ்விவாகரம் மாறத் தொடங்கியதனால் பின்னர் தனி தெலுங்கானாவை முதன்மைப் படுத்தியே இப்பகுதியின் அரசியல் நடவடிக்கைகளும் அமையத் தொடங்கின. இப்பிரச்சினைகளில் தீவிரம் காட்டும் அரசியல் கட்சிகள் மக்கள் செல்வாக்கைப் பெறத் தொடங்க அக்கட்சிகளுடன் கூட்டணி அமைத்து பாஜகவும், காங்கிரசும் மத்தியில் மாறி மாறி ஆட்சிக்கு வந்தன. ஆனால் வழக்கம் போல தனி தெலுங்கானா பகுதிக்கு அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் காற்றில் பறக்கவிடப்பட்டன.

தனித் தெலுங்கானாவை பெறுவதற்காகவே அமைக்கப்பட்ட தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதி கட்சியும், மக்கள் செல்வாக்கை சிறிது சிறிதாக இழக்கத் தொடங்க, அக்கட்சி அரசியல் ஆதாயம் பெறுவதற்காக மீண்டும் தனி தெலுங்கானா விவகாரத்தை தீவிரப்படுத்தியது. எப்போதும் இல்லாத அளவுககு அதனை கையாளத் தொடங்கினார் அக்கட்சியின் தலைவர் சந்திரசேகரராவ். 30 ஆயிரம் தொண்டர்களுடன் நவம்பர் 29 ஆம் தேதி 2009 அன்று உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்தார். உண்ணா விரதத்தை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே வரும் வழியிலேயே அவர் கைது செய்யப்பட்டார். சிறையிலும் உண்ணா விரதம் இருக்கப் போவதாக அவர் அறிவிக்க தெலுங்கானா பகுதியில் சிறிது சிறிதாக கலவரம் வெடித்து, தெலுங்கானா பகுதியின் இயல்பு வாழ்க்கையே அடியோடு பாதிக்கப்பட்டது.

வழக்கம் போல மாணவர்களின் கொந்தளிப்பை அரசு இயந்திரத்தால் கட்டுப் படுத்த முடியவில்லை. சிறையில் உண்ணா விரதம் தொடர்ந்ததால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட சந்திர சேகரராவின் உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

தெலுங்கானாவில் வன்முறை உச்சததை தொட்டது. ஆந்திர மாநில சட்டசபையை முற்றுகையிடப் போவதாக மாணவர்கள் அறிவித்தனர். நிலைமை எல்லை மீறுவதைக் கண்ட மத்திய அரசு அவசரம் அவசரமாக தெலுங்கானா மாநிலம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று டிசம்பர் 9 ஆம் தேதி இரவு அறிவித்தது.

நவம்பர் 29 ஆம் தேதி முதல் 11 நாள்கள் உண்ணாவிரதம் இருந்த சந்திரசேகர ராவ் பட்டினிப் போராட்டத்தை முடித்து பழரசம் அருந்தினார். போராட்ட ஊர்வலம் வெற்றிப் பேரணியாக திசை மாறியது. ஆனால் ஆந்திராவின் கடலோர மாவட்டங்கள் மற்றும், ராயலசீமா பகுதி மக்கள்பிரிவினைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். குறிப்பாக தெலுங்கானா பகுதிக்கு உட்பட்ட தலைநகர் ஐதாராபாத்தை ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது என்று கூறி அப்பகுதி சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் என பலதரப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் தங்கள் பதவிகளிலிருந்து விலகினர். மாநில சட்டப் பேரவையே இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டதனால் ஆளும் மாநில அரசுக்கும் அதே காங்கிரசு கட்சியின் மத்திய அரசுக்கும் இடையே பெரும் கருத்து மோதல் வெடிக்கத் தொடங்கின.

தெலுங்கான தனி மாநில கோரிக்கை எதிரொலியை அடுத்து இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் தனி மாநிலக் கோரிக்கைகள் ஆங்காங்கே மீண்டும் பலமடைந்து வருகின்றன. தெலுங்கானா மாநிலம் உதயமாகப் போவதாக மத்திய அரசு அறிவித்த உடனே, அதற்கான எதிர்வினைகள் இப்படி கலவையாகவும, இத்தனை களேபரமாகவும் இருக்கும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லைதான். தெலுங்கானாவுக்கு சிலர் பலத்த ஆதரவு தெரிவித்துள்ள அதேவேளை தங்கள் மாநிலங்களிலும் அத்தகைய பிரிவினை வேண்டும் என்ற கோஷத்தை எழுப்பத் துவங்கி விட்டார்கள்.

**கூர்க்கா மாநிலம்:**

மேற்கு வங்க மாநிலத்தில் கூர்க்கா இனத்தவர் அதிகம் வாழும் பகுதிகளை தனியாகப் பிரித்து கூர்க்காலாண்ட் என்ற மாநிலம் அமைக்க வேண்டும் என நீண்ட காலமாக கோரிக்கை உள்ளது.

**விதர்பா:**

மகாராஷ்டிராவில் விதர்பா பகுதியைத் தனியாகப் பிரித்து தனி மாநிலம் அமைக்க கோரிக்கை நீண்ட காலமாக உள்ளது.



படிப்பகம்

**புந்தல்கண்ட்:**

ஏற்கனவே உத்தராஞ்சல் மாநிலத்திற்காக தங்கள் மாநிலத்தின் பல பகுதிகளை இழந்த உ.பி.யும், மத்தியப் பிரதேசமும் புந்தல்கண்ட் தனி மாநிலக் கோரிக்கைப் பிரச்சினையை சமீப காலமாக எதிர்கொண்டு வருகின்றன. உ.பி, ம.பியில் உள்ள பந்தா, சித்ரகூட், ஜான்சி, லலித்பூர், சாகர் ஆகியவற்றை இணைத்து புந்தல்கண்ட் மாநிலம் அமைக்க வேண்டும் என கோரப்பட்டு வருகிறது. மத்திய உள்துறை அமைச்சகத்தின் பரிசீலனையில் இது உள்ளது.

**போஜ்பூர் - மிதிலாஞ்சல்:**

இதேபோல கிழக்கு உத்தரப் பிரதேசம் மற்றும் பீகாரில் உள்ள பகுதிகளைப் பிரித்து போஜ்பூர் மாநிலம் அமைக்க வேண்டும் என கோரிக்கை உள்ளது.

**மிதிலாஞ்சல்:**

பீகாரில் என்ற தனி மாநிலக் கோரிக்கையும் வலுத்து வருகிறது.

**ஹரித் பிரதேஷ்:**

மேற்கு உத்தரப் பிரதேசத்தின் 20 மாவட்டங்களைப் பிரித்து ஹரித் பிரதேஷ் என்ற மாநிலத்தை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுப்பப்பட்டுள்ளது.

**சௌராஷ்டிரா:**

குஜராத்தில் உள்ள சௌராஷ்டிர பகுதிகளைப் பிரித்து தனி சௌராஷ்டிரா மாநிலம் அமைக்கும் கோரிக்கையும் உள்ளது.

**கிரேட் கூச்:**

மேற்கு வங்கம், அஸ்ஸாமில் உள்ள சில பகுதிகளைப் பிரித்து கிரேட் கூச் பிகார் மாநிலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் உள்ளது.

**கூர்க்:**

கர்நாடகத்தில் கூர்க் பகுதியைப் பிரித்து தனி கூர்க் மாநிலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக உள்ளது.

இப்படி நாடு முழுவதும்பெருமளவில் உள்ள தனி மாநிலக் கோரிக்கைகளில் பல கவனத்தில் எடுக்கப்படாமலேயே கிடப்பில் உள்ளன. பெரிய மாநிலங்களைப் பிரித்து தனித்தனியான சிறிய மாநிலங்களை உருவாக்கினால் அது தேசத்துக்கு நல்லது என்று

உத்தரப் பிரதேச மாநில முதல்வர் மாயாவதி கூறியுள்ளார். உத்தரப் பிரதேசத்தைப் பிரித்து ஹரித் பிரதேஷ், பூர்வாஞ்சல், புந்தேல்கண்ட் ஆகிய மாநிலங்களை உருவாக்கினால் அதை ஆதரிப்பேன் என்றும் அவர் தெரிவித்தார். பெரிய மாநிலங்களை இப்படி பிரிப்பது சரியா? தனி மனிதர் அல்லது அவரது ஆதரவாளர்கள் முரண்டு பிடிப்பதற்கெல்லாம் தலை வணங்கிவிட்டால் நாடு என்னாவது? இன்னும் இப்படி பல தனி மாநில அல்லது கூடுதல் அதிகாரம் கொண்ட சுயேச்சை மாநிலங்கள் அமைய வேண்டும் என்ற கோரிக்கை எழாதா? இந்த பிரிவினை உணர்வு பொங்கி நீர்த் தகராறு, நிலத் தகராறு, மொழித் தகராறு என வியாபித்து, கடைசியில் தனி ,நாடு பிரிவினை என்கிற உச்சத்தைத் தொடாதா? தெலுங்கானா அறிவிப்பால் மீண்டும் உயிர்ப்பெற்றுள்ள 10க்கும் மேற்பட்ட தனிமாநிலக் கோரிக்கை மற்றும் 2 தனி நாடு கோரிக்கையை இந்தியா எப்படி கையாளப் போகிறது? என்று தேசபக்தியுள்ள பலர் ஒன்றுபட்டு கேள்வி எழுப்புகின்றனர். ஆனால், இன்னொரு பிரிவினரோ தனிமாநில பிரிவினை என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும், வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் என்கிறார்கள்.

இந்தியாவை 58 மாநிலங்களாகப் பிரிக்க வேண்டும் என்று சமூக விஞ்ஞானி ரஷீதுத்தீன் கான் 1973ஆம் ஆண்டு கூறியிருந்தார். இந்திய மாநிலங்கள் மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளதை விட சமூக கலாச்சார துணைப் பகுதிகளாக பிரிக்கப்பட வேண்டும் என்றும் அவ்வாறு இருந்தால் நிர்வாக இயந்திரம் சீராக இருக்கும் என்றும் 'பிரதேச பரிமானம்' என்னும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் கூறியிருந்தார். பஞ்சாபி பேசும் மாநிலங்கள் இரண்டு, தெலுங்கு பேசும் மாநிலங்கள் மூன்று, இந்தி பேசும் மாநிலங்கள் 20 என்ற வகையில் 58 மாநிலங்களாகப் பிரிக்கப்பட வேண்டும். இவ்வாறு பிரிக்கப்பட்டால் இந்தியா அதிக தனித்துவம் இன்றி, ஆனால் பரந்த தன்மை' கொண்டதாக அமையும் என்று கான் வாதிட்டார்.

மாநிலங்களின் தனித்துவ அங்கீகாரம், தேசிய தனித்துவத்தின் அங்கீகாரத்தை வலுவிழக்கச் செய்து விடும் என்று மத்திய அரசு நம்புகிறது. ஆனால் அது உண்மையில்லை. என்னுடைய கணிப்புப்படி தற்போது தனி மாநிலம் கோரும் அனைவருக்கும் தனித்தனி மாநிலங்கள் அமைக்க அனுமதி வழங்கப் பெற்றாலும் கூட, 35 மாநிலங்களுக்கு மேல் நம்மிடம் இருக்க முடியாது' என்று மத்திய மாநில உறவில் நன்கு அனுபவம் பெற்ற டெல்லி,

www.padippakam.com

ஜவஹர்லால் நேரு பல்கலைகழகத்தின், சமூக அறிவியல் துறை பேராசிரியர் பல்வீர் அரோரா கூறுகிறார்.

செம்மையான நிர்வாகத்திற்கு மாநிலங்களைத் துண்டாக்குவது என்ற கோரிக்கை ஒன்றும் புதிதல்ல. உத்திரப் பிரதேச மாநிலத்தின் அரசு நிர்வாகத்தை செம்மைப் படுத்த வேண்டுமெனில், அதனைச் சிறு மாநிலங்களாகப் பிரிக்க வேண்டும் என்று 1956ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மாநில மறுசீரமைப்பு ஆணையத்தின் உறுப்பினர் கே.எம். பணிக்கர் கூறியுள்ளார்.

தனி மாநில கோரிக்கையால் கடந்த ஒருமாதமாக ஆந்திர மாநிலமே ஸ்தம்பித்துக் கிடக்கிற நிலையில், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாநிலங்கள் மறுசீரமைப்பு ஆணையத்தை இரண்டாவது முறையாக அமைக்க மத்திய அரசு திட்ட மிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

மாநிலங்கள் மறுசீரமைப்பு ஆணையம் என்பது, வட்டார மொழி, இனம், கலாச்சாரம், பொருளாதார நிலை, முந்திய வரலாற்று நிகழ்வுகள், அரசியல் பின்புலம் மற்றும் மக்களின் உண்மையான மனநிலை ஆகியவற்றை நேரில் ஆராய்ந்து எந்தெந்த பகுதிகளை மாநிலங்களாக பிரிக்கலாம் என அரசுக்கு பரிந்துரைக்கும்.

மாநிலங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் ஒன்றும் ஆகிவிடப் போவதில்லை. ஆனால் மாநிலங்களுக்கு இடையேயான உறவுகள் சுமுகமாக இல்லை என்றால் இந்தியாவின் ஒற்றுமையும் வளர்ச்சியும் கேள்விக் குறியானதாகவே அமையும்.

**04.01.2010**



படிப்பகம்

www.padippakam.com

# அம்பலத்திற்கு வரும் இந்திய இந்துத்துவ முகம்...!

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு, மதச்சார்பற்ற நாடு, பன்முக கலாச்சாரம், வேற்றுமையில் ஒற்றுமை என இந்தியாவிற்கு பல்வேறு பெருமைகள் சொல்லப்படுவது உண்டு. இந்திய மக்கள் சகிப்புத்தன்மைக்கு பெயர் பெற்றவர்கள் என்றும் கூறப்பட்டது. அண்மைய பல ஆண்டுகளின் நிகழ்வுகள் அப்படியான தோற்றத்தை எண்ணக்கூடத் தோன்றவில்லை. ஈராக், ஆப்கனிஸ்தான், பாகிஸ்தான் பாலஸத்தீனம் இவற்றை எல்லாம் விஞ்சி வாரத்திற்கு ஒன்று, மாதத்திற்கு ஒன்று என்ற அண்மைய தொடர் குண்டுவெடிப்புக்கள் இந்தியாவை குலுக்குகிறது..

பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகு இந்தியாவில் அதீத மதவெறித் தீ கொழுந்து விட்டு எரிவது இப்போது தான்... இத்தனை காலமாக இந்தியாவில் மட்டுமல்ல அனைத்து பகுதிகளிலும் நிகழ்த்தப்பட்ட குண்டுவெடிப்பு சம்பவங்கள் அனைத்திலும், இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளின் பெயர்கள் தான் பேசப்பட்டன. இஸ்லாமிய சமூகமே பயங்கரவாதத்தின் பெயரால் கேவலப்படுத்தப்பட்டது. இவை தொடர்பாக, கைது செய்யப்படுபவர்களும் இஸ்லாமிய மதத்தை சேர்ந்தவர்களாகவே இருந்தார்கள்.ஆனால், கடந்த செப்டம்பரில் இந்தியாவின் மஹாராஷ்டிர மாநிலம் மாலேகானில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு தொடர்பாக, பெண் சங்கராச்சாரியார் என தன்னை தானே கூறிக்கொள்ளும இந்துப்பெண் சன்னியாசி ஒருவர், ராணுவ அதிகாரி ஒருவர் என வரிசையாக இந்துக்கள் பலர் கைது செய்யப்பட்டு வரும் சம்பவம் இந்துத்துவ சக்திகளை மட்டுமல்ல இந்திய நாட்டையே பெரும் அதிர்ச்சிக்கு ஆழாக்கியுள்ளது.

இதுவரை இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளை பற்றியே கேள்விப்பட்டு வந்த மக்களின் நாவில் முதன்முதலாக ‘அபிநவ்



படிப்பகம்

www.padippakam.com

பாரத்' என்ற இந்து தீவிரவாத அமைப்பின் பெயர் தவழத் தொடங்கியுள்ளது.

## அது என்ன அபிநவ் பாரத்?

அபிநவ் பாரத் என்ற பெயர் இன்றைய தலைமுறைக்கு அவ்வளவாக தெரிந்திருக்க வாய்ப்பில்லை (இனிமேல் நிறையவே தெரிந்து கொள்ளலாம்). இந்த அமைப்பிற்கு நீண்ட வரலாறு உண்டு. மஹாராஷ்டிர மாநிலம் புனே நகரத்தை, புதிய இந்தியாவிற்கும், அதன் கனவுகளுக்கும் உதாரணமாக சொல்லுவார்கள். இந்த நகரத்தின் உள்ள ஃபெர்குசன் கல்லூரிதான் அபிநவ் பாரத் அமைப்பின் தாய்வீடு. இந்தக் கல்லூரியில் கல்வி கற்ற இந்தியாவின் விடுதலைப் போராட்ட வீரர்களில் ஒருவரான வீர் சாவர்க்கர் தான், இந்த அமைப்பை நிறுவியவர். இந்து மதத்தின் தீவிர பற்றுக் (வெறி) கொண்ட இவர் சுதந்திர போராட்ட காலத்தின் போதே இந்து தேசியவாதத்தை தூண்டி விடுவதில் தளகர்த்தராக திகழ்ந்தவர் எனச் சொல்லப்படுகிறது. மதத்தை பாதுகாக்க வேண்டுமெனில் இந்துக்கள் ராணுவப் பயிற்சி மேற்கொள்ள வேண்டும் என அன்றே வலியுறுத்தியவர் வீர் சாவர்க்கர். அதனால், இந்தியாவின் ராணுவம், விமானப்படை, கடற்படை ஆகியவற்றில் இந்துக்கள் அதிகளவில் சேர வேண்டும் என்றும், இந்துக்களின் வலிமையை இதன் மூலம் நிலை நாட்ட வேண்டும் என்றும் பிரச்சாரம் செய்து வந்த அவருடைய இந்த கொள்கைக்கு, இன்றும் கூட உயிர்கொடுக்கப்பட்டு வருகிறது என்பது பலர் அறியாத உண்மை.

90ம் ஆண்டுகளின் மத்தியில் மஹாராஷ்டிர மாநிலத்தின் அன்றைய ஆளும் பாரதிய ஜனதா சிவசேனா கூட்டணி அரசு, ஒவ்வொரு மாவட்டத்திலும ராணுவப் பள்ளிகளை தொடங்கியது. இதன் நிர்வாகிகளாக இந்து மதத்தை சேர்ந்த முன்னாள் ராணுவ அதிகாரிகளே நியமிக்கப்பட்டனர்.இங்கு பயின்ற மாணவர்கள், நவீன போர்க்கல்வி என்கின்ற மேலோட்டத்துடன் இந்தியா மற்றும் அதன் பிரச்னைகள் பற்றிய குறுகிய கண்ணோட்டத்தையே பெற்றனர்.

(இந்த ராணுவப் பள்ளிகளில் சில, தற்போது தீவிரவாத எதிர்ப்பு படையின் விசாரணை வட்டத்திற்குள் சிக்கியுள்ளது. இங்கு அபிநவ் பாரத் உறுப்பினர்கள் பயிற்சி பெற்றதாக நம்பப்படுகிறது.)

மஹாராஷ்டிரா மாநிலத்தில் 6 பேர் உயிரிழக்க காரணமான மாலேகான் குண்டுவெடிப்பில் பயன்படுத்தப்பட்ட ஸ்கூட்டரை



படிப்பகம்

கைப்பற்றிய போலீஸார் விசாரணை நடத்தியபோது பல்வேறு தகவல்கள் அம்பலமாகின. பிரக்யா சிங் தாகூர் என்ற பெண் துறவிக்கு சொந்தமானது அந்த ஸ்கூட்டர் என்பது அறியப்பட்டதும் விசாரணை துரிதப்படுத்தப்பட்டதாகவும் மர்ம முடிச்சுகள் பல அவிழ்ந்தன எனவும் மாநில பொலிசார் தெரிவித்திருந்தனர்..

இதையடுத்து, பிரக்யா சிங் கைது செய்யப்பட இந்துத்துவத்தின் தீவிரவாத முகம் வெளி அம்பலத்திற்கு வந்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக குஜராத், மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம் என ஹிந்து வலதுசாரி இயக்கங்களை நோக்கி போலீஸ் விசாரணை வலை திரும்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.காந்தியை சுட்டுக்கொன்ற நாதுராம் கோட்சேயின் அண்ணன் மகளும், வீர்சாவர்க்கரின் நெருங்கிய உறவினருமான ஹிமான சாவர்க்கர் என்பவர் தான் அபிநவ் பாரத் அமைப்பின் இன்றைய தலைவி என்று தெரிய வந்துள்ளது. இது இந்து தீவிரவாதத்தின் கரங்கள் எந்த அளவிற்கு நீண்டு கொண்டு செல்கிறது என்பதை காட்டியுள்ளது. கண்ணுக்கு கண் (An eye for an Eye) என்ற பழிவாங்கல் சிந்தனை கொண்டவர்கள் ஒன்று சேர்ந்துள்ளதானது, உளவுத்துறையினரை மட்டுமல்ல அப்பாவிப் பொதுமக்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மாலேகான் குண்டுவெடிப்பு தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள பெண்துறவி பிரக்யா சிங் 1990களில் ராமஜென்ம பூமி விவகாரம் பற்றி எரிந்தபோது உமாபாரதி, ரிதம்பரா போன்ற பெண் துறவிகள் போன்று பலரின் கவனத்தையும் ஈர்த்தவர் 1990ம் ஆண்டுகளில் பாரதிய ஜனதாவின் மாணவர் அணியான அகில பாரதிய வித்யார்தி பரிஷத் அமைப்பில் தீவிரமாக பணியாற்றினார். வரலாற்றுக் கல்வியில் முதுநிலைப்பட்டம் பெற்ற இவர், இந்துத்துவா சக்திகளின் கோட்டையாக திகழ்ந்த மத்திய பிரதேசத்தின் மாவ்லா பகுதியில் தீவிர இந்துத் செயல்பாட்டாளராக திகழ்ந்தவர். வெளித்தோற்றத்தில் ஆண்களை போல தன்னை ஆக்கிக் கொண்ட பிரக்யா சிங்கிற்கு, மோட்டார் சைக்கிள் ஓட்டுவதில் அலாதி பிரியமாம். அனல் கக்கும் பேச்சுத் திறமையும் உள்ளவர் என்பதால் காவி வட்டாரங்களில் குறுகிய காலத்திலேயே இவர் பெயர் பெற்றார். நாட்டில் குண்டுவெடிப்புகள் நிகழும்போதெல்லாம், இதை தடுக்க கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நண்பர்கள் வட்டத்தில் அடிக்கடி பிரக்யாசிங் கூறுவாராம்.

காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு, தீவிரவாதிகள் மீது மென்மையான போக்கை கடைப்பிடித்து வருவதாக பாரதிய ஜனதா உள்ளிட்ட ஹிந்து அமைப்புகள் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றன. தீவிரவாதத்திற்கு எதிரான பொடா சட்டத்தை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். குறிப்பாக, பாராளுமன்றத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட அப்சல் குருவிற்கு, மரண தண்டனை விதிக்கப்பட்டும் அதை நிறைவேற்றாமல் காலம் தாழ்த்தி வருவதாக காங்கிரஸ் அரசு மீது ஹிந்து அமைப்புகள் கடுமையான விமர்சனங்களை வீசுகின்றன.

இத்தகைய சூழ்நிலையில், மாலேகான் குண்டுவெடிப்பு தொடர்பாக கைது செய்யப்பட்ட பெண் துறவியான பிரக்யாசிங்கிடம் நடத்தப்பட்ட பிரெய்ன் மேப்பிங் எனப்படும் மூளை வரைபடச்சோதனை மூலம், இச்சம்பவத்தில் மேலும் பலருக்கு தொடர்பிருப்பது தெரியவந்ததாக அறிவிக்கப்பட்டது.

இதில் உச்சகட்டமும் ஆச்சர்யமும் ராணுவத்தில் தற்போது உளவுப்பிரிவில் லெப்டினட் கேணல் தரத்தில் பணியாற்றி வரும் புரோஹித் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளது தான்.

கடந்தாண்டு பெப்பிரவரி மாதம் பாகிஸ்தான் இந்தியா இடையே ஓடும் சம்சவுதா எக்ஸ்பிரஸ் ரயிலில், பயங்கர குண்டு வெடித்தது. ஹரியானா மாநிலம் பானிபட்அருகே சென்று கொண்டிருந்தபோது நிகழ்ந்த இந்த குண்டு வெடிப்பில் 68 பேர் உயிரிழந்தனர். இதில் பெரும்பாலானவர்கள் பாகிஸ்தான் நாட்டை சேர்ந்தவர்கள் என்பது முக்கியமானது. இந்த குண்டுவெடிப்பிற்கு பயன்படுத்தப்பட்ட ஆர்.டி.எக்ஸ்., வெடிபொருட்களை தற்போது கைது செய்யப்பட்டுள்ள இந்த இராணுவ அதிகாரி புரோஹித்தான் குண்டு வெடிப்பாளர்களுக்கு வழங்கிளார் என தீவிரவாத எதிர்ப்பு போலீஸ் பிரிவினர் புரோஹித் நீதிமன்றத்தில ஆஜர்படுத்தப்பட்ட போது தெரிவித்தனர்.

ஆனால், இந்த ரயில் குண்டுவெடிப்பு தொடர்பாக தடயவியல் துறை நடத்திய ஆய்வில், திரவவெடிப்பொருட்கள் மூலமே குண்டுவெடிப்பு நிகழ்த்தப்பட்டதாக முன்பு தெரிவிக்கப் பட்டிருந்தது. இந்த முரண்பாட்டை கெட்டியாக பிடித்துக் கொண்டுள்ள ஹிந்து அமைப்புகள், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மினி நாடாளுமன்ற தேர்தல் எனப்படும் ஆறு மாநிலங்களுக்கான சட்டப்பேரவை

தேர்தல்களை கருத்தில் கொண்டு சிறுபான்மையினரின் வாக்குகளை பெறுவதற்காக, இந்திய அரசு தீவிரவாதிகள் என்ற பெயரில் இந்து தலைவர்களை கைது செய்து நாடகமாடுவதாக எதிர்த்தாக்குதல் தொடுத்துள்ளன. மேலும், கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் உள்ள பிரக்யாசிங், புரோஹித் ஆகியோர் குற்றமற்றவர்கள் என்றும், அவர்களுக்கு ஆதரவாக போராட்டங்களை நடத்தப்போவதாகவும், ஆர்.எஸ்.எஸ்., விஸ்வ ஹிந்து பரிஷத் போன்ற தீவிர இந்துத்துவ அமைப்புகள் அறிவித்துள்ளதன் மூலம் இந்த பிரச்னை பெரும் அரசியல் சர்ச்சையாகவும் உருவெடுத்துள்ளது.

மாலேகான் குண்டுவெடிப்பு தொடர்பாக இதுவரை கைது செய்யப்பட்டுள்ள 9 பேருக்கும் இந்து அமைப்புகளுடன் ஏதேனும் ஒருவகையில் தொடர்பிருப்பது ஊர்ஜிதமாகியுள்ளது. இதனால், இஸ்லாமிய தீவிரவாத இயக்கம் என கூறப்படும் சிமியை தடை செய்தது போல், பஜ்ரங் தள், ஆர்.எஸ்.எஸ்., போன்ற இந்து அமைப்புகளையும் தடை செய்ய வேண்டும் என மத்திய அரசில் அங்கம் வகிக்கும் லாலு பிரசாத் யாதவ், ராம் விலாஸ் பஸ்வான் போன்றோர் குரல் எழுப்பி வருகின்றனர். அவ்வாறு தடை செய்தால் கடும் விளைவுகளை ஆளும் காங்கிரஸ் அரசு சந்திக்க வேண்டியிருக்கும் என பாரதிய ஜனதா எச்சரித்துள்ளது.

தோண்ட, தோண்ட இந்துப்பூதம் கிளம்புகிறது. மற்றொரு சாமியார் தயாந்த் பாண்டே என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சாமியாருக்கும் ஜம்மு காஷ்மீர் முன்னாள் ஆளுனரும், ஒய்வு பெற்ற லெப்டினட் ஜெனரலுமான எஸ்.கே. சின்காவிற்கும் இடையே தொடர்பு இருப்பதாக அம்மாநில முன்னாள் முதலமைச்சர் முப்தி முகமது புதிய குண்டு ஒன்றை வீசியுள்ளார். ஆளுனரின் விருந்தினராக சாமியார் பாண்டே தங்கியிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்த மற்ற குண்டு வெடிப்புகளிலும், தற்போது கைது செய்யப் பட்டுள்ளவர் களுக்கும் இந்து அமைப்புகளுக்கும் தொடர்புள்ளதா? என விசாரணை நடத்தப்பட வேண்டும் என இஸ்லாமிய அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஏற்கனவே, பல ஆண்டுகளாக இநதியாவையும் ஆட்டிவரும் இஸ்லாமிய அடிப்படை வாதத்திலிருந்நது தோன்றுவதாக கூறப்படும் தீவிரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியாமல்

www.padippakam.com

திணறி வரும் மத்திய பாதுகாப்புத்துறை இப்போது தான் வெளிக் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்துத் தீவிரவாதத்தை எப்படி கட்டுப்படுத்தப் போகின்றது...? இது இந்தியாவை எப்படி எல்லாம் இழுத்துச் செல்லப் போகிறது...?

நடுநிலையாளர்களின் இன்றைய கவலை கலந்த கேள்வி இதுதான்.

வாக்கு வங்கிக்காக ஆடப்படும் அரசியல் சதுரங்கத்தில் அப்பாவி மக்களின் உயிர்ப் பறிப்பை விட தாம் ஜெயிக்க வேண்டும் தாமே ஆள வேண்டும் என்பதே அரசியல் கட்சிகளின் கணக்கில் முக்கியம் என்பதால் இந்த பயங்கரவாதத்தின் பின்னணி பின்னணியாகவே இருக்கும் என்றும் எண்ணப்படுகின்றது.

ஒட்டு மொத்தமாக An eye for an eye makes the whole world blind என்கின்ற இந்த சிறிய யதார்த்தம் கூட உலகெல்லாம் முன்னெடுக்கப்படும் தீவிர வாதத்தின் மனங்களால் ஏன் புரிந்து கொள்ளப்படாமல் இருக்கிறது இதுவும் விடை கிடைக்காத கேள்விதான்...

**19.11.2009**



படிப்பகம்

www.padippakam.com

# பங்களாதேஷின் திடீர் புரட்சி...!
# காரணம் என்ன தோல்விக்கு...!

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பாகிஸ்தானுக்கு அடுத்தபடியாக முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் நாடான பங்களாதேஷில் அண்மையில் இடம் பெற்ற திடீர் புரட்சிச் செய்தி உலக நாடுகள் அனைத்தினதும் கவனத்தை அந்நாட்டின் மீதும் திருப்பியுள்ளது. ராணுவத்தின் ஒரு பிரிவினரே இந்த புரடச்சியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.. ராணுவப் புரட்சியும், திடீர் கலகமும் பங்களாதேஷிற்கு புதிதான விடயமல்ல. கலகத்தின் மூலம் பிறந்த நாடுகளில் கலகங்கள் வெடிப்பது என்பது சர்வ சாதாரண நிகழ்வாக கருதப்படுகிறது. பொதுவாக, ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராகத் தான் ராணுவம் புரட்சியில் ஈடுபடும். ஆனால், நாட்டின் எல்லையை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள துணை ராணுவக்குழு ஒன்று, அந்த நாட்டின் ராணுவத்திற்கு எதிராகவே திடீர் புரட்சியில் ஈடுபட்டதுதான், ஆச்சரியமாகவும்... புதிய கலவர சிந்தனையாகவும் பார்க்கப்படுகிறது. யாருமே எதிர்பார்க்காத இந்த புரட்சி முன்னெடுப்பு தற்போது முடிவுக்கு வந்து விட்டபோதிலும், அதனாலாகும், விளைவுகள் இனிமேல் தான் பங்களாதேஷில் எதிரொலிக்கும் என்ற எண்ணத்தை இந்த திடீர் புரட்சிக்கான காரணம் ஏற்படுத்துகிறது.

மக்கள் மிகவும் நெருக்கமாக வசிக்கும் நாடுகளில் ஒன்றான பங்களாதேஷில் பாதிப்பேருக்கு மேலானவர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழு(டு)கின்றார்கள். 23உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு எனப்படும் இந்தியாவின் உபயத்தால் 1972ம் ஆண்டு தனி நாடாக்கப்ட்ட அந்த நாட்டில் ஜனநாயக ஆட்சி என்பது இன்று வரை கானல் நீராகத்தான் உள்ளது. கடந்த ஜனவரி மாதம் தான் ஜனநாயக முறைப்படி எனச் சொல்லப்பட்டு



படிப்பகம்

நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று ஹேக் ஹசீனா தலைமையில் புதிய அரசு ஆட்சியில் அமர்ந்தது. அதற்குள் மிகப்பெரிய சிக்கலை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுவோம் என ஹசீனா எண்ணியிருக்க மாட்டார்.

திடீர் புரட்சியின் பின்னணி என்ன...? ராணுவத்திற்கு இணையான பணியில் இருந்தாலும், ஊதியம் மற்றும் பிற சலுகைகளில் ஒரு படி அல்ல... பல படிகள் கீழே இருக்கின்ற துணை ராணுவப்படையினர் எனப்படும் பங்களாதேஸ் ரைபிள் படையினர் தான் காரணம் எனப்படுகிறது. நாட்டின் பாதுகாப்பு அரணில் முதலில் இருப்பது இவர்கள் தான். எல்லைப் பணிகளில் ரோந்து, கடத்தலை தடுப்பது மற்றும் எல்லை தாண்டிய குற்றங்களை (இன்றைய ஏகாதிபத்திய வார்த்தையில் சர்வதேச பயங்கரவாதம்) களைவது, தொலைதூர பகுதிகளில் அரசின் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவது போன்ற நாட்டின் முக்கிய பாதுகாப்பு பணிகளில் அனைத்திலும் இந்த ரைபிள் படையினர்தான் ஈடுபடுத்தப்டுகிறார்கள். போர் நடைபெறும் சமயங்களில் ராணுவத்திற்கு உதவ வேண்டிய பொறுப்பும் இந்த ரைபிள் படையினருக்கு உண்டாம்.

கிழக்கு பாகிஸ்தான் ரைபிள் படையினரிடமிருந்து (பாகிஸ்தான் பிளவுபடாமல் இருந்தபோது அமைக்கப்பட்ட படை அணி) பிரிந்து வந்தது தான் இந்த பங்களாதேஸ் ரைபிள் படை. 1972ம் ஆண்டு பங்களாதேஸ் சுதந்திரம் பெற்ற (பெற்றதாக கூறப்பட்ட) உடனே உருவான இந்த பங்களாதேஸ் ரைபிள் படை அணியில் ஆரம்பத்தில். இடம்பெற்றிருந்த 9 ஆயிரம் பேரும் கிழக்கு பாகிஸ்தான் ரைபிள் படையில், பாகிஸ்தான் அதிகாரிகளுக்கு எதிராக புரட்சி செய்துவிட்டு ஓடிவந்தவர்கள் என கூறப்படுகிறது. பங்களாதேஷின் நிறுவனத் தந்தையான ஷேக் முஜுபுர் ரஹ்மான், தமது தேசிய கிளர்ச்சி படையான ஜதியா ராஹ்கி பாஹினியுடன், பங்களாதேஸ் ரைபிள் படையை இணைக்க விரும்பியதும் அதை அன்றைய ரைபிள் படை கடுமையாக எதிர்த்ததால் அந்த திட்டம் கைவிடப்பட்டதும் உற்று நோக்க வேண்டியது. அன்றைய அந்த எதிர்ப்புக்குரல் தான், எல்லை பாதுகாப்பு படையினர் எழுப்பிய முதலும் கடைசியுமான கலகக்குரல் ஆகும். 1975 முதல் 1984ம் ஆண்டு வரை பங்களாதேஸ் ராணுவத்தில் திடீர் புரட்சிகள், கலகங்கள் ஏற்பட்டபோதிலும், ரைபிள் படையில் அது போன்ற ஒரு சம்பவமும் நடைபெற்றதாக வரலாறு இல்லை. மிகவும் கட்டுப்பாட்டுடன் ரைபிள் படையினர் நடந்து கொண்டதாக கூறப்படுகிறது.ஊதியம் மற்றும் பிற சலுகைகள்

www.padippakam.com

குறித்து அவ்வப்போது அதிருப்தி குரல்களை அவர்கள் எழுப்பி வந்தபோதிலும், அது ஒருபோதும் புரட்சி வரை சென்றதில்லை.

1973ம் ஆண்டு பங்களாதேஸ் ரைபிள் படையினருக்கு புதியதாக ஆட்கள் தேர்வு செய்யப்பட்டபோது 20 ஆயிரமாக உயர்ந்த இந்தப் படையணி, தற்போது 70 ஆயிரமாக உள்ளது. நாட்டின் 12 இடங்களில் அவர்களுக்கு முகாம்கள் உள்ளன. உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் அவர்கள் இருந்தபோதிலும், ரைபிள் படைக்கு ஆட்களை தேர்வு செய்வது, பயிற்சி கொடுப்பது, வழி நடத்துவது ஆகியவற்றை பிரதான ராணுவமே மேற்கொண்டு வந்தது. அதே போல் பிரதான ராணுவத்திலிருந்து ஒய்வுபெற்ற அதிகாரிகள், இந்த ரைபிள் படை அதிகாரிகளாக நியமிக்கப்படும் வழக்கமும் இருந்து வருகிறது. அதனால், தங்களுடைய பிரச்சனைகளை மேல் மட்டத்திற்கு கொண்டு செல்வதில் பெரும் சிரமங்களை ரைபிள் படையினர் எதிர்நோக்கியதுடன் இது இவர்களது நீண்ட நாள் ஆதங்கமாகவும் இருந்து வந்தது. தங்களுக்கு மிகவும் குறைவான ஊதியம் வழங்கப்படுவதான எண்ணம் அவர்களுக்குள் மேலோங்கிய நிலையில் அண்மைக் காலமாக அடிக்கடி உள்நாட்டில் சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்படும்போது போலீஸாருக்கு உதவுவதற்கும் அழைக்கப்பட்டனர். பிரதான இராணுவ படையணியினருக்கான பணிகள் தொடர்ச்சியாக குறைக்கப்பட்டு வந்தன.

போர் அல்லது தேசிய அளவில் நெருக்கடியான சூழ்நிலை நிலவும்போது, முப்படைகளின் தளபதி என்ற முறையில் நாட்டின் அதிபர் , அனைத்து துணை ராணுவப்படை மற்றும் போலீஸ் படைகளை தமது நேரடியான கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ள , பிரதான ராணுவத்திற்கு அதிகாரம் வழங்க முடியும். அதிகாரப் போட்டி தொடர்பான இந்த நிலைமையும் நீறு பூத்த நெருப்பாக கனன்று கொண்டிருக்க இவை அனைத்தும் சேர்ந்து கடந்த மாதம் பிப்ரவரி 25ம் தேதி பூகம்பமாக வெடித்து சிதறி விட்டது. தலைநகர் டாக்காவின் மையப்பகுதியில் உள்ள ரைபிள் படையின் தலைமை அலுவலகம் அங்குள்ள சிப்பாய்களால் கைப்பற்றப்பட்டு உயரதிகாரிகள் பிணைக் கைதிகளாக்கப்பட்டனர். டாக்காவில் மிகப்பெரிய வளாகமாக அமைந்துள்ள ரைபிள் படை தலைமை அலுவலகம் அதற்கு அருகே உள்ள பரந்து விரிந்த ரோஜா பூங்கா ஆகியன உலகப் புகழ்பெற்ற சுற்றுலா மையமாகும்.

ரைபிள் படை வீரர்களின் திடீர் புரட்சி ஹேக் ஹசீனா அரசால் அனுப்பப்பட்ட ராணுவக்குழுவால் சரி செய்யப்பட்டதாக முதலில்



படிப்பகம்

அறிவிக்கப்பட்டாலும், ரைபிள் படையினர், ராணுவத்தினரை கடுமையாக எதிர்த்ததாகவும் அவர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் ராணுவ அதிகாரிகள் பலர் உயிரிழந்ததாகவும் செய்திகள் வெளியாகின. நிலைமை மோசமடைய, அடிப்பதைவிட அரவணைத்து பணிய வைக்கலாம் என்ற முடிவுக்கு பிரதமர் ஹசீனா வந்தாரோ என்னவோ ரைபிள் படையினரின் அனைத்து கோரிக்கைகளையும் ஏற்பதாகவும், புரட்சியில் ஈடுபட்ட வீரர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவதாகவும் அறிவித்தார்.

ஆனால், தங்களை சுற்றி வளைத்துள்ள ராணுவத்தினர் உடனடியாக விலகிச்சென்றால் மட்டுமே ஆயுதங்களை கைவிட்டு சரணடைய முடியும் என ரைபிள் படையினர் தெரிவித்தனர்.கலகம் பெருத்து பங்களாதேஷின் வேறு நகரங்களிற்கும் பரவ நிலைமை மோசமடைந்தது. கலகத்தில் ஈடுபட்ட ரைபிள் படையினருடன், ஆரம்பத்தில் அமைச்சர்கள் குழு ஒன்று பேச்சுவார்த்தை நடத்தியது. ஆனால் புரட்சியில் ஈடுபட்ட ஒருபிரிவினர், சரணடைய மறுத்ததுடன், துப்பாக்கிச்சூட்டில் தொடர்ந்தும் ஈடுபட்டனர். உடனடியாக ரைபிள் படையினர் அனைவரும் சரணடையாவிட்டால், பலப்பிரயோகத்தில் ஈடுபட வேண்டியிருக்கும் என்றும், பொறுமையை சோதிக்க வேண்டாம் என்றும் பிரதமர் ஹேக் ஹசீனா எச்சரிக்கை விடுத்தார். தலைநகர் டாக்காவிற்குள் ராணுவ டாங்குகள்அணிவகுத்ததுடன், ரைபிள் படை தலைமை அலுவலகத்தை பாரிய ராணுவ அணி சுற்றி வளைத்தது. நிலைமை மோசமடையவே ரைபிள் படையினர் சமாதானக்கொடி துக்கியதாகவும் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு சரணடைந்து விட்டதாகவும் அரசாங்கம் அறிவித்தது.இராணுவத்தின் 50 உயரதிகாரிகள் கொல்லப்பட்டதாக ஆரம்பத்தில் செய்திகள் வெளியானதும் இறுதியில் இந்த கலகத்தில் 11 பேர் மட்டுமே கொல்லப்பட்டதாக ராணுவ அதிகாரிகள் தெரிவித்தது போன்றன அரச அறிவிப்புகளின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்குவ தாகவே அமைகிறது.

15 கோடி மக்கள் தொகை கொண்ட பங்களாதேஷில் தலைவிரித்தாடும் ஊழல். அதிகரித்து வரும் மக்கள் தொகை உயர்வு ஆகியவற்றால் ஏற்கனவே அந்நாடு பொருளாதார சிக்கலில் தவித்து வருகிறது. அரசியல் படுகொலைகள், ராணுவப் புரட்சிகள் என பங்களாதேஷிற்கு நீண்ட நெடிய ரத்த வரலாறு உண்டு. பாகிஸ்தானிலிருந்து பிரிக்கப்பட்ட பின்னர் 19 முறை புரட்சி முயற்சிகளை சந்தித்த அந்தச் சிறிய நாட்டில் இராணுவப் புரட்சிகளின் போது இரண்டு அதிபர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

www.padippakam.com

தற்போது ஏற்பட்ட புரட்சி அடக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டாலும் அதனால் ஏற்படப்போகும் விளைவுகள் பங்களாதேஸ் நாட்டின் எரிவை அதிகரிக்கும் என்பதே யதார்த்தம். உலகமயமாக்கலினலான பொருளாதார நெருக்கடி, இயற்கை சீற்றங்கள் என தத்தளித்து வரும் அந்நாட்டு மக்களுக்கு இந்த திடீர் புரட்சி புதிய பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதும் உண்மை.

உலக நாடுகளின் அசைவுகளை கண்காணிக்கும் அமெரிக்கா... தெற்காசிய நாடுகளில் இதேபாணியில் இந்தியா... சவால்களை எதிர்கொண்டு தனித்துவத்துடன் இருக்கும் சீனா... தவிர்ந்த இந்தியாவை சுற்றியுள்ள இலங்கை, பாகிஸ்தானம், பங்களாதேஸ், நேபாளம் ஆகிய அனைத்து நாடுகளும் தொடர்ந்து எரிந்து கொண்டே இருக்கிறது... பங்களாதேஷின் இந்த வருடத்திய இந்தப் புரட்சி முன்னெடுப்பு உண்மையில் அதிருப்தி அலை அல்ல... என ஒரு சில ஆய்வாளர்களால் கூறப்படுவதும் கவனிக்கப்பட வேண்டியதே...

**01.03.2009**



படிப்பகம்

# கறுப்பு நாயகனின் கனவு தேசங்கள்

உலக நாயகன் (இன்று) அமெரிக்காவின் 44வது அதிபராக பரபரப்பும், ஆராவாரமும் சூழ பதவியேற்றுள்ள பராக் ஹூசேன் ஒபாமாவின அதிரடி அறிவிப்புக்கள் பலருக்கு ஆச்சரியத்துடனான ஆனந்தத்தையும் சிலருக்கு ஆத்திரத்தையும ஏற்படுத்தியுள்ளதை இந்தவார செய்தி விமர்சனங்கள்; வெளிப்படுத்துகின்றன. ஆஃப்பிரிக்க-அமெரிக்க இனத்தை சேர்ந்த முதல் கறுப்பு அமெரிக்க அதிபர் என்ற பெருமையுடன் ஜனவரி 20, 2009ம் தேதி பதவிஏற்றுள்ள ஒபாமா ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக அமெரிக்காவில் ஒடுக்கப்பட்ட சமூகமாக இருந்த - இருக்கும் கறுப்பின மக்கள் மத்தயில் மட்டுமல்ல உலகெங்குமுள்ள அடக்கப்படும் ஒவ்வொரு மனிதன் மனதிலும் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்தார்.இதன் வெளிப்பாடுதான் ஜனவரி 20ம் தேதி வாஷிங்டன் நகரத்தில் கூடிய 20 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள வெள்ளம். 8 ஆண்டு கால குடியரசு கட்சியின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்த அன்றையதினம் ஒபாமா ஆற்றிய உணர்ச்சிமிகு உரையின் வெளிப்பாட்டை பலரின் ஆனந்த கண்ணீரில் காணமுடிந்தது

அமெரிக்க அதிபர்கள் வரலாற்றில் அதிகம் சபிக்கப்பட்டவர் (வெறுக்கப்பட்டவர்) பட்டியலில் முதலிடம் என்ற பெருமையுடன் (?) வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறியுள்ளார் ஜார்ஜ் புஷ். இவருடைய ஆட்சியின் சாதனைப்பட்டியல் பலவற்றில் நியூயார்க் இரட்டை கோபுரங்கள் மீதான தாக்குதல், ஆப்கனிஸ்தான் ஆக்கிரமிப்பு ஈராக் போர் இவை கோடிடப்பட்டவை. இவற்றின் வெளிப்பாடான அமெரிக்க மக்களுக்கு மட்டுமல்லாது, உலக மக்களுக்கும் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார சீரழிவை எதிர்கொள்ள வேண்டிய கடினமான சூழ்நிலையில் ஒபாமா, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

www.padippakam.com

அமெரிக்காவில் சிறு குண்டு வெடித்தால் கூட, அதன் அதிர்வுகள் உலகம் முழுவதும் எதிரொலிக்கூடிய தற்போதைய சூழ்நிலையில் ஒபாமா எடுக்கும் ஒவ்வொரு முடிவும், அமெரிக்காவை மட்டுமல்ல... உலக நாடுகளிலும் விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. அதனால், அவரின் பதவியேற்பை பல்வேறு நாடுகளும் மிகவும் கவனத்துடனும், எச்சரிக்கையுணர்வுடனும் உற்று நோக்கின எனக்கூறலாம். ஒபாமாவின் முதல் பணியாக உள்நாட்டில் சீரழிந்து கொண்டிருக்கும் பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டிய நிலை உள்ளது. பொருளாதார சரிவை மேம்படுத்த தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று பதவியேற்பு உரையில் ஒபாமா அளித்த உறுதி ஒவ்வொரு அமெரிக்கர்களையும் நிச்சயமாக மகிழ்ச்சியாக்கி இருக்கும். வழமையான அனைத்து நாடுகளின் அரசியாளர்களைப் போல முந்தைய ஆட்சியாளர்கள் மீது குற்றம்சாட்டாமல், கடந்தாண்டுகளில் நிகழ்ந்து விட்ட பொருளாதார தேக்கத்திற்கு அனைத்து தரப்பினரும் பொறுப்பேற்க வேண்டும் என ஒபாமா குறிப்பிட்டது அவரின் முற்போக்கு சிந்தனையை வெளிப்படுத்தியது.

அளவிட முடியாத அளவு சிக்கலில் மாட்டிக்கொண்டுள்ள அமெரிக்க பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்காக 825 பில்லியன் டாலர் நிதியுதவி அளிக்கும் தமது திட்டத்திற்கு பிப்ரவரி 16ம் தேதி அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கும் என்ற செயல் அறிவிப்புடன் நலிவடைந்த வங்கிகளை கையகப்படுத்துவதற்காக அரசு வங்கியை தொடங்குவது குறித்தும், தனது பொருளாதார ஆலோசகர்களுடன், ஒபாமா ஆலோசனையை தொடங்கியுள்ளார்.

லட்சக்கணக்கானோர் வேலையிழந்து வருவதை தடுக்கும் வகையில் பொருளாதாரத்தை மறுசீரமைக்க முன்னுரிமை கொடுக்கபபடும் எனவும்அறிவித்துள்ள ஒபாமா தேர்தல் பிரச்சாரத்தின் போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவும் முனைப்பு காட்டி வருவதை அவதானிக்க முடிகிறது. பதவியேற்ற முதல் நாளிலேயே, அதிபர் மாளிகையில் பணியாற்றும் உயர் அதிகாரிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகளை குறைக்க உத்தரவிட்டதுடன் பார்வையாளர்களிடமிருந்து பரிசுப்பொருட்களை பெறுவதற்கும் தடை விதித்துள்ளார். அரசின் செயல்பாடுகளில் ஒளிமறைவற்ற வெளிப்படையான அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டும் என்ற உத்தரவும் இடப்பட்டுள்ளது.

அமெரிக்க சித்ரவதைக்கூடமான குவாண்டனமோ சிறைச் சாலையில் அடைத்து வைக்கப்பட்டவர்கள் மீதான விசாரணைகளை



படிப்பகம்

www.padippakam.com

(சித்திரவதைகளை) உடன் நிறுத்தவேண்டும் என்ற ஒபாமா பதவியேற்றவுடன் பிறப்பித்த முதல் உத்தரவானது சர்வதேச மனித உரிமையாளர்களை மட்டுமல்ல மனித நேயத்தை நேசிக்கும் ஒவ்வொருவனையும் நிச்சயமாக மகிழ்வித்திருக்கும். தீவிர வாதத்தில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு இந்த சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் மிகவும் காட்டுமிராண்டித்தனமாக சித்ரவதை செய்யப்படுவதாக மனித உரிமை அமைப்புகள் எழுப்பிய கண்டன குரல்களால், சர்வதேச அளவில் அமெரிக்காவிற்கு பெரும் அவமானம் ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த சிறைச்சாலையும், அமெரிக்காவின் ராணுவ நீதிமன்றங்களும் நீதித்தரங்களையே கேலிக்கூத்தாக்குவதாக இருக்கின்றன. 2002ம் ஆண்டில் அல்கைதா தீவிரவாதிகளை விசாரணை செய்வதற்காக இதுபோன்ற ரகசிய தடுப்பு முகாம்களையும், ராணுவ நீதிமன்றங்களையும் அமெரிக்காவின் புஷ் நிர்வாகம் ஏற்படுத்தியிருந்தது. 250 பேர் அடைக்கப்பட்டுள்ள 21 வழக்குகள் இன்னும் விசாரிக்கப்படாமல் உள்ள குவாண்டனமோ சித்ரவதைக்கூடத்தை மூடுவதற்கும் ஒபாமா உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுவது பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், இது உண்மையில் நடந்தால் அவர் மீதான நம்பிக்கை மேலும் அதிகரிக்கும் என்பதும் தெரிகிறது.

ஒபாமாவின் இந்த நடவடிக்கை இஸ்லாமிய நாடுகள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளதுடன் ஈரான் உள்ளிட்ட அரபு நாடுகளுடன் புஷ் ஏற்படுத்திச் சென்றுள்ள தீராத பகை முடிவுக்கு கொண்டு வரப்படும் என சர்வதேச நாடுகள் மத்தியில் எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னமும் 16 மாதங்களுக்குள் ஈராக்கிலிருந்து அமெரிக்க படைகள் விலக்கிக் கொள்ளப்படும் என தாம் அளித்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றவதற்கான வழிவகைகளை ஆராயுமாறு, தனது பாதுகாப்பு ஆலோசகர்களை ஒபாமா கேட்டுக் கொண்டுள்ளார். அதே நேரத்தில், மத்திய கிழக்கில் இஸ்ரேல் பாலஸ்தீன பிரச்னையால் ஏற்பட்டுள்ள பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் இஸ்ரேல் பிரதமர், பாலஸ்தீன அதிபர், எகிப்து அதிபர் ஆகியோரையும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஒபாமா பேசியுள்ளார். மத்திய கிழக்கில் அமைதி முயற்சிகளை மேற் கொள்வதற்கான பணிகளை விரைவில் அமெரிக்க ராஜதந்திரிகள் தொடங்குவார் என்ற அறிவிப்பும் வெளியாகியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

வெளியுறவுக்கொள்கைகளில் தனது எண்ணங்களை செயல் படுத்துவதற்கான அனுபவம் மிகுந்தவர்கள் எனக்கருதப்படும் ஹில்லாரி கிளிண்டன், மிட்செல், ஹோல்பருக் ஆகியோருக்கு தனது ராஜாங்க குழுவில் இடமளித்துள்ளமையானது அமெரிக்காவின் வெளியுறவுக்கொள்கையை முழுமையாக மாற்றியமைக்க ஒபாமா மேற்கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துவதாக ராஜதந்திர அவதானிகள் கருத்துத்தெரிவித்துள்ளனர். ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் நாடுகள், தீவிரவாதிகளின் களங்களாக செயல்படுவதாக கூறியுள்ள ஒபாமா, தீவிரவாதத்தை கட்டுப்படுத்த தவறினால் பாகிஸ்தானுக்கு அளிக்கப்பட்டு வரும் நிதியுதவியை நிறுத்தப் போவதாக பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.இதன் மூலம் தீவிரவாதத்திற்கு எதிரான அவரது கடினமான அணுகுமுறை வெளிப்படுத்தப்பட்டள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.முந்தைய அதிபர் புஷ்ஷின் ராஜதந்திர நடவடிக்கைகளில் பலவற்றை தொடரப்போவதில்லை என்பதில் உறுதியாக இருக்கும் ஒபாமா ஆஃப்கானிஸ்தானையொட்டிய பாகிஸ்தான் எல்லைப்புற மாகாணத்தில் பதுங்கியுள்ள அல்கைதா தீவிரவாதிகள் மீது தொடர்ந்து ஏவுகணை தாக்குதல் நடத்த உத்தரவிட்டுள்ளமை யானது தீவிரவாதம் மீதான அவரது அணுகுமுறையில் சந்தேகங்களையும் ஏற்படுத்தியள்ளது.

21ம் நூற்றாண்டில் பாதுகாப்பு என்பது பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்றாக உள்ளதும் அதனால், ஆஃப்பிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கூட்டாளிகளை தேட வேண்டிய நிலையிலும், நட்பு நாடுகளிடமிருந்து அதிக ஒத்துழைப்பை எதிர்பார்க்க வேண்டிய நிலையிலும் தற்போது அமெரிக்கா உள்ளது கண்கூடு. இதனை அதிபர் ஒபாமா நன்கு புரிந்து கொண்டே தனது செயல்பாடுகளை ஆரம்பித்துள்ளதாக தெரிகிறது. உலகை எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகளில் பிற நாடுகளுடன் இணைந்து செயல்படப் போவதாக அவர் அறிவித்துள்ளதே இதற்குச் சான்று எனக்கூறலாம். முன்னாள் அதிபர் புஷ் விட்டுச்சென்றுள்ள மலையளவான பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டிய பொறுப்பு ஒபாமாவிற்கு உள்ளதால், அவரின் மீதான எதிர்பார்ப்பும் மிக அதிகமாகவே உள்ளது. இதனால், அவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் மிகவும் கவனமாக உற்று நோக்கப்படுகிறது.

பதவி பிரமாணத்தின் போது உச்சநீதிமன்ற நீதிபதி ஜான் ராபர்ட்ஸ், ஒரு சில வார்த்தைகளை தவறுதலாக உச்சரித்ததால் ஒபாமா இரண்டாவது முறையாக பதவிப்பிரமாணம் எடுத்துக்



படிப்பகம்

கொண்டதானது ஒபாமாவின் எதிர்கால எச்சரிக்கை உணர்வை பறைசாற்றி நிற்கிறது. இதே எச்சரிக்கை உணர்வுடன் அவர் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்பது தான் பலரின் எதிர்பார்ப்பாக உள்ளது.அமெரிக்க வரலாற்றில் இரண்டு முறை பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்ட முதல் அதிபர் ஒபாமா தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பெரியண்ணன் என்ற போக்குடன் அமெரிக்கா தொடர்ந்து செயல்படுமா? என்பது தான் தற்போது பலரின் கேள்வியாக உள்ளது. ருசி கண்ட பூனை சும்மா இருக்காது என்று சொல்வார்கள். பிறரை அடக்கி ஆள்வதும், பிற நாட்டு விவகாரங்களில் தலையிடுவதையும் முழுநேர தொழிலாக கொண்டிருந்த அமெரிக்க எண்ணங்கள் தற்போது உள்நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு முதலிடம் கொடுக்க ஒபாமாவை அனுமதிக்குமா? நிறத்தால் மட்டுமே தான் வேறுபட்டவன் குணத்தால் சாதாரண அமெரிக்கன்(ஆதிக்க மனோபாவன்) தான் என்ற ஆணவச் செயல்பாட்டுக்குத்தான ஒபாமாவை தள்ளுமா...? இது மில்லியன் அமெரிக் டாலர் கேள்வி.

இடது கை பழக்கமுள்ளவர்கள் பெரும்பாலும் சாதனையாளர் களாகவே இருந்துள்ளனர். அமெரிக்காவின் முன்னாள் அதிபர்கள் ஜோர்ஜ் புஷ் (சீனியர்), கிளிண்டன் உட்பட பலரும் இடது கை பழக்கம் உள்ளவர்கள் தான். அவர்களை போல் ஒபாமாவும் இடது கையால் கையெழுத்திட்டே அதிபர் பதவியை ஏற்றுள்ளார். மகாத்மா காந்தி, நெப்போலியன் போனபர்ட், ஜூலியஸ் சீசர், மாவீரன் அலெக்சாண்டர், தத்துவ மேதை அரிஸ்டாட்டில், பிரிட்டன் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில், கியூபா முன்னாள் அதிபர் பிடல் காஸ்ட்ரோ உட்பட வரலாற்றில் இடம்பெற்ற பலரும் இடது கை பழக்கம் உள்ளவர்களே. அந்த வரிசையில் ஒபாமாவும் பயணிக்க வேண்டும் என்பதே பெரும்பாலானோரின் விருப்பமும் எதிர்பாப்பும் ஆகும்.

வரப்பு உயர நீர் உயரும்... நீர் உயர நெல் உயரும்...நெல் உயர மன்னன் கோன் உயரும் என்ற சங்க கால பாடலைப் போன்று அமெரிக்காவில் வீழ்ந்து கிடக்கும் பொருளாதாரம் நிமிர்ந்தால் உலக நாடுகள் குறிப்பாக இன்றைய உலகமயமாதலை எதிர் கொண்டிருக்கும் மூன்றாம் உலக நாடுகள் பலவற்றின் பொருளாதார நெருக்கடி நீங்கி வளம் ஏற்படும்.

www.padippakam.com

அதற்கான பொறுப்பை தன்னகத்தே ஆக்கியுள்ள ஒபாமா இவற்றை துணிச்சலுடன் சீர்தூக்கிச் சாதிப்பாரா...? இல்லை சறுக்குவாரா?

பதவியேற்பில் குளறுபடி என்ற சறுக்கலுடன் பணியை தொடங்கியுள்ள ஒபாமா, தடைக்கற்களை படிக்கட்டுகளாக மாற்றி புகழ் ஏணியில் ஏறுவாரா? இது தான் பல கோடி மக்களின் கனவாக உள்ளது.

**29.01.2009**

எமது போராட்ட அரங்கில் விடுதலைப் புலிகளின் தோற்றம் ஒரு வரலாற்று விபத்தாக அமைந்துவிட்டது. இயக்கங்கள் ஐக்கியப்பட்டுவிட்டன அவ் ஐக்கியம் விஸ்தரிக்கப்பட வேண்டும் ஆழமாக்கப்பட வேண்டும் என நீங்கள் ஆவலுடன் இருந்த வேளையில் இக்குழு ஒவ்வோர் விடுதலை இயக்கமாக சர்வதேச பிற்போக்கு சக்திகளிடம் ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டு வேட்டையாடத் தொடங்கியது. உங்கள் நம்பிக்கைகள் தவிடு பொடியாகின.

– தோழர் க. பத்மநாபா



படிப்பகம்

# அடுத்த சோவியத் யூனியன் இந்தியாவா...?

சோவியத் யூனியன் தனித்தனி நாடுகளாக சிதறுண்டது போல, இந்தியாவும் மாநில ரீதியாக சிதறுமா...?, முற்று முழுதான இல்லை என்பது இல்லவே இல்லை... இந்திய மாநிலங்கள் அனைத்திலும் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தற்போது பிராந்தியவாதம் தூண்டப்படுகிறது... மதவாதம் அதீதமாக தலை தூக்குகின்றது... அனைத்தையும் போல குளிர்காயும் பணியில் இந்திய அரசியல்வாதிகள்... எதனையும் செய்யமுடியாத நிலையில் மத்திய அரசு... வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதாக குற்றச்சாட்டுகள்.

இந்தியாவின் பொருளாதார தலைநகரான மஹாராஷ்டிர மாநிலத்தின் மும்பை நகரம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வேலை தேடி வருபவர்களை அரவணைத்து அவர்களதும் அவர்தம் குடும்பங்களினதும் வாழ்வில் ஒளியேற்றி வரும் கலங்கரை விளக்கமாக இருந்து வந்ததாக கூறப்பட்டது. குறிப்பாக, இந்தியாவின் ஏழை மாநிலங்கள் என கூறப்படும் உத்தரப்பிரதேசம், பீஹார் ஆகியவற்றை சேர்ந்த ஏராளமானோர், மும்பை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் கூலித்தொழிலாளர்களாக பணியாற்றி வருகின்றனர்., அதே நேரத்தில், டெல்லி, இமாச்சலபிரதேசம், குஜராத் உள்ளிட்ட பிற மாநிலங்களை சேர்ந்தவர்களும் பெருமளவில் மும்பையில் வசிக்கின்றனர். அவர்களில் பெரும் பான்மையினர் சமூகத்தின் உயர்ந்த அந்தஸ்தில் உள்ள வர்தகத் துறையையும் சினிமாத் துறையையும் சார்ந்தவர்களாகும். உதாரணமாக, உத்தரபிரதேச மாநிலத்தை சேர்ந்த அமிதாப்பச்சன், டெல்லியை சேர்ந்த ஷாருக்கான் ஆகியோர் மும்பை திரையுலகில் கொடிகட்டிய மன்னர்கள். அதே போல், தொழில்துறையிலும் பிற மாநிலத்தை சேர்ந்தவர்கள் வெற்றி நடை போடுகின்றனர்.

www.padippakam.com

இத்தகைய சூழ்நிலையில், மண்ணின் மைந்தர்களான மராட்டிய மாநில மக்களுக்கு உரிமைகள் மறுக்கப்படுவதாகவும், கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் கோஷம் எழுந்துள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன்பே சிவசேனா கட்சியின் தலைவரான பால்தாக்கரே, இப்பிரச்னையை எழுப்பி இன உணர்வுகளுக்கு தூபம் போட்டார். இந்துத்துவாவின் நாயகர்களான சிவசேனா குழுமத்தின், வேகமான வளர்ச்சிக்கு கையில் எடுத்துக்கொள்ளப்பட்டதும் வழிவகுத்ததும் பிராந்தியவாதமே... குறிப்பாக, மஹாராஷ்டிரத்தின் இளைஞர்களை பால்தாக்கரேயின் பேச்சுக்களும் செயல்களும் சுண்டி இழுத்தன...பாவம் அவற்றில் நஞ்சு கலந்திருப்பது அந்த அப்பாவி இளைஞர்களக்கு தெரியவில்லை... இதனால், பல ஆண்டுகளுக்கு முன்பே பல தடவைகள் மும்பையில் வசிக்கும் தமிழர்கள் உள்ளிட்ட வேற்று மாநிலத்தவர்களின் சொத்துக்கள் நாசப்படுத்தப்பட்டு, சூறையாடப்பட்டு அவர்களை அங்கிருந்து விரட்டும் ஆத்மார்த்த பணியை அந்த இளைஞர்கள் மேற்கொண்டிருந்தனர்..ஆனால், மஹாராஷ்டிரத்தின் வடமாநில மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில், தேர்தல்களில் சிவசேனா கட்சி சந்திக்க நேர்ந்த தோல்வி பிராந்தியவாத அடிப்படையில் அரசியல் நடத்த முடியாத ஒரு நிலையை அவர்களுக்கு அன்று ஏற்படுத்தியது. இதனால் மண்ணின் மைந்தர்கள் கோஷத்தை தேவைப்படும் போது மட்டும் கையில் எடுப்பதை பால்தாக்கரே வழக்கமாக்கி கொண்டார்.

இந்த நிலையில், தனிப்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, சிவசேனாவிலிருந்து பிரிந்த பால்தாக்கரேவின் மருமகனான ராஜ்தாக்கரே மஹாராட்டிரா நவநிர்மாண் சேவா என்ற கட்சியை தொடங்கினார். இரண்டு வருடங்களின் முன்னர் இடம்பெற்ற உள்ளாட்சி மற்றும் சட்டப்பேரவை தேர்தல்களில் அவரது கட்சியால் எதிர்பார்த்தபடி சிறப்பாக செயல்பட முடியவில்லை. கட்சியை விரைவாக வளர்க்க என்ன வழி...? இருக்கவே இருந்தது மாமனின் சிவசேனா வழி, பிராந்தியவாதம் மீண்டும் அங்கே தூண்டப்படுகிறது, மண்ணின் மைந்தர்கள் கோஷம் முன்வைக்கப்படுகிறது.இந்த வேளையில் நடிகர் அமிதாப்பச்சன் உத்தரபிரதேசத்தில் மகளிர் கல்லூரி ஒன்றை தொடங்கப் போவதாக அறிவிக்க அதை பிடித்துக் கொண்ட ராஜ்தாக்கரே. திரையுலகில் வளர்த்து ஆளாக்கிய மஹாராஷ்டிராவில் கல்லூரி தொடங்காமல், சொந்த மாநிலத்தில் தொடங்குவதா...? என போர்க்கொடி தூக்கினார். அமிதாப்பிற்கு எதிராக போராட்டம் அறிவிக்கப்பட பல



படிப்பகம்

இடங்களில் வன்முறை வெடித்தது. பாரிய சேதங்கள் மட்டுமல்லாது பிரிவினைவாத சிந்தனை - இளைஞர்கள் மத்தியில் அவர்களது மனங்களில் தூபமிடப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக வடமாநில மக்களால் கொண்டாடப்படும் சத் எனப்படும் சூரிய வழிபாட்டு பண்டிகையை மும்பையில் கொண்டாடுவதற்கு தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பு கலவரமாகி வடமாநில டாக்ஸி டிரைவர்களும், கூலித்தொழிலாளர்களும் ராஜ் தாக்கரே ஆதரவாளர்களால் தாக்கப்பட்டனர்.இது தொடர்பாக, பீஹாரை சேர்ந்த மத்திய ரயில்வே அமைச்சர் லாலு பிரசாத் யாதவ், உத்தரபிரதேச முன்னாள் முதலமைச்சர் முலாயம்சிங் யாதவ் ஆகியோரின் கடும் எதிர்ப்பை அவர் சந்திக்க நேரிட்டது. உச்சகட்டமாக, அக்டோபர் 19ம் தேதி மும்பை மற்றும் புறநகர் பகுதிகளில் ரயில்வே பணிகளுக்கு நடந்த தேர்வை எழுத வந்த வடமாநில மாணவர்களை, மஹாராஷ்டிரா நவநிர்மாண் சேவா தொண்டர்கள் ஓட ஓட விரட்டித் தாக்கினர். பல்வேறு தேர்வு மையங்களும் சூறையாடப்பட்டன. உள்ளூர் மக்களுக்கு ரயில்வே துறை வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கவில்லை எனக் கூறி ராஜ்தாக்கரே ஆட்கள் நடத்திய இந்த தாக்குதலுக்கு மத்திய அரசாங்கம் உட்பட பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்தனர்.

மஹாராஷ்டிராவிற்கு சென்ற கொண்டிருந்த ரயில் ஒன்று, பீஹாரில் மறிக்கப்பட்டு, ஒரு சில பெட்டிகளுக்கு தீயும் வைக்கப்பட்டது. பீஹார், உத்தரபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் ராஜ்தாக்கரேவை கைது செய்ய கோரி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. ராஜ்தாக்கரேவின் அடாவடி அரசியலை மஹாராஷ்டிர காங்கிரஸ் அரசு கட்டுப்படுத்த தவறி விட்டதாக மத்திய ரயில்வே அமைச்சர் லாலு பிரசாத் குற்றம்சாட்டினார். ராஜ்தாக்கரேவை கைது செய்ய மஹாராஷ்டிர அரசுக்கு நெருக்குதல் அதிகரிக்க தன்னை கைது செய்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என ராஜ் தாக்கரே இந்திய அரசுக்கே மிரட்டல் விடுத்தார். மும்பையின் இந்த அசாதரண நிலை நீடித்தால் தனது ஆட்சிக்கு ஆபத்து வரும் என்ற எண்ணத்தில மஹாராஷ்டிர முதலமைச்சர் விலாஸ்ராவ் தேஷ்முக், ராஜ்தாக்கரேவை கைது செய்ததும் இதனால் மீண்டும் மும்பை மற்றும் புறநகர்பகுதியான கல்யாணில் கலவரம் வெடித்ததும், வேறுவழியின்றி ராஜ்தாக்கரே நிபந்தனை ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டதும் ஒரு கண்துடைப்பாக நடந்தேறியது.

ராஜ்தாக்கரே விடுதலை செய்யப்பட்ட பின்னரும் வடமாநில மக்கள் அதிகம் வசிக்கும் கல்யாண் பகுதியில் ஏற்பட்ட கலவரத்தில் பலர் கொல்லப்பட்டனர். இத்தகைய பரபரப்புக்கு மத்தியில், பீஹாரை சேர்ந்த ராகுல் ராய் என்ற இளைஞர், கடந்த வாரம் மும்பையின் குர்லா பகுதியில் அரசு பேருந்து ஒன்றை துப்பாக்கி முனையில் கடத்த முயன்ற சம்பவம் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. ராஜ்தாக்கரேவை கொலை செய்வதற்காக தாம் மும்பை வந்துள்ளதாக கூறிய அவரை, போலீஸார் சரணடையுமாறு எச்சரித்து அதற்கு அவர் மறுத்து விட்டதால் அதிரடியாக சுட்டுக்கொல்லப்பட்டார்.இச்சம்பவம் பீஹாரில் மீண்டும் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. கட்சி பாகுபாடு இல்லாமல் பீஹாரை சேர்ந்த அனைத்துக்கட்சிகளும் இதற்கு கண்டனம் தெரிவித்ததுடன், இச்சம்பவத்தை தவிர்த்திருக்கலாம் என்றும், திட்டமிட்டே ராகுல் ராயை மஹாராஷ்டிர போலீஸார் கொலை செய்துவிட்டதாகவும் குற்றம்சாட்டினர். இது தொடர்பாக பிரதமர் மன்மோகன்சிங்கின் தலையீட்டை அடுத்து இச்சம்பவம் பற்றி உயர்மட்ட விசாரணைக்கு மஹாராஷ்டிர அரசு உத்தரவிட்டது.

இதனால் ஏற்பட்ட பரபரப்பு அடங்குவதற்குள், தீபாவளி பண்டிகையை கொண்டாடுவதற்காக நண்பர்களுடன் மும்பையிலிருந்து ரயிலில் சொந்த ஊருக்கு திரும்பிக் கொண்டிருந்த தரம்தேவ்ராய் என்ற இளைஞர், 12 பேர் கொண்ட மராட்டிய கும்பலால் ஓடும் ரயிலில் அடித்து கொல்லப்பட்டார். வெகுண்டெழுந்த மத்திய ரயில்வே அமைச்சர் லாலு பிரசாத், ரயில் பயணிகள் மீதான தாக்குதல் தொடர்ந்தால் மஹாராஷ்டிராவிற்கு ரயில் போக்குவரத்தை நிறுத்தப்போவதாக எச்சரித்தார். கூட்டணி கட்சியான காங்கிரஸ் ஆட்சிதான் அங்கு நடந்தாலும் உடனடியாக மஹாராஷ்டிர அரசை கலைத்து அந்த மாநிலத்தில் குடியரசுத்தலைவர் ஆட்சியை அமுல்படுத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தது, மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசில் விரிசலை ஏற்படுத்தியுள்ளது.உத்தரபிரதேச இளைஞர் கொலை தொடர்பாக 6 பேரை தாம் கைது செய்ததாகவும், அவர்களுக்கும் நவ நிர்மாண் சேவாவிற்கும் எந்த தொடர்பு இல்லை எனவும் போலீஸார் தெரிவித்துள்ளனர். மும்பையில் வடமாநிலத்தவரை காக்க தவறிய மஹாராஷ்டிர அரசை கலைக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ள உத்தரபிரதேச முதலமைச்சர் மாயாவதியும், மஹாராஷ்டிர காங்கிரஸ் அரசை கண்டித்து, மத்திய அமைச்சரவையிலிருந்து லாலு பிரசாத், ராம்விலாஸ் பஸ்வான் ஆகியோர் விலகத் தயாரா...? என கேள்வி

எழுப்பியுள்ளார்.கூட்டணி கட்சிகளிடமிருந்து கடும் நிர்பந்தம் ஏற்பட்டுள்ள போதிலும், சட்டம் ஒழுங்கை காக்க முதலமைச்சர் விலாஸ்ராவ் தேஷ்முக் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும், அதனால், மஹாராஷ்டிர அரசை கலைக்க முடியாது என்றும் காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

ராஜ்தாக்கரே மீது மென்மையான போக்கை கடைப்பிடிப்பதாக காங்கிரஸ் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ள போதிலும், இந்த விவகாரத்தில் முதலமைச்சர் விலாஸ்ராவ் தேஷ்முக அடக்கி வாசிப்பதாகவே கூறப்படுகிறது. இதற்கு பல்வேறு காரணங்களும் முன்வைக்கப்படுகின்றன. ராஜ் தாக்கரே மீது கடும் நடவடிக்கை எடுத்தால் மராட்டிய மாநில மக்களின் எதிர்ப்பை சந்திக்க நேரிடும், அதனால் தேர்தலில் தோல்வி ஏற்படக்கூடும். ஊடகங்கள் ராஜ்தாக்கரே தொடர்பான செய்திகளுக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுத்து வரும் நேரத்தில் அவர் மீது கடும் நடவடிக்கை எடுத்தால், அவர் அரசியலில் பெரிய சக்தியாக உருவெடுக்க வழிவகுத்து விடலாம். இவ்வாறு இந்த பிராந்தியவாதத்தின் பாரிய பின் விளைவுகளையோ இதன் பின்னாக அல்லது பக்கபலமாக உள்ள சக்திகள் பற்றியோ எவருமே எண்ணாமல் அன்றாட அரசியலையும் தாம் சார் அமைப்புகளின் நலனையும் மட்டுமே கணக்காக்கி காய் நகர்த்திக் கொண்டிருப்பது தான் தற்போதைய யதார்த்தம்.

ஏற்கனவே, இந்தியாவில் காஷ்மீர், அசாம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் தனிநாட்டுப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. முஸ்லீம் அமைப்புக்களின் மதவாத பிரச்சாரங்களும் பரவலான குண்டு வெடிப்புகளும் மறுபுறம்.இந்த நிலையில் மதவாதம் பிரிவினைவாதத்துடன், பிராந்தியவாதமும் தலை தூக்கியுள்ளதால் இந்தியாவின் ஒருமைப்பாடு கேள்விக்குறியாகி வருகிறது. இதே போக்கு நீடித்தால், மேலும் பல மாநிலங்களில் பிராந்திய வாதம் தலைதூக்கும் ஆபத்தும் நிலவுவதாக அரசியல் நோக்கர்களை எண்ண வைக்கிறது. ராஜ்தாக்கரே போன்ற பலரும் இப்படியான செயல்பாடுகளை முன்னெடுக்க முனைந்தால் ஒன்றுபட்ட இந்தியா என்பது எதிர்கால சமூகத்திற்கு பழைய கஞ் சியாகும் என்பதுதான் யதார்தம்...

அதேவேளை இந்தியாவின் இனவாத சக்திகள், ஒன்று பட்ட இலங்கையர்களாக சகோதரத்துவ சிந்தனையாளர்களாக வாழ்ந்த சிங்கள தமிழ் முஸ்லீம் இனங்களிடையே எற்படுத்தப்பட்ட பிரதேசவாதம், மதவாதம் குறிப்பாக இனவாதம் என்பனதான் இன்று

இத்தனை அழிவுகளையும் தலைமுறைகள் தாண்டிய சீரழிவுகளையும் அங்கு ஏற்படுத்தி இருக்கிறது என்பதை கவலையுடன் நோக்க வேண்டும்.

இலங்கையில் 1958 ... 1977 ... 1981 ... இவற்றின். உச்சமாக ... 1983 ஆகிய ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட சிங்கள இன வாதக் கலவரங்கள், 1991ல் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம்கள் இரவோடு இரவாக வெளியேற்றப்பட்டமை போன்ற தம்நலன்சார் சக்திகளின் தன்னிச்சையான செயல் வெளிப்பாடுகள், இன்று தேசிய இனப் பிரச்சினையாக அழகிய அந்த இலங்கைத்தீவை பற்றி எரிய வைத்துக்கொண்டிருக்கிறது. இந்தியாவின் பிரதேசவாத, மதவாத சக்திகள் இலங்கையின் இந்த அவலத்தை மட்டுமல்லாது சோவியத்து யூனியன் உடைவுக்கு காரணமான நிகழ்வுகள் உடைக்கப்பட்ட அந்த நாடுகளை எகாதியபத்திய சக்திகள் எப்படி ஆட்டுவித்துக் கொண்டிருக்கின்றன மற்றும் அயலிலுள்ள ஆப்கானிஸ்தான் ஈராக் ஆகிய நாடுகளின் யதார்த்த நிலை என்பனவற்றையும் கவனத்தில் கொள்வார்களாயின் ஒன்றுபட்ட இந்தியாவின் தார்ப்பரியம் புரியும்.

**30.11.2008**

# தடம் புரண்ட ஊடகங்கள்...
# எடுத்துகாட்டும் தமிழகம்...

ஜனநாயகத்தின் நான்காவது தூண் எனப்படும்ஊடகங்கள் நாட்டில், சமூகத்தில் நடக்கும் அநியாயங்களையும, அக்கிரமங் களையும் பாரபட்சமற்ற முறையில் மக்களின் முன் தோலுரித்து காட்ட வேண்டிய பொறுப்பு உள்ளவை. உள்ளதை உள்ளவாறே சொல்வது தான், ஊடகத்தின் முதுகெலும்பும், ஆணி வேரும்; ஒரு எழுது கோலுக்கு இருக்கும் பன்முக மகத்துவங்களில் ஒருவரை ஆட்சிக்கட்டிலில் அமர வைக்கவோ தூக்கியடிக்கவோ கூடிய சக்தியும் முக்கியம் பெறுகிறது. அத்தகைய வலிமை பெற்ற ஆயுதமான 'நான்காவது தூணின்' தற்போதைய நிலை என்ன...? குறிப்பாக இந்தியாவில் தமிழகத்தை உற்றுப்பார்த்தால் கேலிக்களம் ஆக்கப்படும் உண்மை நிலை வெளியுலகிற்கு அதிர்ச்சியையும் எமக்கெல்லாம் வேதனையையும் ஏற்படுத்தும்.ஒரு நாட்டில் பத்திரிக்கை சுதந்திரம் மறுக்கப்படுகிறது என்றால், அங்கு கொடுங்கோல் ஆட்சியும், சர்வாதிகாரமும் கொடிகட்டி பறக்கிறது என்று அர்த்தம்.உதாரணத்திற்கு இலங்கைத்தீவின் இரண்டு நிர்வாகத்தினதும் இன்றைய நிலையை நோக்கலாம்.

தமிழகத்தைக் பொறுத்தவரையில், நடுநிலையான பத்திரிக்கை எது? தொலைக்காட்சி எது? என்று கேட்டால் யாருக்கும் விடை தெரியாது. அப்படி ஒன்று இருக்கிறதா...? என்கின்ற மறு கேள்விதான் பாமரரல்லாதவரிடம் இருந்து கேட்கப்படும். ஒரு சில இடங்களில் வெளிப்பார்வைக்கு பத்திரிக்கை சுதந்திரம் இருப்பது போல் தெரியும். ஆனால், ஆழமாக உற்றுக்நோக்கினால் அடக்குமுறையும், பாரபட்சமான போக்கும், ஒரு தலைப்பட்சமான கருத்துகளும் அங்கே நிறையவே இருக்கும். யார் ஆட்சிக்கு வந்தாலும் எது மாறினாலும் இந்த நிலைமை மட்டும் மாறாது...

மாற்றப்படாது... அங்கொன்றும், இங்கொன்றுமாக அவ்வப்போது, சில ஊடகங்கள் நடுநிலையான செய்திகளை வெளியிடுவது போன்ற தோற்றம் மட்டும் இருக்கும். இதுவும் வெகு காலம் நீடிக்காது.ஏன் இந்த நிலைமை? யார் இதற்கு காரணம்?. இதற்கான எல்லாருக்கும் தெரிந்த விடை மட்டும் பகிரங்கமாக வெளிவராது.இந்தியாவின் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்தில் தான், ஊடகங்களில் மிகப் பெரும்பாலானவை அரசியல் கட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. முக்கியமான அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றுக்கும் தொலைக்காட்சி (வசதிக்கு ஏற்ப இதன் எண்ணிக்கை வேறுபடும்), பத்திரிக்கை என இந்தப் பரப்பளவு விரிகிறது. தி.மு.க.விற்கு முன்பு சன் டிவி பின்னர் கலைஞர் டிவி, ராஜ் டிவி மீண்டும் தற்போது சன் இப்படி ஊடகத்துறையில் என்றும் ஆளுமை; வைத்திருப்பது திமுக தான்.அ.தி.மு.க., விற்கு ஜெயா டிவி, ஜெயா பிளஸ், பாட்டாளி மக்கள் கட்சிக்கு மக்கள் டிவி, காங்கிரஸ் கட்சிக்கு மெகா டிவி, வசந்த் டிவி, விடுதலைச் சிறுத்தைகளுக்கு தமிழன் டிவி (ஆதரவு), விஜயகாந்திற்கு கேப்டன் டிவி (விரைவில் உதயம்) எனப பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. கேரளாவில் உள்ளது போல், தமிழகத்திலும் டிவி ஒன்றை தொடங்குவது குறித்து கம்யூனிஸ்ட்களும் ஆலோசித்து வருவதாக அறிய முடிகிறது.

ஒவ்வொரு கட்சியும் தங்களின் கொள்கை(ளை?)களை சாதகமாக்குவதற்கான சாதனமாக மட்டுமின்றி, எதிர்கட்சியினர் மீது அவதூறுகளை வாரியிறைப்பதற்கும், வசைமாரி பொழிவதற்கும் இந்த ஊடகங்கள் சாதகமாக்கப் படுகின்றன. தமிழகத்தை பொறுத்தவரையில் சொந்தமாக ‘டிவி’ சானல் இருந்தால் மட்டுமே கட்சி நடத்த முடியும் ஆட்சியைப் பிடிக்க முடியும் என்கின்ற நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆளும் கட்சியாக இருக்கும் போது, அரசின் திட்டங்கள் (கட்சி வளர்ப்புப் பணிகள்) குறித்து பிரச்சாரம் செய்யவும், எதிர்க்கட்சியாக இருக்கும் போது அரசுக்கு எதிரான செய்திகளையும் அறிக்கைகளையும் வெளியிடுவதும் தான் இந்த ஊடகங்களின் முக்கிய ஊடக தர்மம் சார் பணி. இத்தனை கூட்டத்திற்கு மத்தியில் இந்திய மத்திய அரச தொலைக்காட்சியான தூர்தர்ஷனும் மெள்ள மெள்ள ஓடிக் கொண்டிருக்கிறது. இன்றைய குழந்தைகளில் பலருக்கு அப்படி ஒன்று இருக்கிறதா? என்பது கூடத் தெரியாது. ஓரளவிற்கு நாட்டு நடப்புகளை அரசியல் கலக்காமல், பொடி வைக்காமல் தூர்தர்ஷன் அளித்து வருகிற போதும் இதன் நிர்வாகத்தில் அன்று முதல் தொடர்ச்சியாகவே பார்ப்பனிய

www.padippakam.com

ஆதிக்கமே இருக்கிறது என்கின்ற விமர்சனம் உண்மையானதாகவே இதன் நிகழ்ச்சிகளில் தென்படுகிறது. கிராமப்புறங்களில் அதன் செய்திகளுக்கு மக்கள் மத்தியில் இன்னமும் வரவேற்பு உள்ளது என்பது ஒத்துக் கொள்ளப்பட வேண்டிய உண்மை. தமிழகத்தில் அனைத்து தரப்பு செய்திகளையும் ஒரே 'டிவி'யில் பார்க்கும் ஒரே பத்திரிக்கையில் படிக்கும் வாய்ப்பு எப்போது கிடைக்கும் என்று ஏங்குபவர்கள் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது என்பது கசப்பான உண்மை.

தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான கலைஞர் கருணாநிதியின் குடும்பத்தில் கடந்த ஆண்டு ஏற்பட்ட மோதல் காரணமாக, இந்தியாவின் தென் மாநிலங்களில் ஊடக ஆதிக்கம் செலுத்தும் சண் குழும தொலைக்காட்சிகளின் தி.மு.க. ஆதரவுப்போக்கு மாற்றப்பட்டு அவர்களின் சனல்களில் அதற்கு முன் காட்டப்படாத முகங்கள் ஜொலித்தன. செய்திகளின் தோறணை மாறின. வைகோ, சரத்குமார், விஜயகாந்த், ஜெயலலிதா, ராஜேந்தர் ஆகியோரின் அரசியல் செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இதன் மூலம் தம்மை நடுநிலையான ஊடகத்தவர் போல் காட்டிக்கொள்ள சன் குழுமம் மேற்கொண்ட பகீரத பிரயத்தனம் 'ஆலை இல்லா ஊருக்கு இலுப்பம் பூ சக்கரை' என்கின்ற கதையாகவே மாறியது. அதே போல், சன் குழுமத்திற்கு சொந்தமான தினகரன் பத்திரிக்கையும், நடுநிலையான பத்திரிக்கை என்பது போல் காட்டிக்கொள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் செய்திகளையும் அறிக்கைகளும் வெளியிட்டதன் மூலம் பத்திரிக்கைக்கான விற்பனையை சில காலத்திற்கு அதிகரிக்க மட்டுமே முடிந்தது. தமிழகத்தில் கருணாநிதிக்கு அடுத்தபடியாக அவரது வாரிசு யார்? என்ற பெயரில் தினகரன் நடத்திய கருத்துக்கணிப்புத்தான் தினகரன் அலுவலக தீ வைப்பும் அதில் மூன்று அப்பாவி ஊழியர்கள் உயிரிழந்ததும் இதன் தொடர்ச்சி; திமுகவிற்கும் சண் குழுமத்திற்குமான விரிசல் அதன் தொடர்ச்சி தி.மு.க.வுக்கு என்று தனியாக ஒரு (கலைஞர்) தொலைக்காட்சி உருவாக்கம்.

தொழில் ரீதியாக போட்டி என்றாலே சன் குழுமத்திற்கு ஆகாத ஒன்று என்பது அவர்களது பலவருட வரலாறும் உறுதியான கொள்கையுமாகும். இதற்காக அவர்கள் கொடுத்த விலையும் தி.மு.க என்கின்ற திராவிடப் பேரியக்கத்தின் பின் ப(பு)லமும் தான் தமிழகத்தையும் தாண்டி ஊடகத்துறையில் கேரளம் ஆந்திரம் கர்நாடகம் ஆகிய அனைத்து தென்மாநிலங்களிலும்



படிப்பகம்

15க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி சனல்கள், வானொலிகள், நாளிதழ்கள், குங்குமம் சஞ்சிகை என அவர்களது எல்லைகள் அற்ற பரந்த வளர்ச்சி ஆகும். ஆளும் கட்சியின் ஆதரவுடன் தமது தவிர்ந்த ஏனைய ஊடகங்களுக்கு இவர்கள் கொடுத்த தொடர் தொல்லைகளினால் ஒரு கட்டத்தில், தமிழகத்தின் அனைத்து ஊடகத்துறையினரும் சன் குழுமத்திற்கு எதிராக ஒன்று திரண்டதும் அது கூட ஆளும் திமுக ஆதரவுடன் ஊதித் தள்ளப்பட்டதும் ஊடக தர்மத்தின் வரலாற்றுப் பக்கங்கள். மத்திய அரசிடம் போராடி, எப்படியாவது தமிழகத்தில் தொலைக்காட்சி தொடங்க யாராவது அனுமதி பெற்று விட்டாலும் கூட, அவ்வளவு சீக்கிரத்தில் சன் டிவி.க்கு சொந்தமான சுமங்கலி கேபிள் விஷனிடமிருந்து கேபிள் இணைப்புகளை அந்தச்சனல் வாங்கிவிட முடியாது. கேபிள் இணைப்பு கொடுக்கும் தொழில் ஏகாதிபத்தியம் செலுத்தி வரும் சுமங்கலி விஷனின் அரவணைப்பு இருந்தால் தான், எந்த ஒரு தொலைக் காட்சியின் நிகழ்ச்சிகளையும் அனைத்து வீடுகளிலும் பார்க்க முடியும். இவர்களின் ஆதரவு இல்லாமல் தமிழகத்தில் மூடப்பட்ட தொலைக்காட்சிச் சனல்களின் பட்டியல் நீளம். தி.மு.க., ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்கட்சியாக இருந்தாலும் சன் டிவி குழுமம் அதன் அங்கமான சுமங்கலி நிறுவனம் ஆகியன தொலைக் காட்சித்துறையில் வைத்தது தான் எழுதப்படாத சட்டம் என்பதுதான் நிலை. சன் குழுமத்திற்கும், கருணாநிதி குடும்பத்திற்கும் இடையே மோதல் வெடித்தபோது, அதிகம் மகிழ்ச்சியடைந்தது கேபிள் டிவி இணைப்பை வழங்குபவர்களும் ஊடகத்துறையினரும் தான். இந்த மோதலுக்கு பின்னரே, சன் குழுமத்தின் தினகரன் தவிர்ந்த பிற நாளிதழ்களுக்கு அதிகளவில் அரசு விளம்பரங்கள் கொடுக்கப் பட்டன. தி.மு.க., அரசுக்கு ஆதரவாகவும், சன் குழுமத்திற்கும் எதிராகவும் செய்திகள் வெளியிடுவதிலும் அனைத்து நாளிதழ்களும் போட்டி போட்டன. ஏதேனும் ஒரு வகையில், அனைத்த ஊடகங்களும் சன் குழுமத்தால் காயப்படுத்தப் பட்டிருந்ததே அதற்குக் காரணம். இந்த நிலையிலே நாடாளுமன்ற மக்களவைக்கு விரைவில் தேர்தல் வரப்போகிறது.

திமுக தலைமையிலான அரசியல் கூட்டணியில் இருந்து பாமக வெளியேற்றப்பட்டமை கம்யூனிஸ்டுக்கள் வெளியேற்றம் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கலைஞரின் நாடகம் மதுரை மாநகர் (அழகிரி ராஜாங்க) சிக்கல், தொடர் மின்வெட்டு வெற்றியளிக்காத இலவசங்கள் இப்படி இன்னோரன்ன சிக்கலகளின் வெளிப்பாடுகளெல்லாம் கலைஞர் டிவி தவிர்ந்த அனைத்து

தொலைக்காட்சிகளிலும் வெளிக்கொணரப்பட்டமை திமுகவை மட்டுமல்ல கலைஞரை மட்டுமல்ல கலைஞர் குடும்பத்தவர் அனைவரையுமே சிந்திக்க வைத்ததன் வெளிப்பாடுதான் அண்மைய கலைஞர், மாறன் குடும்ப இணைப்பு அரங்கேற்றம். குறிப்பாக சன் டிவி.யின் தாக்கம் கிராமப்புறங்கள் வரை நீண்டிருந்ததால் அதன் நடுநிலைமைப் போக்கை ஆளும் திமுக தலைமைகளால் ஜீரணிக்க முடியவில்லை, மறுபுறம் குடும்பம் பிரிந்திருந்தால், வருமானத்தில் பெரும் தாக்கம் தொழிலிலும் ஏகாதிபத்தியம் செலுத்த முடியாது எனகின்ற நிலை, ஊடக நடுநிலை என்கின்ற பசுத்தோலை கழட்டி எறிய வைத்தது மாறன் சகோதரர்களை. சன் குழும ஊடகங்களில் கடந்த ஒரு வருடமாக ஒங்கி ஒலித்துக்கொண்டிருந்த எதிர்கட்சிகளின் குரல்களுக்கு கடிவாளம் போடப்பட்டு விட்டது. சொந்தத் தொலைக்காட்சி இல்லாமல் தடுமாறி வரும் வைகோ, விஜயகாந்த், சரத்குமார் போன்றோரின் ஆவேச குரல்களை முன்பு போல் மக்கள் கேட்க முடியாதவாறு செய்து விட்டது இந்த இணைப்பு.

அதேபோல் தமிழகத்தின் பத்திரிக்கைகளை நோக்கில் ஒரளவிற்காவது நடுநிலையுடன் செயல்படுகின்றன என்று குறிப்பிட்டு சொல்லக்கூடிய எந்தப் பத்திரிக்கையும் இதுவரை இல்லை. அதிக மக்களால் படிக்கப்படும் பத்திரிக்கைகளாக கூறப்படும் தினந்தந்தி, தினமலர், தினகரன், தினமணி போன்ற நாளிதழ்கள், மக்களின் உணர்வுகளை உண்மை நிலவரத்தை முழுமையாக வெளிப்படுத்துகின்றனவா? என்றால் அதுவும் இல்லையே தான். உதாரணமாக, இலங்கைத் தமிழர்கள் அனைவரையும் விடுதலைப் புலிகள் என்ற கண்ணோட்டத் துடனேயே பார்த்து செய்திகள் வெளியிடும் யதார்த்தமற்ற நிலையை தமிழகத்தில் உள்ள பல வெகுஜன பத்திரிக்கைகள் சுலபமாகவே செய்து கொண்டிருக்கின்றன.

இலங்கையில் என்ன நடக்கிறது என்பது பற்றி எதுவும் தெரியாமல் பொதுவான ஊகங்கள், தமது எண்ணங்கள், யாதார்த்த நிலையை தெரியாதவர்களின் கருத்துக்கள் என்பவற்றின் அடிப்படையில் செய்திகள் வெளியிடுவதை சில வெகுஜன பத்திரிக்கைகள் கூட மேற்கொண்டு வருகின்றன என்பதுதான் வேதனை கலந்த உண்மை. இதில், பல பத்திரிக்கைகள் தாங்களே நீதிபதிகளாக மாறி தீர்ப்பு கூறும் சம்பவங்களும் அவ்வப்போது அரங்கேறுகின்றது. எந்தச் செய்தியை வெளியிட்டால் தங்களுக்கு பிரபல்யம்இலாபம்? என்ற நோக்கத்தில் செய்தியை பிரசுரிப்பவர்கள், அதிகார வர்க்கத்தையும் தனியார் பிரபல்யங்களையும் மிரட்டி பணியவைப்பது, யார் ஆட்சிக்கு வருகிறார்களோ? அவர்களுக்கு ஆதரவாக செயல்படுவது,

கிசு கிசுக்கள் மூலம் கலைத்துறை சார் பெண்களை இழிவு படுத்தி பிரபல்யத்தையும் பணத்தையும் பெருக்குதல் இப்படி பத்திரிகா தர்மமும் தமிழகத்தில் தான் தன் தலைமைச் செயலகத்தை அமைத்துள்ளது. ஆங்கில ஊடகங்கள் ஓரளவிற்கு உண்மை நிலையை வெளிக் கொண்டு வந்தாலும் அவற்றில் பெரும்பாலானவை பார்ப்பனிய பத்திரிகைகளாகவும் தேசிய அரசியல்நிலை சார்பாகவும் இருப்பதனால் முற்றுமுழுதான நடுநிலைமை என்பது அங்கும் கிடையவே கிடையாது. இவற்றில் Deccan Chronicle போன்ற ஓரிரு பத்திரிகைகள் சமூகநலன் சார் கருத்துக்களையும், ஒடுக்கப்பட்ட மக்களின் நிலைமைகளையும் வெளிக் கொணர்வதனால் நகர்ப்புற மக்கள் மத்தியில் ஓரளவு வரவேற்பு பெற்றுள்ளதைக் காணலாம்.

தங்களுக்கு எதிராக அல்லது பிடிக்காத செய்திகளை வெளியிடும் ஊடகங்களை சாம, பேத, தான, தண்ட வழிமுறைகளைப் பின்பற்றி ஒடுக்குவது அல்லது சமரசம் செய்து கொள்வது என்பது இந்திய ஆட்சியாளர்களுக்கு கை வந்த கலையாக இருந்த போதிலும், அதற்கெல்லாம் அஞ்சாமல், சார்பற்ற செய்திகள் அங்காங்கே வெளியாகும் நிலையும் இருப்பதால் தான் ஓரளவிற்காவது ஜனநாயக நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதுடன் ஒரு சில சமூகக் கொடுமைகளாவது வெளிக் கொணரப்படுகிறது..

விருப்பு, வெறுப்பு இல்லாத பக்கம் சாராத செய்திகளைப் படிக்க வேண்டும் பார்க்க வேண்டும் என்கின்ற பிறமொழி அறிவில்லாத அப்பாவித் தமிழனின் தாகம் தணியுமா...? தணிக்கப்டுமா...? அன்னப் பறவை, தண்ணீர் கலவாத பாலை பருகுமா... ?

**22.11.2008**

www.padippakam.com

# வெள்ளை மாளிகையில் 'கறுப்பு அதிபர்'

உலகில் வேறு எந்த நாட்டில் தேர்தல் நடைபெற்றாலும், இந்தளவிற்கு சர்வதேச அளவில் பரபரப்பு ஏற்படுவதில்லை. ஆனால், உலகின் ஒரே...? மன்னன் எனச்சொல்லிக் கொள்ளும் அமெரிக்காவில் தற்போது நடைபெற்று முடிந்த தேர்தல் கென்டக்கி மாகாணம் முதல் கென்யாவின் குக்கிராமம் வரை அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இவற்றுக்கெல்லாம் ஒரே காரணம்...ஒபாமா என்கின்ற அந்த கறுப்பதிபர்... 'நமக்கு தேவை மாற்றம்' என்ற ஒரே கோஷத்தை முன் வைத்து, அமெரிக்காவின் வரலாற்றில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறார் இந்த 'கறுப்பு நிலா'.

இந்த முறை அமெரிக்காவின் அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்ட ஆபிரிக்க அமெரிக்கரான பாரக் ஒபாமா, குடியரசு கட்சி சார்பில் போட்டியிட்ட ஜோன் மெக்கைனை வீழ்த்தி, புதிய அதிபராக மகுடம் சூடியுள்ளார். "பாரக்" என்ற அரேபிய வார்த்தைக்கு 'ஆசீர்வதிக்கப்பட்டவர்' என்று பொருள். ஆம். உண்மையில் மக்களால் ஆசீர்வதிக்கப்பட்ட தலைவராக பாரக் ஒபாமா உருவெடுத்துள்ளார். இல்லையெனில், வெள்ளையர் ஆதிக்கம் செலுத்தி வரும் அமெரிக்காவின் அதிபராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க முடியாது.

சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் ஆபிரிக்காவில் இருந்து அடிமைகளாக கூட்டம், கூட்டமாக அழைத்து வரப்பட்ட கறுப்பு இனத்தவருக்கு சுவாசக்காற்றாக அமைந்தவர் 'ஆப்ரஹாம் லிங்கன்'. அவர் அதிபராக இருந்தபோது தான் அடிமை வியாபாரத்திற்கு தடை விதிப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.. ஆனாலும், இனவெறியை முழுமையாக அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. பின்னர் இனவெறிக்கு எதிராக குரல் கொடுத்த 'மார்ட்டின் லூதர்



படிப்பகம்

www.padippakam.com

கிங்' அதற்காகவே கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்டார். எந்த அமெரிக்காவில் சம உரிமைக்காக இவர்கள போராடினார்களோ, அதே நாட்டின் முதல் குடிமகனாக பாரக் ஒபாமா தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது, அந்நாட்டு கறுப்பின மக்கள் மத்தியில் மட்டுமல்ல உலகம் முழுவதும் வாழும் அடக்கப்படும், ஒடுக்கப்படும் மக்கள் மத்தியில் ஓர் எழுச்சியை ஓர் நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கும் எனபதில் ஐயமில்லை. இந்தத் தேர்வு கறுப்பின மக்களின் சரித்திரத்திலும் முக்கிய இடத்தை பெற்று விட்டது.

ஆபிரிக்க நாடான கென்யாவின் கறுப்பின தந்தைக்கும், அமெரிக்காவை சேர்ந்த வெள்ளையின தாய்க்கும் பிறந்த ஒபாமா, கடந்து வந்த பாதை முட்கள் நிறைந்தது. 2 வயதாக இருக்கும் போதே தாய்-தந்தை பிரிந்து விட்ட நிலையில், வாழ்க்கையின் பெரும்பாலான நாட்களை தாய் வழிப் பாட்டியின் அரவணைப்பில் தான் கழித்தார்.சட்டம் பயின்ற அவர், வழக்கறிஞராகவும் பின்னர் சிகாக்கோ பல்கலைக்கழக பேராசிரியராகவும் பணியாற்றினார். கல்லூரி நாட்களிலேயே பல்வேறு அமைப்புகளின் தலைவராகவும், மாணவப் பத்திரிகை ஆசிரியராகவும் தலைமைப் பண்பை வளர்த்துக்கொண்ட ஒபாமாவிற்கு இயற்கையாகவே அரசியல் ஆர்வம் ஒட்டிக்கொண்டது. அதன் காரணமாக, ஜனநாயக கட்சி சார்பில் இல்லினாய்ஸ் மாகாணத்தில் இருந்து செனட் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒபாமாவிற்கு மிச்செலி என்ற காதல் மனைவியும் இரு குழந்தைகளும் உள்ளனர்.

இன்றைய அமெரிக்க அதிபராக பொறுப்பேற்கவுள்ள ஒபாமாவிற்கு காத்திருக்கும் சவால்கள் மிக மிக ஏராளம். உலகின் பொருளாதார வல்லரசாக ஆதிக்கம் செலுத்தி வந்த அமெரிக்காவின் பொருளாதாரம், தற்போது ஆட்டம் கண்டு வருவதும், லட்சக்கணக்கானோர் வேலையிழந்து வருவதால், அங்கு சமூக அமைதியின்மை ஏற்படும் சூழல் உருவாகி வருவதும் கண்கூடு. இதைச் சுட்டிக்காட்டியே ஒபாமா தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டதும் அவருடைய வெற்றியில் பொருளாதார சிக்கலும் முக்கிய பங்கு வகித்தது என்பதையும் எவராலும் மறுக்க முடியாது.

அமெரிக்காவின் பொருளாதார நெருக்கடியால் 20 மிகப்பெரிய நகரங்களில் வீடுகளின் சராசரி மதிப்பு பல மடங்கு வீழ்ச்சியடைய மறுபுறம் வீட்டு கடன் தொகையை செலுத்த முடியாததால், லட்சக்கணக்கானோர் வீதிக்கு வந்துள்ளனர். அங்கே பணக்காரர்களின் எண்ணிக்கை அதிகமாகும் அதே நேரத்தில், ஏழைகளின் எண்ணிக்கை



படிப்பகம்

பலமடங்கு அதிகரித்து வருவதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இதே நிலை நீடித்தால், பணக்கார நாடு என்ற அந்தஸ்தை அமெரிக்கா இழக்கக்கூடிய நாள் வெகுதொலைவில் இல்லை என்று பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.' "அமெரிக்கா, கடனில் மூழ்கி வருகிறது, மீண்டுவருவது என்பது வலி மிகுந்ததாகவே இருக்கும்" என டைம்ஸ் பத்திரிக்கை விமர்சித்துள்ளது.பார்க்க பகட்டாக இருந்தாலும், அதல பாதாளத்தை நோக்கி சென்று கொண்டிருக்கும் பொருளாதாரத்தை மறுசீரமைப்பதுதான் ஒபாமாவின் முதற்பணியாக இருப்பதுடன், கடும் சவால் மிகுந்ததாகவும் இருக்கும். முன்னேறிய நாடு அமெரிக்கா, என பகட்டுடன் மட்டுமே தெரிவித்துக்கொள்ள முடியும்என்கின்ற நிலைதான்.

அதேவேளை இனவெறி ஆட்டமும் இன்னமும் அங்கு இடமபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. கறுப்பினத்தை சேர்ந்த ஒருவர், அதிபர் தேர்தலில் போட்டியிடுவதா...? என ஒபாமாவிற்கு, வெள்ளையின வெறியர்களிடமிருந்து முதலிலேயே எதிர்ப்பு வந்தது. தேர்தல் நடப்பதற்கு சில வாரங்களுக்கு முன்பு கூட, ஒபாமாவை கொலை செய்ய சதிதிட்டத்தில் ஈடுபட்ட வெள்ளையின வெறியர்கள் இருவர், பயங்கர ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டனர். அமெரிக்க நாடாளுமன்றத்தில் கறுப்பின மக்களுக்கு பிரதிநிதித்துவம் மிகவும் குறைவு, ஒபாமா கறுப்பர் என்பதால், அவருக்கு வாக்களிக்க முடியாது என அவர் சார்ந்த ஜனநாயக கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் சிலரே மறுத்துவிட்டனர். தேர்தலிலும் இது பிரதிபலித்தது. கறுப்பின வாக்காளர்களில் 95 சதவீதம் பேரும், ஹிஸ்பானிக்ஸ் எனப்படும் கலப்பின வாக்காளர்களில் மூன்றில் இரண்டு பகுதியினருமே, ஒபாமாவிற்கு பெருமளவில் வாக்களித்துள்ளனர். கடந்த தேர்தலை விட, இந்த முறை கருப்பின வாக்காளர்கள் பெருமளவில் வாக்களித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.. வெள்ளையின வாக்காளர்களின் 55 சதவீதம் பேர் மெக்கைனுக்கு ஆதரவாகவே வாக்களித்துள்ளனர்.

குடியரசு கட்சியின் ஆதிக்கம் மிகுந்த விர்ஜினியா மற்றும் ஃபுளோரிடா மாகாணங்களை, ஒபாமா கைப்பற்றிய போதிலும் கூட, கடந்த முறை ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்ட ஜிம்கெரியை விட, ஒரு பகுதியில் ஒபாமா மிக குறைந்த வாக்குகளையே பெற்றுள்ளார். ஒபாமாவின் பிரச்சாரத்தால் கவரப்பட்ட இளம் ஆபிரிக்க அமெரிக்கர்கள், அவருக்கு பெருவாரியாக ஆதரவு தெரிவித்துள்ளது வாக்கு எண்ணிக்கை மூலம் தெரியவந்துள்ளது. அதே போல், ஜோன் மெக்னை விட தேர்தல் பிரச்சாரத்திற்கு அதிக

www.padippakam.com

பணம் திரட்டியதுடன், புதிய வாக்காளர்களை பதிவு செய்யும் பணியில் ஏராளமான தொண்டர்களை ஒபாமா ஈடுபடுத்தியதும், அவரின் வெற்றிக்கு காரணமாக கூறப்படுகிறது. 1976ம் ஆண்டு ஜிம்மி கார்டர் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்ற பிறகு, அதிக வாக்குகளை பெற்ற முதல் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஒபாமா தான் என்ற பெருமையும் கிடைத்துள்ளது. அதிபர் தேர்தல் பிரச்சாரத்தின் போது "நாம் இந்த நாட்டை மாற்றியமைப்போம்; இந்த உலகையும் மாற்றி யமைப்போம்'' என ஒபாமா அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய தருணம் வந்துவிட்டது.

அமெரிக்காவில் மட்டுமல்லாது, சர்வதேச சமூகத்திலும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது ஒபாமாவின் தேர்வு, அவருக்கு ஓய்வில்லாத பணிகள் காத்திருக்கின்றன. சீரழிந்து கொண்டிருக்கும் அமெரிக்க பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டிய பெரிய பொறுப்பு அவருக்கு உள்ளது. அவருடைய பொருளாதார கொள்கைகள், அமெரிக்க நிதிச்சந்தையை மட்டுமல்லாது, சர்வதேச அளவிலும் தாக்கத்தை ஏற்படுத்தப்போவதாகும். அவருக்கு வாக்களித்த 10 வாக்காளர்களில் ஒருவர், பொருளாதார நெருக்கடியை மையமாக கொண்டே வாக்களித்தாக கூறியுள்ளனர். பொருளாதார மாற்றங்களை மையமாகக் கொண்ட அமெரிக்க மக்களின் கவலைகளான, சுகாதாரம், எரிபொருள் விலை உயர்வு, சரிந்து வரும் வீட்டு மதிப்பு போன்றவற்றுக்கும் தீர்வு காண வேண்டிய பொறுப்பு ஒபாமாவிற்கு உள்ளது. இவற்றையெல்லாம் விட மிகப் பெரிய சிக்கலாக அவருக்கு காத்திருப்பது, ஆப்கனிஸ்தான் மற்றும் ஈராக் நாடுகளில் குவிக்கப்பட்டிருக்கும் அமெரிக்க துருப்புக்களும் அநத நாடுகளில் அமெரிக்க தலையீட்டினால் ஏற்படுத்தப்பட்டுள்ள மிகக்குழப்பமான மிகப்பயங்கரமான நிலையும்தான். இந்த தேர்தலில், குடியரசுக்கட்சி சார்பில் போட்டியிட்ட ஜோன் மெக்கைனுக்கு முதல் எதிரி ஒபாமா என்றால் இரண்டாவது எதிரியாக கருதப்பட்டவர் தற்போதைய அதிபர் ஜோர்ஜ் புஷ் தான். ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா நடத்தி வரும் தீவிரவாதத்திற்கு எதிரான யுத்தத்தின் தளகர்த்தரான ஜோர்ஜ் புஷ், அமெரிக்காவில் பெரும்பாலான மக்களின் செல்வாக்கை இழந்து விட்டது மட்டுமல்ல வெறுக்கத்தக்க நபராகவும் மாறிவிட்டார். அதனால், தேர்தல் பிரசாரத்தின் போது புஷ்ஷிற்கு அழைப்பு விடுப்பதை பெரும்பாலான இடங்களில் மெக்கைன் தவிர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்க மக்களால் மட்டுமல்லாது சர்வ உலகங்களிலும் வாழும் அனைத்து மக்களாலும் வேண்டப்படும் சமாதானத்தை, அமைதியை, சகவாழ்வை மத்திய கிழக்கில் ஏற்படுத்துவதற்கு ஒபாமா வழிவகுக்க வேண்டும்.குறிப்பாக ஈராக்கிலிருந்து அமெரிக்க படைகளை விலக்கிகொள்வது குறித்து அவர் முடிவெடுக்க வேண்டிய கட்டாயம் நிலவுகிறது. தீவிரவாதத்திற்கு எதிரான போர் எனக்கூறிக்கொண்டு பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகளுடன் சேர்ந்து ஆப்கானிஸ்தான் உட்பட அனைத்து பகுதிகளிலும் அமெரிக்காவால் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்பு குறித்தும் முடிவு காண வேண்டியுள்ளது. அணு ஆயுத விவகாரம் தொடர்பாக, வடகொரியா மற்றும் ஈரான் ஆகியவற்றுடன் சுமுகமான முறையில் பேச்சு நடத்த வேண்டிய பொறுப்பும் ஒபாமாவிற்கு உள்ளது. ஒபாமா மேற்கொள்ளும் முடிவுகளை பொறுத்தே மத்திய கிழக்கிலும் மேற்காசியாவில் அமைதி ஏற்படுவதற்கான சூழல் உருவாக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு சரியானதே.

கடந்த காலங்களில் அமெரிக்க அதிபராக பதவி வகித்தவர்களில் ஏழு பேர் போன்று, ஒபாமா கவர்னராகவோ, துணை அதிபராகவோ பதவி வகித்த அனுபவம் இல்லாதவர் என்பதனால் அவருக்கு எந்தளவிற்கு நிர்வாகத் திறமை இருக்கும் என்பதும் உன்னிப்பாக கவனிக்கப்படுகிறது. அதனால் தான் போலும் 'செல்ல வேண்டிய பாதை நீண்டது. அதை ஒராண்டுக்குள்ளோ அல்லது பதவிக் காலத்திற்குள்ளோ அடைய முடியாமல் போகலாம்' என்று வெற்றி பெற்ற பின்னர் ஒபாமா தெரிவித்துள்ளார்.

திறமையும், அனுபவமும் மிகுந்தவர்களை தனக்கு அருகில் வைத்துக்கொள்ள வேண்டிய நிலையில் ஒபாமா உள்ளார். யாரை எந்த பதவிக்கு அமர்த்துகிறார் என்பதன் மூலமும் அமர்த்தப் படுபவர்களினது மன ஓட்டம் எப்படி இருக்கப் போகிறது என்பதனையும் அனைத்துக்கும் மேலாக ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு சிந்தனையுடன் செயல்படும் அமெரிக்க கொள்கை வகுப்பாளர்களை எப்படி ஒபாமா கையாளப் போகின்றார் என்பதனையும் தொடர்ந்து வரும் மாதங்கள் முடிவு செய்துவிடும்.

உண்மையிலேயே எது வெல்லப் போகின்றது. என்பதனை ஒபாமாவால் தாண்டப்படவிருக்கும் தடைக்கற்கள் தான் முடிவு செய்யப் போகின்றன.

**06.11.2008**



படிப்பகம்

www.padippakam.com



# நந்தன் பற்றிய என்னுரை

இந்த நூலில் உள்ளே என்ன படைக்கப்பட்டிருக்கிறது என்பது நான் அறியேன். ஆனால் இந்தப் படைப்பின் படைப்பாளியான கோவை.நந்தன் என்றழைக்கப்படும் கோப்பாய் நற்குணானந்தனை அனைவரும் அறிவர். குறிப்பாக உலகளாவிய தமிழ் இயக்கக் காரர்கள், இலக்கியக் காரர்கள் மத்தியில், நன்கு அறியப்பட்டவர். தனது மண் சார்ந்த பங்களிப்புகளையும், தியாகங்களையும் செய்தவர் என்பது எவரும் மறுதலிக்க முடியாதது.

எழுபதுகளில் ஒரே நோக்கத்தில் தமிழீழம் ஒன்று தான் குறிக்கோள் என ஒருங்கிணைந்த ஓரணியின் போராளி இவர். கை விலங்கு, போலீசாரின் சித்திரவதை, விசாரணைகள், இலங்கை நீதிமன்றத்தின் குற்றவாளி, சிறைவாசம், வாழ்க்கை அஸ்தமித்துப் போனதே என்ற நிலையில் அவர் இளமை காலம். காலத்தின் சித்து விளையாட்டில் இவரும் தப்பித்து 1981ம் ஆண்டளவில் பிரான்ஸ் நாட்டில் அடைக்கலம் புகுந்தார்.

1983 இலங்கை இனக்கலவரத்தின் தாக்கத்தினால் முழு அளவில் இலங்கையின் சிங்கள இனவெறியாளர்களிடமிருந்து தமிழர்களை காக்க தமிழீழம் ஒன்றுதான் வழி எனக்கருதி ஜனநாயக ரீதியாக அரசியல்வாதிகளும், ஆயுதம் ஏந்திய இளைஞர்களும் துணிந்தார்கள். பலரின் ராஜதந்திரம் காரணமாக இலங்கையின் ஜனநாயக மிதவாத போக்கு கொண்ட அரசியல்வாதிகள் பின்தள்ளப்பட்டு ஆயுதம் ஏந்த பல்வேறு குழுக்கள் உருவாக்கப்பட்டது. ஒரே நோக்கம் கொண்ட தமிழீழ மண் விடுதலைக்கான போராளிகள் பிரிந்து



படிப்பகம்

www.padippakam.com

பல்வேறு தலைமைகளின் கீழ் செயல்பட வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சகோதர பிரிவுக்கு காரணமான அதே காரணிகள்தான் பிற்காலத்தில் சகோதர படுகொலைகளுக்கும் காரணமாக அமைந்தது என்பதை வரலாறு பதிவு செய்து கொண்டுள்ளது. அந்த வகையில் நந்தனுக்கு சரி எனப்பட்ட கருத்துக்கு அவர் ஆதரவாகவும் எனக்கு சரியாகப்பட்ட கருத்துக்கு நான் ஆதரவாகவும் இன்று வரை உறுதியாக இருக்கிறோம். ஆனாலும் அந்த எல்லைகளைத் தாண்டி என் மீது அவருக்கும் அவர் மீது எனக்கும் ஒரு பால்ய ஆத்மார்த்தமான நட்பு இறுக்கமாக இருக்கிறது.

இந்த நேரத்தில் 1990இல் நடந்த ஒரு நிகழ்வினை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். தமிழக மண்ணிலிருந்து 1500க்கு மேற்பட்ட கலைஞர்களை, 25க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு அனுப்பியுள்ளேன். இந்தியாவில் இந்த சாதனையை எவரும் செய்யவில்லை. நான் தான் செய்தேன் என்பதாக Limca Book of Record பதிவு செய்துள்ளது. அது மட்டுமல்லாமல் தமிழக அரசின் உயர் விருதான கலைமாமணி விருதும் எனக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் அஸ்திவாரம் இட்டவர் கோவை.நந்தன் அவர்கள்தான் என்றால் பல பேர் ஆச்சரியத்தில் திகைத்துப் போவார்கள்.

1990ம் ஆண்டு நந்தன் அவர்கள், தமிழகத்தில் அன்று பிரபல்யமாக இருந்த சில கலைஞர்களை பிரான்ஸ் நாட்டில் கலை நிகழ்ச்சி நடத்துவதற்காக, அனைத்து செலவுகளையும் உள்ளடக்கி ஐந்து லட்சம் ரூபா ஒப்பந்தத்தின் கீழ் மொத்தப் பணத்தையும் என்னிடம் கொடுத்து கலைஞர்களை அனுப்பி வையுங்கள் எனக்கூறி பாரீஸ் சென்றுவிட்டார். அக்டோபர் 20-ம் தேதியில் கலைஞர்களை சென்னையிலிருந்து ஏர்லங்கா விமானத்தில் கொழும்பு வழியாக பாரிஸ் அனுப்பிவிட்டு வீட்டுக்கு வருகிறேன். வீட்டுக்குள் நுழைய இரவு பத்து மணி நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த என் மனைவி பிரசவத்துக்காக துடித்துக் கொண்டிருக்கிறாள், உடனடியாக மருத்துவமனையில் சேர்த்து டாக்டரின் பரிசீலனைக்கு அவளை உட்படுத்திவிட்டு அவளுக்கு தேவையான சில பொருட்களை எடுக்க வீட்டுக்கு வந்தேன்.

இரவு 1 மணிக்கு கொழும்பு விமான நிலையத்திலிருந்து எனக்கு தொலைபேசி, குழுவிற்கு தலைமை தாங்கி சென்ற நடிகர் எஸ்.எஸ். சந்திரன் பேசுகிறார் "பாலன், எங்களை அழைத்து செல்லும் ஏர்லங்கா விமானம் Frankfurt வழியாக பாரிஸ் செல்கிறது, ஆனால் எங்களுக்கு ஜெர்மன் விசா இல்லாத காரணத்தால் இந்த விமானத்தில் எங்களை



படிப்பகம்

ஏற்றிச் செல்ல மறுக்கிறார்கள்" என்று கூற நான் இடி விழுந்தவன் போல் ஆனேன். ஏற்கனவே திட்டமிட்ட விமானத்தில் கலைஞர் குழு செல்லாவிட்டால் திட்டமிட்ட கலை நிகழ்ச்சி பாரிசில் நடாத்த முடியாது. ஒரு புறம் மனைவியை பிரவத்துக்கு அனுப்பிவிட்ட தவிப்பு இன்னொரு புறம் இந்த பேரிடி. அடுத்து 4 மணிக்கு ஒரு UTA விமானம் இருக்கிறது. அதில் செல்ல வேண்டுமானால் புதிய டிக்கெட் வாங்க வேண்டும். கணக்கு பார்த்தால் ஒரு லட்ச ரூபா அதிகமாக செலுத்த வேண்டிய நிலமை, கோவை.நந்தனுக்கு போன் எடுத்தேன். விபரத்தை தெரிவித்து ஒரு லட்சம் ரூபா கேட்டேன், படபடப்பாக இருந்த அவரும் சற்றும் சிந்திக்காமல் "நீங்கள் கேட்ட தொகையை முழுமையாக நான் கொடுத்து விட்டேன், உங்களின் தவறினால் ஏற்பட்ட சிக்கல்தான் இது. எப்படியாவது சரியான நேரத்திற்கு குழுவை அனுப்பியாக வேண்டும்" என்று கூற "நீங்கள் பணம் அனுப்பினாலன்றி என்னால் இந்த குழுவை அனுப்ப முடியாது" என நானும் கூறிவிட்டேன். அவரோ "குழு சரியான நேரத்திற்கு இங்கு வராவிட்டால் உங்களுக்கு கொடுத்த காசு, மண்டபம், விளம்பரம் மற்றும் ஏற்பாடுகள் எல்லாம் சேர்த்து எனக்கு நான்கு லட்சம் பிராங்குகளுக்கு மேல் நட்டம் ஏற்படும். உங்களை நம்பியதற்கு இந்த நட்டம் எனக்கு வருவது நியாயமா? அநியாயமா? என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்" எனக்கூறிவிட்டு தொலைபேசியை துண்டித்துவிட்டார்.

அதிர்ச்சியும் வேதனையும் கலந்த அந்த சூழ்நிலையில் செய்வது அறியாத ஓர் இக்கட்டான நிலைமை. என் மீது தானே தவறு, நான் தானே அந்த நட்டத்தை பொறுப்பேற்க வேண்டும். நாணயத்தை காப்பாற்ற வேண்டியது என் கடமை தானே என என் மனச்சாட்சி உலுக்கியது. உடனடியாக எஸ்.எஸ். சந்திரனை தொடர்பு கொண்டு குழுவினர் கையில் இருக்கக் கூடிய அவர்களது அந்நிய செலாவணி டாலர்களை மாற்றி டிக்கட்டைப் பெற்றுக் கொண்டு பயணம் செய்யுங்கள் காலை 10 மணிக்கு நீங்கள் செல்லும் விமானம் பாரிஸில் இறங்குவதற்கு முன்னால் அந்தப் பணத்தை உங்கள் வீட்டில் கொடுத்து விடுகிறேன் என்றேன். அதனை ஏற்று கொழும்பிலிருந்து பாரிஸுக்கு செல்லும் UTA விமானத்தில் விடியற்காலை நான்கு மணிக்கு பயணமானார்கள். பாரிசுக்கு போன் பண்ணி நந்தனிடம் விரக்தியும் வேதனையும் கலந்த மனநிலையுடன் "குழுவினர் புறப்பட்டு விட்டார்கள் அவர்களை அங்கு வரவேற்று நிகழ்ச்சியை நல்லபடியாக செய்யுங்கள்" எனக் கூறிவிட்டு மனைவியை பார்க்க மருத்துவமனைக்கு திரும்பினேன்.

காலை 7.20 மணிக்கு என் மகன் பிறந்தான். மனைவியோ மயக்க நிலையில். மகன் பிறந்த சந்தோசத்தை அனுபவிக்கக்கூட என்னால் இயலவில்லை. இன்னும் மூன்று மணி நேரத்தில் நான் ஒரு லட்சம் ரூபா கொடுத்தாக வேண்டும். மனைவியின் சொற்பமான நகைகள், டிக்கட் வாங்குவதற்காக வாடிக்கையாளர்கள் கொடுத்த முன்பணம் கொஞ்சம், அங்கிங்கு புரட்டிக்கொண்ட கைமாற்று எல்லாவற்றையும் சேர்த்து லட்ச ரூபாயை சந்திரன் வீட்டில் காலை 10.30 மணியவில் கொண்டு போய் சேர்த்துவிட்டேன்.

எனக்கோ மாத வருவாய் 3000 ரூபாய் கிடைத்தால் பெரிய விடயம். இந்த நிகழ்ச்சி எந்த சிரமுமின்றி போயிருந்தால் எனக்கு டிக்கட் கமிசனாக மொத்தம் 9000 ரூபாய் கிடைத்திருக்கும். ஆனால் இப்போதோ ஒரு லட்சம் ரூபா கடன் தலையில் ஏறி உட்கார்ந்து கொண்டது. எப்படி பார்த்தாலும் எவ்வளவு கடுமையாக உழைத்தாலும் இந்த கடனிலிருந்து மீள குறைந்தது 3 வருடமாகும் என்ற கவலையுடன் நான். நடந்த சோகம் அறியாத என் மனைவி, மகன் பிறந்த மகிழ்ச்சியில் புன்னகை பூக்கிறாள், என் மகனை பார்க்கிறேன். என் மனம் பூகம்பமாக வெடித்திருக்க அவனோ அமைதியான தூக்கத்தில் ஆழ்ந்திருக்கிறான். நடந்த சம்பவங்களை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நானும் மகிழ்ச்சியாக இருப்பது போல் காட்டிக் கொண்டேன்.

ஒரு வாரத்துக்கு பிறகு நிகழ்ச்சிகள் எல்லாம் முடிந்து குழுவினருடன் சேர்ந்தே நந்தனும் தமிழகம் வந்து சேருகிறார்.மதிய வேளை இரண்டு மணியளவில் நந்தன் அவர்கள் என் அலுவலகம் வருகிறார். வந்தமர்ந்த அவர் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் பெருமைகளையும் சிறப்புகளையும் பெருமிதத்துடன் அளக்க ஆரம்பித்துவிட்டார். அதனை ரசிக்கும் மனநிலையில் நான் இல்லை. அவருக்கு பெருமை மட்டுமல்லாது லாபமும் கிடைத்திருக்கிறது. ஆனால் எனக்கோ? தவறுகள் என்மீது தான் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அவருடைய லாபத்துக்கும் பின்னால் நான் அல்லவா ஒரு லட்சம் நட்டம் அடைந்திருக்கிறேன். ஆனால் நான் காட்டிக் கொள்ளவில்லை, அவராகவே ஆரம்பித்தார். “மகன் பிறந்திருக்கிறான் வாழ்த்துக்கள் வாங்க வீட்டுக்கு போய் நானும் மகனை பார்க்கணும்” என்றார். தட்ட முடியாமலும் வேண்டா வெறுப்பாகவும் மண்ணடி ஆபிசிலிருந்து மந்தவெளிக்கு வீட்டுக்கு வந்து சேர்ந்தோம். 300 ரூபா வாடகை வீடு. என் மகனை பார்த்து! மகிழ்ச்சியுடன் ஒரு பவுன் தங்க நாணயம் ஒன்றை அவன் பிஞ்சு கரங்களில் திணித்த நந்தன், என்னை அறைக்குள் தனியாக அழைத்து

www.padippakam.com

சென்று தன் பெட்டியை திறந்து ஒரு பத்திரிகைத் தாளில் சுற்றப்பட்ட ஒரு பணக் கட்டைக் கையில் கொடுத்தார்.

"இந்தாருங்கள் உங்களுக்கு ஏற்பட்ட நட்டம் ஒரு லட்சம் ரூபா இதிலிருக்கிறது" என்றார். இன்ப அதிர்ச்சி! அந்த நேர பரவசத்தை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. ஓவென கதறி அழலாம் போலிருந்தது, நெஞ்சம் படபடக்க கண்ணீர் முட்டிக் கொண்டு வர பேச வார்த்தை இன்றிப் போனேன். என் தலையில் இருந்த மலைபோல் துன்பம் கீழே இறங்கியது போல் உணர்ந்தேன் அன்று நான் அந்த நட்டத்திலிருந்து தப்ப வேண்டுமென நினைத்து அந்த குழுவினரை அனுப்பாமல் இருந்திருந்தால், நான் ஒரு நாணயம் கெட்டவனாக நம்பிக்கை துரோகியாக இருந்திருப்பேன். எனது நிறுவனம் வளர்ந்திருக்க வாய்பில்லை. நாணயம் கெட்ட மனிதனாக தொழில் செய்ய தகுதியற்றவனாக ஆகியிருப்பேன்!

நான் மீண்டும் தெம்பும், உற்சாகம் பெற்ற புது மனிதனாக வாழ உணர்வு பெற்றது, என் நிலையைப் புரிந்து நந்தன் செய்த உதவியினால் மட்டுமே. இது போல மறக்க முடியாத சம்பவங்கள் பல எம் இருவரிடையே. நந்தன் நண்பன் என்பதனையும் தாண்டி எங்கள் குடும்பத்தின் அன்பு அண்ணன். அவருக்கு எங்கள் குடும்பம் என்றும் நன்றிக்கடன் பட்டுள்ளது.

அவரும் அவரது துணைவியார் சகோதரி நிம்மியும் நீடித்த ஆயுளுடனும், நித்திய ஆரோக்கியத்துடனும், நிறைந்த நிம்மதியுடனும் வாழ எல்லாருக்கும் பொதுவான எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**கலைமாமணி. வீ.கே.டி. பாலன்**
மதுரா Group of Companies
சென்னை.



படிப்பகம்

www.padippakam.com



எமது போராட்டமானது ஏகாதிபத்தியம் நவகாலனித்துவம் வர்க்க ஒடுக்குமுறை தேசிய ஒடுக்குமுறை இனவெறி ஆகியவற்றிற்கெதிராக இந்த உலகில் நடைபெற்றுவரும் போராட்டங்கள் எல்லாவற்றினது ஒரு பகுதியே. ஈழமக்களின் விடுதலைக்காகச் சிங்கள மக்கள் போராடுவதும் சிங்கள மக்களின் விடுதலைக்காக ஈழமக்கள் போராடுவதும் என இருபகுதி மக்களதும் போராட்டங்கள் ஒன்றோடொன்று ஒருங்கிணைந்த வகையான ஒரு புதிய வளர்ச்சிப் போக்கினை உருவாக்குவதில் நாம் அனைவரும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்.

– தோழர் க. பத்மநாபா



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## சாத்தியமாகாதா நியாயத்தீர்ப்பு...?



சர்வதேசம், பிராந்தியம், சமூகம் என தனது சிந்தையையும் எழுத்தையும் எப்போதும் கவனம் குவிக்கும் போராளி ஒருவரின் அரசியல் சமூக அவதானங்களும் அதை ஒட்டிய விமர்சனங்களும் இங்கே பதியப்பட்டுள்ளன. சமூகத்தின் அனைத்துத் தரப்பினரோடும் ஊடாடி உறவாடி நேர்படப்பேசும், நந்தனின் அரசியல் விழிப்பு நிலைக்குள்ளாக்கும் பதிவுகள் இவை!

சமூகப் பொறுப்புணர்வு, நிதானம், பக்குவம் என்ற வழித்தடத்தில் நிகழ்வுகளை உரசிக் கொடுக்கும் பண்பில் அவரின் கட்டுரைகள் தமிழில் தனித்துவமானது. எல்லா இடங்களிலுமுள்ள அநியாயங்களையும் சுட்டிக்காட்டும்போது ஏதாவது ஓரிடத்தில் தன்னும் நியாயத்தீர்ப்பு சாத்தியமாகாதா என்னும் அங்கலாய்ப்பில் மனித வாழ்வின் நெருக்கடிகளும், இடப்பெயர்வுகளும், பலவந்தங்களும் இங்கே சுட்டிக்காட்டப்படுகின்றன. கடந்துபோன அறவழிச் சமூகங்களின் கடைசித் தலைமுறையையும் ஆங்காங்கே தன்பதிவால் காட்சிப்படுத்துகின்ற நந்தன், அறம், விழுமியம், நாகரிகம் இவைகளை நம் சமூகத்துக்காகவும் பாதுகாக்கக் கோருகிறார்.

யதார்த்த நடை நிச்சயம் அனைத்து மட்டத்திலும் பயனுள்ள பதிவுகளாகவே பார்க்கப்படும். நமது சமாதானத்திற்கான வேட்கையை சமூகத்தின் அனைத்துத் தரப்பினரிடமும் நூலின்வழி வலியுறுத்துகிறார் நந்தன்!

**சுகன்**
வட்டுக்கோட்டை
*www.nichamam.com*

படிப்பகம்